ஸ்ரீ:

ஆழ்வாரெம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்

ப்ரஹ்மதந்திர ஸ்வதந்திரஸ்வாமி

முதலான முன்னோர்கள் மொழிந்தருளிய

பொதுத்தனியன்கள்.



இவை

திருக்குடந்தை, கருணைக்கொல்லை அக்ரஹாரம்

ஸ்ரீ-உ-வே. இளையவில்லி தி. ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி

இயற்றிய "அம்ருதவர்ஷிணீ" என்னும் உரையுடன்

திருக்குடந்தை ஸ்ரீ பராங்குச பக்த ஸபையாரால்

ஸ்ரீ ஜயரீத்தன ப்ரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட்டில்

அச்சிடுவிக்கப்பட்டன.

யுவ-ஸு

1935.

ஸ்ரீ:

ஆராவமுதாழ்வான் கோமளவல்லித்தாயார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ பராங்குச பக்த ஸபை.

திருக்குடந்தை.

ஸ்ரீ பராங்குசயோகீந்த்ரபதாப்ஜாஸக்த சேதஸாம் |
ஸபேயம் சார்ங்கராஜஸ்ய சாஸநாதபிவர்த்ததாம் ||

ஆழ்வார்களடியார்களான வனைவர்க்கும் அடியவர்கள் தம்மடியான் ஆதரவோடடிபணிந்து செய்யும் விண்ணப்பம்.

இக்குடந்தைமாநகரில் ஸ்ரீமுக-வரு ஐப்பசி மாதத்தில் இந்த ஸபை, மஹான்களால் ஆரம்பிக்கப்பட்டு, பிரதிதினம் மாலையில் ஆழ்வார்கள் பாமாலை முதலியது, உபந்யாஸ ரூபமாய் நடந்தேறி வருவது ஆஸ்திகர்கள் யாவருமறிந்த விஷயமே.

சுமார் ஐந்தாறு மாதத்திற்குமுன் இந்த ஸபையில் கூடியிருந்த பலரஸிகர்கள், தத்காலம் நடந்துவரும் உபந்யாஸம் இடைவிடாது நடந்துவந்தாலும் கேட்ட விஷயங்களில் தங்கள் அநுபவம் நிலைப்பட்டு வளருவதற்கும், யாரேனும் சிலர்க்கு கார்யநெருக்கத்தால் உபந்யாஸம் கேட்பதில் சிறிது பாகம் முடியாமற்போனால் அதைப் பூர்த்திசெய்துகொள்வதற்கும், நாலாயிரம் திவ்யப்ரபந்தத்திற்கு இந்த ஸபையின் ஆதரவில் உரையெழுதுவித்து அச்சியற்றவேண்டியது மிக அவச்யமென்று நியமித்ததன்பேரில், அடியேன், தத்காலம் இந்த ஸபையில் உபந்யாஸம் செய்தருளுகிற ஸ்ரீ-உ-வே இளையவில்லி ஸ்ரீநிவாஸாசார்யார் ஸ்வாமி, ஸ்ரீ-உ-வே ப. ஸ்ரீநிவாஸ குருகவாசார்யார் ஸ்வாமி இவர்களைப் ப்ரார்த்தித்ததற்கு, இப்பொழுது நாலாயிரப்ப்ரபந்தங்களுக்கு அநேக மஹான்கள் வெகு அழகாக உரையிட்டிருப்பது வழங்கிக்கொண்டிருக்கையில் அதுவே எல்லாருடைய அநுபவத்திற்கும் போதுமானதென்றும், வேறு புதியதாய் வேண்டியதில்லையென்றும், தவிரவும் மிகவும் பெரிய கார்யத்தை நாங்கள் எவ்வாறு வஹிக்கக் கூடுமென்றும் பலவாறு

பலகாலும் மறுத்தார்களேயாகிலும் ஸத்யஸங்கல்பரான ஸ்ரீ ஆராவமுதாழ்வானின் திவ்யநியமனத்தால் சிறிது நாட்களாக இந்தக் கைங்கர்யத்தை, தங்களாலியன்றவரையில் செய்துவருவதாக ஒருவாறு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள், ஸபையினர்கள் வேண்டுகோளுக்கிணங்கி, கூடுமானவரையில் எளியநடையிலேயே இந்த கிரந்தங்கள் எழுதப்படும்.

மாதந்தோறும் நான்கு பாரங்கள் கொண்ட ஒரு ஸஞ்சிகை வெளியிடப்படும், இதில் ஒரு பாகம் பொதுத்தனியன்கள் முதலாக முதலாயிரம் உரையும் மற்றொருபாகம் இயற்பாஉரையும் வெளிவரும். ஆதலால் மஹான்கள் எல்லோரும் மிகவும் கருணைகூர்ந்து எழுதுவதிலும் அச்சிடுவதுமுதலியதிலும் ஏற்படும் பிழைகளைப் பொறுத்தும், எல்லாவற்றிற்கும் ஹேதுவான உத்ஸாஹத்தை எழுதுமவர்களுக்கு உண்டுபண்ணியும் இந்தப் பெரிய கைங்கர்யம் குன்றாது ஓங்கி நடைபெறப் பொருளுதவி செய்வதோடு தங்களன்பர்களும் இப்புத்தகங்களை வாங்கி ஆதரிக்கும்படி பேருதவிசெய்து பேறுபெற வேணுமாய் பிரார்த்திக்கிறேன்.

இங்ஙனம் தங்கள்விதேயன்,
டி. ஆர். அனந்தாசாரி,
ஸபா கார்யதரிசி, திருக்குடந்தை.





ஸ்ரீ:

ஸ்ரீமரகதவல்லீ நாயிகா ஸமேத ஸ்ரீ தீபப்ரகாச
பரப்ரஹ்மணே நம:

ஆழ்வாரெம்பெருமானார் தூப்புற்பிள்ளை பொன்னடிகளே சரணம்



ஸ்ரிய:பதியாய், அவாப்தஸமஸ்தகாமனாய், உபயவிபூதிநாயகனை, எம்பெருமான், இவ்விருள்தருமாஞாலத்தே, சேதனர்கள் படும் பாட்டைக் கண்டிரங்கி, இவர்களை தத்வோபதேசமுகத்தாலே நல்வழிப்படுத்தி, வானேற்றி அடிமைகொள்ள நினைத்து, எதிர்சூழல் புக்கு என்கிறபடி, பல பல அவதாரங்கள்செய்து, தான் நேர்நின்று திருத்தப்பார்த்தவிடத்திலும், அது சிறிதேனும் பயன்படாதுபோகவே, தன்னுடைய அந்தரங்க பரிஜனங்களையும், திவ்யாபரணங்களையும், திவ்யாயுதங்களையும், இதொரு அபிநவதசாவதாரம் பாரீர், பாரீர் என்று, பாரெல்லாம் பரக்கப்பேசும்படி, ஆழ்வார்களாக அவதரிப்பித்தானென்றும், அவ்வாழ்வார்களும், காக்கும் கருத்துடைத் தேசிகர் தன்றொ நம்மையெண்ணி காக்கும் காபிகள்போல் சொரிகின்றனர் சொல்லமுதே, என்றும், தமிழ்மறையின்னிசைதந்த வள்ளல், என்றும், போற்றப்படுவதற்கேற்ப, பாலேய்தமிழரிசைகாரர்பத்தர் பரவுமாயிரம், என்றும், அமர்சுவையாயிரம் என்றும், கேட்டாரார்வானவர்கள் என்றும், செவிக்கினிய செஞ்சொல் என்றும், எல்லைகடந்தபுகழார்ந்த சாத்தமிழினினியசொற்கள், பொலிந்து நிற்கும் திவ்யப்ரபந்தங்களை, ஸர்வ ப்ரவண ப்ராப்ய ப்ரவேச என்கிற படியே நான்கு வர்ணைசூராக்தவர்களும் அறிந்து ஓதி உஜ்ஜீவிக்கலாம்படி வெளியிட்டு, இவ்வுலகை வாழ்வித்தருளினார்களென்பதும், அனைத்துலகுமாதரவோடாவித்தாரவாரிக்கும் விஷயமொன்றன்றோ.

இப்பெருமைகளை, இவர்கள் மகிழ்ந்து பாடுஞ்செய்ய தமிழ்மாலைகளுந்தெளிய வோதித்தெளியாத மறை நிலங்கடெளிகின்றோமே என்று நந்தூப்புற் குலத்தரசன்றே, அவாவுடனதன் பெருமை பேசி, தெளியாத மறை நிலங்கள், என்று பெயர் பெற்றவையோடு தெளியாத மனநிலங்கள் என்று ஒருபடி ஒப்புற்ற மனநிலைகளைத் தெளிவித்திருப்பது. ஆகவே, ஆழ்வார்கள் விஷயங்களிலும் அவர்களருளிச்செய்திருக்கும் திவ்யஸூக்திகளின் பெருமை பேசுவதிலும், அனைவருமடங்கி நிற்கவேண்டுமதொழியச் செய்யலாவதொன்று மில்லையிறே.

ஆகிலும், அவர்களருளிய திவ்யஸூக்திகளை, அதன் பொருள் விரித்த ஆசார்யர்கள் திருவுள்ளங்களை யடியொத்தி, **ஜ்ஞெயஞ்ரீ ஹ வ நாரா வெஜ ஷாம் வா ஸஹிவிஷ்டெ**, என்று சொல்லியிருக்கிற பரமப்ரயோஜனத்தையே பற்றுசாகக்கொண்டு, ஆழ்வார்கள் திவ்யஸூக்திகளில், ஆசார்யர்கள், அடியேனுக்குத் தோற்றுவிக்கும் அனுபவப்ரகாரத்தை வெளிப்படுத்திக் காட்டுகிற கிரமத்தில், ஒருபடி இந்தக் கிரந்தத்தை எழுத ஒருப்படுகின்றனன். ஆழ்வார்களும், ஆசார்யர்களும், அஸூயையையகற்றின ஆஸ்திகர்களும், அடியேன்பாலருள்புரிந்தடிமை கொள்ளவேண்டுகின்றனன்.

இப் பிரபந்தானு ஸந்தான வேளைகளில் அனைத்துலகு மாதரித்தோதுமதான, அரும்பொருள், ஆதியில் விவரிக்கப் படுகிறது.

இப்பொழுது விவரிக்கப்படுமவைகள், தனியன்கள், என்று பெயர் பெற்றிருக்கும். தனியன் என்றால், ப்ரபந்தங்கள் முதலியதோடு சேர்ந்திராதே, அந்தப்ரபந்தத்தின் பெருமையையாவது, அதை அருளிச்செய்தவர் பெருமையையாவது, அதை வெளியிட்டவர் பெருமையையாவது அதை மறைந்துவிடாது காப்பாற்றினவர் பெருமையையாவது, அல்லது இவை யெல்லாப் பெருமையையும் வெளியிடுங்கிரமத்திலாவது, தனித்து முன் நிற்பதுபற்றி இவைகளுக்கு அப்பெயர் வழங்குகின்றது. இவைகள் வடமொழி தென்மொழி இரண்டிலும் வழங்கப்பட்டிருக்கும். இவைகள் தமிழ்நூல்களில், சிறப்புப்பாயிரம் என்றும் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் தனியன் என்றும் சொல்லப்படுகின்றன. இத்தனியன்களில், நாலாயிரத்துக்கும் பொதுவாய் சில தனியன்களும், அந்தந்த ப்ரபந்

தங்களுக்குத்தனியே சில தனியன்களும் உண்டு. இப்பால் முதன் முதலில் நாலாயிரத்துக்கும் பொதுவாக அநுஸந்தானம் செய்ய வேண்டிய தனியன்கள் கருத்துடன் வெளியிடப்படுகிறது. இதன் பின்னர் அந்தந்த ப்ரபந்தங்களுக்கே உரித்தான தனியன்கள், அந்தந்த ப்ரபந்தாரம்பவரிசையில் விவரிக்கப்படும்.

ஆகவே இஸ்ஸம்ப்ரதாயத்திலிருள் புகுராதபடி விவேகத்தை விளக்கிய தூப்புற்குல விளக்கை ஏத்தி அடி பணியும் வகையை யாராய்வோம் முதன் முன்னமே!

பொதுத்தனியன்கள்.

ராமாநுஜ தயாபாத்ரம் ஜ்ஞாநவைராக்ய பூஷணம்
ஸ்ரீமத்வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்த தேசிகம் ||

பதவுரை.

ராமாநுஜ தயாபாத்ரம் — கிடாம்பி அப்புள்ளாரென்கிற ராமாநுசருடைய தயைக்கு வைப்பிடமானவராயும்

ஜ்ஞாநவைராக்ய பூஷணம் — பாப்ருஹ்ம விஷயமான தெளிந்த அறிவென்ன, அதைக்காட்டிலும் வேறுபட்டவைகளில் வெறுப்பென்ன, இவைகளையே தமக்கு நகைகளாகக்கொண்டவராயும்

ஸ்ரீமத்வேங்கடநாதார்யம் — அழிவில்லாத ஸம்பத்தோடு கூடின திருவேங்கடநாதனென்கிற பெயர் பூண்ட உத்தமராயுமுள்ள,

வேதாந்த தேசிகம் — நிகமாந்த மஹாதேசிகனை

வந்தே — ஸேவிக்கிறேன்

வந்தே என்று சொல்லுமிடங்களிலெல்லாம் நான் என்கிற தற்கு வாசகமான அஹம் என்கிறது இல்லாவிட்டால் அஹம் என்கிற பதத்தை வருவித்துக்கொண்டு அர்த்தம் சொல்ல வேண்டும்.

குவாத விச்சேதநவாரிதி ஸம்ப்ரதாயே என்கிறபடி யுள்ளஸத்ஸம்ப்ரதாயத்திலன்றோ குத்ருஷ்டிகளால்வரும் கலக்கம் தீர்த்தவுபகாரம்பற்றி அவ்வுபகாரம் செய்ததை குறிப்பிடப் படுகிறது. புறச்சமயிகள் செய்யும் மிறுக்குகள் தீர்ப்பது, எவர்க்கு மெளிதாயினபடி. ரக்ஷஸாம் க்ஷுத்ராஷ்ட்யா ஜாயதே

ஜூஹூயோநிஷ்² என்கிறபடியே கலியின் பலங்கொண்டு அ கர்கள் பிராஹ்மணன் பிறக்குமிடத்தில் வந்து பிறப்பதே என்றே வயிறு பிடிக்க வேண்டியிருக்க, ஸஹஸ்ரநாம ஸ்ரீதரம் என்று டயிலும் சுடரொளி மூர்த்தியைப் பங்கயக்கண்ணனைப் பயிலவினிய நம் பாற்கடல் சேர்ந்த பரமனைப் பயிலுந்திருவுடையார், என்று சொல்லுகிறபடியே, மிகவும் கொண்டாடத்தகுந்த ஸ்ரீவைஷ்ணவ க்கள் திருமாளிகைகளில், ஸ்ரீவைஷ்ணவ வேடத்தால் தங்கள் ரூப தை மறைத்துக்கொண்டு, ஆஸுரப்ரக்ருதிகள் வந்து பிறந்தா இந்த ஸத்ஸம்ப்ரதாயத்திற்கு எப்பொழுது என்ன தீங்கு எவ்வா வருமோ என்றஞ்சி, அதற்காகப் படவேண்டும்பாடு சொல் வேண்டாவே. அப்படியுள்ள பெரும்பாட்டைப் பட்டன்றே நந்தேசிகனும், இஸ்ஸத்ஸம்ப்ரதாயம் தழைத்தோங்கப் பேருத செய்திருப்பது, செய்தவுதவியும் சிறிதுகாலத்தோடு மறைந் போகாமே, செய்யதமிழ்மாலைகளுந்தெளியவோதித்தெளியா மறை நிலங்கடெளிகின்றோமே, என்றும், தந்தையென நின்றதனி திருமால் தாளில்தலைவைத்தோம் சடகோபனருளினாலே, என்றும் இப்புடைகளில் க்ரந்தங்களிலும் கல்வெட்டாய் ஏறவிட்டிருப்பது ஆனதுபற்றி ஆன்ற தமிழ் மறைகளனைத்துங்கும் வளர்த்த இதத் யாயினபடி. வளர்த்த இதத்தாய், இராமானுசனில்லையோ என னில், அதுவுமிங்கு அனுஸந்திக்கத் தட்டில்லையே. யதீந்த்ரஸம என்றும், நம்மிராமானு சன்பொன்னடி என்றும், நமது ஆசார்ய வதார ரஹஸ்யத்தின் சுவடறிந்த ரஸிகர்கள் அனுஸந்தித்து போருவது. இவ்விடத்தில் இராமானுசனுடைய சமயதசையில் கலிபுருஷனோடு நேர்ந்த ஒரு ஸம்வாதமும் நினைக்கத்தக்கது.

அதாவது, இராமானுசன், வயதுமுதிர்ந்த தசையில் எழுந்த ளியிருக்கச் செய்தே, ராமாநுஜார்யதிவ்யாஜ்ஞா வர்த்ததாம் அபிவர்த்ததாம் என்கிற பிரார்த்தனைக்கிணங்க, இஸ்ஸம்ப்ரதாய நாளுக்குநாள் ஒருவித கேடுமின்றித் தழைத்தோங்கி வளர்ந்துவ அதுகண்டு பொறுதகலி, நம்மிராமானுசன் முன்பே, தான் ஒ புருடவேடம் பூண்டு வந்து புகுந்து பல அதிவாதங்களைப் பண்ண அட்டஹாஸம் செய்து உம்முடைய ஸித்தாந்தத்தை நிலைகுலைய

செய்வேனென்ன, அது கேட்ட இவரும் புன்முறுவல்கொண்டு, எப்பொழுது தர்மங்களுக்குத் தீங்குவருகிறதோ, அதர்மம் ஓங்கிவளர ஆரம்பிக்கிறதோ, அந்த ஸமயத்தில் தான் அவதாரம் செய்து தர்மத்தை நிலைநிறுத்தக் கடவன், என்று கீதாசார்யன் அருளிச்செய்ததுபோலவே, ஸ்ரீமன் நிகமாந்த மஹாதேசிகனாய் தாம் அவதரிக்கப்போவதைக் கருத்திற்கொண்டு, நாம் பின்னும் ஒரு அவதாரம் செய்து இஸ்ஸத்ஸம்ப்ரதாயத்தில் உன்னுட்டம் பலியாமல் வாட்டிவிடுவோம், என்றருளிச் செய்ததாக ஒருப்ரஸித்தியுண்டிறே. இப்பெருமையைத்தான், வினைகாளுமக்கினிவேறோரிடந் தேடவேண்டும் எனைச்சினமேவிமுன்போல் சிதைக்கும் வகையிங் கரிதுகண்டீர் எனிதிலிராமானுச முனியின்னுரை சேருந்தூப்புற் புனிதரென்புந்திபுகுந்து திகழ்ந்துபொருந்தினரே என்று பின்னிட்டாரும் போரக்கொண்டாடி நின்றார் களில்லையோ.

இப்படி பாமன்னு மாறனடி பணிந்துய்ந்தவன் என்றும், குறையல் பிரானடிக் கீழ்விள்ளாதவன்பன் என்றும், கொண்டாடப்படும் இராமானுசன், திருக்குருகைப்பிரான் பிள்ளானையிட்டு, ஆறுயிரப்படி, என்னும் கிரந்தத்தையும் வெளியிட்டு ப்ரவர்த்திப்பித்த இஸ்ஸத்ஸம்ப்ரதாயத்தைக் குறைவாராது வளர்த்துநந்தேசிகனைத் தாயென்று சொல்வது மிகுதியாகுமோ, இவ்வாறு தாயாயினமை விளங்கினவாறே, மாத்ருதேவோ பவ என்றும் தாய்சொல்லுக்கொள்வது தன்மங் கண்டாய் என்றும், வேதமார்க்கங்களைக் கைப்பிடித்த நாம் செய்யவடுப்பது, அச்சொல்லின் அரும்பொருளையாய்ந்தாசரிப்பதன்றோ, இவ்வாசாரணமும் நீடூழி நிற்க, அன்னையாயத்தனையனைவரையுமாண்டிடு ந்தன்மையானவனையனைத்துலகு மடைக்கலமாயடையும் வழியை கிரந்தத்தில்எறிட்டிருக்கிற பெருமைகாண்மின்கள், ராமாநுஜ தயாபாத்ரம் என்று.

ராமாநுஜ தயாபாத்ரம் காவலனெங்கள்கிடாம்பிக்குல பதியப்புளார்தம் தோமலர்சேவடிசேர்ந்து பணிந்தவர் தம்மருளால் நாவலருந்தென்வடமொழி நற்பொருள் பெற்றநம்பி, எங்களுக்கு ரக்ஷகனையும், கிடாம்பியார் என்கிற பிருதத்தைக்கொண்ட திருவம்சத்திற்குத்தலைவராயும் விளங்குகிற அப்புள்ளாரென்கிற மஹானின்

தேனே மலரும் திருப்பாதத்தை ஆச்ரயித்து பலபல நமஸ்கார
செய்து, அவருடைய கருணைபொங்கிய அநுக்கிரஹத்தினால் த
நாவில் தன்னிஷ்டப்படி பேசவல்ல திறமையோடு செந்தமிழ்
சீரிய பொருளென்ன, வடமொழியின் வீறுபெற்ற பொருளென்
இவைகளையடையப்பெற்ற பரிபூர்ணனே, என்கிறபடியே, அப்பு
ளாரென்கிற காளமேகம் பொழிந்த கருணை மழைகள் ஒருங்கே
தங்குமிடமென்று சொல்லுகிறது.

இப்பெருமைதான், ஸ்ரீ [illegible]
[illegible], ஸ்ரீம
ன்களான நடாதூர் அம்மாளென்ன, கிடாம்பியப்புள்ளாரென்ன
இவர்களால், இவன் பரிபூர்ணனுவன் என்று அடிக்கடி நன்று
கடாக்ஷிக்கப்பட்ட, என்றும் 'அடற்புள்ளரசிலுமந்தணர் மாட்டிலு
இன்னமுதக் கடற்பள்ளி தன்னிலுங்காவிரியுள்ளுமுகந்தபிரான்
இடைப்பிள்ளையாகி யுரைத்ததுரைக்கும் யதிவரனார்,மடப்பள்ளிவந்
மணமெங்கள் வார்த்தையுள் மன்னியதே, மிக பராக்கிரமசாலியான
கருடன் தோளிலும், ஸ்ரீவைஷ்ணவர்கள் திரளிலும், நல்ல இனிமை
யான திருப்பாற்கடலிலும் இருபக்கம் காவிரி சூழ்ந்த கோயில் கு
ந்தை முதலிய திவ்யதேசங்களிலும் மிகக்களிப்புடன் வஸிக்கும் எம்
பெருமான், நந்தகோபகுமாரனுகி அருளிச்செய்த ஸ்ரீகீதையை, பொ
ருள் காட்டியுரைக்கும் இராமாநுசனின் சிஷ்யரான மடப்பள்ளியா
ச்சானுடைய நறுமணம் அவர் தம் கருணையினாலே தன் ஆசிரியரான
அப்புள்ளாரளவும் வந்து தன்னிடம் சேர்ந்து நிலைநின்றது என்றும்,
அநுஸந்தித்த, தேசிகன் தன் திருவார்த்தையாலும் விளக்கமன்றோ!

அன்றிக்கே, [illegible] மாமலர் மன்னிய
மங்கை மகிழ்ந்துறைமார்பன், தாளாந்தாமலர் சூடிய தொல்லருள்
மாறன் துணையடிக்கீழ், வாழ்வையுகக்குமிராமாநுசமுனிவன்மை
போற்றும் சீர்மையன், மிகவுயர்ந்த செந்தாமரைப்பூவில் எப்பொழு
தும் வஸிக்கும் பிராட்டியானவள் ஸந்தோஷத்துடன் நித்ய வாஸம்
செய்கிற திருமார்பையுடைய திருமாலின் திருவடிமலர்களை தன்
சென்னியில் சூட்டிக்கொண்டிருக்கிற பரமதயாளுவான ஆழ்வார் திரு
வடிகளிலேயே தன்னுடைய காலத்தை ஸுகமாகப்போக்கும் இரா

மானுசனுடைய பெருமையை த்தாபித்து நிற்கும் கல்யாண குணங்களையுடையவன், என்கிறபடியே, ஸ்ரீபகவத் ராமானுஜன் பேருஞ்க்கிலக்கானவரென்று பேசுகிறது.

இப்பெருமையும், ஆரணநூல் வழிச்செவ்வையழித்திடு மைதுகர்க்கு, ஓர் வாரணமாயவர்வாதக்கல்களின் மாய்த்தபிரான், ஏரணி கீர்த்தியிராமானுச முனியின்னுரை சேர் சீரணி சிந்தையினோம், வேதாந்தசாஸ்திரத்தின் ருஜுவான வழியைக் கெடுக்க முயலும் வாதியர்கள் வாதங்களாகிற வாழைகளை யழிக்கத்தான் மதயானை போல் செருக்குக்கொண்டு அழித்து நாட்டியநீசச் சமயங்கள் மாண்டன என்று கொண்டாடும்படி உலகிற்கு உபகாரம் செய்தவரும் ஏற்ற ஆபரணமான புகழையுடையவருமான இராமானுசமுனியின், போக்யமான கிரந்தத்தையே சீர்பெற்ற அணிகலன்களாக மனத்தில் கொண்டோம், என்கிற தன் திருவார்த்தையாலும் விளங்குகிறதன்றோ?

அன்றிக்கே, ராமாநுஜ ஸ்யாவாத்ரு, திருமகளோடினிதமர்ந்த செல்வன் என்கிறபடி, இறையுமகல கில்லேனென்னு மவளோடுகூடவே வந்தவதரித்த ஸ்ரீராமபிரானுடையவும், அவன் பின்னே அவதரித்த கண்ணபிரானுடையவும், கருணைக்கிலக்காகினபடியைக்காட்டுகிறது, ஸக்ருதேவ ப்ரபந்நாய, என்றும் ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ, என்றும் அருளிச்செய்த சரணாகதிநூலின் பெருமையை, காகமிராக்கதர் மன்னர் காதலி, என்றும், ப்ரபந்நாநாம் ஶரணாகதி ஸர்வேஷாம் ந நிவர்த்ததே, என்றும் ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி, என்றும் பரக்கப்பேசி வெளியாக்கி சரணாகதி சாஸ்திரத்தை, ஸர்வஶாஸ்த்ரே ஷ்வநந்ய, அசைக்கமுடியாததொருபடி செய்து வைத்த சீரை நினைந்து, நந்தேதசினிடம் நருநைகாருத்தவைய யவும், கீதாசார்யனுடையவும் காருண்ய வெள்ளம், கரைபுரண்டோடிவந்து நிற்கக்குட்டிலையே; அன்றிக்கே, ராமாநுஜ ஸ்யாவாத்ரு திருநால் முதலாக, அப்புள்ளாரளவுமுள்ள ஆசார்யர்களின் அருளுக்கிலக்காகினபடியை அறிவிக்கிறது. ஸர்வேஷாம் ஜ்ஞாநஸ்யை ஸம்ப்ரதாயம் என்கிறபடியில் லக்ஷ்மீநாதன் முதலாக, அப்புள்ளாரளவுமுள்ள

ஆசார்யர்களால் ப்ரவர்த்திப்பிக்கப்பட்ட ஸத்ஸம்ப்ரதாயத்தை பஹுக்ரந்த முகத்தாலே உபப்ருஹ்மணம்செய்தும், விஸ்தரிப்பித்து விசதமாக்கியும் பலபடிகளாலும் உபகாரம் பண்ணியிருக்கிற படி களைக் குளிரக் கடாக்ஷிக்குமவர்கள், தங்கள், கருணைவெள்ளத்தை நந்தேசிகனுக்கும் உயர்ந்த பயிர்கள் விளையும் நற்கழனியைவிட்டு வேறு காடு மேடேறிப்பாயும்படி விடுவர்களோ, என்றபடி. ' அன்று க்கே, மேலும், அவரவர்கள் ஆசார்யர்கள் தோற்றுவிக்கும்படிகளை யுமனுஸந்திப்பது.

ஜ்ஞாநவைராக்ய பூஷணம்

ஜ்ஞாநேந ஹீந: பஶுபி: ஸமாந:, என்றும், வையா ராணி ந பூஷயந்தி புருஷம், என்றும் சொல்லுகிறபடி யே ஜ்ஞாநாநந்தமயஸ்த்வாத்மா, என்கிறபடியுள்ள ஸ்வதஸ்ஸித் மான பொலிவை யிழந்து கிடக்கிறவன், ஒரு நாலுகால் ப்ராணி யோடு ஸமானனாய்க் கருதப்படுவன், ஞானம் தவிர மற்ற எவ்வித அணிகலன்களும் புருஷனை அலங்காரம் செய்யத்தக்கதில்லை, அதி லும், வேறு ஞானத்தைக் கொண்டு செருக்குண்டிருப்பதும் பெரு மையல்லவென்று, அஜ்ஞாநஜ்ஞாநந்த்ருக்த:, என்றுஞ்சுவையான கல்விகள் சூழவந்தாலும் தொகையிவை, என்றும் எடுத்துக் கழித் தும், தஜ்ஜ்ஞாநம், என்று, எந்த ஞானமானது மேம்பாடுடைய தாய் மெச்சப்படுகிறதோ, அப்படிப்பட்ட, பகவத் விஷயமான ஞான த்தையும் அதைத் தவிர்ந்த மற்றைய எல்லா விஷயங்களிலும் வெறு ப்பையுமே, தமக்குத்திருவணிகலன்களாகக் கொண்டவரென்றபடி.

ஸ்ரீமதே வேங்கடநாயாய, ஸ்ரீமானான வேங்கடநாததேசி கன், என்றபடி, இவ்விடத்தில் அவதாரங்கள் தோறும் பகவானை விட்டுப்பிரியாமல், கூடவே அவனவதாரத்துக்குத் தக்கபடி அவத ரிக்கும் பிராட்டியின் ஸம்பந்தம் நித்யமாகவுள்ளது காட்டப்படுகி றது. திருவேங்கடநாதனென்கிற அர்ச்சாவதாரத்தில், இறையும் கலகில்லேனென்றுறையு மலர்மேல்மங்கை, ஸவ்ருத்தஸ் ஸந்தத ஸ்வாத்மாஸக்த ஸந்தத: | ஸ்ரீ வேங்கடாத்ரி நாயகோ ஸ்ரீநிவாஸ தேசிக: என்றும், வேங்கட ஶாவதாரோயம் என்றும், அன்றிவ்வுலகினை யாக்கியரும் பொ ருள்நூல் விரித்து, நின்று தன் நீள்புகழ் வேங்கடமாமலை மேவிட்

பின்னும் வென்றிபுகழ் திருவேங்கடநாதனெனுங் குருவாய் நின்று நிகழ்ந்து மண்மேல் நின்ற நோய்கள் தவிர்த்தனனே என்றும் சொல்லுகிறபடியே, திருவேங்கடமுடையானே நந்தூப்புற்குல விளக்காய் வந்து தோன்றினால், உத்பத்ஸ்யே ஸுவஸாதநாஷீ என்கிற கிரமங்களில், குத்ருஷ்டி மதவித்வம்ஸனத்துக்குபயோகமாம் படியான ஸத்வித்யாதி ரூபையாய் ஸஹசரித்து நிற்கிறாளென்பதில் ஸந்தேஹமில்லையென்றபடி. இப்படி, ஶ்ரீஶ:, என்கிற சப்தம் அர்த் தங்கொண்டதென்பது, வித்ராஸம்வேதிபி: என்கிற தேசிகன் தன்னுடைய ஸூக்தியாலுமே தெரியலாகும். அன்றிக்கே, பயிலுஞ் சுடரொளி மூர்த்தியைப் பங்கயக் கண்ணனைப் பயிலுந்திருவுடை மையைப் பேசிற்றாகவுமாம். இதன் முன் சுவடுதான், ஸத்த்வநாம வர: ஶ்ரீமாந் என்றும், ரக்ஷணாய ரக்ஷிஸம்பவ: என்றும், ஸுதாரிக்ஷமத: ஶ்ரீமாந் என்றும், பல விடங்களில் புகழப் பட்டிருக்கிறது.

வந்தே வேதாந்ததேஶிகம், இதில் அனுஸந்தித்த குணங்களுக்கு ஆற்றுத் தீர்ந்து, வேரற்ற மரம்போலே வேதாந்த தேசிகன் திருவடிகளில் விழுந்தமை காட்டப்படுகிறது. ஸேவிக்கிறேன் என்று சொல்லி முடிக்கவேண்டிய நிலை வருவதற்கு முன்பே வேதாந்ததேஶிகம், என்று, மற்றும் பெருமை பேசவேண்டிய வாக்கியமிடவேண்டியிருக்க, தாம் சென்னிமேற்கொண்ட குணத் தின் கனம் தாங்கமுடியாதே, வந்தே, என்று நடுவே வந்து தலை சாய்க்கிறார். இப்படித் தலை சாய்க்கிறவர்தான், யாரென்னில், உல கில் எல்லாப் பற்றும் விட்ட, ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ர ஜீயரன்றோ! இவருக்கு ஆசிரியர் திறத்துள்ளவன்மை நோக்கினால், ஆழ்வார் திறத்து மதுரகவிகளைக் காட்டிலும் விஞ்சியிருக்குமெனத் தோன்று கிறது. அம்மதுரகவி தாமும் ஆழ்வாரிடம் தமது பக்தியின் பெரு மை பேசுங்கால், கண்ணிநுண்சிறுத் தாம்பினால் கட்டுண்ணப்பண் ணிய பெருமாயன் என்னப்பனில் என்று, எம்பெருமானை நினைந்து, அன்பர்க்கேயவதரித்தமாயன் நிற்க, என்கிறபடியில் தனியே எடுத் தும் கழித்து நிறுத்தி, பின்னரே, அருமறைதன் தமிழ் செய்தான் தாளே கொண்டு, என்கிறபடி, ஆழ்வார் பெருமை பேசினார்.

இவரோ, ஸ்வாயத்தீக்ருததைவதாம் ஸமயிகாமதேநோர் நோர்ஜஸே, என்கிறது கேட்ட பெருமைக்கேற்ப, தனது ஆசிரியன், கண்ணிநுண் சிறுத்தாம்பினுல் கட்டுண்ட ஆயன் விஷயத்தில் ப்ரயோகித்த அந்த க்ரியாபதத்தையே, மிகவும் அழகுபடுத்தக் கருதி, நந்தாப்புற்குலத்தாசினடிக்கீழ் அமர்த்தினர். அதாவது தேசிகன் கோபாலவிம்சதியில் வந்தே ப்ருந்தாவநசரம் என்று பகவத் விஷயத்தில் அருளிச்செய்த கிரமத்தை, தேவகீவஸுதேவா யதுவம்ஶாவதீர்ண, என்கிறபடியில், வந்தே வேதாந்ததேசிகம் என்று, ஸ்ரீதேசிகத்யான மந்திரமான இத்தனியனில் அமர்த்தினது தான்.

இது இப்படியிருக்க, இங்கே வேதாந்த தேசிக சப்தத்தை யிட்டவரின் நோக்கு எவ்வாறுள்ளதென்பதை ஆராய்வோம்.

வேதாந்த என்கிற பதமானது வடமொழி தென்மொழி இரண்டு வேதாந்தங்களைப் பொதுவாய்ப்பேச நின்றாலும், இத்தனியனை ப்ரவர்த்திப்பித்தவர் திருவுள்ளத்தையும் ஸந்தர்ப்பத்தையும் நன்கு நோக்கினுல், தமிழ் வேதாந்தமென்பதையே காட்டி நிற்கிறது. ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன், ஆழ்வார் அருளிச் செயலுக்கு, தாத்பர்ய ரத்னாவளீ, ஸாரம், நிகமபரிமளம், முதலிய க்ரந்தங்களை அருளிச் செய்தும், செய்ய தமிழ் மாலைகளுந்தெளிய வோதித் தெளியாத மறைநிலங்கடெளிகின்றேமே, என்றும், நம் பாணனுேகிய கோரிந நான்கு மிரண்டுமான வொருபத்தும் பற்றுக வுணர்ந்துரைத்தோம், என்றும், பல படிகளில் பலக்கப்பேசி, ராமாநுசனடியார்களான நமக்கே ஏகதேசானுபாவ்யமான த்ராவிட வேதாந்தத்தை குத்ருஷ்டிகளால் அனுவளவும் சலிப்பிக்க வொண்ணுதபடி நிலைநிறுத்தி இந்தஸம்ப்ரதாயத்தை ப்ரகாசமாய் செய்து ப்ரவர்த்திப்பித்த பெருமைக்கு, நன்றி பாராட்டும் நோக்கில், தமிழ் வேத, வேதாந்த அத்யயன, அத்யாபன, சிந்தனை, பாராயண, ஸேவா பன காலங்களிலெல்லாம், விடாது ஆவச்யகமாய் அநுஸந்திக்கத் தக்கதாய் யாகவேண்டும்படியன்றே இத்தனியனின் பெருமையிருக்கிறது.

இவ்வண்ணம், ராமாநுஜ தயாபாத்ரம், என்கிற தனியனால் ஸ்ரீதேசிகனை முந்துறச் சரணமடைந்தவகை தெளியப்பட்டது. இனி

ராமாநுஜ தயாபாத்ரமென்றதில், திருமால், ஆழ்வார், எம்பெருமானார், முதலியவர்கள் கருணைக்கிலக்கானா வொருவரைப் பேசியதும் திருமால் முதலாகவுள்ள ஆசார்யர்களனைவரையும் அடைவே அடிபணியும் வகை பேசுகிறதுமேல் தனியன்.

லக்ஷ்மீநாத ஸமாரம்பாம் நாதயாமுந மத்யமாம் |
அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம் ||

லக்ஷ்மீநாத ஸமாரம்பாம்	ஸ்ரிய:பதியான எம்பெருமானை ஆரம்பத்தில் உடையதாயும்.
நாதயாமுந மத்யமாம்	ஸ்ரீமன் நாதமுனிகளையும், ஆளவந்தாரையும், நடுவில் உடையதாயும்.
அஸ்மதாசார்ய பர்யந்தாம்	என்னுடைய ஆசிரியரான எம்பெருமானாரை கடைசி எல்லையாய் உடையதாயும், இருக்கிற
குருபரம்பராம்	ஆசிரியர்களின் வரிசையை
வந்தே	ஸேவிக்கிறேன்.

லக்ஷ்மீநாத ஸமாரம்பாம், இந்த ஸம்ப்ரதாயமானது, **விஷ்ணோ: ஸ்ரீரநபாயிநீ**, என்றும், இறையுமகலகில்லேன் என்றும், **ச்சாயேவாநுகதா ஸதா**, என்றும், என்றுமோரேதமின்றியிரவியுமொளியும் போல, என்றும், திருமகளார் பிரியாத தெய்வம் என்றும், சொல்லுகிறபடி, எம்பெருமானை விட்டுத்தினைத்தனையும் விட்டுப்பிரியாதிருந்தருளும் பெரியபிராட்டியென்கிற இலக்குமிதேவியோடு, **யஸ்யா வீக்ஷ்ய முகம் ததிங்கிதபராதீநோ விதத்தேகிலம்** என்கிற கணக்கில், அவள் தன் பரிபூர்ணனுமதியோடு, அவனும் தானுமானசேர்த்தியில் ப்ரவர்த்திப்பித்ததாயிருக்கும். அதாவது, பெருமானும் பிராட்டியும், **ததேதத்ஸ்ரா வ்ரஜாவதயாஷ்வாவ** என்கிறபடி, ஸேனாபதியாழ்வாருக்கு இந்த ஸம்ப்ரதாயத்தை முதலில் உபதேசிக்க அவர், **வ்ரஜாவதிஷ்டம்வ**, என்கிற வரிசை போல், அதை, ஆழ்வார் திருநகரியில் நம்மாழ்வாருக்கு உபதேசம் செய்தபடியைக் காட்டுகிறது.

[illegible], இப்படி ஸேநாபதியாழ்வானிடம் நம்மாழ்வார் க்ரஹித்தது, திருக்குருகைப் பிரானாகத் திருக்குருகூர் சேர்ந்து, கண்ணிநுண்சிறுத்தாம்பு, என்று ஆரம்பிக்கிற ஆழ்வாரின் அழகிய ப்ரபந்தத்தின் ஆவ்ருத்தியினால் யோகதசையில், ஆழ்வாரைப் ப்ரத்யக்ஷமாகக்காணப்பெற்று, [illegible] என்கிறபடி, ஆழ்வாரை ஆசிரியராகவரித்து அடிபணிந்து, ஸ்ரீமன் நாதமுனிகளால் க்ரஹிக்கப்பட்டு, காளம் வலம்புரியன்ன நற்காதலடியவர்க்குத்தாளம் வழங்கித் தமிழ்மறையின்னிசை தந்தவள்ளல், என்கிறபடியே, மற்றும் பத்திமான்களான சீடர்களுக்கு உபதேசமாகி, பிறகு ஆளவந்தாரளவும் வந்து, [illegible] என்கிறபடி அவரால் அநேகம் ப்ரபந்தங்களால் [illegible] (பக்கபலங்கள்) செய்து வ்ருத்தி செய்யப்பட்ட பெருமையை நினைத்து நடுவேயுள்ள ஆசார்யர்களையும் இவர்களில் அடக்கி, நாதமுனிகளையும், ஆளவந்தாரையும், நடுநாயகமாகவுடையவென்கிறது.

[illegible], மொய்ம்பால் வளர்த்த இதத்தாயிராமாநுசன், என்கிறபடியில் வீறுபெற்ற ஸ்ரீபகவத் ராமாநுஜனை என்னுடைய வாசிரியரைக் கடைசியாகவுடையவென்றபடி.)

இவர், முதலில் பெருமாளைக் குறிப்பிடுகையால், என்னாதன் என்னாமல், லக்ஷ்மீநாதன், என்றார். முடிவிலோ, என்னுடையவன், என்று, ஒரு பரிவுதோன்ற அருளிச்செய்கிறார். இவர் ஒருவருக்கொருவர் வாசியைக்காட்டி அநுபவிக்கும் அழகுதான் என்னே! பெருமாள், எம்பெருமான். என்றுசிறியவோ, எம்பெருமானுசிக்கையோ, என்றல்லவோ; இவர் நினைவாக வேறுமொன்று தோன்றுகிறது. இங்ஙனம், ஆசிரியர் திறத்து அன்புள்ள ஒரு விலக்ஷணமாயிருக்கியானபடியாலன்றோ, பின்புள்ளாரும், [illegible], என்கிறபடியே, சிஷ்யர்களுக்கு வேண்டிய நற்குணங்களெல்லாம் வேறுபுகலிடமற்று கூரத்தாழ்வானிடமே குடிவாழ்க்கை வாழ்ந்ததெனக் கொண்டாடிப் போந்தார்கள்.

வந்தே ஶ்ரீமத் பராங்குசாதி பதகீ ஹ்ருத்தீ ஶ்ரீமத் யதீந்த்ர ஹாரா யஷ்டிஃ, என்கிறபடியே, மிகவும் அழகியதான ஆசார்யர்களின் வரிசையை வணங்குகிறேன் என்றபடி. இத்தனியன், மொழியைக்கடக்கும் பெரும் புகழான், வஞ்சமுக்குறும்பாங்குழியைக் கடக்கும் நங்கூரத்தாழ்வான், அருளிச்செய்ததாக விருக்குமானபடியினாலே, அவருக்கு ஆசிரியரான இராமானுசனை, அஸ்மதாசார்ய பர்யந்தாம், என்று குறிப்பிடுவதால், அதை யனுஸரித்தே, நாதயாமுந மத்யமாம், என்கிற பதத்தையும் இணைக்கி அர்த்தமெழுதப்பட்டது.

ராமானுஜார்யபர்யந்தாம், என்று, தனக்கு, எளிதாக ச்லோகமிடாமல், அஸ்மதாசார்யபர்யந்தாம், என்று அனைவருக்குமெளிதாக ச்லோகமிட்ட ஆழ்வானின் அபாரகருணையை என்சொல்லிப் புகழ்வோம்.

ஆழ்வானுடைய கருணையையும் கட்டளையையும் நோக்கினால் குருபங்க்தி பஜனம் செய்யவேண்டுவது ஆவச்யகம், அதை யாரும் தவறுதல் கூடாது என்றும், அப்படிச்செய்ய ஸுகமான வழியும், இந்த ச்லோகத்தின் அநுஸந்தானமே, என்று தோற்றுவதால், அனைவருமாதரித் தோதும்படியினார்த்தமெழுதப்படுகிறது.

இதில், லக்ஷ்மீநாதஸமாரம்பாம், என்பதில் வேறுபாடில்லை. நாதயாமுன மத்யமாம், என்பதில் யதிராஜேந நிவேஶநாய ஶ்ரீஃ ஹ்ருத்தீ ஶ்ரீமத் யதீந்த்ர ஹாரா யஷ்டிஃ, என்று நங்தேசிகனருளியபடியில், நாதமுனிகள் ஆளவந்தார் தொடங்கி இராமானுசனையும், யதீந்த்ரமாஸ்ஃ என்கிறபடியில் ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகனையும், அவரைச் சொன்னபடியினாலே, அவர் திருவடிகளில் சிஷ்யப்ரசிஷ்ய முகத்தால் ஆச்ரயித்தவர்களையுங் கருத்திற்கொண்டு, இவர்களெல்லோரையும் நடுவேயுடைய என்றும், அஸ்மதாசார்ய பர்யந்தாம், என்பதில், அவரவர் தங்கள் தங்களுடைய ஆசார்யர்களளவுமுள்ள, என்று அர்த்தங்கொண்டு முடிவில், வந்தே குருபரம்பராம் என்று அநுஸந்திக்கத்தக்கது.

இத்தால், குருபரம்பரையாகிற மஹாரநதியானது, செக்கர் மாமுகிலுடுத்து மிக்க செஞ்சுடர் பருதிசூடி, அஞ்சுடர் மதியம் பூண்டு

பல சுடர் புனைந்த பவளச்செவ்வாய், திகழ் பசுஞ்சோதி மரகதக் குன்றம், என்று நம்மாழ்வார் அருளிச்செய்தபடியே, ஸேவிப்பதற்கே, முகிலுருவ மெம்மடிகளுருவமென்று குளிர்ந்து தோற்றும் ஸ்ரீய: பதியாகிற திவ்ய மலையினின்றும், சொரிகிற ஸம்ப்ரதாயமாகிற சொல்லமுதத்தை நிறைத்துக்கொண்டு வந்து, [illegible] என்கிற படியே,நாதயாமுனர்களாகிற நல்லமார்க்கத்தால் பெருகியோடி,எம்பெருமானாராகிற பெரிய தடாகத்தில் நிறைந்து நின்று, ஆசார்யர்களாகிற மதகுகளினாலே சேதனர்களாகிற நற்பயிரை பயன்படச் செய்யும் என்கிற பூர்வர்கள் திருவுள்ளமும் ஸ்மரிப்பிக்கப்பட்டது.

இவ்வண்ணம், முதலில், ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகனுடையவும், பின்னால்,எம்பெருமான் முதல் ஆசார்யர்கள் எல்லாருடையவும் அடிவணங்கி நிற்கும்படியை ஆராய்ந்தபிறகு இந்த (தர்சனத்தை) ஸித்தாந்தத்தை ஸ்தாபித்து ராமானுஜஸித்தாந்தமென்று கொண்டாடும்படி செய்த, உடையவருடைய பெருமையைப் பேசி, தனியே அவரைச் சரணமடைந்தபடி பேசுகிறது, யோநித்யமென்றாரம்பிக்கும் மேல்தனியன்.

> यो नित्यमच्युतपदाम्बुजयुग्मरुक्म
> व्यामोहतस्तदितराणि तृणाय मेने ।
> अस्मद्गुरोर्भगवतोऽस्य दयैकसिन्धोः
> रामानुजस्य चरणौ शरणं प्रपद्ये ॥

यः	எந்தபாஷ்யகாரரானவர்
नित्यं	எந்நாளும்
अच्युत पदाम्बुज युग्मरुक्म व्यामोहतः	நழுவுதலில்லாதவனும் தன்னையடைந்தாரை நழுவவிடாதவனுமான எம்பெருமானுடைய தாமரைமலர்போன்ற இரண்டு திருவடிகளாகிற ஸ்வர்ணத்தில் விசேஷ மயக்கத்தினால்

ததிதராணி	எம்பெருமான் ஸம்பந்தம் பெறாதவைகளையெல்லாம்
த்ருணாய	ஒன்றுக்கும் உபயோகப்படாத மடித்த செத்தைக்கு ஒப்பாக
மேநே	எண்ணினரோ. அப்படிப்பட்ட,
அஸ்மத்குரோ:	எமக்கு ஆசிரியராயும்
பகவத:	ஷாட்குண்யம் நிறைந்த எம்பெருமானைப்போல் பூஜிக்கத் தக்கவராயும்
தயைகஸிந்தோ:	உலகிலுள்ள கருணை வெள்ளமெல்லாம் ஒருங்கே சேரும் ஸமுத்திரம் போன்றவராயும்
அஸ்ய	ஸமீபத்தில் சுட்டிக்காட்டும்படி ஸேவை ஸாதிக்குமவராயும்
ராமாநுஜஸ்ய	இராமானுசனென்று திருநாமம் பூண்டவராயுமுள்ளவருடைய
சரணௌ	திருவடிகளை
சரணம்	நம்மைக் காப்பாற்றும் உயரிய ஸாதனமென்று நினைத்து
ப்ரபத்யே	புகலிடமாக அடைகிறேன்.

ய:, என்றது யோஸௌ ஹ்ராணம் விஷயாதிவர்தம் [illegible] என்றும், உயர்வற உயர்நலமுடையவன் எவன் என்றும், யஷிந்து [illegible] என்றும், இப்படிகளில் சொல்லியிருக்கிறபடியே, மிகவும் ப்ரஸித்தியுடைய ஒருவரைச் சொல்லுவதாயிருக்கிறது.

நித்யம் என்பது, [illegible] என்கிறபடிகளில், பகவத்த்யானத்தைவிட்டு வேறு அல்லவுக்கு அனாகாதித்தத்தைச் சொல்லுகிறது,

அச்யுத, என்றது, தொண்டரடிப்பொடியாழ்வாரின் அநுபவத்தையன்றே பின்பற்றினமையைக் காட்டுகிறது. அவரும், அச்

சுதா அமரரே றே! ஆயுர்தம்கொழுந்தே யென்றுமிச்சுவைதவிரயான் போய் இந்திரலோக மாளுமச்சுவை பெறினும் வேண்டேன் என்று அருளிச்செய்தாரன்றோ? அதுபோலவே, இவரும், கள்ளார் பொழில் தென்ன ரங்கன் கமலப்பதங்கள் நெஞ்சிற் கொள்ளாமனி சரைநீங்கி, அரங்கன் மலரடிக்காளுற்றவரே தனக்குற்றவராய்க்கொள்ளுமுத்தம னானபடியினாலே, அச்சுதனான அவன்றாளிணைக்கீழ் வாழ்ச்சி பெற்றா ரன்றோ? அவனை நம்பியடைந்தால், ஒருபடியாலும், அடைந்தவரை நழுவவிடான் என்கிற பெருமையை திருநாமத்தால் விசதமாய்க் காட்டிக்கொண்டு நிற்கிறவனையன்றோ யடைந்தது. இப்படிப்பட்ட வன், ஸம்ரக்ஷணே ஸ்வபக்தஸ்ய கோ ஹேது: ஸம்ரக்ஷணே, என்னப்படுகிறவன் கணக்கில், தன்னிலே நிலைத்தாலன்றோ தன்னையடைந்தாரை நிலைப்பிப்பது என்று கூசாதே, தானும் நழுவ தலில்லாத வொருவனாகவே நின்றான். இப்படியுள்ள அர்த்தஸ்வா ரஸ்யத்தை வெவ்வேறு பதங்களில் வைத்து ஆச்ரிதரை அலையவி டாதே, அச்யுத என்கிற ஒரு பதத்தை உச்சரித்த மாத்திரத்தி லேயே முந்துற, அச்யுதன், நழுவதலில்லாதான் ஒருவன், தன்னைய டைந்தவரையும் நழுவவிடாதானொருவன், என்கிற அர்த்தங்களை ன்றோ விளங்கி நிற்கின்றது.

இவ்வண்ணம் பெருமையுள்ளவன் திருவடிகளாகிற இரட்டைக் கமலங்களைக்கண்டு, இவர் ஹ்ருதயமாகிற ஒரு கமலம் ஒருபட்ட மையைச் சொல்லுகிறது. ஸதாம்போஜ யுக்மஸ்ய ஸ்ரஜா ஹத: என்று. கமலம், கமலத்தைக்கண்டு மயங்கியது என்று சொன்னால், பாஞ்சாலியின் சில அவயவத்தின் வடிவழகைக்கண்டு பாவைமார்களே மயங்கினார்கள் என்கிறபடியில், உயர்ந்ததொரு பெரு மை, இந்த இரட்டைக் கமலங்களுக்கிருக்கத்தட்டில்லையே? இருவரா ய் வந்தார் என் முன்னே நின்றார், என்றால், ஒருவராயிருந்த ஒருவர் மயங்குவது இயல்புதானே. ஒன்றோடொன்று இணைபிரியாது இரு க்குமிரட்டைக்கு, உலகில் ஆளாகாத ஒன்றுதானுண்டோ? மேலும், மனிதர்க்குத் தேவர்போல என்கிற கணக்கில், இவர் ஹ்ருதயம் கம லம். அவை பொற்கமலங்கள் அல்லவா! பொற்றாமரையடி பொன் றல்லவோ போற்றப்படுகிறது. அவைதான் பொன்னானாய் தாமரை ப்போலே, என்கிறபடியே, நறுமணங்கொண்டு மயங்குமாயிற்று.

உலகிலும், ஏதோ சில புஷ்பவாஸனை போன்றதைக் காட்டியன்றோ ஒரு நோயாளியின் சிகித்ஸையில் ப்ரவர்த்திப்பார் அவன்படுங் கஷ்டமறியாது செய்யக் காண்கிறோம். உபகார நஷ்டவுஷாணாம ஸாய-ஞாநாயஹ ஹாவ என்கிற பெருமை படைத்த ஒரு ப்ரஹ்லாதாழ்வானும், பகவச்சரணாரவிந்த த்யானவ்யாமோஹத்தை யடைந்திருந்தபடியாலன்றோ, யார் செய்யுங் கொடுமையையும் அறியாதிருந்தார். ஆகவே இப்பேர்க்கொத்த வ்யாமோஹத்தைத் தான் அனைவரும் அபேக்ஷித்திருக்கத் தகுந்தது. இவ்வாறுள்ள வ்யாமோஹத்தையொருவர் கைக்கொண்டிருந்தாரென்றால் அவரைக் காட்டிலும் உயர்ந்தார் வேறொருவர் தானுண்டோ?

உடையவர் தான், காஞ்சநஸ-க நகெக்ஷ-வ, என்கிறபடி, பெண்ணாசை பொன்னாசையெல்லாம் விட்டவரன்றோ? ஸஉ ஜொஷ்டாஜாகாஞ்ச-ந: என்கிறவர்படியில் விளங்குமவரன்றோ? இவருக்கு இப்படி இவைகளில் மிகுதியான மோஹம்ஏற்படலாமோ, என்னில், நச்வரமான பொன்னையன்றோ விடுகை ஸம்பாவிதம். மற்றொப் பாரையில்லா ஆணிப்பொன்னின் அடிகளை ஆரேனும்விடுவாருமுண்டோ. யார்தான் விட்டாலும் இவர்விடக்காரணமுண்டோ. பொன்னையிகழ்ந்து விருகங்கள் புல்லிய புல்லுகந்தால் மன்னரெடுப்பதப் பொன்னலகே, என்கிறபடி, க்ஷுத்ர மிருகம் போல்வார், பொன்னைவிட்டு ஸாரமற்ற புல்லைக் கொண்டாலும், அரசர்கள் கொள்வது அப்பொன்னைத்தானே. இவர் தானும் அதன் படியில் யதிராசரில்லையோ? அரசர்களுக்கு எங்கிருக்கும் பொன்நிதியும் ஸொந்தமல்லவோ? பொற்குவியலில் ஆசைமட்டுப் படுத்தக்கூடியதோ அரசர்களுக்கு. அப்படி ஆசைமட்டுப் படுத்துவதுஸஹ-ஷ்டியொரயி-நவ ஸயொநஷ்ட: என்கிறபடியில் கேடு விளைப்பதொன்றில்லையோ. ஆகவே இந்த ஹிரண்யநிதியைக்கண்டு இராமானுசன் மயங்கிக் கிடந்தாரெனத் தோற்றுகிறது. இதை அமுதனாரும், தென்னத்தியூரர் கழலிணைக் கீழ்பூண்டவன் பாளன் என்று அடியொத்திப் பேசிநின்றார்.

இதில் மயங்கினது தான் மற்றொன்றைக் காணுமளவேயோ என்னில், மற்றவைகளை வெறுத்துப் பொகட்டுளென்கிறார் தஜிதரா

ணீ தூணா யஜெந,என்று.வுரசாதநியொரகூஃவிரகொ வுரசாதநிஎன்றும், மாற்பால் மனஞ்சுழிப்ப மங்கையர் தோள் கைவிட்டு என்றும் பேசப்படுகிற ஸூக்திகள்யாவும் அர்த்தமுள்ள தாக வானமை பேசப்படுகிறது. தூணீகூஜதவிரிஞூாஜிஃ என் கிறபடியுள்ள ஏற்றம் புகழப்படுகிறது. தவாசூஜதவஸ்ஜிநிவுா உவுஜெ நிவெஶிதாதா கயௌஉந ஜிதுதி என்கிறபடி எம் பெருமானின் தேனேமலருந்திருப் பாதத்தில் ஊன்றவைத்த மன தையுடையவர் வேறென்றை இச்சிப்பரோ. என்னமுதனேக்கண்ட கண்கள் மற்றென்றினேக்காணவே என்றும், நின்பாலன் பாயே என்றும், கழல்களவையே சரணகக்கொண்ட, என்றும் மூதறிவா ளர்கள் மூதலித்துப் பேசியிருப்பவைகள் பேர்க்கவும் போமவே; அன்றே.

இங்ஙனம் இவர் மற்றவைகளே ஒரு பொருட்டாக எண்ணவிடி னும், அவைகள்தான் இவரை நலியாதோ என்னில், உஉநகஉ ஜெநநூகிஶஜெ யதீஶரஸஂஶஜயாஃ என்கிறபடியே,இவ ரைப்பற்றினவர்களே ஜுகுப்ஸிதமான கஷ்டங்களால் துன்பமுறச் செய்யப்படுகிறார்களில்லே யென்றால், இவரிடம் அவைகளின் நினே வுக்குத்தான் ப்ரஸக்தியுண்டோ. ஆனபடியால் ஸாரமற்ற மற்ற வைகளே வெறுத்துப்பொகட்டு எம்பெருமானின் திருவடிகளில் விரு ப்புற்று விளங்கினெறென்று விளம்பப்பட்டது.

இப் பெருமைபெற்றவர் ஸம்பந்தம் தனக்கு ஏற்பட்ட ஏற்றம் வெளியாக்கப்படுகிறது ஸஉஸஉ—ரொஃ, என்று.

சிஷ்யனுக்கிருக்கவேண்டிய அடையாளமான நற்குணங்களில் எவ்வளவு நூல்களில் நுவலப்பட்டிருக்கின்றனவோ,அவைபெல்லாவ ற்றையும் ஒருங்கேகொண்டு விளங்கும் கூரநாதனை தமக்கு ஆசார்ய ஞய் விளங்குமவரென்கிறது. ஸஉஸஉ, என்கிற சப்தம், இப்படிப் பட்ட ஆசார்யனே நாம் பெற்றேம் என்கிறபாரிப்பால், இறைந்ச எனக்காரும் நிகரில்லேயே, என்கிறபடியே, ப்ரயோகிக்கப்பட்டதாக விருக்கும். அன்றிக்கே,தம்முடன் ஒருவாறு ஸம்பந்தமுடைய வரே வரையும் தம்மோடு கூட்டிக்கொண்டு சொன்னதாகவுமாம்.

நமக்கெல்லாம் குருவென்றபடியினாலே, நம்மைப்போன்ற ஒருவரோ அவரும் என்று கருதவேண்டாம். பகவானுடைய குணங்களைப் பெரும்பாலும் உடையவர் என்கிறது பகவத: என்று.

பெருமாள், எம்பெருமான், இந்த உடையவரோ எம்பெருமானார். என்கிறபடியில், வீறுபெற்றவரென்றே இவரது திருவுள்ளம்.

தெய்வத்தினிடம், லோஹபுத்தியும், ஆசாரியர்களிடம் மனிதர்கள் என்கிற புத்தியுமே கெடுதலை விளைவிக்கக்கூடியது. தெய்வத்தைக் காட்டிலும் சிறந்தவர்கள் ஆசார்யர்கள் என்று எண்ணுவதும் ஆசார்யரைக் காட்டிலும் மேம்பட்ட தெய்வமொன்றில்லை யென்றெண்ணுவதும் தகுதியுள்ளதாகவே யாகுமென்று காண்பித்தபடி.

இந்த ஆசார்யாவதாரந்தான், ராமகிருஷ்ணாத்யவதாரங்கள் போலே நெடுநாள் முன்னே சென்று விடாமல், நம்போல்வார் ஸேவித்துக்களிக்க அணித்தாகவிருந்தபடி சொல்லுகிறது. அயம் என்று.

எதிரிலுள்ள ஒருவஸ்துவை இந்த என்று, எளிதாகச் சுட்டிக் காட்டுமாப்போலே, யாவரும் வந்தடிவணங்க, எளிதாய் எழுந்தருளியிருந்தவாறு அறிவிக்கப்படுகிறது.

இவ்வளவு பெருமை பெற்றிருந்தால், யாருக்கும் கூசாமற் சென்றணுகலாயிருக்குமோவென்னில்? திருவருட்களெல்லாம் ஒருங்கே சேரும் கடலல்லவா, என்கிறார் தயைகஸிந்து: என்று. இவரையணுகியடைந்த திருவரங்கத்தமுதனாரும், காரேய்கருணையிராமானுச என்றும், நிகரின்றி நின்றவென்னீசைதக்குன்னருளின் கண்ணன்றிப்புகலொன்றுமில்லையருட்குமஃதே புகல், என்றும், உன் பெருங்கருணை தன்னை, என்றும், வண்மையினாலும் தன்மாதகவாலும், என்றும், இனியுன் சீரொன்றிய கருணைக்கு இல்லைமாறு தெரிவுறிலே என்றுமன்றோ பலவாறு பாசுரமிட்டிருப்பது. உடையவராகும், அருமா கடல், கடலோடு பலபடி ஒற்றுமைப்பட்டிருந்தாலும், அதைக்காட்டிலும் பல ஏற்றமும் பெற்றிருக்கிறார். ஸவவர்ணீ, கடல் தீண்டலாகாதென்றும்போலே அந்த ஸமுத்திரத்தில் மூழ்க சில காலங்களைக் கூடாதென்று விலக்கி, சில காலநியதிகொண்டு மூழ்கவேண்டியதாயிருக்கும். இக்கடலில் மூழ்க ஒருகாலநியமமில்லை

அக்கடல் ஜடாசயமென்று பெயர் படைத்திருக்கும். இக்கடல் எம்பிராமானுசன் மெய்மதிக்கடலே, என்று மெச்சப்பட்டிருக்கும்.

அக்கடலில் புகுந்து பருகுமவர்கட்கு' உவர்க்குங் கருங்கடலா னபடியினலே' உப்புக்கரிக்குமதாயிருக்கும். இக்கடல், [illegible] வதீதி, என்று கொண்டாடப்பட்டிருக்குமானதாலே, இதின் பெயரைச் சொல்லும்போதே, சொலப்புகில் வாயமுதம் பரக்குமெ ன்கிறபடி தித்திக்குமதாயிருக்கும்.

அக்கடல், ஒருவேளையைப்போலிராமல் தன்னிடம் மூழ்குவா ரை கரைசேரவிடாதே அமிழ்த்துவிக்கும்.

இக்கடல், தன்னிடம் அணுகிமூழ்குவாரை எல்லைகாணவொண் ணுதுள்ள கடலைக்கடத்தி கரை சேர்த்துவிக்கும். பவக் கடலைக் கடத்துவிக்கும்.

அக்கடல், சில குரங்குகளுக்கும் நடுவே வரம்பிட வெளிதாக விருக்கும்.

இக்கடல், மெய்மதிக்கடலானது கொண்டு, பேதையர்வேதப் பொருளிதென்றுன்னிப், பிரமனன்றென்றேறி மற்றெல்லாவுயிருமஃதென்று, உயிர்கள் மெய்விட்டாதிப் பரனோடொன்றுமென்று சொல்லுமவ்வல்லலெல்லாம் வாதில் வென்றான், என்றும், தற்கச்சமணரும் சாக்கியப் பேய்களும் தாழ்சடையோன் சொற்கற்ற சோம்பரும் சூனியவாதரும், நான் மறையும் நிற்கக் குறும்புசெய் நீசரும் மாண்டனர் நீணிலத்தே, எம்பிராமானுச முனிபோந்த பின்னே, என்றும்' போற்றப்படுவதொன்றானதாலே எவராலும் வரம்பிடவொண்ணுத வண்ணமாகவிருக்கும்

இதுபோல்வன மற்றுமுள்ள ஏற்றங்கள் எவ்வளவு அநுஸந்தி க்க ஏற்கின்றனவோ, அவையாவையும் அநுஸந்திப்பது.

இக்கருணைப் பெருங்கடலைக் கருத்திற்கொண்டு களிக்க எளிதா ய் தோற்றும் திருநாமத்தை அநுஸந்தித்து இனியராகிறார் [illegible] என்று.

அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரத: ஸ்வபதச்ச தே. குருஷ்வ மாமநுசரம், என்று, ஸ்ரீராமபிரானின் தம்பி இலக்குமணன், பெருமாளிடம் இடைவிடாது கைங்கர்யத்தை வேண்டிக் கொண்டாற்போலே, இவரும், அந்த இலக்குமணன் திருநாமமான, ராமானுஜன், என்று கொண்ட பெயரினைப் பெருநிலத்தார் அர்த்த முள்ளதாகக் கொள்ளத் திருவுள்ளங்கொண்டு, தவாநுபூதி ஸம்பூத ப்ரீதிகாரித தாஸதாம் | தேஹி மே க்ருபயா நாத ந ஜானே கதிமந்யதா | ஸர்வாவஸ்தோசிதாசேஷ சேஷதைகரதிஸ்தவ | பவேயம் புண்டரீகாக்ஷ த்வமேவைவம் குருஷ்வ மாம் என்கிறபடியே, பலவாறு எம்பெருமானிடத்தில், ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தோசித ஸர்வ வித கைங்கர்யங்களையும் ஆசைப்பட்டு ப்ரார்த்தி முகத்தாலே அனுகரித்து அனுஸந்தித்தாரிறே.

இவருடைய திருநாமத்தை அனுஸந்திக்கவே, சுரக்கும் திருவு முணர்வும், சொலப்புகில் வாயமுதம் பரக்கும், இருவினைபற்றறவோ டும், என்கிறபடியே, பலதீங்குகளுமழிந்து பல நன்மைகளுமுண்டா குமென்றல்லவா, இத்திருநாமத்தை இத்தனியனில் ஏறிட்டு அனுஸ ந்திக்கிறபடி.

இந்த போக்யமான திருநாமத்தைச் சொல்லித் திருவடிகளைச் சரணமாக அடைந்தபடியைச் சொல்லுகிறது, சரணௌ சர ணம் ப்ரபத்யே என்று.

இராமானுசன் சரணாரவிந்தம் நாம் மன்னிவாழ, நெஞ்சே சொ ல்லுவோமவன் நாமங்களே, என்கிறபடியே, அவன் நாமம் சொல்ல வே, அத்திருவடிகளும் நமக்கிடங்கொடுக்க விரங்குமென்று சொன் னபடி.

ப்ராணப்ரயாண பாதேயம் நாம ஸங்கீர்த்தநாம்ருதம் என்கிறபடியே, அத்திருவடிகள் வரையில் செல்ல நடுவேயுள்ள வழி மாளவும், சொலப்புகில் வாயமுதம் பரக்கும், என்கிறபடியே, வழி யில் பசி தாஹமின்றிச் செல்லவும், இருவினை பற்றறவோடும், என் கிறபடியே, அத்திருவடிகளை அடைய இடையூறாகவுள்ளவையாவும் விலகவே, ஒருதடையின்றிச் செல்லவும், இராமானுசன், என்னும்

திருநாமத்தை அநுஸந்தித்துக்கொண்டு, திருவடிகளை யடைந்தமை காட்டப்படுகிறது.

தாய்முலைப்பாலுண்ணும் சிறிய குழந்தை தன் பசி தீர்த்துக் கொள்ள, தாயின் முலைதேடிவாய் வைக்குமாப்போலே, சிஷ்யனானவன், இழியும் துறையைச் சொல்லுகிறது.

[illegible] என்கிறபடியே, முலை தேடியுண்ணுங்குழந்தை, தாயின் காலண்டையில் சேர்ந்து கால் கட்டி, அவளை விடாது, முலையுண்ணப்பாரிக்குமாயின், திருவடிகளை விட்டு வேறொன்றும் வேண்டாது, [illegible] என்கிறவிவர், சொல்லின் தொகைகொண்டுனதடிப்போதுக்குத் தொண்டுசெய்யும், என்கிற படியே, அவர் திருவடிகிட்டி, அடிமை செய்யப் பாரிக்குமவை பெரிதன்றே.

எம்பெருமானார், திருவடியைவிட்டு, தனக்கு வேறு புகலில்லாதபடியைச் சொல்லுகிறது. [illegible] என்று, உன்னலல்லால் யாவராலுமொன்றுங் குறைவேண்டேன், என்றும் புகலொன்றில்லாவடியேனுன்னடிக் கீழமர்ந்து புகுந்தேனே என்றும், சொல்லுகிறபடியே, தமக்கு, ப்ராப்யப் ப்ராபகங்களிரண்டும், அதாவது, அடையத்தகுந்த உயரிய பலமும், அதையடைவிக்கும் தாசையான உபாயமாய் நிற்பதும், எம்பெருமானார் திருவடிகளே என்று சொல்லி, அவர் திருவடிகளைத் தஞ்சமாகக்கொண்டமை குறிப்பிடப்படுகிறது.

ஏய்ந்த பெருங்கீர்த்தி யிராமானுசமுனிதன் வாய்ந்த மலர்ப் பாதம் வணங்குகின்றேனென்றபடி.

இங்கு, ராமானுசன் திருவடிகள் தவிர மற்றவையைத்தான் வேண்டாதபடி காட்டுகிறது.

ராமானுசன் தானும், எப்பொழுது, நான், பகவானும், நாராயணன், என்று திருநாமம் பூண்டவராயும், எங்கள் குலத்திற்கு நாதனையும், குலதனமாயும், எனக்கு எல்லாவுறவு முறையுமுடையவனை, அடையப்போகிறேன். என்றுஎம்பெருமானிடம் பலபடியுமுறையிட்டுக்கதறிக்கைகூப்பி, லக்ஷ்மீ நாராயணன் திருவடிகளை, சரணமடை

கிறேன் என்று, சரணாகதி பண்ணினர். இவரோ, [illegible] என்றும், மாறுயதானவனை வள்ளுகிரால், மார்விரண்டு கூறுகக்கீறிய கோளரியை, வேறுகயேத்தியிருப்பாரை வெல்லுமோ, மற்றவரைச் சாத்தியிருப்பார் தவம், என்கிறபடிகளில் வெளியாக்கப்பட்ட அர்த்தங்களை (அதாவது, பகவானை நேரே அடையுமவர்களுக்கு, தான் அபேக்ஷிக்கும் பயன் கிடைக்குமோ, கிடைக்கமாட்டாதோ. அந்த பகவானுக்கு மிகவும் வேண்டியவர்களாகவிருந்து அவனுக்கு அடிமைசெய்யும் உத்தமர்களுக்கு, நாம், பணிவிடை செய்துகொண்டிருந்தால், நமக்கு பலன் கிடைப்பதில் சிறிதேனும் ஸந்தேஹமில்லை, என்றும், பகவானையே நினைத்து த்யானம் செய்துகொண்டிருப்பாரை, பாகவதர்களையே அடிபணிந்து நிற்கின்றவர்களின், தவப்பெருமை வென்றுவிடும், என்றும், பெருமைகளை) நன்கு அறிந்தவரானபடியினாலே, பகவத்பக்தியின் எல்லை நிலமான பாகவத பக்தியிலே மண்டி தன்னாசிரியன் அடியிணைக்கீழே மீட்சியில்லா வாழ்ச்சிபெறும் சூழ்ச்சியைச் செய்கிறானன்றோ!

தெய்வத்தைப்போல், ஆசிரியரைக் கொண்டாடுகிற கிரமத்தில், அத்தெய்வத்தின் சரணாகதி மந்த்ரம் போலவே, இவ்வாசிரியரை அரணாகக்கொள்ளும் மந்திரத்தின் பொருத்தத்தையும் காண்மின்கள்,

பகவானுக்குள்ள மந்திரங்கள், பகவத் ராமானுசனுக்கும் அடைவே அநுஸந்திக்கத் தட்டில்லை. பகவானுக்கு திருநாமம். நாராயண என்கிற நான்கு அக்ஷரத்தைக் கொண்டால்' இங்கும், ராமாநுச, என்று ஸாம்யத்தை அடைந்திருக்கும். பகவானின் மந்திரத்தை, மேற்சொல்லப்பட்ட நாமத்தில், முன், ப்ரணவ நமஸ்ஸுக்களையும்,பின்,நான்காம் வேற்றுமையையும் சேர்த்தவுடன், எட்டு எழுத்தாகி, திருவஷ்டாக்ஷரம், என்று எப்படி சொல்லப்படுகிறதோ, அப்படியே, இங்கும், ராமானுஜாஷ்டாக்ஷரீ, அமைந்திருக்கக் குறையில்லை. அப்படியே த்வாதசாக்ஷரமும், தோன்றி நிற்பதென்பது, எளிதில் அறிந்திடக்கூடியதே யாகுமென்பதில் ஐயமொன்றில்லை, த்வயதான், இங்கு ஆழ்வானுடைய அநுஸந்தானத்தில் இந்த ச்லோகத்தில் வெளியிடப்படுகிறது, [illegible] [illegible] என்று.

இதில் மந்திரங்காண்பது, ஸ்ரீபகவத் ராமானுஜ சரணௌ சரணம் ப்ரபத்யே, என்று. இதை இப்படிக் கொண்டபடியினாலேயே, பின் வாக்கியமாய் அனுஸந்திக்கவேண்டிய, ஸ்ரீமதே ராமானுஜாய நம: , என்பது, அணுகிவந்து நிற்குமன்றோ. இப்படி இந்த மந்திரத்தை அனுஸந்திக்கும் பெருமையுள்ளது கொண்டே, இன்றளவும் வா, ஸ்ரீவைஷ்ணவர்கள், என்னப்படுகிறவர்கள் யாவரும் எந்த மங்களகரமான ஸமயங்கள் முதலாக இதை அனுஸந்தித்தும், எழுதியும் வருகிறார்களில்லையோ? முன்னோர் நெறியைத்தழுவி அந்நெறிநிலை தவறாது நடப்பவர், ஸ்ரீமதே ராமானுஜாய நம: என்று முதலில், எழுதாமல், ஒரு அக்ஷரமும் எழுதமாட்டாரன்றோ? இவ்வாறுள்ள பெருமையெல்லாம் இம்மந்திரம், ஒன்றுக்கேயென்பது எவர்க்கும் சொல்லாமலே விளங்கும். மேலும், பகவானின் மந்திரமான த்வயத்தைக் காட்டிலும், பகவத்ராமானுஜனின் மந்திரமான த்வயம், அக்ஷரத்திலும் ஆதிக்யம் பெற்றிருக்கும். எம்பெருமான், என்பதற்கும், எம்பெருமானார், என்பதற்கும் எப்படி அக்ஷரத்தின் எண்ணிக்கை, குறைந்தும், ஏற்றமுற்றும் இருக்குமோ, அவ்வாறே இதிலும் கண்டு கொண்மின்.

ராமானுஜன், என்கிற திருநாமமும் யுகந்தோறும், வழங்கிவருகிறதொன்றாகவேயிருக்கும். த்ரேதையில், இத்திருநாமத்தை, இளைய பெருமாளான, இலக்குமணனிடத்தும், துவாபரத்தில் பலராமானுஜரான, கண்ணபிரானிடத்தும் கலியில், ஸ்ரீபாஷ்யகாரர், என்கிற, உடையவரிடத்தும், யாவரும் எளிதிற் காணலாம். இவ்வாறு நிற்கும் இத்திருநாமம், பரசுராமாவதாரத்துக்குப் பின், தசரதராமாவதாரமானபடியினாலே, ஸ்ரீராமபிரானிடமும் பொருந்தும். இப்படித் திருநாமம் வழங்குவது போலவே, திருவடிகளையடையும் உபாயமான மந்திரமும் மஹிமை பெற்று விளங்கும். வெகுமுந்தின த்ரேதாயுகத்தில், இலக்குமணன் ராமபிரானைச் சரணமடையும் தருணத்தில் ஸ ப்ராது: சரணௌ காடம் நிபீட்ய ரகுநந்தந: | ஸீதாமுவாசாதியஶா: ராகவம் ச மஹாவ்ரதம் | பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா கிரிஸாநுஷு ரம்ஸ்யதே | அஹம், ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரத: ஸ்வபதஶ்ச தே || என்று தயரதராமானுஜரான வொருவர், பரசுராமானுஜரான வொருவனைச்

சரணமடைந்து, உன்னை எல்லாப்படிகளினாலும் ரக்ஷகனாகக்கொண்டு நிற்கின்ற அடியேனை எவ்விடத்திலும், எக்காலத்திலும், எல்லா ஸமயங்களிலும், எல்லாக் கைங்கர்யங்களையும் செய்யுமாறு தயை பண்ணவேண்டும் என்று சொல்லி முடித்திருப்பதிலும், த்வாபரத்தில் பலராமானுஜனை, கண்ணபிரானிடத்தும், கலியில், உடையவரிடத்தும், காணலாகிறதன்றோ! இங்ஙனம் மந்திரத்துக்கு லோபமின்றி விளங்கி வந்தாலும், ராமாவதாரத்தில், விபீஷணோ வா ஸுக்ரீவ யதி வா ராவணஸ்ஸ்வயம் என்றும், ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே, அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம என்றும், அராக்ஷஸமிமம் லோகம் கர்தாஸ்மி நிஶிதை: ஶரை:, ந சேச்சரணமப்யேஷி மாமுபாதாய மைதிலீம் என்றும், க்ருஷ்ணாவதாரத்தில் மந்மநா பவ மத்பக்த: மத்யாஜீ மாம் நமஸ்குரு | மாமேவைஷ்யஸி யுக்த்வைவம் ஆத்மாநம் மத்பராயண: என்றும், மாமேகம் ஶரணம் வ்ரஜ என்றும், சொல்லி, சரணாகதிக்கு வ்யக்தி தௌர்லப்யம், ஏற்பட்டிருந்தபடியினாலே எல்லோரையும் உத்ஸாஹப்படுத்திக் கார்யங்கொள்ள, தாங்களே முன் நின்று வார்த்தையாடவேண்டியிருந்தது.

அதுவும் நிற்க, ராமாவதாரத்தில், எல்லோருக்கும், சரணாகதியின் பெருமையை வெளியிட முதன்முதலில், ஒருராமானுஜன் பணியவும், ஒரு ராமானுஜன் பணியநிற்கவும், ராமானுஜனை ராமானுஜனேபணிந்து காட்டவேண்டியிருந்தது. க்ருஷ்ணாவதாரத்திலும் கண்ணனுக்கும், அர்ஜுனனுக்கும், நடந்த விஷயங்களும், நிரூபணம் பண்ணவாரம்பித்தால் அங்ஙனமே தெளியலாகும். அதெல்லாமின்றி, இவ்வவதாரத்தில்த்தான், மண்மிசையோனிகள்தோறும் பிறந்து, எங்கள் மாதவனே கண்ணுறநிற்கிலும் காணகில்லா, உலகோர்களெல்லாம், பண்டிதர்கள், பாமரர்கள், என்கிற பேதமின்றி, அண்ணலிராமானுசன் வந்துதோன்றியவப்பொழுதே நண்ணருஞானம் தலைக்கொண்டு, யாவரும் ஒரேமனதாய், அவர்கள் தாங்களாகவே கொண்டாடும்படியாகவிருக்கும். இவ்வவதாரமானது, ஸம்ஸ்ருதியாதூஹவதி ஜாயமாந:, அவதரிக்க அவதரிக்க, மேன்மை பெற்று வி

ளங்குகிறான், என்கிறபடியே, ஸேவிக்குமவர்களை, த்திருமேனிசோபையாலும், திருக்கல்யாண குணங்களில் மேன்மை பெற்ற தயை என்கிற கல்யாணகுணத்திறைலும், ஈடுபடுத்தி, தன்னையுற்றாட்செய்யும்படி திருத்துமானபடியிறைலே, இதோரேற்றத்தையும் கொண்டிருக்கும். இவ்வளவு நிரூபித்தவாறே, [illegible], என்பதற்கும், த்ரேதை த்வாபர யுகங்களான நெடுநாள் முன்சென்றதும், என்னைச் சரணமடை, என்னைச் சரணமடை என்று தாங்களே நேர் நின்று சொன்னதுமான, ராமாநுஜாவதாரங்களைத் தேடிச் சரணமடையும் அருமை எனக்கில்லை. எனக்கு அதில் ஓராதாரமுமில்லை. கொள்ளக் குறைவற்றிலங்கி, கொழுந்துவிட்டோங்கியவள்ளல் தனத்திறைல்வல்வினையேன் மனம் புகுந்த இராமாநுசன் தன் இணையடிகளையே, சரணமாக அடைகிறேன் என்றும் பொருளும் விளங்குமதாயிருக்கும்.

மற்றும் இதிலுள்ள பொருத்தங்களைப் போற்றிக்கொண்டே போனால், இக்குற்றகீர்த்தி யிராமாநுசன், என்கிறபடியே, மிகவும் பரம்பின புகழையுடையாெருருவனைதால், எவ்வளவு விரிவாகப் பேசுவதாய் நினைத்துப் பேசினாலும், உதிக்ஷயாணி வதாம்ஸி, என்கிற கணக்கில், நம் புத்திக்கெட்டாதது கண்டு ஒருவாறு வாங்கியே நிற்கவேண்டுமாதலின், இவ்வளவோடு இத்தனியனில் அநுபவத்தை, இப்பொழுது நிறுத்திக்கொண்டு, ஆன்ற தமிழ்மறைகளனைத்துக்கும், ஈன்ற முதற்றாயான நம் சடகோபனை ஸ்ரீஆளவந்தார் தாயாய் தந்தையாய் மக்களாய் மற்றுமாய் முற்றுமாய்க் கொண்டு, ஏத்தி நிற்கிற மாதா பிதா, என்கிற தனியனைப்பற்றி அதன் அநுபவத்திலீடுபடுவோம்

ஆழ்வார்கள் அனைவர்க்கும் அவயவியாய் விளங்கி நிற்கும் நம்மாழ்வாரைச் சரணகக்கொண்டு, அடிபணியும் படியைப் பரக்கப்பேசுகிறது மாதா பிதா வென்றித்யாதி.

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூதி꞉
ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம் ।
ஆத்யஸ்ய ந꞉ குலபதேர்வகுலாபிராமம்
ஸ்ரீமத்ததங்க்ரியுகலம் ப்ரணமாமி மூர்த்நா ॥

மதந்வயாநாம்	என்னிடம் ஏதேனுமொருபடி ஸம்பந்த முடையாரனைவர்க்கும்
நியமேந	என்றுமொரே உறுதியாக
யதேவ	எந்த ஆழ்வார் திருவடிகளே
மாதா	அன்னையாயும்
பிதா	தகப்பனும்
யுவதய:	யௌவனப்பருவமுடைய பெண்டிர்களாயும்
தநயா:	பிள்ளை குட்டிகளாயும்
விபூதி:	பொருள்களாயும்
ஸர்வம்	மற்றும் எல்லாப் பெருமைகளாயும், கருதப்படுகின்றனவோ, விளங்குகின்றனவோ
அப்படிப்பட்ட	
ந:	நம்முடைய
ஆத்யஸ்ய	முதன்மையான
குலபதே:	ப்ரபன்னர்கள் குலத்திற்கு தலைவராய் எழுந்தருளியிருக்கிற நம்மாழ்வாருடைய
வகுலாபிராமம்	மகிழ்மலர்களினால் மிகவும் அழகாயுள்ளதாயும்
ஸ்ரீமத்	மிக்கவொளி பொருந்தியதாயும்
தத்	இவ்வளவுதான் பெருமையுள்ளதென்று சொல்லமுடியாததுமான
அங்க்ரியுகளம்	ஒன்றோடொன்று சேர்ந்திருக்கப்பெற்ற திருவடிகளின் இரண்டையும்.
மூர்த்நா	தலையினாலே
ப்ரணமாமி	நன்றாய் வணங்குகிறேன்.

மாதா, என தன்னையாய் விளங்குகிறதுகள் என்றது, உலகில் பிறவி பிறந்தோரனைவர்களும், பிள்ளைகளைப் பெறவேண்டி அநேகம் கோயில்கள் கட்டியும், குளங்கள் வெட்டியும் பலவித

தான தருமங்கள் செய்தும், கடலாடியும், மலையேறியும், காயோடு நீடுகனியுண்டு வீசுகடுங்கால் நுகர்ந்து நெடுங்கால மைந்துநீயோடு நின்று தவம் செய்ய, என்கிறபடியே, காய்கிழங்குகளைத்தின்று மிகக்கொடிய தவங்களைத் தவறாது செய்து தம்போலியரான பிள்ளை குட்டிகளைப் பெற்று அவைகள் செய்யும் பிழைகளைப் பொறுத்து அவைகள் செய்யும் சிறிய விளையாட்டுக்களையும், அவைகள் பேசும் சில பேச்சுக்களையுங்கண்டு மனமகிழ்ந்து அவைகள் போம்வழியே தீமை செய்யவிட்டு மெய்யில்லா மெய்யைவளர்க்கும், தாய்களுண்டல்லவா, அவர்களைச் சொன்னபடியன்று. மேலாத்தாய், என்கிற படியில் கொண்டாடப்படும், உயர்ந்ததாயாய் ஆழ்வார் திருவடிகள் விளங்குமாற்றை விளக்குகிறது.

வி தா, என்னப்பனுய்விளங்குகிறதுகள் என்றது, ஒருவனு க்கடங்கியிருந்து போஷணம் செய்யும் தாய்போலன்றிக்கே, தான் ஸ்வதந்திரனுய் சிறிது, பிள்ளைகளை நல்வழிப்படுத்துகிறதகப்பன்மார் களை நினைத்துச் சொன்னபடியன்று, மேலாத்தந்தை, என்கிறது போல் போற்றிச் சொல்லப்படும் தந்தையாய் நிற்கிறதுகள் ஆழ்வார் திருவடிகள் என்றபடி.

மாதா பிதாக்கள் என்னப்படுகிறவர்கள் கேவலம் ஒரு சரீரத் தைமட்டிலும் உண்டுபண்ணக் காரணமானவர்களாக விருக்கிறார் கள், சரீரத்தினுள் விளங்குமவனைப்பற்றி சிறிதேனும் கவலை கொள் ளவோ, கவலைகொண்டு ஒரு நன்மை செய்யவோ செயலற்றவர்க ளாகிறார்கள், ஆகவே. நோயெலாம் பெய்த கோராக்கையை ஆக்கி னது ஒரு காரணங்கொண்டு என்னையனே, என்றும், என்னன்னை யே என்றும், நேயங்காட்டி நையுமவனல்லேன் நான். ஒரு கார ணமுங்கொள்ளாது தன்னுடனுண்டான பேரிரக்கமடியாக, ஆக்கி யடிமை நிலைப்பித்து என்னை இன்றவமே போக்கித்திருத்திப் பணிகொண்டு, அன்னையாயத்தனு மென்னையாண்டிடுந் தன்மை யான், சடகோபனென் நம்பியே, என்று புகழுகிற்கு மாழ்வார் திரு வடிகளே எனக்குற்ற மாதா பிதாக்கள் என்கிறார் என்று காட்டின படி.

யாவதுயஃ, தான் அனுபவிக்கத் தகுந்த பெண்டிர்கள் என் றது, மாதா பிதாக்களைக் காட்டிலும், இவனுக்கு சிலகேடுவரில் தன்

நிலைமை என்னவாகுமோ வென்று மனங்கலங்கித் திகைக்குமவ ளாய், காயெழுஷு ஊாவஹீ, என்கிற நீதியின்படி ஒற்றுமைப் பட்டவளாய் இவன் தப்பி சிலவழி நடக்கிலும், இவனிடம் பல்லைக் காட்டியும் புன்முறுவல் செய்தும், அவத்தங்கள் விளையுமென் சொ ற்கொளந்தோ, என்று பரிவுபடப் பேசியும், இவன் தனக்கும், வுராணெஹெூர விமரீயவஹீ, என்கிறபடியே உயிருக்குமுயி ராய் தோற்றிநிற்குமவளைச் சொன்னபடியன்று. நம்பினேன் மட வாரையும் முன்னெல்லாம் செம்பொன் மாடத்திருக்குருகூர் நம்பிக் கன்பனாயடியேன் சதிர்த்தேனின்றே, என்றும்; முயல்கின்றேனுன் றன்மொய்கழற்கன்பையே, என்றும் சொல்லுகிறபடியே எனக்கு ஸவ்வித போக்யவஸ்துவும் ஆழ்வார் திருவடிகளே என்று அற்றுத் தீர்ந்தேனென்றபடி.

தநயாஃ பிள்ளைகள் என்றது, பொன்னரை நாணொடு மாணி க்கக் கிண்கிணி, தன்னரையாட தனிச்சுட்டித் தாழ்ந்தாட, என்ன ரைமேல் நின்றிழிந்துங்களாயர்தம் மன்னரைமேல் கொட்டாய் சப் பாணி, என்று தாய் தகப்பன் இருவரும் சேர்ந்திருந்து கண்டு சீரா ட்டி மனம் பூரிக்கும்படி, பெற்ற குழந்தைகள் பாலப்பருவத்தே விளையாட்டினால் தாய் தந்தையரை உகப்பித்தும், தாய் தந்தையர் கள் முதிர்ந்த வயதை அடைந்து உடலம் தளர்ந்திடுங்கால், பெற்ற பிள்ளைகளான தாங்கள் அவர்கட்கு தக்க பணிவிடைகள் செய்தும், உடலச் சிறைவிட்டு உயர்வானிலேறுங்கால், புத், என்னும் நரகத்தே வீழாமற்காத்து புத்திரனென்கிற பெயரைப் பொருட்படச் செய்து கொள்ளவும் வல்லர்களான பிள்ளைகுட்டிகளைச் சொன்னபடியன்று. ஸௌகித்த மாத்திரத்திலே கண்குளிரச்செய்தும், தன்னை நம்பினாரை ஸப்பொழுதும் காப்பாற்றியும், இப்படி சங்கிருந்த காலம் சென்று இந்த சரீரம் விடுபட்டால் பலவித நரகக்குழிகளிலே வீழாதே தப்பு வித்தும், உயர்வானிலேற்றி உயர்நிலையுந்தந்து உய்யக்கொள்ளும் பெருமை யுடைத்தானபடியினாலே, தஸாஷக்கள் என்கிறபடியே, ஆழ்வார் திருவடிகளையே பிள்ளைகள் என்கிறபடி.

விஹூதிஃ ஐச்வர்யம் என்றது. இதன் முன்னால் விவரி த்த பெண்டாட்டியையும் பிள்ளை குட்டிகளையும் போஷிப்பதற்கு

வேண்டியது பணங்காசு முதலியதுதானே, அணையவந்த ஆக்கமுண் டேல் அட்டைகள்போல் சுவைப்பர், என்றும், பொருள் கையுண் டாய்செல்லக்காணிற்போற்றி யென் னேற்றெழுவர், என்றும் சொல்லி, மேல் இருள் கொள்துன்பற்றின்மைகாணில் என்னே யென்பாருமில்லை, என்றும் சொல்லுகிறபடியே, தன் பெண்டாட்டி பிள்ளைகளானாலும், எல்லாம், பொருள்கொண்டு செய்யும் செயலிரு க்குமளவுதான் இவனிடம் பரிவு தோன்ற, அவர்கள் இருப்பர்களா னதால், அதற்காக சேகரிக்கும் ஐச்வர்யம் சில உண்டல்லவா! உலகில். அந்த ஐச்வர்யத்தைச் சொன்னபடியன்று. அந்த ஐச்வர்ய மெல்லாம், கொள்ளும் பயனில்லை குப்பை கிளர்த்தன்ன செல்வம் என்று சீர்குலைத்துப் பேசப்பட்டிருக்குமானபடியாலே அதை வெறு த்து, **தநம் மதீயம் தவ பாதபங்கஜம்**, என்கிறபடியே, யார் எவ்வ ளவு எப்படி அனுபவித்தாலும், கொள்ளக்குறைவிலன், என்கிறபடி யில், சிறிதேனும் குறைவுபடாது விளங்கும் ஆழ்வார் திருவடிகளே என்னுடையதான பெருஞ்செல்வம், என்றுபேசநிற்கிற தென்றபடி.

ஸர்வம், எல்லாம், என்றது பின்னும் வேண்டியவைகளெ ல்லாம் பெற்றிருப்பதைச் சொல்லுகிறது. **வாஸுதேவ: ஸர்வம்** என்கிறபடியே, எல்லாம் தனக்கு ஆழ்வார் திருவடிகளே என்றபடி. **மாதா பிதா ப்⁴ராதா நிவாஸ: ஶரணம் ஸுஹ்ருத் க³திர் நாராயண:** என்றும், **ப்⁴ராதா ப⁴ர்த்தா ச ப³ந்து⁴ஶ்ச பிதா ச மம ராக⁴வ:**, என்றும், **த்வமேவ மாதா ச பிதா த்வமேவ த்வமேவ ப³ந்து⁴ஶ்ச ஸகா² த்வமேவ । த்வமேவ வித்³யா த்³ரவிணம் த்வமேவ த்வமேவ ஸர்வம் மம தே³வ தே³வ** என்றும், **பிதாஸி லோகஸ்ய சராசரஸ்ய த்வமஸ்ய பூஜ்யஶ்ச கு³ருர்க³ரீயாந், ந த்வத்ஸமோஸ்த்யப்⁴யதி⁴க: குதோந்யோ லோகத்ரயேப்யப்ரதிமப்ரபா⁴வ**, என்றும், எம்பெரு மான் சிறத்துப்பேசுமவைகளெல்லாம் **தேவஜீவாதவாய உபாஸீத**, என்கிறபடியில், ஆழ்வார் திருவடிகளிடமே ஆளவந்தாருக்கு, என்பதும், குறிக்கொள்ளத் தகுந்தது என்றபடி.

யதே³வ, எந்த திருவடிகளே யென்றது. தேவு மற்றறி யேன், என்கிறபடி ஆழ்வார் திருவடிகள் தவிர வேறொன்றைத்தான்

தஞ்சமாய்க் கொள்ளாதபடியை அறிவிக்கிறது. யதேவ என்பது யதேவ ஹ தத்ஸ்ஊத்ரு, என்கிறபடியில் வேதத்தில் சொல்லப்பட்டபடியே, ப்ரஹ்மத்தைப் பேசியிருக்கும் பேச்சாலேயே ஆசார்யனைப் பேசுகிற பெருமை வெளியாக்கப்படுகிறது. ஆழ்வார் திருவடிகளே தன்னைக் காப்பாற்றுவதற்கு ஸாதனம், என்று அருளிச்செய்தபடியினாலே, கண்ணிநுண் சிறுத்தாம்பினாற் கட்டுண்ணப்பண்ணிய பெருமாயன், என்னப்பனில், என்கிறபடியே, மிகவும் மாயனான எம்பெருமானுக்கு வசப்பட்டு ஆட்செய்வேனல்லேன் நான். தென்குருகூர் நம்பியென்னக்கால் அண்ணிக்குமமுதூறு மென் நாவுக்கே, என்கிறபடியே, ஆழ்வார் திருநாமம் வாய்ப்பட்டால்தான், என் நாவினில் அமுதஊற்று ஊறும், அப்பொழுது நானும், ஆழ்வார் பொன்னடி மெய்மையை மேவி, நாவினாற் நவிற்றின்ப மெய்துவேன். என்றபடி.

இப்படி எம்பெருமானைவிட்டு ஆழ்வார் திருவடிகளையே பற்றுவானென், என்னில் எம்பெருமான், சிலகாலத்தில், அவனவன் கர்மத்துக்குத் தகுதியாக, சில கெட்ட கார்யத்தை செய்வித்து சிலரைப்படுகுழிப்பாய்ச்சவும் பாடுபடுகிறான். பின்னும் ஆஸுர ப்ரக்ருதிகளுக்குத் தன் உண்மையை வெளிக்காட்டாமல், கள்ள வேடத்தைக்கொண்டுபோய்ப் புறம்புக்கவாறுங் கலந்தசுரரை | உள்ளம் பேதம் செய்திட்டு என்கிறபடியே, விபரீதமான உபதேசம் செய்கிறான். இவ்வாறு பலவுள. நம் ஆசார்யரான ஆழ்வாருக்கோ, அனைவரிடமும் ஒரு பேதமுமின்றி, எல்லாரும் நல்வழி சேரவேண்டும் என்றும் பேரவாவே உள்ளது. இவ்வர்த்தம். அருள் கொண்டாடும் அடியவரின்புற | அருளினான் அவ்வருமறையின் பொருள் | அருள் கொண்டாயிரமின் தமிழ் பாடினான் | அருள்கண்டீ ரிவ்வுலகினில் மிக்கதே | என்கிற மதுரகவி யாழ்வாரின் மதுர மொழிகளாலும், ஊர்ஜிதோஷ நிஷ்டிநிவேப ஸம்ப்ராநவி ஶ்ருக்ஷ ரஸநாய நாமவிஷ்டாது! ப்ருவஜாவிஸதிவல பாதாம்புஜ ஸ்மரேத்கோவல்யசேவ ஶாந்தீய: | என்றும், அந்த மிலாப்பேரின்பமருந்த எற்றுமடியோமை யறிவுடனே யென்றுங்காத்து | முந்நான்கவிலை நிரைவழியிலொழுகாதெம்மை முன்னிலையாக்

தேசிகர் தம் முன்னே சேர்த்து | மந்திரமும் மந்திரத்தின் வழியுங் காட்டி வழிப்படுத்தி வானேற்றி யடிமை கொள்ளத் | தந்தையென நின்ற தனித்திருமாற்காளிற் தலை வைத்தோம் சடகோபனருளி னாலே, என்னும் ஸ்ரீநிகமாந்த மஹாதேசிக திவ்ய ஸூக்தியாலும், செய்யோடருவிக்குருகைப்பிரான் திருமாலிருங்கள் | கையோர்கனி யெனக்காட்டித்தந்தான் கழற்கேகமலம் | பெய்யோமவன் புக ழேத்திப்பிதற்றிப்பித்தாய்த்திரியோ | மையோவறிதுமென்றே யுபகாரத்திறற்றலையே | என்கிற கம்பநாடர் பாட்டினாலும் கசடறத்தெளியலாகிறதில்லையோ? ஆகவே ஆளவந்தாரும் இத்தனி யனில், யதெவ என்கிற வேதவாக்யத்தையிட்டு ஆழ்வார் திருவடி களே தமக்குத் தஞ்சமென்று ஆரவாரித்திருப்பது ஆர்க்குமறியலா காமற்போகாதன்றே, இங்ஙனம் ஆளவந்தார் ஆழ்வார் திருவடி களில் அசைக்க முடியாத அன்புகொண்டிருக்கிறபடியை ஆராய்ந் தால், ஆழ்வார் திருவடிகளே சரணம், என்பார்க்கு, அந்தமில்பே ரின்பத்தடியரோடு திருமாமணிமண்டபத்திருக்கும் மாட்சிமலிந்து நிற்குமென்று சொல்வது மிகையாகாது, என்கிற சீரியபொருளும் சிக்கெனத்தோன்றுகிறது.

நியமெசு, என்றுமோரே உறுதியாக என்றது, மேற் சொன்ன அன்புடைமை, ஏதோ சிலகாலத்தில்,ஏதோஒரு எண்ணத் தினல் உண்டாகக்கூடியதோ என்னில், ஊத வாரத வாவ என்கிறபடியே ஈங்கிருக்கும் நாளிலும், வானுயரின்பம் மன்னிவீற் றிருக்குமக்காலத்திலும் ஆழ்வார் திருவடிகளில் அன்பு ஒருபடியா கவேயிருக்குமென்றபடி, இங்கு, நியமெசு—வவவூஊா உ—கா வவீத யஃ, என்கிற ஸ்ரீதேசிகனுடைய ஸ்தோத்திர பாஷ்ய ஸூக்தியும் உணரத்தக்கது. அங்குசென்றும், ஆழ்வார் திருவடிகளை யணுகியிராத அரைக்கணமும் அரிதாயிருக்குமென்று, ஆளவந்தார் அறிவித்தபடிகளையடியொத்தி, நம்தேசிகனும், ஏறியெழிற்பத மெல்லாவுயிர்க்கு மிதமுகக்கும் | நாறுதுழாய்முடிநாதனைநன்னியடி மையினம் | கூறுகவர்ந்த குருக்கள் குழாங்கள்குலைகழற்கீழ் | மாறுதலின்றி மகிழ்ந்தெழும் போகத்து மன்னுவமே || என்கிற திவ்யஸூக்தியால் திருநாட்டில் போனாலும் ஆசார்யர்கள் திருவடி

நிழல்தான், அனைவர்க்கும் நிலைத்து நிற்குமிட மென்று அறுதியி ட்ட அழகு அகமகிழச் செய்வது காணீர்.

உதுஙயாநா०, என்ஸம்பந்தம் பெற்ற எல்லோருக்குமென் றது, தன்னோடு திருமேனி ஸம்பந்தம் பெற்றவர்களையும் தன்னிடம் நன் ஞானம் பெற்று அதன்படியில் திருவடி ஸம்பந்தம் பெற்ற சிஷ்யர்கள், அவர்கள் சிஷ்யர்கள் என்கிறபடியே, எவ்வளவு வரை யில் ஸம்பந்தம் காணலாகிறதோ, அவர்கள் எல்லோரையும் சேர் த்து என் ஸம்பந்தம் பெற்றவர்கள் என்கிறது. **ஸஹி வித்யாத ஸ்௦ ஜநயதி தச்ஹ்ரேஷ்௦ஜந்**, என்கிறபடியே, ஸத்வித்யையை ப் புகட்டி, **ஸஸொஹவஸஹவதி**, என்கிறபடியே ஸத்தை கெட் டுத் தோன்றி நின்றுனொருவனை, **ஸஞ்சௌநம் தசொவிது:**, என்கிறபடியே, தான் புகட்டின ப்ரஹ்மஞானம் புகர்படச் செய்து அவனை அனைவரும் ஸத்தை பெற்றவனாக அறிகிறார்கள், என்னும் பெருமைபடச் செய்து, இப்படி ப்ரஹ்மஞானத்தை அறிந்தவனை உள்ளபடியே அறிந்தவர்கள் பெருமையை தேவர்களும் அறிந்தார் களில்லை யென்று **யொஹெஹ்நம் வாஜஷ௦ வெது தெவா ஸவிநத° விது:**, என்கிறபடியே பேசி யிருப்பதினாலே, திரு மேனி ஸம்பந்தத்தைக் காட்டிலும், ஞான ஸம்பந்தத்தை யிட்டுப் பேசும், திருவடி ஸம்பந்தமே உயர்ந்ததென அறியலாகிறது. இரண் டும் ஒற்றுமைப் பட்டிருந்தாலும் பெருமையே. இவ்வகையான இர ண்டும், இவ்வாளவந்தாரிடம் காணலுற்றது என்பது, **விதாசஹ० நாயசாநி०விமொாக்ஷ வுஸீது**, என்கிறபடியே, எனக்கு ஞான த்தைக் கொடுத்ததிலும் என்னை உண்டு பண்ணினதிலும் பாட்டனு ரான நாதமுனிகளின் முகத்தைப் பார்த்து, என்னிடம் தயை கொ ள்ளவேண்டும், என்கிற இவர் தன் ஸ்தோத்திரரத்ன திவ்ய ஸூக்தி யால், ஆர்க்குமறியலாகும்.

இங்கு, **ஸவஷ௦ யசெவ நியசெந உதுஙயாநா०**, என்று அருளிச் செய்யும் அழகை நோக்கினால், ஆளவந்தாரான தன்னு டைய ஸம்பந்தம் பெற்றார், இன்னார் என்று அறிய, ஓர், நிகரற்ற அடையாளம் காண்பிக்கப்படுகிற தென்றே கொள்ள வேண்டும்.

உலகில் ஒருவன் படுங்கஷ்டங் கண்டு அதைக் காணும்போது, ஐயோ, என்றிருந்தானாகில் அவன், ஸ்ரீ வைஷ்ணவனென்று கொள்ளப்படுவான் என்கிறப்போலே, ஆழ்வார் திருவடிகளே சரணம், என்றிருக்குமவர்களே, ஆளவந்தார் ஸம்பந்தம் பெற்றவர்கள் என்று நிச்சயிக்கவேண்டும், என்று நியமங் கட்டுவது போல் தோன்றுகிறது. பின்னும், சாஜநிஷ்டஸ்ய நோவம்ஶே ஜாதோ வா ச்ராத்வ்யஶதாம், என்கிறபடியே, பகவத் பாகவதாசாரியாளிடம் பக்தி கொண்டு பஜனம் செய்து நல்வழியில் சேராது இருக்கும் பிள்ளை தனக்கு வேண்டாம், அதன் கர்ம வசத்தால் வந்து பிறந்தாலும், பிறக்கும்தருவாயிலேயே அப்பிள்ளை இறந்துவிடட்டும், என்று சொல்லுகிற மஹான்களில் நம் ஆளவந்தாரும் ஒருவரானபடியினாலே நன்மக்களே அக்குலத்திலுதிப்பார்கள். அப்படி ஆளவந்தார் திருவம்சத்தில் ஸம்பந்தம் பெற்றாரென்றால், அவர், ஆழ்வார் திருவடிகளையே நம்பி, தேவு மற்றறியேன் என்கிற பெருமை பெற்று ஆளவந்தாரடியோம்படியோ மினியல்வழக்கே என்கிற உயர்ந்த பர்வாவைப் பெற்றே இருக்கவேண்டும். அன்றி ஆழ்வார் திருவடிகளில் ஆசையில்லாதார் ஆளவந்தாரடியாரு மல்லர், என்றும் அழுத்தமாய் பேசவும் இடங் கொடுக்கிறது.

ஶ்ரேஷ்டஸ்ய, முதன்மையான என்றது. ப்ரஹ்மா தேவானாம் ப்ரதம: ஸம்பபூவ விஶ்வஸ்ய கர்தா புவனஸ்ய கோப்தா | ஸ ப்ரஹ்மவித்யாம் ஸர்வவித்யாப்ரதிஷ்டாம் அதர்வாய ஜ்யேஷ்டபுத்ராய ப்ராஹ, எல்லா உலகங்களையும் உண்டு பண்ணியும், அதைக் காத்தும், அதற்குத் தகுந்தபடி தேவர்களுக்கு முதல்வாய் தோன்றி, பிரமனானவர், எல்லா வித்யைகளுக்கும் இருப்பிடமான ப்ரஹ்ம வித்யையை தன்னுடைய மூத்த குமாரரான அதர்வர் என்கிறவரின் பொருட்டு உபதேசம் செய்தார், என்கிறபடியே. நம்மாழ்வாரும் எல்லாருக்கும் முதல்வராய்த் தோன்றி, மிக்க வேதியர் வேதத்தினுட்பொருளை, நாதோபஜ்ஞம் ப்ரவ்ருத்தம், நாதமுனிகளை முதலாவது காரணமாய்க் கொண்டு ப்ரவர்த்தித்தது என்று சொல்லுகிறபடி பெருமை வாய்ந்த, ஞானபுத்திரரான ஸ்ரீமன் நாதமுனிகளுக்கு உபதேசிக்க சீர்மையையுட்கொண்டு சொன்னபடி.

நஃ, குலபதேஃ, நம்முடைய குலபதியான என்றது ஆழ்வார் திருவடிகளில் அன்பு கொள்ள ஓரடி காட்டுகிறது. நம்முடைய குலத்துக்கு மூலபுருஷரான படியினாலே நமக்கு எல்லா வித த்திலும் பூஜிக்கத் தக்கவர் ஆழ்வார். அவரிடம் நமக்கு சேரும் வழியாகவிருப்பது, திருவடிகள் என்று உறவு சொல்லுகிறது. ஒரு சரீரஸம்பந்தத்தைக் கொண்டு அந்தக் குலத்துக்கு முதல்வராய், சில ரிஷிகளைச் சொல்லி அவர்களைக் கொண்டாடி வருகையில், இந்த சரீரஸம்பந்தத்தை யறுத்து நாம் உஜ்ஜீவிக்கும் படியானப்ரபத்தி மார்க்கத்தை நமக்கு உபதேசித்து, அதன்படி ப்ரபன்னர்களாய் திருந்தின நம்முடைய குலத்துக்கு முதலாவது கூடஸ்தராய், ருஷிம் ஜுஷாமஹே க்ருஷ்ணத்ருஷ்ணாதத்த்வமிவோதிதம் । ஸஹஸ்ரசாகாம் யோத்ராக்ஷீத் த்ராமிடீம் ப்ரஹ்மஸம்ஹிதாம், என்றும், வந்தே விஷ்ணுபதாஸக்தம் தம்ருஷிம், என்றும், ஆத்யாய நாம் ப்ரக்ருதிர்வைராம் ஸம்ஹ்ருதாத்ருஷ்டவங்கம், என்றும், ஸ்வஜ்ஞாதாநம் ஶடாரிம், என்றும், பலபடியாக இன்றளவும் அறிஞர்களால் போற்றப்படுகிற நம்மாழ்வாரை, குருகையில் வந்து கொழுப்படக்கிய குலபதி யென்றும் கொண்டாடத் தட்டில்லையே, என்றபடி.

யதேவ நியமேந மதந்வயாநாம், என்றும், ஆத்யஸ்ய நஃ குலபதேஃ, என்றும், அருளியபடியில், ஆழ்வார் திருவடிகளில், அளவிறந்த அன்புடைமை, தன் முன்னோர்கட்கும், பின்னோர்கட்கும் ஒருபடியே உள்ளதென்று நிரூபிப்பதற்கிணங்க ஸத்ஸம்ப்ரதாயாபிஜ்ஞர்கள் பரம்பரையாய்க் கேட்கலுற்ற, ஐதிஹ்யமும் இங்கு உணரத்தக்கது. அதாவது, காட்டு மன்னார்கோயிலில் திருவவதரித்த, ஸ்ரீமன் நாதமுனிகள், முன்னொரு காலவிசேஷத்தில், திருக்குடந்தைக்கு எழுந்தருளி, ஆராவமுதத்தையனுபவித்திருக்குமளவில், அங்கு சேர்ந்திருக்கும், செழுமாமணிகளின் பெரிய திருவோலக்கத்தில், திருமாமணி மண்டபத்து, தமிழ் வேதமறிந்த பகவர்களால், ஸேவிக்கப்பட்டு வந்த, ஆராவமுதேயடியேனுடலம் நின்பாலன்பாயே, என்றாரம்பித்து அனுபவிக்கிறபத்துப்பாட்டுக்களையும், உழலையென்பிற்பேய்ச் சிழுலையூடவளையுமிருண்

டான். கழல்களவையே சரணுகக்கொண்ட குருகூர்ச் சடகோபன் குழலிற் மலியச்சொன்னவோ ராயிரத்துளிப்பதும் மழலைதீரவல்லார் காமர்மானேய் நோக்கியர்க்கே, என்கிறமுத்திரையான பாட்டுடன் செவிதாழ்த்திக்கேட்கலுற்று, உடனே, திருக்குருகூர் எழுந்தருளி, குழலின் மலியச்சொன்ன வோராயிரத்தையும், மற்றை மூவாயிரங்களையும், அக்குருகையிலேயே, யோகதசையில், குருக்களுக்குத் திலகமாகும் செல்வக்கோனுன, நம்மாழ்வாரிடம், உள்ளபடியேக்ரஹித்து, மீண்டும், குடந்தைமாநகரை யடைந்து, ஆழ்வார்கள் அருளிச்செயல்கள் ப்ரகாசத்தையடைய முழுமுதற் காரணமான, இந்த திவ்யதேசத்திலன்றே முதன்முதலில் ஆழ்வாரை அர்ச்சையாக எழுந்தருளப் பண்ணவேண்டும் என்கிற பேரவாவினுல், [illegible] [illegible], அறிவுள்ளவன் ஆசார்யனை மிகவும் ப்ரகாசப்படுத்த வேண்டும், என்கிறகட்டளையின்படியே, ஸ்ரீ ஆராவமுதாழ்வான் நியமனத்தைக்கொண்டு, அழகிய நம்மாழ்வார் திவ்யமங்கள விக்ரஹங்களை, மூலபேர, உத்ஸவபேரக்கிரமங்களில், ஏறியருளப் பண்ணியும், அதிலும், வாராஅருவாய், என்கிற பாட்டில், ஆவியகமே தித்திப்பாய், என்றருளிச் செய்திருப்பதற்கும், உயர்வற, என்கிற முதற் பாட்டில், தொழுதெழென்மனனே, என்றருளிச் செய்திருப்பதற்கும் ஒத்தபடியாக, மார்பில் உபதேசமுத்திரை வைத்த வலது திருக்கையுடன், மூலவர், திவ்யமங்கள விக்ரஹத்தையும், தொழுவன் என்னும் பலபடிகளில், [illegible], என்கிறபடியே பிரார்த்தித்து, கழல்களவையே சரணுகக்கொண்ட பெருமைக் கேற்ப, அவன் திருவடியைத் தொழுதவண்ணமான, அஞ்சலி முத்திரையுடன், உத்ஸவ திவ்யமங்கள விக்ரஹத்தையும், ஏறியருளப்பண்ணி, திருப்ரதிஷ்டை செய்வித்து, திருவாராதனம் முதலிய சீர்களும் செவ்வனே சிறப்புற்று நடந்து வருமாறு செய்தருளினுரென்பதும் மிகப் பிரஸித்தமன்றே. இங்ஙனம், ஸ்ரீ மன்னுத முனிகளின் பிரார்த்தனைக்கிணங்கி [illegible], என்கிறபடியில் அவதரித்த, அர்ச்சா திவ்யமங்கள விக்ரஹமானபடியினுலே, [illegible]

விஶேஷதீர்த்தம்! பேரருளாளன் கவசங்களைந்த திருமேனியில் உள்ளபடியே தோன்றும் திவ்ய சோபையை அதற்கென்று இட்டுப் பிறந்து வைத்திருக்கும் பாக்யசாலிகள் காண்கிறார்களென்று, ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த படியிலே, இன்று ஸேவித்தாலும், தன்னை யன்புடனடைந்தவர்கட்கெல்லாம், தானும் அன்பன், என்கிறபடியே, ஶுபாஶ்ரயமான, திருமேனியின் சோபையை, அடியார்கட்குக் காட்டியருளி, வகுளபூஷண பாஸ்கரர், எனக்கொண்டாடுகிற முன்னோர்கள் மூதுரைகளை மூதலித்து விளங்கி நிற்கும், ஆஸ்ராவ்யாவிஷ்ஸம்ஸ, என்கிறபடியி லுள்ள மேன்மை மிகவும் மேம்பாடுடைய தொன்றன்றோ.

இங்கு, ஆளவந்தார், குலபதியென்று கொண்டாடின படியை, சிறிது ஆராய்வோம், நாதமுனிகள் முகமாய், திருவாய்மொழி முதலிய அருளிச் செயல்களை, தனக்குபகரித்த உபகாரத்தை நினைந்து, குலபதி யென்றும், நாதமுனிகள் பெற்றிருக்கும் இதே பெருமையையும், அதற்கிணங்க, ஆழ்வாரைக் கூடஸ்தராய்க் கொண்டு குடந்தையில், கோயிற் கட்டியும்வைத்த சீரை நினைந்து, எங்கள் குலபதியென்றும், அருளிச் செய்திருக்க வேண்டுமென்பதை நாம் தெளியக் கண்டால், மதந்வயாநாம்; என்பதற்கும் திருவாய் மொழி முதலிய ஆழ்வார்கள் ப்ரபந்தங்கள் முதலாக ஸம்ப்ரதாயார்த்தங்கள் எல்லாவற்றையும் பெற்று, ப்ரபன்னர்களாய், ஞானத்தால் தன் திருவடி ஸம்பந்தம் பெற்றவர்களிடமே முக்கிய நோக்கெனத் தெற்றென விளங்குகிறதல்லவா!

வகுளாபிராமம், மகிழம் மலரினால் அழகாய் விளங்குகிறது என்றது, முன்சொன்னபடி, குலபதியென்று, ஒரு ஸம்பந்தம், ஆழ்வாரிடம், நமக்கு உளதென்று உரைத்துவிட்ட படியினாலே, அவரவர்களுக்கென்று அடைத்த பொருளை அவரவர்கள் அலக்ஷ்யம் பண்ணுவது ஆகாதானதால், அந்த நிர்ப்பந்தத்தால் ஆழ்வார் திருவடிகளிலன்பை அகற்ற முடியாததோவென்னில், ஸாதனம் ஸ்ரீமதாம் ஶஶ்வத் யோகஸ்ஶ்ராவிஜாயதே, என்கிறபடி, பூர்வஜன்மத்தில் பழகின நற்பழக்கம், இப்பிறவியிலுந்தொடர்ந்து வருமானதால் அப்படியுள்ள ஜன்மாந்தர வாஸனையொன்று

இவனையவரடிகளில் அணைவிக்க அணுகிநின்று கொண்டிருக்க,அதற்குமேலே, ஆழ்வார் திருவடிகளில் உள்ள, ஓர் ஒப்பற்ற வாஸனையும் சேர்ந்தால், அடியார்களெல்லோரையும் அருகிலழைத்தணைக்க குறையில்லை யென்பதைச் சொல்லுகிறது. இவர் பாமாலைகளெல்லாம், வகுளாமோதவாஸிதம், என்கிறபடியே, மகிழ்மாலையினால் வாஸனையூட்டப்பட்டிருக்கிற தென்றால், இவர் திருவடிகளாகிற இரண்டு பூக்கள், அவ்வாஸனை பெற்றிருக்கத் தட்டில்லையே! மகிழ்மாலை மார்பினன், என்கிறபடி, முந்துற, ஹ்ருதய கமலமொன்றுக்கு வாஸனையூட்டினார். அவ்வாஸனை, அடைவே, திருவடித் தாமரைகளாவும், அணுகிநின்றதென்றபடி. அனைவரும் மகிழ்ந்துபாட, தாம் மகிழ்மாலையணிந்து தமிழ்மாலைகள், மகிழ்ந்து பாடினரென்று தோன்றுகிறது. மகிழ்மாலை யணிந்தவன் மகிழ்ந்து பாடியதை மகிழ்ந்து பாடினால், மகிழலகொன்றே போல் மாறும் பல்யாக்கையில் மாறி மாறிப் பிறக்கும் மாயை நீங்கி நாட்கமழ் மகிழ்மாலை மார்பினன், மாறன் சடகோபன், வேட்கையால் சொன்ன பாடலாயிரத்துள் இப்பத்தும் வல்லார், மீட்சியின்றி வைகுந்தமாநகர் மற்றது கையதுவே, என்கிறபடியே, அந்தமில் பேரின்பத்தில் மகிழ்ந்திருக்கையைப் பெறுவர்களென்கிற பெருமையையும் விளக்கியபடி. மகிழ்மாலை யணிந்ததும், மயர்வற மதிநலமருளப் பெற்றதும், மகிழ்ந்து பாடியதும், என்ன ஒப்புடைமை பெற்றிருக்கிறது பாருங்கள். ஸுமேஷு ஜாதீ, என்று, புஷ்பங்களுக்குள்ளே ஜாதிபுஷ்பம் உயர்ந்ததாய் சொல்லப்பட்டாலும், ஆழ்வார் திருவுள்ளத்து, இந்த புஷ்பத்தை மகிழ்ந்து கொண்டபடியினாலே, இது, மகிழ்மாலையென்றும் மதிப்பையுற்றது. ஆகவேதான் ஆழ்வாருக்கு வேறு திருநாமங்கள் பல,இருக்கச் செய்தேயும், வகுளாபரணரென்றும், வகுளாபூஷணரென்றும், மகிழ்மாலை மார்பினன், என்றும், அதிகமாகப் புகழப்பட்டு வரும் நிற்க, ஆழ்வார் திருநாமமான, ஸ்ரீ சடகோபனைத்தலைக் கொண்ட, திவ்ய பாதுகைகளை, ஸ்தோத்திரம் செய்யப்போவர்த்தத்து பாதுகா ஸஹஸ்ரத்தில், திவ்யபாதுகையைக் குறிப்பிடும் இடத்தில் வகுளாபரணஸூநும், மகிழும் மாலைதரித்தவர் திருமேனியே,ரீ என்கிறபடியே, புகழப்பட்டுள், பின்னும் ஆழ்வார் ஸந்நிதியின் பெருமை சொல்லுமிடங்களில், முதலில், ஸ்ரீ வைகுண்ட விசவத்

தில், தத்ஸம்ருத்தவகுளாபரணாங்க்ரியுக்மம், இவ்வளவு,
தான் பெருமையுள்ளதென்று ஒரு வார்த்தை கொண்டு சொல்லமு
டியாத மகிழம் மலர்களையே திருவாபரணமாய் பூண்டு கொண்டிருக்
கிற, திருவடிகளின் இரண்டை அடைவோம், என்றருளிச் செய்த
ஆழ்வான், ஸுந்தரபாஹுஸ்தவத்தில், கின்னரஸ்திரீகள் ஆழ்வார்
அருளிச் செயலை அதிலுள்ள ரஸபாவம் முதலியன தோற்றுமாறு
பாடுங்காலத்தில் அழகர் திருமலையிலுள்ள கற்களும், கரைந்தோடுகி
றது என்று அனுபவிக்கும் ச்லோகத்தில், வகுளாபரண ஸரஸ்வ
தீ, மகிழ்மாலை தரித்தவன், ப்ரத்யக்ஷமாய்க் கண்ட ஸரஸ்வதி யெ
ன்று திருவாய் மொழியை அருளிச் செய்தார். நந்தேசிகனும், ஆழ்
வாரால் காணப்பட்ட தமிழ் வேதமும், ஆழ்வார் திருக்கண்களுக்கு
விஷயமான படியினாலே, இவரிடம் நித்யமாயுள்ள வாஸனை அங்
கேறி அதனாலே அத்தமிழ் வேதத்தின் அக்ஷரங்களெல்லாம் மகி
ழம் மலரின் வாஸனைபெற்று, அக்ஷரங்களான பல அவயவங்க
ளின் வாஸனை, அவயவங்களையுடைய அவயவியான ஸம்ஹிதையில்,
நிரம்பப்பெற்று, அவ்வாஸனை அனைவரையும் மகிழச் செய்கிறது,
என்கிற பொருளை உட்கொண்டு, வர்ணஸ்தோமைர் வகுள
ஸுரபி வாஸனாவஹாம், எழுத்துக்களின் கூட்டத்
தால், மகிழம்பூவின் மணத்தை நன்றாக வஹிக்கிற, என்று தமிழ்
வேதத்துக்குவிசேஷணமிட்டார். ஸ்ரீஸூக்திஸஹஸ்ரவ்யாக்யா
தாவான, வெங்கடாத்வரியும் ஆழ்வார் ஸூக்திகள், வகுளாமோத
வாஸிதமானபடியினாலே, இந்த வாஸனைக்கு, லக்ஷ்மிக்குப் பிறந்தக
மாய் விளங்கும், தாமரைப்பூவும், தான், ஆஸைப்பட்டு கிடக்கும்
தருமோ, என்றஞ்சியோ, அல்லது, அவ்வாஸனைக்கு ஆஸைப்பட்டு
பரிப்பதிலும், அடியார் தம்மடியார் என்கிற க்ரமத்தில், அவ்வா
ஸனைபெற்றவஸ்துக்களுக்கு ஆஸைப்படலாமிப்போதென்று கருதி
பங்கஜம், என்கிறபடி, சேற்றிலிருந்துண்டான இப்பிறப்பில்இது
வும் கூடுமோ கூடாதோ என்றும் கூசி, நல் ஜன்மம் பெற்று ஸத்
துக்களாய்விளங்குகிறவர்கள் திருமுகமாக மறுபிறவி பிறந்து, மகிழ
மலர் வாஸனைகொண்ட ஆழ்வார் ஸூக்திகளுக்கு, ஆஸைப்பட்டது,
என்கிற ஒரு பொருள்பட, வகுளாபரணீயதாம் ஸரஸ
தாம் ஸுதாஸ்வாது ஹரணீயதாம், என்றுமன்றோ ச்லோக

மிட்டார். இவ்விஷயத்தில்' நெஞ்சுக்கிருள் கடிதீபமாய்த் திருமொழி யிட்டகலியன் ஸௌக்தியும்சற்று ஸஹகரித்து நிற்பதை நிரூபணம் செய்வோம், கலியன் திருநறையூர், எம்பெருமானை மங்களாசாஸனம் செய்கிற, திருமொழி, ஆறும்பத்து ஆறுந்திருமொழி, ஆரம்பமான, அம்பரமும் என்கிற பாசுரத்தில், திவ்யதேசப் பெருமைபேசுகிற பின்னிரண்டடிகளில், முன்னடியாக, வம்பவிழும் செண்பகத்தின் வாசமுண்டு மணிவண்டு வகுளத்தின் மலர்மேல் வைகு, அழகிய வண்டானது, பரிமளத்தைப் புறப்படவிடுகிற செண்பகப் புஷ்பத்தின் வாஸனையை அனுபவித்து, அதன் பிறகு மகிழம்பூவின் மேலே மகிழ்ந்து நிலையாய்த் தங்கியிருக்கிற, என்றருளிச் செய்திருப்பது, மகிழம் மலரின் மஹிமையை ஆராயும் நம்மை அகமகிழச் செய்யவில்லையா? செண்பகப்பூவில் வாஸனையையுண்ட ஒரு வண்டு அதில் இருந்த காலத்துக்குள்ளேயே, ஷாசுாரா ஷஜா ஷ உெ ஷஜ ரஜஃ, தாமரைப் பூவின் செம்பொடியே, கால்வைக்கக் கூசும்படி கஷ்டப் படுத்தக்கூடியது, என்கிறபடி அங்கு வெக்கை தட்டிஅந்த வெக்கையைப்போக்கடித்துக்கொள்ள, மகிழம் மலரிலே மண்டி அங்கேயே நிலைத்து நின்று களைப்பாறுகிறது என்றால், மனிசப்பிறவி பிறந்த நாம், நம்முடைய பலவித தாபங்களைப் போக்கடித்துக்கொள்ள, முயலவேண்டியது முக்யமல்லவா? அப்படி நாம் முயலவேண்டியிருக்க, ஆழ்வாரே, சிலரை நோக்கி, எம்மீசர் விண்ணோர் பிரானார்மாசின் மலரடிக்கீழ் எம்மைச் சேர்விக்கும் வண்டுகளே, என்று அருளிச்செய்து, பின் வண்டுகளோ வம்மின் என்கிறபடி அருளிச் செய்கிறபடியினாலே, நாமும், ஒரு வண்டுகளாய், மகிழ்மலர் மாலையினால் வாஸனையுள்ள திருவடிகளிடம் கிட்டப்பெற்று அவ்வண்டுகள்போல் உண்டு களித்திருக்கக் குறையில்லையே. ஆகவே, குலபதியென்கிற உறவுக்கு மேலே, வகுளாபிராமம், என்று போக்யதை விஞ்சியிருக்குமானபடியாலே, அநுபோகாய், கிட்டுகிறபடி காண்பிக்கப்பட்டது.

ஸ்ரீ உசு, சோலையுடையது, என்றது, வாஸனையுள்ள புஷ்ப ஸௌகுமார்யமான வஸ்துவுக்கு வாட்டமிலாமை ஸம்பாதிதமோ, என்னில், பொன்னுமாய் நாற்றுப்போலே என்கிறபடியில், வெந்நரகத்திலிருக்குமவர்களையும், வாஸனையால் தன்னிடம் அனுபச்

செய்து, தன்னுடைய சோபையினால், ஸேவிக்குமவர்களை, வைத்த கண் வாங்கவொட்டாமே தாள் கண்டார் தாளே கண்டார், என் கிறபடியில், தன் தாளிணைக்கீழ் ஆட்படச் செய்யும் பெருமையைச் சொல்லுகிறது. அன்றிக்கே, தான் பற்றுகிற இடத்தின் சீர்மை சொல்லுகிறது. சொன்மாலைகள், ஏற்ற நோற்றேற்கினியென்ன குறையெழுமையுமே, என்றும், உரிய சொல்லாலிசை மாலைகளே த்தியுள்ளப் பெற்றேற்கு, அரியதுண்டோவெனக் கின்றுதொட்டு மினியென்னுமே, என்றும், சொல்லுகிறபடியே, மிகவும், எல்லா ஸம்பத்தும், நிறைந்திருக்கப் பெற்றதன்றோ ஆழ்வார் திருவடிகள். அவைகளைக் கிட்டினால், அவைகளின் அனுக்கிரஹத்தால், ஆழ்வாரருளிச்செயல்களாகும், ஸம்பத்துக்கள், தன்னடையே வந்து சேருமன்றோ? அதோடு நில்லாதே, பாடலோராயிரத்துளிவையுமொரு பத்தும் பயிற்ற வல்லார்கட்கு, அவன் நாடு நகரமும் நன்குடன் காண நலனிடையூர்தி பண்ணி, வீடும் பெறுத்தித் தன் மூவுலகுக்கு ந்தருமொரு நாயகமே, என்கிறபடியே, தனக்கு கிடைத்த ஸம்பத்தான அருளிச்செயலை வ்ருத்தி செய்து பாடிவரவே, எம்பெருமான் தானே, மோக்ஷ பர்யந்தமான ஸம்பத்துக்களையும் தந்து ஸர்வேச்வரத்வத்தையும் கொடுத்தருளுவனன்றோ! இப்படி மேன்மேல் ஸம்பத்தைக்கொடுக்கத் தகுந்த, ஸ்ரீசடம், குடிகொண்டிருப்பது காட்டிற்று.

தசை, அப்படிப்பட்ட என்றது, எவ்வளவு சொல்லியென்ன, அவைகளின் பெருமை பேச முடிந்ததோ, முடியுமோ, எவ்வகையாயினுமென், யதோவாசோ நிவர்த்தந்தே, என்கிறபடியில், போனவழியே மீளவும் திரும்பித்தானே வரவேண்டியதாயிருக்கும். யத்ர ஸாயம் க்ருஹாமுநி:, என்று சென்றாலும், கரைகாணவொண்ணாதே. ஆனதால் சொல்லிமுடிக்க வொண்ணாதபடி, மேம்பட்ட பெருமையுடையதாயிருக்குமென்றபடி.

இவருடைய அவதாராந்தரமாய் கொண்ட திவ்ய பாதுகைகளின் பெருமையைப் பேசப் புறப்பட்ட, விசுவாஸம்வதியி:, என்னப்படுகிற, ஸ்ரீதேசிகனின், நிசேஷம்ஸாரதும் யதிவதி காஸ்த்ரவாணவீயதி ஸசேத்ர சஷீஹ

ஸித்ரீ | ஸக்தா ஸஹஸ்ரவத3ந: ஸார்வபௌமஸ்ய ஸௌரே: ஸ்தோத்ரஜவதி பாது3கயோ: ப்ரபா4வ: || பாதுகையா ய் அவதரித்த ஆழ்வாரின் மஹிமை, அளவிடமுடியாதது. ஒரு ஸமயம், ஆகாசமெல்லாம் பத்திரிகையாக ஆகி ஏழு கடலையும் (மை) ஆகக்கொண்டு, ஆயிரம் முகத்தோடு, எம்பெருமானே, நேரில் சொல்லுகிறவனாக ஏற்பட்டால் பாதுகா ப்ரபாவம் ஒருவாறு எழுதப்படலாம், என்கிற, பாதுகா ஸஹஸ்ர திவ்யஸூக்தியும் இங்கு நினைக்கத் தக்கது.

ஸம்ஶ்லிஷ்ட யுக்மம், சேர்த்தி யழகுபெற்ற திருவடிகளிரண்டையுமென்றது, இரண்டு ஸ்தானங்களை யுடையதானாலும், யஜமானத்தன்மை யென்பது ஒன்றே, என்கிறது போல, இரண்டு திருவடிகளானாலும், ஒன்றேடொன்று இணைபிரியாதிருந்து, ஒண்டொடியாள் திருமகளுந்தானுமாகியொருநினைவால், என்கிறபடியே, கண்டோருக்குத் தாங்கள் செய்யும் ரக்ஷணக்கிரமத்தால், ஒன்றாகவே தோற்றிக்கொண்டிருக்குமவர்கள் போலுள்ள திருவடிகள் என்றபடி. இப்பெருமையை நன்கு காட்டவே இரண்டு என்பதற்கு வாசகமான சப்தமும், யுகளம் என்று ஏகவசனமாகத் தோற்றுகிறது.

ப்ரணமாமி மூர்த்நா, தலையால் நன்றாக வணங்குகிறேனென்றது, மனத்தாலும், வாயாலும் என்கிறபடி யன்றிக்கே, தலையுஞ் சேர்த்துக்கொண்டு, மனோவாக்காயங்களாகிற மூன்று கரணங்களாலும் நன்றாய் ஸேவிக்கிறேனென்றபடி. பணிவாயன் கவராத மடநெஞ்சால் குறைவிலமே, என்றும், யோகீசன்வாசங் கவராத உடம்பினால் குறைவிலமே, என்றும், இவ்வாழ்வாரும், தொண்டராய் நின்று நினையாதார் நெஞ்சென்றும் நெஞ்சல்ல கண்டாமே என்றும், உள்ளாதாருள்ளத்தை உள்ளமாக் கொள்ளோமே என்றும், வணங்கி அவன் பெருமை பேசாதார் பேச்சென்றும் பேச்சல்ல கேட்டாமே என்றும், கலியனும், தலை வணக்கிக் கைகூப்பி யேத்தவல்லார் திரிதலால் தவமுடைத்துத் தரணிதானே, என்று குலசேகரப் பெருமாளும், பீதகவாடைப் பிரானார் பிரம குருவினிடம் அருளிச் செய்திருக்கும் படிகளை, தெய்வத்தைப்போல் ஆசார்யர்களையும் வணங்கி வழிபடவேண்டும் கட்டளையைக் கருத்திற்

கொண்டு, ஸேவிப்பதற்குச் சொல்லியிருக்கும் க்ரமங்களோடு ஸேவித்த படியைக் காட்டுகிறது.

இங்ஙனம், ஆழ்வாரை வணங்க வேண்டுமென்பதை, ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகனும், ஸ்தோத்ர பாஷ்யத்தில் இந்த ச்லோக வ்யாக்யான ப்ரகரணத்தில், ஸஹஸ்ரஶீர்ஷ: ப்ரணாமஸஹஸ்ராஜ, என்று ஆரம்பித்து, வணங்கும்படிகள் பலபலவாகவுள்ளதை, ப்ரமாணங்களோடு, விரிவாய் அருளிச் செய்து, ஸமீசீநஜ்ஞாந ப்ரதாநேஷு விஹிதப்ரக்ஷ்யாதீ: ப்ரணாமா: ப்ரணாமா: உபபத்யந்தே, எம்பெருமானிடத்தில் போல, நல்ல அறிவுபுகட்டினவர்களிடத்தும், பக்தியின் மிகுதியினால் இப்படிப்பட்ட உயர்ந்த நமஸ்காரங்கள் செய்வது தகுதியுள்ளதாகவேயாகும், என்று, அருளிச்செய்திருப்பது கண்டு, தெளிய ப்ராப்தம். மேலும், தேவநிஷேதேஷ்வபி நமஸ்யா யாதந்தநம் | ஸமர்த்தந் தந்முகுந்தீய ப்ரவ்ருத்தி: || தேவஸ்தேஹேஷு வாதேஷு ஹேதேஷு விநியுக்த:, | ஜந்மாதிநாம யத்ருஷ்டா தேவோ ஸிஹ்மஸம்ஸ்ருதி: || தமிழ் வேதத்தைக்கண்ட இவ்வாழ்வாருடைய மிக ஆச்சர்யமானதும், உள்ளபடியுள்ளதுமான, பெருமைகளை, நல்ல ஆசார்யர்களிடத்தில் நன்றாகக் கேட்கவேண்டும் வழியோடு கேட்டிருக்குமவர்களுக்கு இங்கு இவ்விஷயத்தில் கடுமாற்றமுண்டாயிருக்குமோ என்று ஸந்தேஹிக்க வேண்டியதில்லையென்றும், தெய்வரஹஸ்யங்களிலும், அது போன்ற ஆசார்யர்கள் முதலியவர்கள் ஸம்பந்தமான ரஹஸ்யங்களிலும், காரணங்களை, கண்டும், கேட்டும், விசாரித்தும், பரீக்ஷிக்க முயல்வது, உபயோகமற்ற செயல். ஆகவே, பரமைகாந்திகளான ஸ்ரீ வைஷ்ணவர்களால், எடுத்துக் காட்டப்பட்ட ப்ரமாணங்களை யநுஸரித்து, ‘அத்திப்பரியவலையும்’ என்கிற ஸூக்திகளும் கண்டு களிக்கத் தக்கது. ஆக, இவ்வளவால் சொல்லிற்றாயிற்று என், என்னில், ஆழ்வாருடைய திருவடிஸம்பந்தம்பெறுக, தலைகளெல்லாம் உத்தமாங்கமென்று பேர் பெறத்தகாதவைகளானபடியினாலே, தன் தலையான உத்தமாங்கத்துக்கு, உத்தமாங்கத்வத்தை நிலைப்பித்துக்

கொள்ள அனைவரும் முயலவேண்டுமென்று, தன் நடத்தையால் அறிவிப்பித்துக்கொண்டு ஆழ்வார்திருவடிகளின் கீழே, ஆளவந்தார் நன்றாய்த் தலை சாய்த்து நிற்கிறாரென்பதை, நிரூபணம் செய்தபடி.

இப்படி, சேலேய் கண்ணியரும் பெருஞ் செல்வமும் நன்மக்களும் மேலாத்தாய் தந்தையுமவரே யினியாவாரே, என்று, எம்பெருமானிடம் அற்றுத் தீர்ந்த ஆழ்வாரிடம், ஆளவந்தார், தனக்கும் தன் ஸம்பந்தம் பெற்ற வனைவருக்கும், எல்லாம், ஆழ்வார் திருவடிகளே என்று, வெளியிட்டு, ச்சரணமடைந்தபடி சொல்லப்பட்டது. இதில், நம்மாழ்வாரைத் தனியே ஒருபடி சரணமடையும் வகைதெளிந்தாலும், இவ்வாழ்வாருக்கு திவ்யாவயவங்களாய், விளங்கும் மற்றுமாழ்வார்களோடெல்லாம் சேர்த்து ஒரு கோர்வையாய் மறுபடியும், நம்மாழ்வாரைச் சரணமடைகிறபடியைப் படிவிக்கிறது. ஹ்ருதம் ஸரஃ ஐத்ராதி தனியன்.

ஹ்ருதம் ஸரஸ்ஸு உஹாஹாஹ்வயஹட்டநாய
ஸ்ரீ ஹக்திஸார குலஶேவர யோகிவாஹாந் ।
ஹக்தாங்க்ரிரேணு பரகாலயதீந்த்ரமிஶ்ராந்
ஸ்ரீமத்பராங்குஶ முநிம் ப்ரணதோஸ்மி நித்யம் ॥

ஹ்ருதம் — பூதத்தாழ்வாரென்ன,
ஸரஃ — பொய்கையாழ்வாரென்ன
உஹாஹ்வய — பேயாழ்வாரென்ன
ஹட்டநாய — பெரியாழ்வாரென்ன
ஸ்ரீஹக்திஸார — திருமழிசை ஆழ்வாரென்ன
குலஶேவர — குலசேகர ஆழ்வாரென்ன
யோகிவாஹாந் — { திருப்பாணாழ்வாரென்ன / இவர்களையும்
ஹக்தாங்க்ரிரேணு — தொண்டரடிப்பொடி ஆழ்வாரென்ன
பரகால — திருமங்கைஆழ்வாரென்ன
யதீந்த்ரமிஶ்ராந் — { பூஜ்யரான ஸ்ரீபாஷ்யகாரரென்ன / இவர்களையும்
ஸ்ரீமத்பராங்குஶமுநிம் — ஸ்ரீமானான நம்மாழ்வாரையும்
நித்யம் — தினந்தோறும்
ப்ரணதஃ — நன்றாய் வணங்குகிறவனாக
அஸ்மி — ஆகிறேன்

இந்த ச்லோகத்தில், மஹதாஹ்வய பட்டநாத ஸ்ரீபக்திஸார குலசேகர யோகிவாஹாந் என்றும் பக்தாங்க்ரிரேணு பரகாலயதீந்த்ரமிஶ்ராந் என்றும் சேர்த்தெழுதி கோர்வையாய் அர்த்தமெழுதுவது யுக்தமானாலும், பார்ப்பவர்களுக்கு முடிந்த வரையில் நேருக்கு நேர் பொருள்பட இங்ஙனம் எழுதப்பட்டது.

பூதம், என்றது பூதத்தாழ்வாரைச் சொல்லுகிறது. இவர்தான், திருக்கடன்மல்லையில் அவதரித்து, கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல் மலியப்புகுந்திசை பாடியாடியுழிதரக் கண்டோம், என்கிற. நம்மாழ்வார் ஸூக்திக்கு லக்ஷ்யமானவராய், பூ ஸத்தாயாம், என்கிற தாதுவின்படி, ஸத்தைபெற்று விளங்குமவராய், அதாவது, அஸ்தி ப்ரஹ்மேதி சேத்வேத ஸந்தமேநம் ததோ விது:, ப்ரஹ்மத்தை உண்டென்றறிந்தான் யாவனொருவன், அவனை உலகத்தார், நிலை பெற்றுள்ளவனாக அறிகிறார்கள் என்றாப்போலே, விளங்கி நின்றாரொருவரிறே. இவர் எம்பெருமானைக் காண, வெளியே உள்ள பதார்த்தங்களின் ஒத்தாசையைத் தேடாமல், அவன் முன்னமேயே தன்னைப் பணியக்கொடுத்த காரணங்களைக்கொண்டே, அன்பினாலார்வத்தால், நினையாதார் நெஞ்சென்னும் நெஞ்சல்ல கண்டாமே, என்கிற பின்புள்ளார் அருளிச் செயலுக்கும் நோக்காகாமே, அன்பே தகளியாக்கி விளங்கி நின்றான், என்றும், ஆர்வத்தை நெய்யாக்கி அளித்தபிரான், என்றும், வாழ்த்தப் படுவதற்கேற்ப' தன்னுடைய பக்தியின் கனத்தையே அகலாகக் கொண்டும், பேரார் காதல் கடல்புரைய விளைவித்த என்கிறபடியுள்ள, தனது அபிநிவேசாதிசயத்தையே நெய்யாக நிரூபணம் செய்து, இன்புருகு சிந்தைதனைத் திரியாக இட்டும், இஞ்ஞானச் சுடர் விளக்கை விளங்க வைத்தானன்றே! கண்ணன் கீதையில், என்னிடத்தில் மனதைச் செலுத்தி, தங்கள் ப்ராணனையும் என்னையடையவிட்டு, ஒருவருக்கொருவர் எப்பொழுதும் அறிவு தோன்ற, என்னுடைய குணம் முதலியதைச் சொல்லிக்கொண்டு மிகுந்த ஸந்தோஷத்தையும் அடைந்து, அநுபவம் செய்கிறவர்கள், எவர்களோ, அவர்களுக்கு, என்னை யடையக்காரணமான, புத்தியோகத்தையும் கொடுத்து, அவர்களிடம் கருணையினாலே, அவர்களின் ஆத்மபாவ

த்திலே இருந்துகொண்டு, நன்றாய் ப்ரகாசிக்கிற ஞானவிளக்கினாலே அஜ்ஞானத்தால் ஏற்பட்டுள்ள இருளைப் போக்கடிக்கிறேன் என்றருளிச் செய்தாப்போல், இவர் திவ்யஸூக்தி யருளிச்செய்யும் அழகிருப்பது. ஆகிலும், சில ஏற்றம் இவருக்கு உண்டு. கண்ணன் தன்னை, நினைப்பவர்களுக்கு, சில உபகாரம் செய்தார். உபகாரம் செய்யுங்கிரமத்தைச் சொன்னதும், ஸம்ஸ்கிருதம் பற்றி. இவர், தன்னை யார் என்றும், தன்னையுடையவன் ஒருவனிருக்கிறானென்றும், நினைவேயில்லாதவர்களுக்கு ஐயோ, என்றிரங்கி, ஸ்வஸ்வரூப, பரஸ்வரூபங்கள் தெளியும்படி, விளக்கேற்றி உபகரித்தார். உபகரித்தபடியும் பாலேய் தமிழைக் கைகொண்டு ஞானத்தமிழ் புரிந்து ஞானவிளக்கேற்றினார், என்றால், பாஷையிலேயே, ஓரினிமை சுரக்கிறபடிகாணீர். இந்தப் பெருமையை நினைத்தே, இந்த ச்லோகத்தில், இவ்வாழ்வார், முதலில் அருளிச் செய்யப்படுகிறார் போலும்.

ஆகவேதான், இவ்வாழ்வார் முதலான மற்ற ஆழ்வார்களை, நம்மாழ்வாருக்கு திவ்யாவயவங்களாக, உள்ளமையை, உரைத்த ரஸிகர்கள் இந்த, பூதத்தாழ்வாரை, நம்மாழ்வாரின், உத்தமாங்கமாக (தலையாக) நிரூபணம் செய்தார்கள். இப்பெருமையை, நந்நாப் புற்குல விளக்கும், கடன்மல்லைக் காவலனே, பூதவேந்தே, என்று, விளக்கிக் காட்டியிருக்கிற விநோதம், விவேகிகட்கு விளங்காமற் போகாது.

மேலும், இவ்வாழ்வார், பொய்கையாழ்வாருக்கும், பேயாழ்வாருக்கும், நடுவே, நடுநாயகமாய்த் தோற்றினார். மற்றையோரையும் இவரையும் சேர்த்துப் புகழுங்கால், இன் கவிபாடும் பரமகவிகள், என்றும், செந்தமிழ் பாடுவார் தாம், என்றும், பாட்டுக்குரிய பழையவர்மூவர், என்றும், ஒரு சேர்த்தியாய்ப்புகழ்ந்தாலும், முதலாவார் மூவரே அம்மூவருள்ளும் முதலாவான் மூரி நீர்வண்ணன், என்று எம்பெருமானிடம், சொல்லுகிறபடியே, இவரிடம் அநுபவத்தில் ஒரு வாசியும் அறியலாகிறது. இவ்வநுபவத்தை, குடந்தையில் கொள்வோம். குடந்தையில் பொய்கையாழ்வார் மங்களாசாஸனப் பாசுரம் நங்கர்ம சக்ஷுஸ்ஸிற்குப் புலப்படவில்லை. பூதத்தாரும் பேயாரும், பாசுரமிட்டார்கள். பூதத்தார், அருளிய, இரண்டாந்

திருவந்தாதி, எழுபதாவது பாசுரத்தில், தமருள்ளும்........மதிட்குட
ந்தையென்பரே, ஏவல்ல வெந்தைக்கிடம் என்றார். பிறகு, தொண்
ணூற்றேழாவது பாசுரம், எங்கள் பெருமான், என்று ஆரம்பிக்கி
றார். இங்கு சிறிது ஆராய்தல் வேண்டும். எங்கள் பெருமான்
என்கிறப் பொதுப்படையான சொற்போக்கில், இவ்வர்த்தம், புலப்
படக் கூடியதாக விருக்கிறது. இங்கு, மூவரில் முதல்வனாய வொரு
வனான, குடந்தைமேய குருமணித்திரளின், கேழ்வையொன்றும்
விழவேணும். ஆழ்வீர், தமருள்ளும்........குடந்தையென்று ஏன் பே
சுகிறீர், உம்மோடொரு கோர்வையாய், உமக்கும் முன் வந்தோ
மென்றும் ஒருவர்க்கே, என் நினைவில்லையே! என்ன, இவர், ஸ்வா
மிந், தேவரீர் திருவுள்ளமங்ஙனே கொள்ளலாகாது. எங்கள் மூவ
ரில், வேற்றுமையில்லை காணீர், என்று ஒருபடி ஸமாதானம் செய்து
நடுவேயுள்ளவிவர் முதல்வரான பொய்கையாழ்வாரையும் தன்னனு
பவத்தில் சேர்த்துக்கொண்டிருப்பது புலப்பட, எங்கள் எல்லோரு
க்கும், பெருமான் காண், நீ, என்று கொண்டு, எங்கள் பெருமான்
என்றாரெனத் தோன்றுகிறது. இப்படியெல்லாம், எல்லோரையும்
ஒரு கோர்வையாய் சேர்த்தணைத்துக்கொண்டு அனுபவிக்க, நடுநா
யகம் போல் விளங்குகையாலே, இந்த ச்லோகத்தில் ஆழ்வார்களை
அனுபவிக்கும், பிள்ளானும், பூதம், என்று முந்துற உரைத்தார். பின்
னும், குடந்தையானை ஆழ்வார்கள் அனுபவித்தபடிகளை ஏத்த முன்
வந்த குடந்தையன் குடியடியார்களான முன்னோர்களும் புவியுகந்த
பூதயோகிஎன்றே நின்றார்கள்.

ஸர:, என்றது, பொய்கையாழ்வாரைச் சொல்லுகிறது.
இவர் தோன்றுவதற்குக் கருத்துக்கொண்ட இடமே, மிகவும் குளிர்
ந்ததொரு தாமரைத் தடாகம். பின்னும், எல்லோருக்கும், எம்பெரு
மானிடம், புருஷகாரம் (சிபார்சு) செய்து, அவன், ஏதாகிலும்.
குற்றங்கண்டுரைத்தால், உலகில் குற்றம் செய்யாதிருக்கும், ஒரு
வனைச் சொல்லும், செவியாரக் கேட்போம், என்று, தன்னுடைய
போக மயக்குக்களால் அவனை மயக்கி, அதன்பிறகு, திருமக
ளான தானே சில ஆச்ரிதரிடம் குற்றமுரைப்பது போல் பாவித்துப்
பேசினாலும், என்னடியாரது செய்யார், என்று அவன் வாய்வழியே

தன் ஸ்பார்சு பலித்ததற்கனுகுணமான பேச்சைப் புறப்படும்படி செய்து, ஆச்ரிதரை எம்பெருமான் ரக்ஷிக்கும்படி செய்யுமவளான, பிராட்டியின் அவதார ஸ்தானம். உலகில் பிறக்கும் குழந்தைகள், அனேகமாய், தன் தாயின் பிறந்தகத்தில், ஜனிப்பது வழக்கம். இவருக்கு அப்படியுள்ள தாய் இல்லையானபடியால், நித்யைவைஷா ஜகந்மாதா, என்கிறபடியே, ஜகன்மாதாவின்பிறந்தகமான,பொற்றாமரைப்பொய்கையிற் றாமரைப்புஷ்பத்திலேயே தோன்றலுற்றார். ஞாயமான தசையிலேயே லக்ஷ்மீ கடாக்ஷம் பெற்று, இன்னமுதத் திருமகளை முன்னிட்டு எம்பெருமான், திருவடியைப் பற்றினார். திருவில்லாத் தேவரைத் தேறுத லிவரானபடியினாலே, அவதாரக்ஷணத்திலேயே, திருவின் வாஸஸ்தானத்தையே தானும் பாங்காகக் கொண்டார். இவர் ப்ரபந்தத்தில், எம்பெருமானுக்கு, வாஸஸ்தானம், எது என்று பேசுங்கால், உறையுங் கோயில், நீர், என்றார். இப்படி, ஓரிடத்திற்கு வஸிப்பதற்கு சென்றபடியினாலேயே, அங்குள்ள தண்ணளி, அவ்வெம்பெருமானிடம், குடிகொண்டதென்றால், ஒப்பற்ற தாமரைத் தடாகத்திலேயே அவதாரம் செய்து, அதற்கேற்ப, பொய்கையாழ்வாரெனத் திருநாமமும் பூண்டால், இவர் மனதில்உள்ள தண்ணளி, வரம்பிலடங்காது மேம்பட்டிருக்குமென்று, சொல்லவும் வேண்டுமோ? இம்மஹானுபாவருக்கும் அவதாரயோக்யமாய் இந்த ப்ரதேசம், காண்கிறது பற்றி இந்த திவ்யதேசத்தில் தேவர்களும் பாரில்அடி பாவிநின்று பரவிப் பணிந்து பல்லூழியூழி எத்திநிற்பார்கள்.

இப்பெருமையை, நம்மாழ்வார், கானிலந்தோய்ந்து விண்ணோர்தொழுங்கண்ணன் வெஃகாவுது, என்றருளினார். இவரவதரித்த நக்ஷத்திரமும், விஷ்ணுவை தேவதையாகக் கொண்டிருக்கிற ஒரேற்றமும் போற்றத்தக்கதேயாம். இவ்வாழ்வார், இங்கு அவதரித்ததை உட்கொண்டும், இவரே போல, இதே நக்ஷத்திரத்தில், இப்பொய்கைக்கருகாமையில், எம்பெருமான், ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகனாய்ப், பின்னும் ஒரு பவிஷ்யதாசார்யாவதாரம் செய்யப் போகிற பெருமையை உட்கொண்டும் கண்ணன் வெஃகாவுது, என்றதோடு நில்லாமல், அம்பூந்தேனிளஞ்சோலையப் பாலதப் பாலைக்கும் சேமத்ததே, என்றார். எம்பெருமான் தன் பெருமையைத்

தானுமறியான், என்பதை, தனக்கும் தன் தன்மை யறிவ ரியானென்றும்; தாம் தம் பெருமை யறியார், என்றும், சொல்லி வைத்து, தானே தன்னைப் பாடிக்கொண்டான், என்பதை, யானுய்த் தன்னைத்தான் பாடி, என்று சொல்லி வைக்கையாலே, பொய்கை யாழ்வாராய், ஐப்பசியில், அவதாரம் செய்த தன்னை, தானே தான் பாடத்தகும், என்று கொண்டு, வெக்ஷடோவதாரோயம், என்கிறபடி, ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகனாய், தோற்றச் செய்தேயும் ஐப்பசி, ஓணத்துக்கு முற்பட்டிருந்து பாடவேணும், என்று கொண்டு, ஒரு திருவோணம் முன் கொண்டானென்று தோற்றப் புரட்டாசி ஓணத்து, இப்பூவுலகுதித்து, ஐப்பசியில் ஓணத்தவதரித்த ஆழ்வாரை ஆதரவோடேத்தி நின்றானில்லையோ! இவ்வாழ்வார் அவதாரம் பொய்கையில், தேசிகன் அவதாரம், சோலையில், ஆக இத்தலங்களைப் பேசும்போது ஜலாராமண் யகம், வனாராமண் யகம், என்று கொண்டாடுகிறபடி, எம்பெருமான்நித்யவாஸத்திற்குப்பாங்கான தேசமென்பதும் புலப்படுகிறது. இதில் ஆழ்வார், அப்பிலருபொருள், என்கிற எம்பெருமான் படியைக் காட்டிக்கொண்டு அவதரித்தார். தேசிகரோ வேதமுடி தேசிகனே, என்கிறபடி, உபநிஷத் பாகமான அரண்யத்தில் தோற்றியிருப்பன், என்கிற, எம்பெருமான் படியைக்காட்டிக்கொண்டு அவதரித்தார். ஆகவே, ஆரண்யகத்தில் தோற்றினவொருவர், அப்பிலருபொருளை யானறிந்தவாறு, ஆர்அறிவார், என்கிறபடியில், பொய்கை நீரில் தோற்றின ஆழ்வாரை அறிந்து பேசினார். அதாவது, (அருள் மிகுத்தபொருவடிவாய்க் கச்சிதன்னிலைப்பசி மாதத் திருவோணத்து நாளில், வந்துதித்த புனிதா, என்று) மேலும் இவ்வாழ்வார், திருநாமத்தைச் சொல்லும், பதத்தை எப்படிப் பேசினாலும் அழகு பெற்றிருக்குமென்பது நோக்கிக் காணீர். ஸர:, என்பதை ஸரஸ் என்று பேசி விட்டாலும் ஸரோவேஸ:, என்றும், ஸரோஜஸம்பவ, என்றும், ஸ்ருதி ஸ்ம்ருதிகள் பேசுகிறபடியிலுள்ள பெருமையையும் பார்க்கக் காணலாம், இப்படியெல்லாம், ஸர: என்பதில் கொள்ளல் தகும்.

ஸரோஜாஸ்ய, பேயாழ்வாரென்கிறது. இவரைப் போற்றும்

சப்தம், மஹாதாஹ்வய, என்பது. இதன் அர்த்தத்தை உள்ளபடி கொண்டால், பெரியவர், என்கிற பெயரையுடையவர், என்று கொள்ளல் வேண்டும். உலகில், அருவருப்பான காமத்தையும், ஆசையாகும் பேயையும், அறிஞர்கள் அகற்றியுள்ளார்களேயொழிய, கண்ணனுக்கே ஆமது காமம், என்கிறபடியில், எம்பெருமானிடம், ஆசையை வளர்க்கக் கூடிய சீரிய நற்காமத்தையும், பித்தனொழிந்தேன் என்றும், பேயனொழிந்தேனெம்பிரானுக்கே, என்றும் சொல்லுகிறபடி, பேசப்படுகிற, பித்தையும் அவாவுடன் ஆதரித்தே போருவர்களானதால், அப்படிப்பட்ட பெருமையை இவர் கைக்கொண்டபடியினாலே, பேயாழ்வாரெனப்பட்டார். இம் முதலாழ்வார்களிடம் பக்தியின் படிகளைப் பகருங்கால், இவரிடம் பரம பக்தியுள்ளதாகப் பகரப்பட்டது. அதனிற்பெரிய வென்னவா என்கிறபடி, அவனைக் காணவிட்டால், தன் ஸத்தையழியும் தன்மைபெற்றது கொண்டு, இவரநுபவத்திற்குப் பாங்காக, இருவரும், இருவர் விளக்கேற்ற, இருவிளக்கினிடையே தோன்றிய அப் பற்றவொரு விளக்கை விளக்கினைச் சென்று வெள்ளத்தின் காண்டுமே, என்கிறபடியிற் கண்டவான்றே! இத்தைக் கணிசித்து, மன்னிய பேரிருள்மாண்ட பின் கோவலுள் மாமலராள் தன்னொடு மாயனைக்கண்டமை காட்டுந் தமிழ்த் தலைவன், என்று, அருளாளரும், துன்னிய பேரிருள் நீங்கச் சோதி தோன்ற சோராமல் நெடுமாலைக் காணப் புக்கு திருக்கண்டேனெனவுரைத்த தேவ என்று, ஸ்ரீ தேசிகனும் அருளிச் செய்தார்களிறே. இவர், அருளிய, திருவந்தாதியில், எம்பெருமானை யடையும் தன்மையளான, பெரிய பிராட்டியார், புருஷகாரம் செய்யப்புகுந்து நிற்பதை, திருக்கண்டேன், என்று, ஆரம்பத்திலும், தேனாரும் பூமேல்திரு, என்று முடிவிலும், தான் கண்டு அநுபவித்தார், முடிவில், அநுபவத்தில் பொருந்திப் புவிதனில் பொய்யாத்தை பூண்கின்ற பூரியர்களையும், தன்னுடன், அநுபவத்தில் கூட்டிக் கொண்டு தேனமரும் பூமேல்திரு, நமக்குச் சார்வு, என்று, அருளிச் செய்யும் அருளின் வண்ணத்தை, என்சொல்லிப் புகழ்வோம். இங்ஙனம், அருளிச் செய்யும் அழகுக்கனுகுணமாக ஒருவி மொழி [illegible]

ரதே யஸ்மாத் தஸ்மாதாசார்ய உச்யதே, ஆசார்யன், என்று சொல்லப்படத் தகுதியுள்ள வொருவர் என்றால், அவர், உலகின் நன்னடைக்குக்குரிய நூலை நுவன்றும், அந்நூலின் கண்ணே நுவலப்பட்ட நுண்ணிய நெறியை நிலை நாட்டியும், இவ்வண்ணம், பரோப தேசத்தோடு நில்லாதே, தானும் அந்நெறியைக் கைக்கொண்டு நன்னடைக்கையில் ஒழுகுதலும் வேண்டும், என்கிறபடியே, இவர், ஒருகால விசேஷத்தில், நித்ய ஸூரிகளின் திரளிலிருந்து திருமழிசை யென்கிற, க்ஷேத்திரத்தில் வந்தவதரித்து, ஆசார்ய கடாக்ஷத்தால், அனைவர்க்கும் தஞ்சமாயுள்ளதென்கிற சிறிய பொருளை இப்பூவுலகில் பரவச் செய்யும் பொருட்டு, மனிதபாவனை பண்ணி, அதிலும் புறச்சமயங்கள் தோறும் திரிந்துகொண்டிருந்த ஒருவரை, தானும், அந்த பாவனைக்கனுகுணமான படிகளில் நின்று கருணையுள்ள ஆசார்ய சிகாமணிகள், சேதனரை இவ்வாறு திருத்தியருள்வர்கள், என்பது புலப்பட, பலபடியும் எம்பெருமானுக் கொழுமையும் பெற்றதே, என்கிறபடி திருத்திப் பணிகொண்டு, திருத்தின மஹாநுபாவனை, இந்நிலவுலகிலுள்ளோர் காண்கைக்கும், திருமழிசையாழ்வாரெனவும், பக்திஸாரர், எனவும், பலபடி செய்த தோற்றமும் இவர்க்குண்டானபடியினாலே, இவரை மஹாத்மாவென மதிப்புடன் பேசிற்று.

ஹ்ருதய, என்றது, பெரியாழ்வாரைச் சொல்லுகிறது. இவர் தாம், வேயர்புகழ் வில்லிபுத்தூர், என்கிற, திவ்யதேசத்தில் அவதரித்து, விஷ்ணுசித்தரெனத் திருநாமம் பூண்டு, திருமாலுக்குத் திருமாலை யளிப்பதிலிருந்து கைங்கர்யத்தில் ஆர்ந்து போருகிற நாளிலே ஒருகால விசேஷத்தில், வல்லபதேவ பாண்டியன், பரதத்வ நிர்த்தாரணம் கொள்ள, அவனுடையவாறும், வேதம் வல்லார்களைத் திரளாகக் கூட்டிய அவையின் நடுவே, அவ்வரசன் வேண்டுகோளின்படி சென்று, வேண்டிய வேதங்களோதி, பரதத்வம் இன்னதுதான், என, நிர்த்தாரணம் செய்து விளங்கி கிழியறுத்தவளவில், அவ்வரசன் முதலான அனைவராலும், பட்டர்பிரான் வந்தானெனக் கொண்டாடப் பட்டவராயிருப்பர். ஆதலால் மறை நான்கு முன்னோதிய பட்டனேயன்றே ! பரதத்வமெனப் பகர்ந்து, உபகரித்தபடி. எனக்கே தன்னைத் தந்த கற்பகம், என்னப்படு மவனையே

யன்றோ, எல்லார்க்கும் எளிதாக வந்து அநுபவிக்கலாம்படி, வேதாந்த விழுப்பொருளின் மேலிருந்த விளக்கைவிட்டு சித்தன் விரித்தனவே, என்கிறபடியில், எடுத்துக் கொடுத்து உபகரிக்க வேண்டியதாயிற்று. பட்டனை பட்டர்களுக்குக் கொடுத்து தான் பட்டநாதன் ஆனான். அதாவது, ஸ்ரிய: பதியான எம்பெருமான்தான், பரதேவதை, அப்பரதேவதைதான் யார்க்கும் உபாஸனம் செய்யத்தகுந்தது. என்கிற பொருளை உபன்யஸித்து, புத்திமான்களான ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு, உபாஸனம் செய்யத்தக்க பொருளைக் காட்டிக்கொடுத்து உபகாரம் செய்தான் என்றபடி. இவ்வாறு இவர்கள் எல்லோருக்கும் உபகாரம் செய்ததற்கு மேலே, உபாஸ்யவஸ்துவாய் விளங்குமவனுக்கும், ஓர் உபகாரம் பண்ணினான். அதாவது, ஒரு மகள் தன்னையுடையேனுலகம் நிறைந்த புகழால், என்று, இவர்தாம், தாய்ப் பேச்சின்படியிற், அருளிச்செய்கிறாப் போலே, இவர் தமக்கு ஸர்வஸ்வமுமாய் விளங்குகிற, ஸ்ரீ ஆண்டாளை, மறை நான்கு முன்னோதிய பட்டனுக்கே பலருமறியப், பணித்து, பணி செய்யப் பரிந்து கொடுத்தானிறே. இப்படி, பட்டர்களுக்கும் பரதேவதையைக் காட்டி உபகரித்தும், அப்பரதேவதையான, மறை நான்கு முன்னோதிய பட்டனுக்கு போகத்தில் வழுவாத ஸ்ரீதேவதையைக் கொடுத்தும் உபகரித்தபடியினாலே, இவரைப் பட்டநாதனைப் பலரும் பணித்தேத்தி நிற்பது. இவ்வண்ணம், பட்டநாதன் என்கிற, திருநாமம், எம்பெருமானுக்கும், அவன் மெய்யடியார்களுக்கும், உபகாரம் செய்து, அவர்கள் தங்களன்பால் நிலைத்த பெருமையுடைத்தானபடியினாலே அப்பெருமை பொலிந்து தோன்றப் பெரிய ஆதரத்துடன் ஒருநாள் சொன்னதை ஒன்பதின் கால் சொல்லும் கிரமத்திற்கு மேல், பட்டநாதன் என்கிற திருநாமத்தை, பட்டன் என்றும், பட்டர்பிரான், என்றும், தன் ப்ரபந்தத்தில், பத்தொன்பதின் கால், பன்னியுரைத்திருக்கும் பெருமை பாரா பாராதே பாக்காயிருக்கப் போமோ? பெரியோர்களால், பெரிபட்ட பெயரினைப், பெரிதும் பாராட்டிப் பேசுவதும், போய் போற்றத்தக்கதேயாமென்பதில் தட்டில்லையிறே? இவ்வண்ணமே, ஆழ்வார்களுக்குப் பின், ஆசார்யர்கள் வரிசையில் தோன்றிய ஸ்ரீ தேசிகனிடத்தும், காணலாகிறதில்லையோ! ஸ்ரீ தேசிகனும், அதிகரண

ஸாராவளியின் ஆரம்பத்தில், [illegible] (அப்படிப்பட்ட பரதேவதையால் கொடுக்கப்பட்ட வேதாந்தாசாரியர், என்கிற பிருதத்தை) என்றும், ஸங்கல்ப ஸூர்யோதயத்தில், [illegible] (திருவரங்கப்பெருமாளின் திருவாணையால் அடையப்பட்ட வேதாந்தாசார்ய ஸ்தானத்தை உடையவர்) என்றும், ஆதரம்தோற்ற அருளிச்செய்தாரன்றோ? இவ்வாறுள்ள பெருமை வெளிப்பட இவர், பட்டநாதனெனப்பட்டார்.

இங்கு, பெரியாழ்வாரைப் பேசினபடியினாலேயே, விட்டு சித்தர் தங்கள் தேவரைவல்ல பரிசுவருவிப்பரேல், என்று, எங்கும், பாகவத பாரதந்திரியம் தோற்றவருளிச் செய்யும் ஆண்டாளையும், அநுஸந்தித்தபடியாம். பார்க்கில், பட்டநாத ஸ்ரீ, என்றுவது, பட்டநாத, என்பதற்கு மேல், ஸ்ரீ, என்று தனித்தாவது கொண்டாலும், [illegible] (திருவருளினாலே, வேறாகிய, வேறிமாறாத பூமேலிருப்பாள்போன்று விளங்குகிற கோதையை) என்கிறபடியே, ஆண்டாளைச் சொல்லிற்றாகவுமாம்.

இவ்விடத்துள்ள, ஸ்ரீ, என்கிற பதம், தனியே நின்றாலும், பட்டநாத ஸ்ரீ, என்று சேர்ந்து நின்றாலும், மேலுள்ள பக்திஸார என்கிற பதத்துடனும் முன் நேர்ந்து நின்று அப்பதத்திற்கு நிகரில்லா மேன்மை பெறுத்துவிக்குமதாயிருக்கும்.

ஸ்ரீ [illegible], என்றது திருமழிசை ஆழ்வாரைச் சொல்லுகிறது. [illegible], எம்பெருமான் திருவடிகளில் பக்தியையும், அவன் திருவடிகளை அணுகி அநுபவிக்கத்தக்க அறிவையும் தவிர, அவ்வெம்பெருமானிடம் மற்றொன்றை வேண்டி நிற்பது தகாது, என்கிறபடியில், இவர்தான், பெறற்கரியமாயனேயெனக்கு நல்கவேண்டுமே, (பெறுதற்கரிதான உன்திருவடிகள் விஷயமான, பக்தியாகிறமரக்கலத்தை உன் கேவலக்ருபையொழிய வேறொன்றால் பெறுவார்க்கரிய ஆச்சர்யபூதனே, பெறவேண்டுமவையெல்லாவற்றுக்கும் உன்க்ருபையையல்லதறியாத அடியேனுக்கு அந்த பக்தியை தேவரீரே தந்

தருளவேண்டும்,) என்று, எம்பெருமானிடம் தனக்கு பரமபக்தியை வேண்டி நின்றபடியாலே, பக்திமான்களுக்குள் சிறந்தவரெனக் கொண்டு, பக்திஸாரரெனப்படுவர். இவரிடம், பகவத்பக்தி விஞ்சியிருந்ததென்பதற்கறிகுறியாக, பத்துடையடிவர்க்கெளியவன், (பக்தியுடன், தன்னைக்காண விருப்பமுடையவர்கட்கு காணலாம்படி எளியனும்) என்கிறபடியே, எம்பெருமான், இவருக்கு மிக ஸுலபனாய் ஸேவை ஸாதிக்குமதற்குமேலே, பக்த்யா க்ரீதோ ஜநார்த்தந:, பக்தியாகிற த்ரவ்யத்தால் விலைக்குவாங்கப்பட்டவன் பகவான் என்கிறபடியில், விலைக்குவாங்கப்பட்ட ஒருவஸ்து, தன்னை வாங்கினவன் கையில் சேர்ந்து, அவன் ஆஜ்ஞை, தன்னிஷ்டப்படி செய்ய ஒருப்படுமாப்போலே, ஸ்ரிய: பதியான தானும் தன்னை இவ்வாழ்வாருக்கே இஷ்டவிநியோகார்ஹனாகச் செய்து வைத்தானில்லையோ? இப்படிச்செய்ததுவும், தொண்டை நாடு சான்றோருடைத்து, (தொண்டைமண்டலமானது, கற்றுணர்ந்த பெரியோரையுடையது) என்கிறபடி, பெருமை, உள்ளவிடத்திலும், சோழவளநாடு சோறுடைத்து, (மற்றும் பெருமைகளோடு வெளியிற் சென்றிரக்கவேண்டாதே, பகவதாராதனத்துக்குரியவையாவும் நிரம்பப்பெற்றது சோழநாடு) என்கிறபடி, செல்வப்பெருக்கு, உள்ளவிடத்திலுமன்றோ? அதாவது, கச்சிமாநகரில் வெஃகாவில் துயிலமர்ந்த வேந்தனவெம்பெருமான், உன்றன்பைந்நாகப்பாய் சுருட்டிக்கொள், என்று, இவ்வாழ்வார், அருளிச்செய்ய, திருவனந்தாழ்வானுகிற தன்படுக்கையையும் வாரிச்சுருட்டிக்கொண்டு, பின்பு, இவ்வாழ்வார், எழுந்தருளுகிறபடியை பின்பற்றி எழுந்தருளியும், பின்னர், நீயுமுன்றன்பைந்நாகப்பாய் படுத்துக்கொள், எனவும், சயனித்துக்கொண்டருளியும், அதோடு நில்லாதே, தான், பக்தபராதீனன், என்கிறபடி, பக்தன் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு நடந்ததை நாடு நகரமுநன்கறிய, அதற்குறிய திருநாமத்தையும் கொண்டானில்லையோ? இத்திருநாமம், வடமொழியில், யதோக்தகாரி, என்றும், தென்மொழியில், சொன்னவண்ணம் செய்த பெருமாள் என்றும், இற்றைக்கும் வழங்கிவருதல் காண்க. குடந்தைமாநகரில், ஏரார்கோலந்திகழக்கிடந்தாய், என்கிறபடியே, படுக்கையைவிட்டு ப்போகாதே கிடந்தருளுகிற வெம்பெருமானும், கிடந்தவாறெழுந்தி

ருந்து பேசு, என்று, இவ்வாழ்வார் திருமுகப்பாசுரத்தைக் கேட்டு, "பூர்வபாஷீ ச ராகவ:," என்று சொல்லுகிறபடியே, தான்முதலில் பேசும் தன்மைவாய்ந்தவர், பெருமாள், என்கிற பெயரினை, இவர் நம்மில் முன்பேசிப் போக்கிவிட்டனரே, என, திடுக்கிட்டெழுந்து, ஆழ்வீர், பக்தியால் உருகின நெஞ்சையுடைய நீர், எவ்வண்ணம், பேசினீர்? உம் திருமேனி, என்ன தளர்த்தியுற்றதோ? என், வருமோ, எனவயிறுபிடித்து, உடனே, இவ்வாழ்வாருக்குத் தளிகை நீட்ட வொருப்பட்டான் என, ஒரு ஐதிஹ்யமுமுண்டேயன்றோ? இங்கு குறிக்கொள்ளவேண்டிய விஷயமென், என்னில் தான் கண்ணனாய் கீதையில், அருளிச்செய்த

நாஹம் வேதைர்ந தபஸா ந தாநேந ந சேஜ்யயா,
ஶக்ய ஏவம்விதோ த்ரஷ்டும் த்ருஷ்டவாநஸி மாம் யதா ।
பக்த்யா த்வநந்யயா ஶக்ய அஹமேவம்விதோர்ஜுந, ।
ஜ்ஞாதும் த்ரஷ்டும் ச தத்த்வேந ப்ரவேஷ்டும் ச பரந்தப,

(அர்ஜுனனே, நீ, பக்தியினால் எவ்வாறு என்னைக்கண்டனையோ, அப்படி, நான், வேதங்களினாலும், தவத்தினாலும் தானத்தினாலும் பூஜையினாலும் காணமுடியாதவன்; என்னொருவனிடமேகுடிகொண்டவன்பைவைத்தால்தான், உள்ளபடியே, அகக்கண்ணாலும் புறக்கண்ணாலும் காணவும், என்னிடம் ப்ரவேசிக்கவும் முடியும்) என்கிற படிக்கு, பக்தியின்திரண்டதோருருவமோ, இவர், என்னலாம்படியான, இவ்வாழ்வாரை வ்யாஜமாக வைத்து முதலிக்குக்காட்டினது கொண்டு, உலகில் ஒருவன் எம்பெருமானிடம் மிகவும் பக்தி கொண்டொழுகினால், அவனுக்கு, எம்பெருமான், தன்படிகளடங்கலும் காட்டிக்கொடுத்து, அவனிட்ட வழக்காய், இருப்பன் என்பதுதான்.

நிற்க இவரைப்பேசுங்கால், ஸ்ரீபக்திஸாரர், எனப்பேசியிருக்கிறது. ஆனதால், இவ்வாழ்வாரைப்பெற்ற பாக்யாதிகர், இவரை வைத்துக்கொண்டு வாழக்கொடுத்து வைக்காமே, இவரை அன்றீன்ற குழந்தையாயிருக்குமப்பருவத்தில், திருமழிசையென்கிற திவ்யக்ஷேத்ரத்து, ஓர் பிரப்பம்புதரில் விட்டுப்போக அத்தருணத்தில், அங்கே லோகமாதாவும் லோகநாதனும், எழுந்தருளாநின்ற பிராட்டியின், கருணைக்கிலக்கானபடியை நினைத்து, ஸ்ரீ,

என்பது, சேர இப்பதத்தில் அனுஸந்தானம், ஏற்பட்டிருக்கிறபடி.
அன்றியும், தத்³ தே³வா ஜ்யோதிஷாம் ஜ்யோதி:

என்கிறபடியே, பிரகாசமானவற்றுக்கெல்லாம் மேற்பட்ட பிரகா சமானவஸ்துவாய் எம்பெருமான் விளங்குவன், என்றாப்போல், இவ்வாழ்வாரும், மழிசைவந்த சோதியென மஹிமையுடன் பேசப் படுவர். இவர், ஒளிவீச விளங்கினதை, பெரும்புலியூரில், ஓர் யாகசாலையில், அனைவருங்கண்டு களித்தார்களல்லவா. அங்கு காட்சிதந்ததும், சக்கரங்கொள்கையனே சடங்கர் வாயடங்கிட, உட்கிடந்த வண்ணமே புறம் பொசிந்து காட்டிடே, (திருவாழி யென்றும் சக்கரத்தை கையிற்கொண்டிருக்கிற பெருமானே, யான் இன்ன தன்மையானென்பதை அறியகிலாது, வீண்வாதம் பேசுபவர்கள் வாயடங்கும்படி அடியேனுள்ளே, தேவரீர் எழுந்தருளி யிருக்கிறபடியை வெளியே அனைவருங்காணும்படியும் காட்டி யருள வேண்டுமென,) வேண்டிக்கொண்டபடியே, இணங்கிய, பரஞ்சோதியானவனையும், தன் திருமேனியிற்காணும் வண்ண மன்றோ? மேலும், இம்மழிசை வந்தசோதியோடு சோதிவாய் திறந்து பேசவந்த வொருசோதியான குடந்தை மேயகுருமணித் திரளைப் புகழுந்தொண்டர்களும், மழிசை வந்த சோதியை பேசவந்த சோதியெனப் புகழ்ந்து பணிய நின்றார்களிறே! இப்படி யுள்ள பெருமையை பத்தியுடனாராய்ந்தது நன்றுதோன்ற, இவர் ஸ்ரீ பக்திஸாரரெனப் பகரப்பட்டார்.

குலதீபம், என்றது, குலசேகராழ்வாரைச் சொல்லு கிறது. ஸத்³வம்ஶஸ்து ஸுத: குலதீபக: நல்ல பிள்ளையாகப் பிறந்தா ல் அவன் அக்குலத்திற்கு ப்ரகாசத்தையுண்டு பண்ணுமவனாயிருப்பா ன் என்கிறாப்போலே, இவ்வாழ்வார் அவதரித்த வம்சமாயிற்றுப் படி. இப்படி நல்லபிள்ளையாய் தோற்றுதற்கு மேலே, பூர்வர் களவுகவும், தோன்றினபடியைக் கண்டால்,

ஸூர்யவம்ஶே [illegible] ஸுத: [illegible]
[illegible] ஜாத: [illegible]

(நமது வம்சத்தில் இப்பிள்ளை நல்ல விஷ்ணு பக்தனாக உண்டானான் ஆகவே அவன் நம்மெல்லோரையும் தாண்டுவிக்கப்போகிறான்

என்று, தகப்பன் முறையிலுள்ளோர்களும், பாட்டன் முறையிலு ள்ளோர்களும், ஆனந்தத்தால் தோள் தட்டியும், கூத்தாடியும் போ ருகிறார்கள், என்றல்லவா முன்னோர் பேச்சிருக்கிறபடி. அப்பெரு மை படைத்தவர் இவரென்றபடி.

இங்கு, குலசேகரா, என்கிற பதத்திற்கு முன், இன்னகுலத்தி ற்குத் தான் என்று, ஓர், விசேஷண மிடப்படாமையாலே, ஸ்ரீ வைஷ்ணவர்களாய்த் தோற்றி நிற்கும் அனைவர்க்கும் இவர் கொண் டாடத் தகுந்தபடி விளங்கி நிற்பது காட்டப்படுகிறது. இப்பெரு மை இவர் கார்யங்கொண்டே நன்கு ஆராய்தலை யடையத் தகுந்த தாயிருக்கிறபடி பாரீர். இவர் தாம், அவதரித்தது, கொல்லிமாநக ரில், திருவஞ்சிக் களத்திலேயானாலும், அடிமை செய்ய நினைத்த தும், திருமாலின், திவ்யார்ச்சாவதாரத்துக்கெல்லாம் முதற் கிழ ங்கு, எனத் தோற்றி நிற்கிற, தென்னாடும் வடநாடுந்தொழநின்ற திருவரங்கந் திருப்பதியிலே, அணியரங்கன் திருமுற்றத்தடியார் தங்கள், இன்பமிகு பெருங்குழுவுகண்டு யானுமிசைந்துடனே, என்றுகொலோ இருக்கு நாளே, என்கிறபடியே, விஷ்ணுவான திருமால் திருக்கல்யாண குணங்களுக்குத் தோற்று, அவனுக் கடிமை செய்து, அதனால் அவன் கோயிலில் வாழும் வைட்டணவ னென்னும் வன்மைகொண்டு வாழுகிற திருமாலடியார்களோடே யன்றோ? மேலும், இவர் நஞ்நுடன் கூடி யடிமை செய்யப் பாரித்தி ருக்குமதுவும், எக்காலத்திலும், எவராலும், எப்படிகளாலும், கலக் கவொண்ணாத வண்ணமில்லையோ? இவர், ஸ்ரீ ரங்கயாத்திரையி லேயே குதூஹலமுள்ளவராய் இருந்தார் என்பதும், ஒருவர் கலஹ த்திற்கும் ஆளாகாமல், அவன் நல்லடியார்கட்கே ஆட்பட்டிருந்தா ரென்பதும், கோஷ்யதே யஸ்ய நகரே ரங்கயாத்ரா திநே திநே । தமஹம் சிரஸா வந்தே ராஜாநம் குலசேகரம் ॥ எந்த திவ்ய நகரியில், பிரதி தினம் திருவரங்கமாநகர் பிர யாணமானது, பறைகொண்டு அனைவர்க்கு மறிவிக்கப்படுகிறதோ, அப்படிப்பட்ட ரங்கயாத்திரையில் ஆவலுள்ள குலசேகரர், எனத் திருநாமம் பூண்ட அரசனை, தலை படைத்தது ப்ரயோஜனமாகும்படி, நான், ஸேவிக்கிறேன், என்கிற ச்லோகத்தினாலும், மந்திரிகள் தா ங்களே ஆபரணமொன்றை அகற்றி வைத்து, ஸ்ரீ வைஷ்ணவர்கள்

களவாடியிருப்பார்களெனப் பழி சுமத்த, பரனன்பர் கொள்ளாரெனக் கூறி, அதை மெய்ப்பிக்க பாம்புகள் பரம்பினதோர் குடத்தில் கையிட்டு, அடியாரிடம் தோஷலேசமும் ஏற்படமாட்டாதெனச் சொன்ன வார்த்தையின் பெருமையாலும் அறியலாகும். அரங்க நகரப்பனிடம், உள்ள பேரன்பானது, அவனை, அன்று ஆராதித்த வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்த் தோன்றிய, சக்கிரவர்த்தித் திருமகனிடமும், அவனை, அன்று முதலின்றறுதியாகக் கொண்டாடிப் போருகிற, அன்பர்களிடமும் அவதிகடந்து நிற்குமாயின், இப்படியெல்லாம், ஸ்ரீ வைஷ்ணவர்களைக் கொண்டாடிப் போருகிற இவரை, ஸ்ரீ வைஷ்ணவ குலசேகரரென்பதற்கு அறிகுறியாக. குலசேகரர் எனக் கொள்வது தகுதியுள்ளதே என்றபடி.

யோகிவாஹநு, என்றது, திருப்பாணாழ்வாரைச் சொல்லுகிறது. இவர் தாம் அவதரித்த தேசத்தின் நிலைமை கண்டு, அங்கு, தாம் வாஸம்செய்யா நிற்கச் செய்தே, திருவரங்கம் திருப்பதியைத் தான் மிதிக்க மனங்கொள்ளாமல், தன் அவதாரப் பதியான உறையூரில், திருமுகத் துறைக்கெதிரே, தென் திருக்காவேரியின், தென்கரையிலிருந்துகொண்டே, எம்பெருமானைப் பற்றிப் பண்கள் பாடாநிற்க, அவ்வளவிலே, எம்பெருமானும், இவரை விசேஷ கடாக்ஷம் செய்யத் திருவுள்ளங்கொண்டு, இவருக்கு, அருளப் பாடிட்டனுப்ப, இவரும், ஸஹஃ ஸ்ரீரங்க ஙாரூபா வாரணா ருத்ர ஸெவாராஃ । ஜயஜிஹவநதாரணவதவஜஸூரணவஃ । ஸ்ரீ ரங்கநாதனின் திவ்ய பாதுகையாரு மாழ்வாரைத் தலைகொண்டு வணங்கி, தங்கள் தலையிலேயே, விட்டுப் பிரியாதபடி சூடாமணி போல் சிரோபூஷணமாகக் கொண்டவர்களும், ஆகவே, தங்கள் திருவடி தூளியைக் கொண்டு உலகனைத்தும் காப்பாற்றத் திறமைகொண்டிருக்கிற பகவர்கள், சிறப்புற்றோங்கி நிற்கிறார்களென்கிறபடி, பின்னிட்டாரும் போற்றத் தக்கதாம்படியான பெருமை வாய்ந்தவர்கள் வஸிக்கிற திவ்யதேசத்தை, என் காலின் தூள்படவோ மிதிப்பது? அரங்கன் கோயில் திருமுற்றம் சேறுசெய் தொண்டர் சேவடி செழுஞ்சேறென் சென்னிக்கணிவனே, என்கிறபடி, அங்குள்ள ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீபாத தூளிகளை சிரஸினால் வஹிப்பதன்றோ தகுதியுள்ளது. ஆகவே, என்னப்பனை இங்

குற்றவண்ணமே ஏத்திநிற்கிறேன், என்ன, பெருமாளும் ஆழ்வீர், நீர், இப்பதியை மிதிக்கவேண்டா, உலோக ஸாரங்கமா முனி தோள், தன்னிலே வாருமென நியமிக்க, இவரும் அவன், ஆணை கோளுதவண்ணம், அவரை வாஹனமாகக் கொண்டெழுந்தருளி, ஆஸீநோ ஜநவிஷய:, என்கிறபடியே, அவனைப் பாதாதிகேசமதாய்க்கண்டு பாடியனுபவித்து, அவன் திருவடியில் திவ்ய ரேகை போலே, ஆயினர், என்கிற ப்ரஸித்தியுண்டிறே ? அத்தைப் பற்ற இவரை யோகிவாஹர் என்று பணித்தபடி.

இவருக்கு வாஹனமாயிருந்த முனிவர்தாம் ஆழ்வாரருளிச் செயலில் விஞ்சின வாதரவோடுள்ளவொருவர். இம்முனிவர்உத்தர தேச யாத்ரையாய் சென்றிருக்க இங்குற்றை யான் ஒருவன் அங்கேறச் செல்ல பிள்ளாய் ! தக்ஷிண தேசத்தில் விசேஷமென், என்ன ! திருவாய் மொழி காணலுற்று அனைவரும் போரக் கொண்டாடி நிற்கிறார்கள் என்ன ? அதில் உனக்குப் போவதொரு சந்தை சொல்லிக் காணாய் என்ன ? அவனும் ஆராவமுதேயென ஆரம்பித்து ஓத, இதைக் கேட்ட அவரும், நாராயணாதி பல நாமங்கள் கிடக்க, இப்படி போக்யதை விஞ்சின, ஒரு திருநாமமுமுண்டாவதே என உகந்து, இச்சொல் நடையாடும் தேசத்தே, செல்ல வேண்டுமென அப்பொழுதே அத்தேசத்தை விட்டுப் புறப்பட்டார், என, ஐதிஹ்யமுண்டிறே ? அவ்வாறு அருளிச் செயலில் மனதுடையவர் தாமென்பதை அனைத்துலகுமறியக் காட்டப்போகுமொருவரான படியினாலே, எம்பெருமானும், தனக்குப் பல பரிஜனங்கள் நிற்கச் செய்தே, ஆழ்வார் அருளிச் செயலில் ஆதரம் விஞ்சினவிவரையே, ஆழ்வாரை எழுந்தருளப் பண்ண ஏவி, தன், கார்யங்கொண்டார். இவரும், ஆழ்வாரைத் திருத்தோளிலே ஏறியருளப் பண்ணும் பாக்கியம் பெற்றார். இப்படி, ஒரு முனிவர் தம் தோளில் எழுந்தருளத் தக்க பெருமை வாய்ந்த இவ்வாழ்வாரைக் குறிப்பிடுமிடத்து நம்தேசிகனும், ரங்கநாத திவ்யாஜ்ஞாலப்த வேதாந்தாசார்ய பதஃ ரங்கநாதனின் திருவாணையால் அடையப்பட்ட வேதாந்தாசார்ய ஸ்தானத்தையுடையவர், என்கிறபடி, பெருமாளிடம் தாம் பாக்கியம் பெற்றாப் போல், நம்முன்னே, பாக்கியம் பெற்ற வொருவரிவர், என்று கொண்டு இவரை, நம்பாணநாதன், என்றும், பாண

பெருமாள் என்றும், அருளிச்செய்து போருவர். இப்பெருமை யெல்லாம் புலப்படுமாறு, யோகிவாஹன், எனப்பட்டார்.

பக்தாங்க்ரிரேணு, என்றது, தொண்டரடிப் பொடியாழ்வாரைச் சொல்லுகிறது. இவர்தான், தன்பால் ஆதரம் பெருக வைத்த அழகனூர் அரங்கமென்றே, என்கிறபடி ரங்கநாதன், இவரிடம் பேரன்பு காட்டி நிற்க, அதற்கு மேலே, அவனடியார்களளவும், இவருக்கு ஆதரம் விஞ்சியிருந்தபடி. இதற்கொத்தபடியாகவே, தொடையொத்த துளபமும் கூடையும் பொலிந்து தோன்றிய தோள் தொண்டரடிப் பொடியென்னுமடியன், என்றும் உன்னடியார்க்காட்படுத்தாய், என்றும், துளவத்தொண்டாய தொல்சீர்த்தொண்டரடிப்பொடி, என்றும், இப்படிகளையே வேண்டியிருக்குமவரிறே?

இங்ஙனம் இவர் கொண்டதுதான், தான் தோன்றியோ என்னில்? அன்று. முன்னோர்கள் மொழிந்து வைத்தவாற்றை முற்றிலும் கண்ணுற்றேதான். அதாவது, ஸ்ரீ பாகவதர்களின் ஸ்ரீ பாத தூளியை, நரசிங்கனை நவின்றேத்துவார்களுழக்கிய, பாததூளிபடுதலாலிவ்வுலகம் பாக்கியம் செய்ததே, (நரஸிம்ஹனை அநுஸந்தானம் செய்து தோத்திரம் செய்கிற பாகவதோத்தமர்கள் தங்கள் திருவடிகளினால் மிதித்த தூளிகள் படுவதால் இந்த லோகம் பாக்கியம் செய்தது) என்று பெரியாழ்வாரும், அரங்கவோ என்றழைக்கும் தொண்டரடிப்பொடி ஆட நாம் பெறில், கங்கை நீர் குடைந்தாடும் வேட்கை என்னாவதே, (அரங்கன் என்கிற அவன் திருநாமத்தைச் சொல்லி, ஓ, என்று பெரிய கிளர்த்தியோடே கூப்பிடுமவர்களான பகவத்தாஸர்களாயுள்ள பாகவதோத்தமர்களின் திருவடிகளின் தூள்களில் நாம் படிந்து குடைந்தாடப் பெறுவோமாகில், அதன் பிறகு, கங்கா ப்ரவாஹத்தில் அமிழ்ந்து நீராடும் ஆசை எதற்காக) என்று குலசேகரப் பெருமாளும், மாயன்றமரடிநீறுகொண்டு, அணிய முயலில் மற்றில்லை கண்டீரிவ்வணங்குக்கே, (ஆச்சர்ய பூதனான எம்பெருமானுடைய தாஸர்களின், திருவடி தூளியைக்கொண்டு அலங்காரம் பண்ண முயற்சி செய்யில், அதுவே இவளை ஸத்தையுடையவளாகச் செய்யுமாதலால், இவ்வழகிய பெண் பிள்ளைக்கு வேறு பரிஹாரம் செய்ய வேண்டுவதில்லை காண்மின்கள்) என்று நம்மாழ்வாரும், இப்படிப்பட்ட பெருமையுள்ளதென்று பெரிதும் பாராட்டிப்

பேசியிருக்கிறார்களன்றோ! ஆனதால், பகவத் பக்தியைக் காட்டிலும், பகவத் பக்தியின் எல்லைநிலமான பாகவத பக்தியே சிறந்ததெனக் கொண்டு, அதைக் காட்ட, தன் ப்ரபந்தத்தில் விப்ரநாராயணர், என்கிற தன் திருநாமத்தை ஏறிடாமல், துளவத்தொண்டாய தொல்சீர் தொண்டரடிப்பொடி என்றும், தொடையொத்த துளபமுங் கூடையும் பொலிந்து தோன்றிய தோள்தொண்டரடிப்பொடியென்னுமடியனை, என்றும் அருளிச் செய்கிறபடியே, தம்மை ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீ பாதரேணு, என்றன்றோ பேசியிருக்கிறார். ஆகவே இவை கொண்டு, பக்தாங்க்ரிரேணு, எனப்பட்டார்,

பரகாலு, என்றது, திருமங்கையாழ்வாரைச் சொல்லுகிறது. பகவானிடம் த்வேஷமுள்ளவர்களுக்கு யமனாய்த் தோற்றி நிற்பர், என்றபடி. பரகாலன் என்கிற இத்திருநாமமொன்றைச் சொன்னது, அங்கமலத்தடவயல் சூழாலிநாடன், அருள்மாரி, அரட்டமுக்கி, அடையார் சீயம், கொங்குமலர் குழலியர்வேள், மங்கை வேந்தன், கொற்றவேல் பரகாலன், கலியன், என்கிற வரிசையில் சொல்லபடுகிற மற்றுமுள்ள திருநாமங்களெல்லாவற்றையும் சொன்னபடியிலே நோக்கு. இத்திருநாமங்களின் வரிசைதான், சீர்காழி, என்கிற, காழிச்சீராமவிண்ணகர் திவ்யதேசத்தில், ஸம்பந்த மூர்த்தியோடு வாதப்போர் நிகழ, அப்போரில் தோல்வியுற்ற அவரால் ஸமர்ப்பிக்கப்பட்ட வேலாயுதத்தையுங் கைக்கொண்டு, அச்சமயத்தில், அத்திருப்பதியில் விளங்கி நிற்கும், தாடாளன் விஷயமான மங்களாசாஸனப் பதிகத்தின் இறுதிப்பாட்டில், பரமதநிரஸன பூர்வகமாக ஸ்வமத ஸ்தாபனம் செய்த வீறு தோன்ற இறுத்தப்பட்டதாகவிருக்கும். பரகாலன், என்கிற இத்தத் திருநாமத்தைச் சொன்னது, மற்றும் எல்லாத் திருநாமமும் சொன்னபடியாமென்று சொல்வதுவாக்கியசைலியில் ஒருசமத்கார வார்த்தையின்றியே, இத் திருநாமத்தின், அநுஸந்தானப்போக்கை சற்று ஆராய்வோம். இவ்வாழ்வார் அருளிச் செய்த திருமொழி, திருக்குறுந்தாண்டகம் திருநெடுந்தாண்டகம், என்கிற மூன்று ப்ரபந்தங்களிற்குள்ளே, ஆற்றுக்கும் மேல்பட்ட, தலங்களில் இவர் திருநாமங் கூறப்பட்டிருக்கிறது. அவற்றில் திருமொழி மூன்றும்பத்து, நான்காம்திருமொழி, பத்தாவது பாட்டிலும், அப்படியே (3–9–10) (5–5–10) 7–4–10)

(8–2–10) திருநெடுந்தாண்டகம் 30வது பாட்டு, இந்த ஆறுதலங்களிலேயே, அருமருந்துபோல், பரகாலன் என்கிற திருநாமம் வழங்கப்பட்டிருக்கிறது. இத்திருநாமம் தொடுக்கப்பட்டிருக்கும் தோற்றத்தையும் உற்று நோக்குவோம்.

(1) கொற்றவேற் பரகாலன், (2) மருவலர்தமுடல்துணிய வாள் வீசும் பரகாலன், (3) நேரார்காலவேற் பரகாலன் (4) வாமாந்தேர் பரகாலன் (5) பார்மலிமங்கையர்கோன் பரகாலன், (6) மானவேற் பரகாலன், என்றிப்படி, அமைந்திருக்கிறது.

முதலில் பரகாலன் என்னுமிடத்தில், தாம், ஸம்பந்தமூர்த்தியுடன் வாதப்போர், நிகழ்த்தி வென்று அவரால் ஸமர்ப்பிக்கப்பட்ட வேலை ஏற்றுக்கொண்ட பெருமை பேசப்படுகிறது.

இரண்டாவதில், வாதப்போரில் வணங்காத பகவத்த்விட்டுக்களான பாஹ்யர்களை, அவர்கள் ஸத்தையையழித்தே காரியங்கொண்டமை குறிப்பிடப்படுகிறது.

மூன்றாவதில், நான், எதிரி என்று மார்தட்டி நேர்நிற்கும் எதிரிகளுக்கு தாம் கொண்ட வேலும் தாமும் யமன் போலிருக்கும் மேன்மை மெய்ப்பிக்கப்படுகிறது.

நான்காவதில், மேலே பேசப்பட்டவர்கள், போர் வீரமற்றுத் தோற்றினார்களேயாகிலும், தாமும் அதற்குத் தகுந்தபடி தாவிவருகிற குதிரைகளையுடைய தன் தேரை இடம் வலமாகத் தாவவிட்டு நடத்தி அவர்களைவெல்லுமவரென்பது விளக்கப்படுகிறது.

ஐந்தாவதில், வாக்கினாலும், தோள் வலி, வாள் வலிகளினாலும், அவரவர்களைத் தக்கவாறடக்கி யாட்கொண்டார்படியான தன் புகழே பூமியெங்கும் பொலிந்து போருகிறதென்பது போற்றப்படுகிறது.

ஆறாவதில், தான் கொண்ட வேலை தரித்த மாத்திரத்திலேயே தன்னைப் போல், தரணியொடு விசும்பாளும் தன்மை பெறுவாரெனத் தலைக்கட்டப்படுகிறது.

இதுவும், நிற்க, இந்த ஆறுபடிகளிலும், முதல் முடிவு, இதன் சேர்த்தியழகும் காண்மின்கள். முதலில், கொற்றவேற் பரகாலன்

முடிவில் மானவேற் பரகாலன், ஆக, ஈதெல்லாப்படிகளையும் ஆராயுமிடத்து, இவ்வாழ்வார் தமது திருவுள்ளத்திற்கு, பரகாலன், என்கிற திருநாமத்தில், பேராஉகப்பிருக்குமென ஊஹிக்கலாயிருக்கிறது. இப்படி ஆழ்வார் திருவுள்ளமிருக்குமென்பது கொண்டே, இவரிடமன்பு பூண்டு, குறையற்பிரானடிக்கீழ் விள்ளாதவன்பனி ராமானுசன், என்று, ஏத்தப்படுகிற, எம்பெருமானாரும், தாம், இவர் வெளியிட்ட பெரிய திருமொழிக்குத்தனியனிடுகையில், முதலில் இத்திருநாமத்தின் வீறுடைமை வெளிப்பட, வாழி பரகாலன் என்றருளினார்.

இவ்வெம்பெருமானாரின், அன்பிற்கு கொள்கலமாய், ஶ்ரீமத் யதீந்த்ர ஶிஷ்யாணாம், என்கிறபடி முக்கியசிஷ்யராய் விளங்கிய, கூரத்தாழ்வானும், தாம், இரண்டாவது தனியன் அருளிச்செய்கையிலும், நெஞ்சுக்கிருள் கடிதீபம்...............என்று ஆரம்பித்துப் பேசி பரசமயப்பஞ்சுக்கனலின் பொறி பரகாலன் பனுவல்களே, என முடித்தருளினர். இவ்வண்ணம் ஆழ்வார் திருவுள்ளத்துக்கும், எம்பெருமானார், கூரத்தாழ்வான், திருவுள்ளங்களுக்கும், பாங்காகயிருக்குமதற்கேற்ப இத்தனியனிலும், பரகாலனெனப்பட்டார்.

யதீந்த்ர மிஶ்ராஃ என்றதுஎம்பெருமானாரைச் சொல்லுகிறது. இங்கு மிச்ர, என்கிறசப்தம், பூஜிக்கத்தக்க வொருவரைச் சொல்லுமிடங்களில், ராமமிச்ரர், என்றும், ஆர்யமிச்ரர்என்றும், மிச்ரசப்தத்தைச்சேர்த்துச் சொல்லுமாப் போல், யதிகள் தலைவர்களாய் விளங்குமவர்கட்கெல்லாம் இவர் கொண்டாடத் தக்கவர் என்கிற பொருளை உணர்த்த ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது. இதை, அமுதனார்முதலானவர்களும் யதித்தலைநாதன், என்றும், ஶ்ரீமதே யதிராஜராஜாய, என்றும், யதிஸார்வபௌமஃ என்றும், ஏத்திப் போந்தார்கள்.

இப்பதத்தை, இவ்வாறு கொள்ளாமே, யதீந்த்ர, என்றும், மிச்ர, என்றும், தனியே கொண்டால், யதீந்த்ர சப்தத்தால், இராமானுச முனிபுங்கவரையும், மிச்ர, சப்தத்தால் மதுரகவிகளையும், சொல்லுகிறதாகவுமாம்.

ஆயினும், மதுரகவிகளின், மநோபாவத்தை நோக்குமிடத்து கோதாதேவியின், திருவுள்ளமானது தம்மைத் தனித்துச் சொல்லிக்

கொள்ளாதே பெரியாழ்வாருக்குட்பட்டு இருக்குமதே சிறந்ததெனை த்தோற்றிவரும், என்பதற்கிணங்க, பட்டநாத சப்தத்தால், ஆண்டாளும் சொல்லப்பட்டவளானாள், என்கிற முன்னோர்கள் நிர்வாஹம் போல், இங்கும், மேல் நம் மாழ்வாரைச் சொல்லுமிடத்து மதுரகவியாழ்வாரும் அவரில் அந்தர்கதராய் தோற்றிநிற்பர் என்றுகொண்டு தனித்து இவரை (மிச்ர) சப்தத்தால் அநுஸந்திக்காமலிருக்கத் தக்கது என்கிற, முன்னோர்கள் நிர்வாஹ சாதுர்யமே போற்றத்தக்கது. இத்தால் சொல்லிற்றாயிற்று என், என்னில், யதிந்த்ரமிச்ர சப்தத்தால், எம்பெருமானாரே, ஏத்தப்பட்டாரென்பது எளிதிலறியப்பட்டது.

இவ்விடத்தில் மற்றெல்லா ஆழ்வார்களுடன் எம்பெருமானாரையும், ஒரு கோர்வையாய் சேர்த்தநுஸந்தித்திருப்பதின் சுவடு, சிறிது கண்டறிய வேண்டும். ஆழ்வார்கள் எல்லோரும் திவ்யப்ரபந்தங்களைக்கண்டு உலகுய்ய அருளிச் செய்தார்கள். ஆகவே, அவர்களை நம்மாழ்வாரோடு ஒரு கோர்வையாய் அநுஸந்தித்திருப்பது பொருந்தும். எம்பெருமானார் அப்படி என்ன ? உதவி செய்தருளினார். அவரை நடுவே சேர்த்திருக்கும் பொருளென் ? என்னில், அதை நிரூபணம் செய்துணர்வோம்.

உலகில், நமக்கு நேரே அறியமுடியாதவைகளை சாஸ்த்ரங்கொண்டறிகிறோம். அதுபோல, இது போல் வஸவிஷயங்களில், நமக்கு முக்கிய ப்ரமாணமாய்ப் போருவது, பலவுங்கற்றுணர்ந்த பெரியோர்கள் கண்டுரைத்த வார்த்தைகள். அப்படி இவ்விஷயத்தில் ப்ரமாணமாய் நிற்பது, இராமாநுச நூற்றந்தாதி (60) வது பாசுரத்தில், திருவாய் மொழியின் மணத்தரு மின்னிசை மன்னுமிடந்தொறும்............ புக்கு நிற்குங் குணந்திகழ் கொண்டல், இராமாநுசன், என்கிறபடி, திருவாய்மொழியில் மிக வாதரம் தோற்றநிற்குமவர், என்கிறது போலவே, அனேக இடங்களில் புகழப்பட்டிருக்கும் பாசுரங்களும், திருவாய்மொழித் தனியன்களில், திருவாய்மொழியைப் பெற்றெடுத்த தாய் நம்மாழ்வார், என்றும், எடுத்து வளர்த்த தாய் எம்பெருமானாரென்றும், பொருள் படுமாறு அருளியிருக்கும், வான்திகழும், என்கிற தனியனில் மொய்ம்பால் வளர்த்த யிதத்தாயி ராமாநுசன், என்கிற ஸூக்தியும். ஆனதால், மற்று

மாழ்வார்களெல்லோரும் திவ்ய ப்ரபந்தங்களைத் தாங்கள் கண்டுரைத் தார்களேயாகிலும், பெற்றார் பெற்றொழிந்தார் பின்னு நின்றடியே னுக்கு, உற்றானாய் வளர்த்தென்னுயிராகி நின்றானை, என்கிற கவி யன் ஸூக்திக்கிணங்க, பின்னர் அவைகளைத் தழைத்தோங்கும்படி யாக வளர்த்தவர், எம்பெருமானாரானது கொண்டு, பொருளை ஸம் பாதிக்கு மவரிலுங்காட்டில் அவற்றைப் பரிபாலனம் செய்யுமவரே சிறந்தவரென்கிறபடியே, சிந்தாமல் தர்சனத்தைக் காத்தபிரானிவ ரெனக் கருதி, ஆழ்வார்கட்கிடையே இவரையுமிட்டு ஏத்திநின்றார் கள்.

அன்றியும், இதற்கு மேலே நுண்ணிய பொருளொன்றும் நுவ லக்கேண்மின். மற்றை யாழ்வார்கள் ப்ரபந்தங்களை வெளியிட்டது போலவே, பவிஷ்யதாசார்ய விஷயமான, இராமாநுச நூற்றந்தாதி யையும், முன்னருளிய இருபத்து மூன்று ப்ரபந்தங்களோடு இருப த்து நான்காவது ப்ரபந்தமாகத் திருவுள்ளமுவந்து,நம்மாழ்வார், ஸ்ரீ மன் நாதமுனிகளுக்கு, முதன் முன்னமே உபதேசித்தார் என்கிற ஐதிஹ்யம் போலே, திருக்குருகைப்பிரான் பிள்ளான் முதலியவர் களுக்கு, எம்பெருமானார், தாம் ப்ரதானராய் நின்று, இராமானுச நூற்றந்தாதியை உபதேசித்தருளினாரெனவும், ஸத்ஸம்ப்ரதாயமாய் கேட்கலுற்றவோரை திஹ்யமுமுண்டிறே?

இவ்வைதிஹ்யத்தை மூதலிக்க ஸ்ரீ தேசிக ஸூக்தியுமுளதே. அதாவது, ப்ரபந்த ஸாரத்தில், ஒவ்வொரு பாட்டிலும் அவ்வப்ரப ந்தங்களை வெளியிட்ட ஆழ்வார்களை நோக்கி தமக்கு அவைகளில் அறிவையருளல் வேண்டுமென அர்த்தித்தாப்போல், தேசமெலாம், என்கிற பாட்டில், எம்பெருமானாரை ஸம்போதித்து, திருவரங்கத்த முதனாருன் பொன்னடிமே லந்தாதியாகப் போற்றிப் பேசிய, நூற் றெட்டுப் பாட்டையும் எனக்கருளல் வேண்டுமென வேண்டியிருப் பதும், மேலும், வையகமெண், என்கிற பாட்டில் திவ்யப்ரபந்த ப்ர வசன கர்த்தாக்களை ஒரு சேர அனுஸந்திக்கும் பொழுதும், முத லிரண்டடிகளில், ஐயனருட்கலியனெதிராசர்தம்மோடாறிருவ ரோரொருவரவர் தாஞ்செய்த, தூய்யதமிழிருபத்து நான்கின் பாட் டின்றொகை நாலாயிரமு மடியோங்கள் வாழ்வே. என்று, எம்பெரு

மாறனையும் மற்ற பன்னிருவரோடு ப்ரபந்த ப்ரவசன கர்த்தாக்களில் சேர்த்து, பதின்மூவராக்கி, இவர்களெல்லோரும் அருளிச் செய்த பல்லாண்டு என்று தொடங்கியிருக்கிற பெரியாழ்வார் திருமொழி முதலாக, இராமானுசனடிப்பூமன்னவே, என்று பூர்த்தி செய்திருக்கிற இராமானுச நூற்றந்தாதி இறுதிப் பாட்டளவாயுள்ள பாட்டுக்களுக்கு ப்ரமாணம் இருபத்து நான்கெனவும், பாட்டின் தொகை நாலாயிரமெனவும், இவைகள் இங்குமங்கும் எங்களுக்கு அழிவில்லாத ஐச்வர்யம், என அருளிச் செய்திருப்பதும், ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிக திவ்ய ஸூக்தியின் அநுபவாபிப்ராயமாக அனைவர்க்கும், தகுந்த சான்றெனச் சொல்வது மிகையாகாதன்றோ ! எப்படி நிரூபித்தாலும், எம்பெருமானார், ஆழ்வார்களுடன் ஒரு கோர்வையாய் அநுஸந்திக்கத் தக்கவர் என்பதே விளங்குமாதலால் அது கொண்டு இந்த ச்லோக அநுஸந்தானத்தில் எம்பெருமானை, ச்சேர்த்து அநுஸந்திக்கப்பட்டது, இவ்வநுஸந்தானத்தில், புகழ்மலிந்தபாமன்னு மாறனடிபணிந்துய்ந்தவன், என்றும், மாறன் றிணையடிக் கீழ் வாழ்வையுகந்த இராமானுசன் என்றும், குறையல் பிரானடிக்கீழ்விள்ளாதவன்பனிராமானுசன் என்றும், பல படிகளில், நம்மாழ்வாரிடமும், திருமங்கை மன்னனிடமும், எம்பெருமானுக்கு எல்லை கடந்த பக்தியுள்ளதென்றும், புகழ் பரிவுக்கேற்ப, பராங்குச பரகாலர்கள் நடுவே, இவரை வைத்து அநுபவித்திருக்கிற சாதுர்யம் குறிக்கொள்ளத்தக்கது.

ஸ்ரீஸ்தோத்ரரத்நம் ௫-ம், என்பது, நம்மாழ்வாரைச் சொல்லுகிறது. இங்கு சொல்லப்படும் ஸ்ரீமத் சப்தம் பரஞ்சுடரொளி மூர்த்தியைப் பங்கயக் கண்ணனைப், பயில்வினிய நம் பாற்கடல் சேர்ந்த பரமனைப், பயிலுந் திருவுடையார், என்கிறபடியில், அவதரிக்கும்பொழுதே, திருமாலின் திருவருட் செல்வராகி, அது தொடங்கி எம்பெருமானையே வணங்கி வழிபட்டு தீவினையோடா தனந்தட்டத் தடுகுட்டமாய்ப் பரவிப் போருகிற மற்றெல்லா ஆழ்வார்களையும் தமக்கு திவ்யாவயவ ஸ்தானங்களிற் கொண்டு தாம் அவயவியாய் விளங்குமாற்றை விளக்குகிறது. திருவுக்கும் திருவாகிய செல்வனைப் பரவுந் திருவுடைமையைக் காட்டிலும் சிறந்த பொருளொன்றுமுண்டோ ? வுலகினில், என்றபடி.

இங்ஙனம், ஆழ்வார்கள் முதலாக எம்பெருமானாரளவாகவுள்ளவர்களைக் காட்டி, இவர்களாகிய ஸம்பத்தை யுடையவர் நம்மாழ்வார் என்று உரைத்தல் தகுமோ? என்னில், இவ்விஷயத்தில் மற்றெல்லா ஸூக்திகள் பலபடியும் பரிந்து புகழ்ந்து பேசுவதுங் கிடக்க, அமுதனாருளிச் செயலில் ஆழ்வோம். அவர் தாம்,

ஆரப்பொழில் தேன் குருகைப்பிரான், அமுதத் திருவாய்
ஈரத்தமிழினிசையுணர்ந்தோர்கட்கு, இனியவர் தம்
சீரைப் பயின்றுய்யும் சீலங்கொள் நாதமுனியை நெஞ்சால்
வாரிப்பருகும், இராமானுசன் என்தன்மா நிதியே

என்கிறபடி, சந்தனச்சோலை சூழ்ந்ததிருக்குருகையில் அனைவர்க்கு முபகாரகராய் வந்தவதரித்த ஆழ்வாரின் அமுதமாய திருவாக்கின் குளிர்ந்த தமிழின் இசையை யறிந்தோர்களிடம், எவர்கள் கனிந்த மனதுடன் இருக்கிறார்களோ; அப்படிப்பட்டவர் குணங்களைப் பரிச்சயம் செய்து உஜ்ஜீவிக்கும் தன்மை படைத்தவர் எந்த நாத முனிகளோ; அந்நாதமுனியை நெஞ்சால் வாரிப் பருகுகிற இராமானுசன் என்னுடைய புதையல், என்று சொல்லி, மேல், கார்த்திகை யானுமென்கிற பாட்டில், மேலே சொல்லப்பட்ட புதையல், ஆபத்துக்குதவாத நிதியல்ல காண், இராமானுசன் என்தன் சேமவைப்பே, என்கிறபடி சேமநிதி, என்றருளிச் செய்கிறார். ஆக, இப்படிப்பட்ட நிதிகள் பல ஆழ்வாருக்கு அவயவங்களாய் விளங்குகிறதானதால், அவருக்குத் தான், ஸ்ரீமத், என்கிற சப்தம் அடைமொழியாகி, சப்தத்தில் உள்ள அர்த்தத்தை வாஸ்தவமாக்கிக் கொள்ளாமல், வேறு எங்கு சென்று தான் சீர்பெற்று விளங்கும்.

அன்றிக்கே, ஆழ்வார், மிக்கவொளியுடன் விளங்குமாற்றை விளம்பலுற்ற தென்னனுமாம். இதை மூதலிக்க, உத்தரதேச யாத்திரையாகச் சென்றிருந்த மதுரகவியாழ்வார் திருவயோத்திமாநகரில் ஓரிரவில் தென் திசையில் ஓரொளியைக் கண்டு, நாள்தோறும் இரவில் ஒளி வீசுந்திக்கு நோக்கிப் பல பயணமிட்டு திருக்குருகூர் திருப்புளியடியை யேகி, அங்கு அப்ராக்ருத தேஜஸ்ஸுடன் விளங்கிய ஆழ்வாரைக் காணலுற்றுக் களிப்படைந்தார், என, ஒரைதிஹ்யமுண்டிறே? அதை நினைப்பிவித்தபடியாம்,

இவ்வரிய பெருமையையடியொத்திய, ஆதித்ய, ராமதிவாகர, அச்யுத பாநுக்களுக்குப், போகாதஉள்ளிருள் நீக்கி, சோஷியாத பிறவிக்கடல் வற்றி, விகஸியாத போதிற் கமலம் மலர்ந்தது வகுளபூஷண பாஸ்கரோதயத்திலே, (மன்னுங் கொடுங்கதிரோனாகிய சூரியனுக்கும், அக்குலத்தில் விளக்காய் தோன்றிய ராமனாகிய சூரியனுக்கும், தேவகியாகும் கிழக்கு திக்கில் தோன்றிய கண்ணனாகிய கதிரவனுக்கும்' ஓடியொளியாத சேதனர்களின் அஜ்ஞானமாகிற உள்ளிருட்டெல்லாம் போகப் பெற்றும், ஒருநாளும் வற்றுதல் வரள்தல் இல்லாத ஸம்ஸார ஸாகரம் வற்றப் பெற்றும், எந்தவொளியைக் கண்டுமலராத ஹ்ருதயகமலம் மலரப் பெற்றும், பெருமைபெற்றது, மகிழ்மாலை மார்பினனாக அவதரித்த ஆழ்வாராகிற ஸூர்யோதயத்திலே) என்கிற, ஆசார்ய ஹ்ருதய வாக்கியத்தின் போக்யதை இங்கு நோக்கத்தக்கது.

இது நிற்க, ஆழ்வார் மிக்க வொளியையுடையவராயிருக்கிற படிக்கனுகுணமாக, ஆழ்வார் தாம் கண்டுரைத்த திருவாய் மொழியும், பேரொளி பெற்றதென்பது விளங்க, சுடரிரண்டே பண்டு, மூன்றாயின....திருவாய்மொழிப் பாவொடுமே, (ஆழ்வார் அவதாரத்துக்கு முன்னெல்லாம் உலகில் இரண்டே ஒளிகள் காணப்பட்டன. ஆழ்வார் அவதரித்து, திருவாய் மொழியைக் காணலுற்று, அதை அருள்கொண்டு நிற்கப் பாடியபின், அப்பாசுரங்களோடு, சேர்ந்து மூன்று ஒளிகளாக ஆகி இப்பால் காணப்படுகின்றன) என்கிற சடகோபாந்தாதிப் பாசுரமும் எல்லாவற்றிலும் ஏற்றமுற்றிருப்பதும் நோக்கத்தக்கது.

இங்கு, பராங்குச என்கிற சப்தம், புறச்சமயிகளாகிற யானைகளுக்கு மாவெட்டியாய் தோற்றுகிறவர், என்றபடி. அவதரித்தபொழுதே, எதிர்த்த சடவாயுவை ஹுங்காரத்தால் வெருட்டியடித்தவரன்றோ இவர். இவர் தாம், திருவாய்மொழி நான்காம் பத்து பத்தாவது திருவாய்மொழி ஐந்தாவது இலிங்கத்திட்ட என்கிற பாசுரத்தில், புறச்சமயிகளுக்கும் பொருள்பட பரத்வத்தை யுரைத்திப் பேசி, ஐந்தாம்பத்தில், இரண்டாவது திருவாய்மொழி நான்காவது இடங்கொள், என்கிற பாசுரத்தில், புறச்சமயிகளைக் கலியில் தன் படியைப் பின்பற்றிப் பலரும் பரவி நின்றார்கள் என்பதை

இடங்கொள் சமயத்தையெல்லா மெடுத்துக் களைவனபோலே, தடங் கடல் பள்ளிப் பெருமான் தன்னுடைப் பூதங்களேயாய்,............... நாடகம் செய்கின்றனவே, என்றருளிச் செய்திருக்கிறாரன்றோ ?

அன்றியும், பராங்குசரென்றால், பரன் என்று சொல்லப்படுகிற எம்பெருமானாகிற யானைக்கும் மாவெட்டியாய் விளங்குமவர் என்ற படி. மதயானையாக விருந்தாலும் மாவெட்டியைக் கண்டால் மயங்கி நிற்குமன்றோ ? அப்படியேயன்றோ ஆழ்வாருக்குப் பெருமாள் கட்டுப்பட்டிருக்கிறபடி. பெருமானை யானையாகச் சொன்ன விடமும், அவனைக் கலங்கி நிற்கச் செய்தவிடமும் உண்டோ என்னில், முதலில், இவரருளிச் செயலில் உள்ளபடியையே காண்மின்கள். திருவாய்மொழி மூன்றும்பத்து ஒன்பதாந்திருவாய்மொழி முதற் பாசுரமான, சொன்னால் விரோதமது என்பதில், நான்காவது பாதத்தில் என்னானை என்கிறார். ஆறும்பத்து நான்காம் திருவாய்மொழி ஒன்பதாவதான கலக்கவேழ், என்கிற பாசுரத்தின், பின்னிரண்டடிகளில், வலக்கையாழியிடக்கைச் சங்கமிவையுடைமால்வண்ணனை, மலக்குநாவுடையேற்கு மாறுளதோ விம்மண்ணின் மிசையே, (வலக்கையில் சக்கரத்தையும் இடக்கையில் சங்கத்தையும் தரித்துக்கொண்டு, இந்த அழகுக்கு மேலே தனது நீலமான திருமேனியையுங் கொண்டிருக்குமவனையும், கலங்கப் பண்ணுகிற நாவின் வீறுபெற்ற வெனக்கு இப்பூவுலகில் நிகராவார் யாரேனுமுளரோ ? என்கிறாரில்லையோ? இங்கு, திருவாறுயிரப்படி வாக்யத்தை ஸேவித்துக் களிக்கை ரஸிகர்களின் செய்கைக்கழகு.

இவ்வாழ்வார், எம்பெருமானை யானையாக வநுஸந்தித்ததைப் பின்பற்றி, இவர் ப்ரபந்தங்களுக்கு ஆறங்கம் கூறவந்த கலியனும், மதங்களிறன்னாய், என்றும், என்னானை யென்னானை, என்றும், கச்சிமேயகளிறு, என்றும், பாரதத்தை மாளவூர்ந்த வரையுருவின் மாகளிற்றை, என்றும், பலவிடங்களில் தன் ப்ரபந்தத்தில் பேசிநின்றார்.

இராமானுச நூற்றந்தாதியிலும், கலியனைப்பேசுமிடத்து, கண்ணமங்கை நின்றானைக்கலை பரவுந்தனியானையைத் தண்டமிழ் செய்த நீலனென்றேத்தி நின்றார்.

தன் ஸூக்தி பலங்கொண்டு எம்பெருமானையும் தனக்குள் ளடக்கும் இந்தநம்மாழ்வாரின் ஸாமர்த்தியத்தைக்கண்டு வைத்த கம்பநாடரும், சடகோபரந்தாதி முதற்பாட்டிலேயே, ஆழ்வார் ஸூக்தியின் ஓர் பாதத்தைத்தாண்டி எம்பெருமானால், ஓர்பாதம் முன்வைக்க முடியுமோ, என்கிற பொருள்பட, தென்குருகூர் புனி தன் கவியோர் பாதத்தின் முன்செல்லுமே தொல்லை மூலப்பரஞ் சுடரே, என்று பேசியிருக்கும் பேச்சின்சுவை பேசிமுடிக்கப் போமோ?

இப்படி ஆழ்வார் படைத்த வாக்கின் வலிமைக்குத்தக்கபடி, தன் ப்ரயத்னமே கொண்டு புத்தி ஸாமர்த்தியத்தால், எல்லாவற் றையும் உள்ளவைபோல் சாதித்தவரோ என்னில், அன்று; ஸபாச் ரயனான எம்பெருமானைத் தன் தூயமனத்தினில் இடைவிடாது த்யானம் செய்தனுபவித்து, அவ்வனுபவத்தில் ஊன்றின மனதை வைத்து ப்ரபந்தங்களைக் கண்டுரைத்தவர், என்பதைக் காட்டிக்கொ டுக்க, முநிம், என்கிற சப்தம் அமைந்திருக்கிறது. இந்த சப்தத் தையிட்டே, ஸ்ரீ தேசிகன் ஆழ்வாரைப் பேசுமிடத்து, பாதுகாஸஹ ஸ்ரம் மூன்றாவது வர்ணாஸ்தோமை: என்கிற ச்லோகத்தில் முதல் பாகத்தில், வேதமிரண்டில் மற்றொரு பாஷைவாய்ப்பைக்கொண்ட ஸம்ஹிதையைப் பார்த்தவரான, என்பதைக் குறிப்பிட்டு, இரண்டாம் பாகத்தில், அப்படிப்பட்ட ஆழ்வாரை [illegible] என்று அருளிச்செய்யுமிடத்து, முநிம், என்றே, பேசினார். இவ்வகையான பதப்ரயோகங்கள், இவர் ஸூக்திகளிலும், மற்றை யார் ஸூக்திகளிலும் பலவுள; ஆக, ஆழ்வார் திருநாமம் அமைந்த அழகு, ஸ்ரீமத் பராங்குசமுநிம், என்று.

இவ்விடத்தில், பெருமாள், என்னெஞ்சத் திருத்தாக இருத் தினேன் என்று ஆழ்வார் அருளிச்செய்கிறபடியில், ஆழ்வா ரிட்ட வழக்காயிருப்பர் என்கிற பெருமைகொண்டு, இவ்வண்ணம், பராங்குச சப்தத்திற்கு ஓர் அனுபவ ப்ரகாரம் இருக்கலாமோவென வேடிக்கையாக அர்த்த மெழுதப்பட்டது; ஆகிலும், ரஸிகசிகா மணிகள்; பொருத்தமுள்ளபடியில் அர்த்தத்தை நிர்வஹித்துக் கொள்ளக்கடவர்கள்.

மேலும், இங்கு, ஆழ்வாரை பராங்குசரென்றே சொல்லா யிருக்க, முநிம், என்கிற சப்தத்தைச் சேர்த்துப் பேசியிருப்பதில் சாதுர்யமொன்றும் தோற்றுகிறது; அதாவது; பராங்குசரென்று சொன்னபடிக்கேற்ப, பிறருக்குமாவெட்டியாய் விளங்குகிறபடி கண்டு பயப்படாதே கொள்; அவர், பராங்குச முநிதான். ப்ராஜ்ஞாத்மா நிவிஷ்டாய ஸந்தி:, என்று உபநிஷத்துக் கூறும், உத்தமத்தன்மையுற்றவரென உணருவாயாக என்றபடி. ஆகவே எம்பெருமானை எப்பொழுதும் சிந்தனைசெய்து அதனால் அவ்வெம்பெருமான், யோமிஹஸ்ரஜ்ஞாநமஸம், என்கிறபடியே இவர் மனத்தை வந்தடைந்து மற்றோர் நெஞ்சறியாதவண்ணம் நிலைத்து நிற்றலைக் கொண்டருள்வனென்பது குறிப்பிடப்பட்ட தாகிறது. இத்தால், எம்பெருமான் தன்னுடைய பரத்வாதி குணங்களெல்லா வற்றோடும் தோற்றச்செய்தேயும் முக்கியமாக ஸௌலப்ய குணத்தைக்காட்டியருளி எப்படி நம்மை ஆட்கொள் வாரோ, அப்படியே ஆழ்வாரும் பிறருக்கு பயங்கரராய் தோற்றி றுரேயாகிலும், ஆழ்வாரையே, அன்னையாயத்தனை யென்னை யாண்டிடும் தன்மையான், என்கிறபடியே எல்லாவுறவுமுறையையு முடையவராகக்கொண்டு அடிமை செய்யபாரிக்கும் நம்போலி யர்க்கு, பொருமையையே பூஷணமாய்க்கொண்ட முநிவேடத் தோடு தோற்றி நின்று, முதலடியிலேயே க்ஷிம் ஜாதா ஷாஸ்ஹ என்கிறபடியே, ரிஷிசப்தத்தை முன்னிட்டே சரணமடையலா மெனக்காட்டி நிற்கிறபெருமைதன்குதோற்றவில்லையோ? இப்படி களெல்லாங் கொண்டே நம்மாழ்வாரை இங்கு இந்த ச்லோகத்தில் பராங்குச முநிம், என்று ஏத்தி நின்றார் போலும்.

இவரிடம் இடைவிடாது அடிமைசெய்ய ஆசையுள்ளதை, இவ்வாழ்வாரே பூர்த்தி செய்துவைக்க வேண்டுமெனக் கருத்திற் கொண்டு, அதற்காக, எப்பொழுதும் தொழுது நிற்கிறபடியைக் காட்டுகிறது, ப்ரணதோஸ்மிநித்யம், என்கிற சப்தங்கள்.

இங்கு சொல்லப்படுகிற சப்தத்தில், இன்னகாரணங்களைக் கொண்டென்றுவது, இன்ன தேசவிசேஷத்தில் என்றுவது, குறிப் பிடாமையினலே, மனது, வாக்கு, காயம், என்கிற படியுள்ள

மூன்றுவித கரணங்களாலும், ஸதாவாதவாஸீ, (இவ்விடத்தும், அவ்விடத்திலும்)என்கிறபடி, எங்கும், எப்பொழுதும் தொழுத வண்ணமாக விருக்கிறபடி சொல்லப்படுகிறது. இங்ஙனம் செய்கைக்கு ஒரு பயன் தானுமுண்டோ வென்னில் ? தொழுகையே பயன், என்றும், தொழுது நிற்பதிலுங்காட்டில் சிறிய பயனொன்று முண்டோ வென்றும் சொல்லப் பட்டபடியாம். ஆக, இந்தச்லோகத்தில், பொய்கை, பூதம், பேயாழ்வார், விட்டுசித்தன், ஆண்டாள், மழிசைப்பிரான், குலசேகரப்பெருமாள், பாணநாதன், தொண்டரடிப்பொடி, கலியன், மதுரகவி, எம்பெருமானுர் முதலானவர்களே, நம்மாழ்வாரின் திவ்யா வயவங்களாக நிரூபணம் செய்துகொண்டு, இத்திவ்யா வயவங்களோடு கூடின நம்மாழ்வாரை, நிஹூதஃ வணதஃ வஹஃ, என்கிறபடியில், எப்பொழுதும் நன்ருய் தலைவணங்கி நிற்கின்றேன் என்பது அருளிச் செய்யப் பட்டது.

இத்தனியன்கள் ஐந்தில், முதன் முதலில், திவ்யப்ரபந்தங்களைப் பலபடியும் ப்ரமாணங்களோடு பெருமையுடன் பேசி, இவ்வுலகினில் இவைகளைக்கொண்டே அனைவரு முய்யுமாற்றையருளிய, ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகனை, ராமானுஜ தயாபாத்திரம், என்கிற தனியனுல், ஸ்ரீமதெவங்கடநாயகாய ஸ்வகீய வரணாஷயம் । ஹவஸதா வாரதாவஸீ ஸதீயம் ஶரணம் ஸஹா ॥ (ஸ்ரீமானுன வேங்கடநாதனென்கிற பெரியவரே உம்முடையதான திருவடிகளிரண்டும், இங்கும், அங்கும், எப்பொழுதும், என்னுடையதான புகலிடமாக இருக்கவேண்டும்) அப்படியருள்புரியவேண்டும். என்றும், வேதாந்த தேசிகனர் பாதமலர் அத்திவத்து மிங்குமவன், என்றும், சொல்லுகிறபடியே வழிபட்டும், இரண்டாவதில், ஆபாதருடமநபாயி நிதர்ச நேஸ்மிந், என்று கொண்டாடும் படியில் இந்ததர்சனம் யாதொரு தீங்குமின்றி திருமால் முதலாக உடையவராளவாக வளர்ந்து வந்திருக்கிறபடியை, இப்படியே நீடூழிவளர்ந்து விளங்கிநிற்குமென்பதற் கறிகுறியாகக்காட்டி, எம்பெருமான் முதலாக, எம்பெருமானுரளவும், ஒருசேர்த்தியாக அநுஸந்தித்து குருக்கள் குழாங்களை வணங்கியும், மூன்ருவதில், பெற்ற தாயைக்காட்டி

னும் வளர்த்த தாய்க்கு வாத்ஸல்யம் வளர்ந்து நிற்குமென்பது கொண்டு, அப்பெருமைவாய்ந்த, எம்பெருமானைச் சரணமடைந்தும், நான்காவதில், எல்லாப்பெருமைக்கும் முழுமுதற் காரணமாய், திருநாவீறுடைய பிரானென்று பிருதங்கொண்ட, நம்மாழ்வாரை, நமக்கு, எல்லாவுறவு முதலியனவும் அவரேயென அடிபணிந்தும், ஐந்தாவதில், கீழ்ச்லோகத்தில் பணிந்த நம்மாழ்வாரை, அவருக்கு அவயவங்களாக விளங்கும் மற்று மாழ்வார்களுடன் ஒரு சேர்த்தியாய்க்கொண்டு அநுஸந்தித்து, மெய்யடியார்கள் தம், ஈட்டங் கண்டிடக்கூடு மேலது காணும் கண்பயனாவதே, என்றும், இன்பமிகு பெருங்குழுவுகண்டு, என்றும், ஸூக்திகளில் சொல்லுகிறபடி மஹான்களின் திரளைக்காண ஆசையுள்ளவனாகி, ப்ராணப்ரயாணபாதேயம் ஹரிகீர்த்தநம், என்றும், பாதேயம் புண்டரீகாக்ஷ நாமஸங்கீர்த்தனாம்ருதம் என்றும் எம்பெருமான் திருநாமத்தைச் சொல்லப் பெருமை படுத்திப் பேசியிருக்கிற படிகளை யடியொத்திய, ஸ்மரேத ஸததம் ஸதாசார்ய நாம (ஆசிரியரின் திருநாமத்தை எப்பொழுதும் ஜபிக்க வேண்டும்) என்றிவைமுதலிய கட்டளைகளைக்கருத்திற் கொண்டு ஆழ்வார்களின் திருக்கல்யாண குணங்களை வெளியாக்க வல்ல திருநாமங்களை அநுஸந்தித்துக்கொண்டு ஆழ்வார்களை எப்பொழுதும், இங்குமங்கும், தொழுதவண்ணமாக விருக்கிறேனென்பதும் சொல்லப்பட்டது.

இத்தனியன்கள் நாலாயிரத்திற்கும் பொதுவானதாகையினாலே இவைகளை, எந்த ப்ரபந்தத்தை எப்பொழுது ஆரம்பித்து ஓதத்தொடங்கினாலும், அப்பொழுதெல்லாம் அநுஸந்திக்க வேண்டியதென்று பூர்வாசார்யர்கள் நியமித்ததாக விருக்கும்.

இங்ஙனம், ஆசிரியர்களையடிபணிந்தே ஓதவேண்டுமென்பது ஸ்ரீகுருப்ரகாசயேத் தீமாந் (புத்திமான் ஆசிரியரை ப்ரகாசிப்பிக்க வேண்டும்) என்று ஆரம்பித்து, தானிந்த ரஹஸ்யங்களை யநுஸந்திக்கும் போதெல்லாம் ஆசார்ய பரம்பரையையநுஸந்திக்கையும், விதிவைகு ஸாதநம்; (பல்மானை கட்டளையினால் ஏற்பட்டதாகிறது) இவ்வாசார்யர்களுடைய வநுஸந்தானம், ஸம்ஸாரஸாகர ஸந்தார்ய கூரகரோ தஸ்மை ஸ்ரீமதே (கநாத வார்த்தையைப் பேசும்

படி நேர்ந்து அப்படி பேசும் பக்ஷத்தில் அப்படிப் பேசி உடனே மஹான்களை மனதினால் நினைக்க வேண்டும்) என்கிறபடியே, ப்ரதிஷித்த ஸம்பாஷணத்துக்கு ப்ராயச்சித்தமுமாம், என்கிற ஸ்ரீ தேசிகனருளிய குருபரம்பரா வாக்கியங்களாலும், [illegible] (இங்கும் அங்கும் அம்மஹான்களினுடைய திருவடிகளை ரக்ஷகமாக ஆசிரியர்கள் அறிகிறார்கள்) என்று சிஷ்யக்ருத்யாதிகாரத்தில் தலைக்கட்டுகிற ச்லோகம் போன்ற மற்றும் ப்ரமாண வாக்கியங்களாலும், எளிதில் அறியக் கூடியதே யாகுமன்றோ ?

ஆகவே, இத்தால், இந்த ஐந்து தனியன்களாகிற ஐந்து மாணிக்கங்கள் சேர்ந்த, பதக்கமே, பக்தியுடையார் சித்தத்தில் சிறந்த வணிகலனாக அணிய அமையுமென்பதும், இதையணிந்த மாத்திரத்திலேயே, உலகளந்த மாணிக்கமான, எம்பெருமான் தானும் இவர்கள் சித்தத்தில் சேர்ந்து என்றும் மகிழ்ந்திருப்பனென்பதும், நிரூபணம் செய்து தெளிய அறியப்பட்டதாகிறது.

இத்தனியன்களின் போக்யதையை விரிக்கப்புகில் எழுதி மீள வொண்ணாதபடி விளங்கும். ஆகலின், ஏதோ, [illegible] அனுபவ ப்ரகாரமிருக்கும்படி இங்கு காட்டப்பட்டது. இன்னம் மற்றும் போக்யமான விரிவுகளையெல்லாம் பூர்வர்கள் வ்யாக்யானங்களை ஓதியுணர்ந்திருக்குமவர்கள் தன்பால் ஆதரவோடு பணிந்து கேட்டுணர்க மகிழ்ப்ப்ராப்தம்.

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் திருவடிகளே சரணம்.
தேசிகன் திருவடிகளே சரணம்.

திருக்குடந்தை
இளையவில்லி,
தி. ஸ்ரீநிவாஸாசாரியர் இயற்றிய
போதத் தனியன்களின் உரை
முற்றுப் பெற்றது.

ஸ்ரீ:

பொய்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பொய்கையாழ்வார் அருளிச்செய்த

முதல் திருவந்தாதி.

திருக்குடந்தை ஸ்ரீ ஆராவமுதாழ்வான்

ஸந்நிதி வீதி

ப. ஸ்ரீநிவாஸ ராகவாசாரியர் (சிரோமணி)

இயற்றிய அம்ருதவர்ஷிணீ என்னும் உரையுடன்,

திருக்குடந்தை ஸ்ரீபராங்குச பக்தஸபையாரால்


கும்பகோணம்

ஸ்ரீ ஜனார்த்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட்டில்

அச்சிடுவிக்கப்பட்டது.

௲௯௱-௩௰௬

1936.



முதலாழ்வார்கள் வைபவம்.

ஸ்ரீய: பதியான ஸர்வேச்வரன், அநாதிகர்மவச்யர்களான ஜீவாத்மாக்களை உஜ்ஜீவிக்கச்செய்ய, தம்முடைய தேவீபூஷணாயுத பரிகரங்களை இப்பூமியில் அவதரிக்கச்செய்தான். அப்படி அவதரித்தவர்களுள் மற்ற ஆழ்வார்களுக்கெல்லாம் முன்னம் த்வாபர யுகத்திலேயே அவதரித்ததால் முதலாழ்வார்களென்னும் காரணப் பெயருடைய மூவர் பொய்கை—பூதம்—பேயார் எனப்படுவர். இவர்கள் பகவதநுக்ரஹம் பெற்றபின் ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாமல் சேர்ந்தே வாழ்ந்திருந்தமையால் கோயில்களிலும், மூவரும் சேர்ந்தே அர்ச்சையாக எழுந்தருளியிருப்பர்கள். ஆதலால் இவர்களுடைய வைபவமும் ஒன்றாகச்சேர்த்து இங்கு எழுதப்படுகிறது. இவர்கள் செய்தருளிய பிரபந்தங்கள், நாலாயிரதிவ்யப்ரபந்தங்களுள் மூன்றாவது ஆயிரமாகிய இயற்பா என்னும் பகுதியில் முதலில் அமைந்திருக்கும்.

பொய்கையாழ்வார்.

"இவ்வாழ்வார் தொண்டைநாட்டில் முத்திதரும் நகரேழில் முக்கியமாம் கச்சி" என்று புகழ்பெற்ற மோக்ஷத்தைத்தரும் நகரங்களில் ஒன்றாகிய காஞ்சி நகரத்தில் திருவெஃகா என்கிற திவ்ய தேசத்தின் வடதிசையில் மிகவும் அருகாமையிலுள்ள ஓர் பொய்கையில் ஐப்பசி மாதத்தில் திருவோண நக்ஷத்திரத்தில் அவதரித்தார். இவருடைய பெருமைகளை அநுபவித்த ஆசாரியர்கள் இவரை, தேவர்களுள் உயர்ந்த புருஷோத்தமனுடைய ஆயுதங்களுள் ஒன்றாகிய பாஞ்சஜன்யம் என்கிற சங்கத்தின் அவதாரமாக நினைத்துள்ளார்கள். இவர் தாமரைப்பூவில் உதித்தபடியால், அயோநிஜர் என்கிற ஏற்றமும் பெற்றிருந்தார். இவர் பொய்கையிலே அவதாரம் செய்தபடியால் பொய்கையாழ்வாரென்றே இவருக்குப் பெயரும் வாய்ந்தது

பூதத்தாழ்வார்.

இவர் அத் தொண்டைநாட்டிலேயே திருக்கடல்மல்லையென்கிற திவ்யக்ஷேத்திரத்தில் ஒரு குருக்கத்திமலரில் ஐப்பசி மாதத்தில் அவிட்ட நக்ஷத்திரத்தில் அயோநிஜராய் அவதரித்தார். இவரை ஸர்வேச்வரனுடைய ஆயுதங்களில் ஒன்ருகிய கதாயுதத்தின் அவதாரமாக பூர்வாசாரியர்கள் வழங்குவார்கள். இவர் திருமாலுடைய கல்யாணகுணங்களையே அநுபவித்து அதனலேயே உயிர்தரித்திருந்தமையால் இவருக்கு பூதத்தாழ்வார் என்று பெயர் ஏற்பட்டது. ஸம்ஸ்கிருதத்தில் ஸூ என்கிற வினைச்சொல்லிலிருந்து பூதம் என்னும் பதம் ஏற்படுகிறது. அதற்கு இருப்பது என்று பொருளாகும். இவர் பகவத்குணங்களாலேயே உயிர்தரித்திருந்தமையால் இவர் விஷயத்தில் பூதத்தாழ்வார் என்கிற திருநாமம் பொருளுடன் விளங்கிற்று.

பேயாழ்வார்.

இவர் தொண்டைமண்டலத்தில் திருமயிலையில் (மயிலாப்பூர்) ஒரு கிணற்றிலே ஒரு செவ்வல்லிமலரில் ஐப்பசி மாதம் சதய நக்ஷத்திரத்தில் அவதாரம்செய்தார். இவரை, பஞ்சாயுதங்களில் ஒன்ருகிய நந்தகம் என்கிறவாளின் அம்சமாகச் சொல்வார்கள். இவர் பகவத்குணங்களை அனுபவித்து அதனுலுண்டான ஆநந்தத்தால் அழுதும் தொழுதும் தலையினுடாதம்தாட்டக் குதித்தும் ஆடியும் திரிந்துகொண்டு பிறர் பேயெனக் கருதும்படி வாழ்ந்திருந்தமையால் பேயாழ்வாரென்னும் பெயர்படைத்தார். புறமதங்களில் சென்றுகொண்டிருந்த திருமழிசையாழ்வாரைத் திருத்தி திருமாலின் அடியாராகச் செய்தருளினர் என்கிற ஏற்றமும் இவருக்குண்டு.

இவர்கள் ப்ரபாவம்.

இவர்கள் ஸர்வேச்வரனிடத்தில் மிகுந்த பக்தியுள்ளவர்களாய் அவனையே துதிசெய்துகொண்டு, ஒருநாள் இருந்தவிடத்தில் ஒரு நாள் இராமல் ஓடிக்கொண்டு பகவத் குணங்களையே தாரக போஷக போக்யங்களாகக்கொண்டிருந்தார்கள். இவர்கள் பாமனைப்பற்றியே

கவி பாடுவதில் மிக்க திறமையுள்ளவர்களென்று நாடனைத்தும் நன்யும். அத்துடன் ஆழ்வார்களுள் தலைவராகிய நம்மாழ்வாரும் "இன் கவிபாடும் பரமகவிகள்" என்றும் "செஞ்சொற்கவிகள்" என்றும் இவர்கள் பாடிய பாசுரங்களைப் புகழ்ந்து பேசியிருக்கிறார். தமிழ் நன்னூல் துறைகள் அஞ்சுக்கிலக்கியமான பாடல்களைப்பணிக்கும் பரகாலன் என்கிற திருமங்கையாழ்வாரும் செந்தமிழ் பாடுவார் என்று இவர்களை பரக்கப்பேசியுள்ளார். இங்ஙனம் பெருமைவாய்ந்த இவ் வாழ்வார்கள் கூறை சோறிவை வேண்டித்திரியும் ஸம்ஸாரிகளை பேய்களாகக் கருதி, அவர்கள் நடையாடுகிற நகரங்களையும்விட்டு காடுகளிலேயே பகவத்தியாநம் செய்துகொண்டு வாசஞ்செய்தார்கள்.

இங்ஙனம் இவர்கள் தனித்தனியே சென்றுகொண்டிருக்கும் பொழுது, பொய்கையாழ்வார் ஒருநாள் மாலையில் பெருமழையால் அடிபட்டு திருக்கோவலூர் என்கிற ஒரு நடுநாட்டுத் திருப்பதியில் ம்ருகண்டுமுனிவரின் வீட்டின் ரேழியில் ஒதுங்கி அங்குள்ள திண்ணையில் சயனித்திருந்தார். பிறகு தற்செயலாக பூதத்தாழ்வாரும் அம்மழைக்கு நடுங்கி அவ்விடமே வந்துசேர பொய்கையாழ்வார் "ஒருவர் படுக்குமிடம் இருவர் உட்காரலாமென்று விண்ணப்பம் செய்ய இருவருமாய் உட்கார்ந்திருந்தார்கள். உடனே பேயாழ்வாரும் அவ்விடம் வந்துசேர இருவரும் "இருவர் உட்காருமிடம் மூவர் நிற்கலாமென்று" சொல்ல மூவருமாய் நின்றுகொண்டிருந்தார்கள். அப்பொழுது இம்மூவருக்கும் அநுக்ரஹம்செய்து இவர்களால் உலகங்களை உஜ்ஜீவிக்கச்செய்யத் திருவுள்ளம்பற்றிய திருமால் பெரிய வடிவுடன் அம்மூவரையும் நெருக்க அவர்களும் இது வரையில் இல்லாத நெருக்கத்திற்குக் காரணம் என்னவென்று ஆலோசித்துப்பார்க்க பொய்கையாழ்வார் பூமியாகிய அகலில் ஸமுத்ரஜலத்தை நெய்யாகக்கொண்டு ஸூரியனாகிய தீபத்தை ஏற்றினார். பூதத்தாழ்வார் அன்பாகிற அகலில் ஆர்வம் என்றும் நெய்யை விட்டு ஞானமாகிற விளக்கை ஏற்றினார். அவ்விரண்டு ஒளிகளைக் கொண்டு பேயாழ்வார் பகவானை ஸாக்ஷாத்கரித்தார். தான் ஸாக்ஷாத்கரித்தமையை "திருக்கண்டேன்" என்ற பாசுரம் முதலாகப் பாடியருளினார்.

முதல் திருவந்தாதி

அவைகளுள் முதல்திருவந்தாதி என்பது பொய்கையாழ்வார் "வையந்தகளியா" என்று தொடங்கி பாடியருளின நூறு பாசுரங்களாகும். இவைகள் அந்தாதியாகப் பாடப்பட்டபடியால், இப்பிரபந்தத்திற்கு திருவந்தாதியென்றுபெயர், முந்திய பாசுரத்தின் கடைசியிலுள்ள பாதத்தையோ, பதத்தையோ, அசைச்சொல்லையோ, எழுத்தையோ, சீரையோ, மேல் பாசுரத்திற்கு ஆரம்பமாக வைத்துப் பாடியபாடல்களுக்கு அந்தாதியெனப்பெயர். நூறு வெண்பாக்களால் பாடிய பிரபந்தமாதலால் இதற்கு நூற்றந்தாதியெனப்பெயர். ஆழ்வார்கள் பதின்மருள் முந்தியவர்களான மூவருள்ளும் இவர் முதல்வராதலாலும், முதன்மையாக பாசுரங்களைப் பாடியதாலும், இப் பொய்கையாழ்வார் பிரபந்தத்திற்கு முதல் திருவந்தாதியெனப்பெயர்.



ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸரோயோக்யவதார பாஞ்சஜந்ய ஸூரிணே நம:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

முதல் திருவந்தாதி

தனியன் வ்யாக்யானம்.

[முதலியாண்டான் அருளிச் செய்தது.]

(இருவிகற்ப நேரிசைவெண்பா)

கைதைசேர் பூம்பொழில்சூழ் கச்சிநகர் வந்துதித்த
பொய்கைப் பிரான் கவிஞர் போரேறு—வையத்
தடியவர்கள் வாழ வருந்தமிழ் நூற்றந்தாதி
படிவிளங்கச் செய்தான் பரிந்து:

பதவுரை

கைதை	தாழைகள்	வையத்து	பூமியிலுள்ள
சேர்	சேர்ந்திருக்கிற	அடியவர்கள்	பக்தர்கள்
பூம்பொழில்	அழகானசோலைகளால்	வாழ	உஜ்ஜீவிக்கும்படியாக
சூழ்	(சுற்றிலும்) சூழப்பட்ட	அருந்தமிழ்	அருமையான தமிழ் சொற்களான
கச்சிநகர்	காஞ்சீநகரத்திலே	நூற்றந்தாதி	அந்தாதியான நூறு பாசுரங்களை
வந்துதித்த	அவதாரம்செய்த	பரிந்து	கிருபைகூர்ந்து
கவிஞர்போரேறு	கவிகளுள் உயர்ந்தவரான	படி	பூமியில்
பொய்கைப்பிரான்	உபகாரகரானபொய்கையாழ்வார்	விளங்கச் செய்தான்	பிரகாசிக்கச்செய்தான்.

கைதைசேர்:—முதல்பாதத்திலே இவ்வாழ்வாருடைய பிறப்பின்மேன்மை சொல்லப்படுகிறது. நீர்ப்பாங்கான நிலத்தில்விளை

யக்கூடிய தாழைகளால் அமைக்கப்பட்ட வேலிகளால்காவலுள்ள சோலைகள் நிறைந்த காஞ்சிநகரம். "அம்பூம்தேனிளம் சோலையப்பால்" என்று நம்மாழ்வார் உகந்தருளியதேசம். இப்படி சிரமஹரமான தேசத்திலே வேகவதியாற்றின் கரையிலுள்ள பொய்கையில் ஐப்பசி மாதத்திருவோணத்து நாளில் ஸ்ரிய:பதியின் கொப்பூழின் எழுகமலப்பூவுதித்த பிரமனைப்போல் பொற்றாமரைமலரில் அவதரித்தார்.

வந்துதித்த:—வெளியிருளை நீக்க சூரியோதயம்போல் "வருத்தும்புறவிருள்மாய்த்தவெம்பொய்கைப்பிரான்" என்றபடி அக்ஞானமாகிற உள்ளிருளைப்போக்கவுதயமானார்.

கவிஞர்போரேறு:—ஆழ்வார்கள் பதின்மருள்ளும் முதலாழ்வார்கள் முதல்வர்கள்-அம்மூவருள்ளும், இவர் முதல்வாதலால் கவிகளுள் உயர்ந்தவர். மற்றவர்களும் செந்தமிழ் பாடுவாரென்றும் இன்கவிபாடும் பரமகவிகளென்றும் கொண்டாடும்படி இவர் பிரபாவமிருப்பது.

வையத்தடியவர்கள்வாழ:—ஸ்ரீ வைஷ்ணவர்கள் "நின்தாளிணைக்கீழ் வாழ்ச்சி" என்கிறபடி எம்பெருமான் திருவடிகளில் நல்லடிமைசெய்வதாகிற பரமபுருஷார்த்தத்தைப் பெற்று வாழும்படி உபகரித்தார்.

அருந்தமிழ்:—யாவரும் அப்யஸிக்கக்கூடிய பாஷையில் அமைந்திருப்பினும்-அருமையாயும் அர்த்தங்களை யாலோசிக்கும்பொழுது நுண்ணறிவாலல்லது உணரமுடியாத சீர்மையுடன் கூடியது. எளிதில் கற்கும்படி நூறுபாசுரங்கள் அடங்கியது.

படிவிளங்க:—பகவத்ஞானம் பிறப்பதரிதான இந்த ப்ரக்ருதியிலே, கன்றுக்குச் சுரக்கும் சுரபியைப்போல் தயையினால் தூண்டப்பட்டவராய் நூறுபாசுரங்களைப் பாடினார்-படிவிளங்க-தான் இடைகழியிலே பகவானைக் கண்டனுபவித்தபடியே பாடியருளினாரென்றும் பொருள் கூறுவதுண்டு.

காஞ்சீ என்கிற வடசொல் கச்சி என்றும் கேதகீஎன்னும் சொல் கைதை என்றும் திரிந்தனவாகத் தமிழர் கூறுவார்கள்.

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் தூப்புல்
திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

பொய்கையாழ்வார் அருளிச்செய்த-

முதல் திருவந்தாதி.

வையந்தகளியா வார்கடலே நெய்யாக
வெய்யகதிரோன் விளக்காக—செய்ய
சுடராழியானடிக்கே சூட்டினேன் சொன்மாலை
இடராழி நீங்குகவேயென்று. (1)

பதவுரை

வையம்	இப்பூமியானது	சுடர்	தேஜஸ்ஸையுடைய
தகளியா	அகலாகவும்		
வார்	பெருகிக்கொண்டிருக்கிற	ஆழியான்	சக்ராயுதத்தைத் தரித்த ஸ்ரீமந்நாராயணனுடைய
கடல்	ஸமுத்திரமானது		
நெய்யாக	நெய்யாகவும்	அடிக்கே	திருவடிகளிலே
வெய்ய	உஷ்ணமான		
கதிரோன்	கிரணங்களையுடைய சூரியன்	இடராழி	துக்கங்களாகிற ஸமுத்ரம்
		நீங்குக என்று	விலகவேண்டுமென்று (கருதி)
விளக்காக	தீபமாகவும் (இங்ஙனம் நினைத்து,	சொன்மாலை	சொற்களாகிற மாலையை
செய்ய	சிகப்பு நிறமுள்ள	சூட்டினேன்	அர்ப்பணம் செய்தேன்.

வ்யாக்யானம்

இப்பொய்கையாழ்வார் திருக்கோவலூரில் ம்ருகண்டு முனிவரின் திருமாளிகையின் இடைகழியில்பூதத்தார் பேயார்என்ற இருவருடன் நின்று கொண்டிருந்தார். அவ்வளவில் நக்ஷத்ராவ

ஈராஜ்ஞீ என்று கோஷித்துக்கொண்டிருக்கிற திருமகளுடன் அவள் குற்றங் கண்டுரைத்தாலும் என்னடியாராது செய்யார் என்கிற ஸர்வேச்வரன் அங்கு வந்து அவர்களைநெருக்க, அவர்களும் ஜ்ஞாநதீபேந பாஸ்வதா என்று ஞானக்கண்களால் காண அங்கு நெருக்கிய புருடனை ஸர்வேச்வரனென்று உணர்ந்தார்கள். அப்பரம புருஷனை அநுபவித்து அவனிடமுள்ள பக்தியால் அனைத்துலகும் அவனை அறிந்து வாழும்படி பாசுரங்களை அருளிச்செய்தார்கள். அவர்களுள் இவ்வாழ்வார் "வையந்தகளியா" என்று தொடங்கி நூறுபாசுரங்களை யருளிச்செய்தார்.

வையந்தகளியா:-இப்பாசுரத்தால்தான் எம்பெருமானைக்கண்ட ப்ரகாரத்தைச் சொல்லுகிறார். இப்பூமியை அகலாகவும் ஸமுத்ரத்தை நெய்யாகவும் ஸூரியனை தீபமாகவும் நினைத்து இப்படி ஒரு விலக்ஷணமான விளக்கேற்றி ஸ்ரீய:பதியான நாராயணனைக் கண்டு கொண்டேனென்கிறார். இப்பூமி ஸூரியன் கடல் இவைகளைக் கொண்டு ஈசனை அநுமானம் என்கிற பிரமாணத்தின்படி யாவரும் அறியலாமென்று பொருள். வேதங்கள், மௌனிவிளங்க வியாசன் விரித்த நன்னூலில் வேதங்களாகிற சாஸ்திரத்தைக்கொண்டு பகவானை அறியவேண்டுமென்றும், அநுமானத்தால் காண்பது பிசகென்றும் அங்ஙனம் காண்கிற நியாய மதஸ்தர்களைத் தூஷித்தும் பேசியிருப்பதால் இங்கு இவர் அநுமானத்தால் கண்டேனென்பது பொருந்துமோவென்னில், ந்யாயாநுக்ருஹீதஸ்ய வாக்யஸ்ய ஸ்வார்த்த நிர்ணாயகத்வாத் என்றபடி யுக்திகளோடுகூடின வேதவாக்யந்தான் இப்பொருள் இன்னது, இவ்வகைப்பட்டது, என்று நிர்மாணம் செய்துகொடுக்கும் என்று சொல்லியிருப்பதாலும் வேதவாக்யங்களை கைக்கொள்ளாமல் கேவலம் அநுமானத்தால் ஈசனைப் பார்க்கிறார்கள் என்கிற காரணம் பற்றியே நியாய மதஸ்தர்களை தூஷித்திருப்பதாலும் இவர் இங்ஙனம் கண்டதாகச் சொல்வது வேதத்திற்கு உதவியாக அநுமானத்தை கூட்டிக்கொண்டபடியேயல்லது ஸ்வதந்திரமாகக் கைக்கொண்டதல்ல. உலகத்தில் ஒரு வீடு—குடம்—வஸ்திரம் முதலான சில வஸ்துக்களைக் கண்டால் இவை சில அவயவங்களோடு கூடியிருக்கின்றன. ஆதலால் இவை ஒருவனால் செய்யப்

பட்டிருக்கவேணும் என்றறிவதுபோல், இப்பூமி ஸூரியன் கடல் முதலிய வஸ்துக்களைப் பார்த்தால் இவை ஞானசக்திகள் வாய்ந்த ஒருவனால் செய்யப்பட்டனவென்றறியலாமென்கிறார். இப்பூமியானது காடுகள்—வீடுகள்—மலைகள் முதலிய விசித்ராவயவங்களுடன் காணப்படுவதால் இதைக் கண்டதும் புருஷோத்தமனால் இது ஸிருஷ்டிக்கப்பட்டதேயென்றுணரலாமென்கிறார்.

வார்கடலே நெய்யாக:—எப்பொழுதும் பரிபூர்ணமாயிருக்கும் ஸமுத்திரம் எண்ணற்ற நதிகளால் இரவும் பகலுமாய் நிரப்பப்பட்டும்—நிரையாததாலும் பூமி மட்டத்திற்குமேல் உயர்ந்திருந்தும் பூமியை விழுங்காததாலும், ஒருவனால் செய்யப்பட்டு அவனுடைய ஆக்ஞையில் அமர்ந்திருக்கிறதென்று நன்குவிளங்குகிறது. ஆதலால் கடல் என்ற காரணத்தைக்கொண்டு ஈசன் உளனென்று அறியலாம். இவ்வர்த்தத்தை ஐவொாஊயஸாமா ஸஹிவூதிஃ என்கிற சுலோகத்திலும் காணலாம்.

வெய்யகதிரோன் :—ஸூர்யன் ஸ்வதந்திரனாகவிருக்கும்பக்ஷத்தில், தன் மார்க்கத்தில் சென்றுகொண்டிருக்கும் நிலைமையில் எக்காலத்திலாவது முப்பதுநாழிகைப் பொழுதில் ஒரு நாழிகை ஏறக்குறையச் செல்லலாமே. அங்ஙனமின்றி ஒரேவண்ணமாக பகலைச் செய்துகொண்டிருப்பதால் 'ஹீஷொஜெதி ஸூயஃ' என்றபடி ஒருவனிடத்தினின்றும் பயத்தினால் இங்ஙனம் நடந்துகொள்கிறானென்று தோற்றுவதால், ஸூர்யனைக்கொண்டு ஈச்வரனைத் தெரிந்துகொள்ளலாம்.

உலகத்தில் மறைந்திருக்கும் ஒரு பொருளை விளக்கேற்றிக் காண்பதுபோல், ஆழ்வார், பூமியாகிற அகலில் கடலான நெய்யைவிட்டு ஸூரியனாகிற விளக்கேற்றி ஸ்ரீய:பதியாகிற பரம்பொருளைக் கண்டாரென்பது மேம்பாடான பொருள். இப்படி பரமபுருஷனைக் கண்டபின்பு அவனுடைய திருவடிகளில் கைங்கர்யமே நமக்கு உத்தேச்யமென்று பின்னடிகளால் காட்டுகிறார்.

செய்ய சுடர்:—சிவந்த தேஜோநிதியான திருவாழியைக் கையிலேந்தினவன். "சக்கரத்தண்ணலேயென்று தாழ்ந்து" என்றபடி

இவர்கள் முற்பட திவ்யாயுதங்களில் கண்வைப்பர்கள். "ஆழியான்" என்பதால் "நிர்விசேஷம் பிருஹ்ம" அதாவது ஈசன் குணமற்றவன் என்று சொல்லும் வாதிகளை நிரஸிக்கிறார்.

அடிக்கே:—அடிமையானவன் இறங்கும் துறை திருவடிகளாதலால் அவைகளை அநுபவிக்கிறார்.

சூட்டினேன்:—வாசிகம், காயிகம், மானஸிகம் என்று மூவகைப்பட்ட கைங்கர்யங்களுள் வாசிககைங்கரியத்தைச் செய்து பிழைக்கிறேனென்கிறார். "யதோவாசோ நிவர்த்தந்தே" என்று வேதங்கள் கைவாங்கின வஸ்துவைத்தான் பேசத்தொடங்கினார்.

இடராழி:—துன்பக்கடலைத் துலைப்பது பரமப்ரயோஜனமென்கிறார். இன்னாருடைய துக்கங்கள் என்று சொல்லாததால்தான் இவ்வளவுகாலம் பரமனைப் புகழாததால் வந்த துன்பம் துலைவதற்கு என்றும் சொல்லலாம். "மருளற்ற தேசிகர் வானுகப்பாலிந்தவையமெல்லாம் இருளற்றிறைவனிணையடி பூண்டிடவெண்ணுதலால்" என்பதற்கிணங்க உலகத்தார் படும் துயரை விலக்கி இறைவன் அடிகளை அவர்கள் அடையவேண்டும், என்று கருத்தையுடையவர்கள் ஆசார்யர்கள் என்பதால், நம்போன்ற ஸம்ஸாரிகளுடைய துயரங்களை விலக்கத்தான் பாடினார் என்றும் பொருளாம்.

என்று கடல் கடைந்த தெவ்வுலகம் நீரேற்றது
ஒன்று மதனை யுணரேன் தான்—அன்ற
தடைத்துடைத்துக் கண்படுத்தவாழி—இது நீ
படைத்திடந்துண்டுமிழ்ந்த பார். (2)

பதவுரை

கடல்	ஸமுத்திரத்தை	நீரேற்றது	(மஹாபலியிடமிருந்து) தீர்த்தத்தைப்பெற்றுக்கொண்டது
கடைந்தது	(மந்தரபர்வதத்தால்) கடைந்தது		
என்று	என்றைத்தினமோ	எவ்வுலகம்	எந்தவுலகத்திற்காகவோ

அதனை	அக்காரியங்களை	கண்படுத்த	நீ உறங்கின
ஒன்றும்	சிறிதுகூட	ஆழி	ஸமுத்திரம்
நான்	யான்	இது	இப்பூமியோ
உணரேன்	தெரிந்துகொள்ளமாட்டேன்	நீ	தேவரீர்
அது	அக்கடல்	படைத்து	உண்டுபண்ணி
அன்று	அப்பொழுது	இடந்து	(வராஹாவதாரத்திலே) உயரே தூக்கி
அடைத்து	(மலைகளால்) அணைகட்டப்பட்டு	உண்டு	அமுதுசெய்து
உடைத்து	(ராவணனைக் கொன்று மீண்டு வரும்போது அதை அழித்து	உமிழ்ந்த	பிறகுவெளிப்படுத்தின
		பார்	பூமி.

வ்யா—என்று— பகவத் விஷயத்தை இழந்த கீழ் நாள்களுக்கு வருந்துகிறார். கடல் கடைந்தபொழுதும் மஹாபலியினிடம் வாமனனாய் வந்து யாசித்த பொழுதும் நான் எங்கிருந்தேனோ? அவ்விஷயங்கள் ஒன்றையும் அறியமாட்டேன். தன் ஸங்கல்பத்தினாலேயே தேவர்களுக்கு சாவாமலிருப்பதாகிற வரத்தைத் தந்திட வல்லவனாயினும், இப்பூமி தன்னுடையதா யிருக்கச் செய்தேயும், கடல் கடைந்ததும் மண் இரந்ததும் ஜீவராசிகளுடைய உஜ்ஜீவனார்த்தமாதலால் அக்காலங்களில் நான் இழந்தேனே என்கிறார். ஈசனை கடலைக் கொண்டும் சூரியனைக்கொண்டும் அநுமானம் செய்து காணவேண்டிய நிர்ப்பந்தமில்லை. இப்பூமியைப்பார்த்தவுடனேயே இப்பூமியே ஈசனைக் காட்டுகிறதே என்கிறார்; "வாமனன் மண்ணிதுவென்று நம்மாழ்வாரும் இவ்வர்த்தத்தை விளக்குகிறார்—அதாவது இப்பூமியைக் கண்டவுடன் அவன் இதை உண்டுபண்ணினதும் வராஹாவதாரத்தில் தன் கோரப் பற்களால் தூக்கியதும் பிரளயாபத்தில் சாப்பிட்டதும் பிறகு உமிழ்ந்ததுவும் ஞாபகத்திற்கு வந்து அவ்வீச்வரன் நேரில் தோன்றுவதுபோல் இருக்கிறது. கடலைக் கண்டதும், "அவெளவ ஸஸஜ-ூாஊள" என்கிறபடி அவன் ஸிருஷ்டி செய்ததுவும் அணை கட்டியதும் அதை அழித்ததுவும் அக்கடலில் அவன் கண்வளருவதும் அறிவிற்கிலக்காகிறது. இச்செய்கைளால்

இவ்வுலகங்களுக்கெல்லாம் உடையவன் ஸ்ரீய: பதியான நாராயண ன்தான் என்று விளங்குகிறது. பூமியானது கண்ணுக்கெதிரே யிருப்பதால் அதை, இது என்கிற பதத்தாலும், கடல் வெகுதூரத்தி லிருப்பதால் அது என்கிற பதத்தாலும் சொல்லுகிறார். கடல் கடைந்த கதையால் அப்பொழுது கைவாங்கின தேவர்களைப்பரதே வதைகளாகக்கருத வேண்டாமென்று உபதேசிக்கிறார்

"படைத்திடந்து" என்கிற பதங்களால் இப்பிரபஞ்சத்திற்கு ஸ்ரீய:பதியே ஸ்வாமி என்கிறார்—அல்லாததேவர்கள் இப்பிரபஞ்சத் திற்கு உரிய சேஷியாயிருந்தால் கீழ்ச்சொல்லிய காரியங்களுள் ஏதாவதொன்றைச் செய்திருக்க மாட்டார்களோ? ஆதலால் பூமி யை படைத்ததிலும் சத்ருவான ஹிரண்யாக்ஷனிடமிருந்து மீட்டுக் கொண்டதிலும் பிரளயகாலத்தில் தன்வயிற்றில் வைத்துக் காப்பாற் யதிலும் பிறகு வெளிநாடு காணவுமிழ்ந்ததிலும் இதர தேவதைகளுக்கு சிறிதும் ஸம்பந்தமில்லையே ?

எங்ஙனம் அவர்களை நாம் போற்றுவது. ஆதலால் நமக்கு வகுத்த சேஷியான நாரணனையே பாடுவோமென்று—திரண்ட பொருள்

பாரளவுமோரடி வைத் தோரடியும் பாருடுத்த
நீரளவும் செல்ல நிமிர்ந்ததே—சூருருவின்
பேயளவு கண்ட பெருமான்? அறிகிலேன்
நீயளவு கண்ட நெறி. (3)

பதவுரை

ஓரடி	ஒரு திருவடியானது	நீரளவும்	ஆவரண ஜலபர்யந்தமாக
பாரளவும்	பூமியடங்கலும்	செல்ல	போகும்படி
வைத்து	ஊன்றி	நிமிர்ந்ததே	உயரேவளர்ந்ததே
ஓரடியும்	மற்றோர் திருவடியும்		
பார்	பூமியை	சூர்உருவின்	தெய்வப்பெண்ணான யசோதையின் வடிவத்தைக்கொண்ட
உடுத்த	சூழ்ந்துகொண்டிருக்கிற		

பேய்	பேயான பூதனை யினுடைய	நீ	தேவரீர்
அளவு	ஆயுளின் எல்லை யை	அளவுகண்ட	எல்லையாகக் காட்டிய
கண்ட	அறிந்த	நெறி	நல்மார்க்கத்தை
பெருமான்	ஸ்வாமியே	அறிகிலேன்	(நான்) உணரவில்லை

வியா:—பகவானுடைய திவ்ய சரிதங்கள் பலவற்றுள் உலகளந்த வ்ருத்தாந்தத்திலே ஆழ்வார்கள் மிகுதியாக ஈடுபடுவார்கள். அதிலும் கீழ் பாசுரத்தில் "எவ்வுலகம் நீரேற்றது" என்று திரிவிக்ரமாவதாரத்தை ஸ்மரித்த படியால் அதை மீறிச்செல்லமுடியாமல் அதில் கால்தாழ்கிறார். இப்பாசுரத்தால் வாமனனுகவந்து பூமியை யளந்தது எங்ஙனம் பொருந்துமென்று எம்பெருமானை வினவுகிறார்.

பாரளவும்:—பூமியடங்கலும் ஒரு திருவடியைவைத்து மற்றொரு திருவடியால் பூமிக்கு உடையாகச் சொல்லப்படுகிற ஆவரண ஜலத்தளவும் சென்று நீர் நடந்தது அளந்ததாகச் சொல்லமுடியுமோ? அதாவது உலகத்தில் ஒருவன் ஒரு வஸ்துவை அளக்க வேணுமென்றால்தான் ஓரிடத்தில் நின்றுகொண்டு நின்றவிடம் நீங்கிய பிரதேசத்தில் மேல் அடிவைத்துச் சென்றால் அளந்தான் என்று வியவஹரிப்பார்கள். நீர் அளந்ததோ வென்றால் ஒரு திருவடியை பூமியில்வைத்து மற்றோர் திருவடியால் ஆவரண ஜலத்தளவும் சென்றமாத்திரமே. ஆகவே நீர் நிற்பதற்கே விடம் போதாமலிருந்த நிலையில் இப்பிரபஞ்சங்களை அளந்தீரென்னும் வார்த்தை எங்ஙனே பொருந்தும். இவ்வர்த்தத்தை "கழறலமொன்றே நிலமுழுதாயிற்று, ஒரு கழல்போய் நிழல் தர வெல்லாவிசும்பும் நிறைந்தது, நீண்ட வட்டத்தழறலர் ஞானச்சுடர்விளக்காயுயர்ந்தோரையில்லாவழறலர் தாமரைக் கண்ணன், என்னோவிங்களக்கின்றதே." என்ற நம்மாழ்வார் பாசுரத்திலும் காணலாம். சூர்என்றும் அணங்கென்றும் தெய்வப்பெண்ணின் பெயர். தெய்வப் பெண்ணுகிற பூதனையை என்றபடி, பேயான பூதனையை தேவஜாதியில் சேர்ப்பதும் பொருந்தும். பலவகைப்பட்ட தேவ ஜாதியில் பிசாசத்தையும் ஒன்றாக இணைத்திருப்பது பிரமாணங்களில் நன்கு விளங்கும். அல்

லது "தெய்வ நங்கை யசோதை" என்ற குலசேகரன் வார்த்தைப் படி "சூர்" என்ற பதத்திற்கு அசோதை என்று பொருள் சொல்லி, அவளுடைய சரீரம்போன்ற சரீரத்தை எடுத்துவந்த பூதனை என்றும் சொல்லலாம். அப்பூதனையின் ஆயுளை முடித்தபெருமானே என்று கூப்பிடுகிறார். "பெற்றதாய்போல் வந்த பேய்ச்சி பெருமுலையூடு உயிரை, வற்ற வாங்கி யுண்டவாயான் வதரிவணங்குதுமே" என்கிறபடி அவள் எண்ணிவந்த மரணம் அவளோடே போகும்படி அவளை முடித்தவனே. பெருமான் என்பது இங்கு ஸம்போதனம். பெருமானேயென்று கூப்பிட்டார் என்று பொருள்.

நீ யளவுகண்ட:—நீ செய்த ஒவ்வொரு செயல்களையும் என்னால்கண்டு அறிய முடியவில்லை. அதாவது உன்னுடைய அவதார காலங்களில் நான் உன் தன்மையை உணராது உன்னை விட்டிருந்தேன். ஆதலால், இப்பூமியில் நீ அடி வைத்ததுபோல் என் தலையில் உன் திருவடிகளை வைத்து, பூதனையைப் போக்கியதுபோல், என் விரோதிகளையும் போக்கவேண்டுமென்று உட்கருத்து. பாரளவும் அளவு என்கிற பதத்தால் ஒரு திருவடியை இப்பூமியில் நீயே நிருத்தினையென்று தோன்றுகிறது. ஒருவன், ஒரு உயர்ந்த குதிரையின்மேல் ஏறிக்கொண்டு வெகு வேகமாகச் செல்லுங்காலத்தில், நடுவில் தற்செயலாக எதிர்ப்பட்ட ஒரு நண்பனோடு பேசுவதானால் தன் குதிரையின் கடிவாளத்தை வெட்டிக் குதிரையை நிறுத்துவதுபோல, நீண்டு வளருகிற திருவடிகளை எங்களுக்காகப் பாரளவும் நிறுத்தினாய். இது ஆச்ரிதவாத்ஸல்யத்தின் பெருமையாகும்.

நெறிவாசல் தானேயாய் நின்றானை யைந்து
பொறிவாசல் போர்க்கதவஞ் சாத்தி—அறிவானாம்
ஆலமர நீழலறம் நால்வர்க்கன் றுரைத்த
ஆலமமர் கண்டத் தரன்.

ஆலமாநீழல்	ஓர் ஆலமரத்தின் சாயையில்	அன்று	அப்பொழுது
அறம்	தர்மத்தை	உரைத்த	உபதேசம் செய்த
நால்வர்க்கு	நான்குபேர்களுக்கு	ஆலம்	விஷம்
		அமர்	பொருந்திய
		கண்டத்து	கழுத்தையுடைய

அரன்	பரமசிவன்	சாத்தி	அடைத்து
ஐந்து	ஐந்து எண்ணிக் கையுள்ள	நெறிவாசல் தானேயாய்	உபாயோபேயம் இவ்விரண்டுமாக
பொறி	இந்திரியங்களினுடைய	நின்றானை	இருக்கிற பரம புருஷனை
வாசல்	மார்க்கத்திலேயுள்ள	அறிவானும்	தெரிந்துகொண் டிருக்கிறானும்.
போர்க்கதவம்	நம்மோடுயுத்தம்புரிகிற கதவை		

அறிகிலேனென்று கீழ்ப்பாசுரத்தில் மொழிந் தார். நீர் அறியாவிடில் ஞானத்தில் உயர்ந்தவனான பரமசிவன் உணர்ந்திலனோ? அவன் மாமுனிவர்களுக்குப் பரம்பொருளை உபதேசிக்கவில்லையோ? என்று சிலர் வினவ, அதற்குப் பதில் உரைக்கிறார். ஈச்வரன், நாங்கள் மழையினால் அடிபட்டு ஒதுங்கின விடத்தில், வந்து நெருக்கி அருள்புரிந்தான், அவன் அருளால் அறிவு பெற்ற நாங்களே உணரவில்லையென்றால், தான் தபசு செய்து தபசினால் பெற்ற ஞானத்தை யுடையவன் எங்ஙனம் உள்ளபடி அறிந்திருப்பன். எவ்வண்ணம் தான் உபதேசிக்கக்கூடும்? இது ஏமாற்றமேயன்றி வேறல்லவென்று பரிஹஸிக்கிறார்.

நெறிவாசல்:—நெறி உபாயமான மார்க்கம். அதாவது மோக்ஷத்தையடைய நாராயணனே ஸாதனமாக இருக்கிறானென்று பொருள். நாம் பக்தி ப்ரபத்திகளைச் செய்தாலும் இது மோக்ஷத்திற்கு விலையாக ஆகாதபடியால், அவன் கிருபையால் நமக்கு முக்தியைத் தருகிறானென்று பொருள். "நெறி"யென்பதற்கு உபாயமென்றும், "வாசல்" என்பதற்கு உபேயமென்றும் அர்த்தம் கொள்க. நம்மை மோக்ஷத்திற்கு அடைவிக்கிறவனும் ஈச்வரன்; அடையப்படுகிறவனும் அவனே. இப்படி, இருவகையான ஈச்வரனே அனுக்ரஹிக்க நான் அறியாவிடில் அரன் எங்ஙனம் அறிவான்? முதலில் இந்திரியங்களை அடக்குவதே அவனால் அரிது என்கிறார்.

ஐந்துபொறிவாசல் செவி, வாய், கண், மூக்கு, உடல் என்கிற ஐந்து இந்திரிய வாசல்கள். மிகவும் சிரமப்பட்டு ஒரு வாசற்கதவையடைத்தால், மற்றொரு வாசற்கதவு திறந்துகொள்கிறது. ஐந்து கதவுகளையும் அடைப்பது மிகவும் அரிது. அதுவுமல்லாது, "போர்க்கத

வம்" கதவுகளை மூட முயலும்பொழுதே அவை நம்மை அறையவரு கின்றன. இவ்விதமான ஐந்து கதவுகளை எப்படிச் சாத்தமுடியும்? கதவுகளையடைப்பதற்கு வேண்டிய கருவியே அரனிடத்தில் இல்லை யென்கிறார். ஆலமமர்கண்டத்தரன் விஷத்தை உண்டவன். தாமஸ குணத்திற்கு உறுதியான உணவை அருந்தினவன். ஞானத்தா லன்றோ கதவைச் சாத்தவேண்டும். ஸத்வ குணத்தினாலன்றோ ஞானம் ஏற்படுமென்று கீதாசார்யன் வார்த்தை. ஸத்வகுணம் உண்டாவதற்கு ஆகாரமுமில்லை, செயலுமில்லையென்கிறார். இந்திரி யங்கள் புறம்பே செல்வதை நிறுத்தவேணுமென்றால் ஈச்வரனு டைய குணங்கள் முதலில் நன்றாகப்பதிந்தாலன்றி முடியாது. ஆதலால், முதலில் இந்திரிய நிக்ரஹமே செய்யாமல் பிடிவாதமாகிற தபஸைச் செய்து, அதனால் வந்த ஞானத்தால் எப்படி அறிவான் என்று பொருள். இப்படித் தன்னளவிலும் நிற்காமல், உபதேசிக் கவும் தொடங்கினான். அதிலும் ஸூக்ஷ்மதரிசிகளான ரிஷிகளுக் கும் உபதேசிக்கத் தொடங்கினான். அதிலும், நால்வர்க்கு உபதே சிக்க ஆரம்பித்தான். இது என்ன வீண் பெருமை என்கிறார். ஆலமரநீழல் தனக்கு பகவத் ஸம்பந்தமுண்டாவதற்கு முன்ன மேயே சிஷ்யர்களைத் தேடுகிறார். அதாவது, அந்த ஆலமரநிழல் தான் தபஸ் செய்த இடமேயாகும். அங்கிருந்துகொண்டே உப தேசித்தாரென்றால், தான் கண்டு அறிவதற்கு முன்னமேயே சிஷ்யர் களைத் தேடினார் என்பதாம். ப்ரஹதாரண்யக உபநிஷத்தில் ஸர்வஜ்ஞ னை அஜாதசத்ரு என்பவனுக்கு ஈச்வரனைப் பற்றிய ஞானமில்லாத பாலாகியென்பவர் உபதேசித்தாற்போல் விடிந்தது. ஒரு கால விசேஷத்திலே, ருத்ரன் ஒரு ஆலமரத்தின் கீழே அகஸ்தியர், புலஸ்தியர், மார்க்கண்டேயர், தக்ஷர், என்கிற நால்வர்களுக்கு பிரம்ஹத்தை உபதேசித்தானென்கிற வரலாறு இங்கு அறிய வேண்டியது. அறிவானும் என்பதால் அநாதரவு தோற்றுகிறது.

அரன் நாரணன் நாமம் ஆன்விடைபுள்ளூர்தி
உரை நூல் மறையுறையுங் கோயில்—வரை நீர்
கருமமழிப்பளிப்புக் கையதுவேல் நேமி
உருவமெரிகார் மேனி யொன்று. ௫

அரன்	ஹரன் என்று
நாமம்	ஒருவன் பெயர்
நாரணன்	நாராயணனென்று மற்றொருவனுக்குப் பெயர்
ஆன்விடை	ஞானசூன்யமான வ்ருஷபமானது
ஊர்தி	ஒருவனுக்குவாகனம்
புள்	பக்ஷியானது
ஊர்தி	மற்றொருவன் ஏறுகிறவாகனம்
நூல்	ஆகமம்
உரை	(ஒருவன் விஷயத்தில்)ப்ரமாணமாகிறது
மறை	வேதம்
உரை	மற்றொருவனுக்கு பிரமாணம்
வரை	(கைலாஸமென்கிற) மலையானது
உறையும் கோயில்	ஒருவன் வாசம்செய்யுமிடம்
நீர்	ஸமுத்ரமாகிற ஜலமானது
உறையும் கோயில்	(மற்றொருவன்) வாசம்செய்யுமிடம்
அழிப்பு	ஸம்ஹாரமானது
கருமம்.	ஒருவனுக்குவேலை
அளிப்பு	க்ருபைபுரிவது(அதாவதுகாப்பது)
கருமம்	மற்றொருவனுடையவேலை
வேல்	வேலாயுதமானது
கையது	ஒருவன் கையில் இருக்கும்ஆயுதமாமாம்
நேமி	ஸுதர்சனாழ்வான்
கையது	மற்றொருவன் கையிலிருக்குப் படையாம்
உருவம்	ஒருவனுடைய உடம்பு
கார்	மேகம்போன்றது
ஒன்று	இவ்விரண்டில் ஒன்று
மேனி	ஒருவனுடைய சரீரம்.

இப்படிப் பரமசிவனை இகழ்வது கூடுமோ? அவனையும் ஒரு தேவதையாக எண்ணி உலகத்தார் உபாஸிக்கவில்லையோ? உங்கள் தெய்வத்தைப்போல அவனும் கோயில்கள் கொண்டு பலர் அடிவணங்க புகழ்வுடன் வீற்றிருக்கவில்லையோ? இங்ஙனம் நீர் இகழ்வது தகுமோ என்று அரனடியார்கள் கேட்க, உத்தரம் அருளிச்செய்வதுபோல் இப்பாசுரம் தோன்றுகிறது. நீங்கள் எங்களிடம் கோபிக்கவேண்டாம். அரி, அரன் இவர்களுடைய பெயர், வாகனம், இருப்பிடம், வேலைகள், ஆயுதங்கள், நிறம், இவைகளைத்தனித்தனியே உரைக்கிறேன். யார் பரதேவதை யென்று நீங்களே உணர்ந்து கொள்ளலாமே. கீழ்ச்சொன்னவைகளில் ஒவ்

வொரு வஸ்துவே இன்னார் பரனென்று காட்டுமே. ஏன் வீண்வா தம் என்று சொல்லி ஒவ்வொன்றையும் தனித்தனியே காட்டுகிறார். அரன்நாரணன் ஒருவனுடைய பெயர் அரன் என்பது. வடமொழியில் ஹர: என்கிற பதம் அரன் என்று ஆகிறது. ஹரதீதிஹர: ஸம்ஹாரம் செய்கிறவன் என்று பொருள். பெயரைச் சொன்ன பொழுதே ஸம்ஹரிப்பது என்கிற குணம் தோன்றுகிறது. மற்றொருவன் பெயர் நாராயணன் அவனுடைய பெயரின் அர்த்தத்தை ஆலோசிக்குங்கால் உபயவிபூதியும் தனக்கு வாஸஸ்தானமாய் அதற்கு ஆதாரமாய் இருப்பவன் என்கிற பொருள் விளங்குகிறது. ஆக ஸம்ஹரிக்கும் குணமுடையவனிடம் ஆச்ரயிப்பதா, சகல உலகங்களையும் தரித்துக்கொண்டிருப்பவனிடம் ஆச்ரயிப்பதா? அந்த ஸம்ஹாரமும் அவன் அதீநமல்ல. தீங்கான செயல்களிலேயே மூழ்கியிருக்கும் ஜீவராசிகளிடம் கோபம் பிறந்து, அவைகளை ஒழித்து விடுவோம் என்று நினைவுண்டான ஒருவன், அக்காரியம் செய்ய தனக்கு மனம் வாராமல் கையாளாகக் கொண்ட ஒருவன். அது அங்ஙனம் நிற்க. அவர்களுடைய வாகனங்களை ஆராய்ந்தால் ஒருவன் வாகனம் எருது. ஒருவனுக்குப் பக்ஷிவாகனம். உலகத்தில் சிறிதும் அறிவில்லாத ஒருவனை மாடே என்று கூப்பிடுவது வழக்கம். அதுபோல ஞானசூன்யமான வ்ருஷபத்தை வாகனமாகக் கொண்டவன். மற்றொருவன் வாகனமோ கருடன் என்கிற பக்ஷிராஜன். அவரைப்பற்றி, எழுதாமறையிலே வேதமயனென்று புகழப்பட்டிருக்கும் ஆளவந்தாரும், வேதாத்மாவிஹகேச்வர: என்றும் வ்யஜநம் த்ரயீமய:என்றும் கொண்டாடினார், இவ்வர்த்தை ஸுபர்ணோஸி கருத்மான் த்ரிவ்ருத்தே சிரோ காயத்ரம் சக்ஷு: ஸ்தோம ஆத்மா ஸாம தே தநூர் வாமதேவ்யம் யஜூம்ஷி என்கிற சுலோகத்தால் விசதமாக நம் நிகமாந்ததேசிகனும் காட்டியருளினார். ஆகவே வாகனங்களுடைய சீர்மையையும் நீங்களே கண்டுகொள்ளலாம். அது கிடக்க இருவரையும் காட்டக் கூடிய ப்ரமாணமான புத்தகங்களை ஆராய்ந்தால் ஒருவனை ஆகமங்கள் காட்டுகின்றன. ஆகமங்கள் ஒருவனால் செய்யப்பட்டவையாகையால், அவை அவற்றைச் செய்த புருஷனுடைய அஜ்ஞானம், விபரீதஜ்ஞானம், அந்யதாஜ்ஞானம், இவைகளடியாகப் பிறந்திருக்கக்கூடும். ஆக புருஷதோஷ துஷ்டமாகையாலும், பிரும்ஹ ஸூத்

ரத்தில் "பத்யுரஸாமஞ்ஜஸ்யாத்" என்கிற ஸூத்ரத்தால் அவைகள் வேதவிருத்தமென்று வியாஸபகவானால் ஓதுக்கப்பட்டிருப்பதாலும் அவை தோஷமுள்ளவையே. இவரைப் பிரதிபாதிக்கிற வேதங்களோ ஒருவனால் செய்யப்படாததென்றும், அநாதியென்றும் உண்மையான அர்த்தங்களையே விளக்குமென்றும் வியாஸர் முதலிய மஹரிஷிகளால் எழுதப்பட்டிருக்கிறது. வசிக்கும் இடத்தை ஆராய்ந்தால், ஒருவனுக்குக் கைலாயமலை. இருப்பிடமே அவன் நெஞ்சிலுள்ள காடின்யத்தைக் காட்டுகிறது. மற்றொருவன் இருப்பிடமோ ஜலம் அதாவது ஸமுத்ரம். அவன் நெஞ்சிலுள்ள ஈரத்தைக் காட்டுகிறது. வேலையோ, ஒருவனுக்கு அழிக்கும் தொழில். அழிப்பது என்றால் ஸம்ஹாரத்துடனேயே நிற்கும். வேறு வேலை கிடையாது. ரக்ஷிப்பது என்றால் சிருஷ்டி ஸம்ஹாரம் இரண்டிலும் சம்பந்தமிருக்க வேண்டும். ஏனெனில், விரோதிகளைப் போக்குவதும் அவன் விரும்பிய பதார்த்தங்களை உண்டுபண்ணிக் கொடுப்பதும் ரக்ஷணம் என்பதில் சேர்ந்ததே. ஆகத் தொழிலிலும் மேன்மையிருக்கிறது. ஆயுதத்தை அளவிட்டால், ஸம்ஹாரத்திலே இறங்குவதான வேல் ஒருவனது. மற்றொருவன் ஆயுதமோ சக்கரம் என்பதாம், அச்சக்கரம் நித்யஸூரியென்றும், கண்டவர்களெல்லாம் இதைத் தரித்தவன் பரம்பொருளென்று சொல்லக் காரணமாயும், தன் சேஷியினுடைய அளிக்கும் தொழிலுக்கேற்ற க்ருபாஸமுத்ரமான சக்கராயுதம் என்றும் துதிக்கிறார்கள். இவைகளெல்லாம் எங்ஙனம் இருப்பினும், உலகத்தில் ஒரு மனிதனைக் கண்டவுடன் அவனுடைய ரூபமே அவன் பெருமையைச் சொல்லுமென்னும் பழமொழிக் கிணங்க, கீழ்ச் சொன்னவைகளை யெல்லாம் மறந்து அவர்களுடைய ரூபத்தை ஆராய்ந்தால் செந்தீ. ஒருவனதுருவம் அதாவது சிவந்த நிறம். ஸம்ஸாரவெப்பத்தினால் அடிபட்டு அவன் காலில் விழுந்தால் அக்னியைப்போல் மீண்டும் தாபத்தை உண்டாக்குகிற நிறம், மற்றொருவன் நிறமோ, தாபத்தில் அடிபட்டவனை ஒரு பாட்டம் மழைபெய்தாப்போல் குளிரச்செய்யும் நீலநிறம். இது இங்ஙனமிருக்க, இவர்களுள் ஒருவன் ஒருவனுக்கு உடம்பு. அதாவது அரன் உடம்பாயும், நாராயணன் ஆத்மாவாயும் இருக்கிறான். இவ்வர்த்தம் அந்தர்யாமி பிராஹ்மணம் முதலிய வேதபாகங்களில் ஸம்சயம் அற சொல்

லப்பட்டிருக்கிறது. எவ்வகைப்பட்ட ஜீவராசிகளிலும் தான் ஆத்மா வாய் இருந்துகொண்டும், அவைகளுடைய ஸ்வரூபம், நிலை, வேலை, இவைகளுக்குக் காரணமாய் இருந்துகொண்டும், அவைகளால் அறியப்படாமலும், விளங்குகிறானென்று நன்கு தெரியவரும். அவ்வண்ணமே, ருத்ரனும் நாராணனுக்குச் சரீரமாயும், சேஷபூதனாயும், அவனால் ஏவப்படுகிறவனாயும், இருக்கிறானென்று கருத்து. இப்பாசுரத்தில், "மேனி ஒன்று" என்று ஒருவன் சரீரமென்று மாத்திரம் சொல்லியிருந்தாலும், மற்றொருவன் ஆத்மாவாயிருக்கிறானென்பது தாத்பர்யத்தினால் கிடைக்கும்பொருள்.

ஒன்று மறந்தறியே னோதநீர்வண்ணனை நான்
இன்று மறப்பனோ வேழைகாள்—அன்று
கருவரங்கத் துட்கிடந்து கைதொழுதேன் கண்டேன்
திருவரங்க மேயான் திசை. (6)

அன்று	அந்த நாட்களில்	ஒன்றும்	ஒருவிஷயத்தையும்
கரு அரங்கத்துள்	கர்ப்பப்பையாகிற ஓரிடத்தில்	மறந்தறியேன்	மறந்ததாக நினையவில்லேன்
கிடந்து	இருந்தபொழுது		
திருவரங்கமேயான்	ஸ்ரீரங்கமென்கிற க்ஷேத்திரத்தில் நித்யவாஸம் செய்கிறபெருமானுடைய	ஏழைகாள்	சேஷியாகியதநத்தையிழந்தவர்களே
		நான்	அடியேன்
		ஓதநீர்	ஸமுத்திர ஜலம் போன்ற
திசை	விஷயங்களை (குணங்களை)	வண்ணனை	நிறத்தை உடையவனை
கண்டேன்	நேரில்பார்த்தேன்		
கைதொழுதேன்	அஞ்சலிசெய்தேன்	இன்று	இந்நாட்களில்
		மறப்பனோ	மறப்பேனோ

கீழ் பாசுரத்தில், ஸ்ரீமந்நாராயணனே சேஷியென்றும், "ஈச்வராத் ஞானம் இச்சேத்" என்று எல்லாரும் அறிவு பெறவேண்டிய தலைவிடமான ருத்ரனும் அவனுக்கு சேஷபூதனென்று சொல்லியிருப்பதைக் கேட்டு, சிலர், ருத்ரனை அவனுக்கு

சேஷபூதனுயிருக்க, நீர் அவருக்கு சேஷபூதரன்றே? நீர் எப்படி உபதேசிக்கக்கூடும்? என்று வினவ அதற்கு இப்பாட்டால் விடையளிக்கிறார்போலும். அரனுக்கும் தனக்கும் வாசியுண்டு என்கிறார். அரன், தனக்கு ஸத்வகுணம் தலையெடுத்தபோது நாராயணனை மிகுதியாக ஸ்தோத்ரம் செய்வன்; அர்ச்சனையும் செய்வன். பல படியாலும் பரதேவதையாகவே நினைத்திருப்பன். பிறகு, ரஜஸ் தமோ குணங்கள் தலையெடுத்தால் 'நானே பரம்பொருள், என்னையே யாவரும் பூஜிக்க வேண்டும்' என்று சொல்லித் திரிந்துகொண்டு ஸர்வேச்வரனோடு எதிரம்பு கோத்துமிருப்பன். ஆழ்வாரோ, தான் அங்ஙனம் ரஜஸ் தமோகுணங்களால் அவமதிக்கப்படாமல் சுத்த ஸத்துவத்திலேயே நிலைநிற்கிறவராய் இருப்பதால், தான் உபதேசிக்கக்கூடும் என்கிறார். ஒன்றும் மறந்தறியேன் நான் அந்த பரமபுருஷருடைய கல்யாணகுணங்களில், ஒன்றையாவது, ஒரு க்ஷணத்திலாவது மறக்கவில்லை. இனியும் மறக்கமாட்டேன் என்கிறார். அவனை மறப்பது என்னிடம் சம்பவியாது என்பதற்குக் காரணத்தையும் சொல்லுகிறார். கருவரங்கத்துள் என்ற பதத்தால், ஜீவன்களெல்லாம் பெரும்பாலும் மறக்கக்கூடிய கர்ப்பவாசத்திலேயே நான் அவனை மறவாது நேரில் பார்த்தும், அடிதொழுதும், அனுபவித்தேன். மறக்கக்கூடிய காலத்தில் மறவாது அவனருளால் விவேகம் பெற்ற நான் இக்காலத்தில் மறக்க விரகுண்டோ? இனிமேலும் மறக்கக் காரணம் கிடையாது என்றும் சொல்லுகிறார். அடிக்கடி ரஜஸ் தமோகுணங்கள் ஆக்ரமித்து அதனால் தைவத்தை மறக்கும் தன்மையுடைய ருத்ரனைப்போலன்றி, நாட்டாரோடியல்வொழிந்து நாரணனை நண்ணின நான் உபதேசிக்கக்கூடுமென்று பொருள். இன்று மறப்பனே நான் மறந்தாலும் அவன் மறக்கவிடான். ஏழைகாள் வைப்பாம் மருந்தாம் என்றும் நிதியினை என்றும் "தரம்மதீயம் தவ பாத பங்கஜம்" என்றும் போற்றப்படும் பரமபுருஷனாகிற தனக்குவியலை இழந்திருக்கும் மனிதர்களே? ஸம்ஸாரிகளை எழுப்பி ஆத்மோஜ்ஜீவனமான மார்க்கத்தைத் தேடுங்கோள் என்கிறார். அன்று கருவரங்கத்துள் கருவரங்கம் என்பதற்கு கர்ப்பப்பையாகிற நடனம் செய்கிற விடம் என்று பொருள். அரங்கமென்றால் நடனம் செய்கிறவிடம். இங்கு இடம் என்கிற பொருளையே கொள்ளவேண்டும். இவர் கர்ப்பவாசமில்லாமல் அயோநிஜராய் தாமரைமலரில் அவதா

ரம் செய்திருந்தபோதிலும், கர்ப்பத்தில் இருந்தேனென்று சொல்லிக்கொள்வது, தான் அவதாரம் செய்த தாமரை மலரையே கர்ப்பப்பையாக நினைத்துச் சொல்லும் வார்த்தை. இவ்வாழ்வார்கள், தாங்கள் பகவத்ஞானம் பிறக்கும்பொழுதே பிறந்தவர்களென்றும், மறந்தபொழுதே இறந்தவர்களென்றும் சொல்வது வழக்கம். இவருக்கு பகவத்ஞானம் தாமரைப்பூவில் உதிக்கும்பொழுதே பிறந்தபடியால், பிறப்பதற்கு முந்தியிருக்குமிடம் கர்ப்பப்பையாதலால், தாமரை புஷ்பம் கர்ப்பப்பையாகும். "ஜாயமானம்ஹி புருஷம்" என்கிறபடி, கர்ப்பத்திலிருக்கும்பொழுது மதுஸூதனனுடைய கடாக்ஷம் பெற்றால், அவன் என்றும் ஸாத்விகனாகவே இருப்பன் என்பதற்கிணங்க இவர் தாமரைப்பூவாகிற கருவிலே திருவுடையாராதலால் என்றும் பகவானை மறக்காமல், பாசுரமுகத்தாலே உபதேசம் செய்வது பொருந்தக் கூடியதே. ஓதநீர்வண்ணனை கடல்போல், தாபங்களைப் பார்த்த அளவில் போக்கடிக்கக்கூடிய திருமேனியையுடையவனை. திருவரங்கமேயான் அரங்கமென்பது நர்த்தனஸ்தானமென்றும், யுத்தபூமியென்றும் பொருள் கொடுக்கும். அதாவது ஸர்வேச்வரன் பரமபதத்திலிருந்து லீலார்த்தமாக வந்தவிடமென்றும், ஸம்ஸாரிகளோடு சண்டை செய்து அவர்களைத் தனக்கு அடிமையாக்கிக்கொள்ளும் இடம் என்றும் கருத்தாகும். திசையென்பது கிழக்கு முதலிய திக்குகளைச் சொல்லுகிற பதமாயிருப்பினும் இங்கு விஷயம் என்ற அர்த்தத்தைக் கொடுக்கிறது. ஈச்வரனுடைய ஸ்வரூபஸ்வபாவங்களென்றதாம்.

திசையும் திசையுறு தெய்வமும், தெய்வத்
திசையும் கருமங்களெல்லாம்—அசைவில் சீர்
கண்ணன் நெடுமால் கடல்கடைந்த, காரோத
வண்ணன் படைத்த மயக்கு. (7)

உறு	பொருந்தியிருக்கிற	இசையும்	ஒத்திருக்கிற
தெய்வமும்	தேவதைகளும்	கருமங்களெல்லாம்	வேலைகளெல்லாம்
	அந்தந்த தேவதைகளுக்கு	அசைவில்	அழிவில்லாத
		சீர்	குணங்களையுடைய

கண்ணன்	க்ருஷ்ணனுயவதரித்த	காரோதவண்ணன்	கருமையான ஸமுத்திரஜலம்போன்ற நிறத்தையுடைய ஸ்வாமி
நெடு	அளவில்லாத		
மால்	பெருமையையுடைய	படைத்த	ஸ்ருஷ்டி செய்த
கடல்கடைந்த	ஸமுத்திரத்தைக் கடைந்த	மயக்கு	மயங்கும்படி செய்கிற வஸ்துக்கள்

இதர தேவதைகள் ஈச்வரனுக்கு உடலென்றும், சேஷபூதர்களென்றும், அவன் நியமனப்படி செய்கிறவர்களென்றும், சொல்வது எப்படிப் பொருந்தும்? அவரவர்களும் ஒவ்வொரு தேசங்களுக்கு அதிபதியாய் பல கிங்கரர்களால் பணி செய்யப்பட்டவர்களாய், அதிமாநுஷமான செயல்களைச்செய்து தெய்வங்களாய் விளங்கவில்லையா? உதாஹரணமாக, இந்திரன் மூன்று லோகங்களுக்கும் அதிபதியாய், தேவர்களுக்கு நிர்வாஹகனாய், விருத்ராஸம்ஹாரவதம் முதலிய இதரர்களால் செய்யமுடியாத வேலைகளைச்செய்து, கர்மலோகத்திலுள்ள பிரஜைகளால் காணிக்கையிட்டு பூஜிக்கப்படவில்லையோ? ருத்ரன் கைலாஸநிலையனாய் திக்பாலகனாய் இருந்துகொண்டு திரிபுராஸம்ஹாரவதம், அந்தக ஸம்ஹாரம், முதலிய அரிய வேலைகளைச்செய்து, தன்னை யடைந்தவர்களுக்கு வேண்டிய பலன்களைக் கொடுத்துக்கொண்டு உயர்தெய்வமாக வீற்றிருக்கவில்லையோ? என்று சிலர் ஆக்ஷேபம் செய்ய, இதெல்லாம் ஈச்வரனுடைய மாயையின் காரியம். அவன் விரோதிகளை ஏமாறும்படி செய்கிற மயக்குகள் என்று பதில் உரைக்கிறார்.

திசையும்,—திக்குக்களையும், அதாவது திக்குக்களோடு கூடின பூமியென்றபடி. திக்குகள் ஒரு ப்ரதேசமாக இல்லாததாலும், ஒரு ப்ரதேசத்திலுள்ள ப்ரஜைகளுக்குத் தேவர்களாகச் சிலரைச் சொல்லுவதாலும், இங்கு திசையென்பது திக்குக்களாலே காட்டப்பட்ட பூமியென்று பொருளாகும். அதாவது, திசைகளையும் பூமியையும் படைத்து என்றர்த்தம்.

தெய்வமும்—அந்தந்த திசைகளில் ஆங்காங்கு திக்பாலகர் என்கிற பெயருடன் விளங்கும் இந்திரன் முதலிய தேவர்களும் கருமங்களெல்லாம் அந்த தேவதைகளுடைய சரீரத்திற்கும் வர்ணத்

திற்கும், ஆயுதங்களுக்கும் தகுந்ததான வேலைகளெல்லாம் கார்முகில்வண்ணன் உண்டாக்கினமாயம். தான், தன்னைப்போல ஒவ்வொரு தேவதைகளையும் ஸ்ருஷ்டி முதலிய அதிகாரங்களுக்கு உரியவர்களாக நியமித்து, அவர்களைப்போல் தானும் ஒரு வேலைக்கு மாத்திரம் அதிகாரிபோல் இருந்துகொண்டு [illegible] என்று தன்னை பிறரைப்போல் நினைக்கும்படி செய்து அவர்களை ஆராதிக்கும்படியும் செய்வது தன்பக்கல் பக்தியில்லாத விரோதிகளை ஏமாற்றுவதற்காக. ஜீவனுக்கு சரீரபலத்தையும், அநுபவிக்கக்கூடிய திறமையையும், தன்னையடைவதற்கு வேண்டிய உபாயத்தையடைய புத்தியையும், வேறு விஷயாந்தரங்களை விலக்கவேண்டிய புத்தியையும் கொடுத்திருக்கும்பொழுதும், அவர்கள் இதர தேவதைகளை யடைவது அவர்கள் கெட்டுப்போவதற்காக ஈச்வரன் ஸங்கற்பித்தபடி அதற்குக் காரணம், அவர்களுடைய பக்தியில்லாமையும் ஆபிமுக்யம் இல்லாமையும். இவ்வர்த்தம் “தைவீஹ்யேஷா குணமயீ மம மாயாதுரத்யயா” என்று கீதையிலும் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி அவனே ருத்ரனைக்கொண்டு பாசுபதம் என்கிற மதத்தை செய்யச்சொல்லி, சிலரை பிரமிக்கும்படியாகச் செய்தான். தான் நேராகவே புத்தனென்று அவதரித்து ஜனங்களை ஏமாற்றினான். ஆதலால், அந்தந்த தேவதைகளுக்கு மேன்மையைக்கொடுத்தும் செய்ய அரிதான வேலைகளைத்தான் செய்யும்படி செய்தும், அவர்களை பரதேவதையென்று கொண்டாடச்செய்வது ஆஸுரப்பிரகிருதிகள் தன்னைஇழப்பதற்காக. இங்ஙனமிருக்கச்செய்தேயும் தன்னுடைய பரதத்வஸூசகமான லீலைகளைத்தான் ஒளிப்பதில்லை அவர்களே தங்கள் புத்தியால் கெட்டுப்போகிறார்கள். கடையில் உயர்ந்தவைகளான ரத்நங்களையும் குன்றுமணிகளையும் ஸமமாகப்பரப்பியிருக்க அதிகமான ஜனங்கள் குன்றுமணிகளையே வாங்கிக்கொண்டு போகிறார்களே. எண்ணற்றஜனங்கள் அதை உகக்கிறார்களேயென்று அதை உயர்ந்ததாகச் சொல்லமுடியுமோ? ரத்நத்தை வாங்க அதிகாரம் இல்லாததால் குன்றுமணியில் இறங்குகிறார்கள். ஒரு இண்ணையில் இரண்டு பாத்திரங்களில் தனித்தனியே சந்தனத்தையும் சேற்றையும் வைத்திருந்தால், சேற்றை பலர் வாரிப்பூசிக்கொண்டால்

அது யாருடைய குற்றம்? அதைப் பூசிக்கொள்வதற்குக்காரணம், அவனவன் கர்மத்தினுல் வந்த விபரீத அபிமானமாகும். அதுபோல, விவேகமில்லாத ப்ரஜைகள் ஸ்வபாவிக ஆநந்தவிருத்தமாக இதர தேவதைகளைப் பற்றுவதும், அதின் பயனுன சிவஸாயுஜ்யம், இந்திர ஸாரூப்யம், ஸத்யலோகப்ராப்தி முதலிய பிரயோஜனங்களையடைவதும், அவர்கள் செய்த எம்பெருமான் திருவுள்ளத்திற்கு விரோதமான கர்மமடியாகவந்த பிரமங்கள்.

அசைவில்சீர் அந்த நாராயணனுடைய குணங்களோ அழிவில்லாதவைகள். இவன் குணங்களை மட்டும் அழிவில்லாதவையென்றுல் இதர தேவதைகளிடம் உள்ள புத்திஹீனர்கள் விரும்புகிற குணலேசங்களும் சிறிதுகாலமிருந்து பிறகு மறையக்கூடியவையென்று தெரிகிறது.

கண்ணன் தன்னை இடையர்கள் கூட்டத்தில் சேர்த்து எண்ணும்படியாகச் செய்துகொள்கிறவன். மிகுந்த ஸௌலப்யமுடையவன் என்பது கருத்து.

நெடுமால் செலக்காண்கிற்பார் காணுமளவும் செல்லுங்கீர்த்தியையுடையவன். இத்தால் தேவர்களுக்கு அம்ருதம்கொடுத்த வரலாறுநினைவில் ஏறுகிறது. பொதுவாகக் கடைந்தெடுத்த அமுதத்தை தேவர்களுக்குமட்டும் கொடுத்து, அஸுரர்களுக்குக் கொடாமல் அவர்களையும் அச்சமயம் உகப்பித்ததுபோல், இதர தேவதைகளை உபாஸிக்கிறவர்களை அஸுரர்களை ஏமாற்றியதுபோல் ஏமாற்றி, அந்தந்த சமயங்களில் கிடைக்கும் அல்பபலன்களால் அவர்களை மோஹிக்கச்செய்கிருர் என்பது உட்கருத்து.

காரோதவண்ணன் நாம் மறக்கவேணுமென்று நினைத்தாலும் மறக்கவொண்ணுத ஸமுத்ரஜலம்போன்ற சீதளமான நிறத்தையுடையவன். **படைத்தமயக்கு** ஆக தேவதாந்தரங்களை ஸ்ருஷ்டித்தது மயக்குவதற்கு என்று பொருள்படுவதால் அந்தந்த தேவதைகளுடைய சில பெருமைகளைக் கண்டு நாம் மயங்கவேண்டாமென்பது ப்ரதான அர்த்தம். மயக்கு மயங்கச்செய்கிற பொருள். விளங்கச்செய்கிற பொருளை விளக்கு என்பதுபோல்.

மயங்க வலம்புரி வாய்வைத்து வானத்
தியங்கு மெறிகதிரோன் றன்னை—முயங்கமருள்
தேராழியால் மறைத்த தென்னீ திருமாலே
போராழிக்கையால் பொருது. (8)

திருமாலே	பெரிய பிராட்டியாரிடத்தில் பேரன்பு கொண்டவரே	வலம்புரி	பாஞ்சஜன்யமென்கிற சங்கத்தை
நீ	நீ	வாய்வைத்து	தன் திரு அதரத்திலே வைத்துக் கொண்டு
முயங்க	(அரசர்கள்)நிறைந்திருக்கிற	வானத்து	ஆகாசத்திலே
அமருள்	யுத்த பூமியில்	இயங்கும்	நடந்துகொண்டிருக்கிற
போர்	யுத்தத்திற்குக் கருவியான	எறிகதிரோன் தன்னை	உஷ்ணமான கிரணங்களையுடைய ஸூர்யனை
ஆழி	சக்ரத்தைத்தரித்த	தேராழியால்	சக்கரத்தால்
கையால்	தன்னுடைய கையினால்	மறைத்தது	கண்ணுக்குத் தெரியாமல் மறையும்படி செய்தது
பொருது	யுத்தம் செய்து		
மயங்க	அரசர்கள் நடுங்கும்படி	என்	எதற்காக.

அவனுக்குக் கீழே சொல்லிய மயங்கச்செய்யக்கூடிய வியாபாரங்கள் மாத்திரமா? தன்னையும், தன் குணங்களையும், தன் ஈச்வரத்வத்தையும் மாற்றிக்கொண்டுசெய்யும் மயக்குக்களும் பல உண்டு என்று காண்பிக்கிறார் இப்பாட்டில். துர்யோதனாதிகளுக்கும் பாண்டவர்களுக்கும் நடந்த போரில் நீ சங்கத்தை ஊதியது எதற்காக என்கிறார். மயங்க நான் எதிர்ச்சேனையைக் கொல்வதற்குக் கருவிகளான ஆயுதங்களை எடுக்கவில்லையென்று பீஷ்மர் முதலான ஞானாதிகர்கள் முன்பு ப்ரதிக்ஞைசெய்து, யுத்த ஆரம்பத்திலேயே சங்கத்தை ஊதியது எதற்காக? அந்த சங்கநாதம் கேட்டு பல அரசர்கள், படைகள், பயத்தால் வெருண்டு மாளவில்லையோ? ஸகோஷோ தார்தராஷ்ட்ராணாம் ஹ்ருதயாநி வ்யதாரயத் என்று

ஸஞ்ஜயரும்ஓதிவைத்தார். இது, நான் பொய் சொல்வதில்லையென்றும், என்னிடம் இரண்டு பேச்சுக் கிடையாதென்றும், என் வாக்கியம் வீணாகாதென்றும் சொல்கிற உன் பேச்சுக்கு விருத்தமன்றோ என்று அவனையே வினவுகிறார். இதனால், தான் சொன்னபடி செய்யாத பொய்யன்போல் காண்பித்து, அதனால் தன்னை ஈச்வரனென்று சிலர் எண்ணாமல்பண்ணி, இதரர்களிடம் கால்தாழும்படி செய்பவன். இந்த முதலடியால் ஆச்ரிதர்கள் விஷயத்தில் அவனுக்குள்ள வாத்ஸல்யத்தின் மேன்மையை விளக்கியதாகும். பீஷ்மாதிகளும் அவன் சங்கநாதத்தை வெகுகாலமாகக் கேட்க அவாவுடையராய் இருந்தபடியால் அவர்களையும் திருப்தி செய்வித்ததாகவே ஆகும். தன்னை யடைந்தவர்களைக் காப்பாற்றுவதைக்காட்டிலும் மேலான தர்மமாக அவன் ஒன்றைக் கருதமாட்டானென்றும் பொருள்படும். இதைக் கருதியே, ராமாவதாரத்தில் மெய்யும், கிருஷ்ணாவதாரத்தில் பொய்யும் ஆச்ரிதர்களுக்குத் தஞ்சம் என்று பூர்வர்களும் எழுதிவைத்தார்கள்.

வானத்து இயங்கும்:—ஆகாசத்திலிருக்கிற சூரியனை. மறைக்க வேண்டிய வஸ்து ஸமீபத்திலா இருந்தது? வெகு தூரத்திற்கு அப்பாலிருக்கிற வஸ்துவை மறைத்தான். அதிலும் மறைக்கக்கூடிய இடத்திலா இருந்தது? சுவர் முதலிய மறைக்கக்கூடிய பொருள்கள் சிறிதும் தங்குவதற்குக்கூட இடமில்லாத ஒரே வெளிச்சமான ஆகாசத்திலிருந்த சூரியனை மறைத்தான். அப்படி மறைத்ததும் விளக்கை விளக்கால் மறைப்பது எப்படிப் பொருந்தாதோ, அப்படி அந்த சூரியனைக்காட்டிலும் அளவற்றப்ரகாசமுள்ள தன் சக்ராயுதத்தால் மறைத்தான். இங்கு தேராழியென்பது ரதத்தின் சக்கரம் என்பது பொருளல்ல. அவன் கையில் தரித்த சக்ராயுதத்தால் என்று பொருள். சக்ரமானது ஒரு ரதத்திற்கு அங்கமாகக்கூடிய யோக்யதையுள்ள வஸ்துவாதலால், சக்ரத்தை தேராழியென்று வழங்குவர்கள். வடமொழியிலும் இதை அநுசரித்து ரதாங்கம் என்று பெயரிட்டிருக்கிறார்கள். இங்கு மஹாபாரதத்தில், பாரதயுத்தப் பிரகரணத்தில் அர்ஜுனனுடைய பிள்ளையான அபிமன்யுவை துர்யோதனனுடைய சகோதரியின் கணவனான ஜயத்ரதன் என்பவன் கொல்ல, அந்தக் கோபத்தினால், மறுநாள் மாலை ஆதித்யன் மறைவதற்குள்

அவனை ஒழித்து விடுகிறேன், இல்லாவிடில் அக்னியில் குதித்து ஆவியை விடுகிறேன் என்று சபதம் கூறி போர்புரியுமளவில் அந்த ஜயத்ரதனைக்காணவொட்டாமலேயே துரோணர் முதலியவர்கள் மறைத்து வைக்க, கண்ணனும் இப்பொழுது என்விளையுமோ என்று அர்ஜுனனைக் குறித்து சோகித்து, மிகுந்த கருணையுடன் தன் சக்கரத்தால் சூரியனை மறைக்க, அதுகண்டு அர்ஜுனனும் தன் சபதப்படி அக்னியில் குதிக்க யத்னம் செய்ய, இந்த சந்தோஷத்தை நேரில் பார்க்கப்பலஅரசர்களைப்போல ஜயத்ரதனும் எதிரே வந்து நிற்க, உடனே கண்ணனும் தன் சக்கரத்தை மீண்டும் உபஸம்ஹாரம் செய்ததால் சூரியனுடைய ஒளி விளங்க, எதிரில் நின்ற அவ்வரசனை அத்தனஞ்ஜயனும் கொன்று திருப்தியடைந்தான் என்னும் சரிதை அறியவேண்டும். இங்கு, கண்ணபிரான் பகலை மறைத்து ஏமாற்றியதும் தன்னைச்சரணாகதிசெய்த அர்ஜுனனைக் காப்பதற்கென்று கொள்க. இங்கு ஒரு கேள்வி உண்டு. சூரியனை அவனைவிட பதின்படங்கு ப்ரகாசமுள்ள சக்கரத்தால் எப்படி மறைகக முடியும்? ஆனால் ில் விளக்கினொளி மறைந்ததாக ஆவதுபோல், பாஸ்கரகோடி துல்யனான சக்ராயுதத்தால் கதிரவன் மங்கினாலும், சக்ரத்தினொளியால் பகலாகவே தோன்றுமே என்பதாம். அதற்கு, கிருஷ்ணாவதாரகாலத்தில், அவருடைய ஆயுதம் ஒரு மகரிஷியின் சாபத்தால் கரிக்கட்டைபோல் ஒளியற்றிருந்ததென்றும், அந்த சாபத்தைத் தான் ஏற்றுக்கொண்டதும் அந்த பக்தனிடத்திலுள்ள வாத்ஸல்யத்தாலே என்றும்சிலர் கூறுவர். "பத்துடையடியவர்க்கெளியவன் பிறர்களுக் கரிய வித்தகன்," என்கிற அவன் தன்மைபோல், அவன் திவ்யாயுதங்களுக்கும் அத்தன்மை ஸ்வாபாவிகமாதலால், சக்ரமானது அர்ஜுனனிடத்திலுள்ள வாத்ஸல்யத்தால், யுத்தாங்கத்திலுள்ள அனைவர்க்கும் அவன் திருவுள்ளத்தையறிந்து தன் திவ்ய சக்தியால் இருள் போல் தோற்றிற்று என்றும் சிலர் சமாதானம் கூறுவர். ஸர்வஞ்ஞனான ஈச்வரன் ஒரு தேஜஸை மறைக்க மற்றொரு தேஜஸை எடுத்தது ஆச்ரிதரக்ஷணத்திலுள்ள ஓர் பரபரப்பாலே. அந்த அவசரத்தில் எத்தையாவது எடுத்து மறைக்கவேண்டுமேயென்று தோன்றிற்றேயல்லது வஸ்துவின் சீர்மையை நினைக்கப்பொழுதில்லை.

போராழிக்கையால்பொருது பீஷ்மரும் அர்ஜுனனும் யுத்தம்செய்ய, பீஷ்மருடைய அம்புகளால் அடிபட்ட அர்ஜுனன் திகைத்து நிற்க, நீ சக்கரத்தை எடுத்துக்கொண்டு யுத்தம் செய்யச் சென்றது, உன் சபதத்தையும் அழியச்செய்து உன் பக்தன் பிரதிஜ்ஞையை நிறைவேற்றுவதற்கல்லவா? அல்லது சக்கரமேந்திய உன் அழகை பீஷ்மனுக்குக் காண்பிப்பதற்கல்லவா? இச் செயல்களெல்லாம் பக்தர்களைக் காப்பதற்கென்று செய்யப்பட்டவை. இதன் உண்மையை உணராமல் இச் செயல்களால் அவன் ஈச்வரனில்லை என்று மயங்குகிறார்களே? இதுவும் அவனுடைய மயக்குச் செயல்களில் ஒன்று. இச் செயல்கள் எதற்காக என்று ஈசனை ஒன்று மறியாதவர்போல் கேட்டது, அதன் உண்மையை இங்ஙனம் நமக்கு விளக்குவதற்காகவே.

பொருகோட்டோரேனமாய் புக்கிடந்தாய்க்கு அன்றுன்
ஒருகோட்டின் மேற்கிடந்த தன்றே—விரிதோட்ட
சேவடியை நீட்டித் திசைநடுங்க விண்துளங்க
மாவடிவின் நீயளந்த மண். (9)

விரிதோட்ட	ஒளிவீசுகிற திருக் குண்டலங்களை அணிந்தவனே
சேவடியை	சிவந்த திருவடியை
நீட்டி	நீளும்படிசெய்து
திசை	திக்குகள்
நடுங்க	பயப்படும்படியும்
விண்	ஆகாயம் (ஆகாசத்திலுள்ளவர்கள்)
துளங்க	அச்சப்படும்படியும்
மாவடிவின்	பெரிய திருமேனியை ஸ்வீகரித்த
நீ அளந்த	நீ அளந்த
மண்	பூமியானது
பொரு	யுத்தம் செய்கிற
கோட்டு	கொம்புகளையுடைய
ஓர்	அத்விதீயமான
ஏனமாய்	வராஹமாய்
புக்கு	பிரளயார்ணவத்திலே முழுகி
இடந்தாய்க்கு	பிரித்துத்தூக்கிய
அன்று	அந்த நாளில்
உன்	உன்னுடைய
ஒருகோட்டின் மேல்	ஒரு கொம்பின் மேல்
கிடந்ததன்றே	இருந்ததன்றோ

இப்படி ஆச்ரிதர்களுக்குக் காரியம் செய்வதோடுகூட பிரபஞ்சத்திற்கு நாசம் விளையும் சமயத்திலும் தன்பேறாகவந்து அதைப் பரிஹரித்துக்காக்கும் என்கிறார். அதிலும், சிறிய வடிவுடன்வந்து பெரிய வடிவெடுத்தும், பிறக்கும் தருணத்திலேயே பெரியவடிவு

4

டன் வந்தும் ரக்ஷிப்பன் என்கிறார். பெரிய வடிவத்தை எடுத்துக் கொண்டு திருவடிகளையும் நீட்டி அளக்கவேண்டும்படி அவ்வளவு பெரியதாயிருந்த இப்பூமியானது, நீ வராஹமாய்ப் பூமியைக் கீண் டெடுத்தபொழுது உன்னுடைய வெளுத்த கோரப்பற்களில் மரகதப்பச்சைபோல் விளங்கிற்று. உன்னுடைய கோரப்பற்களே அப் பூமியை அபஹரித்த ஹிரண்யாக்ஷனென்னும் அஸுரனைக் கொல்ல ஆயுதமாய் இருந்தது. ஸ்வபாவத்திலேயே வராஹஜாதியானது மிகுந்த பலத்துடன் ஜலத்திற்கும் சேற்றிற்கும் அஞ்சாமல் பூமியை உழுதுகொண்டுதிரியும். அதிலும், பகவான் அந்த ரூபத்துடன் நிற்க அச்செருக்கை அளவிடமுடியாது. புக்கு பிரளயார்ணவத்திலே பிரவேசித்து, அன்றுன் ஒரு கோட்டின்மேல் அவ்வஸுரனைக் கொன்று மீண்டுவரும்பொழுது அப்பூமி உன் பற்களில் சிறிய பச்சை மணி போல் விளங்கிற்று. நீர் எவ்வளவு பெரிய ரூபமாக அன்று இருந்திருக்கவேண்டும்! இத்தால், ஒவ்வொரு நிலையில் மிகப் பெரிய வடிவத்தை எடுத்துக்கொண்டும் ரக்ஷிக்கிறவர் என்பதாயிற்று.

விரிதோட்டசேவடியை:— தோடு என்று இதழ்களுக்கும் கர்ணபூஷணத்திற்கும் பெயர். விரி—மலர்ந்த. மலர்ந்த இதழ்களை உடைய தாமரை போன்ற திருவடிகளை நீட்டினாய் என்று பொருள். அல்லது விரிதோட்ட என்பது விளி. மலர்ந்த ஒளியுள்ள திருக்குண்டலங்களை காதுகளிலணிந்துகொண்டு, வாமனனாய் யாசிக்க வந்தவனே! என்றும் பொருளாம். மஹாபலி அக்குண்டலங்களின் சோபையினாலும் வஞ்சிக்கப்பட்டான் என்றும் தோன்றுகிறது. இப்பூமியிலுள்ளாரும் விண்ணுலகிலுள்ள தேவஜாதிகளும் இவ்வண்டம் உடைந்து விடுமோ என்று நடுங்கும்படி நீண்ட உன் திருவடிகளால் அளக்கப்பட்ட இப்பூமி, வராஹாவதாரத்தில் மிகச்சிறியதாய் இருந்தது. ஆகவே, சிறிய வடிவைக் கொண்டும் பெரியவடிவைக் கொண்டும் அவஸரங்களில் வந்து அளிப்பன் என்று கருத்து.

மண்ணும் மலையும் மறிகடலும் மாருதமும்
விண்ணும் விழுங்கியது மெய்யென்பர்—எண்ணில்
அலகளவுகண்ட சீராழியாய்க்கு, அன்றிவ்
வுலகளவு முண்டோ. உன்வாய். (10)

மண்ணும்	இப்பூமியும்	அலகு அளவு கண்ட	எண்ணிக்கைகளுடைய எல்லையைப் பார்த்த (எண்ணமுடியாத)
மலையும்	பர்வதங்களும்		
மறிகடலும்	(அலைகள்) மடங்கும் ஸமுத்ரமும்		
மாருதமும்	வாயுவும்	சீர்	கல்யாண குணங்களையும்
விண்ணும்	ஆகாசமும் (இவை எல்லாவற்றையும்)	ஆழியாய்க்கு	சக்ராயுதத்தையும் உடைய
விழுங்கியது	சாப்பிட்டது		
மெய் என்பர்	உண்மை என்றே சொல்கிறார்கள்	உன் வாய்	உன்னுடையவாயானது
எண்ணில்	(நான்) யோசிக்கும் பொழுது	அன்று	அக்காலத்தில்
		இ உலகளவும்	இப் பிரபஞ்சத்தை விழுங்குவதற்கு ஈடான அளவுடன்
		உண்டோ	இருந்ததோ?

இப்பாசுரத்தில் ஈச்வரன் அகடிதகடனா ஸமர்த்தன் என்கிறார். ஒரு காலத்தில் பஞ்சபூதங்களடங்கிய இப்பிரபஞ்சங்களையே நீர் விழுங்கிவிட்டீர். அதை யாவரும் உண்மையென்றே சொல்லுகிறார்கள். இவ்வளவு பெரிய பிரபஞ்சத்தை விழுங்கும்பொழுது உன் வாய் பிரபஞ்சத்தளவு விரிந்து பெரியதாக இருந்ததோ? இல்லாவிடில் எப்படி விழுங்கமுடியும்? என்று கேட்கிறார்.

மண்ணும்:—ஸகலஜீவராசிகளுக்கும் ஆதாரமாயும், காடின்ய குணம் உள்ளதுமான பூமியையும், அப்பூமியைத்தாங்குகிற மலைகளையும், இப்பூமிக்கு வேலிபோல் காப்பான ஸமுத்திரத்தையும், யாவரும் ஜீவித்திருக்கக் காரணமான காற்றையும், இவை எல்லாவற்றிற்கும் இடங்கொடுக்கும் ஆகாசத்தையும் நீ அமுது செய்தது ஸத்யமென்று மறைநிதிகள் சொல்லுகிறார்கள். இந்திரஜால வித்யை போல் பொய்யில்லை.

எண்ணில் அலகளவுகண்ட:—உயர்ந்த எண்ணிக்கைகளையும் மீறியிருக்கிற கல்யாணகுணங்களுக்கு ஸமுத்ரம்போல் இருப்பவன். ஆழியென்பதற்கு ஸமுத்ரம் என்று பொருளானல் ரத்நங்கள் ஸமுத்திரத்தில் மலிந்து கிடப்பது போல் கல்யாண குணங்கள் நிறைந்திருப்பவன் என்பது கருத்து. ஆழி என்பதற்கு சக்ராயுதம் என்று பொருளானல் "அலகளவு கண்ட சீர்" எண்ணிறந்த

கல்யாண குணங்களையும் "ஆழியாய்க்கு" சக்ராயுதத்தையும் உடையவன் என்று பொருள்.

அன்றிவ்வுலகளவு :— அப்பிரளயகாலத்தில் அவ்வுலகங்களை அமுது செய்யும் பொழுது உன்வாய் மிகவும் பெரியதாய் இருந்ததோ? என்று வினவுகிறார்.

மற்ற தேவர்களிடம் கிடைக்கவரிதான குணங்கள் உன்னிடம் ஸ்வாபாவிகங்கள் போலவும், மற்றவர்கள் கண்ணால் காண்பதற்கும் அஞ்சும்படியான தேஜோநிதியான திருவாழியைக் கையில் ஏந்துவது போலவும், இவ்வுலகத்தை விழுங்கியது உன்னுடைய மிகுந்த சக்தியின் காரியமென்று திரண்ட பொருள். வாய் பெரியதோ என்று வினவியிருப்பது வாய் பெரியதாய் இருந்தால்தான் விழுங்கமுடியும் என்ற கருத்தைக்கொண்டு அல்ல. உண்மையில் அப்பொழுது பெரியதாய் இருக்கவுமில்லை. உலகை உண்டு ஓர் ஆலிலையில் சிறு குழந்தையாய் படுத்திருந்ததுபோல் இதுவும் அவனது அகடிதகடனா ஸாமர்த்தியத்தாலென்று அறியவேண்டும்.

வாயவனையல்லது வாழ்த்தாது, கையுலகம்
தாயவனை யல்லது தான் தொழா—பேய்முலைநஞ்
சூணாகவுண்டா னுருவொடு பேரல்லால்
கேளா செவி. (11)

வாய்	என்னுடையவாயானது	நஞ்சு	விஷத்தை
அவனையல்லது	அவ்வீசனைத்தவிர	ஊணாக	ஆகாரமாக
வாழ்த்தாது	(மற்றொருவனை) துதிசெய்யாது.	உண்டான்	புசித்தவனுடைய
கை	கைகள்	உருவல்லால்	திருமேனியைத் தவிர
உலகம் தாயவனை யல்லது	உலகத்தை அளந்தவனைத்தவிர	காணா	மற்றொன்றைப்பார்க்காது
தான் தொழா	(மற்றவனை) ஸேவிக்காது	செவி	காது
கண்	கண்கள்	பேரல்லால்	அவன் திருநாமத்தைத் தவிர
பேய் முலை	பூதனையின் கொங்கைகளிலுள்ள	கேளா	மற்றசப்தங்களைக் கேட்காது.

இப்படி ஆச்ரித ரக்ஷணத்தில் த்வரையுள்ள ஈச்வரனுடைய குணங்களை பத்துப்பாசுரங்களால் அநுஸந்தித்து, இப்பாட்டில் அவன் விஷயத்தில் தன்னுடைய இந்திரியங்கள் பொருந்தி அனுப விப்பதைப் பேசுகிறார். "விசித்ரா தேஹஸம்பத்திரீச்வராய நிவே திதும்" என்றபடி விசித்திரமான பல இந்திரியங்களோடு கூடின இந்த சரீரம் ஸர்வேச்வரனை அநுபவிப்பதற்காகவே ஸிருஷ்டிக்கப் பட்டிருப்பதால், அவ்வண்ணமே என் கரணங்களும் அவனிடம் ஈடு பட்டு ஸாபல்யமடைந்தனவென்கிறார்.

வாயவனையல்லது:—என்வாய் பக்ஷி மிருகங்கள் ஆகிய திரி யக் ஜாதிகளில் பிறப்பதற்கீடான வாசிகாபாதங்களான வீண் வார்த்தைகளைப்பேசாமல் ஜிஹ்வே கீர்த்தய கேசவம் முராரிம் என்பதற்கிணங்க அப்பரமபுருஷனையே ஸ்தோத்ரம் செய் கிறது. "மெய்ய மலையானை சங்கேந்தும் கையானை கைதொழாக் கையல்ல கண்டாமே" என்று அவனைத் தொழாத கைகள் கைக ளல்லவென்று இவர்போன்றவர்கள் பாசுரமாதலால் இவர் கைக ளும் அவனையே அஞ்சலிசெய்து நிற்கின்றன. "என் அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக்காணாவே" என்றபடி கண்கள் அவனையே பார்த்துக்கொண்டிருக்கின்றன. அவன் சரிதங்களைக் கேளாத காதுகளை பாம்புகள் குடியிருக்கும் பிலங்களாகச் சொல்வ தற்கிணங்க, அவ்வண்ணமில்லாமல் என் செவிகள் அவன் சரிதங் களையே கேட்டு அதிலேயே திருப்தியடைந்திருக்கின்றன. வாஸாம்ஸி வாநிவ்ருத்தராணஸ்வயம்ஹ: என்று விஷயாந்த ரங்களில் செல்லக்கூடிய ஸ்வபாவத்தோடு கூடின இந்திரியங்கள் ஸர்வேச்வரனிடத்திலேயே ஈடுபட்டு அவனையே அநுபவித்துக் கொண்டிருக்கின்றன.

செவிவாய் கண் மூக்குடலென் றைம்புலனும், செந்தீ
புவிகால் நீர் விண்பூத மைந்தும்—அவியாத
ஞானமும் வேள்வியும் நல்லறமு மென்பரே
ஏனமாய் நின்றார்க் கியல்வு. (12)

செவி	காது	கண்	கண்கள்
வாய்	வாகிந்திரியம்	மூக்கு	நாசிகை

உடல்	த்வகிந்த்ரியம்
என்று ஐம்புலனும்	என்கிற பஞ்சேந்திரியங்களும்
செந்தீ	சிவந்த அக்நி
புவி	ப்ருதிவீ
கால்	வாயு
நீர்	ஜலம்
விண்	ஆகாசம்
பூதமைந்தும்	இவ்வைந்து பூதங்களும்

அவியாத	அணையாத
ஞானமும்	பக்தியாகிற ஞானமும்
வேள்வியும்	யாகமும்
நல்	உயர்ந்ததான
அறமும்	தர்மமும்
ஏனமாய் நின்றார்க்கு	வராஹரூபத்துடன் வந்த பெருமானுக்கு
இயல்வு	உபாயம் என்று
என்பரே	சொல்லுகிறார்கள்

ஸர்வேச்வரனுக்கு உபாயமான பக்தியோகத்தை உபதேசிக்கிறார். அல்லது பகவானை அநுபவிக்கத் தன்னிடமுள்ள பக்தியென்னும் ஸாதனத்தை வெளிக்காட்டுகிறாராகவுமாம்.

செவிவாய்:—செவி முதலிய இந்திரியங்களும் பஞ்சபூதங்களடங்கிய சரீரமும், பக்தியோகமும்; அக்னிஹோத்ரம் முதலிய கர்மங்களும், விவேகம் முதலிய ஆத்மகுணங்களும், வராஹரூபியான பரமனை அடைவதற்கு உபாயங்கள் என்று பொருள். "ஜ்ஞாநாந் மோக்ஷ:" என்றபடி பக்திதான் பெருமானையடைய நேரானவுபாயம். மற்றவைகளை உபாயங்களாகச் சொன்னது எப்படிப் பொருந்தும் என்றால், பக்தியோகம், இந்திரியங்களுடன் கூடின, பஞ்சபூதங்களால் செய்யப்பட்ட சரீரத்தால் செய்யப்படவேண்டுமாதலால் அவற்றையும் உபாயமென்னலாம். ஆக பக்தியோகம் ஸாக்ஷாத்ஸாதனமாகும். அதற்கு உதவியான சரீரம், பரம்பரையாக மோக்ஷஸாதனமென்று கருத்து. இப்படியே வேள்வி என்கிற அக்னிஹோத்ரம் முதலிய கர்மங்களும், "யஜ்ஞேந தாநேந தபஸாநாசகேந" ஆப்ரயாணாத் தத்ராபி ஹித்ருஷ்டம், "விஹிதத்வாச்ச ஆச்ரமகர்மாபி," அக்நிஹோத்ராதிது தத்கார்யாயைவ தத்தர்சனாத் என்பவைகளுக்கிணங்க, பக்தி யோகம் மனதில் தங்குவதற்குக் காரணங்களாகச் சொல்லப்பட்டபடியால் அவைகளும் பரம்பரயா மோக்ஷஸாதனங்கள். இவ்வண்ணமே விவேகம், தயை, ஸத்யம், பொறுமை, முதலிய நற்குணங்களும் பக்தியை வளரச்செய்யும் காரணங்களாதலால் அவைகளும் ஸாதனங்களாகச் சொல்லப்பட்டன. ஆகவே

சரீரத்தால் அநுஷ்டிக்கப்படுமதாயும் அக்னிஹோத்ரம் முதலிய கர்மங்களாலும், விவேகம் முதலிய குணங்களாலும், வளர்க்கப் படுமதான பக்தியோகம் பரமபுருஷனை யடைவதற்கு உபாயம் என்று சொல்லப்பட்டதாயிற்று.

இங்கு என்பரே என்றவிடத்தில் ஏ என்ற சொல்லால் இகழ்ச்சி தோற்றுகிறது என்று சொல்பவருமுண்டு. பக்தியை உபாயமாகக்கருதி அநுஷ்டிப்பவர்களை நிந்திக்கிறாரென்று பொருள். அதாவது மோக்ஷத்தை அடைவதற்கு பக்தி, ப்ரபத்தி, இவையி ரண்டும் உபாயங்கள். பக்தியாவது தினந்தோறும் அப்யாஸம் செய்யப்படுமதாயும், தைலதாரைபோல் இடையில் விச்சேதமில்லாத தாயும்,பிரத்யக்ஷம்போல் தோன்றுவதாயுமுள்ள பகவானைப்பற்றிய அன்புடன் கூடிய நினைவின் வரிசை. பிரபத்தியாவது கீழ்சொல் லிய பக்தியை என்னால் அநுஷ்டிக்க முடியவில்லை, நீயே அந்த பக்திஸ்தானத்தில் நின்று எனக்கு அருள் புரியவேணுமென்று ஈச் வரனை கெஞ்சிகேட்டுக் கொள்வதுதான். நாள்தோறும் ஒரு மாத் திரைப்போதும் விடாமல் செய்யவேண்டிய பக்தியோகம் நம் மால் இயலாத செயலாதலால் அதில் இறங்கி ஏன் சிரமப்படவேணு மென்று பக்தியோக நிஷ்டர்களை இகழ்கிறாரென்று பொருள். பிர பத்தியை அநுஷ்டித்து கவலையற்றிருக்கை மேலானதென்கிறார். பிரபன்னர்களும் மோக்ஷத்திற்காக பக்தியை ஆசைப்படாவிடினும் இந்த சரீரமுள்ளவரையில் ஸுகரூபமான பக்தியை ஆசைப்படு வார்கள். பக்தி—அவர்களுக்கு பயனாகவிருக்கும்.

பக்தியை ஸாதனமாகச் செய்யாமல் பயனாக அநுஷ்டிப்பது மேலானது என்று விவக்ஷிதம். பிரபத்தியை அநுஷ்டித்து உத்தர காலத்தில் பயனாக பக்தியை செய்து போதுபோக்கும் ஸ்ரீவைஷ்ண வர்கள் சிறந்தவர்களென்று பரமதாத்பர்யம்.

இயல்வாக வீன் துழாயானடிக்கே செல்ல
முயல்வா ரியலமரர் முன்னம்—இயல்வாக
நீதியாலோதி நியமங்களாற்பரவ
ஆதியாய் நின்றாரவர், (13)

முன்னம்	அநாதிகாலமாக
இயல்	ஞானசக்திகள்வாய்ந்த
அமரர்	நித்யஸூரிகள்
இயல்வாக	(தங்களுக்கு) தகுதியானபடி
ஈன்துழாயான்	ரமணீயமான திருத்துழாயை அணிந்த ஸர்வேச்வரனுடைய
அடிக்கே	திருவடிகளிலே
செல்ல	சென்று நெருங்கும்படி
முயல்வார்	முயற்சி செய்பவர்கள்
இயல்வாக	(மற்றவர்களுக்கு) தகுதியாக
நீதியால் ஓதி	நீதி தவறாமல் அத்யயனம்செய்து
நியமங்களால் பரவ	வேதத்தில் சொல்லியவரம்புகளுடன் ஸ்தோத்ரம் செய்யும்படி
அவர்	அந்தஸர்வேச்வரன்
ஆதியாய் நின்றார்	முதன்மையான காரணமாயிருந்தார்.

எம்பெருமானை அடைவதற்கு பக்தியோகம் பரம ஸாதனமென்று சொன்னபிறகு, ஆழ்வார்களுக்கு பகவத்பக்தி அவதரிக்கும் பொழுதே உண்டாகிறபடியால் அவர்கள் பரமனை பலபடியாக அநுபவிக்கிறார்கள். அறிவிலிகளான நம்போல்வார் எங்ஙனம் அவனைக்கண்டு கைங்கர்யங்கள் செய்வது? என்று கேள்வி பிறக்க நமக்கு அவனைக்காண விரதுண்டு(?) என்று இப்பாட்டில் பதிலுரைக்கிறார்.

இயல்வாக:—[illegible] கண்களைக் [illegible] அழகு பொருந்திய திருத்துழாயை மாலையாக அணிந்த [illegible] புருஷோத்தமனுடைய திருவடிகளில் சேருவதற்குத் [illegible] திருவாராதனங்கள் செய்து நித்யஸூரிகள் [illegible] விளங்குவார்கள் அநாதி காலமாய் [illegible] உயர்வு அவர்களுக்கு [illegible]. [illegible] அவனைக்கண்டு அநுபவிக்க [illegible] களால். இயல்வாக [illegible] கிடைக்கும் துணைகளையும் [illegible] செய்து [illegible] அவன் [illegible] கருத்து. இப்படி வேதத்தியமை(?) [illegible]

கருமங்களைச் செய்து அவனையே பாடிக்கொண்டிருப்பது ஞான சக்திகள் இல்லாதவர்களான நம்மால் ஸாதிக்க முடியாத செயலாயிருக்கிறதே? என்று வினவ, நான்காமடியால் பதிலுரைக்கிறார். ஆதியாய்நின்றாரவர்தாமேபுக்தியோகம் தம்மேயவ மாயாத்தியே என்கிறபடி அவ்வீசனே நமக்கு கீழ்ச்சொல்லிய வேலைகளைச்செய்ய புத்தியைக் கொடுத்தும் கருவிகளைக் கொடுத்தும் பக்தியை வளரும்படி செய்தும் மோக்ஷமளவான உபகாரங்களைச் செய்து கொடுக்கிறான். நாம் அவனிடம் சிறிது ஆசை வைத்தால் மேலுள்ள உபாயங்களுக்கு நாம் வியாஜமேயல்லது ப்ரதானகாரணம் ஸர்வேச்வரன் என்றபடி.

அவரவர் தாந்தாமறிந்தவா றேத்தி
இவரிவ ரெம்பெருமானென்று—சுவர்மிசைச்
சார்த்தியும் வைத்தும் தொழுவர், உலகளந்த
மூர்த்தி யுருவே முதல். (14)

அவரவர்	ரஜஸ்தமோகுணங்களிகள்	சுவர்மிசை சார்த்தியும்	சுவர்களில் எழுதிவைத்தும்
தாம் தாம் அறிந்தவாறு	தங்கள் புத்திகளால் தெரிந்துகொண்டபடி		பிம்பங்களாக ப்ரதிஷ்டைசெய்து வைத்தும்
		தொழுவர்	ஸேவிப்பார்கள்
ஏத்தி	துதிசெய்து	உலகளந்தமூர்த்தி உருவே	இவ்வுலகையளந்த பெருமானுடைய ஸ்வரூபமே
இவர் இவர்	இன்னார் இன்னார் தான்		
எம்பெருமான் என்று	நமக்கு ஸ்வாமியென்று (நிச்சயித்து)	முதல்	ஆதிகாரணமாகும்.

இப்படி ஈசனை அடைவதற்குரியவுபாயத்தை அருளிச்செய்த பின் அவ்வீசனை வேண்டாதார் படும்பாட்டை இப்பாசுரத்தில் பேசுகிறார். அல்லது ஸாத்விகர்களான அதிகாரிகளைக் கீழே பேசி ராஜஸதாமஸர்களை இப்பாட்டில் பேசுகிறாராகவுமாம். ரஜஸ் தமோ குணங்கள் வஸ்துக்களை உள்ளபடி காண்பிக்காதென்றும், விபரீதமாயும் காண்பிக்குமென்றும் பகவத்கீதையில் சொல்லியபடி, அக்குணங்கள் நிறைந்தவர்கள் தங்களுடைய புத்திகளைக்கொண்டு கண்ணில் தென்பட்ட சிலரைப்புகழ்ந்து பரதேவதைகளாகக் கருது

கிறார்கள். ஸகரமஹாராஜாவின் பிள்ளைகள் தம் தகப்பனுடைய அச்வமேதக்குதிரையைத் தேடிச்செல்லுங்கால் பாதாள லோகத்தில் கண்ணெதிரே தோன்றிய கபில முனிவரைப்பார்த்து அவர் தவத்தையும் தர்மங்களையும் மனதில் சிந்தியாமல் அக்குதிரையை அவரே திருடினாரென்று தீர்மானித்தார்கள். அவர் ஸமீபத்தில் அக்குதிரை கட்டப்பட்டிருந்ததே அதற்குக் காரணமாகக் கொண்டார்கள். அதுபோல், ராஜஸதாமஸர்கள் ப்ரஹ்மருத்ராதி தேவர்களைக்கண்டு அவர்கள் குணங்களையும் ரூபங்களையும் சக்தியையும் ஆலோசிக்காமல் இவ்வுலகில் கோயில்கொண்டிருக்கும் இருப்பையே காரணமாகக்கொண்டு அவர்களை கடவுள் என்று துதிசெய்கிறார்கள். தங்கள் வீடுகளில் சுவர்களிலும் சித்திரங்களாக எழுதிவைத்து பூஜிக்கிறார்கள். சிலர் ப்ரதிமைகளை நிர்மாணம் செய்து ப்ரதிஷ்டைகள் செய்தும் பூஜிக்கிறார்கள். என்னுடைய தீர்மானமோ வென்றால் உலகளந்தவுருவே எல்லா தேவதைகளுக்கும் காரணமென்பதாம்.

ராஜஸ தாமஸர்கள் தேவதாந்தரங்களை வணங்குகிறார்கள் என்று சொல்லி அதன் பயனை இப்பாசுரத்தில் சொல்லாமையினால் அப் பூஜைகள் பயனற்றவை என்று கருத்து.

“உலகளந்த மூர்த்தி” என்பதால் “[illegible] வணங்கும் தெய்வ வழுவுமெல்லாம் முன்படைத்தான்” என்பதுபோல் [illegible] தேவதைகளை வணங்குகிறவர்கள் [illegible], [illegible] [illegible] கால்வைத்த நாராயணனே [illegible] [illegible] படி.

முதலாவார் மூவரே, அம்மூவருள்ளும்
முதலாவான் மூரிநீர்வண்ணன்— முதலாய
நல்லானருளல்லால் நாமநீர் வையகத்துப்
பல்லாரருளும் பழுது (15)

மூவரே	அரி, அயன், அரன் [illegible] [illegible]	மூரிநீர்வண்ணன்	[illegible]
முதல் ஆவார்	பிரகாசிக்கின்ற [illegible] [illegible]கள்		[illegible]
அம்மூவர் உள்ளும்	அம்மூவர்களுக்குள்ளே	முதலாய் [illegible] / முதலாய	காரணபூதன் / காரணபூதனாயும்

நல்லான்	உபகாரகனுமான திருமாலின்	பல்லார்	அவனைத்தவிர பல பேர்களுடைய
அருளல்லால்	கிருபையைத்தவிர	அருளும்	கிருபையும்
நாமநீர் வையகத்து	அச்சப்படும்படியான ஜலம் சூழ்ந்த இப்பூமியில்	பழுது	வீணாகும் (பிரயோஜனமற்றது.)

கீழ்ப்பாசுரத்தில் உலகளந்த மூர்த்தி உருவே முதல் என்று நிர்ணயம் செய்தது உம்முடைய அபிமானத்தாலல்லவா என்று வினவ வந்தவர்களுக்கு இப்பாட்டில் விடையளிக்கிறார். தத்வங்களை உண்மையை பிரித்துக்காட்டி பரதேவதா நிர்ணயம் செய்கிறார்.

முதலாவார்:—இவ்வுலகில் பலதெய்வங்கள் பல்லாயிரம் ஜனங்களால் வணங்கப்பட்டிருந்த போதிலும், பிரமன் விஷ்ணு சிவன் என்கிற மூவர்தான் பிரதான தெய்வங்கள். இவர்கள் முறையே ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைச் செய்கிறவர்கள், இம்மூவருள்ளும் விஷ்ணுவே மற்றவர்களுக்கும் காரணமாயிருப்பவர். பிரமன் சிவன் இவர்களுக்கு அந்தர்யாமியாக விருந்து ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களை நடத்தி ஸ்வரூபேண ரக்ஷணம் செய்கிறவர். ஆதலால் கடல் வண்ணன்தான் பரம்பொருள். அவனுடைய அருளைத்தவிர மற்றவர்களுடைய அருள் வீண்தான் என்கிறார். பல பிரஜைகள் பல தெய்வங்களைத்தொழுது பல பிரயோஜனங்களை அடைந்து ஸுகமாய் வாழ்ந்திருப்பதை நாம் நேரில் கண்டிருக்க, ஆழ்வார் இதர தெய்வங்களுடைய அநுக்ரஹம் பயனற்றது என்பதற்குக் கருத்து யாதெனில் “யாந்தி தேவவ்ரதா தேவாந்” பித்ருந் யாந்தி பித்ருவ்ரதா: என்று இதர தேவதைகளை ஸேவிப்பவர்கள் அந்தந்த தேவர்களுக்கு ஸமானமான ஸ்தானத்தை அடைந்து ஸுகித்திருந்தாலும் “ஆப்ரஹ்ம புவனால்லோகா: புநராவர்த்திநோர்ஜுந” என்றபடி மீளவும் திரும்பி இப்பவக் கடலில் வீழ்ந்து துயரப்பட வேண்டியதாயிருப்பதால், “யம் ப்ராப்ய நநிவர்த்தந்தே தத்தாம பரமம் மம” என்றபடி மீளவும் துக்கச் சுழலில் அகப்படாதபடி ஸாந்த பரமாநந்தத்தையும் அடைவதற்கு மற்றதேவர்களுடைய அநுக்ரஹம் வீணாகும் என்றபடி.

முதலாய நல்லான் என்பதால் பெற்றெடுத்த தாய்போலும் குணங்களாலும் பரிபூர்ணன் என்பது பொருள்.

பல்லார் என்பதால் அயன் அரன் இந்திரன் முதலாத் தெய்வங்கள் தனித்தனியாகவோ, திரளாகச் சேர்ந்தோ அருள் புரிந்தாலும் நாம் விரும்பிய முக்தியைப் பெற விரகில்லை என்கிறார். மிகவும் ஹிதமாயும் பத்யமாயும் உள்ள தாய் முலைப்பாலிருக்க விஷபானம் பண்ண முயல்வது தகுமா? என்பது இரண்டாம்பொருள்.

பழுதே பலபகலும் போயின வென்று, அஞ்சி
அழுதே னரவணைமேல் கண்டு—தொழுதேன்
கடலோதம் காலலைப்பக் கண்வளரும், செங்கண்
அடலோத வண்ணரடி. (16)

கடல்	ஸமுத்திரத்தினுடைய	வண்ணர்	[illegible]
ஓதம்	அலைகள்	அடி	திருப்பாதங்களை
கால்	திருவடிகளை	அரவு அணை மேல்	[illegible]
அலைப்ப	பிடிப்பது போல்வீச	கண்டு	[illegible]
கண்வளரும்	[illegible]	தொழுதேன்	[illegible]
செங்கண்	[illegible]	பலபகலும்	[illegible]
அடல்	[illegible]	பழுதே	[illegible]
ஓதம்	[illegible] அலைகளுடைய [illegible]	போயின என்று	[illegible]
		அஞ்சி	[illegible]
		அழுதேன்	[illegible]

ஸ்ரீய: பதியின் அருளை [illegible] என்று [illegible] பின் அவன் அருள் பெறாமல் [illegible] [illegible] டேனே என்று வருந்துகிறார்.

பழுதே பலபகலும்:—[illegible] கால் பிடிப்பதுபோல் தோன்ற பாம்பின்மேல் பள்ளி [illegible] யத்தால் சிவந்த கண்களையுடைய [illegible] போன்ற [illegible] வடிகளை ஸாக்ஷாத்கரித்து ஸேவித்தேன். [illegible]

கண்டு தொழுது பாசுரங்கள் பாடாது சென்றகாலங்களில் வாளாவிருந்து விட்டேனே. போனகாலமெல்லாம் தேவதாந்தரங்களையும் விஷயாந்தரங்களையும் பற்றிக்கிடந்து உய்வதோர் வழியின்றி வீணாக்கினேன் என்று பரிதபிக்கிறார்.

பலபகலும்:—இந்திரியங்களின் வேலைகளையெல்லாம் அடக்கி நித்திரையால் இரவை அறிவின்றிப் பழுதாக்குவது பிரஜைகளுக்கு இயல்பேயாகும். ஆதலால் இரவைப்பற்றி துக்கப்பட நியாயமில்லையேயாகிலும் பகலை பழுதே போக்கினது வருந்துவதற்குக் காரணமாயிற்று. திருமங்கையாழ்வாரும் "பாவியேனுணராது எத்தனை பகலும் பழுதுபோயொழிந்தன நாட்கள்" என்றார். சென்ற காலம் அநாதியாதலால் அவ்வளவுகாலத்தையும் வீணாக்கழித்தேனே என்று அழுகிறார்.

அஞ்சி அழுதேன்:—இனி வரப்போகிற நாட்களும் பகவத் த்யானத்தோடு செல்லவேண்டுமே! கீழ் நாட்கள்போல் அறிவின்றி வீணாகுமோ என்று அஞ்சுகிறார். "ஒன்று மறந்தறியேன்" என்ற பாசுரத்தில் கர்ப்பவாசத்திலேயே ஈசனை மறவாத நான் இனி மறக்கப்போகிறேனோ என்று இவர் தாமே சொல்லியிருக்க, இங்கு அஞ்சுவதற்குக் காரணம் யாதெனில் பஞ்சேந்திரியங்கள் வென்றவரைப் பொருந்தாத அடிமை செய்வாரையும் இந்நிலத்தில் கொடியவென்று சொல்லியிருப்பதால் அவ்விந்திரியங்கள் தனக்கு விஷயங்களில் ஆசையைப் பிறப்பித்து பரமாத்மாவை மறக்கச்செய்தால் நாம் என்ன செய்வோம்? என்று விரோதிகளை நினைத்து.

அரவணைமேல்:—குளிர்த்தி, மணம், மார்த்தவம், இம்முக்குணங்களால் உயர்ந்த திருவனந்தாழ்வானென்கிற படுக்கையில் மேன்மை தோன்றப் பள்ளிகொண்ட செங்கண்மால்.

கடலோதம்:—திருப்பாற்கடலில் அலைகள் கால் பிடிக்கக்கிடந்த ப்ரகாரத்தை அல்லது "உவர்க்கும் கருங்கடல் நீருள்ளான்" என்று உபநிஷத்துக்களிலும் பகவான் வசிப்பதாகப் ப்ரமாணங்கள் சொல்லுகிற படியால் லவண ஸமுத்ரத்தில் கிடந்த ப்ரகாரத்தையாகவுமாம்.

அடலோத வண்ணர்:—ஸௌந்தர்யங்களால் ஸேவிக்கிறவர்களை தன் வழிப்படியான திருவடிவையுடையவர்.

அடியும்படி கடப்பத் தோள் திசைமேற் செல்ல
முடியும் விசும்பளந்த தென்பர்—வடியுகிரா
லீர்ந்தான் இரணியன தாகம், இருஞ்சிறைப்புள்
ளூர்ந்தான் உலகளந்த நான்று, (17)

வடி	கூர்மையான	அடியும்	ஒருபாதம்
உகிரால்	நகத்தினால்	படிகடப்ப	பூமியை அளக்க
இரணியனது	ஹிரண்யகசிபுவினுடைய	தோள்	திருப்புஜங்கள்
ஆகம்	சரீரத்தை	திசைமேல் செல்ல	திக்குகளின் மேல் நிறையும்படி போக
ஈர்ந்தான்	பிளந்தவனும்	முடியும்	கிரீடமும்
இருசிறை	விசாலமான சிறகுகளையுடைய	விசும்பு	ஆகாசத்தை (மேலுலகங்களை)
புள்	பெரியதிருவடியை	அளந்தது	அளவிட்டது
ஊர்ந்தான்	நடத்துகிறவனுமான ஈச்வரன்	என்பர்	என்று [illegible]
உலகு அளந்த நான்று	உலகங்களை அளக்கும் தருணத்தில்		

கிழநாள்கள் எவ்விதம் பழுதாகச் செல்லா என்பதை விளக்குங் காட்டுகிறார் இப்பாட்டால்.

அடியும்படிகடப்ப—இவ்வுலகில் அவ்வீசன் [illegible] அவதாரங்கள் பலவற்றையும் [illegible] [illegible]

அடியும்படிகடப்ப—[illegible]

வடியுகிறால்:—பரமபக்திமானை ப்ரஹ்லாதனுக்காக நரசிங்க ரூபத்துடன் வந்து அவன் தாதையின் உடலை நகங்களால் கிழித்துப் பொகட்டு வீரலக்ஷ்மியுடன் விளங்கினின்ற திருமேனியையும் ஸேவிக்கப் பெற்றிலேனே!

இரும் சிறை:—புஷ்பங்களைப்பறிக்கச் சென்று பொய்கையில் முதலைவாயில் அகப்பட்ட யானையின் துயரம்தீரப் பெரியதிருவடியின் பேரில் ஏறி எழுந்தருளியபோதும் காணுதிருந்துவிட்டேனே. இப்படி அநாதியாக நான் ஸம்ஸரித்த காலத்தில் அவன்பல அவதாரங்களைச்செய்திருப்பினும் அச்சமயங்களில் நான் எங்கிருந்தேனோ என்று புலம்புகிறார்.

நான்ற முலைத்தலை நஞ்சுண்டு, உறிவெண்ணெய்
தோன்ற வுண்டான் வென்றி சூழ்களிற்றை,--ஊன்றிப்
பொருதுடைவு கண்டானும் புள்ளின்வாய் கீண்டானும்
மருதிடை போய் மண்ணளந்தமால் (18)

நான்ற	தொங்குகிற	ஊன்றி	பொருந்திநின்று
முலைத்தலை	கொங்கைகளின் நுனி	பொருது	போர்புரிந்து
		உடைவு	அதன் நாசத்தை
நஞ்சு	விஷத்தை	கண்டானும்	செய்தவனும்
உண்டு	புசித்து	புள்ளின்வாய்	கொக்கின் வடிவுடன் வந்த அஸுரனுடைய வாயை
உறி	உறிகளில் வைத்திருக்கும்		
வெண்ணெய்	வெண்ணெயை	கீண்டானும்	கிழித்தவனும்
தோன்ற	[illegible] ப்ரஸித்தமா [illegible]	மருது இடை போய்	இரண்டு மருதமரங்களின் நடுவே தவழ்ந்துபோன
உண்டான்	அமுது செய்தவனும்		
வென்றிசூழ்	[illegible] கூடின [illegible] [illegible] மக்களில்லை	மண் அளந்த	உலகளந்தருளின
		மால்	திருமாலேயாவன்.
களிற்றை	(குவலயாபீடமென்கிற) யானையை		

இப்பாசுரத்தில் ஸௌசீல்யம், ஸௌலப்யம், முதலிய கல்யாண குணங்கள் கரைபுரண்டு ஓடின. அறியாத இடைச்சியரும் அறி

யும் வண்ணம் அவதரித்த கிருஷ்ணனையும் நேரில் ஸேவிக்கப்பெற்றி லேனே என்று வருந்துகிறார்.

நான்று:—தாய்போல் வடிவெடுத்துவந்த பூதனையின் விடங் கலந்த முலையுண்டு, ஆய்ச்சியர்கள் அச்சமுற வெண்ணெயுண்டு ஒன்றுபடி உறியிலிருந்து வெண்ணெயைக் கையால் வாரி விழுங்கி யும், குவலயாபீடமென்னும் யானையின் கொம்பினைப் பிடுங்கி அதனை நசித்துப்போகட்டும், கம்ஸனால் ஏவப்பட்டுவந்த பகாஸுரனை வாயைக்கிழித்து ஸம்ஹரித்தும், மருதமரங்களை சாய்த்தும், இப் படிப்பல விசித்திர சேஷ்டிதங்களைச் செய்த கிருஷ்ணன் அவதாரித்த காலத்தில் முறைப்படப் பிறவாத பொழுது நான் வாளாவிருந்து காலத்தைப்பழுதாக்கினேன்.

கண்ணன் பேய்ச்சி முலையுண்ட கதைச்சுருக்கம்.

கம்ஸனால் அனுப்பப்பட்ட பூதனையென்பவள் ஒரு பேய்ச்சி ஓர் இடைச்சியின் வடிவெடுத்துக்கொண்டு வீதிவழியே போய்ச் சென்று, கண்ணனாகிற குழந்தையைத் திருவாய்ப்பாடியில் நந்தகோப னுடைய இல்லத்தில் சென்று அக்குழந்தையைப்பார்த்து அதைக் கொல்ல எண்ணங்கொண்டு சிறந்த பிள்ளைபோல் அக்குழந் தையை வாரியெடுத்து விஷமேற்றிய முலையைக்கொடுக்க, குழந்தை வடிவான அக்கண்ணனும் அவளெண்ணத்தையறிந்து அவள் உயிர் போம்படியே முலையுண்டதனால் அம்முலைவழியே அவள் உயி ரையும் உண்டார் என்பது.

குவலயாபீடமென்கிற யானையைக் கொன்ற வரலாறு.

கிருஷ்ணனை வதஞ்செய்ய எண்ணங்கொண்ட கம்ஸன் தநுர் யாகமென்று ஓர் வியாஜத்தையிட்டு, அக்ரூரன் என்கிற யாதவனைத் தூதனாகக்கொண்டு ஸ்ரீகிருஷ்ணனையும் பலராமனையும் தன் நகரத் திற்கு அழைத்தான். அவ்விருவர்களும் அவ்வண்ணமே அங்கு சென்று கம்ஸனுடைய அரண்மனைக்குச் செல்லும்போது, அவ் வரண்மனைவாசலில் கிருஷ்ணனைக்கொல்வதற்காக நிறுத்தப்பட்டி ருந்த குவலயாபீடமென்கிற யானை அதன் பாகனால் தூண்டப்பட்டு யுத்தம் செய்யவருங்கால், ஸ்ரீகிருஷ்ணனும் அங்கிருந்த

கொம்பைப்பிடுங்கி அக்கொம்பினாலேயே அந்தயானையை அடித்துக் கொன்றான்.

பகாஸுரனைக் கொன்ற கதைச் சுருக்கம்.

கம்ஸனால் ஏவப்பட்ட ஓர் அஸுரன் கொக்கின் உருவத்தை எடுத்துக்கொண்டுவந்து யமுனா நதிக்கரையின் அருகே சென்று அங்கு விளையாடிக்கொண்டிருக்கும் கண்ணனை தன் அலகுகளால் எடுத்துவாயில் விழுங்க, கண்ணனும் அச்சமயம் அவன் நெஞ்சில் செல்லும்பொழுது தீபோல் எரிக்க, அதற்கஞ்சி அவ்வஸுரனும் அக்கண்ணனை வெளியே கக்கிவிட்டு தன் அலகுகளாலேயே உடம்பை குத்திக்கொல்வதற்கு முயற்சிக்க, அக்கண்ணனும் மிகுந்த சினங்கொண்டு தன் இருகைகளாலும் அதன் அலகுகளைப் பிடித்துக்கொண்டு அதன் வாயைக் கிழித்தெறிந்தான்.

கண்ணன் மருதிடைபோன வரலாறு.

கண்ணன் குழந்தையாயிருக்கும் தருணத்தில் துயரத்தை உண்டுபண்ணுகிற பலவிளையாடல்களைச் செய்துகொண்டு வந்தான். ஒரு நாள் யசோதை மிகுந்த சிரமத்துடன் கடைந்தெடுத்துச் சேமித்துவைத்த வெண்ணெயை, கண்ணன் களவு செய்து உண்பதைக்கண்ட யசோதை மிகுதியானகோபத்துடன் அக்கண்ணனைப் பிடித்து ஓர் குறுங்கயிற்றால் உரலில் கட்டிவைத்தாள். கிருஷ்ணனும் அவ்வுரலையும் இழுத்துக்கொண்டு தவழ்ந்து செல்லுகையில் வழியில் இருந்த இரண்டு மருதமரங்களின் இடையே சென்றார். அவரால் இழுக்கப்பட்ட உரலும் இரண்டு மரங்களின் இடையில் தடைபட்டு நின்றது. உடனே அதை வேகத்துடன் இழுக்க அம்மரங்கள் முறிந்து இருபுறமாய்ச் சாய்ந்து விழுந்தன. கம்ஸனால் ஏவப்பட்டு கிருஷ்ணனைக் கொல்லத் தருந்த ஸமயத்தை எதிர்பார்த்து அம்மரங்களில் வாஸம் செய்துவந்த இரண்டு அஸுரர்களும் அம்மரங்கள் விழுந்தபோது அடிபட்டு மாண்டனர்கள், என்பதாம்.

மாலுங் கருங்கடலே என்நோற்றாய்? வையகமுண்
டாலினிலைத் துயின்ற வாழியான்—கோலக்
கருமேனிச் செங்கண்மால் கண்படையுள், என்றும்
திருமேனி நீ தீண்டப்பெற்று. (19)

வையகம்	உலகங்களை	கண்படையுள்	கண்வளரும் காலத் தில்
உண்டு	அமுதுசெய்து	என்றும்	எப்பொழுதும்
ஆலினிலை	வடபத்ரத்தில்	திருமேனி	அழகான திரு மேனியை
துயின்ற	உறங்கின	தீண்டப்பெற்று	தொட்டுப் பார்க்கப் பெற்று
ஆழியான்	சக்ராயுதத்தை யுடையவனும்		
கோல	அழகியதான	காணும்	(அடியேன்) காணக் கொண்ட
கருமேனி	கருப்பான வடிவத் தையுடையவனும்		
செம் கண்	சிவந்தகண்களை யுடையவனுமான	கருங்கடலே	கறுத்த நிறமுடைய கடலே
மால்	ஸர்வேச்வரனுடைய	நீ என் செய்தாய்	நீ என்ன தவம் செய்தாய்

பகவான் அவதரித்த காலங்களில் அவனைச் சேவிக்கப் பெறாமல் ஐயேயென்று கீழ் ஏழ் பாசுரங்களால் வருந்தினர். இப்பொழுது, அவதாரகாலங்களில் சேவிப்பதை ஆசைப்படுவதைக் காட்டிலும் அவனுடைய திவ்ய ஸம்பந்தத்தை விரும்புவதுதான் மேலானது, ஏனெனில் அவதாரங்கள் சிறிது காலங்களில் தோன்றி மறையக்கூடியனவைகள். அவைகளை ஆசைப்பட்டால் தோன்றிய காலங்களில் பகவானை அநுபவித்துப் பிறகு இழக்கவேண்டியதாய் வரும். என்று யோசித்து பெருமானோடு திவ்ய ஸம்பந்தமுள்ள [illegible] ஆலோசனை செய்தார். அதற்கு ஸமுத்ரத்தைத் தேர்ந்தெடுத்து [illegible] பாவுடன் அவ்வித ஸம்பந்தத்தை அடைந்தவர் [illegible] தெரியவருமென்று நினைத்து திருப்பாற்கடலை [illegible] யத்தால் பெருமானைத் தீண்டப்பெற்றதென்று இப்பாசுரத்தில் [illegible] கிறார். ஸர்வேச்வரனுடைய திவ்யமங்கள [illegible] கொண்ட பாற்கடலே! ஒரு காலத்தில் இவ்வுலகங்களை அமுது செய்து ஆலிலையில் பள்ளிகொண்ட சக்ரபாணியுடைய [illegible] கருத்த திருமேனியை அலைகளாகிற கைகளால் எப்பொழுதும் [illegible] சித்துக்கொண்டு இருக்கிறாயே! என்ன [illegible] தொடும்படியான பாக்யத்தைப் பெற்றாய் என்கிறார்.

மாலும்:—பெருமான் சில காலங்களில் [illegible] இருக்கிறார். உன்னைவிட்டுப் பிரியாமையால் [illegible] அதனால் மகிழ்கொண்டிருக்கிற கடலே! என்கிறார். கருங்கடலே

திருப்பாற்கடல் வெளுப்பு நிறமாயிருக்க கருங்கடலேயென்று வின வியதற்குக் காரணம் யாதெனில், அதில் பள்ளிகொண்ட திருமாலின் திருமேனியின் நிறத்தால் கருத்திருந்தபடியை நினைத்து. அல்லது பகவத்ஸாம்யம் பெற்றவர்கள் பெருமாளுடைய நிறத்தையும் பெற்றிருக்கவேண்டும் என்பதை நினைத்து. அல்லது நான் அவன் பிரிவால் வெளுத்து ஏங்கியிருக்க நீ அவனுடைய ஸம்பந்தத்தையடைந்து கறுத்த மாமைபெற்று விளங்குகிருயே என்கிற இரக்கத்தைக்கொண்டு ஆகவுமாம்.

பெற்ருர் தளைகழலப்பேர்ந்தோர் குறளுருவாய்ச்
செற்ருர் படி கடந்த செங்கண்மால்—நற்ரு
மரை மலர்ச் சேவடியை வானவர்கை கூப்பி
நிரை மலர் கொண்டேத்துவரால் நின்று. (20)

பெற்ருர்	தேவகி—வஸுதேவன் என்னும் தாய் தகப்பன்மாரின்
தளை	கால்விலங்குகள்
கழல	அவிழ்ந்துபோம்படியாக
பேர்ந்து	க்ஷீராப்திபிலிருந்து கிளம்பி (கண்ணனுய் பிறந்து)
ஓர் குறள் உருவாய்	விலக்ஷணமான வாமநரூபத்தையுடையவனுய்
செற்ருர்	விரோதியானமஹாபலியால் ஆக்ரமிக்கப்பட்ட
படி	பூமியை
கடந்த	அளந்துகொண்டவனுய்
செங்கண்மால்	செந்தாமரைக்கண்ணனை ஸர்வேச்வரனுடைய
நல்	நன்மைபொருந்திய
தாமரைமலர்	தாமரைப்பூபோன்ற
சேவடியை	சிவந்த அடிகளை
வானவர்	தேவர்கள்
கைகூப்பி	கைகளால் அஞ்சலி செய்து
நிரை மலர் கொண்டு	இதழ்கள் நிறைந்த புஷ்பங்களைக் கொண்டு
ஏத்துவர்	துதிசெய்வர்கள்
ஆல்	ஆச்சரியம் (அல்லது வருத்தத்தைக்காட்டுகிறது)

திருப்பாற்கடல் பகவத்ஸம்பந்தம் பெற்ற விஷயத்தில் அதிசயமில்லை. க்ஷுத்ரப்ரயோஜனங்களை விரும்பும் இந்திரன் முதலிய தேவர்களே அவனை ஸேவிக்கப்பெற்ருர்களே, இப்பொழுது இப்புவியிலுள்ளாரும் நானும் பெறவில்லையேயென்று சோகிக்கிருர்.

பெற்றார்—தன்னை மகனாகப்பெற்ற தேவகி வஸுதேவர்களுடைய விலங்குகள் கழன்றுபோம்படி ஸ்ரீ வைகுண்டத்தை விட்டுப் புறப்பட்டு கிருஷ்ணனாய் அவதரித்தவனும், மகாபலியால் தனக்கு ஸ்வாதீனமாக்கிக்கொண்ட பூமியை வாமனனாய் வந்து அளந்து கொண்டவனுமான செங்கண்மாலின் தாமரை போன்ற திருவடிகளை தேவர்கள் வாஸனை நிறைந்த புஷ்பங்களால் அர்ச்சித்து வணங்கினார்கள். ஆல் என்ன ஆச்சரியம்.

பெற்றார் தளைகழல "தந்தைகாலில் பெருவிலங்கு தாளவிழ" என்றபடி கண்ணன் அவதரித்தவுடன் தேவகி வஸுதேவர்களுடைய விலங்குகள் கழன்றன என்பதைப் பற்றியது. அல்லது திருவாய்ப்பாடியில் "முந்தை நன்முறை அன்புடைமகளிர் முறை முறை தந்தம் குறங்கிடையிருத்தி" என்றபடி கண்ணனை எடுக்கப்பெற்றவர்களெல்லாம் ஸம்ஸார விலங்கைக் கழற்றினார்கள் என்பதைப் பற்றியதாம். அல்லது கிருஷ்ணனை பிள்ளை யென்றெண்ணியவர்களின் விலங்குகள் நீங்கினவென்றால், அவனை ஸ்வாமியென்றேத்தும் நம்முடைய விலங்குகள் நீங்குவதில் ஐயமில்லை, என்பதை காண்பிப்பதற்காகவுமாம்.

செற்றார்படிகடந்த விரோதியான மகாபலி தனக்குச் சொந்தமென்று நினைத்த பூமியை அளந்து தன் சொத்தாக்கிக் காண்பித்தான்.

நற்றாமரை மலர் அலர்ந்திருக்கும் அழகு பொருந்தியவை. திருவடிகள் எப்பொழுதும் அன்றலர்ந்த தாமரை புஷ்பம்போன்ற திருவடிகள்.

வானவர் பிரயோஜநாந்தரபரர்களான தேவர்கள். தேவர்களே மண்ணளந்தபொழுது அவன் திருவடியை பற்றப்பெற்றனரே என்கிற ஆச்சர்யம் "ஆல்" என்னும் அவ்யயச்சொல்லால் காண்பிக்கப்படுகிறது. அல்லது தேவர்களுக்குக் கிடைத்த திருவடிகள் நமக்குக் கிடைக்கவில்லையே யென்கிற ஆச்சர்யத்தைக் காண்பிப்பதற்காகவுமாம்.

நிரை என்பது வானவருக்கு அடைமொழியாகக்கொண்டால், தேவர்கள் திரள் திரளாய்வந்து ஸேவிக்கவென்று பொருள்

படும். மலருக்கு அடைமொழியாகக்கொள்ளில் இதழ்கள் நிறைந்த புஷ்பங்களால் அர்ச்சித்தார்களென்பதாம்.

தேவகி வஸுதேவர்களுடைய விலங்குகள் கழன்ற கதைச் சுருக்கம்.

மதுராபுரியில் உக்ரஸேநன் என்றொரு அரசன் அரசாட்சி செய்துவந்தான். அவனுக்கு கம்ஸன் என்பானொரு புதல்வனுண்டு. அக்கம்ஸன் ஸாதுக்களான பெரியோர்களுக்குத் துன்பங்களையும் துஷ்டர்களுக்கு நன்மைகளையும் செய்துகொண்டு மிகவும் அதர்மம் நிறைந்த அஸுரனாய் விளங்கினான். அவன் தனது வலிமையினால் தனது தந்தையான உக்ரஸேநனையும் சிங்காசனத்திலிருந்து விலக்கி தானே அரசு புரிந்து வந்தான். பிறகு தனது ஸகோதரியான தேவகி விவாஹத்துக்குரிய வயதுள்ளவளாக, அவளை வஸுதேவருக்கு விவாஹம் செய்து கொடுத்து விவாஹம் முடிந்தபின் வஸுதேவரின் அரண்மனைக்கு தம்பதிகளை அழைத்துச் செல்ல விரும்பி சதுரங்க ஸேனைகள் பின்செல்ல உயர்ந்த ரதத்தில் அவர்களை அமர்த்தி தானே ஸாரதியாயமர்ந்து தேரை நடத்துங்கால், ஆகாயத்தில் பின்வருமாறு ஓர் அசரீரி வாக்கு உதித்தது. அதாவது "ஓ மூடனே! எவளிடத்தில் மிகுந்த அன்பினால் நீ இத்தேரை நடத்திச் செல்கிறாயோ அத்தேவகியின் எட்டாவது குழந்தை உன்னைக் கொல்லப்போகிறது" என்பதாம். அதைக் கேட்டு கம்ஸன் மிகுந்த கோபத்துடன், "எனது ஸகோதரி உயிர் தரித்தாலன்றோ இவள் பெற்ற மகன் என்னைக் கொல்லலாம்? இவளையே கொன்று விடுகிறேன்" என்று கத்தியை உருவிச் செல்ல, வஸுதேவர் பல ஹிதோபதேசங்களைச் செய்து, கடைசியாக "இவளுக்குப் பிறந்த பிள்ளைகளை பிறந்தவுடனேயே உன்னிடம் கொணர்ந்து கொடுக்கிறேன். அவைகளைக் கொன்றுவிட்டால் உனக்கு பயமில்லை, இப்போது இவளை விட்டுவிடு" என்று சொல்லித் தனது பத்னியை மீட்டுக்கொண்டார். பிறகு கம்ஸன் தன் ஸஹோதரியான தேவகியையும் வஸுதேவரையும் சிறையிலடைத்து விலங்கிட்டு வைத்தான். வஸுதேவரும் பிறந்த குழந்தைகளை கம்ஸனிடம் கொடுத்து விட்டார். அவனும் அவைகளை பாறையில் மோதிக் கொன்று

விட்டான். இங்ஙனம் ஆறு குழந்தைகளைக் கொன்றான். பிறகு தேவகி ஏழாவது கர்ப்பம் தரிக்க, ஸ்ரீய: பதியான ஸர்வேச்வரன் தனது மாயையை ஏவி அத்தேவகியின் ஆறுமாத கர்ப்பத்தை இழுக்கும்படி செய்து வஸுதேவரின் மற்றொரு பத்னியான ரோஹிணீதேவியின் வயிற்றில் வைக்கும்படி செய்தான். ரோஹிணீ தேவியும் பிறகு ஆறுமாதம் அக்கருவைத் தாங்கி பலராமன் என்கிற குழந்தையை ஈன்றாள். தேவகியின் ஏழாவது கர்ப்பம் மறைந்து விட்டது என்றே கம்ஸனும் மற்றவர்களும் நினைத்தார்கள். பிறகு பகவான் தானே "பன்னிருதிங்கள் வயிற்றில் கொண்ட" என்றபடி தேவகி வயிற்றில் பனிரண்டு மாஸம் வஸித்து க்ருஷ்ணன் என்ற பெயருடன் அவதரித்தான். அப்பகவான் அவர்களுக்குப் புதல்வனாகத் தோன்றியதும் கம்ஸனால் கட்டப்பட்ட விலங்குகள் அவர்கள் கால்களினின்றும் கழன்று விழுந்தன.)

நின்று நிலமங்கை நீரேற்று மூவடியால்
சென்று திசையளந்த செங்கண்மாற்கு—என்றும்
படையாழி புள்ளூர்தி பாம்பணையான் பாதம்
அடையாழி நெஞ்சே! யறி. (21)

சென்று நின்று	(மாவலியின் வேள்வியில்) போய்நின்று	படை	ஆயுதம்
அம் கை	அழகான கையால்	ஆழி	சக்கரம்
நிலம் நீரேற்று	பூதான ஜலத்தைப் பெற்று	ஊர்தி	வாஹனம்
மூவடியால்	மூன்று அடிகளால்	புள்	கருடன்.
திசையளந்த	உலகங்களை தன்னதாக்கிக்கொண்ட	ஆழி	கம்பீரமான
செம் கண் மாற்கு	சிவந்த கண்களையுடைய ஸ்வாமிக்கு	நெஞ்சே	மனமே!
என்றும்	எப்போதும்	அறி	இதைத் தெரிந்து கொள்
		பாம்பணையான் பாதம்	நாகணையான் திருவடிகளை
		அடை	அடைந்திடுவாய்

இப்படி எம்பெருமானுடைய ஸௌசீல்யம், ஸௌலப்யம், முதலிய குணங்களைச் சொல்லியபின், தன் உள்ளத்தை நோக்கி அவ்விஷயத்தை அநுபவிக்கப்பார், என்று ஏவுகிறார்.

நின்று நிலமங்கை உண்மையில் யாசிப்பவன்போல் வந்து மாவலியின்முன் நின்று தான ஜலத்தைப் பெற்று மூன்றடிகளால்

திசைகளிற்சென்று சிறிதிடமும் விடாமல் அளந்து, அதனால் ஸந்தோஷித்து, அந்த ஸந்தோஷத்தால் சிவந்து மலர்ந்த கண்களையுடைய ஸ்வாமி யாரெனில் எப்பொழுதும் ஸுதர்சனாழ்வானைப் படையாகக் கொண்டவனும், பெரிய திருவடியை (கருடனை) வாஹனமாகக் கொண்டவனும் திருவனந்தாழ்வானைப் படுக்கையாகக் கொண்டவனுமான நாராயணன் தான். என் மனமே அவனுடைய திருவடிகளையே உபாயமாகக் கருதுவாய். என்று உபதேசிக்கிறார்.

ஆழிநெஞ்சே, கம்பீரமான மனமே. நான் சொல்வதை நீயும் ஆலோசித்து அவனே பரமனென்று தேறித்தொழுவாய். நீ அவனிடம் சென்ற பின்னேதான் நான் நாவினால் அவன் திருநாமங்களைச் சொல்லிப் பிழைக்கவேண்டும். நீ முற்படச் சென்று தொழுவாய் என்பதாம்.

அறியு முலகெல்லாம் யானேயுமல்லேன்
பொறிகொள் சிறையுவண மூர்ந்தாய்—வெறிகமழும்
காம்பேய் மென்தோளி கடைவெண்ணெயுண்டாயை
தாம்பே கொண்டார்த்த தழும்பு. (22)

பொறிகொள் சிறை	பல வர்ணங்களையுடைய பக்ஷங்களையுடைய	உண்டாயை	களவினால் புசித்த உன்னை
உவணம்	கருடனை	தாம்பே கொண்டு	கயிற்றைக் கொண்டு
ஊர்ந்தாய்	நடத்துகிற ஸ்வாமியே	ஆர்த்த	கட்டியதால் உண்டான
காம்பு ஏய்	மூங்கிலுக் கொப்பான	தழும்பு	காய்ந்தவிரணத்தை
மென்தோளி	மிருதுவான தோள்களையுடைய யசோதை	யானேயும் அல்லேன்	நான் ஒருவன் மாத்திரம் அல்ல
கடை	கடைந்த	உலகெல்லாம்	உலகிலுள்ளாரனைவரும்
வெறிகமழும் வெண்ணெய்	நறுமணம் வீசுகிற வெண்ணெயை	அறியும்	அறிந்திருக்கிறார்கள்

இப்பாட்டில் ஸர்வேச்வரன் தன்னையடைந்தவர்களுக்கு எளியனாகிறதுமன்றி நாடெங்குமறிய விதேயனாயுமிருக்கிறான் என்கிறார்.

அறியும், பலநிறங்களுள்ள அழகியசிறகுகளையுடைய பக்ஷி ராஜனை நடத்துகிறவனே! மூங்கில்போல் பசுமைதங்கிய தோள்களை யுடைய யசோதைப்பிராட்டி தன் கைகளின் மார்த்தவத்தையும் பாராமல் மிகுதியான சிரமத்துடன் கடைந்தெடுத்த வெண்ணெயை நீ களவால் வாரி விழுங்கியதைக்கண்டு குறுங்கயிற்றால் உன்னை உரலோடு கட்டினபெற்றிமையை உலகெல்லாம் அறிந்துகொண்டி ருக்கிறதே! உன்னருளாலறிவு பெற்ற வெனக்குமாத்திரம் தானோ தெரியும்? உன்னுடைய பவ்யதையை விரோதிகளுமகப்பட வினைத் துலகுமறியாதோ! அப்பொழுது கட்டியதால் நேர்ந்த தழும்பு இன் னும் உன் திருவுதரத்தில் தோன்றுகிறதே! என்று அவனுடைய ஸௌலப்யத்தை விளக்கினார்.

நம் துயரங்களைத் தீர்க்கக்கருதி ஒருவனை அடைய விரும்பினால் அடையப்படுமவனுக்கு பரத்வமும் ஸௌலப்யமும்தேவையானவை. பரத்வமின்றி ஸௌலப்யமோ, அல்லது ஸௌலப்யமின்றி பரத் வமோ நமக்குப் பயன்படாது. இரண்டுமுள்ள புருஷனைத் தான் நாமடையவேண்டும். அவ்விரண்டு குணங்களும் திருமாலினிடம் பொதிந்து கிடக்கின்றனவென்கிறார். “சிறையுவணமூர்ந்தாய்” என்பதால் பரத்வமும், “தாம்பேகொண்டார்த்த” என்பதால் ஸௌலப்யமும் விளக்கப்பட்டதாகும்.

தழும்பிருந்த சார்ங்க நாண் தோய்ந்தவா மங்கை
தழும்பிருந்த தாள்சகடம் சாடி—தழும்பிருந்த
பூங்கோதையாள் வெருவப் பொன்பெயரோன் மார்பி
லீங்கோதவண்ணர் விரல். (23)

[படந்த

வீங்கு ஓதம் வண்ணர்	பெருகுகிற அலைகளையுடைய கடல் போல் நிறமுடைய பெருமானுடைய	தோய்ந்த	படிந்த (?)
அம் கை	அழகிய கைகள்	தழும்பு	[illegible]
சார்ங்கம்	சார்ங்கமென்னும் வில்லின்	இருந்த ஆம்	[illegible]
நாண்	நாண்கயிறு	நாள்	[illegible]
		சகடம் சாடி	சகடாசுர[illegible] [illegible]
		தழும்பிருந்த	[illegible]

விரல்	கைவிரல்கள்	பொன்பெயரோன்	இரண்யாஸுரனுடைய
பூங்கோதையாள்	அழகான கேசபாசத்தையுடைய பிராட்டி	மார்பு இடந்த	மார்பை பிளந்ததனாலுண்டான
வெருவ	பயப்படும்படியான (கோபத்துடன்)	தழும்பிருந்த.	தழும்பையுடையவைகளாயிருந்தன.

ஓரவதாரத்தில் ஒரு சமயத்தில் நேர்ந்த ஒரு செய்கையினால் ஸர்வேச்வரன் ஸுலபன் என்று நிர்ணயம் செய்யலாகுமோ? என்று வினவ, பல அவதாரங்களில் பல தடவைகளில் நேர்ந்த தழும்புகளால் அவன் ஸௌலப்யத்தைப் பரக்கப் பேசுகிறார்.

தழும்பிருந்த:—எம்பெருமான் ஸ்ரீராமனாய் அவதரித்து அரக்கர்களை அழிக்கத் தன் சார்ங்கமென்னும் வில்லில் அம்புகளைத் தொடுத்துப் போர் புரியுங்கால் அச்சார்ங்கவில்லின் நாண்கயிற்றால் அடிபட்டு கைகள் தழும்புடன் காணப்படுகின்றன. பெரிய பிராட்டியாரை யணைக்குங்கைகள் தழும்பால் விளங்குகின்றன. இதை யடியொற்றியே ஸ்ரீ தேசிகனும் "ஆஜாநுலம்பிபிரலங்க்ருத ஹேதிஜாலை: ஜ்யாகாதராஜிருசிரை: ஜிதபாரிஜாதை: | என்றும் காந்தோதாரைரய மிஹ புஜை: கங்கண ஜ்யாகிணாங்கை: | என்றும் ஸ்தோத்திரங்களில் அருளிச் செய்தார். க்ருஷ்ணாவதாரத்தில் சகடாஸுரனை உதைத்ததால் நேர்ந்த காயம் திருவடிகளில் விளங்குகிறது. நரஸிம்ஹனாய் வந்து இறையுமகலகில்லாத் திருமகளும் கூசும்படி ஹிரண்யகசிபுவுடன் போர் செய்கையில் நேர்ந்த வ்ரணங்கள் உடன் கைவிரல்களில் தெரிகின்றன. இப்படி அவதாரங்கள் தோறும் செய்த ரக்ஷண வியாபாரத்தால் அவன் திருவுடம்பு முழுவதும் தழும்புகளுடன் தோன்றுவதால் அவன் ஆச்ரிதபவ்யன் என்பதை அவ்விஷயத்திலும் ஆக்ஷேபம் செய்ய முடியாதென்கிறார்.

சகட முதைத்த கதை.

நந்தகோபனுடைய இல்லத்தில் பகவான் கண்ணனென்னும் குழந்தையாய் வளருங்கால் ஒரு நாள் யசோதை தனது திருமுற்றத்தில் ஒரு வண்டியின் கீழே தொட்டில் விட்டு அத்தொட்டிலில் கண்ணனை உறங்கும்படி செய்து தான் ஸ்நாநம் செய்யச் சென்றவள

வில், கம்ஸனால் தூண்டப்பட்ட அஸுரன் ஒருவன் அவ்வண்டியில் பிரவேசித்து கண்ணன் உடம்பில் விழுந்து கொல்ல வேறுமொன்று நினைக்க, அதை யறிந்த கண்ணன் குழந்தைகள் பாலுக்கு அழுவது போல் அழுது தன் கால்களை உதைத்துக்கொண்டார். அந்தவுதை அவ்வண்டியில் படவே அவ்வண்டி கீழேவிழ அதில் அநுப்ரவேசித்தவஸுரனும் கீழே விழுந்து மாண்டான் என்பதாம்.

விரலோடு வாய்தோய்ந்த வெண்ணெய் கண்டு, ஆய்ச்சி
உரலோடு றப்பிணித்த நான்று—குரலோவா
தேங்கி நினைந்தயலார் காண விருந்திலையே ?
ஓங்கோதவண்ணா ! வுரை. (21)

விரலோடு	கைவிரல்களோடு	நினைத்து	(நின்று) அவ்வெண்ணெயையே நினைத்துக்கொண்டு
வாய்	திருவதரத்திலும்		
தோய்ந்த	படிந்திருந்த		
வெண்ணெய்	வெண்ணெயை	அயலார்காண	பிறரெல்லாரும் பார்க்கும்படி
ஆய்ச்சிகண்டு	யசோதைபார்த்து		
உரலோடு உற	உரலோடு இறுக்கி	இருந்திலையே	இருந்தாயல்லவா?
பிணித்த நான்று	கட்டின ஸமயத்தில்	ஓங்கு ஓதம்	பெருகுகின்ற கடல்போன்ற நிறம் [illegible]
குரல்	அழுகை		
ஓவாது	ஓயாமல்	உரை	[illegible] சொல்லு.
ஏங்கி	வருந்தி		

இப்படி ஸர்வேச்வரனுடைய திருமேனியில் பக்தர்களுக்கு பவ்யனாய் இருந்தும் தன்மையை காண்பிக்கிற பல தழும்புகள் காணப்படுகின்றன என்று சொல்லியபின், அவ்விசேஷ அத்தழும்புகளை மறைக்க நினைத்த வளவில், அவனைக் கூப்பிட்டு நீ எவ்வளவு மறைத்தாலும் யசோதையால் கட்டுண்டு கிடந்ததால் உண்டான தழும்பை உன்னாலும் மறைக்க முடியாது, என்று சொல்லுகிறார் இப்பாட்டில்.

விரலோடு-கடல் போன்ற திருமேனியையுடைய கண்ணனே! யசோதைப் பிராட்டி நெடுங்காலம் கடைந்து எடுத்த வெண்ணெயை களவு செய்து அமுது செய்த உன்னை நேரில் பார்த்திருந்து உடனே உரலோடு சேர்த்துக் கட்டிய காலத்தில், ஓயாமல் அழுதுகொ

ண்டு ஏங்கி, மீண்டும் வெண்ணெயை எவ்வண்ணம் திருடுவதென்று நினைத்துக்கொண்டிருந்த உனது நிலைமையை, ஊரிலுள்ளாரெல்லாரும் காணவில்லையா ; நீ உண்மையாகச் சொல்லு. இதை உன்னால் மறைக்க முடியுமோ? மறைத்தாயாகில் நீ உரலை இழுத்துச் சென்று இரண்டு மருதமரங்களைச் சாய்த்த உனது வீரச்செயல் எங்ஙனம் உண்மையாகும்?

விரலோடு:—களவு செய்த வெண்ணெய் கையில் சிறிதாகிலும் தங்கியிருந்தால் யசோதை அறிந்துகொள்வளோ! என்று அஞ்சி கைவிரல்களையும் தனது வாயில் போகட்டுக்கொண்டு கையில் சிறிதும் ஒட்டாதபடி வெண்ணெயை அமுது செய்தான்.

உரலோடுற;—உரல் வேறு கண்ணன் வேறு என்று காணமுடியாதபடி பிணைத்துக் கட்டினாள்.

குரல் ஓவாது:—உடனே அக்குழந்தை ஓயாமல் அழுதுகொண்டிருந்தது.

ஏங்கி:—அதன் பின் யசோதை இதோ இக்கோலைப் பார்த்தாயா? அழுதால் மீளவும் அடிப்பேன் என்று சொல்ல அதற்கு பயப்பட்டது போல ஏங்கியிருந்தான்.

நினைந்து:—அந்த நிலைமையிலும் மறுபடியும் வெண்ணெயைத் திருடும் மார்க்கத்தையே சிந்தித்திருந்தான்.

அயலார் காண:—இதற்கு முன் கிருஷ்ணன் எவர்களுக்கு துயரங்களை உண்டுபண்ணி யிருக்கிறானோ அவர்களெல்லோரும் யசோதை இவனை சிக்ஷித்தது தகுதிதான் என்று மகிழ்ந்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

உரை:—இப்படி நீ ஒரு பெண்மணியால் கட்டுண்டு அழுதது ஸர்வசக்தனான உனக்குக் குறையாகாதோ சொல்லு? என்கிறார். இப்படி வினவியதால் அவனுடைய எளிமை நன்கு விளக்கியதாயிற்று.

உரைமேற் கொண்டென் னுள்ள மோவாது, எப்போதும்
வரைமேல் மரதகமே போல—திரைமேல்
கிடந்தானைக் கீண்டானைக் கேழலாய்ப் பூமி
யிடந்தானை யேத்தி யெழும் (25)

வரைமேல்	ஒரு மலையின்மேல்	பூமி இடந்தானை	பூமியைத் தூக்கின வனுமான பரமனை
மரதகமே போல	மரதகப் பச்சைமணிபோல்	என் உள்ளம்	என்னுடைய மனமானது
திரைமேல்	திருப்பாற்கடலின் மேல்	ஓவாது	ஓயாமல்
கிடந்தானை	சயனித்தவனும்	எப்போதும்	எந்த ஸமயத்திலும்
கீண்டானை	(ஹிரண்யாஸுரனை) பிளந்தவனும்	மேல் உரை கொண்டு	உயர்ந்த வாக்குகளைக் கொண்டு
சேழலாய்	வராஹமாய்	ஏத்தி	துதிசெய்து
		எழும்.	உஜ்ஜீவிக்கும்.

கீழ்ப்பாசுரத்தில் யசோதை கட்டிய ஸமயத்திலும் அவன் வெண்ணெயையே நினைத்துக் கொண்டிருந்தானென்பதை, தான் அநுஸந்தித்து, அவன் எப்படி பக்தர்களுடைய ஸம்பந்தம் பெற்ற வஸ்துவில் ஆசையுடனிருக்கிறானோ! அவ்வண்ணமே நாமும் அடைய வேண்டியவனான பரம புருஷனையே தியானிக்க வேண்டுமென்று நினைத்து, இப்பாட்டில் தன் அநுபவத்தை வெளியிடுகிறார்.

உரை மேல்:—ஒரு வெண்மையான மலையின் சிகரத்தில் மரகத மணி விளங்குவது போல் திருப்பாற்கடலில் பள்ளி கொண்டவனும், நரசிங்க உருவுடன் வந்து இரணியனைக் கிழித்தெறிந்தவனும், வராஹமாய் வந்து பூமியைக் கிண்டெடுத்தவனுமான நாராயணனை எனது மனம் உயர்ந்த சொற்களைக் கொண்டு துதி செய்து அதனால் நன்மையை யடைகிறது. இவ்வுலகில் மற்றெவர் இவ்வித பாக்யத்தைப் பெற்றார்களோ? என்கிறார்.

உரைமேல் கோண்டு:—மனம் ஸர்வேச்வரனைச் சொல்லக் கூடிய திருநாமங்களை உதவியாகவைத்துக்கொண்டு அவனை ஸ்தோத்திரம் செய்கிறது என்றபடி. மேலுரை கொண்டு என்று அந்வயமாகில் "பாலேய் தமிழர் இசைகாரர் பத்தர் பரவும் ஆயிரம்" என்பது போல் செந்தமிழ்க் கவிகளாலும் காந ரஸிகர்களாலும் பக்திமான்களாலும் கொண்டாடத் தகுந்த பெருமை வாய்ந்த கவிகளைக் கொண்டு ஸ்தோத்திரம் செய்கிறது என்றபடி.

கீண்டானை:—பிளந்தானை என்று பொருள். "தழும்பிருந்த"

என்கிற கீழ்ப்பாசுரத்தில் நரசிங்கனைச் சொல்லியிருப்பதால் இங்கு இரணியனைப்பிளந்தானென்று பொருள்கொள்க!

"கிடந்தானைக் கீண்டானை" என்கிற இரண்டு பதங்களையும் சேர்த்துப் பார்த்தால், "திருப்பாற்கடலில் பள்ளிகொண்டு உறங்கும் காலத்திலும் பக்தர்களுடைய விரோதிகளை ஸம்ஹரிப்பதில் சிந்தையுடனேயே இருக்கிற" என்கிற பொருள் கிடைக்கும். "திருவனந்தாழ்வானாகிற படுக்கை படுக்கையாவதும் ஆர்த்தநாதம் செவிப்படுமளவில்" என்கிற ஸ்ரீ ஸூக்திகளால் இவ்வர்த்தம் தோன்றுகிறது.

கேழலாய் பூமியிடந்த கதை.

ஹிரண்யாக்ஷனென்பானொரு கொடியவஸுரன் தனது பராக்ரமத்தால் பூமியை பாயாகச் சுருட்டிக்கொண்டுபோய் பாதாளலோகத்தில் ஒளித்து வைத்தான். அப்பொழுது தேவர்களும் ருஷிகளும் எம்பெருமானிடம் சென்று அவ்வஸுரனுடைய கொடிய செயலால் வருந்தியதை விண்ணப்பம் செய்ய, பகவானும் பன்றியின் உருவத்தை எடுத்துக்கொண்டு மிகுந்த வேகத்துடன் கடலில் புகுந்துசென்று பாதாள லோகத்தை யடைந்து, ஹிரண்யகசிபுவின் ஸஹோதரனான அவ்வஸுரனை தனது கோரப்பற்களால் குத்திக்கொன்றுவிட்டு, அப்பூமியைத் தனது பற்களில் வைத்துக்கொண்டு கிளம்பி மறுபடியும் பூமியை முன்போல் வைத்தருளினான்.

எழுவார் விடைகொள்வா ரீன்றுழாயானை
வழுவா வகை நினைந்து வைகல்—தொழுவார்
வினைச்சுடரை நந்துவிக்கும் வேங்கடமே, வானோர்
மனச்சுடரைத் தூண்டும் மலை. (26)

எழுவார்	ஆசைப்பட்டபோது (தங்கள் கிட்டிய) அப் பெருமானை விட்டுப்போகும் ஐச்வர்யகாமர்கள்	ஈன்றுழாயானை	அழகிய திருத்துழாய் மாலையுடையவனை
		வழுவா வகை நினைந்து	(ஒருசமயமும்) விடமுடியாத மார்க்கத்தைச் சிந்தித்து
விடை கொள்வார்	கைவல்யம் கிடைக்கப்பு அனுமதி பெற்றுப் போகிற கேவலர்கள்	வைகல்	நித்யமும்
		தொழுவார்	(சேவிக்கிற பகவத் காமர்கள் (ஆழ்வார்களுடைய)

வினைச்சுடரை	பாபங்களாகிற அக்நியை	மனச்சுடரை	மனமென்கிற விளக்கை
நந்துவிக்கும்	அணையும்படி செய்யும்	தூண்டும்	தூண்டுகிற (உஜ்ஜ்வலிக்கும்படி செய்யும்)
வேங்கடமே	திருவேங்கடமென்கிற மலையே	மலை.	பர்வதம்.
வானோர்	நித்யஸூரிகளுடைய		

கீழே பல அவதாரங்களைப் புகழ்ந்து பேசினார். இனி அவ்வவதாரங்களைப் பேசுவதைக் காட்டிலும் நமக்கு அநுபவிக்கும்படியான அவதாரத்தையே நாம் தேடுவோமென்று நினைத்தார். அவ்வவதாரம் அர்ச்சாவதாரமென்றே நினைத்து அவைகளுள் யாவருக்கும் அருள்புரிந்து நிற்கும் திருவேங்கடநாதனை இப்பாசுரத்தில் பேசுகிறார்

எழுவார்:—மேன்மேலும் ஆசைப்படுகிறவர்கள் என்று பொருள். எழுந்து போகிறவர்கள் என்றும் பொருள் கொள்ளலாம். இவ்விருவகையாலும் ஐச்வர்யத்திற்காக பெருமாளைத் தொழுது அது கிடைத்தபின் பெருமாளை விட்டுச் செல்லுகிற ஐச்வர்யார்த்திகள் சொல்லப்பட்டார்கள்.

விடை கோள்வார்:உத்தரவு பெற்றுக்கொண்டு போகிறவர்கள் என்று பொருள். பெருமாளைக் குறித்து நீ வேண்டாம்; நாங்கள் ஜீவாத்மாவை அநுபவிக்க வேண்டும்; என்கிற எண்ணத்துடன் வணங்கி அவ்வநுபவம் கிடைத்தபின் பெருமாளிடம் உத்தரவு பெற்றுப் போகிற கைவல்ய காமர்கள் சொல்லப்பட்டார்கள்.

ஒன்றாயனை + தொழுவார்:—வேறு ஒரு பிரயோஜனத்தை வேண்டாமல் பகவானையே வணங்குகிற மோக்ஷார்த்திகள் சொல்லப்பட்டார்கள்.

ஆகவே ஐச்வர்யத்தை விரும்புகிறவர்களுக்கும் கைவல்யார்த்திகளுக்கும் மோக்ஷத்தை விரும்புகிறவர்களுக்கும் பாபத்தைப் போக்கி அநுக்ரஹம் செய்துகொண்டு ஈசன் நித்யவாஸம் செய்யும் திருவேங்கடமலையே, நித்ய ஸூரிகளுக்கு வியப்பை உண்டாக்குகிறது.

வினைச்சுடரை:—பாபங்களாகிற நெருப்பை அணைக்கிற திரு வேங்கடம். ஐச்வர்யத்தை விரும்புகிறவர்களுக்கு ஐச்வர்யம் வா

வதற்கு இடையூறாக இருக்கிற பாபங்களை நாசம் செய்கிறது. கைவல்யார்த்திகளுக்கு ஜீவாத்மாவை அனுபவிக்க இடையூறாக இருக்கும் பாபங்களைப் போக்குகிறது மோக்ஷத்தை விரும்புகிறவர்களுக்கு மோக்ஷவிரோதியான பாபங்களை போக்குகிறது என்கிறார். இந்த அதிகாரிகளுடைய பாபங்களைப் போக்குவதற்கு திருவேங்கடமென்கிறமலையே போதும். அதில் வாசம் செய்யும் பகவானுடைய உதவியும் வேண்டாமென்பது பொருள். இத்தால் ஸர்வேச்வரனைக் காட்டிலும் அவனுக்குப் பிரியமான வஸ்துக்களே நமக்குப் ப்ராப்யம் என்பதாயிற்று.

பாபங்களாகிற விளக்கை அணைக்கும் திருவேங்கடம் நித்ய ஸூரிகளுடைய மனமாகிற விளக்கை தூண்டி எரியச்செய்கிறது. நித்ய ஸூரிகளும் திருவேங்கடத்தில் பகவானைஸேவித்து இங்குள்ள நீர்மையை நினைத்து மிகுந்த ஆச்சர்யத்தை அடைகிறார்கள் என்பது தீர்ந்தபொருள்.

மலையால் குடைகவித்து மாவாய் பிளந்து
சிலையால் மராமரமேழ் செற்று—கொலையானைப்
போர்க்கோ டொசித்தனவும் பூங்குருந்தம்சாய்த்தனவும்
கார்க்கோடு பற்றி யான் கை. (27)

மலையால்	கோவர்த்தன பர்வதத்தை	போர்	சண்டைக்கு கருவியான
குடைகவித்து	குடையாகதரித்தும்	கோடு	தந்தங்களை
		ஒசித்தனவும்	முறித்தனவும்
மாவாய்பிளந்து	குதிரைவடிவுடன் வந்தகேசியினுடைய வாயைக்கிழித்தும்	பூ குருந்தம்	புஷ்பித்த குருந்தந் திமரத்தை
		சாய்த்தனவும்	கீழே விழும்படி செய்தனவும் (சாவையெனில்)
சிலையால்	வில்லால்		
மராமரம் எழ் செற்று	ஏழு சாலமரங்களை நசித்துப் பொகட்டும்	கார்கோடு	மேகம்போல் சப்தத்தையுடைய சங்கை
கொலையானை	அயலாரைக்கொலை செய்கிற குவலயாபீடமென்னும் யானையின்	பற்றியான் கை.	ஏந்துகிறவனுடைய திருக்கைகள்.

கீழ்ப்பாசுரத்தில் திருவேங்கடமலையே நம் வினைகளைப் போக்கு மென்று சொல்லி இப்பாட்டில் அம்மலையில் நித்யவாஸம் செய்யும் ஸ்ரீநிவாஸனை ஸேவித்து அவருடைய திருக்கைகளின் ஸௌந்தர்யத்தில் ஈடுபட்டு அக்கைகள் செய்த அரிய செயல்களைக் கொண்டாடுகிறார்.

மலையால்:—இந்திரன், கோவர்த்தன மலைக்கு இட்ட விருந்தைப் பொறுக்காமல் மழையினால் திருவாய்ப்பாடியைத் துன்புறுத்திய வளவில், அம்மழையில் நின்றும் காப்பதற்காக கோவர்த்தன மலையைக் குடையாகத் தூக்கினான்.

மாவாய்:—கம்ஸனால் ஏவப்பட்டுவந்த கேசி என்னும் அஸுரனை வாயைப்பிளந்து கொன்றான்.

சிலையால்:—முன்பு ராமாவதாரத்தில் ஸுக்ரீவனுக்கு நம்பிக்கை உண்டுபண்ணுவதற்காக ஏழு ஸாலவிருக்ஷங்களையும் துளைத்தான். "கொலையானை" குவலயாபீடமென்னும் யானையை, அதன் தந்தங்களைப் பிடுங்கியே அடித்துக் கொன்றான். "பூங்குருந்தம்" நன்றாகப்பூத்துச் செழித்து வளர்ந்திருந்த குருந்த மரத்தை கையால் வலியப் பிடித்து இழுத்து சாய்த்துத் தள்ளினான். இப்படி பல கிருஷ்ணாத்யவதாரங்களைச் செய்து வாளாவிருந்தவன் திருவேங்கட மலையில் யாவருக்கும் அருள்புரிய நின்றுகொண்டிருக்கிறான். என்பது கருத்து.

கார்க்கோடு:—கீழ்ச்சொல்லிய செயல்களை யெல்லாம் திருவேங்கடமுடையானுடைய திருக்கையே மற்றொருவரின் உதவியின்றி செய்தது என்பதாம். அக்கை மேகம்போல் கறுத்து [illegible]க் கோடு கூடிய பாஞ்சஜன்யத்தை எப்பொழுதும் தரித்துக் கொண்டிருக்கிறது. இந்த அடைமொழியால் கீழ்ச்சொல்லிய காரியங்களை யெல்லாம் அவனுடைய திருக்கையே செய்ததென்று தோன்றுகிறது. ஆதலால் இப்பெரிய காரியங்களெல்லாம் இக்கையால் செய்யப்படுமவை போல் சிறிது சிரமமின்றி செய்யப்பட்டனவென்பது விளங்கும்.

கார்க்கோடு:—கறுத்த மேகத்தின் மேலே சந்திரன் படிந்தாற்போல் அவன் திருமேனியில் பாஞ்சஜன்யத்தின் அழகு அனுபவிக்கப்பட்டது என்றும் சொல்லலாம்.

கேசி:—கேசி முதலான தன்னை எதிர்த்து வந்தவர்களை அழித்தும், இந்திரனை மாத்திரம் ஹிம்ஸை செய்யாமல் அவன் செய்த துன்பத்திலிருந்து தன்னையும் தன்னைச் சேர்ந்தவர்களையும் ரக்ஷித்துக்கொண்டான்.

இந்திரனை மாத்திரம் அடிக்காமல் இருந்ததற்குக் காரணம் அவன் தெய்வப் ப்ரக்ருதி என்று நினைத்தே. தெய்வப்ப்ரக்ருதியாக விருந்தால் என்றேனும் ஒருநாள் பகவத் பக்தி உண்டாகிவிடும். ஆஸுரப் ப்ரக்ருதி எப்பொழுதும் தெய்வமில்லை யென்பானுதலால் அவனை அழித்தே தீரவேண்டும்.

மலையால் குடைகவித்தது

திருவாய்ப்பாடியில் இடையர்கள் வழக்கமாய் இந்திரனுக்குச் செய்யும் விருந்தை கிருஷ்ணன் நிறுத்திவிட்டு அவ்விருந்தை பசுக்களை செழித்த புற்களால் ரக்ஷிக்கும் கோவர்த்தனமலைக்குப் படைக்கும்படி செய்தான். அதனுல் மிகுந்த கோபங்கொண்ட தேவேந்திரன் ஏழு காளமேகங்களையும் மழை பெய்யும்படி செய்து திருவாய்ப்பாடியை அழிக்க நினைத்தான். அம்மழையால் இடையர்களும் பசுக்களும் கன்றுகளும் மிகுந்த கஷ்டங்களையடைய கண்ணபிரான் அந்த கோவர்த்தனமலையைத் தனது கையால் தூக்கி குடையாகப்பிடித்து அத்திருவாய்ப்பாடியில் ஒரு சிறு திவலைகூட விழாமல் காத்தருளினுன்.

மாவாய்பிளந்த வரலாறு.

கம்ஸனுல் தூண்டப்பட்ட கேசி என்னும் அஸுரன் கிருஷ்ணனைக் கொல்வதற்காக குதிரை வடிவத்துடன் அவனை விழுங்கச்சென்றுன். கிருஷ்ணனும் குழந்தைகள் சிறியபொந்துகளில் கையைவிட்டு விளையாடுவதுபோல் அக்குதிரையின்வாயில் கையை நுழைத்து இருபிளவாகக் கிழித்து அவ்வஸுரனைக் கொன்றுன்.

சிலையால் மராமரம் எழ்செற்றது.

ஸ்ரீ ராமபிரான் ஸுக்ரீவனுக்கு வாலியைக் கொன்றுவிடுவதாக சபதம் கூறியபின்பும், ஸுக்ரீவன் வாலியின் வலிமையை நினைந்து நம்பிக்கையின்றியிருக்க அதையறிந்த ராமபிரான் உனக்குநம்பிக்கையுண்டாகும்படியாக ஏதேனும் ஒரு காரியத்தை ஏவுவாய் என்று

சொல்ல, அவனும் ஸமீபத்தில் கிடந்த துந்துபி என்ற அஸுரனுடைய எலும்பை தூக்கி எறியும்படி ஏவினான். ராமனும் அதை இடதுகாலின் கட்டைவிரலால் அதை வெகுதூரம் தூக்கியெறிந். அதிலும் நம்பிக்கையின்றி ஏழு ஸாலவிருக்ஷங்களையும் ஒரே பாணத்தால் அடித்தால் நீ வாலியைக் கொல்ல ஸமர்த்தன் என்று சொல்ல அவ்வண்ணமே தனது வில்லில் ஓர் அம்பைத் தொடுத்து அவ்வேழு மரங்களையும் ஒரு நொடிப்பொழுதில் துளைத்தான். அதைக் கண்டு ஸுக்ரீவனும் பெருமகிழ்ச்சியை யடைந்தான்.

பூங்குருந்தம் சாய்த்தது.

கிருஷ்ணன் வழக்கமாய் புஷ்பம் பறிக்க நினைக்கையில் அங்கு ஓர் குருந்தமரத்தில் ஓர் அஸுரன் தங்கியிருந்து [illegible] கொல்ல நினைத்திருக்கையில் அதையறிந்த பகவான் வெகுண்டு அம்மரத்தை கைகளால் சாய்த்துக் கீழே தள்ளினான். அப்பொழுது அதிலிருந்த அஸுரனும் மாண்டான்.

கைய வலம்புரியும் நேமியும், கார்வண்ணத்
தைய மலர்மகள் நின்னாகத்தான்—செய்ய
மறையான் நின்னுந்தியான் மாமதிள் மூன்றெய்த
இறையான் நின்னாகத் திறை. (28

கார்வண்ணத்து	மேகம்போன்ற நிறத்தையுடைய
ஐய	ஸ்வாமியே !
வலம்புரியும்	பாஞ்சஜன்யமும்
நேமியும்	சக்கரமும்
கைய	உன்கையில் குடிகொண்டன
மலர் மகள்	பூவில்பிறந்த திருமகள்
நின்ஆகத்தாள்	உன் மார்பிலிருக்கிறாள்
செய்ய மறையான்	குற்றமற்றவேதத்தையுடைய நான்முகன்
நின் உந்தியான்	[illegible]
மாமதிள் மூன்றெய்த	[illegible]
இறையான்	பரமசிவன்
நின் ஆகத்து	[illegible]
இறை.	ஒருபாகத்திலே வசிக்கிறான்

கையவலம்புரியும்:—அந்த ஸர்வேச்வரனுடைய ஐச்வர்யத்தின் பெருமையைப் பேசுகிறார். மேகம்போன்ற குளிர்ந்த திருமேனியையுடைய ஸ்வாமியே! ஸ்ரீபாஞ்சஜந்ய ஆழ்வாரும் ஸுதர்சனாழ்வாரும் உனது கைகளில் வஸிக்கிறார்கள். பூவில் பிறந்த பெரியபிராட்டியார் உன்னுடைய திருமார்பிலே குடிகொண்டிருக்கிறாள். நீ பரதேவதையென்று சொல்லுகிற வேதங்களை தனமாகக்கொண்ட பிரமன் உன்நாபியின்கமலத்தில் வஸித்துக்கொண்டிருக்கிறான். திரிபுராஸுர ஸம்ஹாரம் செய்த ஈச்வரனென்று எல்லாராலும் கொண்டாடப்பட்டிருக்கிற ருத்ரன் உன்னுடைய திருமேனியின் ஒருபாகத்தில் இருக்கிறான். உன் ஐச்வர்யத்தின் பெருமை இங்ஙனம் விளங்குகிறது.

கையவலம்புரியும்:—அவன் தரித்த சங்கு சக்கரங்களே அவன் பரதேவதை என்று காட்டுகின்றன.

மலர்மகள்:—எவருடைய அனுக்ரஹத்தால் பிரஹ்ம இந்த்ராதி ஸ்தானங்களையான ஐச்வர்யங்களெல்லாம் ஒரு நீசனான ஜீவனுக்கும் எளிதில் கிடைக்கின்றனவோ! அந்த பிராட்டியே உன்னைவிட்டுப்பிரியேனென்று உன் உடம்பிலே கோயில்கொண்டிருக்கிறாள்.

மறையான்:—ஸ்ருஷ்டி கர்த்தாவான சதுர்முகன் உன் நாபியில் குடிகொண்டிருக்கிறான்.

மாமதிள்:—திரிபுராஸுரர்களைக் கொன்றதால் ஈசனென்று பெயர்படைத்த ருத்ரனும் உன் உடம்பில் இருக்கிறான். இப்படி பிரஹ்ம ருத்ராதிகளே உன் உடம்பைப்பற்றிக் கிடக்கின்றனரென்றால் உன்னுடைய பெருமை எவ்வளவு மேலானது! என்று திருவேங்கடநாதனுடைய ஐச்வர்யத்தில் கண்வைத்துப்பேசினார்.

மாமதிள் மூன்றெய்த இறையான் கதை.

சிவபெருமானுடைய புதல்வனான ஸுப்ரமணிய ஸ்வாமியால் கொல்லப்பட்ட தாரகாஸுரனுக்கு மூன்று பிள்ளைகள் இருந்தார்கள். அவர்கள் வித்யுந்மாலி, தாரகாக்ஷன், கமலாக்ஷன், என வழங்கப்படுவார்கள். அம்மூவரும் நான்முகக்கடவுளைக் குறித்து அரும்பெருந் தவம் செய்து அதனால் திருப்தியடைந்த நான்முகனிடம்

ருந்து பலவரங்களை வேண்டிப்பெற்று, ஆகாயத்தில் பறக்கும் வலிமைபொருந்திய மூன்று பட்டினங்களைப் பெற்றார்கள். அம்மூவரும் அந்நகரங்களுடன் பறந்துசென்று நினைத்தவிடங்களில் [illegible] கார்ந்துகொண்டிருந்தார்கள். அதனால் பலபிராணிகள் அழிந்துபோயின. இங்ஙனம் அம்மூவரும் இவ்வுலகத்தையே அழித்துக்கொண்டுவருங்கால் தேவர்களும் ரிஷிகளும் ருத்ரனை வணங்கி இக்கொடிய செயலைத்தெரிவிக்க ருத்ரனும் அவ்வசுரர்களைக்கொல்ல முயன்று, தனக்கு, பூமியைத்தேராகவும், சந்திரஸூர்யர்களை ரதத்தின் சக்ரங்களாகவும் வேதங்களைக் குதிரைகளாகவும் பிரமதேவனைத் தேர்ப்பாகனாகவும் மேருபர்வதத்தை வில்லாகவும் ஆதிசேஷனை நாண்கயிறாகவும் விஷ்ணுவை அம்பாகவும் காற்றை அம்பின் சிறகாகவும் அக்னியை அம்பின் நுனியாகவும் அமைத்துக்கொண்டு யுத்தம் செய்யச்சென்று யுத்தாரம்பத்தில் அட்டஹாஸம் செய்தார். அந்தஹாஸத்திலிருந்து நெருப்புக்கிளம்பி அம்மூன்று அஸுரர்களையும் எரித்துக்கொன்றது.

இறையும் நிலனு மிருவிசும்பும் காற்றும்
அறைபுனலும் செந்தீயுமானான்—பிறைமருப்பின்
பைங்கண்மால் யானைப் படுதுயரங்காத்தளித்த
செங்கண்மால் கண்டாய் தெளி. (29)

இறையும்	பரமபதநாதனும்
நிலனும்	பூமியும்
இருவிசும்பும்	அகலமான ஆகாசமும்
காற்றும்	வாயுவும்
அறைபுனலும்	சப்திக்கிற ஜலமும்
செந்தீயும்	சிவந்தநெருப்பையும்
ஆவான்	பிரகாரமாகவுடைய பெருமான் (லீலாவிபூதிநாதனுமானவன்)
பிறை	சந்திரகலைபோன்ற
மருப்பின்	கொம்புகளையுடையதும்
பைங்கண்	அழகிய கண்களையுடையதும்
மால்யானை	[illegible]
படுதுயரம்	[illegible]
காத்து அளித்த	[illegible]
செம்கண் மால்கண்டாய்	சிவந்தகண்களை [illegible]
தெளி.	[illegible]

அவனுடைய ஐச்வர்யத்தைக்கண்டு நாம் அவனிடம் எப்படிக் கிட்டுவதென்று பயப்படவேண்டாம். அவன் தன்னிடத்தில் அன்புள்ளவர்களிடம் ஆசையுடன் அவர்களின் துயரங்களைப்போக்கி காப்பதே ஸ்வபாவமாகக்கொண்டிருக்கிறான். ஆதலால் யாவரும் அவனை அணுகலாமென்கிறார்.

இறையும்:—ஸமஸ்தலோகங்களுக்கும் நாதனைகத்தோன்றும் பரமபதநாதனும் பஞ்சபூதங்களடங்கிய இந்த லீலாவிபூதிக்கும் நாதனுயும் இருக்கிற ஸர்வேச்வரன், சந்திரகலைபோல் வெண்மையான பற்களையுடையவரான ஸர்வேச்வரனிடத்தில் மிகுந்த ஆவல்கொண்ட கஜேந்திராழ்வானுடைய துயரத்தைப் போக்கினவன். என்று உபதேசிக்கிறார்.

பைங்கண்மால்யானை:—யானைகளுக்கு எவ்வளவு பரிமாணம் கண் இருக்கவேண்டுமோ அந்த அளவுள்ள கண்களையுடைய யானை என்றபடி. ஸர்வேச்வரனிடத்தில் மிகுந்த பக்தியையுடையது. அந்த யானைக்காக பரமபதத்திலிருந்து வரும்பொழுதே தனது திருக்கண்களால் அதைக் குளிரக் கடாக்ஷித்துக்கொண்டு வந்தார் என்பது செங்கண்மால் என்கிற பதத்தால் விளங்கும். ஒரு திர்யக்ஜாதிக்கு அவன் நெடுந்தூரத்திலிருந்து வந்து அருள்புரிந்தானென்றால் நாம் ஏன் அவனை அணுகக்கூசவேண்டும் என்பது கருத்து.

இறையும்:—இந்த பதத்தால் நித்யவிபூதி நாதனை நாராயணன் சொல்லப்படுகிறான்.

நிலனும் + தீயுமாவான்:—இப்பதங்களால் பஞ்சபூதங்களடங்கிய லீலாவிபூதிநாதன் சொல்லப்படுகிறான். ஆக உபயவிபூதிக்கும் நாதனான ஸர்வேச்வரன் இந் நிலத்தில் வந்து முதலையின் வாயிலகப்பட்ட யானையைக் காத்தருளினனென்பது பொருள். முன்னடிகளால் அவனது மேன்மையும் பின்னடிகளால் நீர்மையும் சொல்லப்படுகின்றன.

தெளிதாக வுள்ளத்தைச் செந்நிறீஇ, ஞானத்
தெளிதாக நன்குணர்வார் சிந்தை—எளிதாகத்
தாய்நாடு கன்றேபோல் தண்டுழாயானடிக்கே,
போய் நாடிக்கொள்ளும் புரிந்து. (30)

தெளிது ஆக	பஞ்சேந்திரியங்களால் கலங்குதலின்றி தெளிந்திருக்கும்படி
உள்ளத்தை	மனத்தை
செம் நிறீஇ	நன்றாக நிறுத்தி
ஞானம்	அறிவினால்
தெளிதாக	ஸ்வரூபஜ்ஞான முண்டாகும்படி
நன்கு	செவ்வனே
உணர்வார்	அறிபவர்களுடைய
சிந்தை	மனமானது
எளிதாக	தூக்கமின்றி
தாய்நாடு கன்றேபோல்	தன் தாயைத் தேடிச் செல்லும் கன்றுக் குட்டியைப்போல்
தண் துழாயான்	குளிர்ந்த திருத்துழாயையுடையவனெம்பெருமானுடைய
அடிக்கே	திருப்பாதங்களையே
புரிந்து	ஆசைப்பட்டு
போய்	சென்று
நாடிக்கொள்ளும்.	தேடிக் கிட்டும்,

இப்படி பரமாத்மா யாவர்க்கும் எளியனாயிருக்க, உலகில் மனிதர்களுக்கு அவனிடம் ஏன் மனம் செல்லவில்லை? ஸம்ஸாரிகளான பிரபுக்களையே நாடிச் செல்கிறார்களேயென்று சிலர் ஆழ்வாரைக் கேட்க அதற்கு பதிலுரைக்கிறார் போலுமிப்பாட்டில்.

தெளிதாக:—தன் மனத்தை வெளியில் செல்லவொட்டாமல் செவ்வனே அடக்கி தனது புத்தியால் ஜீவாத்மாக்கள் அவ்விறைவனுக்கு சேஷபூதர்கள் (அடிமைகள்) அவன் சேஷி (எஜமானன்) என்று நிர்ணயம்செய்து பரமாத்மாவை அறிந்தவர்களுடைய மனம்தான் திருத்துழாயை அணிந்தபரமபுருஷனுடைய திருவடியை நாடிச்சேரும். மற்றவர்களுடைய மனம் அவ்விசயத்தை [illegible] அணுகாது, எப்படி ஒரு பசுக்கூட்டத்தின் நடுவே ஒரு கன்றை நிறுத்தினால் அக்கன்று பல பசுக்கள் அங்கு இருந்தபோதிலும் தன் தாயையேநாடிச்சென்று தன் தாயின் அருகே நிற்கிறதோ! அப்படி பரமாத்மாவை அறிந்தவர்களின் மனம், கன்றுபோல் மற்ற தேவர்களிடம் செல்லாமல் எம்பெருமானைத் தானாகவே நாடிச்செல்லும்.

ஒரு கன்று மற்றபசுக்களைக் கண்ணெடுத்துப் பாராமல் தனது தாயை நாடுவதற்கு காரணம், தன் தாய்க்கும் தனக்குமுள்ள ஸம்பந்தத்தையே நினைத்திருப்பதுதான், அதுபோல் பரமாத்மாவுக்கும் நமக்குமுள்ள ஸம்பந்தத்தை நாம் நன்கு தெரிந்துகொண்

டால் அப்பகவானை ஆச்ரயிக்கும்படி நமக்கு புத்தி உண்டாகும் ஆதலால், சேஷத்வமாகிற ஸம்பந்தத்தை முந்துறத்தெரிந்துகொள்ளவேண்டுமென்பதாயிற்று.

புரியொரு கைபற்றியோர் பொன்னாழியேந்தி
அரியுருவு மாளுருவுமாகி—எரியுருவ
வண்ணத்தான் மார்பிடந்த மாலடியை யல்லால், மற்
றெண்ணத்தானாமோ விமை. (31)

ஒருகை	ஒருகையில்	வண்ணத்தான்	நிறத்தையுடைய ஹிரண்யனுடைய
புரி பற்றி	சங்கத்தைப்பிடித்து	மார்பு	மார்பை
ஓர்பொன் ஆழி	விலக்ஷணமான அழகிய சக்ரத்தை	இடந்த	நகங்களால் பிளந்த
ஏந்தி	(மற்றொருகையில்) பிடித்து	மால்	ஸ்வாமியினுடைய
அரி உருவம்	சிங்கவடிவும்	அடியை அல்லால்	திருவடிகளையன்றி
ஆள் உருவம் ஆகி	மானிட வடிவுமாகி	மற்று	மற்றொரு பொருளை
எரி உருவம்	அக்நியின் நிறம் போல்	இமை	ஒரு க்ஷண காலத்திலாவது
		எண்ணத்தான் ஆமோ	நினைக்கலாமோ ?

இப்படி கிரமவ வக்தவர்களுக்கு விடை கூறிவிட்டு இழே அருளிச்செய்த ஸர்வேச்வரனுடைய நரஸிம்ஹ ரூபத்தை வியாபாரத்தை அநுஸந்தித்து, அப்பாசுரனுடைய அதிசய பராக்ரமத்தைப் பேசுகிறார்.

புரியொருகை:—சங்க சக்ரங்களை இருகைகளிலும் தரித்து நரஸிம்ஹமாய்த் தோன்றி அக்நியின் நிறம் போன்ற நிறத்தையுடைய ஹிரண்யகசிபுவின் மார்பைப் பிளந்த ஸர்வேச்வரனிடம் பெற்ற; கொண்ட திருவடிகளை விட்டு மற்றொரு பொருளை ஒரு நொடிப்பொழுதாவது நினைக்கலாகுமோ? நினைப்பதுதான் தகுமோ? என்கிறார்.

புரி:—என்பது வலம்புரி என்ற பதத்தின் ஏகதேசம். வலமாகச் சுற்றிய சுழியையுடைய சங்கத்தைச் சொல்கிறது.

ஹிரண்யனை நகங்களாலேயே பிளந்து விட்டபடியால் திவ்யாயுதங்கள் அழகுக்காக அணிந்து கொள்ளப்பட்டிருந்தன.

எரியுருவ:—நெருப்புப் போல் ஒருவராலும் கிட்டமுடியாதபடியான பராக்ரமத்தையுடைய ஹிரண்யன்

மால்:—ப்ரஹ்லாதனிடமுள்ள வாத்ஸல்யத்தால் ஹிரணியனைப்பிளந்தான்.

இமை:—ஒரு க்ஷணகாலம் கூட, மற்றொரு வஸ்துவை நினைக்கக் கூடாதென்பதாம். "யதாஹ்யேவைஷ ஏதஸ்மிந்நுதர மந்தரம் குருதே. அத தஸ்ய பயம் பவதி" என்கிற ச்ருதி வாக்யத்தை உணர்க.

இமை-வினை முற்றாகக்கொள்ளில் (இதை ஆலோசித்துப் பார்!) என்று பொருள்- தனது நெஞ்சைக் குறித்துச் சொல்கிறாரென்று கொள்க.

இமையாத கண்ணா லிருளகல நோக்கி
அமையாப் பொறிபுலன்க ளைந்தும்—நமையாமல்
ஆகத் தணைப்பா ரணைவரே, ஆயிரவாய்
நாகத் தணையான் நகர்.

(32)

இமையாத	அறிவின் தன்மை குறைவில்லாத	ஆகத்து அணைப்பார்	[illegible]
கண்ணால்	உட்கண்ணால்	ஆயிரவாய்	[illegible]
இருள் அகல	இருள் (அஜ்ஞானம்) விலகும்படி	நாகத்து	[illegible]
நோக்கி	ஜீவபரஸ்வரூபங்களை நோக்கண்டு	அணையான்	[illegible]
அமையா	[illegible]	நகர்	[illegible] (பரமபதத்தை)
பொறி புலன்கள் ஐந்தும்	ஐந்து இந்திரியங்களையும் சப்தாதிவிஷயங்களாகிய ஐந்தினையும்	அணைவரோ?	[illegible]
நமையாமல்	அடக்காமல்		

இப்பாசுரத்தில் ஈச்வரனைத் தவிர மற்ற விஷயங்களை ஒரு நொடிப்பொழுதாவது நினைக்கலாமோ? என்றார். இப்பாசுரத்தில் அங்ஙனம் மற்ற விஷயங்களை நாடுகிறவர்கள். ஸர்வஜ்ஞ [illegible]

களையும் செய்யயோக்யமான நிலமாகிய பரமபதத்தை அடைகிற தில்லை என்கிறார்.

இமையாத:—நல்லறிவுடன் கூடின மனமென்றும் உட்கண்ணால் அஜ்ஞானமாகிற இருளை நீக்கி ஜீவாத்மாவின் தன்மைகளையும் ஈச்வரனுடைய தன்மைகளையும் உள்ளபடி அறியாமலும், புறம்பே செல்கிற ஐம்புலன்களை அடக்காமலும் காமபுருஷார்த்தத்திலீடுபட்டு மாதர்களை அணைத்துத்திரிபவர்கள், நாகத்தணைவான் நகரமான ஸ்ரீவைகுண்டத்தை எப்படி அடைவார்கள்? என்று வினவுகிறார். பரமபதத்தையடைய ஸாதனமாகச் சொல்லப்பட்ட பக்தியோகாதிகள் இல்லாததுடன் விபரீதஸாதனங்களையும் பூர்ணமாகப் பெற்றவர்கள் பரமபுருஷார்த்தத்தை அடையாமல் இந்த ப்ரக்ருதியிலே ஸஞ்சரிப்பார்கள் என்றபடி.

இப்பாசுரத்தில், “ஆகத்தணைப்பார்” என்கிற பதத்திற்கு சரீரத்தில் அணைத்துக்கொள்கிறவர்கள் என்று பொருள். இங்கு செயப்படுபொருள் சொல்லப்படவில்லை. ஆதலால் ஸ்திரீகளை என்கிற பதத்தைச் சேர்த்துக்கொள்ளவேணும்.

அணைவரோ என்கிற பதத்தின் இறுதியிலுள்ள ஓ என்பதற்கு எதிர்மறைப்பொருள் கொண்டு அணைவரோ என்றும் அர்த்தம் கொள்க. இப்படிப் பொருள் கொண்டால் மாதர்களை அணைத்துத்திரிபவர் பரமபதத்தையடைவரோ? என்று கேட்டுச்சொல்லிய தாத்பர்யம் விளங்கும்.

இங்கு வேறு விதமாகப் பொருளுரைப்பாருமுண்டு. அதாவது உலகில் கர்மபரவசர் என்றும் ப்ரேமபரவசர் என்றும் உபயபரவசர் என்றும் மூவகைப்பட்ட அதிகாரிகள் உண்டு. தெய்வத்தை நினையாமல் கருமங்களையே செய்துகொண்டிருப்பவர் கர்மபரவசர், தெய்வத்தையே நினைத்துக்கொண்டிருப்பவர் ப்ரேமபரவசர். சில ஸமயங்களில் அவரவர்க்கு வேண்டிய காரியங்களைச் செய்து கொண்டும் சிலஸமயங்களில் தெய்வத்தைச் சிந்தித்துக்கொண்டும் இருவிதமாகப் போதுபோக்குகிறவர்கள் உபயபரவசர். இப்பாட்டில் இம்மூன்றுவகை அதிகாரி சொல்லப்படுகிறார். முன்னடிகளால் கர்மபரவசனையுள்ளவர்கள் என்பது விளங்கும்.

ஆகத்தணைப்பார்:—என்றவிடத்தில் பரமபுருஷனை என்கிற பதத்தை சேர்த்துக்கொண்டு பரமபுருஷனை மார்பில் தரிப்பவர்கள் என்று ப்ரஹ்மபாவனை சொல்லப்படுகிறது. ஆகமூன்றடிகளால் உபயபாவநர் என்ற அதிகாரி சொல்லப்பட்டார்.

ஆகவே ஸம்ஸார சிந்தையும் ஈச்வரசிந்தையுமாயிருப்பவர்கள் பரமபதத்தை அடைவார்களோ? "கடையறப்பாசங்கள் விட்ட பின்னையன்றியவனவைகாண்கொடானே" "போகம் நீயெய்தி பின்னும் நம்மிடைக்கே போதுவாய் என்ற பொன்னருள்" என்கிற மற்றையவர்களின் பாசுரப்படி, ப்ரகிருதியிலும் ஆசையைவிடாமல் ஈச்வரனையும் இடையே நினைத்திருப்பவர்கள் பரமபதத்தை சேருகிறதில்லை என்று.

மற்றும் சிலர் அணைவரே என்பதற்கு அடைவர்கள் என்றே பொருள்கூறி, இந்திரியஜயம் செய்யாவிடினும் ஸர்வேச்வரன் பரமகிருபையால் மேல் விழுந்தால் அவனை விலக்காமல் "மார்வமென்பதோர் கோயிலமைத்து மாதவனென்னும் தெய்வத்தை நாட்டி" என்றபடி மார்பிலே தரித்துத்துதித்தால் நாகத்தணையான் நகரத்தை நாடுவர்கள் என்பது நிச்சயம். நம்முடைய இந்திரியங்களைத்தாம் பட்டி மேய்ந்து திரிந்தபோதிலும், அவ்வீசன் தயையினால் தூண்டப்பட்டு வரவே, நாம் ஆபிமுக்யத்துடன் இருந்தால் அதனாலேயே [illegible] திருப்தியடைந்த பரமபுருஷன் தனது பட்டணமாகிய பரமபதத்திற்கு அழைத்துச் செல்கிறான்.

"விண்ணுலகம் தருவானாய் விரைகின்றான்" என்றபடி முக்தியைக்கொடுக்க த்வரையுடனிருக்கிறவன் நம்மால் செய்யப்படுகிற தனக்கு ப்ரியமான ஒரு வியாஜத்தையே அபேக்ஷிப்பதால், நாம் விஷயாந்தரங்களிலே அலைந்துகொண்டிருந்தபோதிலும், அவனுடைய தயையால் ஒரு சமயத்தில் அந்த ஸர்வேச்வரன் நம்முடைய நெஞ்சில் தோன்றினால், அதை மறக்காமல் எப்பொழுதும் ஸ்மரித்துக்கொண்டிருந்தால் அதையே பெருவிலையாகக்கொண்டு நமக்கு பரமபதத்தை கொடுக்கிறான் என்றுரைப்பார்கள். இப்பக்ஷத்தில் ஸர்வேச்வரனுடைய தயை என்னும் குணம் புகழப்பட்டதாகும்.

நாகத்தணையான்நகர்:—இப்பதங்களால் ஒரு தேச விசேஷத்தில் சென்று அநுபவிக்கப்படுகிற ஸ்தாநம் மோக்ஷமெனப்படும் என்ற

பொருள் விளங்கும். ஆதலால் அர்ச்சிராதி மார்க்கத்திலே சென்று ஸ்ரீவைகுண்டமென்னும் கலங்காப் பெருநகரையடைந்து ஸ்வரூப மான கைங்கரியங்களைச் செய்வது முக்தியென்னும் மதம் வலை யப்பட்டதாயிற்று.

நகர மருள்புரிந்து நான்முகற்குப் பூமேல்
பகர மறை பயந்த பண்பன்—பெயரினையே
புந்தியால் சிந்தியா தோதியுருவெண்ணும்
அந்தியாலாம் பயனங்கென். (33)

நான்முகற்கு	பிரமதேவனுக்கு	பெயரினை	நாமங்களை
பூமேல்	(நாபியிலுள்ள) மலரின்மேல்	புந்தியால்	மனத்தால்
		சிந்தியாது	நினைக்காமல்
நகரம்	வஸிக்குமிடத்தை	ஓதி உரு எண்ணும்	ஜபம் செய்து கணக்கிடுதலான
அருள்புரிந்து	கிருபையால் கொடுத்தும்	அந்தியால்	ஸந்த்யாவந்தனாதி கர்மங்களால்
பகர	(உலகங்களுக்கு) சொல்லும்படி	அங்கு	அவ்விடத்தில்
மறைபயந்த	வேதங்களை உபதேசித்த	ஆம் பயன்	ஏற்படப்போகும் ப்ரயோஜனம்
பண்பன்	[illegible]	என்	என்ன? (யாதுமில்லை)

பதி: பத்மயோனி பத்மநாபன் தனது நாபியிலுண்டான நான்முகனுக்கு தனது நாபிகமலத்திலேயே இருப்பிடமாகச் செய்து கொடுத்தான். ப்ரஜைகளை ஸ்ருஷ்டிக்கும்படி வேதங்களையும் சொல்லிவைத்தான். இப்படி உபகரிப்பவனான புருஷோத்தமனான நாராயணனுடைய நாமங்களையும் அவன் அர்த்தங்களையும் மனத்தில் சிந்தியாமல் [illegible], நாமம்—ஆயிரம்—என்று எண்ணிக்கையையே பயனாகக் கொண்ட ஸந்த்யாவந்தனத்தால் யாது பயன் ஏற்படும்? பரமபுருஷார்த்தமாகிய மோக்ஷத்திற்கு பகவத்த்யானம் இல்லாத கேவல கர்மங்கள் எப்படி உதவியாகும்? என்கிறார்.

நகரமருள்புரிந்து:—உலகில் உயர்ந்த அரசர்கள் தனக்கு அந் தரங்கர்களான பெரிய உத்யோகஸ்தர்களை தனக்கு ஸமீபத்தி

லேயே பெரியமாளிகைகளைக்கட்டி அமர்த்திவைக்குமாப்போல், ஸர்வேச்வரன் பிரமதேவனை தனது நாபியிலேயே அமரச்செய்தான்.

மறைபயந்த:—மத்ஸ்யஹம்ஸாதி ரூபங்களை எடுத்துக்கொண்டு வேதங்களை உபதேசித்தான்.

பண்பன்:—இப்படி பிறருக்கு உதவுவதே ஸ்வபாவமாகவிருக்கிறவன்.

பெயரினையே:—ஈச்வரனுடைய குணங்களையும் வீரச்செயல்களையும் பரக்கச்சொல்கிற திருநாமங்களைச்சொல்லி, அவனைத் திருப்தி செய்விக்காமல், மனதில் வேறு விஷயங்களை நினைத்துக்கொண்டு, நூறு—ஆயிரம், என்று வாயால் உருப்போடும் ஸந்தியாவந்தனத்தால் பயன் ஏற்படாது—ஸந்த்யாவந்தனம் என்பது மற்ற கர்மங்களுக்கு உபலக்ஷணம். ஈசனைச்சிந்தியாது செய்யப்படும் கேவல கர்மங்கள் பயனற்றவை என்றபடி. பகவதாராதன ரூபங்களான கருமங்களின்றி மற்றவை பரமபதத்தையடைவிக்க சக்தியற்றவைகள்.

பரமனிடம் பக்தியின்றி செய்யப்படும் கருமங்களால் ஏற்படும் பயன் பரமபதத்தில் இல்லை. கேவல கருமங்களைச் செய்பவர்கள் பிரகிருதியிலேயே சுற்றுவார்கள், என்பதாம்.

என்றொருவர் மெய்யென்பரேழுலகுண்டு, ஆலிலையின்
முன்றொருவனாய முகில்வண்ணா—நின்றுருகிப்
பேய்த்தாய் முலைதந்தாள் பேர்ந்திலளால், பேரமர்க்கண்
ஆய்த்தாய் முலைதந்தவாறு. (34)

முன்	முன்னொருகால் [illegible]	நின்று உருகி	[illegible]
எழுலகு உண்டு	உலகங்களையெல்லாம் புஜித்து	முலைதந்தாள்	முலைகொடுத்த [illegible]
ஆல் இலையில்	ஆல்மரத்தினிலையில்	பேய் தாய்	[illegible]
ஒருவனாய்	ஒப்பற்றவனான		
முகில்வண்ணா	மேகம்போன்ற திருமேனியையுடையவனே	பேர்ந்திலள்	அங்கிருந்து [illegible] தான்

பேர் அமர் கண்	அந்தப்பெரிய யுத்த ஸ்தலத்தில்	ஒருவர்	நிகரில்லாமுனிவர்
ஆய் தாய்	இடைச்சியான தாய் (யசோதை)	மெய் என்பர்	உண்மையென்கி றார்கள்
முலைதந்தஆறு	முலைகொடுத்த ப்ர காரத்தை	என் ?	அது எப்படிப்பொ ருந்தும் ?

கீழே எம்பெருமானிடத்தில் பக்தியில்லாமல் செய்யப்படும் கருமங்களாலாவ தோர்பயனில்லை என்றார். இப்பாட்டில், அவ் வீசனிடம் பேரன்புகொண்டவர்களுள் ஒருத்தியான யசோதை யை நினைத்து அவளை ஒரு சமத்காரமாகப்புகழ்ந்து பேசுகிறார்.

என்றொருவர்:—உலகேழுமுண்டு ஓராலமிலைத்துளிரில் துயின்ற மேகம்போன்ற நிறம்வாய்ந்த பரமா! நீ கண்ணனாயவதரித்தபொழுது கஞ்சனால் தூண்டப்பட்டுவந்த பூதனை, உனக்கு விடம் நிறைய முலைகொடுக்க, நீ அவளுயிரையும் உண்டாய். உடனே அவள் பேய்வடிவுடன் மாண்டு கிடந்தாள் அப்பொழுது உன்னிடம் பேரன்புகொண்ட யசோதை அவ்விடத்திற்கு மாற்றாக தன் னுடைய முலையை கொடுத்தாள், நீயும் அவளது பாலுமுண்டாய், என்று அறிவில் சிறந்த முனிவர்கள் நூல்களில் எழுதிவைத்துள்ளார் கள். இது எங்ஙனம் உண்மையாகும்? என்று நினைக்கிறார்.

ஒருவள் முலைகொடுக்கவந்து அங்கே மாண்டு பிணமாய்க் கிடக்க மற்றொருவள் முலைகொடுத்தாள் என்றால் எப்படி நம்பமுடியும்? உலகத்தில் பிணத்தைப்பார்த்தால் பயப்படுவது யாவர்க்கு மியல்பேயாகும்.

அதிலும், பெரியபிணம் கிடக்கிறது, அதிலும் முலைகொடுத்த வள் பிணமாயிருக்கிறது. அப்பொழுது யசோதை, பிணமென்கிற காரணத்தாலும் தனக்கும் மரணம் நேருமோ என்கிற காரணத்தா லும் அஞ்சியிருந்தாள் என்றால் நம்பமுடியும். அங்ஙனமின்றி அப் பிணம் கிடக்கும்போதே கிட்டநெருங்கி முலைதந்தாள் ஒருத்தி என்று அறிஞர்களான முனிவர்களும் எழுதிவைத்தார்களே! இது எப்படி உண்மையாகும் என்றபடி.

இத்தால் ஸகலவிரோதிகளையும் ஸம்ஹரிக்கவல்ல கண்ணனை யசோதை அக்கண்ணனிடமுள்ள பேரன்பினால் ஸமீபத்தில்

சென்று முலையூட்டினுளென்று கருதி அவளுடைய பேர்மையைக் கொண்டாடியதாயிற்று. ஸர்வேச்வரனிடம் பரமபக்தியே பரமோபாயம் என்று கருத்து.

ஆலிலையில் முன்னொருவனும:—உலகங்களையுண்டு ஆலிலையில் கிடந்தபொழுது யாவரும் துணையில்லையே! தாய் தகப்பனுமில்லையே! காப்பார் ஆருமில்லையே என்று வருந்துகிறார்.

பேரமர்க்கண்:—மிகவும் வலிமைவாய்ந்த பூதனை மாண்ட விடமாதலால், யுத்தபூமி என்கிறார்.

அன்றிக்கே:—பேரமர்க்கண் என்பதை ஆய்த்தாய்க்கு அடைமொழியாக்கினுல், துன்றுக்கொன்று சண்டை செய்கிற [illegible] டகண்களையுடைய யசோதைப்பிராட்டி என்று பொருள். [illegible] [illegible] யசோதை என்றதால் அவளுடைய [illegible] [illegible]

ஆறிய வன்பிலடியார்தம் மார்வத்தால்
கூறிய குற்றமாக் கொள்ளல்நீ—தேறி
நெடியோய்! அடியடைதற் கன்றே, ஈரைந்து
முடியான் படைத்த முரண். ([illegible])

[illegible]

[illegible]

யும் ஆராய்ந்துபார்த்தார். யசோதையின் பக்திக்கும், தன்னுடைய பக்திக்கும் நெடுந்தூரம் வாசியிருப்பதுபோல் தோன்றிற்று. உடனே தன்னை இகழ்ந்துகொண்டார். நாம் அப்பகவானைப் பாடிப் புகழ்வது தகுமோ? என்றார். நாம் இப்படிப் பாடுவது, மேல் வேஷமே, என்று தன்னைநொந்துகொண்டார். பிறகு ஒருவாறு தேறி தனது குற்றங்களைப்பொறுத்தருளவேணுமென்று ஈச்வரனைப் பிரார்த்திக்கிறார் இப்பாட்டில்.

ஆறியவன்பில்:—பரிபூர்ணமான பக்தியில்லாமலும், பக்தியுள்ளவர்கள்போல் நடிக்கும் அடியவர்கள் உள்ளன்பின்றிக்கூறிய பாசுரங்களை நீ குற்றமாகக்கொள்ளக்கூடாது. ஏனெனில் நீ உன்னிடம் மிகுந்த த்வேஷமுள்ளவர்களுக்கும் அருள்புரிந்திருக்கிறாயே? த்வேஷமுள்ளவர்களுக்கு அருள் புரிந்தாய் என்றால் அன்புள்ளவர்போல் நடிப்பவருக்கு அருள் புரியலாகாதோ? பத்துத் தலைகள்படைத்த ராவணன் ப்ராணேப்யோபி கரீயஸீ என்கிற உன் உயிரிலும் உயர்ந்த பிராட்டியை அபஹரித்தான்; உன்பால் மிகுந்த பகைகொண்டு ஏசினான். அவனே தனது மறுபிறவியில் (சிசுபாலன் என்றபிறவியில்) உய்ந்துபோனான். இராவணன் செய்த கொடுஞ்செயல்கள் மறுபிறவியில் உன்னையடைய உதவியாயிற்றென்றால், பக்தியுள்ளவர்போல் நடிப்பவர்களுடைய பாசுரங்கள் உன்னையடைய ஸாதனமாகாதோ? ஆகையால் என் செய்கைகளைப் பொறுத்தருளவேணுமென்கிறார்.

ஸ்ரீவைகுண்டத்தில் த்வாரபாலகர்களான ஜய விஜயரென்பவர்கள், ஸநகாதிகளுடைய கோபத்திற்காளாகி, சபிக்கப்பட்டு, மூன்று பிறவிகளில் பகவத்விரோதிகளானார்கள், முதல் பிறவியில் ஹிரண்யகசிபு—ஹிரண்யாக்ஷனெனப்படுவார்கள்.

இரண்டாவது பிறவியில் இராவணன்—கும்பகர்ணன் எனப்படுவர், மூன்றும் பிறவியில் சிசுபாலன் தந்தவக்ரன், எனப்படுவர். பிறகு அவர்கள் முன்போல் த்வாரபாலகர்களாயினார் என்கிற சரிதம் இங்கு நினைக்கத்தக்கது.

இங்கு இராவணன் தனது மறுபிறவியிலும் ஈசனுக்குப் பகைவனாகவே இருந்துகொண்டு இறுதியில் அவ்வீசனை அடைந்தா

னென்பதால் யாவரும் துவேஷத்தால் உய்ந்துபோகலாமென்பது நினைக்கலாகாது. ஆழ்வார்கள் பரமபுருஷனிடம் கரைபுரண்ட கடலி னிற் பெரிய காதல் வாய்ந்தவர்களாதலால் எவ்விதத்தாலாவது அவ னுடைய நினைவு நமக்கு வேண்டுமென்பதை நினைத்து சிசுபாலாதி கள் துவேஷத்தாலும் பரகதியை அடைந்தார்களே, என்றருளிச் செய்யும்படியிருக்கும். கடைசியில் பேசினேன் ஏசமாட்டேன் என்று ஸ்னேஹத்துடன் கூடிய நினைவென்னும் பக்தியினாலேயே அவனை அடைய ஆசைப்படுவார்கள். ஆதலால் கோப்ய: காமாத் பயாத்கம்ஸ: த்வேஷாத் சைத்யாதயோ ந்ருபா: என்பதுவும் அவ் வவ்வோ அதிகாரி விசேஷநியதமென்பது அவரவர்களின் சரிதங் களாலேயே தெளியவரும்.

முரணை வல்தொலைதற் காமென்றே, முன்னம்
தரணி தனதாகத் தானே—இரணியனைப்
புண்ணிரந்த வள்ளுகிரார் பொன்னாழிக்கையால், நீ
மண்ணிரந்து கொண்டவகை. (36)

முன்னம்	முன்பு ஒருகால்	நீ	[illegible]
தரணி	பூமியை	மண்	[illegible]
தனதாகத் தானே	[illegible]	[illegible]	[illegible]
இரணியனை	ஹிரண்யகசிபுவை	வகை	[illegible]
புண்ணிரந்த	புண்ணாகும்படி கிழித்த	முரணை	[illegible]
வள் உகிர் ஆர்	கூர்மையான நகங்கள் [illegible]	வலி	[illegible]
பொன் ஆழி கையால்	அழகான சக்கரத்தை [illegible] கையால்	தொலைதற்கு ஆம் என்றே	[illegible]

இப்படி தன்னை இரந்துகொண்டு தான் [illegible] பொறுத்தருளவேணுமென்று கேட்டுக்கொண்ட [illegible] ஸம்ஸாரிகள் அஹங்கார மமகாரங்களால் நலியப்பட்டு [illegible] நினைக்கவில்லையே என்று, நாட்டாருக்காக இரங்கி, நீ [illegible] மண்ணிரந்தது உலகத்தார் உன்னை வணங்கவேணுமென்று [illegible]

ணத்தாலன்றோ! அங்ஙனம் நீ நீர்மையுடனிருக்க ஸம்ஸாரிகள் ஏன் உன்னை நினைப்பதே இல்லை? என்று அப்பகவானையே வினவுகிறார்.

முரணை:—முன்பொருகால் ஈரேழுவையகங்களேயும் தன்னுடையது என்று நினைத்து தனது வலிமையால் விண்ணவர்களையும் வென்று வெண்குடை நிழலில் அரசுபுரிந்த ஹிரண்யகசிபு என்பானொரு அஸுரனைத் தொலைக்க நரசிங்கமாய்த் தோன்றி தனது கூர்மையான கைநகங்களால் அவ்வஸுரனை இரு பிளவாக்கிழித்துப் பொகட்டு உலகங்களைத் தன்னதாக்கிக்கொண்ட பெருமான், மற்றொருகால் இவ்வுலகங்களை தன்னதென்றபிமானித்த மஹாபலிச் சக்ரவர்த்தியிடம் மூன்றடி மண் இரந்து பெற்று எல்லாவுலகங்களையும் தன் தாளால் அளந்து தான் ஈச்வரனென்று காண்பித்தான். இரணியனைக்கொன்றதுபோல் மஹாபலியையும் கொல்லலாகாதோ? அந்த திருக்கைகளையும் திருவுகிர்களையும் உபகரணங்களாக அடையப் பெற்றிலனோ? நமக்கு ஸ்வாமியானவன் இங்ஙனம் ஸுலபன் என்று ஸம்ஸாரிகள் அறியவேணுமென்றல்லவோ அவன் மண்ணிரந்தது ஸம்ஸாரிகள் ஏன் இதனை உணரவில்லையென்று திருவுள்ளத்தில் கருதி இதனை ஈசனிடம் விண்ணப்பம் செய்தார்.

வகையறு நுண் கேள்வி வாய்வார்கள், நாளும்
புகை விளக்கும் பூம்புனலு மேந்தித்—திசைதிசையின்
வேதியர்கள் சென்றிறைஞ்சும் வேங்கடமே, வெண்
மதியவாய் மாலுகந்த வூர். [சங்க

வகை அறு	வேறுமார்க்கங்களை த் தொலைக்கவல்ல	பூம் புனலும்	புஷ்பத்தோடு ஜலத்தையும்
நுண்	நுட்பமான	ஏந்தி	வஹித்துக்கொண்டு
கேள்வி	சிரவணத்தை	திசைதிசையின்	ருந்தும்
வாய்வார்கள்	பெற்றவர்களான		
வேதியர்கள்	வேதார்த்தங்களை உணர்ந்தவர்கள்	சென்று	புறப்பட்டுப்போய்
		இறைஞ்சும்	ஸேவிக்கப்படும்
நாளும்	ஒவ்வொருதினமும்	வேங்கடமே	திருவேங்கடமலையே
புகை	தூபத்தையும்		
விளக்கும்	தீபத்தையும்		

வெண்சங்கம்	வெளுப்பான ஸ்ரீ சங்கத்தை	மால்	ஸ்வாமி
ஊதிய	வாசிக்கிற	உகந்த	விரும்பி வஸிக்கிற
வாய்	திருவதரத்தையுடைய	ஊர்	தேசமாகும்.

ஸம்ஸாரிகளான சேதனர்கள் நாங்கள் அவனவதாரங்களுக் குப் பிற்பாடரானோமே எங்ஙனம் அவனைக் காண்பதென்று வினவ, அவ்வீசனன்றோ! திருவேங்கடமலையில் நித்யவாஸஞ் செய்கிறனென்று சொல்லி திருமலையை அநுபவிக்கிறார்போலு மிப்பாட்டில்.

வகையறு:—ஸாதனாந்தரங்களையும், பிரயோஜநாந்தரங்களையும் தேவதாந்தரங்களையும் பற்றுவதற்கிடான பொய்நூல்களை மெய் நூல்களென்று வாசித்துக் கேளாமல் பரமநுட்பமான தர்மங்களைக் கேட்டுணர்ந்த வைதிகர்கள் திரள்திரளாக எட்டுதிசைகளிலிருந்தும் வந்து தூபதீபாதிகளை ஏந்தி வணங்கி வழிபட்டு பலபடியாகத் துதி செய்யும் திருவேங்கடம் என்னும் மலை முன்பு பாரதப்போரில் பாண்டவர்களுக்காக சங்கமூதிய கண்ணன் உறையுமிடம். ஸம் ஸாரிகளும் சென்றநுபவிக்கலாமென்று கருத்து.

வகையறு:—உலகில் சிலர் தீர்த்தங்களில் மூன்று வேளைகளி லும் மூழ்கி எழுந்துகொண்டிருப்பார்கள். மற்றும் சிலர் ஜபம் செய்துகொண்டேயிருப்பார்கள். அவைகளைப் பார்த்து மற்றவர்க ளும் இது தான் பெரிய ஸாதனமென்று நினைத்து முழுகுவார்கள் ஜபம் செய்வார்கள். அங்ஙனம் கண்களில் படுகிறவைகளையெல் லாம் செய்துகொண்டு திரியாமல் ஸ்ரீபராஸ்வரூபங்களையும் உபாயங் களையும் உள்ளபடி கேட்டுணர்ந்தவர்கள்.

வேதியர்கள்:—வேதார்த்தங்களை அறிந்தவர்கள். வேதங்க ளில் பரம்பொருளாகச் சொல்லப்பட்ட புருஷன் நித்யவாஸஞ் செய் கிறனென்று பரம்பொருளை நாடித் திருவேங்கடத்திற்குப் போகி றார்கள்.

வெண்சங்கம்:—பாரதப்போரில் அர்ஜுனனுக்குத் தேர்ஸாரதி யாயமர்ந்து எதிரிகள் கலங்கும்படி ஸ்ரீபாஞ்சஜன்யத்தை ஊதிய

கிருஷ்ணன். இந்த அடைமொழியால் விரோதிகளைப்போக்கும் வல்லமையும் ஆச்ரித பக்ஷபாதமும் விளக்கப்பட்டதாயிற்று.

உகந்தவூர்:—என்பதால் கலங்காப்பெருநகரான பரமபதத்தைக்காட்டிலும் அவ்வீசன் அதிகமாக உகக்குமிடம் திருவேங்கடம். "மாயாவீ பரமானந்தம் த்யக்த்வா வைகுண்டமுத்தமம். ஸ்வாமி புஷ்கரிணீ தீரே ரமயா ஸஹ மோததே" என்கிற பிரமாணத்தையும் உணர்க. திருவேங்கடம் என்கிற திருநாமத்தாலேயே நம் பாபங்களெல்லாம் அத்திருமலையைஸேவித்தவாறே தொலையுமென்பது விளங்கும்.

ஊரும் வரியரவ மொண்குறவர் மால் யானை
பேர வெறிந்த பெருமணியை—காருடைய
மின்னென்று புற்றடையும் வேங்கடமே, மேலசுரர்
எம்மென்னு மாலதிடம். (38)

ஊரும்	ஊர்ந்து ஸஞ்சரிக்கிற
வரி அரவம்	(தேஹத்தில்) பல வரிகளையுடைய ஸர்ப்பமானது,
யானை	யானைகள்
பேர	(தங்கள் புனத்திலிருந்து வெளியில்) செல்வதற்காக
ஒண்குறவர்	ஒப்பற்றவேடர்கள்
எறிந்த	வீசி அடித்த
பெரு மணியை	பெரிய மாணிக்கத்தை
கார் உடைய	மேகங்களில் ஒளிக்கிற
மின் என்று	மின்னலென்று நினைத்து பயப்பட்டு
புற்றடையும்	புற்றினுள் நுழையுமிடமான
வேங்கடமே	திருவேங்கட மலை
மேல சுரர்	நித்யஸூரிகள்
எம் என்னும்	எங்கள் ஸ்வாமியென்று கொண்டாடும்
மாலது	ஸ்வாமியினுடைய
இடம்	நித்யவாஸம் செய்யும், தேசம்.

இப்பாட்டில் திருவேங்கடமென்னும் திருப்பதி இப்புவியிலுள்ள வைதிகர்களுக்குப் புகலிடம் என்று சொல்லி இப்பாட்டில் நித்யஸூரிகளுள்பட எல்லாருக்கும் உத்தேசமாயிருக்கும் திருவேங்கடமலை, என்று திருமலையின் சிறப்பைப்பேசுகிறார்.

ஆழ்வார்களுக்கு ஸ்ரீயங்நாராயணனிடம் பரமபக்திபோல் மற்ற ப்ரஹ்மாதி ஸ்தம்பமளவான ஐச்வர்யங்களில் வெறுப்பும் இயற்கையிலேயே நடமாடும். அத்துடன் பகவத் ஸம்பந்தம் பெற்ற வஸ்துக்களில் அப்பகவனிடம்போல் பரமபக்தியுடன்கூடிய பரமப்ராப்ய புத்தியும் இடைவிடாது நிற்கும். அவர்கள் பெருமானை வேண்டும்போது, அவன் உகந்து வாஸம் செய்கிற நிலங்களில் ஏதேனுமொரு பிறவி பிறக்கும்படி நீ அருளவேணுமென்று கேட்பார்கள், குலசேகரப்பெருமாள் திருமலையில் குருகு, மீன், முதலிய பிறவிகளையும் வேண்டி, கடைசியில் "எம்பெருமான் பொன்மலைமேலேதேனுமாவேனே" என்று ஏதாவது ஒரு ஜந்மம் திருமலையில் கிடைத்தால் போதுமானது என்றார். ஸ்ரீஆளவந்தார், தவ தாஸ்ய ஸுகைக ஸங்கிநாம் பவநேஷ்வஸ்த்வபி கீட ஜந்ம மே | இதராவஸதேஷு மாஸ்மபூதபி மே ஜந்ம சதுர் முகாத்மநா | என்று பாகவதோத்தமர்களுடைய திருமாளிகைகளில் ஒரு புழுவாயிருக்கலாம், தெய்வத்தை நினையாதவர்களுடைய வீடுகளில் நான்முகப் பிறவியும் வேண்டாமென்கிறார். ஆதலால் பரமைகாந்திகள் எம்பெருமானுறையும் திருப்பதிகளுடைய போக்யதையாலே அத்திருப்பதிகளில் வாஸம்செய்யும் ஸகல ஜீவராசிகளையும், மேலான பக்தியுடன் துதிசெய்வார்கள். திருமங்கையாழ்வார், சிங்கவேழ்குன்றம், என்கிற அஹோபிலமென்னும் திருப்பதியை அநுபவிக்கப்புகவே அங்கு வழிபறிக்கும் வேடர்களுடைய ஆரவாரத்தையும் உத்தேச்யமாகக் கருதினார். இப்படி ஆழ்வார்கள் அநுபவத்திற்கிணங்க இப்பொய்கையாழ்வாரும் திருமலையில் வர்த்திக்கிற மலைப்பாம்புகளையும், யானைகளையும், குறவர்களையும் பயிர்களின் செழிப்பையும், உயர்ந்த மாணிக்கங்களையும், கன்று மகிழ்ந்த அம்மலையின் போக்யதையை அழகாகப்பேசுகிறார்.

குறவர்கள் தினைப்புனங்காக்குந் தொழில்வாய்ந்தவர்கள், என்பது மிகப்ரஸித்தம், அதாவது புஞ்சை நிலங்களில், மிருகங்கள் மேய்ந்து பயிர்களை அழிக்காமலிருக்கும்பொருட்டு உயரமாக ஒரு குடில் கட்டிக்கொண்டு அதிலமர்ந்து நான்கு திக்குகளையும் பார்த்துக்கொண்டிருந்து மிருகங்களோ பக்ஷிகளோ பயிரை அழித்தால் உடனே அவைகளைத் துறத்தி ஓட்டிப் பயிரைக்காப்பார்கள். இதை

புனங்காப்பது என்று சொல்லுவார்கள். அவ்வண்ணம், திருமலையில் திருவேங்கடநாதனுடைய திவ்யகடாக்ஷத்தால் புஞ்சை நிலங்கள் செழித்து வளர்ந்த பயிர்களுடைய தான்ய ஸம்ருத்தியுடன், விளங்குகின்றன. குறவர்கள் மிகவும் பரிவுடன் அந்நிலங்களுக்கு காவலிருக்கிறார்கள், அது சமயம் மலைகளில் இயற்கையாக வஸிக்கும் யானைகள் அப்பயிர்களை அழிக்க புஞ்சைநிலங்களில் நுழைகின்றன. அவைகளை துரத்துவதற்கு, உலகத்தில் கற்களையெடுத்து அடித்துத்துரத்துவதுபோல் குறவர்கள் அங்கு கீழே இறைந்து கிடக்கும் உயர்ந்த மாணிக்கக்கல்களை எடுத்து யானைகள்மீது எறிகிறார்கள், அப்பொழுது அந்தயானைகளை விழுங்கி சாப்பிடுவதற்கு மலைப்பாம்புகள் வெளியில் அலைந்து கொண்டிருக்கின்றன. குறவர்கள் மாணிக்கக்கற்களை எறிய அதன்ஒளியைப்பார்த்து இது மின்னலோ என்று நடுங்கி அப்பாம்புகள் புற்றுகளில் நுழைந்து ஒளிந்துவிடுகின்றன. இங்ஙனம் பாம்புகள் ஒளியும் திருவேங்கடமலையை நித்யஸூரிகள் நங்கள் ஸ்வாமி வாஸம் செய்கிற இடம் என்று கொண்டாடுகிறார்கள்.

இப்படி குறவர்கள், பயிர்களை அழிக்கும் யானைகளை துரத்துவதற்கு மாணிக்கரத்னங்களையெறிய அதனொளியைக்கண்டு, மின்னலோ என்று நினைத்துபாம்புகள் புற்றுகளில் மறைகின்றன, என்ற வர்ணனையால். அம்மலையில் நிலங்கள் தான்யங்களுடன் செழித்து வளர்ந்திருக்கின்றன, என்றும், யானைகள் மலிந்து வஸிக்கின்றன வென்றும், மாணிக்கக்கல்கள் கீழே இறைந்து கிடக்கின்றன, என்றும், மலைப்பாம்புகள் இருக்கின்றன என்றும், அம்மலையின் பெருமை பேசப்பட்டது.

மலைப்பாம்புகள், யானைகளை விழுங்கி சாப்பிடும்படியானதென்று தமிழ் நூல்களில்மிகப் பிரஸித்தமான விஷயம், திருமங்கையாழ்வாரும் "காரியமாமுகில் படலங்கள் கிடந்தவை முழங்கிட களிறென்று பெரிய மாசுணம் வரையெனப் பெயர்தரு பிரிதியெம்பெருமானை" என்கிற பாசுரத்தில் மலைப்பாம்புகள், மேகங்களைக்கண்டு யானை என்று பிரமித்து விழுங்குவதற்கு மலைபோல் பெயர்ந்து ஸஞ்சரிக்கின்றன என்று திருப்பிரிதி என்னும் திருப்பதி

வைப்பெதிறார். ஆதலால், திருமேனி [illegible] விளங்கத் தோற்றங்கொண்டிருக்கின்றன.

பாம்புகள், இவர்க்கு பயப்படும் [illegible] முன்னம் மின்னல் தோன்றும். ஆதலால் [illegible] இடிவிழப்போகிறதென்று நினைத்து புற்றுக்குள் [illegible] மறையும். ஆதலால் பாம்பைப் பாதுகாக்க [illegible] கங்களின் ஜனிமடைக்கமாகிய மின்னலென்று [illegible] இப்பாகாரத்தின் கருத்து, நாகத்தின் மேற்குறவர் [illegible] மாணிக்க, மேகத்தின் மின்புனையும் வேங்கடமே [illegible] மாத்தாண்ட மண்டலத்தார் வாயுமண்டலத்தால் [illegible] மண்டலத்தார் காப்பு. [illegible] திருவேங்கடமலையிலுள்ள [illegible].

இவ்வாழ்வார் திருமலையின் [illegible] யக் ஞானிகளையும் பெருமானைப்போல் [illegible] பார்த்தால் திவ்யதேசங்களுடைய [illegible].

ஊரும் வரியரவம்—அரவம் [illegible] இருக்கின்றதென்று [illegible] ஊரும் [illegible] பாம்புகளிடமுள்ள [illegible] அமைத்து [illegible] களையும் பேசுகிறார். [illegible] என்பது.

ஒன்று உறவம்—பெருமையுள்ள [illegible] யாவரு[illegible] யாதும் [illegible] மாறித்து [illegible] வியாமா [illegible].

மால் யானை—[illegible] காழ்வார் போன்ற [illegible] தங்கொண்டு [illegible] னானை எப்பொழுதும் [illegible] தெரியவரும்.

இடந்தது பூமி யெடுத்தது குன்றம்,
கடந்தது கஞ்சனை முன்னஞ்ச—கிடந்ததுவும்
நீரோத மாகடலே நின்றதுவும்வேங்கடமே
பேரோத வண்ணர் பெரிது. (39)

பேர் ஓதம்	பெரிய அலைகளை யுடைய கடல்போல்	அஞ்ச	பயத்தினால் மாறும்படி சென்றது.
வண்ணர்	வடிவையுடைய பெருமான்	கடந்தது	
[illegible]	[illegible]	கஞ்சனை	கம்ஸனை.
இடந்தது	(கொம்பினால்) குத்தி [illegible]	கிடந்ததுவும்	பள்ளிகொண்டதுவும்
பூமி	பூமி	நீர் ஓதம்	ஜலத்தையும் அலைகளையுமுடைய
எடுத்தது	([illegible]) [illegible]	மா கடல்	பெரிய கடலில்.
குன்றம்	[illegible] மலை	பெரிது	[illegible]
		நின்றதுவும்	[illegible] நின்றதுவும்
		வேங்கடமே	திருவேங்கட மலையிலே

[illegible]

இடந்தது— [illegible]

[illegible]

யின்றி நின்று எங்கும் திரிந்து துக்கத்தையே அநுபவிக்கிறோம். ஆழ்வார்கள் மயர்வற மதிநலம் பெற்றவர்கள் ஆதலால் பெருமானை ஸர்வ விதத்தாலும் குடைந்தநுபவித்து தான் பற்றியவிஷயத்தைத் தவிர வேறொன்றில் சிறிதும் கண்ணோட்டமின்றி களித்து நிற்கிறார்கள். ஆகையால், இடந்ததுபூமி என்று துடங்கி வரிசையாக ஒவ்வொரு அவதார சேஷ்டிதங்களையும் உகந்து பாடுகிறார்.

பெருவில் பகழிக் குறவர்கைச் செந்தீ
வெருவிப் புனந்துறந்த வேழம்—இருவிசும்பில்
மீன் வீழக் கண்டஞ்சும் வேங்கடமே, மேலசுரர்
கோன் வீழக் கண்டுகந்தான் குன்று. (10)

பெருவில்	பெரிய தனுஸ்ஸை உடைய	வீழ	[illegible]
பகழி	பாணங்களையுமுடைய	கண்டு	[illegible]
குறவர்	வேடர்கள்	அஞ்சும்	[illegible]
கை	கைகளில் பிடித்த	வேங்கடம்	[illegible]
செந்தீ	சிவந்த நெருப்பை (கண்டு)	அசுரர்கோன்	[illegible]
வெருவி	அஞ்சி		
புனம் துறந்த	வயல்களைவிட்டுப்போன	வீழ்வதை	[illegible]
வேழம்	யானையானது		
இருவிசும்பில்	விசாலமான வானத்தில்	உகந்தான்	[illegible]
மீன்	நக்ஷத்ரம்	குன்று	[illegible]

இப்பாசுரத்தில் திருமலையின் [illegible] வர்ணிக்கிறார்.

திருமலையில் குறவர்கள் [illegible] கிறார்கள். அந்த [illegible] யானைகள் [illegible] வில் ஓடிவருகின்றன, அவைகளைத் துரத்த [illegible] நெருப்புப்பந்தங்களைக்கொளுத்தி எறிகிறார்கள். [illegible] குறவர்களின் வில்லையும் பாணங்களையும் அவர்கள் [illegible] தங்களையும் கண்டு பயப்பட்டு, இனி இந்த [illegible] யாகி, திடலாயிருந்தாலும் தங்குகிறதில்லை என்று [illegible]

கின்றன. ஓடுங்கால் ஆகாசத்திலிருந்து நக்ஷத்திரங்கள் கீழே உதிர்கின்றன. அதைக்கண்டு யானைகள், இவைகளும் குறவர்களெறிந்த தீப்பந்தங்களென்று பிரமித்து மீளவும் அப்பால் செல்லமாட்டாமல் நின்றவிடத்திலே நடுங்கி நிற்கின்றன. இப்படி இயற்கையிலேயே அழகுவாய்ந்த திருமலையில், முன்பொருகால் ஹிரண்யாஸுரனை ஒரு சிறுவனுக்காக வதைத்து அதனால் திருவுள்ளமுகந்த பெருமான் நித்யவாஸம் செய்கிறார். இத்தால் விரோதிகளைப் போக்குவதற்கென்றும் விரோதிகளை அழித்து அதனால் உகந்திருக்கவேணுமென்றும் ஸங்கல்பித்துக்கொண்டே ஸர்வேச்வரன் திருமலையில் நிற்கிறானென்பதாயிற்று. ஸம்ஸாரிகளும் சென்று விரோதிகளை எளிதாகப் போக்கிக்கொள்ளலாமென்பதாயிற்று.

குன்றனைய குற்றஞ் செய்யினும் குணங்கொள்ளும்
இன்று முதலாக வென்னெஞ்சே—என்றும்
புறனுரையேயாயினும் பொன்னாழிக்கையான்
திறனுரையே சிந்தித்திரு. (41)

என்னெஞ்சே — என்னுடைய மனமே
இன்றுமுதலாக — இன்றைய தினம் முதல்
என்றும் — எப்பொழுதும்
புறன் உரையே ஆயினும் — உள்ளன்பில்லாமல் மேலுக்குச் சொல்லும் வார்த்தையாயிருந்தாலும்
பொன் ஆழி கையான் திறன் உரையே — அழகான திருவாழியை கையிலே பிடித்த ஸ்வாமி விஷயமான வார்த்தைகளையே
— த்யானம் செய்து கொண்டிரு;
குன்று அனைய — மலைபோன்ற
குற்றம் செய்யினும் — குற்றங்களைச் செய்தாலும்
குணம் கொள்ளும் — (அவைகளை உபேக்ஷித்து) எம்பெருமான் நம்மிடமுள்ள குணங்களையே கொள்ளுமியல்புள்ளவன்

இப்படி திருமலையில் எம்பெருமானை அனுபவித்து, இப்பாட்டில் அவனுடைய வாத்ஸல்யம் என்கிற குணத்தைப் பேசுகிறார்.

குன்றனைய:— கீழே, ஹிரணியகசிபு என்று பிரஸித்தனான அஸுரனைக்கொன்ற பெருமாள் நித்ய வாஸம் செய்யுமிடம் திருவே

ங்கடமலை என்றார். உடனே அவனுடைய கல்யாண குணங்களிலீடு பட்டு, தனது நெஞ்சைக்குறித்து 'நீ திருமகள் நாதன் விஷயமான வார்த்தைகளையே சிந்தித்துக்கொண்டிரு!' என்று உத்தரவு செய்தார். ஆழ்வாருடைய நெஞ்சம், 'நாம் உள்ளன்புடன் அவனை சிந்தித்தாலன்றோ பயனுண்டு. கழுத்துக்குமேல் சொல்லும் வார்த்தையால் யாதுபயன்? நமக்கு அவனிடம் அன்பும் உண்டாகவில்லையே! நாம் மேலுக்கு அவன் நாமங்களைச் சொன்னாலும் நாம் உகந்து செய்திருக்கும் பாபக்குவியல்களுக்குத் தக்கபடி நம்மை அவன் தண்டிக்கமாட்டானோ" என்று கலக்கத்துடனிருக்க, அவ்வீச்வரனுடைய வாத்ஸல்யம் என்கிற குணத்தைக் காட்டி, தனது நெஞ்சைத் தேற்றுகிறார். என் நெஞ்சமே! நாம் செய்த குற்றங்களுக்குத் தக்கபடி நம்மை அவன் தண்டிப்பான். அவனை எப்படி நினைப்பது? என்று இவ்வளவு நாள் நீ நினைத்திருந்தது போகட்டும். நீ அவனுடைய குணங்களை அறியவில்லைபோலும். அவனிடம் பல்லாயிரக்கணக்கான கல்யாணகுணங்கள் குடிகொண்டிருக்கின்றன. அவற்றுள் வாத்ஸல்யம் என்கிற ஒரு குணத்தை ஆலோசித்துப் பார். அக்குணத்தால் ஈச்வரன், நாம் மலைபோன்ற குற்றங்களைச் செய்துவைத்திருந்தாலும் அவைகளை உபேக்ஷைசெய்து நம்மிடமுள்ள குணங்களை எள்ளளவிருப்பினும் ஸ்வீகரிக்கிறான். அந்த வாத்ஸல்யம் ஸர்வஜ்ஞனையும் ஸ்வதந்திரனையுமிருக்கிற ஈச்வரனையும் அறியாதவனைப்போலவும் பராதீனனைப்போலவும் செய்துவிடுகிறது. அவனை நம் குற்றங்களை திரஸ்காரம் செய்யும்படி செய்கிறது. எள்ளளவாயினுமுள்ள குணங்களையும் ஸ்வீகரிக்கும்படி செய்கிறது. நம்முடைய குற்றங்களை உதாஸீனம் செய்யும்படியான ஸ்நேஹம் அவனுக்கு நம்மிடம் இருக்கிறது. அந்த ஸ்நேஹத்திற்குத் தான் வாத்ஸல்யம் எனப்பெயர். ந ஸ்மரத்யபகாராணாம் சதமப்யாத்மவத்தயா | கதம்சிதுபகாரேண க்ருதேநைகேந துஷ்யதி [illegible] அக்குணத்தால் நம்மிடமுள்ள குற்றங்களைக் [illegible] நினைக்காமலும், மிகுதியான சிரத்தையுடன் செய்யப்படும் [illegible] காரம் என்கிற செய்கையால் ஸந்தோஷத்தையும் அடைகின்றான். ஈச்வரன் அக்குணத்தால் தூண்டப்பட்டு அபிசேத்ஸுதுராசாரோ பஜதே மாமநந்யபாக் | ஸாதுரேவ ஸமந்தவ்ய: ஸம்யக் வ்யவ

ஸிதோ ஹி ஸ: | என்றும், அபிபாபேஷ்பிரதா மத்பக்தா: பாண்டு நந்தன | முச்யந்தே பாதகைஸ்ஸர்வை: பத்மபத்ரமிவாம்பஸா | என்றும் உபதேசிக்கிறான். துராசாரமுள்ளவனாயிருந்தாலும் அநந்ய பாவத்துடன் என்னை ஸேவித்தானாகில் அவன் ஸாதுவென்றே யாவராலும் நினைக்கப்படவேண்டும். ஏனெனில் அவன் ஈச்வரனை சரணாகதி செய்வதாகிற நல்ல தீர்மானத்தைச் செய்தான் அல்லவா? என்றும், என்னுடைய பக்தர்கள் பாபங்களில் ஆசையுள்ளவர்களாயிருந்தாலும் (அப்பாபங்களை நான் உபேக்ஷை செய்துவிடுவதால்) அவர்கள் தாமரை இலை ஜலத்தினால் விடுபடுவதுபோல், பாபங்களினின்று விடுபடுகிறார்கள்) என்றுமோதுகிறார். ஆதலால் அந்த வாத்ஸல்யகுணத்தை அறிந்துகொண்டு, இன்றுமுதல் அழகான திருவாழியைக் கையிலேந்தின பெருமான் விஷயமான வார்த்தைகளை சிந்தித்துக்கொண்டேயிரு! அவன் குணங்களைமாத்திரம் ஸ்வீகரிப்பவனாதலால் நமக்கு அருள்செய்வனேயன்றி சீற்றத்தையடைய மாட்டான். ஆதலால் பகவத் விஷயமான உரைகளை நினைத்துக் கொண்டிரு! என்று தனது மனத்தைக் குறித்துபதேசித்தபடி.

திருமகளும் மண்மகளும் ஆய்மகளும் சேர்ந்தால்
திருமகட்கே தீர்ந்தவா றென்கொல்—திருமகள்மேல்
பாலோதம் சிந்தப் படநாகணைக் கிடந்த
மாலோத வண்ணர் மனம். (42)

பால் ஓதம்	பாற்கடலின் திவலைகள்	மனம்	மனமானது
சிந்த	சிதறி மேலேவிழ	திருமகளும்	லக்ஷ்மீதேவியும்
படம்நாக அணை	படத்துடன் கூடிய நாகமாகிற மெத்தையில்	மண்மகளும்	பூமிதேவியும்
கிடந்த	பள்ளிகொண்ட	ஆய்மகளும்	நீளாதேவியும்
மால் ஓதம் வண்ணர்	பெரியகடல்போன்ற நிறத்தையுடைய ஸ்வாமியினுடைய	சேர்ந்தால்	(இம்மூவரும்) கலந்தால்
திருமகள்மேல்	பெரிய பிராட்டியாரிடமுள்ள	திருமகட்கே	லக்ஷ்மீதேவியின் மேலேயே
		தீர்ந்த ஆறு	பொருந்தியிருக்கிற விதம்
		என்கொல்	எங்ஙனே தான்!

கீழே எம்பெருமானுடைய வாத்ஸல்ய குணத்தைப் பேசினார். பிராட்டிமார்களின் சேர்க்கையினால் அக்குணம் புகர்பெற்று குன்றாது விளங்குகிறதென்கிறாரிப்பாட்டில்.

திருப்பாற்கடலில் பெருமான் பள்ளிகொண்டுறையும் கால் அக்கடலில் அலைகள் கொந்தளித்து வீச, பால் திவலைகள் அப்பெருமானது திருவுடம்பில் சிதறிவிழுகின்றன. அவனது கருத்த திருமேனி முத்துக்களால் அலங்கரிக்கப்பட்டது போல் விளங்குகிறது. அங்ஙனம் பள்ளிகொண்ட ஸ்வாமியினுடைய லக்ஷ்மீதேவியிடம் சென்ற திருவுள்ளம் பூமிதேவியும் நீளாதேவியும் சேர்ந்து பரிமாறும் காலத்திலும் லக்ஷ்மீதேவிஒருத்திக்கே அற்றுத் தீர்ந்திருக்கிறது. திருமகளைத்தவிர மற்ற பிராட்டிமார்களை நினைக்கவேயில்லை. இது என்ன நீர்மை! என்று வியப்பை அடைகிறார்.

அதாவது பெருமாள் பெரிய பிராட்டியாரோடு கூடி அநுபவித்தால் மற்ற பிராட்டிமார்கள் அத்திருமகளுக்கு கொங்கை முதலிய திவ்யாவயவங்களாகவும் புஷ்பம் சந்தனம் முதலிய போக உபகாரணங்களாயும் இருந்துகொண்டு ரஸாநுபவம் செய்கிறார்கள். திருமால் பூமிநீளா தேவிகளோடு கூடி அநுபவித்தால் திருமகள் கொங்கை முதலிய தன் அவயவங்களை ஸந்தோஷப்படுத்துகிறார் என்று உகந்திருப்பாள். ஆதலால் திருமால் திருமகட்கே தீர்ந்தார் என்று சொல்லப்படுகிறது.

இங்கு தீர்ந்தார் என்பதும் அற்றுத் தீர்ந்தார் என்பதும் மற்ற விஷயங்களை சிறிதும் நினையாமல் திருமகளிடம் வழக்காயிருக்கும் தன்மையைச் சொல்லுகிறது.

இங்கு தீர்ந்தவாறு என்னும் பதத்தை திருமகட்கே தீர்ந்தவாறு, மண்மகட்கே தீர்ந்தவாறு, ஆய்மகட்கே தீர்ந்தவாறு என்று கூட்டி அநுஸந்திப்பது முண்டு. அப்படி அநுஸந்தித்தால், திருமகளைக்கேட்டால் என்னிடம் தான் பெருமானது காதல் பெருகுகிறது. மற்றவர்களை மதிக்கிறதே இல்லை என்று சொல்லுவதும், மண்மகளைக் கேட்டால் என்னைத்தவிர மற்றொருத்தியை கண்ணாலும் ஸ்வாமி பார்ப்பதில்லையென்று சொல்லுவதும், ஆய்மகளைக் கேட்டால் திருமால் எனக்கே உகப்பைத் தருவார் என்றும்

படிக்கும் ஒவ்வொருவரும் தனித்தனியே கொண்டாடும்படியான திருவுள்ளம் படைத்திருக்கிறன் என்றும் தாத்பர்யம் கொள்ள வேணும்.

ஸௌபரி என்பாரொரு முனிவர் மாந்தாதா என்ற அரசனுடைய ஐம்பது புதல்விகளை மணம் புரிந்துகொண்டு, ஒரு வனத்தில் ஐம்பது மாளிகைகளைக்கட்டி அவைகளில் அப்பெண்களை அமர்த்தி தனது தவத்தின் பெருமையால் ஐம்பது சரீரங்களை எடுத்துக்கொண்டு ஐம்பது மாளிகைகளிலுமிருந்துகொண்டு அப்பெண்மணிகளை உகப்பித்துக்கொண்டிருந்தார். ஒவ்வொருவரும் இம்மாமுனிவர் நாமிட்டவழக்காயிருந்துகொண்டு இங்கேயே களித்துக்கிடக்கிறரே! நம்முடைய மற்ற ஸஹோதரிகளைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லையே! நம் ஸஹோதரிகள் என்படுகிறர்களோ! என்று வருந்தினர்களே யல்லது ஸுகத்தில் குறைவுள்ளவராயிருந்தார்களில்லை. இப்படி ஒருமுனிவர் தனது தவத்தின் வலிமையால் ஐம்பது மாதர்களை உகப்பித்தாரென்றல் ஸர்வசக்தனுன ஸ்வாமி பதினறுயிரம் தேவிமார்களானுலும் உகப்பிக்கவல்ல சக்திவாய்ந்தவனென்பது ஐயமற யாவரும் அறியக்கூடிய விஷயமே.

மனமாசு தீரு மருவினையும் சாரா
தனமாய தானே கைகூடும்—புனமேய
பூந்துழாயா னடிக்கே போதொடு நீரேந்தி
தாந்தொழா நிற்பார் தமர். (43)

புனமேய பூந்துழாயான்	தன் இடத்தில் இருந்தார்போலே செழித்துப் பூத்த திருத்துழாயையணிந்த ஸர்வேச்வரனுடைய	தொழாநிற்பர்	ஸேவிப்பார்கள் (உடனே)
		மனம் மாசு	மனத்திலுள்ள அழுக்குகள்
		தீரும்	தொலைந்துபோம்
அடிக்கே	திருவடிகளுக்கே	அருவினையும்	கொடியபாபங்களும்
போதொடு	புஷ்பங்களோடு	சாரா	கிட்டாது
நீரேந்தி	தீர்த்தத்தையும் எடுத்துக்கொண்டு	தனம் ஆய	ஐச்வர்யமும் (பக்தியும்)
தமர்	பாகவதர்கள்	தானேகைகூடும்	தானாகவே வந்து சேரும்.
தாம்	தாமாகவே		

இப்படி புருஷகாரபூதைகளான பிராட்டிமார்களைக்கொண்டு பரமபுருஷனை நாம் ஆச்ரயித்தால் அவனை அநுபவிக்க இடையூறாயிருக்கும் வினைகளனைத்தும் தன்னடையே விலகிப்போமென்கிறாரிப்பாட்டில்.

ஸர்வரக்ஷகன் என்று எல்லாருக்கும் தெரியும்படி திருத்துழாய் மாலையை அணிந்த ஸர்வேச்வரனுடைய திருவடிகளுக்கென்று புஷ்பங்களையும் தீர்த்தங்களையும் ஏந்திக்கொண்டு பக்தியுடன் ஸேவிப்பவர்களுக்கு மனத்திலுள்ள தோஷங்களாகிய காமக்ரோதாதிகளும் ஆத்மதோஷங்களாகிற, அவித்யா, கர்ம, வாஸநாதிகளும் தன்னடையே விலகிப்போம். இப்படி இடையூறுகள் நீங்குவதுமின்றி பகவத் பக்தியாகிற செல்வமும் வந்து கைகூடும். ஆதலால் இடையூறுகள் நீங்குவதற்கும் பகவத் பக்தி பெறுவதற்கும் என்னவுபாயம் செய்வது என்று கரையவேண்டாம். நாம் அவனை ஸேவித்தால் அவன் அபிமதங்களைத் தானே கொடுக்கிறான். நாம் செய்ய வேண்டியதைச் செய்தால் அவன் செய்யவேண்டியதைச் செய்ய மறந்துவிடுவனே? ஆகையால் நாம் அவனைத் தொழுதால் நமக்கு ஸகல புருஷார்த்தங்களும் எளிதாகக் கைகூடுமென்று கருத்து.

தமருகந்த தெவ்வுருவ மவ்வுருவம் தானே
தமருகந்த தெப்பேர் மற்றப்பேர்—தமருகந்து
எவ்வண்ணம் சிந்தித் திமையா திருப்பரே,
அவ்வண்ண மாழியானும்.

ஆழியான் — திருவாழியைப் பரிகாமாகவுடையவன்
தமர் உகந்தது — பக்தர்கள் ஆசைப்படுகிறது
எவ்வுருவம் — எந்த வடிவத்தையோ
அவ்வுருவம் தானே ஆம் — அந்த வடிவத்தையே ஸ்வீகரிப்பன்
தமர் உகந்தது — பக்தர்கள் விரும்பியது
எப்பேர் — எந்த திருநாமத்தையோ
அப்பேர் ஆம் — அதையே தனக்குப் பெயராகக் கொள்வன்
மற்று — இப்படியே
தமர் — பக்தர்கள்
உகந்து — அன்புடன்
எவ்வண்ணம் — எந்த குணங்களை
தியானித்து
இமையாது — கண்கொட்டாமல் (த்யாநம்)

இருப்பர்	பாவனையுடன் இருப்பர்களோ	அவ்வண்ணம் ஆம்	அந்த குணங்களையே தனக்கு ஸ்வீகரிப்பன்.

எம்பெருமானைத் தொழுதால் வினைகள் விலகிப்போம் என்றார் முழில். அவன் அகப்பட்டாலன்றோ தொழலாம். அவனைக் காண முடியவில்லையே! எந்தவுருவத்துடனிருப்பதாக அவனை நினைப்பது எந்தப் பெயரையுடையவனாக நினைப்பது? எவ்வண்ணம் நினைப்பது? என்று சிலர் வினவ, நம்முடைய விருப்பத்தின்படியே அவனை நினைக்கலாம். நாம் ஆசைப்படும் உருவம்தான் அவனுக்கு உருவம், நாம் இடும்பெயர்தான் அவனுக்குப் பெயர், என்று பதில் கூறி, நாம்கண்டு தொழயோக்யமான அர்ச்சாவதாரத்தைப் பேசுகிறாரிப்பாட்டில்.

தமருகந்ததெவ்வுருவம் பரமபுருஷனிடம் பக்திவாய்ந்த பாகவதோத்தமர்கள் தங்களுக்கிஷ்டமான தாமிரம், வெள்ளி, ஸுவர்ணம் முதலிய திரவ்யங்களால் தங்களுக்கிஷ்டமான, ராமக்ருஷ்ணாதி ரூபங்களான பிரதிமைகளைச்செய்து இந்த வுருவத்தில் எழுந்தருள வேணுமென்று எம்பெருமானைப் பிரார்த்தித்தால் அவன் ஸந்தோஷத்துடனே அதில் நித்யவாஸம் செய்கிறான், அப்பிம்பத்தில் இருந்துகொண்டே நம்மால் ஆராதிக்கப்பட்டு நமக்கு வேண்டுமவைகளைத் தருகிறான். ஸுரூபாம் பிரதிமாம் விஷ்ணோ: பிரஸன்ன வதனேக்ஷணம் | க்ருத்வா த்மந: ப்ரீதி கரீம் ஸுவர்ண ரஜதாதிபி: | தாமர்ச்சயேத் தாம் ப்ரணமேத் தாம்யஜேத் தாம் விசிந்தயேத் | என்கிற பகவத் சாஸ்திர வசனங்களை உணர்க.

தமருகந்ததெப்பேர் அடியார்கள் அவனை எந்தப் பெயரிட்டழைக்கிறார்களோ! அப்பெயர்தான் அவனுக்குப் பெயர். ஆதலால் தான் ஆராவமுது, வைத்தமாநிதி, நந்தாவிளக்கு, ஆமருவி, நம்பி முதலிய தன் காதலைக்காட்டும் பெயரால் ஆழ்வார்கள் அழைக்க, அப்பெயருடனேயே, திவ்ய தேசங்களில் எம்பெருமான் கோயில் கொண்டிருக்கிறார்.

தமருகந்ததெவ்வண்ணம் நாம் எந்த ப்ரகாரமாக நினைக்கிறோமோ அந்த பிரகாரத்துடனேயே வந்து நம்முடைய அபிமதங்களைத் தலைக்கட்டி வைக்கிறான். நாம் எந்த குணங்களுள்ளவனாக உபாஸிக்கி

ரூமோ, அக்குணங்கள் தான் அவனுடைய குணங்கள். நாம் எப்படி நினைத்துக் கூப்பிட்டாலும் நாம் நினைத்தபடியே வருவான். அவனுக்கு ஸொந்தமான வுருவமோ, பெயரோ, நிறமோ, கிடை யாது. எல்லாம் ஆச்ரிதர்களிட்ட வழக்காயிருக்கும். இவ்வர்த் தம் யே யதா மாம் பிரபத்யந்தே தாம்ஸ்ததைவ பஜாம்யஹம் என் கிற பகவத்கீதா வசனத்திலும், காணலாம். நதே ரூபம் நசாகாரோ நாயுதாநிநசாஸ்பதம்ததாபி புருஷாகார: பக்தாநாம் த்வம் பிரகா சஸே. என்கிற பிரமாணத்தையும் உணர்க. ஆத்மாநம் மாநுஷம் மந்யே என்கிற அவன் வார்த்தையையும் அறியவேணும். ஆக லால் நம்மிஷ்டப்படி அர்ச்சாஸமாதியில் அவ்வீச்வரனை ஆராதிப் பது மிகவும் ஸுலபமான கார்யமென்பது விளங்கும்.

ஆமே யமரர்க் கறிய வதுநிற்க,
நாமே யறிகிற்போம் நன்னெஞ்சே—பூமேய
மாதவத்தோன் தாள் பணிந்த வாளரக்கன் நீண்முடி
பாதமத்தா லெண்ணினான் பண்பு. [௪௫

(45)

நல்நெஞ்சே	நன்மைபொருந்திய மனமே
பூமேய	தாமரை மலரில் வசிக்கிற
மாதவத்தோன்	பெரிய தவத்தாலுயர்ந்த பிரமனுடைய
தாள்பணிந்த	பாதத்தில் வணங்கின
வாள் அரக்கன்	கத்தியையுடைய இராவணனது
நீண் முடியை	உயர்ந்த பத்துமுடிகளையும்
பாதம் அத்தால்	அந்த திருப்பாத[illegible]
எண்ணினான்	[illegible]
பண்பு	[illegible]
அமரர்க்கு	[illegible]
அறிய ஆமே	[illegible]
அது நிற்க	[illegible]
நாமே	[illegible]
அறிகிற்போம்	[illegible]

இப்படி ஈச்வரன் ஸர்வஸுலபனாயிருந்தாலும் அவனுடைய பெருமை நம்மால் அறியமுடியாதென்றும் நான்முகனாலும் அறிய முடியவில்லையென்றும் இப்பாட்டில் அவனது பெருமை பேசப் படுகிற

முன்பொருகால் இராவணன் என்ற அரக்கன் தன்னுடைய பத்துத்தலைகளையும் மறைத்துக்கொண்டு நான்முகக் கடவுளிடம் சென்று தனக்கு வேண்டிய வரங்களை வேண்டிக்கொண்டான். அப்பொழுது ஸ்ரீமந்நாராயணன் நான்முகனுடைய மடியில் ஒரு குழந்தையாய் படுத்திருந்து "இவனுக்கு வரங்களைக் கொடுக்காதே. கொடுத்தால் இவன் எல்லாவுலகங்களையும் துன்பப்படுத்துவான். இவன் அரக்கன். தனது தலைகளை மறைத்துக்கொண்டு உன்னை ஏமாற்றுகிறான்" என்று சொல்வதுபோல் தன்னுடைய திருவடியின் கட்டை விரலால் மறைக்கப்பட்டிருந்த அவனது தலைகளை ஒன்று இரண்டு என்று எண்ணிக்காட்டினார். அதைப் பிரமதேவன், தெரிந்துகொள்ளமுடியவில்லை. தனது மடியில் கிடக்கும் குழந்தையை தெய்வமென்றும் அறியவில்லை, அப்படிப் பிரமதேவனாலும் அறியவொண்ணாத மேன்மை நமக்கு அறியப்போமோ? என்கிறார்.

இப்பாசுரத்தில் தொகுக்கப்பட்டிருக்கும் இவ்வரலாற்றை பேயாழ்வார் மூன்றாம் திருவந்தாதியில் எழுபத்தேழாவது பாசுரத்திலும் திருமழிசைப்பிரான் நான்முகன் திருவந்தாதியில் நாற்பத்து நான்காம் பாட்டிலும் இணைத்திருக்கிறார்கள்.

இதற்கு மூலபூதமான புராணங்கள் நமக்குத் தென்படவில்லை, ஆகிலும், வால்மீகி முதலிய முனிவர்களுக்கும் அகப்படாத இவ்வரலாறு மயர்வறமதிநலமருளப்பெற்று தெளியாத மறைநிலங்கள் தெளிவிக்கும் ஆழ்வார்களால் மாத்திரம் ஸாக்ஷாத்கரிக்கப்பட்டதென்று நாம் உணர்ந்து ஸந்தோஷிக்கப் ப்ராப்தம்.

பண்புரிந்த நான்மறையோன் சென்னிப்பலியேற்ற
வெண்புரிநூல் மார்பன் வினைதீரப்—புண்புரிந்த
ஆகத்தான் தாள்பணிவார் கண்டீர், அமரர்தம்
போகத்தால் பூமியாள்வார். (46)

பண்புரிந்த	ஸ்வரங்களுடன் கூடிய	சென்னி	தலையில்
நான்மறையோன்	நான்குவேதங்களையுடைய பிரமதேவனுடைய	பலியேற்ற	பிச்சைவாங்குகிறவனும்
		வெண்புரி	வெளுப்பான முப்புரியையுடைய

நூல்	யக்ஞோபவீதத்தை	தான்	திருவடிகளை
மார்பன்	மார்பில்தரித்தவனு மான சிவனுடைய	பணிவார் கண்டீர்	வணங்குகிறவர்க ளல்லவா;
வினைதீர	பாபம்தொலையும்படி	அமரர்தம்	நித்ய ஸூரிகளுடைய
புண்புரிந்த	புண்படுத்திக்கொண்ட	போகத்தால்	ஐச்வர்யத்தோடு
ஆகத்தான்	திருமேனியையுடையபெருமானுடைய	பூமி	லீலாவிபூதியையும்
		ஆள்வார்	ஆட்சிசெய்கிறார்கள்.

திருமால் ருத்ரனுக்கு அருள் புரிந்ததை இப்பாட்டில் பேசப்படுகிறது. ஐந்து தலைகளைப் படைத்த ருத்ரன் பிரமதேவனுக்கு ஐந்து தலைகளிருப்பதைக்கண்டு உலகத்தார் பிரமனையும் ருத்ரனென்று பிரமிப்பார்களென்றெண்ணினன். உடனே அவன் [illegible] சென்று அப்பிரமனுடைய தலைகளில் ஒன்றை தனது கைவிரலின் நகத்தால் கிள்ளி எடுத்தான். பிரமனும் ருத்ரனைக் குறித்து நீ அந்த மண்டையோட்டுடனேயே திரிவாய் என்று சபித்தான். ருத்ரனும் தனது கையிலொட்டின கபாலத்துடனேயே திரிந்து மிகவும் கலங்கினவனாய் தேவர்களிடம் சென்று இக்கபாலம் கையைவிட்டு எப்படி விலகும் என்று வினவ, அவர்களும் நீர் இக்கபாலத்திலேயே பிக்ஷை எடுக்கவேண்டும். என்றைக்கு அது நிறையுமோ அன்று உம்முடைய கையை விட்டு அகலும் என்று சொல்ல, ருத்ரன் அவ்வண்ணமே பிக்ஷையெடுத்து வருங்கால், ஒருநாள் பதரிகாச்ரமத்தில் நாராயணனிடம் பிக்ஷை [illegible]டான். அங்கு பகவான் தனது நகத்தால் தனது மார்பைக் கீறிக் கொண்டு அதிலிருந்து பெருகிய உதிரத்தால் அக்கபாலத்தை [illegible] உடனே அக்கபாலம் அவன் கையைவிட்டு [illegible] [illegible]மும் பரிசுத்தனானான். அப்படி அவனைப் பரிசுத்தனாக்கின [illegible]னுடைய திருவடிகளை வணங்கித் தொழுபவர்கள் [illegible] ருந்து கொண்டே நித்யஸூரிகளுடைய போகத்தை [illegible] கள். அல்லது பூமியிலிருந்துகொண்டே [illegible] [illegible] விலக்கின்றி பேறுபாடுகளையெல்லாம் [illegible] [illegible] பதாம்.

பண்புரிந்த—ஸ்வரங்களுடன் கூடிய நான்கு வேதங்களையும்

செய்வனே சொல்லிக்கொண்டு நிரபராதியாயிருந்த நான்முகனை தலையறுத்தான். வாமாங்குஷ்ட நகாக்ரேண சிந்நம் தஸ்ய சிரோ மயா என்று ருத்ரன் வார்த்தை.

வெண்புரிநூல் ருத்ரனுடைய யக்ஞோபவீதம் வெளுப்பாயிருந்ததென்றார். இத்தால் தனது பாபம் தொலைய தினந்தோறும் முழுகிக்குளித்து பூணூலைத் தேய்த்து வெண்புரிநூலானன் என்பது தோற்றும்.

வினைதீர:—ஈச்வரனென்று அஹங்காரமடைந்து வெந்தாரென்பும் சுடுநீறும் மெய்யிற்பூசிக்கையகத்து சந்தார் தலைகொண்டு உலகேழும் திரிகிறானே என்று வருந்தி தனது மார்பைக் கீறிக்கொண்டாவது ருத்ரனை ரக்ஷிக்கவேணுமென்று கருதினான் என்பது தோன்றுகிறது. ருத்ரனோடு ஸம்பந்தித்தார்க்குமிதுவே பணி என்றார் வ்யாக்யானங்களில்; ருத்ரன் தனது தந்தையின் தலையைக்கிள்ளினான். இவனைக் கணவனாக வரித்த பார்வதீ தன் தந்தையான தக்ஷப்ரஜாபதியின் மரணத்திற்கு காரணமானாள். ஆதலால் பிரமருத்ராதிகளுக்கும் ரக்ஷகனான ஸர்வேச்வரனுடைய திருவடிகளை ஸேவிப்பவர்தான் தாணியோடு விசும்பாளும் தன்மை பெறுவார் என்றபடி.

வாரி சுருக்கி மதக்களி றைந்தினையும்,
சேரி திரியாமல் செந்நிறீஇ—கூரிய
மெய்ஞ் ஞானத்தா லுணர்வார் காண்பரே, மேலொரு
கைந்நாகங் காத்தான் கழல். [நாள்

மதம்	மதம்கொண்ட	கூரிய	பரமஸூக்ஷ்மமான
களிறு ஐந்தினையும்	(இந்திரியங்களாகிற யானைகள் ஐந்தையும்	மெய்	உண்மையான
		ஞானத்தால்	பக்தியாகிற ஞானத்தால்
வாரி	ஜலம்போன்ற விஷயங்களிலிருந்து	உணர்வார்	அறியமுயல்பவர்கள்
		மேல் ஒரு நாள்	முன் ஒரு காலத்தில்
சுருக்கி	இழுத்து அடக்கிப் பிடித்து	கை நாகம்	குணமுள்ள யானையை
சேரி	மனம்போனவிடங்களில்	காத்தான்	ரக்ஷித்தவனுடைய
		கழல்	திருப்பாதங்களை
திரியாமல்	அலையாமல்		
செம்நிறீஇ	செவ்வனே நிறுத்தி	காண்பர்	கண்களால் கண்டு மகிழ்வார்கள்

இப்பாட்டில் புண்புரிந்த ஆகத்தான் தாள் பணிவார் இன்னாரென்று காட்டுகிறார்.

வாரி சுருக்கி:— செவி வாய் கண் மூக்கு உடலென்கிற ஐந்து இந்திரியங்களாகிற மதயானைகளை சப்தம் ரஸம் ரூபம் வாஸனை ஸ்பர்சம் முதலிய விஷயங்களாகிற ஜலத்தில் செல்ல விடாமல் இழுத்துப்பிடித்தும், மனம்போன விடங்களிலெல்லாம் திரியாமல் அடக்கியும், ஸாத்விகத்யாகத்துடன் செய்யப்படும் நித்ய நைமித்திக கர்மங்களால் பரிசுத்தமான மனத்தில் ஏற்படும் பக்தியென்கிற ஞானத்தால் ஸர்வேச்வரனை உள்ளபடி அறியமுயல்பவர்கள் கஜேந்திராழ்வானுக்கு அபயமளித்த பரமபுருஷனை நேரில் பார்ப்பார்கள், மற்றவர்களுக்கு முடியாதென்பதாம்.

இந்திரியங்களை "அடக்கமுடியாதவை" என்கிற காரணத்தால் மதயானைகளாகச் சொன்னார். யானைகளின் மதத்திற்கு காரணமாதலாலும், அடிக்கடி விடாயை உண்டுபண்ணுவதாலும், ஜலத்திலுள்ள முதலை முதலிய ஜந்துக்களால் துன்பம் ஏற்படுவதுபோல், துன்பங்களுக்கு காரணமாயிருப்பதாலும், சப்தம் முதலிய அநுபவிக்கப்படும் விஷயங்களை ஜலமாக நிரூபித்தார். மதயானையை ஜலத்தில் செல்லவொட்டாமல் அடக்கி தெருவீதிகளில் அலையவிட்டால் ஊரரைக்கொல்லுமாதலால், யானைகளை, தெருக்களில் விடாமல் தனியே ஒரு கூட்டிலடக்கி வைக்கவேணும். அதுபோல் இந்திரியங்களை விஷயங்களினின்று அடக்கியும் மனம்போனவிடங்களிலெல்லாம் செல்லவொண்ணாது அடக்கவேணுமென்பது மறுபடி மீண்டும் சேரிதிரியாமல் சேர்ந்திருத்தி என்றது.

மேய்ஞ்ஞானத்தால் கையடைப்பில்லாமல் உள்ளன்போடு செய்யப்படும் பக்தியோகத்தால் அவனைக் காணலாமென்றபடி.

கைந்நாகம் காத்தான்—இந்த விசேஷணத்தால், கஜேந்திராழ்வானுக்கு முதலையால் ஏற்பட்ட அபாயநீங்கி பகவத்தர்சனம் ஏற்பட்டதுபோல், பக்தியோகத்தால் அவனை அடைபவர்களுக்கு இடையூறுகள் நீங்கி அவன் திருவடிகளைக் காணலாமென்பது விளங்குகிறது.

கழலொன்றெடுத்தொருகை சுற்றியோர் கைமேல்,
சுழலும் சுராசுரர்களஞ்ச—அழலும்
செருவாழியேந்தினான் சேவடிக்கே செல்ல
மருவாழிநெஞ்சே மகிழ். (48)

கழல் ஒன்று	(த்ரிவிக்ரமாவதாரத்தில்) ஒரு திருவடியை	அழலும்	தீயை உமிழ்கிற
எடுத்து	உயரே தூக்கி	செரு	மிடுக்கையுடைய
ஒரு கை	ஒருகையால்	ஆழி	திருவாழியாழ்வானை
சுற்றி	நமுசி என்னும் அஸுரனைச்சுற்றித் தள்ளி	ஏந்தினான்	தரித்தவனுடைய
சுழலும்	கலங்கியிருக்கிற	சே அடிக்கே	சிவந்த திருவடிகளில்
சுராசுரர்கள்	தேவர்களும், அசுரர்களும்	செல்ல	சேரும்படி
அஞ்ச	நடுங்கும்படி	ஆழி நெஞ்சே	கம்பீரமானமனமே!
ஓர் கைமேல்	மற்றொரு கையில்	மருவு	கிட்டுவாயாக
		மகிழ்	ஸந்தோஷப்படுவாய்.

உலகளந்த பெருமானுடைய திருவடிகளைத்தொழுது ஸுகமாயிருப்பாய் என்று தனது திருவுள்ளத்தைக் குறித்துப்பேசுகிறார்.

கழல்:—பகவான் வாமனனாயவதரித்து மஹாபலியிடம் சென்று மூவடிமண் இரந்தான், மன்னவனும் என்னால் தரப்பட்டதென்றான். அக்கணமே பெரியவடிவத்தை யெடுத்துக்கொண்டு உலகங்களை யெல்லாம் திருவடியால் அளக்க ஆரம்பித்தான். உடனே மஹாபலியின் புதல்வன் நமுசி என்பான் அப்பகவானை நோக்கி நீ செய்வது அக்ரமம். இது என்ன மாயம், இந்த மாயத்தை என் தகப்பன் தெரிந்து கொள்ளவில்லை. நீ முன்னே எந்தத் திருவடியால் மூவடி வேண்டினையோ? அதே அளவுள்ள திருவடியால் அளந்துகொள்! என்று சொன்னவுடன், பகவானும் சரீரம் என்றால் அது வளருமியல்புடையது என்று பரிஹசித்தான். என் உடம்பு வளர்ந்துவிட்டதால் அடியும் பெரிதாயிற்று நான் என்ன செய்வேனென்று பதில்சொல்ல, அதைக்கேளாமல் மீண்டும் அளப்பதைத்தடுக்க, த்ரிவிக்ரமன் அந்த நமுசியின் காலைப்பிடித்து கையால் தூக்கி தானும் வளர்ந்து அவ்வஸுரனை ஆகாசத்தில் சுழற்றி அடித்தான். நமுசி

யென்பவன் அப்பகவானைத் தடுக்கும்பொழுது தேவர்கள் [illegible] காரியத்திற்கு இடையூறுகள் பல நேர்படுகின்றனவே, [illegible] வேறுமோ; என்னமோ; என்றஞ்சினார்கள் அசுரர்கள் [illegible] என்ன விளையுமோ என்றஞ்சினார்கள் இப்படி யாவரும் பயப்பட [illegible] கால் உலகங்களை அளந்து, நமுசியை வானில் சுழற்றியெறிந்து, மற்றொருகையால் தீமை உமிழும் சக்ராயுதனாய் [illegible] ங்களை உய்யச்செய்த பெருமானுடைய திருவடிகளை, [illegible] பற்றுவாய். அதனால் உண்டாகும் போகமோக்ஷத்தையும் [illegible] வாயாக! என்றார்.

மகிழல கொன்றேபோல் மாறும் பல் யாக்கை
நெகிழ முயல்கிற்பார்க் கல்லால்—முகிழ்விரிந்த
சோதி போற் றோன்றும் சுடர்பொன்னெடுமுடி எம்
ஆதி காண் பார்க்கு மரிது. ([illegible])

மகிழ் அலகு ஒன்றேபோல்	மகிழ மரத்தினுடைய ஒருவிதைபோல்	தோன்றும்	[illegible]
மாறும்	பலவகையாகமாறுகிற	சுடர்	[illegible]
பல் யாக்கை	அநேகசரீரத்தை	பொன்	[illegible]
நெகிழ	விலக்க	நெடுமுடி	[illegible]
முயல்கிற்பார்க்கு அல்லால்	முயற்சிசெய்பவர்களுக்கல்லாமல்	எம் ஆதி	[illegible]
முகிழ்விரிந்த	நன்றாய் மலர்ந்த	காண்பார்க்கும்	[illegible]
சோதிபோல்	தேஜஸ்ஸைப்போல்	அரிது	[illegible].

இச்சரீரத்தில் ஆசையை விட்டவர்களுக்கல்லாது [illegible] காண முடியாதென்று சொல்லுகிறார்.

மகிழலகு:— ஜீவாத்மா என்பது நித்யமானது [illegible] நம்முடைய கர்மாநுகுணமான பகவத்ஸங்கல்பத்தால் அநேக சரீ ரங்களில் நுழைந்து பலவகை துக்கங்களை அநுபவிக்கிறது. இந்த சரீரம் மாறி மாறி வருகிறது. ஒரு ஸமயம் தேவசரீரத்தில் ஜீவன் வஸிக்கிறான், அதேஜீவன் மற்றொருகால் மனுஷ்ய சரீரத்தில் [illegible] கிறான், மற்றொரு ஸமயம், பசு, பக்ஷி, புழு முதலிய சரீரங்களில் இருக்கிறான், ஆதலால் ஜீவனுக்கு துயரங்களை அநுபவிப்பதற்கும்

மோக்ஷானந்தம் அடையாமலிருப்பதற்கும் காரணம் சரீரந்தான், சரீரம் உள்ளவரையில் பேரானந்தம் கிடையாது—ஸுகம் கலந்த துக்கம் விடாது. ந ஹ வை ஸசரீரஸ்ய ஸத: ப்ரியாப்ரியயோ ரப ஹதிரஸ்தி என்று சுருதிவாக்யம். ஆதலால் மாறி மாறி வரும் ஆக்கையில் ஆசையைவிட வேண்டுமென்கிறார். சரீரத்தில் ஆசையைவிடுபவர்களுக்கல்லது மற்றவர்களுக்கு அவ்வீசனைக் காண முடியாது. சரீரத்தில் ஆசையுடன் அவனைவேண்டாமல், சரீரத்தில் புன்னாக்கை என்னும்படியான இகழ்ச்சிதோன்றி பற்றுதலை விடவேண்டுமென்று கருத்து. சரீரம் மாறி மாறி வருமென்பதற்கு ஒரு உதாஹரணம் காட்டுகிறார். மகிழலகென்று. முன்காலத்தில் கணிதசாஸ்திரத்தில் வல்லவர்கள் கணிதம் செய்யும்பொழுது மகிழம் விதையை உபயோகித்துக் கொள்வார்கள், அவ்விதை காணிஸ்தானத்தில் சிறிது நேரம் இருக்கும். சிறிது நேரத்தில் கோடிஸ்தானத்தில் நிற்கும். (காணிஸ்தானமென்பது ரொம்பவும் தாழ்ந்ததான எண்ணுடைய ஸ்தானம்—கோடிஸ்தானம் என்பது ரொம்பவும் உயர்ந்த எண்ணின் இடம்) மகிழவிதை எப்படி உயர்ந்த ஸ்தானத்திலும் தாழ்ந்த ஸ்தானத்திலும் நிற்கிறதோ; அதுபோல சரீரமும் உயர்ந்த தேவாதி சரீரமாகவும் தாழ்ந்த பசுபக்ஷி முதலான சரீரமாகவும் மாறி வருமென்றபடி.

முகிழ்விரிந்த:—எல்லாவுலகங்களுக்கும் நாதனென்று காட்டும் மலர்ந்த சோதியுடன் கூடிய திருவபிஷேகத்தை சிரஸில் தரித்தவன், என்றபடி.

காண்பாரக்குமரிது:— ஜகத்காரணமான வஸ்து, சரீரத்தில் ஆசையை விடாமல் காண்பவர்களுக்கும், கேட்பவர்களுக்குமரிது, என்று. அல்லது எம் ஆதி காண்பு, ஆர்க்கு மரிது. என்னுடைய காரணவஸ்துவைப் பார்ப்பது, யாருக்கும் முடியாதகாரியம் என்றும் பொருள் சொல்லலாம்.

அரிய புலனைந்தடக்கி யாய் மலர் கொண்டு, ஆர்வம்
புரிய பரிசினாற்புல்கில்—பெரியனாய்
மாற்றாது வீற்றிருந்த மாவலிபால், வண்கைநீர்
ஏற்றானைக் காண்பதெளிது. (50)

அரிய	அடக்குவதற்கரிதான	பெரியனாய்	தன்னை உயர்ந்தவனாய் நினைத்து
புலன்ஐந்து	ஐந்து பொறிகளையும்	மாற்றாது	தானென்னைத்தவறாமல் செய்திரா
அடக்கி	அடங்கும்படி செய்து	வீற்றிருந்த	மேன்மை தோன்றும்படி அமர்ந்திருந்த
ஆய்	ஆராய்ந்து பார்த்தெடுத்த	மாவலிபால்	மஹாபலியினிடம்
மலர்	புஷ்பங்களை	வண்கை	அத்யுதாரமான கையில்
கொண்டு	(கையில்) தரித்துக் கொண்டு	நீர் ஏற்றானை	தாரைஜலத்தை ஸ்வீகரித்தவனை
ஆர்வப்புரிய	பக்தியினால் மிக்கதான	காண்பது	பார்ப்பது
பரிசினால்	ப்ரகாரத்தால்	~	ஸுலபமாயிருக்கும்
புல்கில்	அடையப்பார்த்தால்		

ஒப்பாட்டினும் இந்திரியங்களை அடக்காதவனுக்கு அவனைக்காண்பது அரிது என்கிறார்.

அரிய—சஞ்சலம் ஹி மந: க்ருஷ்ண ப்ரமாதி பலவத் த்ருடம் தஸ்யாஹம் நிக்ரஹம் மந்யே வாயோரிவ ஸுதுஷ்கரம் என்று புயல்காற்றை அடக்குவதுபோல் அடக்கவரிதான மனத்தோடு கூடிய ஐம்புலன்களை அடக்கிக்கட்டி, நல்ல புஷ்பங்களைப் பறித்துக் கொண்டு பக்தி மேன்மேலும் வளரும்படி அவனை அர்ச்சித்தால், தான் பெரியோனென்றும், என்மனதில் தோன்றியதைச் செய்யாதிருக்க மாட்டேனென்றும், கர்வம் படைத்த மஹாபலியை அர்த்திகின பெருமானைக் காண்பது சுலபமான கார்யமென்கிறார்.

வண்கை எல்லாவுலகங்களுக்கும் ஸகல புருஷார்த்தங்களையும் கொடுத்து அத்யுதாரம் என்று பெயர்படைத்த கையால் தானே தான ஜலத்தையும் பெற்றான், இது என்ன நீர்மை! என்று வியப்பைக் காட்டுகிறது.

எளிதிலிரண்டடியும் காண்பதற்கு, என் னுள்ளம்
தெளியத் தெளிந்தொழியும் செவ்வே—களியில்
பொருந்தாதவனைப் பொரலுற்று, அரியாய்
இருந்தான் திருநாமமெண். (51)

என்னுள்ளம்!	என்மனமே!
எளிதில்	ஸுலபமாக
இரண்டு அடியும்	(ஸர்வேச்வரனுடைய) இரண்டு திருவடிகளையும்
காண்பதற்கு	பார்க்கும்பொருட்டு
தெளிய	(விஷயங்களால் நேர்ந்த கலக்கத்தை விட்டு நீ தெளிவடைந்தால்
செவ்வே தெளிந்து ஒழியும்	(அவ்வீச்வரனும்) நம்மிடத்தில் (கோபத்தைவிட்டு) பிரஸந்நனாவான்,

	ஆதலால்
களியில்	கர்வத்தால்
பொருந்தாதவனை	தன்னைப் பணியாமலிருந்தஇரணியனை
போரால்	போர்புரிந்து கொல்லுவதில்
உற்று	பிரயத்னம் செய்து
அரியாய்	நரசிங்கமாய்
இருந்தான்	அவதரித்திருந்தவனுடைய
திருநாமம்	பெயர்களை
எண்	நினைத்திருப்பாயாக.

இந்திரியஜயம் செய்து ஆர்வத்தால் அவனைத் தொழுதால் எளிதில் காணலாமென்றார் கீழ்ப்பாட்டில். ஆதலால் விஷயகாலுஷ்யங்களை விட்டுத்தெளிந்து அவன் திருநாமங்களை நினைப்பாய் என்று தன் திருவுள்ளத்திற்கு உபதேசிக்கிறார். என்னுள்ளமே! நீ நம் ஸ்வாமியைக்கண்டு அநுபவிக்கக்கருதி மற்ற விஷயங்களினால் உண்டாகும் கலக்கத்தைவிட்டு தெளிவாயிரு. அவ்வீசனும் அநாதியாக அவன் ஆக்ஞையைமீறியதால் நம்மிடம் வைத்திருக்கும் சீற்றத்தை மாற்றி அநுக்ரஹிப்பவனாக ஆவன். ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான் தனது தெளிந்த திருவுள்ளத்தால் அவ்வெம்பெருமானையே தியானித்திருக்க ஈசனும் அவன் விரோதியான ஹிரணியனைப் போக்கி அவன் துக்கங்களைப் போக்கியருளினான் அல்லவா! அதுபோல் நம் விரோதிகளும் கழியுமாறுநீ தெளிந்து ப்ரஹ்லாதனுக்கு அருள்புரிந்த நரசிங்கனுடைய நாமங்களை நினைத்துக்கொண்டிரு; என்று உபதேசித்தபடி.

என்னுள்ளம் என்பது அண்மைவிளி, என்னுள்ளமே என்று கூப்பிடுவதைக்காட்டும்.

எண்மர் பதினொருவ ரீராறுவ ரோரிருவர்
வண்ணமலரேந்தி வைகலும்—நண்ணி
ஒருமாலையால் பரவியோவாது, எப்போதும்
திருமாலைக் கைதொழுவர் சென்று. (52)

எண்மர்	எட்டு வஸுக்களும்	நண்ணி	(நம்மையெல்லாம் [illegible] பக்தியில்) கிட்டி [illegible]
பதினொருவர்	பதினொரு ருத்ரர்களும்	ஒரு மாலையால்	ஒப்பற்ற புகழ் [illegible] மாலையால்
ஈர் அறுவர்	பனிரண்டு ஸூர்யர்களும்		
ஓர் இருவர்	விலக்ஷணரான இரண்டு அச்விநீ தேவதைகளும்	பரவி	ஸ்தோத்ரம்பண்ணி
		ஓவாது	(ஒரு க்ஷணமும்) விடாமல்
வண்ணம்	அநேக நிறங்களையுடைய	எப்போதும்	எந்தவேளையிலும்
மலர்	புஷ்பங்களை	திருமாலை	ஸர்வேச்வரனை
ஏந்தி	எடுத்துக்கொண்டு	சென்று	சென்று கிட்டி
வைகலும்	தினந்தோறும்	கைதொழுவர்	([illegible]) [illegible].

கீழே தன் நெஞ்சைக்குறித்து அவன் திருநாமங்களை எண்ணென்றார். இப்பாட்டில் பிரஹ்மருத்ராதிகளும் அவனைத்தொழுதே மேன்மைபெற்றிருக்கிறார்கள் என்று சொல்லி யாவரும் அப்படியே த்யானிக்கவேண்டியதென்பதை ஸ்தாபிக்கிறார்.

அஷ்டவஸுக்கள் ஏகாதச ருத்ரர்கள் த்வாதசாதித்யர்கள் அச்விநீ தேவர்களிருவர் ஆகிய தேவர்களெல்லாரும் தினந்தோறும் பலவர்ணங்களுள்ள உயர்ந்த புஷ்பங்களைக்கொண்டு புருஷஸூக்தம் என்கிற ஒப்பற்ற சொன்மாலையைச் சொல்லிக்கொண்டு ஸ்துதிசெய்து வணங்குகிறார்கள். இப்படி தேவர்கள் தங்களுடைய ஸ்தானங்கள் ஸ்திரமாய் இருக்கவேண்டியென்றும், மேன்மேலும் உயர்ந்த நிலைகள் பெறவேண்டியென்றும், தினந்தோறும் அவனை வணங்குகிறார்கள். இங்கு முப்பத்து மூன்று தேவர்களைச் சொன்னது முப்பத்து முக்கோடி தேவர்கள் எல்லாரையும் சொன்னபடிக்கென்றே. பிரதானர்களைச்சொன்னால் மற்றவர்களும் அதற்குள் அந்தர்கதர்கள் என்ற கருத்துக்கிணங்கி ஸகல தேவர்களும் ஸ்ரீபதியை ஸேவிக்கிறார்கள் என்றபடி.

சென்ருல் குடையா மிருந்தால் சிங்காசனமாம்
நின்ருல் மரவடியாம் நீள்கடலுள்—என்றும்
புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கு
மணையாம் திருமாற் கரவு. (53)

அரவு	திருவனந்தாழ்வான் (ஆதிசேஷன்)	நீள் கடலுள்	விசாலமான திருப்பாற்கடலில்
திருமாற்கு	திருமகள் கேள்வனுக்கு	என்றும்	எப்பொழுதும்
சென்றால்	நடந்தால்	புணை ஆம்	தெப்பமாயிருப்பர்
குடை ஆம்	குடையாயிருப்பர்	மணிவிளக்காம்	ரத்னதீபமாயிருப்பர்
இருந்தால்	உட்கார்ந்தால்		
சிங்காசனமாம்	ஸிம்ஹாஸனமாயிருப்பர்	பூம்பட்டு ஆம்	அழகிய பட்டாடையாயிருப்பர்
நின்றால்	எழுந்து நின்றால்	புல்கும் அணை ஆம்	தழுவிக்கொள்வதற்குரிய மெத்தையாயிருப்பர்.
மரவடி ஆம்	பாதுகையாயிருப்பர்		

கீழே பிரயோஜனாந்தரபரர்களான தேவர்கள் தொழுதமையைப்பேசினார். இப்பாட்டில் அவ்வீச்வரனைத்தவிர மற்றவர்களைச் சிறிதும் நினையாத நித்யஸூரிகள் செய்யும் கைங்கரியத்தைப் பேசுகிறார்.

சென்றால் திருவனந்தாழ்வான் ஸ்ரிய: பதியான புருஷோத்தமனுக்கு ஸர்வவிதசேஷவ்ருத்திகளையும் செய்கிறார். எம்பெருமான் நடந்துசெல்லவேணுமென்று நினைத்தால் அப்பெருமானது திருவுடம்பில் மழை வெயில் படாதபடி குடையான ரூபத்துடனிருந்து அவனை அநுபவிக்கிறார். உட்காரவேணுமென்று நினைத்தால் சிங்காசன வடிவமாயிருக்கிறார். நிற்கவேணுமென்று நினைத்தால் மரவடி என்கிற பாதுகைவடிமாக நிற்கிறார். பாற்கடலில் எக்காலத்திலும் ஆச்ரிதரக்ஷணார்த்தமாக சயனிக்கவேணுமென்று கருதினால் அழுந்தாத தெப்பமாயிருக்கிறார். ஏதாவது ஒரு வஸ்துவை காணவேணுமென்று கருதினால் ரத்னமயமான தீபமாய் நிற்கிறார். அரையில் பரியட்ட முடுத்தவேணுமென்று நினைத்தால் உடனே திருப்பரியட்டவடிவமாகிறார். தழுவிக்கொள்ளவேணுமென்று நினைத்தால் தழுவணையாக (தலகாணி) மாறுகிறார். இப்படி திருமாலுக்கு அனந்தன் ஸர்வப்ரகாரத்தாலும் பணிவிடை செய்கிறார்.

சென்றால் எம்பெருமானை நீ நட; நீ உட்காரு; நீநில்; என்று சேஷன் நியமிப்பதில்லை. அவன் எது செய்யவேணுமென்று நினைக்கிறானே, அதை அறிந்து தான் அவ்வமயங்களுக்கு அனுகுணமான

வடிவங்களை எடுத்துக்கொண்டு தொண்டு செய்கிறானென்பது சென்றால், இருந்தால், என்கிற பதங்களால் விளங்குகிறது.

என்றும் புணையாம் எப்பொழுதும் படுத்துக்கொள்ளும் மெத்தையாக இருப்பன் என்றும் பொருள் கூறுவதுண்டு.

மணிவிளக்காம் தூண்டுகோலுடைய உதவியை வேண்டாத ரத்னமயமான தீபம் என்றபடி. இங்கு அணி விளக்காம் என்றும் பத முரைப்பதுண்டு. அலங்காரமாயிருக்கும் விளக்கு என்பது பொருளாம்.

புல்கும் அணையாம் பெருமான் பிராட்டிமார்களைப் பிரிந்திருக்கும் காலங்களில் தான் அணைத்துக்கொள்ளவேணுமென்று கருதி பிராட்டிமார்களைக் காணாமல் பரிதவிப்பாராம். அப்பொழுது அனந்தன் தழுவுமணையாயிருப்பனும் (தலகாணியாயிருப்பான்) அவ்வனந்தனை அணைத்துக்கொண்டு பிராட்டிமார்களின் பிரிவால் வந்த துயரத்தைமறப்பராம்.

இப்படி ஸர்வவித கைங்கரியங்களையும் செய்தே அனந்தன் சேஷன் என்னும் பெயர் படைத்தான் என்பது இப்பாசுரத்தையடியொற்றிய ஸ்ரீமதாளவந்தார் அருளிச்செய்த நிவாஸ சய்யாஸன பாதுகாம்சுகோ பதான வர்ஷாதப வாரணாதிபி: சரீரபேதைஸ்தவ சேஷதாம் கதை: யதோசிதம் சேஷ இதீரிதே ஜனை: என்ற ஸ்தோத்ர ரத்ன ச்லோகத்திலும் கண்டுகொள்ளலாம்.

அரவமடல்வேழம் மான்குருந்தம் புள்வாய்
குரவை குடமுலைமற் குன்றம்—கரவின்றி
விட்டிறுத்து மேய்த்தொசித்துக்கீண்டு கோத்தாடி, உண்
டட்டெடுத்த செங்கணவன். (51)

செம் கண் அவன் { சிவந்த கண்களை உடைய திருமால் } விட்டு { [illegible] }

காவு இன்றி { மறைத்தலின்றி (யாவரும் காணும்படி) } அடல் வேழம் { [illegible] குவலயாபீடமென்கிற யானையை }

அரவம் { காளியன் என்கிற பாம்பை } [illegible] [illegible]

ஆன்	பசுக்களை	முலை	(பூதனையின்) முலையை
மேய்த்து	மேய்த்தும்	உண்டு	(உயிரோடுகூட) புசித்தும்
குருந்தம்	குருக்கத்தி மரத்தை	மல்	கம்ஸனால் தூண்டப்பட்டுவந்த மல்லர்களை
ஒசித்து	முறித்துத்தள்ளியும்	அட்டு	கொலைசெய்தும்
புள்வாய்	பக்ஷியாய்வந்த பகாஸுரனுடைய வாயை	குன்றம்	கோவர்த்தனமென்கிற மலையை
கீண்டு	கிழித்தும்	எடுத்த	குடையாகத்தூக்கியதுமான இக்காரியங்கள் என்னவியப்பைத்தருகின்றன பாருங்கள் என்றபடி
குரவை	ராஸக்ரீடையில்		
கோத்து	பெண்களின்கைகளைக்கொத்துக் கொண்டும்		
குடம்	குடங்களை எடுத்துக்கொண்டு		
ஆடி	கூத்தாடியும்		

கீழே சொல்லியபடி, ஸர்வசேஷவ்ருத்தியையும் செய்கிற திருவனந்தாழ்வானையும் விட்டுப்பிரிந்து, ஆச்ரிதர்களுக்காகத் தாழ்ந்து வந்து காரியம் செய்கிறான் என்கிற ஆச்ரிதர்களுக்கு அருள் புரியும் தன்மை சொல்லப்படுகிறது இப்பாட்டில்.

அரவம் காளியன் பொய்கையில் கலங்கப்பாய்ந்து, அவனது ஐந்து முடிகளிலும் நின்று நடனம் செய்து மறுபடி அவனுக்கு அருள் செய்து அக்காளியனை உயிரோடு விட்டும், கம்ஸனால் நிறுத்தப்பட்ட குவலயாபீடமென்கிற யானையின் கொம்புகளை முறித்தடித்தும், பசுக்களை இனிது மறித்து மேய்த்தும், பூத்து காய்த்திருந்த அஸுராவிஷ்டமான குருக்கத்தி மரத்தைச்சாய்த்துக் கீழே தள்ளியும், கொக்கின் வாயைப்பிளந்தும், கோபஸ்திரீகளோடு ராஸக்ரீடை செய்தும், குடக்கூத்தாடியும், பேயின் முலையையுண்டும், மல்லரை மடியச்செய்தும், கோவர்த்தனத்தைக் குடையாத்தூக்கியது முதலான செயல்கள், ஆச்ரிதர்கள் விஷயத்தில் அவனுக்குள்ள பேரன்பைக் காட்டவில்லையா ? அவன் படுக்கையிலும் பொருந்தியிராது நமக்காக வந்து, செய்வதற்கரிய செயல்களை செய்ததை யாவராலும் போற்றத்தக்கதன்றோ! என்கிறார்.

இப்பாட்டின் முன்னிரண்டடிகளில் உள்ள பெயர்ச்சொற்கள் எல்லாம் பின்னடிகளில் உள்ள வினைச்சொற்களோடு சேர்ந்து

பொருள் கொடுக்கும் வித்தையை உற்றுநோக்கி அறியவேண்டும். இப்பாட்டைத் தமிழர்கள் நிரனிறையணி யென்பார்கள்.

கீழ்ச்சொல்லிய கண்ணபிரானுடைய லீலைகளை இவ்வாழ்வார் மிகுந்த பக்தியால் இடைவிடாது அநுபவித்திருக்கிற பிரகாரம் நமக்கு வியப்பைத்தருகிறது. ஒவ்வொரு செய்கையின் கடைசியில் ஒரு வினை முற்றுச்சொல்லை முடித்தப்பிறகு அடுத்தசெய்கையைச் சொல்லவும் பொறுக்கமாட்டாமல் அடுக்கடுக்காக அவனது லீலைகள் அநுபவிக்கப்பட்டன வென்பது இவரது கரைபுரண்ட காதலின் பெருமையை விளக்குகிறது.

அவன் தமரெவ்வினைய ராகிலும், எங்கோ
னவன் தமரே யென்றொழிவ தல்லால்—நமன் றமரா
லாராயப் பட்டறியார் கண்டீர், அரவணைமேல்
பேராயர்க் காட்பட்டார்பேர். (55)

அரவணைமேல்	திருவனந்தாழ்வான் பேரில் கிடப்பவனும்	எவ்வினையர் ஆகிலும்	[illegible]
பேர் ஆயர்க்கு	இடையர் தலைவனு யவதரித்தவனுமான கண்ணபிரானுக்கு	எங்கோன்	[illegible]
ஆட்பட்டார் பேர்	அடிமை பூண்ட பாகவதர்களுடைய பெயரைவைத்துக் கொண்டவர்களும்	"அவன் தமரே"	[illegible]
நமன் தமரால்	யமனுடைய படர்களால்,	என்று	[illegible]
"அவன் தமர்"	அந்த வெம்பெருமானுடைய அடியார்கள்	ஒழிவது அல்லால்	[illegible]
		ஆராயப்பட்டு	[illegible]
		அறியார் கண்டீர்	[illegible]

கீழ்ப்பாட்டில் அவ்வீச்வரன் அசுரர்களாக வந்த காளியன் முதலிய விரோதிகளை ஒழித்ததைப் பேசப்பட்டது. அவன் விரோதிகளைத் தொலைப்பவனாதலால் அவனடியார்கள் விஷயத்தில்

யமதர்மராஜனும அவனது படர்களும நெருங்கமாட்டார்கள் என்கிறார் இப்பாட்டில்.

அவன் தமர் அரவணைமேல் பள்ளிகொண்டு பிறகு கண்ணனாய் வந்த பரமபுருஷனிடம் பக்திவாய்ந்த பாகவதர்களுடைய பெயரை ஒருவன் தனக்குப் பெயராக வைத்துக் கொண்டால் அம்மனிதனை யமனும் அவனது தூதர்களும் நினைப்பதேயில்லையாம். "அவர்கள் பாபங்களைச் செய்திருந்தாலும் சரி. எப்படியிருந்தாலும் இருக்கட்டும். அவன், நமக்கு யார் ஸ்வாமியோ? அந்த புருஷோத்தமனுக்கு அடியன்," என்று சொல்லிக்கொண்டு தாங்கள் ஒதுங்கிப் போகிறார்களேயல்லது அவனை ஆராய்ந்து பார்ப்பதில்லை என்றபடி. இதனால் வாஸுதேவனடியார்களுக்கு யமபயமும் நரகநிவாஸமும் கிடையாதென்பது சொல்லப்பட்டது. இவ்வர்த்தம், தர்மராஜன், என்னுடைய பாகமென்று எழுதிவைத்த பாபங்களை யெல்லாம் இப்பொழுது நினைக்கமுடியுமோ? என்று பொருள் கொண்ட நமன், கூறு செய்துகோண்டு இறந்ததுற்றமெண்ண வல்லனே. என்கிற திருமழிசைப்பிரான் பாசுரத்திலும் நாளும், கோடுவினை செய்யும் கூற்றின் தமர்களும் குறுககில்லார் என்கிற நம்மாழ்வார் பாசுரத்திலும் தெளியத் தென்படும்.

கமலநயன வாஸுதேவ விஷ்ணோ தரணிதராச்யுத சங்கசக்ர பாணே, பவசரணமிதீரயந்தி வாசம் த்யஜ பட தூரதரேண தாந பாபாந். என்றும் பரிஹர மதுஸூதன ப்ரபந்நான் ப்ரபுரஹமந்ய ந்ருணாம் ந வைஷ்ணவாநாம் என்றும் ("தர்மராஜன் பாசத்தை கையில் தரித்துக்கொண்டிருக்கும் தனது தூதர்களைப்பார்த்து "எம்பெருமான் நாமங்களை உச்சரிப்பவர்களைக் கிட்டாதே; அவர்களுக்கு வெகு தூரத்திலே செல். நாம் அந்த வைஷ்ணவர்களுக்கு யஜமானர்கள் அல்ல" என்று) சொல்லுமதான பிரமாணங்களையும் இங்கு அநுஸந்திப்பது.

ஆதலால் கிங்கரா தண்டபாசௌவா நயமோ நச யாதநா: ஸமர்த்தாஸ்தஸ்ய யஸ்யாத்மா கேசவாலம்பநஸ்ஸதா. யே ந்ருசம்ஸா துராத்மாந: பாபாசார ரதாஸ்ததா. தேபி யாந்தி பரந்தாம நரா நாராயணாச்ரயா: என்றபடி பாகவதர்கட்கு நரகாதிகள் இல்லையென்பதுடன் பரமபதப்ராப்தியும் ஸித்தமென்பது இப்பாட்டின்

திரண்டபொருள். "தாலியில் மன்னியமறு அவிக்கவல்ல பாட்டுப் பிரான் கருணையென்னும் கடலாடி திருவணை கண்டநின், தின்னைக்கு எண்ணிய சித்திரகுத்தன் தரித்துவைத்த, சுருணையில் ஏறிய சூழ்வினை முற்றும் துறந்தனமே." என்கிற ஸ்ரீதேசிகன் அருளிய பாசுரமும் இங்கு சிந்திக்கவமையும்.

பேராயர்க்காட்பட்டார் பேர் கண்ணபிரானிடம் அடிமைப்பட்டவர்களுடைய பெயரை வைத்துக்கொண்டவர்கள். பகவானையே சிந்தியாமலும் எப்பொழுதும் தீவினைகளைச் செய்துகொண்டிருக்கும் ஸம்ஸாரியும் ஒரு பாகவதனுடைய பெயரைத் தனக்குப் பெயராக் கொண்டால், யமபடர்கள் அவனை அணுகமாட்டார்கள் என்றபடி. பேர் என்பதற்கு பேரை வகிப்பவர்கள் என்று இலக்கணையால் பொருள் கொள்ளவேணும்.

அல்லது பகவானுடைய அடியவர்களுடைய பெயரையே யம படர்கள், ஆராயமாட்டார்கள் என்று கூறலாம். அப்பொழுது பேர் என்பதற்கு பெயர் என்று பொருள்.

பேரே வரப் பிதற்ற லல்லாலெம் பெம்மானை
ஆரே யறிவா ரதுநிற்க—நேரே
கடிக்கமலத்துள்ளிருந்தும் காண்கிலான். கண்ணன்
அடிக்கமலந் தன்னை யயன். (56)

பேரே வர	(நாம் எதைச்சொன்னாலும்) அதுவே பெருமான் திருநாமமாகவே வாயில் வரும்படி	கடிக்கமலத்துள்	வாஸனையுள்ள [illegible] கமலத்துக்குள் [illegible]
பிதற்றல் அல்லால்	அடிக்கடி சொல்லிக்கொண்டிருப்பதைத் தவிர்த்து	நேரே	[illegible]
எம்பெம்மானை	நமக்குநாதனை	இருந்தும்	வாஸம்பண்ணிக்கொண்டிருந்தும்
ஆரே அறிவார்	எவர்கள் அறியவல்லார்கள்?	அயன்	பிரமதேவன்
அது நிற்க	அது கிடக்கட்டும்	கண்ணன்	ஸ்ரீகிருஷ்ணனுடைய [illegible]
		அடிக்கமலம் தன்னை	திருவடித்தாமரையை
		காண்கிலான்	கண்டுசேவிக்கவில்லை.

எம்பெருமானுக்கு ஆட்பட்டவர்களின் பெயரை நமன்தமர் அறியமாட்டாரென்றார். ஆட்படுகையாவது என்? என்று சிலர் வினவ பதிலுரைகின்றார்பபாட்டில்.

பேரே:—அவனுக்கு ஆட்படுகையாவது அவனுடைய பெயரை எப்பொழுதும் வாயால் பிதற்றிக்கொண்டிருப்பதுதான். அல்லது அவனுடைய பெருமையை உள்ளபடி அறிந்திருப்பதல்ல. அறியவும் முடியாது. உதாஹரணமாக நான்முகனை எடுத்துக்கொள்வோம். நான்குமுகங்களைப்பெற்றிருக்கிறான். பார்க்கும் கருவியான கண்கள் எட்டு எண்ணிக்கையுள்ளனவாக இருக்கின்றன. தான் வாஸம் செய்யுமிடமும் பகவான் வாஸம் செய்யுமிடத்திற்கு வெகு தூரத்திலல்ல, அவனுடைய நாபியிலுண்டான தாமரைதான் வஸிக்குமிடம். அறிவினாலும் பரிபூர்ணன். நான்குவேதங்களை தவறுதலின்றி உரைப்பவன். கீழே குனிந்து பார்த்தால் பெருமானுடைய திருவடிகள் தென்படும். இங்ஙனம் ஸாதனங்களை பரிபூர்ணமாகப்பெற்ற பிரமதேவனே இன்னும் கண்ணனது திருவடிகளைக் காணவில்லையாம். நாம் எப்படி அறியமுடியும். அவன் பெருமையை உள்ளபடி முழுவதையும் அறிய முடியாது. ஸமுத்திரக் கரையில் குடிசைகட்டிக்கொண்டிருக்கும் செம்படவர்கள் ஸமுத்திரத்தை எவ்வளவு நீளம் அகலம் ஆழம் என்று அறிந்துவிட்டார்களா? நீளம் ஆழம் முதலியவை அளவிடமுடியாதவை என்று மா 'ரம் ரிந்துகொள்ளலாம். அதுபோல் கருணைக்கடலாகிய நாராயணனுடைய திருவுடம்பில் கரைபோன்ற நாவிக்கமலத்தில் குடில்கொண்ட பிரமதேவன் அவன் பெருமையை அளவிட்டு அறியமுடியாது. அங்ஙனம் நம்மால் அறியப்போமோ? ஆதலால் அவன் திருநாமங்களை, அர்த்தம் தெரிந்தோ தெரியாமலோ வாயால் சொல்லிக்கொண்டிருந்தால் அவன் கிட்டிவந்து கிருபை செய்வான். எப்படித் தாயைவிட்டுப் பிரிந்த கன்று கத்தவே அதன் குரலைக் கேட்டு தாய் ஓடிவருகிறதோ அதுபோல் (வத்ஸம்கௌரிவ வத்ஸலா என்றபடி) நாம் அவன் பெயரைச்சொல்லி கூப்பிட்டால் அவன் நம் அருகே வந்து காப்பன் என்பதாம். ஆதலால் அவன் பெயரைச் சொல்வதாகிய அடிமையை யாவரும் செய்யவேண்டுமென்று உபதேசிக்கப்பட்டது.

அயனின்ற வல்வினையை யஞ்சினே னஞ்சி
உயநின் திருவடியே சேர்வான்—நயநின்ற
நன்மாலைகொண்டு நமோ நாரணாவென்னும்
சொன்மாலை கற்றேன் தொழுது. (57)

அயல் நின்ற	எனக்கு ஸமீபத்தில் நின்றுகொண்டு இருக்கிற	நயம் நின்ற	இன்பம் மிகுந்திருக்கிற
வல் வினையை	கொடியபாபங்களைக்கண்டு	நன்மாலை கொண்டு	இத்திருவந்தாதியாகிற நல்ல சொல்மாலையைக்கொண்டு
அஞ்சினேன்	பயமடைந்தேன்	தொழுது	சேவித்து
அஞ்சி	பயப்பட்டு	நமோ நாரணா என்னும்	திருவஷ்டாக்ஷரமென்கிற மந்த்ரமாகிற
உய	நான்க்ஷேமத்தையடைந்து		
நின்	உன்னுடைய	சொல்மாலை	சொற்களின் வரிசையை
திருவடியே	திருவடிகளை		
சேர்வான்	சேரவேண்டுமென்று (நினைத்து)	கற்றேன்	அப்யாஸஞ்செய்தேன்.

தான் எம்பெருமானுக்கு ஆட்பட்டதைப் பேசுகிறார்

அயனின்ற:—நான் அநாதிகாலமாகச் செய்துவைத்த பாவங்கள் என்னருகே நெருங்கிக்கிடக்கின்றன. என்னைப் பலவிதமாகத் துன்பப் படுத்துவதற்கென்றே காத்துக்கொண்டிருக்கின்றன. அவைகளினால் நமக்கு என்ன துயரங்கள் விளையப்போகின்றனவோ என்று மிகவும் பயமடைந்தேன். பயத்துடன் இப்பாவங்களிலே அகப்படாமல் தப்பி நாம் உஜ்ஜீவிக்கவேணுமென்று நினைத்தேன். உன் திருவடியை யடைந்து க்ஷேமத்தைப் பெறவேணுமென்று கருதினேன். அதனால் உன்னைப் ப்ரதிபாதிக்கின்ற இத்திருவந்தாதிப் பாடல்களால் உன்னை யாராதித்தேன். உன்னைச் சொல்லக் கூடிய திருமந்திரம் என்கிற எட்டெழுத்தையும் கற்றேன். அதின் படி என் ஆத்மோஜ்ஜீவனத்துக்கு அவசியமான [illegible] கார்யத்தைச் செய்தேன். என்றாயிற்று.

நயம் நின்ற எட்டெழுத்தான திருமந்திரத்தின் பொருளைக் கூறுகின்ற சொன்மாலை என்றும் சொல்லலாம்.

நன்மாலைகொண்டு இப்பிரபந்தத்தால் நமோ நாராயணவென்னும் மந்திரத்தைக் கற்றேன் என்பதாம். இத்தால் இப்பிரபந்தம் திருமந்திரத்தின் அர்த்தத்தை விளக்குகிறது என்பது தெளியவருகிறது.

திருமந்திரத்தில் சொல்லிய ஸ்வரூபம் உபாயம் புருஷார்த்தம் முதலிய விஷயங்கள் இதில் விசதமாகக் கூறப்படுவதால் இப்பிரபந்தம் திருமந்திரத்தின் கருத்தை உட்கொண்டதாகவேயாகும்.

தொழுது மலர் கொண்டு தூபம் கையேந்தி
எழுது மெழு வாழி நெஞ்சே—பழுதின்றி
மந்திரங்கள் கற்பனவும் மாலடியே கைதொழுவான்
அந்தரமொன்றில்லை யடை. (58)

நெஞ்சே	என்மனமே
மலர் கொண்டு	புஷ்பங்களை எடுத்துக்கொண்டும்
தூபம் கை ஏந்தி	கையிலே தூபத்தை தரித்துக்கொண்டும்
தொழுது	ஸேவித்து
எழுதும்	உஜ்ஜீவிப்போம்
எழு	நீ எழுந்திரு!
வாழி	இந்த ஸம்பத்துடன் நீ நீடூழி வாழ்க
(ஏனெனில்)	
பழுதின்றி	குற்றமின்றி
மந்திரங்கள்	பகவத்வாசகமான மந்திரங்களை
கற்பனவும்	அப்யஸிப்பனவும்
மால் அடி கைதொழுவான் ஏ	திருமால் திருவடிகளுக்கு பணிவிடை செய்வதற்காகத்தான்.
ஆகையால்	
அந்தரம் ஒன்று இல்லை	நாம் தாமதிப்பதற்கு நேரமில்லை
அடை	(சீக்கிரம்) அவனைச்சேர்வாய்

தம் நெஞ்சைக் கூப்பிட்டு உபதேசிக்கிறார்.

தொழுது:—என் மனமே! நாம் உயர்ந்த புஷ்பங்களை எடுத்துக்கொண்டு, தூபத்தையும் கையிலேந்திக்கொண்டு, மற்றுமுள்ள பூஜோபகரணங்களுடன் எம்பெருமானை ஸேவித்து ஆத்மலாபத்தை அடைவோம். எழுந்திரு; என்று உபதேசித்தார். உடனே அவரது மனம் ஆழ்வார் உபதேசித்தபடியே பகவத்குணநுபவம் செய்வதற்காக எழுந்து நின்றது. அதைக்கண்டு மகிழ்ந்த ஆழ்வார் அதை வாழ்த்துகிறார். இந்த பகவத் பஜனமாகிற ஐச்வர்யத்துடன் நீ நெடுங்காலம் வாழ்வாயாக; என்றார். நீர் எதற்காக இப்படி

சொல்லுகிறீர் என்று மனம் வினவ, அதற்கு பதிலுரைக்கிறார் ஸ்வா மிகளால். குருகுலவாஸம் செய்து முறைப்படி சந்தை சொல்லி கற்கிற மந்திரங்களெல்லாம் திருமால் திருவடிகளில் பணிவிடை செய்வதற்காகவேயல்லவா? ஆதலால் நாம் எழுந்து அவனைப் பணி வோம். இப்பொழுது என்ன முடை? சிறிதுகாலம் போகட்டும் என்று சொல்லாதே. நாம் தாமதிக்கக் காலமில்லை. ஒரு நொடிப் பொழுதும் விடாமல் அவனை அநுபவிக்கவேணும். ஆதலால் எழுந்திரு; என்றார்.

அடைந்த வருவினையோ டல்லல் நோய் பாவம்
மிடைந்தவை மீண்டொழிய வேண்டில்—நுடங்கி
டையை
முன்னிலங்கை வைத்தான் முரணழிய, முன்னொருநாள்
தன் விலங்கை வைத்தான் சரண். (59)

அடைந்த	நம்மைப்பற்றிக்கிடக்கிற	நுடங்கிடையை	துவள்கின்ற இடையை யுடைய பிராட்டியை
அரு	அருமையான		
வினையோடு	பழயபாபங்களோடு	இலங்கை வைத்தான்	இலங்காபுரியில் சிறை வைத்த ராவணனுடைய
அல்லல்	மனத்துயரங்களும்		
நோய்	வியாதிகளும்	முரண் அழிய	வலிமை அழியும்படியாக
பாவம்	இப்பொழுது செய்யப்படுகிற புதிய பாபங்களும்	முன் ஒருநாள் தன் வில்	முன் ஒருநாளில் தன் வில்லை
மிடைந்தவை	இப்படி ஆத்மாவைக் கிட்டியிருக்கிற வைகளெல்லாம்	அம் கை வைத்தான்	அழகிய திருக்கையில் வைத்த ஸ்ரீராமனுடைய
மீண்டு ஒழிய வேண்டில்	நம்மைவிட்டு விலக வேணுமென்று விரும்பினால்	சரணம்	[illegible]
முன்	முற்பொருகால்		

திருமாலடிகளுக்குத் திருவாராதனம் செய்வதற்குப் ப்ரதிபந்தகங்கள் பல கிடக்கின்றனவே! அவை எப்படித் தொலையும் என்று வினவ, எல்லாவற்றையும் அவனே போக்கித் தருவான் என்கிறார்.

அடைந்த :— அநாதியாகவந்த சரீரஸம்பந்தத்தாலே செய்து வைத்திருக்கிற ப்ராசீன பாபங்களும், மனோவ்யாதிகளும், பாபங்க

னால் வரக்கூடிய சரீரவ்யாதிகளும், இப்பொழுதிருக்கிற சரீரத்தைக் கொண்டு செய்யப்படும் புதிய பாபங்களும் மறுபடியும் நம்மிடம் வாராமல் அடியோடு தொலையவேண்டுமென்று நினைத்தால், முன்பு ஸீதாப்பிராட்டியைப் பிரித்து இலங்கையில் சிறையாவைத்த இராவணனுடைய மிடுக்கை அழித்த, வில்லைக்கையிலேந்தின இராமபிரானைச் சரணமாகவடையவேண்டும். வேறு வழியில்லை என்றபடி.

பிராட்டியைப்போல் பெருமானால் உகக்கப்பட்ட ஜீவனை இராவணனைப்போல் நாம் (நமக்கு ஸொந்தமென்றும், அவனுக்கடிமையில்லையென்றும் நினைத்தால்) பெருமானைவிட்டுப்பிரித்தால், இராவணன் பட்டபாடு படுவோமென்றும், நாம் ஜீவாத்மாவைப் பெருமானிடம் ஸமர்ப்பித்தால் பிராட்டியின் விரோதியான ராவணாதிகள் அழிந்ததுபோல் நம் விரோதிகளும் ஸ்ரீராமனுடையவருளால் தொலைந்துபோம் என்பது ஸூசிதம்.

சரணா மறை பயந்த தாமரையானோடு
மரணாய மன்னுயிர்கட்கெல்லாம்—அரணாய
பேராழிகொண்ட பிரானன்றி மற்றறியாது
ஓராழி சூழ்ந்த வுலகு. (60)

சரண் ஆம்	எல்லாருக்கும் ஹிதத்தைபோதிக்கிற
மறை	வேதத்தை
பயந்த	வெளிப்படுத்தினவரான
தாமரையானோடு	பிரமதேவனோடு
மரணாய	மரணத்தை இயல்பாகவுடைய
மன்	நித்யமான
உயிர்கட்கு எல்லாம்	எல்லா ஜீவராசிகளுக்கும்
அரண் ஆய	காப்பாற்றும் விதங்களை
பேர் ஆழி கொண்ட	பெரிய திருவாழியைத் தரித்த
பிரான் அன்றி	உபகாரகனானபெருமானையல்லது
மற்று	அவனைக்காட்டிலும் வேறான
ஓர் ஆழி சூழ்ந்த	ஒப்பற்ற கடலால் சூழப்பட்ட)
உலகு	இவ்வுலகம் (இப்புவியுலுள்ளார்)
அறியாது	தெரிந்துகொள்ள முடியாது.

ஸம்ஸார துக்கங்களைத் தொலைக்கவேணுமென்றால் ஸ்ரீராமபிரான் திருவடிகளை சரணமாக வரிக்கவேணுமென்றார் கீழ்ப்பாட்டில்.

மற்ற ப்ரஹ்ம ருத்ராதி ஜீவர்களை ஆச்ரயித்தால் ஸம்ஸாரத்தை விலக்க முடியாதோ? என்கிற கேள்வை பிறக்க, அதற்கு பதிலு ரைக்கிறார் போலும் இப்பாட்டில்.

சரணமறை:—நாம் நம்முடைய கிழநாட்களில் என்ன செய்தோமென்று தெரிய சக்தியுடையவரல்லோம். இப்பொழுது படுகிற துன்பங்கள் எல்லாம் எதனால் ஏற்பட்டவை என்று அறியவல்லோரில்லை. இனி வரப்போகிற துக்கங்களும் இன்னவை என்றும் இன்னகாரணத்தாலென்றும் தெளியவல்லாரில்லை. இவைகளைத் தெரிந்துகொண்டாலன்றோ இவைகளை வேரறப் பரிஹரிக்கலாம். இவைகளெல்லாம் நமக்கும் தெரியமுடியாத விஷயம். தவத்தாலுயர்ந்த ப்ரஹ்ம ருத்ராதி ஜீவர்களுக்கும் அறியமுடியாதவையே. "தாந்யஹம் வேதஸர்வாணி நத்வம் வேத்த பரந்தப" என்று கீதை. இப்படி பிரமன் முதல் புற்பூண்டுகளளவாயுள்ள ஸகல ஜீவன்களுடைய துக்கங்களையும் அவைகளின் காரணங்களையும் அவைகளைத் தொலைக்கும் உபாயங்களையும் அறிந்தவன் ஸர்வஜ்ஞனான ஸ்ரீய: பதி ஒருவன் தான். அவனைத்தவிர பெரிய ஸமுத்திரத்தால் சூழப்பட்ட உலகனைத்தும் அறிந்ததில்லை. அறியவும் [illegible]லாது. ஆதலால் பிரமதேவன் முதலான எல்லா ஜீவர்களும் ஸம்ஸாரம் தொலையவேண்டில் அழியானையே அடைய [illegible]மென்றபடி.

சரணு:—யோப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் யோவை வேதாம்ஸ்ச ப்ரஹிணோதி தஸ்மை என்றபடி ஸர்வேச்வரனால் உபதேசிக்கப்பட்ட வேதத்தை உலகத்தார்க்கு வெளியிட்ட [illegible] பிரான் என்றபடி. இவ்வளவுபொழுதாக நாம் [illegible] யாதெனில்; எல்லார்க்கும் [illegible] [illegible] சொல்லியவர்க்கும் தான் சொல்லியபடி [illegible] முதலாக யாவரும் அவ்வேதத்தை [illegible] [illegible]டிருப்பினும், அதில் சொல்லப்பட்ட பொருளை [illegible] ஒருவரும் அடையவில்லையே! என்று ஆழ்வார் [illegible] றுகின்றபடி.

மரணயை:—ஜகத்தி இன்ன உயிர்களெல்லாம் [illegible]ளன. ஆப்ரஹ்ம ஸ்தம்ப பர்யந்தா ஜகதந்தர் வ்யவஸ்திதா: |

ப்ராணிந: கர்மஜநித ஸம்ஸாரவச வர்திந: | என்றபடி பிரமன் முத லான ஜீவர்களெல்லாம் ஸம்ஸாரிகளாதலால் மரணத்தையுடையவர் கள். ஒவ்வொருவர்களுடைய சரீரமும் உயர்ந்ததாயிருப்பினும் சரி, தாழ்ந்ததாயிருப்பினும் சரி, அழியக்கூடியதுதான். ஆதலால் அழியக்கூடிய சரீரம் தொலையும்படிக்கும் மீண்டும் வராதபடிக்கும் நாம் காரியம் செய்யவேண்டியதவசியம் என்று தோன்றுகிறது.

பேராழிகொண்ட:—ஒரு குடும்பத்தில் ஒருவனுக்கு வியாதிவந் தால், அவ்வியாதியைப் போக்குவதற்கு, அக்குடும்பத்தில் பழகினவ னையும், அக்குடும்பத்திலுள்ளவர்களுடைய தேஹ ஸ்வாபங்களை அறிந்தவனையும், வியாதிகளைப் போக்கும் திறமை வாய்ந்தவனுமான வைத்யனை உலகத்தார் தேடுகின்றார்கள், நாமும் கண்டிருக்கிறோம், அதுபோல் நாம் இது வரையில் எவ்வளவு சரீரங்களை எடுத்திருக்கி றோமோ; அவ்வளவு சரீரங்களிலும் இப்பவும் அந்தர்யாமியாக நம் மோடு கூடவிருந்துகொண்டு நம் ஸ்வாபங்களையும் நாம் செய்த காரி யங்களையும் அறிந்துமிருக்கிற பாமபுருஷனைத்தான் இப்பிறவியென் னும் நோய் நீங்குவதற்குச் சரணாக வரிக்கவேணுமென்பது விளங் கும். நம் வியாதிகளை ஒழிக்க அவன் கையிலேதரித்த திருவா ழியே அமையும் என்றபடி.

பேராழி:—கீழ்ப்பாசுரத்தில் ஸ்ரீராமபிரானே சரண், என்று கூறியதால், இங்கு 'பெரிய கடலை தனக்கு வசமாக்கிக்கொண்ட; என்றும் பொருள் கூறலாம். இலங்கை சேருவதற்கு இடையூறா யிருந்த கடலையும் தனது வலிமையால் தனக்கு ஸ்வாதீனமாக்கிக் கொண்டதுபோல், கடல்போன்ற நம் வினைகளையும் ஸ்வாதீனமாக் கிக்கொண்டு (நம்மிடம் ஸம்பந்திக்காதபடி ஸங்கல்பித்து) நமக்கிஷ் டத்தைக்கொடுப்பன் என்பதாம்.

அரணாய—ஹிதத்தை, பிரான் அன்றி ஓராழி சூழ்ந்த உலகு அறியாது. என்றந்வயம். அவனைத்தவிர மற்ற ஜீவர்கள் எவருக்கும் ரக்ஷோபாயம் தெரியாது. எருத்துக்கொடியுடையானும் பிரமனு மிந்திரனும்; மற்றுமொருத்தரும் இப்பிறவியென்னும் நோய்க்கு மருந் தறிவாருமில்லை என்ற பாசுரம் இங்கு நினைக்கத்தகும்.

உலகு முலகிறந்த வூழியும், ஒண்கேழ்
விலகு கருங்கடலும் வெற்பும்—உலகினில்
செந்தீயும் மாருதமும் வானும், திருமால் தன்
புந்தியிலாய புணர்ப்பு. (61)

உலகும்	லோகங்களும்	செந்தீயும்	சிவந்த நிறமுள்ள தேஜஸ்ஸும்
உலகு இறந்த	லோகங்களெல்லாம் செற்றுக்கிடக்கிற	மாருதமும்	காற்றும்
ஊழியும்	பிரளயகாலமும்	வானும்	ஆகாசமும்
ஒண்	மநோஹரமான		இவைகள் எல்லாம்
கேழ்	வர்ணத்தையுடைய	திருமால்தன்	திருமகள் கொழுநனுடைய
விலகு	(அலைகள்) எறிகிற	புந்தியால்	ஸங்கல்பத்தால்
கருகடலும்	கருப்பு நிறமுள்ள ஸமுத்திரமும்	ஆய	உண்டாக்கப்பட்ட
வெற்பும்	பர்வதங்களும்	புணர்ப்பு	[illegible]
உலகினில்	இவ்வுலகங்களில் காணப்படுகிற		

நம்முடைய நன்மைகளை நாமறியாமைக்கும் ஈச்வரன் அறிந்தமைக்கும் தகுந்த காரணம் காட்டுகிறார் இப்பாட்டில்.

உலகும்:—இவ்வுலகமும், உலகமடங்க நசித்துப்போகும் அப் பிரளயகாலமும், கடலும், மலைகளும், மற்றுமுள்ள பஞ்சபூதங்களும், திருமகள் நாதனுடைய ஸங்கல்பத்தால் [illegible] களன்றோ; ஆகவே எவன் இவைகளைப்பெற்றானோ அவனே இவைகளின் நன்மைகளையும் அறிந்தவன். தன் [illegible] நடந்த உலகங்களை [illegible] ஜீவாத்மாக்கள் [illegible] எண்ணி எல்லாப் பொருள்களையும் அழித்தான். [illegible] ஐயோ! இவர்கள் அசேதனங்கள்போல் [illegible] கிறார்களே! என்று இரங்கியருளி, அவரவர் [illegible] களுக்குத் தகுதியான கை, கால் முதலிய அவயவங்களோடு தேஹத்தைக் கொடுத்தான். நாம் அப்பொழுது [illegible] என்ன நன்மையை அறிந்தோம். [illegible] கொண்டோம். ஆதலால் பிரளயகாலத்திற்போல் இப்பொழுதும்

நாம் அறிவிலர் தாம். "என்னால் செயற் பாலது என்" என்றே நினைக்கவேண்டியவர் தாம். ஆதலால் பிரளயத்திலும் பிறகும் நம்மைத் தம் வயிற்றில் வைத்துக்கொண்டும் நமக்கு போக ஸாதனங்களான, பஞ்சபூதங்கள் முதலியவைகளையும் படைத்தும், நம்மைக்காத்தவன் தான் என்றைக்கும் நம்முடைய நன்மையை அறிந்தவன்: மற்றவர்களல்லர், என்று முன் பாசுரத்தோடு கூட்டிக்கொள்க.

திருமால்தன்:—பிரஜைகள் விஷயத்தில் தாய்க்காக விரங்கும் பிதாவைப்போல் பிரளயத்தில் துக்கப்படுகிற ஜீவன்களாகிற பிரஜைகளைப்பார்த்துப் பிராட்டி துக்கப்பட, அவளுடைய ப்ரீதிக்காக மீண்டும் தன் ஸங்கல்பத்தால் ஸ்ருஷ்டித்தான் என்று உணர்க.

புணர்மருதி னூடுபோய்ப் பூங்குருந்தம் சாய்த்து
மணமருவ மால்விடையேழ் செற்று—கணம்வெருவ
ஏழுலகும் தாயினவு மெண்டிசையும் போயினவும்
சூழரவப் பொங்கணையான் தோள். (62)

புணர்	ஒன்றோடொன்று சேர்ந்திருக்கிற	கணம் வெருவ	எல்லாப் பிராணிகளுடைய கூட்டங்களும் பயப்படும்படி
மருதின்	(இரண்டு) மருதமரங்களின்	ஏழுலகும்	ஏழுலோகங்களில்
ஊடுபோய்	நடுவில்சென்று	தாயினவும்	தாவிப்போனவையும்
பூங்குருந்தம்	புஷ்பித்திருந்த குருக்கத்திமரத்தை	எண்டிசையும்	எட்டுதிக்குகளிலும்
சாய்த்து	கீழே தள்ளி	போயினவும்	சென்றவையும் (எவை என்று வினவினால்)
மணம் மருவ	நப்பின்னையோடு விவாஹம் நடப்பதற்காக	சூழ் அரவம்	பார்த்துகிடக்கிற திருவனந்தாழ்வானை
மால்	பெரிய	பொங்கு	உயர்ந்த
ஏழ் விடை	ஏழு ரிஷபங்களையும்	அணையான்	படுக்கையாகவுடைய பெருமானுடைய
செற்று	கொன்று	தோள்	திருத்தோள்களே.

உலகங்களெல்லாம் அவனுடைய படைப்பு என்றார் கீழில். இதில் காப்பதுமவனது செய்கை என்கிறார்.

புணர்:— இக்காலத்தில் நம்மைப் பிரஜைகளாகக் கொண்ட அரசர்களின் நிலைமையை ஆராய்வோம். அரசன் என்ற பேர் படைத்தபின் உயர்ந்த அரண்மனையில் ஸர்வவிதபோக ஸாதனங்களுடன் ஸுகமாகப் பொழுதுபோக்குகிறார்கள். உயர்ந்த ரத்னங்களாலிழைக்கப்பட்ட சிங்காசனங்களில் முத்துக்களால் அலங்கரிக்கப்பட்ட வெண்குடையின் கீழ் வீற்றிருக்கின்றார்கள். பிரஜைகளுக்காக ஊர் ஊராகத் திரிந்துகொண்டு வெய்யிலுக்காகக்குடைபிடித்துக் கொள்ளும் அரசர்களைக் காணோம்: அரசன் என்று தோன்றுவதற்காக சிங்காசனத்தின்மேல் நிழலில் குடைபிடித்த அரசர்கள்தான் அகப்படுவார்கள். அங்ஙனமின்றி நம் ஸர்வேச்வரன் படும் பாட்டைப் பாருங்கள்; இவ்வுலகங்களைப் படைத்தாய்விட்டது. இனியவைகள் எப்படியாவது பிழைத்துப் போகட்டும் என்று இராமல் அவனும் அலைந்து திரிவதைப் பார்க்கவேணும். குளிர்த்தி—நாற்றம்—மணம் இவைகளுக்கு ஊற்றுக்காலான அனந்தனைப் படுக்கையாகக்கொண்டும் அவனில் உறங்கப்பெற்றிலன். இவ்வுலகில் கண்ணனாய் வந்து மருதமரங்களினிடையே தவழ்ந்தான். புஷ்பித்திருந்த குருக்கத்திமரத்தைச் சாய்த்துத் தள்ளினான். ஏழு ரிஷபங்களைக் கொன்றான். ஏழுலகங்களையும் அளந்தான். இவைகளில் தானிவன் என்ன பாடு படுகிறான். அவனுடைய ரக்ஷணப்ரகாரம் நம்மை அடிமையாக்குகிறது என்றபடி.

உலகில் தன் வடிவத்தை மறைத்துக்கொண்டு ஏமாற்றும் அஸுரர்களைப் போக்கியருளிய உபகாரம் முதலடியில் சொல்லப்பட்டது. பிராட்டிமார்க்கு வந்த பிரதிபந்தகங்களைப் போக்கியது இரண்டாமடியில் சொல்லப்பட்டது.

இந்திரனுக்காகச் செய்த உபகாரம் மூன்றாமடியில் சொல்லப்பட்டது. ஆகவே இப்பாட்டில் அவன் நாட்டாருக்காகப் பரிவது என்ற மஹாகுணம் வரையப்பட்டதாயிற்று.

கீழே சொல்லப்பட்ட செய்கைகளிலெல்லாம் அவனுடைய திருக்கைகளே பிரதானங்களாக நின்றமையால் எல்லாவற்றையும் அவனுடைய திருக்கைகளிலேயே ஏற்றிச் சொன்னபடி.

மருதமரங்களினிடையே கண்ணன் தவழ்ந்துசென்றபடியால், தவழ்ந்துபோவதற்குக் கைகள் உதவியாயிருப்பதால் மருதினிடை போனது தோள்களாகும்.

மரத்தைச் சாய்ப்பது கைகளாலாகக்கூடிய செய்கையாதலால் பூங்குருந்தம் சாய்த்தது தோள்கள்.

ரிஷபங்களை யடக்குவதும் கைகளால் செய்யும் கார்யமேயாதலால் மால்விடைசெற்றதும் தோள்கள்.

இருகைகளையும் கட்டிவிட்டால் வேகமாய்நடப்பது முடியாது. கைகளை வீசிக்கொண்டு நடந்தால் விரைவில் செல்லலாமாதலாலும், மாவலியிடம் கையால் மண்ணிரந்த பின்பே, உலகங்களை அளக்கச்சென்றபடியாலும் உலகம் தாயனவும் திருத்தோள்கள். திசைகளனைத்தும் தன்னதென்று காட்டும்படி கைகளைத் திசைகளில் நீட்டியபடியால் எண்டிசையும் தாயனவும் தோள்கள் என்றபடி.

தோளவனை யல்லால் தொழா, என்செவியிரண்டும்
கேளவனது இன்மொழியே கேட்டிருக்கும்—நாநாளும்
கோணைகணையான் குரைகழலே கூறுவதே,
நாணாமை நள்ளேன் நயம். (63)

தோள்	கைகள்	நாளும்	எப்பொழுதும்
அவனை அல்லால்	அந்த ஸர்வேச்வரனைத்தவிர மற்றவரை	கோள் நாக	மிகுந்த பலத்தையுடைய சேஷனை
தொழா	ஸேவிக்கிறதில்லை	அணையான்	படுக்கையாகவுடைய ஸ்வாமியின்
என்	என்னுடைய		
செவி இரண்டும்	இரண்டு காதுகளும்	குரை கழலே	சப்திக்கிற திருவாபரணங்களையுடைய திருவடிகளையே
கேள் அவனது	பந்துவான அவனுடைய	கூறுவது	சொல்லிக்கொண்டிருக்கிறது
இன்மொழியே	மதுரமான வார்த்தைகளையே	நாணாமை	வெட்கமில்லாமல்
கேட்டு இருக்கும்	கேட்டுக்கொண்டு இருக்கும்	நயம்	விஷயங்களை
நா	எனது நாக்கு	நள்ளேன்	ஆசைப்பட மாட்டேன்

இப்படி ஈச்வரன் எளியனானமைகண்டு என்னுடைய இந்திரியங்கள் அவனையே நோக்கி நிற்கின்றன வென்கிறார்.

தோளவனை:—நான் என்தோள்களுக்கு வேறொரு பொருளைக் குறித்துத் தொழும்படி ஏவினாலும், தோள்கள் அவனையல்லது மற்றவனைத் தொழமாட்டேன் என்கின்றன. நான் புறம்பே சில வார்த்தைகளைக் கேட்க நினைத்தாலும் காதுகள் அவனுடைய கல்யாண குணங்களைத்தவிர மற்றவைகளைக் கேட்பதில்லை. அவன் தின் மொழிகளிலேயே படுகாடுகிடக்கின்றன. எனது நாக்கும் பாம்பணையான் திருவடிகளைப்பற்றியே பேசிக்கொண்டிருக்கிறது. ஆகலால் என் இந்திரியங்கள் என் ஸம்மதியன்றியே பகவத் ப்ரவணங்களாகவே நான் இனி உலகத்தாரைப்போல் விஷயங்களை அநுபவிக்கவேணுமென்று கனவிலும் கருதமாட்டேன் என்கிறார்.

கோள் நாக அணையான்:—ஸ்ரீதயா ஸஹாஸீந மனந்தபோகிநி ப்ரக்ருஷ்ட விஜ்ஞான பலைகதாமநி என்றபடி பிராட்டியையும் பெருமானையும் வஹிக்கும்படியான பலத்தையும் பரப்பையுமுடைய அனந்தன் மேல் பள்ளிகொண்டவன்.

குறை கழல்:—அணியப்பட்டிருந்தும் வீரக்கழலையுடைய சப்தத்தோடு கூடின திருவடிகள்.

நாணமை:—இக்காலத்தில் விஷயாந்தரங்களை அநுபவிப்பவர்கள் வெட்கமின்றித் திரிகின்றார்கள் என்று தோன்றுகிறது. ஒரு ஆண் பிள்ளை பெண்வேஷம் பூண்டு மற்றொரு ஆண்பிள்ளையை ஸம்போகத்திற்காக நாடிச்சென்றால் அது எப்படி நாட்டாருக்குப் பரிஹாஸத்திற்கு இடமாகுமோ! அதுபோல் சிற்றின்பங்களை அநுபவிப்பவர்கள் ஆழ்வார்கள்போன்ற மஹான்களுக்குப் பரிஹாஸாஸ்பதமாகி யிருக்கின்றனர். சிறிதும் வெட்கமின்றித் திரிகிற அவர்களைப்போல் நான் இருப்பதில்லேன். பகவத் காமனையுடையவனே யென்கிறார்.

கேள் அவன்—பந்துவான பரமபுருஷன். "பெற்றதாய் நீயே பிறப்பித்த தந்தை நீ மற்றையார் யாவரும் நீ" என்றபடி ஸர்வவித பந்துவானவன். நயம்—ஆசைப்படத்தக்க பொருள்கள், விஷயங்கள் என்பதாம்.

நயவேன் பிறர்பொருளை நள்ளேன் கீழாரோடு
உயவே னுயர்ந்தவரோ டல்லால்—வியவேன்
திருமாலையல்லது தெய்வ மென்றேத்தேன்,
வரு மாறென் நம்மேல் வினை. (64)

பிறர் பொருளை	நம்மில் வேறுபட்ட ஈச்வரனுடைய தன மான ஆத்மாவை	திருமாலை அல்லது	திருமாலைத் தவிர மற்ற எவரையும்
நயவேன்	எனக்கு உரியதென்று ஆசைப்படமாட்டேன்	தெய்வம் என்று	பரதேவதையென்று
கீழாரோடு	தாழ்ந்தவர்களோடு (பகவத் சிந்தையில்லாத ஸம்ஸாரிகளோடு)	ஏத்தேன்	துதிசெய்யமாட்டேன்
நள்ளேன்	சேரமாட்டேன்	வியவேன்	(இப்படி நான் ஒரு வன்தான் இருக்கிறேனென்று நினைத்து என்னைப்பற்றி) ஆச்சரியமுமடையமாட்டேன்.
உயர்ந்தவரோடு அல்லால்	உயர்ந்தவர்களான ஸ்ரீ வைஷ்ணவர்களைத் தவிர மற்றவரோடு	நம்மேல் வினை	நம்முடைய பக்கல் பாபங்கள்
உயவேன்	ஸம்ஸாரம் செய்யமாட்டேன்	வரும் ஆறு என்?	வரும் பிரகாரம் எப்படி? ஒருபொழுதும் வாரா.

இப்படியெல்லாம் போதுபோக்குகிற எனக்கு இனி பாபங்களால் கஷ்டம் ஏற்படுமோ? என்கிறாரிப்பாட்டில்.

நயவேன்:- அறிவுள்ள ஜீவாத்மாக்களிலும் அறிவில்லாத ப்ரக்ருதியிலும் வேறுபட்ட மேலான புருஷோத்தமனுக்கு பிராட்டிமார்களைப் போல் பரமபோக்யதானமான ஆத்மவஸ்துவை என்னுடையதென்று நான் எனக்கென்றும் நினைக்கமாட்டேன். இராவணன் பிராட்டியை அபஹரித்ததுபோல் நான் ஆத்மாபஹாரம் செய்யமாட்டேன் என்றபடி. பிராட்டியை அபஹரிக்க உதவியாயிருந்த மாரீசனைப்போலிருக்கிற, எம்பெருமானை மறந்து விஷயஸுகத்தில் ஈடுபட்ட ஸம்ஸாரிகளோடு சேரமாட்டேன். பெருமாளோடு பிராட்டியைச் சேர்த்து வைத்து ஜீவித்த விச்வாமித்ராதிகள் போன்ற ஆத்ம ஸமர்ப்பணம் செய்த பரமபக்தர்களான ஸ்ரீவைஷ்ணவர்களைத்தவிர மற்றவரோடு உயவேன். (உயவேன் = ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டு நட்பு

டன் இருக்கமாட்டேன்.) "மற்றுமோர் தெய்வமுளதென்றிருப் பாரோடுற்றிலேன், உற்றது முன்னடியார்க்கடிமை" என்கிற பரகாலன் பாசுரம் இங்கு அநுஸந்திக்கலாம். இப்படி ஒரு நிலை எனக்கு வந்ததேயென்று என்னைப்பற்றி நினைத்து ஆச்சரியப்பட்டு கர்வமடையமாட்டேன். திருமாலைத்தவிர மற்றவரைத் தெய்வ மென்றுபேணமாட்டேன். நம்மேல் எப்படிப் பாபங்கள் வந்து [illegible] லிக்கும்? ஒருக்காலும் அணுகமாட்டா வென்கிறார்.

"வியவேன்" என்பதைத் திருமாலையல்லது என்பதோடு சேர்த்து ஸ்ரீய: பதியைத்தவிர மற்ற ப்ரஹ்மருத்ர இந்திராதி தேவர்களைப் பார்த்தால் நெஞ்சில் கொஞ்சமேனும் மகிழ்ச்சியடைய மாட்டேனென்றும் சொல்லலாம்.

வருமாறு என்:—நாபுக்தம் க்ஷீயதே கர்ம கல்பகோடி சதைரபி என்று எவ்வளவு கல்பங்கள் சென்றாலும் கர்மங்கள், அவைகளின் பலனை அநுபவியாமல் தொலைக்கப்படமாட்டாவென்றும், கர்மங்க ளால்நேரும் ஸுகதுக்கங்களை அநுபவித்தே தீரவேண்டுமென்றும் சொல்லியிருப்பினும், அது நம் விஷயத்திலல்ல. மற்றவர் [illegible] டம்தான் அந்தசாஸ்திரம் பயன்படும். நம்மிடம் புண்யபாபரூபங்க ளான கர்மங்கள் ஒன்றையும் செய்யமுடியாது என்பதாம்.

நம்மேல்:—என்னிடத்திலும் என்னைச்சேர்ந்தவர்களிடத்தி லும் வினைகள் வாராதென்பதாம். இப்பாசுரத்தின் கருத்துட னொத்திய "திருமாலு [illegible] + திருமால் [illegible] நங்கட்கு எங்கேவரும் தீவினையே." என்ற திரு [illegible] பாசுரமும், "நயவேனொரு தெய்வம் நானிலத்தே + [illegible] எவ்வாறு நின்றடர்ப்பதுவே" என்கிற இராமாநுச நூற்றந்தாதிப் பாசுரமும் இங்கு சிந்திக்கப்பொருந்தும்.

வினையா லடர்ப்படார் வெந்நரகில் சேரார்
தினையேனும் தீக்கதிக்கட் செல்லார்—நினைதற்
கரியானைச் சேயானை, ஆயிரம்பேர், செங்கட்
கரியானைக் கைதொழுதக்கால். (65)

நினைதற்கு	நினைப்பதற்கு		(அவர்கள்)
அரியானை	அருமையாயிருப்பவனும்	வினையால்	(இருவகைப்பட்ட) பாபங்களாலும்
சேயானை	மனத்திற்கும் எட்டாத தூரத்திலிருப்பவனும்	அடர்ப்படார்	ஹிம்ஸிக்கப்பட மாட்டார்கள்
ஆயிரம்பேர்	ஸஹஸ்ரநாமங்களையுடையவனும்	வெம் நரகில்	க்ரூரமான நரகங்களில்
செம் கண்	சிவந்த கண்களையுடையவனும்	சேரார்	சென்று வஸிக்க மாட்டார்கள்
கரியானை	கருத்த நிறமுள்ளவனுமான பெருமானை	தினையேனும்	கொஞ்சமாயினும்
கை தொழுதக்கால்	கைகளால் அஞ்ஜலி செய்து வணங்கினால்	தீ கதிக்கண்	கெட்டவழிகளில்
		செல்லார்	நடக்கமாட்டார்கள்.

திருமாலைத் தொழுகிறவர்களுக்கெல்லாம் பலச்ருதி பாடுகிறாரிப் பாட்டில்.

வினையால்:—நம் ஸாமர்த்தியத்தால் அறியவேண்டுமென்று நினைத்தால் நினைவிற்கும் அகப்படாமல் வெகுதூரத்திலிருப்பவனும், ஆயிரம் பேர்களையுடையவனும், அவனருளே பார்த்துநிற்குமடியார்க்குப் பரமபோக்யமான சிவந்தகண்ணையும் கறுத்தமேனியையுமுடைய புருஷோத்தமனை அடிபணிந்து வணங்கித் தொழுதால், மோக்ஷவிரோதியான புண்யபாபங்களாகிற இருவகைப்பட்ட வினைகளாலும் இவ்வுலகில் துன்பங்கள் நம்மருகே நெருங்கா. இங்கிருந்து சரீரம் தொலைந்தபின்பு போய் அநுபவிக்கவேண்டிய நரகாநுபவமாகிற துக்கமும் கிடையாது. சிறிதேனும் கெட்டவழியில் செல்லமாட்டான். (அர்ச்சிராதி மார்க்கத்திலல்லது தூமாதிமார்க்கத்தில் செல்லமாட்டான்) என்பதாம், தர்மபுத்ரர் துரோணரை அடக்குவதற்காகச் சொல்லிய அச்வத்தாமா ஹத: என்ற பொய்யின் பயனாக நரகத்தைக் கண்ணால் பார்க்கும்படியாவது நேர்ந்தது. அதுவும் கிடையாதாம் திருமாலடியார்களுக்கு, என்று பலத்தைச் சொன்னபடி.

காலை யெழுந்துலகம் கற்பனவும் கற்றுணர்ந்த
மேலைத் தலைமறையோர் வேட்பனவும் — வேலைக்கண்
ஓராழி யானடியே யோதுவது மோர்ப்பனவும்
பேராழி கொண்டான் பெயர். (66)

உலகம்	(மோக்ஷத்தில்ஆசையுள்ள) லோகத்தார்	வேலை	கரையோடு கூடின
காலை	விடியற்காலையில்	கண்	விசாலமான
எழுந்து	தூக்கத்தைவிட்டு எழுந்து	ஓர்	விலக்ஷணமான
கற்பனவும்	சொல்லிக்கொள்பவையும்	ஆழியான்	ஸமுத்திரத்தை பள்ளியாகவுடைய பெருமானுடைய
கற்று	வித்யைகளை அப்யவித்து	அடியே	திருவடிகள் தான்.
உணர்ந்த	நல்லறிவுபடைத்த	ஓதுவதும்	பெரியோர்கள் வாசிப்பவையும்
மேலைதலை மறையோர்	மிகவும் உயர்ந்த வைதிகர்கள்	ஓர்ப்பனவும்	மனனம் பண்ணுமவையும்
வேட்பனவும்	காணவேணுமென்று ஆசைப்படுமவையும்(எவைஎன்னில்)	பேர் ஆழி கொண்டான்	பெரிய சக்ராயுதத்தை தரித்த எம்பெருமானுடைய
		பெயர்	திருநாமங்கள் தான்.

செங்கட் கரியானைக் கைதொழுதால் வினையால் அடர்ப்படார், நரகில் சேரார்என்று பகவத்பஜனத்திற்குப் பலம் கூறினார். அதனால் தான் உலகில் பெரியோர்கள் செய்யும் வியாபாரங்களெல்லாம் பெருமான் விஷயமாகவே இருக்கின்றன என்கிறார் இங்கே.

காலை:—உலகிலுள்ள பெரியோர்கள் விடியற்காலையிலெழுந்திருந்து கற்கிறவைகளும், வேதங்களின் மேல் பாகமான உபநிஷத்துக்களில் அறிவுடைத்த மறையோர்கள் ஒருவன்தானவைக்காண வேணுமென்று ஆசைப்பட்டுத் தினந்தோறும் தியானம் செய்து கொண்டு எதிர்பார்க்கப்படுமவையும், பாற்கடலில் பள்ளியார்ந்த சக்ரதாருடைய திருவடிகள்தான். அவனது திருவடிகளைக் காண விரும்புகிறார்கள். தியானிப்பதும் அத்திருவடிகளைத்தான், வாசிப்பதும் அவைகளைப்பற்றிய புஸ்தகங்களைத்தான், பெரியோர்கள் [illegible]மாகக்கேட்ட விஷயங்களை யுக்திகளோடுகூடச் சிந்திப்பதாகிய மனனஞ் செய்வது என்பதும் அப்பெருமானது திருநாமங்களைத் தான்.

ஆகவே நரகாதிகளை அடையாமலும், வினைகளால் நலியப்படாம லும், மோக்ஷத்தை யடையவேண்டில், ஆழியானையே சிந்தித்து அவன் நாமங்களையே சொல்லிக்கொண்டிருப்பது தான் உபாயம் என்றபடி.

உலகம் = உயர்ந்தவர்கள் (முமுக்ஷுக்கள்) மேலே தலை மறை யோர். எம்பெருமானை முக்யமாகச் சொல்லுகிறவேதத்தின் மேல் பாகத்தை அறிந்த வேதாந்திகள் என்பதாம்.

பெயரும் கருங்கடலே நோக்குமாறு ஒண்பூ
உயரும் கதிரவனே நோக்கும்—உயிரும்
தருமனையே நோக்கு மொண் தாமரையாள் கேள்வன்
ஒருவனையே நோக்கு முணர்வு. (67)

ஆறு	ஆறுகள்	உயிரும்	எல்லாருடையபிரா ணனும்
பெயரும்	எப்பொழுதும் அசைந்துகொண்டி ருக்கிற	தருமனையே	யமதர்மராஜனையே
கருகடலே	கருப்பு நிறமுள்ள ஸமுத்ரத்தையே	நோக்கும்	பார்த்துக்கொண்டி ருக்கும் (சென்று சேரும்)
நோக்கும்	நோக்கிப்போகும்	உணர்வு	ஞானமானது
ஒண் பூ	அழகான தாமரைப் புஷ்பம்	ஒண் தாமரை யாள்	அழகான தாமரைப் பூவில் உதித்த லக்ஷ் மீதேவியினுடைய
உயரும்	உயரே (ஆகாசத் தில்) ஸஞ்சரிக்கிற	கேள்வன்	நாதனை
கதிரவனே	ஸூர்யனையே	ஒருவனையே	ஒருத்தனையே
நோக்கும்	பார்த்துக்கொண்டி ருக்கும்	நோக்கும்	சென்றுபிடிக்கும்.

முமுக்ஷுக்களும் அறிவினால் சிறந்தவர்களும் சக்ராயுதத்தைத் தரிக் கிற பரமபுருஷனையே தியானம்செய்கிறார்கள் என்றார் கீழ்ப்பாட்டில். அதற்குக் காரணத்தைச் சொல்லுகிறார் இப்பாட்டில்.

பெயரும்:—இரவும் பகலும் விடாது ப்ரவஹிக்கிற ஆறுகள் எல்லாம் கடலில் நுழைவதையே இயல்பாகக் கொண்டிருக்கின்றன. கடலை நிரப்புவதற்காக ஆறுகள் செல்லவில்லை. கடல் எப்பொழு தும் ஜலத்தினால் பரிபூர்ணமாய்த்தான் இருக்கிறது. பின்னை எதற்

காக வென்றால், ஆறுகள் கடலில் புகாவிடில் தாங்கள் தரித்திருக்க முடியாததினால் தான். ஆறுகளுக்கு கடலில் புகுவது ஸ்வபாவம். அதை ஒருவராலும் மாற்றமுடியாது. அப்படியே அழகான தாமரைப்புஷ்பம் வெகுதூரத்திலிருக்கும் ஸூரியனைக்கண்டதும் மலர்கிறது. தாமரைப்புஷ்பத்திற்கு ஸூரியனிடம் நோக்கு. அதன் அருகே எவ்வளவு நெருப்பைக்கொட்டினாலும் அது மலர்கிறதில்லை. மலர்ச்சிக்கு வெப்பம் காரணமானால் நெருப்பைக் கண்டு மலரக்கூடாதா? ஆனதுபற்றி ஸூரியனைக்கண்டே மகிழ்வது தாமரையின் இயல்பு. அதுபோல் ஸமஸ்த பிராணிகளுடைய உயிரும் (ப்ராணனும்) தர்மராஜனையே நோக்கி நிற்கும். உயிர் யமனைத்தான் பார்த்துக்கொண்டிருக்கிறது. கடைசியில் யமனிடம் தான் செல்லப்போகிறது. யமனிடம் செல்வதுதான் உயிருக்கு இயல்பு. ஆறுகளை அடைத்து வைத்தாலும், அவைகள் கடலையே சேருவது போலும், தாமரை இரவில் எவ்வளவு மூடியிருப்பினும் ஸூரியனைக் கண்டு மலருவது போலும், நாம் எவ்வளவு காப்பாற்றி வைத்தாலும் பிராணன் தருமனிடம்தான் சென்று சேரும். அவைகளை மாற்ற நம்மாலில்லை. 'மரணம் ப்ரகிருதி: சரீரிணாம் விக்ருதி: ஜீவிதமுச்யதே புதை:' என்றான் காளிதாஸ கவியும். அதுபோல் அறிவு என்றால் திருமகள் நாதனை நாராயணனைப் பற்றித்தான் கிடக்கும். ஸ்ரீமந் நாராயணனைப் பற்றியஜ்ஞானம்தான் ஜ்ஞானம். மற்றவையெல்லாம் அஜ்ஞானம் என்பதுதான் ஸித்தாந்தம். அறிவிற்கு அறிவு என்று சொல்லப்படும் தன்மை வேண்டுமானால் ஸ்ரீய:பதியான புருஷோத்தமனைப் பற்றினால்தான், இல்லாவிடில் இல்லையென்றபடி. விஷ்ணுபுராணத்தில் ஸம்ஸாரத்தில் அகப்படுவதற்கு காரணமாகாமலும் பரமசுத்தமான பரப்ரஹ்மத்தையடையக்கூடியதாயிருக்கும் அறிவுதான் அறிவு. மற்றவையெல்லாம் அறிவல்ல. அஜ்ஞானம் என்றார். உலகத்தில் பலர் பல சாஸ்த்ரங்களைக் கற்று வித்வான்களென்றும் பெயர் படைத்திருப்பார்கள். அந்த சாஸ்திர ஜ்ஞானத்தை ஜ்ஞானம் என்று சொல்வதற்கில்லை. அவர்கள் வித்வான்களுமில்லை. எந்த ஜ்ஞானம் ஸம்ஸாரத்தினின்று நம்மை விடுவித்து ப்ரஹ்மப்ராப்தியைக் கொடுக்குமோ; அதுதான் ஜ்ஞானம், அதைக்கொண்டு வித்வான்கள் என்று சொல்வதற்கு [illegible]

பமில்லை. அது பகவனைப் பற்றிய ஜ்ஞானமே. அது தான் மேலானது. மற்றவைகள் எல்லாம் வயிறு பிழைப்பதற்கேற்ற சில்பங்களேயாகும். அவைகளால் ஆத்மாவிற்கு யாதொரு பயனுமில்லை. ஆகையினால்தான் முமுக்ஷுக்களும் அறிவினால் பெரியவர்களும் புருஷோத்தமனையே வணங்கி வழிபடுகிறார்கள் என்று கீழ்ப் பாசுரத்தோடு சேர்த்துப் பொருள் கொள்ளவேணும்.

இங்கு உணர்வு என்பதற்கு ஜீவாத்மா என்பது பொருள் என்று சொல்வதும் பொருந்தும். ஒருவனுக்கு எந்தகுணம் பிரதானமாயிருக்கிறதோ; அதைக்கொண்டே அவனைக் கூப்பிடுவது வழக்கம். ஒருவனுக்கு கோபம் அதிகமாயிருந்தால், அவன் வரும்பொழுது கோபம் வருகிறது என்பார்கள். அதேமாதிரி ஒருவன் வியாகரண சாஸ்திரம் வல்லவனாயிருந்தால், அதோ வ்யாகரணம் வருகிறது என்பார்கள். இதைத்தான் வடமொழியில் தத்குண ஸாரத்வாத் தத்வ்யபதேச: என்று சொல்வார்கள். அங்ஙனமே ஆத்மாவிற்கு ஜ்ஞானமே முக்யகுணமாதலால் அந்த ஜ்ஞானமாகிற குணத்தை யிட்டு அக்குணப்ரதானமான ஜீவனை இங்கு சொல்லுகிறது உணர்வு என்கிற பதம். ஆகவே ஸகலஜீவன்களும் தாமரையாள் கேள்வனை பரமபுருஷனையே நோக்குகின்றன. அவனுக்கே அடிமைகள் என்கிறபொருள் விளங்குகிறது. ஆதலால் எந்தலோகங்களிலிருந்தாலும் எவ்வகைப் பட்டனவாயிருந்தாலும் ஜீவன்களெல்லாம் ஸ்ரீமந் நாராயணனுக்கே அடிமைகள் என்றும், அவனைப்பற்றிய ஜ்ஞானம் தான் உயர்ந்ததென்றும் நமக்கு உபதேசிக்கப் பட்டதாயிற்று. தாமரையாள் கேள்வன் என்ற பதத்தால் பிராட்டிக்கும் பெருமானுக்கும் சேஷபூதர்கள் என்பதும் தோன்றும். ஆதலால் பிராட்டியை ஈச்வர தத்வத்தில் சேர்க்காத மதஸ்தர்களில் ஆழ்வார்களுக்கு அபிமான மில்லாமையும் காட்டப்படுகிறது.

இங்கு மூன்றாமடியில் "உயிரும் தருமனையே நோக்கும்" என்பது ஸ்ரீவைஷ்ணவர்கள் அல்லாதவர்களுடைய உயிரைப் பற்றியே சொல்லப்பட்ட விஷயமாகும். "தேவம் சார்ங்கதரம் விஷ்ணும் யே ப்ரபன்னா: பராயணம்| நதேஷாம் யமஸாலோக்யம் நச தே நரகௌகஸ:" என்றபடி ஸ்ரீவைஷ்ணவர்களுடைய உயிர் யமனுக்கு விஷய

மாகாதப்படியால் மற்ற ஜீவர்களைப் பற்றியது மூன்றாமடி யென்பார் சிலர்.

எம்பெருமானுடைய நியமனத்தால் ஸ்ரீவைஷ்ணவர்களுள்பட ஸகல புருஷர்களுடைய உயிரும் யமனையே தான் சேருகிறது. ஜீவாத்மா என்பது வேறு. உயிர் (பிராணன்) வேறு. உயிர் யமனைத்தான் சேருகிறது. ஜீவன்தான் பெருமானிடம் செல்கிறது. மற்றவர்களுடைய ஜீவனும் உயிரும் (ஆகவிரண்டும்) யமனைச் சேருகின்றன. ப்ரபன்னர்களுடைய உயிர் தருமனைச்சேர்ந்தாலும் ஜீவன் பெருமானைத்தான் அடைகிறதென்பார் மற்றும் சிலர். கலையிலங்கு மொழியாளர்களைக் கண்டு கேட்டுத்தெளிக.

உணர்வாரா ருன்பெருமை யூழிதோ றூழி
உணர்வாரா ருன்னுருவந்தன்னை—உணர்வாரார்
விண்ணகத்தாய் மண்ணகத்தாய் வேங்கடத்தாய், நால்
பண்ணகத்தாய் நீ கிடந்த பால். (68) [வேதப்

விண் அகத் தாய்	பரமபதத்தை இடமாகக்கொண்டவனே	ஊழி தோறு ஊழி	காலதத்வமுள்ளதனையும் (சித்திக்காலும்)
மண் அகத் தாய்	இப்பூவுலகத்தில் வஸிப்பவனே	உணர்வார் ஆர்	அறியவல்லார் யவர்
வேங்கடத் தாய்	திருவேங்கட மலையில் நிற்பவனே	உன் உருவம் தன்னை	உன்னுடைய ஸ்வரூபத்தை
பண் நால் வேதம் அகத் தாய்	ஸ்வரங்களுடன் கூடிய நான்கு வேதங்களில் வஸிப்பவனே! (வேதங்களால் பிரதிபாதிக்கப்பட்டவனே!)	உணர்வார் ஆர்	அறியக்கூடியவர் எவர்
		நீ கிடந்த பால்	நீ பள்ளிகொண்டிருக்கும் திருப்பாற்கடலை
		உணர்வார் ஆர்	அறியவல்லார் யாவர்?
உன் பெருமை	உனது மேன்மையை		

அறிவுக்கு எல்லை நிலம் லக்ஷ்மீபதியான ஸர்வேச்வரன் ஒருவன் தான் என்றார் கீழே. அவனை உள்ளபடி அறிபவர் தான் எவரும் கிடையாது என்கிறார் இப்பாட்டில்.

உணர்வார்:—பரமபதத்தில் மேன்மை தோன்ற வீற்றிருக்கும் பரமபுருஷனே. உன்னுடைய பெருமையை யார் அறிந்

தார், விண்ணுலகிலுள்ள நித்யஸூரிகளுள் யாராவது உன்பெருமை முழுவதையும் அறிந்தாரோ? அல்லது நீ தான் அறிந்தாயோ? “தனக்கும் தன் தன்மை அறிவரியான்” தாம் தம் பெருமையறியார்” என்றும் மற்றவர்களும் அருளிச்செய்தார்கள்.

இந்த பூமியிலே இராம கிருஷ்ணாதி ரூபங்களோடு அவதரித்து சிலகாலங்களில் வாஸம் செய்தவனே! அப்பொழுதுதான் ஸௌலப்யத்தோடு கூடின உன்பெருமையை யார் அறிந்தார். அல்லது, பின்னோர் வணங்கும்படியான ரூபத்துடன் திருமலையில் நித்யவாஸம் செய்கிறாயே; இப்பொழுது தான் உன் பெருமையை யார் அறிந்தார்? இவ்வவதாரங்களனைத்துக்கும் மூலகந்தமான திருபாற்கடலில் கிடந்த உனது மூர்த்தியை யார் அறிந்தார்? ஆதலால் காலதத்வமுள்ளதனையும் ஸர்வேச்வரனுள்பட அனைவரும் ஆராய்ந்து பார்த்தாலும் அவனுடைய பெருமை அளவிட்டு அறியமுடியாது என்றபடி.

பாலன் றனதுருவா யேழுலகுண்டு, ஆலிலையின்
மேலன்று நீ வளர்ந்த மெய்யென்பர்—ஆலன்று
வேலை நீ ருள்ளதோ விண்ணதோ மண்ணதோ
சோலை சூழ் குன்றெடுத்தாய் சொல்லு. (69)

நீ பாலன் தனது உருவாய் — நீ ஒரு குழந்தையின் உருவத்தோடு
ஏழ் உலகு — ஸப்தலோகங்களையும்
உண்டு — அமுதுசெய்து
ஆல் இலையின் மேல் — ஓர் வடபத்ரத்தின் மேல்
அன்று — அந்த பிரளயகாலத்தில்
வளர்ந்த — துயில்கொண்டிருந்தமையை
மெய் என்பர் — (யாவரும்) உண்மையென்கிறார்கள்
அன்று — எல்லாப்பொருள்களும் நசித்திருந்த அக்காலத்தில்
ஆல் — அந்த ஆலானது
வேலை நீர் உள்ளதோ — பெருகிக்கிடக்கிற ஸமுத்திர ஜலத்திலிருந்ததோ?
விண்ணதோ — (அல்லது) ஆகாசத்திலிருந்ததோ
மண்ணதோ — (அல்லது) பிரளயங்கொண்ட பூமியிலிருந்ததோ
சோலை சூழ் குன்று எடுத்தாய் — சோலைகள் நிறைந்த கோவர்த்தன மலையைத் தூக்கினவனே
சொல்லு — இதற்கு நீ பதில் சொல்லவேணும்.

இப்பாட்டில் எம்பெருமானைக் குறித்து ஒரு கேள்வி கேட்கிறார்.

பாலன்:— இப்பிரபஞ்சங்களை யெல்லாம் பிரளயங் கொண்ட காலத்தில், நீ உனது திருமேனியை ஒரு குழந்தையின் வடிவத்தைப் போல் மிகவும் சிறியதாகச் செய்து கொண்டு உன் திருவயிற்றில் எல்லாப் பொருள்களையும் ஒன்றோடொன்று கலந்து கெடாமலிருக் கும்படி, வைத்துக் கொண்டு ஒரு சிறிய ஆலிலையில் துயின்றாய் என்று முனிவர்கள் சொல்லுகிறார்கள். ஆப்தர்கள் சொல்லுவதால் அது உண்மைதான், பொய்யல்ல. ஆனால் நீ படுத்துறங்கின அந்த ஆல் அப்பொழுது ஸமுத்திர ஜலத்திலிருந்ததா? அல்லது ஒரு அவ லம்பமுமில்லாத ஆகாசத்திலிருந்ததா? அல்லது பிரளயத்தில் கரை ந்து உருவழிந்த பூமியிலிருந்ததா? எங்கிருந்தது? இவ்விஷயத்தை, ஏழுவயதில் கோவர்த்தன மலையைத் தூக்கினவனான நீதான் சொல் லவேணுமென்று கேட்கிறார். சோலைசூழ் என்கிற அடைமொழி யால், கிருஷ்ணாவதாரத்தில் ஏழுவயதான விளைமைப் பருவத்தில் சோலைகள் நிறைந்த கோவர்த்தனமென்கிற பெருமலையைத் தூங்கி யது மெப்படி? என்றும் வினவினரென்றும் தோன்றுகிறது. அந்த ஸர்வேச்வரன் அவனைத்தவிர மற்றவெல்லாப் பொருள்களையும் தம் வயிற்றில் வைத்துக்கொண்டு ஒரு சிறுகுழந்தையாயிருப்பது மிகவும் பொருத்தமில்லாத செயல். இப்படிப் பிரபஞ்சத்தையெல்லாம் விழு ங்கினவன் படுப்பதற்கு இடம் போதாத ஓரால் படுத்துறங்கின னென்பதும் அந்த ஆல் அவனைத் தாங்கியது என்பதும் பொருத்த மற்றவை. அவனைத் தவிர மற்றவஸ்துக்களெல்லாம் அழிந்திருக்க அந்த ஆல் மாத்திரம் எப்படி யிருக்கமுடியும்? ஆதலால் ஆலில் பள் ளியமர்ந்தானென்பதும் அஸம்பாவிதம். ஆகையால் இவையனைத் துக்கும் சரியான விடையளிக்க வேணுமென்கிறார். இந்தக் கேள் வியால் நாம் தீர்மானிக்க வேண்டிய விஷயமொன்றுண்டு. சில கார் யங்கள் மனுஷ்யர்களான நம்போன்றவர்களிடம் அஸம்பாவிதம் போல் தோன்றினாலும் ஸர்வேச்வரன் விஷயத்தில் அவைகள் பொ ருந்தியவைகளாகவே இருக்கும். ஏழாவது பிராயத்தில் ஒரு மலை யைத்தூக்குவது மனத்திற்கும் விஷயமல்லாத காரியமாயிருப்பினும், ஸர்வேச்வரனிடம் அது அதிசயமில்லாத செய்கையாகவே யிருக் கும். அவனது திவ்ய சக்தியால் எல்லாம் பொருத்தமுள்ள செய

லாகவே முடியும். அவனுடைய ஸாமர்த்தியம் இப்பேர்ப்பட்டது என்று நாம் நினைத்து ஸந்தோஷிப்பதே நமக்கு ப்ராப்தம். கூரத்தாழ்வான் அதிமாநுஷஸ்தவத்தில் "ஒன்றுமறியாத குழந்தையைப் போல் உருவம் கொண்டு, மிகவும் சிறியவுடம்பினால் எல்லாவுலகையும் ஸவிகாஸமாகவே நீ வஹித்துக் கொண்டிருப்பது, மனத்திற்கும் எட்டாத உனது மஹிமை தங்கிய சக்தியைக் காட்டுகிறது" என்று 'முக்த: சிசு: வடதளே' என்கிற சுலோகத்தால் வெளியிட்டார். ஆதலால் அவனுடைய செய்கை யெல்லாம் அவனது விசித்ர சக்தியைக் காட்டுகிறது என்று தேறித் தெளியவேண்டும்.

சொல்லுந்தனையும் தொழுமின், விழுமுடம்பு
செல்லுந்தனையும் திருமாலை—நல்லிதழ்த்
தாமத்தால் வேள்வியால் தந்திரத்தால் மந்திரத்தால்
நாமத்தா லேத்துதிரேல் நன்று. (70)

திருமாலை	லக்ஷ்மீபதியை
விழும் உடம்பு	அழியக்கூடிய இந்த சரீரம்
செல்லும் தனையும்	உள்ளவரையில் (மரணம்வரையில்)
நல் இதழ்	நல்ல புஷ்பங்களால் தொடுக்கப்பட்ட
தாமத்தால்	மாலைகளாலும்
வேள்வியால்	யாகங்களாலும்
தந்திரத்தால்	மந்திரமில்லாத கிரியைகளாலும்
மந்திரத்தால்	வெறும் மந்திரத்தாலும்
தொழுமின்	பணிவிடைசெய்யுங்கள்
	அல்லது
சொல்லும் தனையும்	நாவால் பேசுவதற்கு சக்தியுள்ளவரையில்
நாமத்தால்	அவன் திருநாமங்களைக்கொண்டு
ஏத்துதிரேல்	துதிசெய்தீர்களாகில்
நன்று	மிகவும் நன்று.

கீழ்ப்பாட்டில் ஈச்வரன் விசித்திர சக்தியுக்தன் என்றார். ஆகையால் யாவரும் அவனுக்குப் பணி செய்யவேணுமென்று பரோபதேசம் செய்கிறாரிப்பாட்டில்.

சொல்லும்:—"அத்ய வாப்தசதாந்தே வா ம்ருத்யுர்வை ப்ராணிநாம் த்ருவ:" என்றபடி ஜீவாத்மாக்கள் பரிக்ரஹித்த சரீரங்கள் என்றேனுமொருநாள் அழியக் கூடியவைகளாயிருப்பதால் சரீரம் அழி

வதற்கு முன்னமே திருமாலை ஏத்தித் திரியுங்கோள் என்கிறார். நல்ல வாஸனையுள்ள இதழ்கள் நிறைந்த புஷ்பங்களைக் கொண்டு பெருமானைப் பூஜை செய்யலாம். புஷ்பங்கள் அகப்படாவிடில் அவரவர்களுக்கு விதித்த கர்மங்களாலே அவனை ஆராதனம் செய்யலாம். அதற்கும் சக்தியில்லாவிடில் மந்திரம் இல்லாமல் செய்கிற கைங்கரியங்களைச் செய்யலாம். அது செய்வதற்கும் சரீரத்தில் சக்தியில்லாவிடில் கேவலம் கிரியையில்லாத பகவத் வாசகமான மந்திரங்களைச் சொல்லிக் கொண்டிருக்கலாம். மந்திரங்களை உச்சரிப்பதற்கு சரீர சுத்திவேண்டும். அதற்காக ஸ்நானம் செய்யவேணும், அது நம்மால் முடியாதென்றால் அவ்வீச்வரனுடைய பெயர்களையாவது சொல்லிக் கொண்டிரு. அதற்கு யாதொரு சுத்தியும் வேண்டாம். தாயாரை அம்மாவென்று கூப்பிடுவதற்கு ஸ்நானம் செய்து விட்டு வரவேண்டுமா? ஆகையால் சரீரம் அழிவதற்குள் ஸர்வேச்வரன் விஷயத்தில் ஏதாவதொரு கைங்கர்யத்தைச் செய்து கொண்டு போது போக்கி ஆத்மலாபத்தை அடையுங்கோள் என்கிறார்.

நன்று பிணிமூப்புக் கையகற்றி நான்கூழி
நின்று நிலமுழுதுமாண்டாலும்—என்றும்
விடலாழி நெஞ்சமே வேண்டினேன் கண்டாய்
அடலாழி கொண்டான் மாட்டன்பு. (71)

சொல்	பொருள்	சொல்	பொருள்
ஆழி நெஞ்சமே	கம்பீரமான மனமே	ஆண்டாலும்	நிர்வஹித்தாலும்
பிணி	நோய்களையும்	அடல் ஆழி கொண்டான் மாட்டு	மிடுக்கையுடைய திருவாழியை தரித்த பெருமான் விஷயத்தில்
மூப்பு	கிழத்தனத்தையும்	அன்பு	[illegible]
நன்று கை அகற்றி	நன்றாக மீண்டுவாராமலிருக்கும்படி விட்டுவிட்டு	என்றும்	எக்காலத்திலும்
நான்கு ஊழி	நாலு யுகங்களிலும்	விடல்	விடாமலிரு.
நின்று	அழியாமல் இருந்து கொண்டு	வேண்டினேன் கண்டாய்	[illegible]
நிலம்முழுதும்	பூமியோடுகூடின அண்டங்களனைத்தையும்		

கீழ்ப்பாசுரத்தில் ஸம்ஸாரிகளைப்பார்த்து உடம்பு விழுமளவும் திருமாலை ஏத்துமின்: என்றார். அவர்கள் ஆழ்வார் பாசுரத்தை செவியில் வாங்காமலேயே விஷயங்களிலேயே ஆசையுள்ளவர்களா யிருந்தார்கள். அதுகண்டு ஆழ்வார், அந்த ஸம்ஸாரிகளுக்கு உபதே சிப்பது வீண் என்று நினைத்துத் தமது நெஞ்சுக்கு உபதேசிக்கிறு ரிப்பாட்டில்.

நன்று:—என்னுடைய நெஞ்சமே! உனக்கொன்று சொல்லு கேன் கேள்; நீ, வியாதிகள், கிழத்தன்மை, மரணம் முதலியவை களை அடியோடு தொலைத்து கைவல்யத்தை அடைந்தாலும் சரி; அல்லது நான்கு யுகங்களுடன் கூடின நீண்டகாலம் வாழப்பெற்று இவ்வுலகங்களையெல்லாம் ஆட்சிசெய்வதாகிற ஐச்வர்யத்தைப் பெற் றாலும் சரி; அல்லது இவையிரண்டையும் அடைந்தாலும் சரி; திரு வாழியைக் கையில் தரித்த பெருமானிடம் அன்பை மாத்திரம் நீ விட்டுவிடாதே; உன்னை இவ்விஷயத்திற்காக நான் மிகவும் கெஞ் சிக்கேட்டுக்கொள்கிறேன். நீ அவைகளில் கண்வைக்காமல் திரு மாலையே வேண்டிக்கொண்டிரு என்கிறார்.

ஜீவாத்மாவை அநுபவிப்பதாகிற கைவல்யஸுகம் உயர்ந்ததே யாயினும் பகவதனுபவத்தைக் காட்டிலும் அல்பமாகையால் அதிலே ஆசையை வைக்கக்கூடாது. ஐச்வர்யம் என்பது மிகவும் அதிக மாகக் கிடைத்தால் ஸுகத்தைக் கொடுப்பதாயிருந்தாலும் அது அழியும் தன்மையுள்ளதாயிருப்பதால் மீண்டும் துயரத்தையே விளை விக்கிறது. ஆதலால் ஐச்வர்யத்தை ஆசைப்படுவதும் தகுதியல்ல; ஐச்வர்யகைவல்யங்கள் உனக்குக் கிடைத்தபொழுது "வானாளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்" என்றபடி அவைகளை உதைத்துத் தள்ளி திருமாலிடம் சென்ற சிந்தையாயிரு என்கிறார்.

நன்று:—ஐச்வர்யகைவல்யங்களில் எந்ததோஷங்களை வேதாந்தி கள் சொல்லுகிறார்களோ அவைகளை விலக்கி, ஐச்வர்ய கைவல் யங்களை நல்லதாகப்பண்ணி உனக்குக் கொடுத்தாலும் நீ அவைகளை வேண்டாதே. ஏனெனில் அவ்வீச்வரனல்லாத பொருள்கள் விட வேண்டியவைகள்; அவன் ஸ்வீகரிக்கவேண்டியவன்; மற்றவை கள் எப்படியிருப்பினும் அவைகளில் சிந்தையை வைக்காமலும் திருமாலை விடாமலும் இரு என்கிறார்.

ஆழி நெஞ்சமே:—நீ எப்பொழுதும் பகவத்குணாநுபவத்திலேயே ஆழ்ந்துகிடக்கிறாய்; உனக்கு நான் சொல்லவேண்டியதில்லை. ஆகிலும் ஐச்வர்ய கைவல்யங்கள் பெருமானை மறக்கச் செய்யும்படி கொழுப்பை உண்டுபண்ணுமியல்புள்ளவைகள்; ஆதலால் அக்காலங்களிலும் நீ எம்பெருமானை மறவாமலிரு என்று உணர்த்தினாரென்பது தோன்றும்.

அடலாழிகொண்டான்:—நம்முடைய விரோதிகளைப் போக்குவதற்கென்றே எப்பொழுதும் திருவாழியைக் கையிலே தரித்தவன். ஆச்ரித விரோதிகளை யழிக்கக்கருதினால் ஆயுதசாலைக்குப் போய் ஆயுதங்களை எடுத்துவர காலதாமதமாகுமோ என்று கருதி கையிலேயே ஆயுதங்களை தரித்திருப்பவன். ஆதலால் அவனை விடாதே கொள் என்று உபதேசித்தார்.

அன்பாழி யானை யணுகென்னும் நாவவன்றன்
பண்பாழித் தோள்பரவி யேத்தென்னும்—முன்பூழி
காணானைக் காணென்னும் கண் செவி கேளென்னும்
பூணாரம் பூண்டான் புகழ் (72)

அன்பு	பகவத் பக்தியே வடிவமாகக் கொண்ட என் மனமானது	பரவி ஏத்து என்னும்	"பரக்கப்பேசித் துதி செய்" என்று சொல்லுகிறது.
ஆழியானை	திருவாழியையுடைய பெருமானை	கண்	எனது கண்கள்
அணுகு- என்னும்	"ஸமீபத்தில் சென்று அநுபவிப்பாய் என்று" எனக்குச் சொல்லுகிறது	முன்பு ஊழி காணானை	முந்தி நாம் அபராதியாய்ப்போந்த காலத்தை மனத்தால் நினையாத பெருமானை
நா	என்னுடைய நாக்கானது	காண் என்னும்	பார் என்று சொல்லுகிறது.
அவன் தன்	அந்த ஸ்வாமியினுடைய	செவி	எனது காதுகள்
பண்பு ஆழி தோள்	லாவண்ய ஸமுத்ரமான திருத்தோள்களை	பூண் ஆரம் பூண்டான் புகழ்	ஹாரம் முதலிய ஆபரணங்களை அணிந்தவனுடைய குணங்களை
		கேள் என்னும்	'கேள்' என்று என்னைத் தூண்டுகிறது.

கீழே தனது நெஞ்சைக் குறித்து உபதேசம் செய்தார். தான் உபதேசிப்பதற்கு முன்பே தன்னுடைய கரணங்கள் அவ்வீச்வானிடம் ஆழ்ந்து கிடந்தன. அவைகளைப் பார்த்தவுடன் அவைகள் தனக்கு உபதேசம் செய்வது போல் தோன்றிற்று. அதை அருளிச் செய்கிறா ரிப்பாட்டில்.

அன்பு:— என்னுடைய மனம் ஆழியானையே கிட்டி நெருங்கி அநுபவிக்கவேண்டும் என்று எனக்கு உபதேசிக்கிறது: என்னுடைய நாக்கு மிகுந்த அழகுவாய்ந்த திருத்தோள்களையுடைய அவனை எப்பொழுதும் துதித்துக் கொண்டிரு என்று எனக்குச் சொல்லுகிறது: எனது கண்கள் நாம் குற்றவாளியாயிருந்த நாட்களையே மறந்திருக்கிற பகவானைப் பார் என்று சொல்லுகின்றன: என் காதுகள் பல திருவாபரணங்களை அணிந்துகொண்டிருக்கிற பெருமானுடைய குணங்களையே கேட்டுக்கொண்டிரு என்று எனக்குச் சொல்லுகின்றன: நான் அவைகளுக்கு உபதேசிக்க வேண்டியது போக அவைகள் எனக்கு உபதேசிக்கின்றன என்று ஸங்(

அன்பு:— தன் நெஞ்சு பெருமானிடம் அளவிறந்த அன்புகொண்டிருந்த படியால் தனது நெஞ்சை நெஞ்சு என்று சொல்லாமல் "அன்பு" என்ற சொல்லாலேயே சொல்லுகிறார்.

இப்பாட்டில் முதல்இரண்டடிகளில் தன் நெஞ்சும் நாக்கும் தனக்கு உபதேசித்தமையை வரைந்தார். நெஞ்சும் நாவும் உபதேசித்தபின் ஆழ்வார் அவைகளைக் குறித்து, நான் இன்று முதல் நீங்கள் சொன்னபடி செய்கிறேன்: ஆனால் கீழ் நாட்களில் நான் செய்த குற்றங்களை நினைத்து என்னை தண்டிக்க மாட்டாரோ அப்பரமபுருஷன்? என்று ஒரு கேள்வி கேட்கிறார். அவைகளைக் கேட்டவுடன் தன்னுடைய கண், நெஞ்சும் நாவும் சொன்னபடி நீ அவனைத் துதி செய்வாயாக; நீ அவன் விஷயத்தில் சிறிது இறங்கி நின்றால் நீ முன்பு செய்த குற்றங்களை அவன் கண்ணில் படாது: நீ குற்றம் செய்த சென்ற அநாதிகாலத்தையே மறந்து விடுவன்: காலத்தையே மறக்குங்கால் உனது குற்றம் தென்பட நியாயமே இல்லை: உன்னைத் தேடிக் கொண்டு அவன் உன் எதிரே வருவான்: அப்பொழுது நீ அவனை ஸேவித்துக் கொண்டேயிரு என்று பதில்

சொல்லுகிறது. உடனே ஆழ்வார் அக்கண்ணைப் பார்த்து அவன் எதிரே வருவான் என்று நீ சொன்னது மெய்தான். அப்படியிருந்தா லும் அவன் என்னை அடிப்பதற்கு வந்தால் நான் என்ன செய்வது என்றார். அதற்கு கண் 'காண்' என்று சொல்லிற்று. அடிக்க வருகிறவனையும் அணைக்க வருகிறவனையும் நேரில் பார்த்தால் நன்கு தெரியும். ஆகையால் வரும்பொழுது அவனை கண்களால் ஸேவித் தால் உனக்கே தெரியுமென்று சொல்லுகிறது. ஆழ்வார் நீ சொன் னபடி அவன் என்னை அணைக்கும் எண்ணத்துடனேயே வரலாம். ஆனால் வந்து என்னைப் பார்த்ததும் என்னுடைய தாழ்மையை நினைத்து மீண்டும் தான் திரும்பிப்போனால் நான் என்ன செய்வது என்றார். அதற்குத் தன் செவி பூணாரம் பூண்டான் புகழ் கேள் என் றும், அவன் திரும்பிப்போனாலும் அவனுடைய குணங்களைக் காதால் கேட்டுக்கொண்டிரு என்றதாம், பூணாரம் என்பதால் அவன் திரும்பிப்போகும்பொழுது அவன் அணிந்துகொண்டிருக்கிற திருவாபரணங்கள் சப்திக்கும்; அந்த சப்தத்தைக் கேட்டுக்கொண் டேயிரு என்றதாம். ஆகையால் நாம் செய்யவேண்டியதைச் செய்வோமென்று தனது கரணங்கள் உபதேசித்தன. இப்பாசுரங் களில் இழைக்கப்பட்ட பதங்களால் இப்படி ஒருவனைப்பார்த்து நடந் ததுபோல் தோன்றுகிறது. பண்பு + ஆழி— தோள் = அழகுக்குக் கடலாயிருக்கிற தோள்கள். அல்லது பண் + பாழி—தோள் அழ கையும் பலத்தையும் உடைய தோள்கள்.

இப்பாட்டின் மூன்றுமடியால், ஒரு ஜீவன் எம்பெருமானை ஆச்ரயித்தால் பெருமான், அவன் இதற்குமுன்பு என்ன செய்தான்? பாபங்களைச் செய்தானா? புண்ணியங்களைச் செய்தானா? என்று யோசிப்பதே இல்லை. முன்காலத்தையே மறந்துவிடுகிறானென்கிற பொருள் தோன்றுகிறது.

புகழ்வாய் பழிப்பாய் நீ பூந்துழாயானை
இகழ்வாய் கருதுவாய் நெஞ்சே—திகழ்நீர்
கடலு மலையு மிருவிசும்புங் காற்றும்
உடலு முயிரு மேற்றான். (73)

நெஞ்சே	என் மனமே!
நீ	நீ
பூந்துழாயானை	அழகான திருத்துழாயை யணிந்த ஸ்வாமியை
புகழ்வாய்	ஸ்தோத்திரம் செய்தாலும் செய்;
பழிப்பாய்	நிந்தனை செய்தாலும் செய்;
இகழ்வாய்	அலக்ஷ்யம் பண்ணினாலும் பண்ணு;
கருதுவாய்	ஆதரித்தாலும் ஆதரித்திடு;

	(அந்த ஸர்வேச்வரனே)
திகழ்நீர்	ப்ரகாசிக்கிற தீர்த்தத்தையுடைய
கடலும்	ஸமுத்திரத்தையும்
மலையும்	பர்வதங்களையும்
இரு விசும்பும்	பரந்த ஆகாசத்தையும்
காற்றும்	வாயுவையும்
உடலும்	தேஹத்தையும்
உயிரும்	ஆத்மாவையும்
ஏற்றான்	தரித்துக்கொண்டிருப்பவன்.

கீழ்ப்பாசுரத்தில் தன் நெஞ்சு முதலிய கரணங்கள் பகவத்குணாநுபவத்தில் படிந்து கிடப்பதைப் பேசினார். பிறகு சற்று நேரம் ஆலோசித்துப் பார்த்தார். நம்முடைய நெஞ்சு இப்பொழுது போலவே எப்பொழுதும் பெருமானையே சிந்தித்துக் கொண்டிருக்கும் என்று சொல்லமுடியாது. மனம் சஞ்சலஸ்வபாவமானது. நாளையதினம் வேறு ஒருவஸ்துவை விரும்பினாலும் விரும்பும் என்று தீர்மானித்துக் கடைசியாக ஒருவார்த்தை சொல்லுகிறேன் கேள் என்று மீண்டும் தன் நெஞ்சுக்கு ஒரு வார்த்தை சொல்லுகிறார் இப்பாட்டில்.

புகழ்வாய்:— அழகான திருத்துழாய் மாலையை அணிந்த ஸர்வேச்வரன், ஜலத்தினால் நிறைந்த கடல்களையும், மலைகளையும், விசாலமான ஆகாசத்தையும், காற்றையும், பஞ்சபூதங்களால் செய்யப்பட்ட ஸகல சரீரங்களையும் அவைகளுள் நுழைந்திருக்கும் ஜீவாத்மாக்களையும் எப்பொழுதும் தரித்திருக்கிறான். அவன் இவை யெல்லாவற்றிற்கும் ஆதாரமாயிருப்பவன். அவன் தான் ஜகத்காரணமான பரம்பொருள் என்று என்னுடைய தீர்மானம். எனது நெஞ்சே நீ அந்த திருத்துழாய் மாலையணிந்த ஸர்வேச்வரனை ஸ்தோத்திரம் செய்து கொண்டு ஆதரித்திருந்தாலும் இரு; ராவணாதிகளைப்போல் அவனைப் பழித்துக் கொண்டு அலக்ஷ்யம் செய்து கொண்டிருந்தாலும் இரு. நீ புகழ்ந்தால் அவனுக்கு ஒரு மேன்மை உண்டாகப் போவ

தில்லை. நீ பழித்தால் அவனுக்கு ஒரு குறைவும் வரப்போகிறதில்லை. அவன் ஜகத்காரணமான புருஷோத்தமன் என்று என்னுடைய தீர்மானத்தைச் சொல்லிவிட்டேன். நீ செய்வன செய் என்று மத்யஸ்தன் சொல்வது போல் தன் நெஞ்சுக்கு உபதேசிக்கிறார்

ஏற்றான் புள்ளூர்ந்தா னெயிலெரித்தான் மார்விடந்தான்
நீற்றான் நிழல்மணி வண்ணத்தான்—கூற்றொருபால்
மங்கையான் பூமகளான் வார்சடையான் நீண்முடியான்
கங்கையான் நீள்கழலான் காப்பு. (74)

ஏற்றான் — ரிஷபவாஹனனும்
எயில் எரித்தான் — முப்புரத்தை எரித்தவனும்
நீற்றான் — சாம்பலை பூசிக்கொண்டவனும்
கூறு ஒருபால் மங்கையான் — தனது உடம்பின் பாதியில் பார்வதியை தரிப்பவனும்
வார்சடையான் — நீண்ட சடையுடையவனும்
கங்கையான் — கங்கையைத் தலையில் தாங்கினவனுமான பரமசிவன்
புள்ளூர்ந்தான் — கருடவாஹநனும்
மார்வு இடந்தான் — இரணியனுடைய மார்வைப்பிளந்தவ[ன்]
நிழல்மணி வண்ணத்தான் — குளிர்ந்த நீலரத்னம் போன்ற நிறமுள்ள
பூமகளான் — பூவில்பிறந்த [ம]களுக்கு வல்லபனும்
நீண்முடியான் — உயர்ந்த கிரீடத்தையுடையவனும்
நீள்கழலான் — ஆச்ரிதரிருக்கும் இடம்வரையில் நீண்டு செல்லும் திருவடிகளையுடையவனுமான [illegible]
காப்பு — [illegible]

ஜகத்காரணமாயும உலகிற்காதாரமாயுமிருப்பவன் அழகாய் மாலையான் என்றார் கீழ்ப்பாட்டில். அப்படி ஜகத்காரணமானவன் ருத்ரனாகவிருந்தாலென்? என்று சிலர் வினவ, அவர்களுக்கு அப்படிப்பட்டவன் ஸ்ரீய: பதியான புருஷோத்தமன்தான் என்று இப்பாசுரத்தால் விடையளிக்கிறார்.

ஏற்றான்:— ரிஷபவாஹநனையும், திருபுரஸம்ஹாரம் செய்தவனையும், சாம்பலை உடம்பில் பூசிக்கொண்டவனும், தன்பாதி உடம்பில் பார்வதி என்னும் மடந்தையைக் கொண்டவனும், தலை

யில் சடை பூண்டவனுமான ருத்ரன், கருடவாஹனனும், ஹிரண்ய னைப் பிளந்தவனும், குளிர்ந்த நீல நிறத்தவனும், லக்ஷ்மிதேவியின் கணவனும், நீண்டகிரீடம் தரித்தவனும், நீண்ட திருவடிகளையுமு டையவனுமான நாராயணனுடைய ரக்ஷணத்தில் அகப்பட்டவன். நாராயணனுடைய ரக்ஷ்யவர்க்கத்தில் சேர்ந்தவன் என்பது கருத்து. இப்படி நாராயணன் பரன் என்பதையும், அரன் அவனுடைய ரக்ஷ ணத்திலகப்பட்டவன் என்பதையும் இப்பாசுரத்தில் இவ்விருவர் களுக்கும் இணைத்திருக்கும் அடைமொழிகளே நன்கு காட்டும். இருவருக்குமுள்ள வாசிதோன்றுவதற்கே இருவருக்குமிட்ட அடைமொழிகளை மாற்றி மாற்றி எழுதுகிறார்.

வாஹநம் ஒருவனுக்கு ரிஷபம்: மற்றவனுக்கு வேதமயனான கருடன். ஒருவன் தன்னையாச்ரயித்தவர்களுக்கிருப்பிடமான முப் புரத்தை எரித்தவன்: மற்றொருவன் ஆச்ரிதனுடைய விரோதியை அழித்தவன். ஒருவன் தன் உடம்பில் பஸ்மாவைப் பாவம் தொலை வதற்காகப் பூசிக்கொண்டவன்: மற்றொருவன் இயற்கையிலேயே குளிர்ந்த மணிவண்ணன்.

ஒருவன் மங்கையைத் தனக்காகத் தன்னுடம்பில் கொண்டு அர்த்தநாரீயானவன்: மற்றொருவன் ஜீவாத்மாக்களுக்குப் புருஷ காரமாகவிருக்கும் "அஸ்யேசாநா ஜகத:" என்கிற பிராட்டியை திருமார்பில் கொண்டவன். ஒருவன், தான் ஒரு தருமத்தைச் செய்தே மேன்மைபெற்றேன் என்பது தோன்றும்படி ஜடையை தரித்திருக்கிறான்: மற்றொருவன் ஆதிராஜ்ய ஸூசகமான கிரீ டத்தை தரித்தவன். ஒருவன் தலையில் சுத்திக்காக கங்கை விழுகி றது: மற்றொருவன் ஆச்ரிதர்களை பரிசுத்தமாக்குவதற்கு அவர்க ளுள்ளளவும் நீண்டு செல்கிற கங்கை பயந்த திருவடியையுடைய வன். நீங்களே யார் பரனென்று தேறித்தெளியுங்கோள் என்றபடி.

காப்புன்னை யுன்னக் கழியு மருவினைகள்
ஆப்புன்னை யுன்ன வவிழ்ந்தொழியும்—மூப்புன்னைச்
சிந்திப்பார்க் கில்லை திருமாலே நின்னடியை
வந்திப்பார் காண்பர் வழி. (75)

திருமாலே	திருமகள் நாதனே!	அவிழ்ந்து ஒழியும்	அவிழ்ந்து கழுவிப் போம்
உன்னை உன்ன	உம்மை ரக்ஷகன் என்று நினைத்து தியானித்தால்	உன்னை சிந்திப்பார்க்கு	உன்னை நினைக்கிறவர்களுக்கு
காப்பு	பிரதிபந்தகங்கள்	மூப்பு இல்லை	கிழத்தன்மை முதலான ஆறு பாவவிகாரங்கள் கிடையாது
கழியும்	தொலையும்	நின் அடியை	உன் திருவடிகளை
உன்னை உன்ன	உன்னை தியானித்தால்	வந்திப்பார்	ஸேவிப்பவர்கள்
அருவினைகள்	கொடிய பாபங்களாகிற	வழி	தேவயான மார்க்கத்தை
ஆப்பு	பந்தமும்	காண்பர்	பார்க்கிறார்கள்.

திருமாலைத் தெய்வமென்று தியானிப்பவர்களுக்கு ஸகல பிரதிபந்தகங்களும் விலகி, திவ்யலோகப்ராப்தி பூர்வகமாக பரமானந்தமா கிற மோக்ஷானந்தமும் கிடைக்குமென்கிறார்.

காப்பு:— திருமாலே! உன்னை தியானித்துக் கொண்டிருந்தால் உன்னை யடைவதற்குத் தடங்கலாயிருக்கும் இடையூறுகளெல்லாம் விலகிப் போகும். அல்லது, காப்பு என்பதற்கு காவலாளர்கள் எனப்பொருள். பாபபுருஷன் ஜீவராசிகள் செய்யும் பாபங்களைத் தெரிந்து கொள்வதற்கு ஆதித்யன், சந்திரன், வாயு, அக்நி, ஸ்வர்க்க லோகம், பூமி, ஜலம், ஹ்ருதயம், யமன், பகல், இரவு, இரண்டு ஸந்த்யைகள், தர்மதேவதை, ஆக பதினொன்று ஸாக்ஷிகளை வைத்திருக்கிறான். ஒருவன் இந்தப் பதினொருவர்களுக்குந் தெரியாமலிருக்கும்படி ஒரு காரியத்தையும் செய்ய முடியாது. இவர்கள் நாம் செய்யும் பாபங்களை எண்ணிக் கொண்டேயிருக்கிறார்கள். ஆகவே நாம் ஸர்வேச்வரனை தியானித்தால் நம்மைக் காவலாக நியமிக்கப்பட்டிருக்கும் பதினொருவர்களும் நம் வினைகளை எண்ணுவதற்கு முன் வரமாட்டார்கள் என்றபடி.

உன்னுடைய தியானத்தால் அருமையான கர்மங்களால் சேர்ந்திருக்கிற ஸம்ஸாரபந்தம் தானே அவிழ்ந்து போம்.

உன்னைச் சிந்திக்குமவர்களுக்கு, உளன் என்பது, [illegible], பிறப்பது, மாறுவது, வளர்வது, குறைவது, இறப்பது முதலிய ஆறு பாவவிகாரங்கள் கிடையாது. அதாவது மீண்டும் சரீரப்பந்

தம் கிடையாதென்பதாம். உன் திருவடிகளை ஸேவிப்பவர்கள் உனக்கிருப்பிடமான நித்யமான பரமபதம் எனப்படும் உலகத்தை அடைவதற்கு மார்க்கமான அர்ச்சிராதி மார்க்கத்தைப் பார்க்கிறார்கள். மற்ற வுலகங்களுக்குச் செல்கிற மார்க்கங்கள் போல் இல்லாமல் பரமஸுககரமான மார்க்கத்தைக் கண்டு போகிறார்கள் என்று திருமாலை வணங்குகிறவர்களுக்கு உண்டாகும் பிரயோஜனத்தைப் பேசினார்.

வழிநின்று நின்னைத் தொழுவார் வழுவா
மொழிநின்ற மூர்த்தியரே யாவர்—பழுதொன்றும்
வாராத வண்ணமே விண்கொடுக்கும் மண்ணளந்த
சீரான் திருவேங்கடம். (76)

வழி நின்று	பகவானை அடைய உபாயமான மார்க்கத்திலே நிலையாய் நின்று	மண்	பூமியை
நின்னை	உன்னை	அளந்த	அளந்துகொண்ட
தொழுவார்	ஸேவிப்பவர்கள்	சீரான்	கல்யாண குணங்களையுடைய ஸ்வாமி நித்யவாஸம் செய்கிற
வழுவா	அழிவில்லாத	திருவேங்கடம்	திருவேங்கட மலையே
மொழி	சொற்களாகிற வேதத்தில்	பழுது ஒன்றும் வாராத வண்ணமே	ஒருகுறைவும் வாராதபடி
நின்ற	சொல்லப்பட்ட	விண் கொடுக்கும்	பரமபதத்தைக் கொடுக்கும்
மூர்த்தியரே ஆவர்	ஸ்வரூப ஆவிர்பாவத்தைஉடையவராய் ஆவர்கள்.		

எம்பெருமானுடைய ஸம்பந்தத்தைப் பெற்ற திருவேங்கடமே மோக்ஷத்தைக் கொடுக்கவல்லதாயிருக்க, அவனையே தொழுமவர்களுக்கு அவன் மோக்ஷத்தைக் கொடுப்பதில் ஸந்தேஹமுண்டோ? என்கிறார்.

வழி நின்று:—வேதங்களில் சொல்லப்பட்ட பக்திமார்க்கத்தில் நிலையாய்நின்று உன்னைத்தொழுகிறவர்கள், வேதங்களில் சொல்லப்பட்ட தன் ஸ்வரூபத்தின் ஆவிர்பாவத்தை அடைவதாகிற நிலையைப் பெறுவார்கள். "ஏஷ ஸம்ப்ரஸாதோ அஸ்மாத் சரீ

ராத் ஸமுத்தாய பரம் ஜ்யோதிருப ஸம்பத்ய ஸ்வேந ரூபேணா அபி நிஷ்பத்யதே'' இங்ஙனம் உபாஸநம் செய்கிற ஜீவன் இந்த சரீரத்தி லிருந்து எழுந்து மேலான ஜ்யோதிஸ்ஸான புருஷோத்தமனை அடைந்து தனக்குச் சொந்தமான ஸ்வரூபாவிர்பாவத்தை அடைகி றான். ஜீவனிடத்தில் கர்மாவினால் சுருக்கப்பட்டிருக்கிற ஞானம் ஆனந்தம் முதலியகுணங்கள் அர்ச்சிராதி மார்க்கத்தில் சென்று புரு ஷோத்தமனை அடைந்து மலர்ச்சியை அடைகின்றன என்று உபநிஷத்துக்களில் சொல்லியபடி முக்தனாகிறான். அதாவது, வேதங்களில் மோக்ஷத்தையடைந்த ஜீவன் எந்த ஸ்வரூபத்துடனி ருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறதோ அப்படியே உன்னை ஸேவி ப்பவர்கள், அபஹத பாப்மா என்று ஆரம்பித்துச் சொல்லப்பட்ட எட்டு குணங்களுடைய ஆவிர்பாவத்தையடைந்து, நித்யாநந்த பரித னாய் நிற்கிறான். இவ்விஷயத்தில் ஸம்சயமே இல்லை. ஏனெனில் உனக்கு இருப்பிடமான திருவேங்கடமலையே ஒரு குறையும் வாரா தபடி பரமபதத்தைக்கொடுக்கிறது. உன்னுடைய ஸம்பந்தம் பெற்ற ஒரு அசேதனமானமலை மோக்ஷத்தை யாவருக்கும் அளிக் குமானால், நீ அதை கொடுப்பதில் ஐயமுண்டோ? என்று அப்பெரு மானைப்பார்த்து அவனுடைய உபகாரத்தைப்பேசினார்.

வழுவா மொழி:— குற்றங்களில்லாத வேதம். ஒருவனால் செய்யப்படாமல் பகவானைப்போல் நித்யமாயிருப்பதால் தோஷங் களில்லாத மறை என்றபடி.

“பழுதொன்றும் வாராதவண்ணம்” இரண்டு விபூதிகளோடும் கூடிய ப்ரஹ்மத்தை அநுபவிப்பதில் கொஞ்சங்கூடக் குறையில்லாத படி பரிபூர்ணப்ரஹ்மாநுபவத்தைக் கொடுக்கும் என்றபடி.

மண்ணளந்த சீரான்''—உலகளந்த நற்குணங்கள் நிறைந்த ஸ்ரீநிவாஸன்.

வேங்கடமும் விண்ணகரும் வெஃகாவும், அஃகாத
பூங்கிடங்கின் நீள்கோவல் பொன்னகரும் - நான்
[கிடத்தும்
நின்றானிருந்தான் கிடந்தான் நடந்தானே
என்றால் கெடுமாமிடர். (77)

வேங்கடமும்	வடக்குத் திருமலையும்	நான்கு இடத்தும்	'ய விந்த நான்கு திவ்ய தேசங்களிலும்
விண்ணகரும்	ஸ்ரீ வைகுண்டமும்	நின்றான்	(முறையே) நின்றருளினான்
வெஃகாவும்	திருவெஃகாவும்	இருந்தான்	வீற்றிருந்தான்
அஃகாத	அழகுமாறாத	கிடந்தான்	சயனித்திருந்தான்
பூங்கிடங்கின்	புஷ்பங்களையுடைய அகழையுடைய	நடந்தான்	அளந்து சென்றான்
நீள்	விசாலமான	என்றால்	என்று சொன்னாலே
கோவல்	திருக்கோவலூரென்கிற	இடர்	துக்கங்கள் எல்லாம்
பொன்னகரும்	அழகான திருப்பதியும்	கெடுமாம்	ஓடிப்போய்விடும்.

திருவேங்கடம் முதலிய பல திவ்யதேசங்கள் இப்பூமியிலிருப்பதால் ஸம்ஸாரிகள் அந்தந்த திவ்யதேசங்களில் எம்பெருமானுடைய திருவிளையாடல்களைச் சொன்னால் எளிதாக முக்திபெறலாமென்கிறாரிப்பாட்டில்.

வேங்கடமும்:— ஸ்ரீய: பதியான நாராயணன் திருவேங்கடமலையில் நின்ற திருக்கோலத்துடனிருக்கிறான். விண்ணகர் என்கிற ஸ்ரீவைகுண்டத்தில் உட்கார்ந்திருக்கிறான். திருவெஃகா என்கிற திவ்யதேசத்தில் படுத்திருக்கிறான். திருக்கோவலூரில் அவன் (உலகளந்த திருமேனியாதலால்) நடக்கிறான்; என்று ஒருவன் தன் வாயால் அவனையும் அவனுகந்தருளிய நிலங்களையும் பேசினால், அவனுடைய துயரங்களெல்லாம் தொலைந்துபோம்: மோக்ஷானந்தத்தை அடைவன் என்றபடி. ஆழ்வார்கள் மங்களாசாஸனம் செய்த நூற்றெட்டுத் திருப்பதிகளில் பரமபதமும் ஒன்று. ஆகையால் மற்றத் திருப்பதிகளோடு விண்ணகரையும் சேர்த்துச் சொன்னபடி. பிரகிருதிக்கப்பால் இருக்கிற விண்ணகரை, நம்மால் கண்டனுபவிக்கப்படுகிற திருவேங்கடம் முதலிய திவ்ய தேசங்களோடு சேர்த்து அநுஸந்திப்பதற்குக் காரணம், அவன் பரமபதத்தில் போலவே இப்புவியிலுள்ள திவ்யதேசங்களிலும் உகந்து வஸிக்கிறனென்பது பற்றியே.

நின்றானிருந்தான்:— அவன் நின்றதையும், கிடந்ததையும், இருந்ததையும், நடந்ததையும் பேசினால் நாம் நின்றும் இருந்தும்

கிடந்தும் நடந்தும் செய்த பாபங்களெல்லாம் நசித்துப் போகும். நம்மால் செய்யப்பட்ட பாபங்களனைத்தும் அழிந்துபோம் என்று தோன்றுகிறது.

இடரார் படுவா ரெழு நெஞ்சே, வேழம்
தொடர்வான் கொடுமுதலை சூழ்ந்த - படமுடைய
பைந்நாகப் பள்ளியான் பாதமே கைதொழுதும்
கொய்ந்நாகப் பூம்போது கொண்டு. (78)

நெஞ்சே	என் நெஞ்சமே	கொய்நாகம் பூ போது கொண்டு	பறிக்கப்பட்ட புன்னைமரத்தின் அழகான புஷ்பங்களைக் கொண்டு
வேழம் தொடர்	கஜேந்திராழ்வானைத் தொடர்ந்து பிடித்த	கைதொழுதும்	தொழுவோம்
வான்	பெரிய	எழு	எழுந்திரு ([illegible]).
கொடு முதலை	கொடுமைநிறைந்த முதலையை	இடர்	துக்கத்தை
சூழ்ந்த	கொன்றவனும்	ஆர்	எவர்
படம் உடைய	படங்களை உடைய	படுவார்	அநுபவிப்பார், பார்ப்போம், நாம் அநுபவிக்கப் போவதில்லை
பை நாகம்	பரந்த திருவனந்தாழ்வானை		
பள்ளியான்	படுக்கையாகவுடையவனுமான பெருமானுடைய		
பாதம் ஏ	திருவடிகளையே		

இடர்:— நாம் துயரங்களில் அகப்பட்டால் என் செய்வது என்று வருந்திய தன் நெஞ்சைத் தேற்றுகிறார். பொய்கையில் பூக்கொய்வதற்கென்று இறங்கின கஜேந்திரனைப் பிடித்து நலிவித்த முதலையை முடித்தவனும், விஷத்துடன் கூடின பரந்த படங்களையுடைய அனந்தன்மேல் பள்ளி கொண்டவனுமான பெருமானுடைய திருவடிகளில் நல்ல நாகமலர்களைக் கொண்டு பூஜை செய்வோம். எழுந்துவா நெஞ்சே! நம் பக்கல் துன்பங்கள் அணுகா. துன்பங்கள், நம்மிடம் நெருங்கினால் கஜேந்திரனைப் பிடித்த முதலை பட்டபாடு படும். நமக்குத் துன்பங்கள் வாரா. நம்மைப் பிடித்த துன்பங்களுக்குத்தான் துன்பங்கள் வரும். ஆதலால் எழுந்துவா; என்று நெஞ்சை அழைக்கிறார்.

நாகப்பூம்போது:— இவ்வாழ்வார் காட்டிலேயே விசேஷமாக வஸித்துப் போது போக்கினபடியால் காட்டில் அதிகமாகக்கிடைக்கும் புஷ்பங்களுள் ஒன்றாகிய புன்னாக புஷ்பத்தால் பூஜை செய்யலாம் என்றார். உயர்ந்த புஷ்பங்களை தேடிச் செல்லவேண்டாம். அகப்பட்ட புஷ்பங்களைக் கொண்டே ஆராதிக்கலாமென்றபடி.

கொண்டானை யல்லால் கொடுத்தாரை யார் பழிப்பார்
மண்தா வெனவிரந்து மாவலியை - ஒண்தாரை
நீரங்கை தோய நிமிர்ந்திலையே நீள்விசும்பி
லாரங்கை தோய வடுத்து. (79)

மண்தா என	மூன்றடி பூமியைக் கொடு என்று	அடுத்து நிமிர்ந்திலையே	ஓங்கி வளரவில்லையோ
மாவலியை	மஹாபலியை	கொண்டானை	இப்படித்தன் வஸ்துவைப் பெறுவதற்கு மாறுவேடம் பூண்டு தன்னைதாக்கிக் கொண்ட ஸ்வாமியை
இரந்து	யாசித்து		
(அவனும் கொடுத்தேன் என்ன)			
ஒண் தாரை நீர்	அழகான தாரையான ஜலம்		
அம்கை	தன்னுடை அழகான கையில்	அல்லால்	பழிக்கிறார்களே யல்லாது
தோய	விழுந்து தோய்ந்த வளவில்	கொடுத்தாரை	தனக்கு ஸொந்தமில்லாத பொருளைக் கொடுத்த மாவலியை
நீள் விசும்பிலார்	விசாலமான ஆகாசத்தில் வஸிக்கிற தேவர்களுடைய	யார் பழிப்பார்	பழிப்பவர்கள் யார்?
அம் கை	அழகான கைகள்		ஒருவரும் பழிக்கமாட்டார்கள் இது என்ன நியாயம் என்றபடி.
தோய	தோய்ந்து திருவடி விளக்கும்படி		

தன்னை ஆச்ரயித்தவர்களைக் காப்பாற்றுவதற்காக தன் ஸ்வரூபத்தை யழித்துக் கொண்டு அவன் உபகரிப்பதைப் பேசுகிறார்.

கொண்டானை:— இந்த ஜகத்தில் ஜனங்களுக்கு விபரீத புத்தியே நடையாடுகிறது போலும், குணங்கள் தோஷங்களாகவே தென்படுகின்றன. தோஷங்கள் குணங்களாகவே தென்படுகின்றன. இது என்ன ஸம்ஸாரத்தின் கொடுமை! ஸ்ரீய: பதியான

நாராயணனுடைய பொருளான உலகைத் தன்னதென்று அஹங்காரத்தால் அபிமானித்திருந்த மஹாபலியினிடம் தேவர்களுக்காக பகவான் வாமனனாய் வந்து, யாகசாலையில் சென்று, மூவடி மண்ணிரந்தபின், பெரிய வடிவெடுத்து உலகங்களனைத்தையும் அளந்து சராசரங்களைத் தன்னதாக்கிக்கொண்டான், என்கிற வரலாற்றை எல்லாரும் கேட்டிருக்கிறார்கள். கேட்டதும் அப்பகவானையே "மஹாபலியை சிறிய திருவடியால் மூவடி கேட்டுப் பெரிய வடியால் அளந்தான்: தன் ஸ்வரூபத்தை மறைத்துக் கொண்டுவந்தான். ஏமாற்றுகிற ஸ்வபாவமுள்ளவன்; தனக்குத் தானம் கொடுத்தவனை மாவலியைத் தன் தாளால் பாதாளத்தில் அழுத்தினான். ஆகையால் க்ருதக்நன்'' என்று பலவாறாகப் பழிக்கிறார்கள். தானம் கொடுத்த மாவலியை யார் பழிக்கிறார்கள். பெருமானுக்குரியதான புவனங்களையெல்லாம் தன்னுடையதென்று நினைத்தானே: அஹங்காரி. பெருமானுடைய பொருளைத் திருடிக்கொண்டவன், என்றும் யாராவது சொல்கிறார்களா? இது என்ன அநியாயம்! உலகத்தார்களுக்கு தோஷங்களெல்லாம் குணங்களாகத் தோன்றுகின்றனவே. இராவணன் சிசுபாலன் முதலியவர்களைப்போல் மஹாபலியையும் வதைக்கவேண்டியதாயிருக்க அவனிடமுள்ள ஔதார்யம் என்ற குணத்தை மிகவும் மெச்சி, தன்னுடைய பரஸ்வரூபத்தையும் அடியோடு மாற்றி உலகிலுள்ள யாசகர்களைப்போல் வந்து, உலகங்களெல்லாம் மஹாபலியின் நினைவின்படியே அவனுடையதாகவே வைத்து யாசித்து, உலகங்களை ஸ்வாதீனப்படுத்திக் கொண்டு, அவன் தலையிலும் திருவடிகளையும் வைத்தருளினவன் பரமகாருணிகன், பரமோபகாரகன் சரணாகதரக்ஷகன் என்று புகழவேண்டியிருக்கப் பழிக்கிறார்களே! இது என்ன உலகின் இயல்பு என்கிறார்.

ஒண்தாரைநீர்:— பூமிதானம் கொடுப்பதற்காக மஹாபலி வார்த்த சுத்தமான ஜலம்.

அம்கை தோய நிமிர்ந்திலையே:—ஜலம் கையில் விழுந்தவுடனே யே வளர்ந்தான். சிறிதுநேரம்கூடத் தாமதிக்கவில்லை யென்பதாம்.

நீள் விசும்பிலார் அம்கைதோய:— பகவான் வாமனனாய் மண்ணிரந்து கையில் நீரேந்தியதும், மிகவும் விரைவாக வளர்ந்தார். கை

யில் மாவலி வார்த்த ஜலம் திருவடியில் விழுகிற பொழுதுக்குள்ளே மூவுலகையும் வ்யாபித்த வடிவமாய் நின்றான். உடனே விண்ணுலகிலுள்ள தேவர்கள் எல்லாம் மாவலி வார்த்த ஜலத்தினாலேயே திரிவிக்ரமனுடைய திருவடிகளைக் கழுவினார்கள் என்று தோன்றுகிறது.

அல்லது, நீள் விசும்பில் ஆரம் கைதோய:– தன் மார்பிலணிந்திருந்த முத்துமாலையும், தன் கைகளும் ஆகாசத்திலே தொடும்படியாக வளர்ந்தான் என்றும் பொருள் புகல்வதுண்டு.

அல்லது நீள் விசும்பிலார் அம்கைதோய;– விண்ணவர்கள் தன்னுடைய அழகிய திருத்தோள்களில் இடிக்கும் படியாக வளர்ந்தான் என்றும் சொல்லலாம்.

அடுத்த கடும் பகைஞற் காற்றேனென்றோடி
படுத்த பெரும்பாழி சூழ்ந்த—விடத்தரவை
வல்லாளன் கைக்கொடுத்த மாமேனி மாயவனுக்கு
அல்லாது மாவரோ ஆள். (80)

அடுத்த கடு பகைஞற்கு	நெருங்கின கொடுமையான சத்ருவான கருடனுக்கு	சூழ்ந்த	சுற்றிக்கொண்ட
ஆற்றேன்	நேரே நிற்க சக்தியற்றவனல்லேன்	விடத்து அரவை	விடமுள்ள ஸுமுகன் என்கிற ஸர்ப்பத்தை
என்று	என்று சொல்லிக் கொண்டு	வல்லாளன் கை கொடுத்த	பலமுள்ள கருடன் கையிலே அடைக்கலமென்று சொல்லிக்கொடுத்த
ஓடி	வேகமாய் ஓடிப் போய்	மாமேனி மாயவனுக்கு அல்லாதும்	உயர்ந்த திருமேனியையுடைய ஆச்சரிய சேஷ்டிதனான பெருமானைத் தவிர
படுத்த	பெருமான் பள்ளி கொள்ளுமாறு படுத்த		
பெருபாழி	படுக்கையாகிய பெரிய ஆதிசேஷனை	ஆள் ஆவரோ?	மற்ற தேவர்களுங்கு அடிமையாவர்களோ?

எம்பெருமானுடைய சரணாகதரக்ஷண ப்ரகாரத்தைப் பேசுகிறார்.

அடுத்த:– தேவலோகத்தில் தேவேந்திரனுடைய ஸாரதியான மாதலியென்பவன் தன்னுடைய குணகேசி என்கிற பெண்ணுக்கு

விவாஹம் செய்விப்பதற்காகத் தகுந்த மாப்பிள்ளையைத் தேடப் புறப்பட்டு, பல லோகங்களுக்குச் சென்றுக் கடைசியாகப் பாதாள லோகத்தில் போகவதி என்கிற பட்டிணத்தைச் சேர்ந்து, அங்கு ஆர்யகன் என்கிறவனுடைய பேரனும் சிகுரன் என்பவனுடைய குமாரனுமான ஸுமுகன் என்கிற நாக குமாரனைக் கண்டு, அவனுடைய நற்குணங்களிலீடுபட்டு, அவனுக்குத் தன்புதல்வியை மணம் செய்விக்க ஆசைப்பட்டு அவனது பாட்டனை ஆர்யகனிடம் தன்னுடைய எண்ணத்தை வெளியிட்டான். ஆர்யகனும், இவ்விஷயத்தில் எனக்கு ஆக்ஷேபமில்லை. ஆனால் நாககுலத்திற்குப் பகைவனான கருடன் இன்னும் ஒரு மாதத்திற்குள் என்னுடைய புதல்வனையும் பேரனையும் கொன்றுவிடுவதாகச் சபதம் செய்திருக்கிறான். கருடனுடைய சபதம் பொய்யாகாது. ஆதலால் இப்பொழுது விவாஹம் செய்வது தகுதியல்ல: என்று சொல்லவே மாதலி நான் ஸுமுகனை கருடனிடமிருந்து எப்படியாவது காப்பாற்றிக்கொள்கிறேன் என்றுசொல்லி விட்டு, ஸுமுகனையும் அழைத்துக் கொண்டு தேவலோகம் சென்று உபேந்திரபகவானோடு கூடவிருந்த தேவேந்திரனிடம் சென்று இந்த ஸுமுகனுக்கு மரணம் வாராதபடி காத்தருள வேணுமென்று வேண்டினான். உடனே உபேந்திர பகவான், இவனை அம்ருதம் சாப்பிடும்படி செய்தால் கருடனால் துன்பம் நேராதபடி காக்கலாம் என்றார். அது கேட்ட இந்திரன் கருடனுடைய வலிமையை நினைத்து அஞ்சி அவனுக்கு அம்ருதத்தைக் கொடுக்காமல் தீர்க்காயுளாக இரு; என்று வரமளித்தான். அதைக்கேட்டு ஸந்தோஷமடைந்த மாதலி ஸுமுகனுக்குத் தன் புதல்வியை மணம் செய்வித்துக் கவலையற்றிருந்தான். உடனே கருடனும் பாதாளலோகம் சென்று ஸுமுகனைக் காணாமல் மீண்டும் தேவலோகம் வந்து ஸுமுகன் வரம் பெற்ற செய்தியைக் கேட்டு இந்திரனிடம் மிகுந்த சினம் கொண்டு இந்திரனிடம் மிகவும் க்ரூரமான வார்த்தைகளை மொழியவே, ஸுமுகனும் பயந்து, உபேந்திரபகவானிடம் சென்று அவனுக்குப் படுக்கையாகவமர்ந்திருக்கும் ஆதிசேஷனுடைய கட்டிலின் காலைச் சுற்றிக்கொண்டு பெருமானைச் சரணம் புகுந்தான். அதை அறிந்த கருடனும் அவ்வுபேந்திரனிடம் சென்று என் இரையைநான் உண்ணாதபடி நீ எப்படித் தடுக்கலாம். நான் தேவர்களனைவரிலும் மிகுந்த வலிமை வாய்ந்த உன்னை என் சிறகுகளால்

அனுயாஸமாக வஹிக்கவில்லையா? உன்னை வஹிப்பதற்கு என்னைப் போன்ற பலசாலி எந்தலோகத்திலாவது அகப்படுவார்களா? நான் இல்லாவிடில் உன்னை வஹிப்பவர் யார்? எனக்கே விரோதம் செய்கிறுயே! என்று பலவாருகப்பேச, உபேந்திரனும் கருடனே! என்னை வஹிக்க ஒருவருமே உலகில் கிடையாது. நீயும் என்னை வஹ் நான் எல்லாவுலகங்களையும் தரிப்பது போல உன்னையும் தூக்கிக் கொண்டு செல்கிறேன். நீ உன் வலிமையால் என்னை வஹிக்கிறுய் என்று கருதிஞல், இப்பொழுது என்னுடைய கைவிரலைத் தூக்கு பார்ப்போம் என்று சொல்லி, கருடனுடைய தோளில் தன் கையின் சுண்டுவிரலை வைத்தான். கருடனும் அதைத் தூக்கச் சக்தியற்றவனுய் மூர்ச்சை யடைந்து கீழே விழுந்தான். உடனே பகவான் கருடனுக்குச் சில லோகங்களைக் காண்பித்தார். அந்த லோகங்களில் கருடனைப்போலவே பல்லாயிரம் கருடன்கள் தென்பட்டன. உடனே கருடன் வெட்கமடைந்து பகவானிடம் வணக்கத்துடன் அபராதங்களைப் பொறுத்தருள வேண்டுமென்று பிரார்த்திக்கப் பகவானும் கிருபைகூர்ந்து, ஸுமுகனை எடுத்து கருடனிடம் ஒப்புவித்து இவனுக்கு ஒருகேடும் வாராதபடி காப்பாற்றி வா என்று அடைக்கலமாய் வைத்தான். கருடனும் ஸுமுகனை அது முதல் தன் தோளிலே அணைத்துக் கொண்டு காப்பாற்றி வந்தான். பிறகு இருவரும் மிகவும் அன்புவாய்ந்த நண்பர்களாக யிருந்தார்கள் என்ற வரலாறு இப்பாசுரத்தில் அநுஸந்திக்கவும்.

இப்படிப் பரிஹரிக்க முடியாத கருடன் போன்ற விரோதிகளிருப்பிநும் சரணுகதனை அவ்விரோதியைக் கொண்டே ரக்ஷிப்பது என்ற குணம் வாய்ந்த ஸர்வேச்வரனை யல்லது மற்றதேவர்களை யாரேனு அடைவார்களோ? என்கிறார்.

ஸ்ரீ ராமனைச் சரணமடைந்த விபீஷணனை சேர்த்துக் கொள்ளக் கூடாதென்று ஸுக்ரீவன் தடுத்தான். ஸ்ரீராமன் அவனுக்கு ஸமாதானம் சொல்லி அந்த ஸுக்ரீவனையே விபீஷணனைத் தன்னிடம் அழைத்து வரும்படி ஏவினுன், அவனும் அழைத்து வந்து அவனேடு நண்பனுன், அதுபோல் விரோதிகளையும் அநுகூலராக்கி ரக்ஷிப்பன் என்பதையும் கொள்க.

ஆளமர் வென்றி யடுகளத்து ளஞ்ஞான்று
வாளமர் வேண்டி வரைநட்டு—நீளரவைச்
சுற்றிக் கடைந்தான் பெயரன்றே, தொன்னரகைப்
பற்றிக் கடத்தும் படை. (81)

ஆள் அமர் — வீரர்கள் பொருந்தியிருக்கிற
வென்றி — ஜயத்தைக் கொடுக்கிற
அடுகளத்துள் — கொலை நடக்கிற யுத்தஸ்தலத்தில்
அஞ்ஞான்று — அசுரர்கள் தேவர்களை வெல்லகூடிய அக்காலத்தில்
தேவர்களுக்கு ஜயத்தை விரும்பி அதற்காக
வாள் அமர் வேண்டி — மிகுந்த சிறப்பையுடைய யுத்தத்தை ஆசைப்பட்டு
வரைநட்டு — (அதற்காக) மந்தரமென்கிற மலையை மத்தாக நாட்டி
நீள் அரவை — நீண்ட வடிவையுடைய வாஸுகியென்னும் பாம்பை
சுற்றி — கயிறாகச்சுற்றி
கடைந்தான் — க்ஷீரஸமுத்திரத்தைக் கடைந்தவனுடைய
பெயர்அன்றே — திருநாமமல்லவா!
பற்றி — பத்த ஜீவர்களைப் பிடித்துக்கொண்டு போய்
தொல் நரகை — அநாதியாகவிருக்கும் நரகத்தை
கடத்தும் — தாண்டும்படி செய்விக்கும்
படை — ஸாதனமான கருவி.

பிரயோஜனாந்தரங்களை விரும்பும் அதிகாரிகளுக்கும் அருள்புரியும் தன்மை இப்பாட்டில் சொல்லப்படுகிறது.

ஆளமர்:—துர்வாஸ முனிவரின் சாபத்தால் ஐச்வர்யத்தை யிழந்த தேவர்களை அஸுரர்கள் அடித்து ஹிம்ஸைசெய்யவே, தேவர்கள் அஸுரர்களை ஜயிப்பதற்காகவும், தேவர்களுக்கு தீர்க்காயுளைக் கொடுப்பதற்காகவுமாகத் திருப்பாற்கடலில் மந்தரமலையை மத்தாக நாட்டி வாஸுகியென்கிற பாம்பைக் கடைகயிறாக்கட்டித் தன் உடம்பு நோவக் கடைந்து தேவர்களுக்கு அம்ருதத்தையும் மதிப்பையும் ஆயுளையும் கொடுத்த பெருமானுடைய திருநாமத்தைச் சொல்லுங்கோள், அத்திருநாமம் ஸம்ஸாரத்தில் அகப்பட்டிருக்கிற ஜீவன்களை வாரி எடுத்துக்கொண்டுபோய் பிரகிருதி மண்டலத்திற்கு

அப்பால் நித்யவிபூதியிலே கொண்டு சேர்க்கிறது. ஸம்ஸாரத்தைத் தாண்டுவதற்கு ஸாதனம், அம்ருத மதனம் செய்த பெருமானுடைய திருநாமங்கள்; என்றார்.

படையாரும் வாள் கண்ணார் பாரசி நாள், பைம்பூந்
தொடையலோ டேந்திய தூபம்—இடையிடையின்
மீன்மாய மாசூணும் வேங்கடமே, மேலொருநாள்
மான்மாய வெய்தான் வரை. (82)

படை ஆரும்	வேலாயுதத்திற்கு ஸமமான	மாசூணும்	அழுக்கடையும்படி செய்கிற
வாள்கண்ணார்	ஒளிபொருந்திய கண்களையுடைய மாதர்கள்	வேங்கடமே	திருவேங்கடம் தான்
பாரசி நாள்	த்வாதசியன்றைக்கு	மேல்ஒருநாள்	முன்னொருகால் (இராமாவதாரகாலத்தில்
பை பூ தொடையலோடு	அழகான புஷ்பமாலைகளோடு	மான்	மாரீசனென்கிற மான்
ஏந்திய	ஏந்திக்கொண்டுவந்த	மாய	மடியும்படி
தூபம்	தூபமானது	எய் தான்	அம்புதொடுத்த பெருமானுடைய
இடை இடையில் மீன்	வானில் நடுவே தோன்றுகிற நக்ஷத்திரங்கள்	வரை	மலையாகும்
மாய	மறையும்படியாக		

பெண்களுள்படவனைவர்க்கு மாச்ரயிக்கும்படியான அவனுடைய ஸௌலப்ய குணம் பேசப்படுகிறது.

படையாரும்:— வேலாயுதம்போன்ற பிரகாசத்தையுடைய கண்களையுடைய மாதர்கள் துவாதசிதினத்தில் அழகான புஷ்பங்களையும் தூபத்தையும் கொண்டுவந்து வேங்கடநாதனை ஆராதிக்கிறார்கள். அம்மாதர்களேந்திவந்த தூபத்தின்புகை ஆகாசத்தில் பரவி நக்ஷத்திரங்களை மறைத்து ஆகாசத்தை அழுக்கடைந்ததாகச் செய்கிறது. திருமலையின் மேல் பூவும் புகையுமாய் காணப்படுகிறதேயல்லது ஆகாயமும் நக்ஷத்திரங்களும் தென்படவில்லை. அப்படிப்

பெண்களுக்கும் ஆச்சர்யிக்கும்படிக் கிடாக, முன் இராமாவதாரத்தில் பிராட்டிக்காக மாரீசனாகிற மாயமானை மடியும்படி செய்தவெம்பெருமான் திருமலையில் நித்ய வாஸம் செய்கிறான். [illegible] தனக்கு வரும் கேட்டையும் மதியாமல் ஆச்ரிதர்களுக்குக் காரியம் செய்பவனென்றும் ஸர்வ ஸுலபனென்றும் இப்பாட்டில் பேசப்பட்டது.

பல்லாயிரக்கணக்கான மனிதர்கள் திருவேங்கடத்தை சேவித்து நிற்க, இங்கு பெண்களை மாத்திரம் சொன்னது, அறிவில்லாதவர்கள் கூட திருமலைநாதனை சேவிக்கிறார்கள் என்று அவனுடைய ஸர்வ ஸுலபத்வத்தைக் காட்டுவதற்காக.

த்வாதசி என்னும் வடசொல் தமிழில் பாரணை என்று திரிந்ததெனச் சிலர் சொல்லுவார்கள்.

பாரணைநாள்—பாரகிநாள் என்று சிதைந்ததெனச் சிலர் கூறுவர்.

வரைகுடைதோள் காம்பாக ஆநிரை காத்து, ஆயர்
நிரைவிடையேழ் செற்றவாறென்னே—உரவுடைய
நீராழியுள் கிடந்து நேரா நிசாசரர்மேல்
பேராழி கொண்ட பிரான். (83)

உரவு உடைய	பலமுள்ளதான	குடை	குடையாகவும்
நீர் ஆழியுள்	நீர்நிறைந்த கடலில்	தோள்	தன் தோளை
கிடந்து	பள்ளிகொண்டு	காம்பாக	குடைக்காம்பாகவும் (செய்து)
நேரா	சத்ருவாய் வந்த	ஆநிரை காத்து	பசுக்களின் திரளைக் காப்பாற்றி
நிசாசரர்மேல்	மதுகைடபர்கள் என்னும் அசுரர்களின்மேல்	ஆயர்	இடையர் [illegible]
பேர் ஆழி கொண்ட	(அவர்களை அழிப்பதற்கு) பெரிய சக்ராயுதத்தை கையில் தரித்த	நிரைவிடை ஏழ்	திரண்ட [illegible] எருதுகளை
பிரான்	உபகாரகனே!	செற்ற ஆறு	அழித்தவிதம்
வரை	கோவர்த்தனகிரியை	என்னே	எங்ஙனம் தான்.

ஆச்ரிதர்களுக்காகத் தன்னையும் மறந்து காரியம் செய்யும் ஸ்வபாவம் இப்பாட்டில் எழுதப்படுகிறது.

வரைகுறை:— எம்பெருமான் ஸாதுக்களை ரக்ஷிப்பதற்காகவே அவதாரம் செய்கிறான். ஸாதுக்களுக்கு இடையூறுகள் செய்வதால் துஷ்டர்களை ஹிம்ஸிக்க வேண்டியதாய் வருகிறது. ஒரு ஸாதுவுக்கு ஒருவன் விருந்து அளிக்கிறான். அவன் உட்கார்ந்து உண்ணும்போது இலையை ஒரு நாய்வந்து இழுக்கிறது. அந்த நாயை அடிக்க வேண்டியதாய் நேர்ந்துவிடுகிறது. அதுபோல் ஸாதுக்களைக் காப்பாற்ற வேண்டித் துஷ்டர்களை அடக்கவேண்டியதாய் இருக்கிறது. அதற்காகத் திருவாழியாழ்வானை எப்பொழுதும் கையில் ஏந்திக்கொண்டிருக்கிறாய். நீ திருப்பாற்கடலில் கிடந்து, ப்ரஹ்மதேவனை அடித்து வேதங்களையபஹரித்துச் சென்ற மதுகைடபர்களை வதைக்கக் கருதி, படுத்திருந்தபடியே யிருந்து திருவாழியாழ்வானை அனுப்பி அவர்களை முடிக்கவில்லையா? அதுபோல் நீ ஆச்ரிதவிரோதிகளை அழிக்க நினைத்தால் உன்னுடைய திவ்யாயுதங்களை அனுப்பியோ; அல்லது உன்னுடைய ஸங்கல்பத்தினாலோ காரியத்தை ஸாதித்துக் கொள்ளலாமே! கோவர்த்தன மலைக்குச்செய்த பூஜையைப் பொறுக்காத தேவேந்திரன் திருவாய்ப்பாடியாரிடத்தில் கோபங்கொண்டு பெருமழையை ஏவி இடையர்கள், பசுக்கள், கன்றுகள், எல்லாருக்கும் துன்பத்தை விளைவிக்கவே, நீ உனது திருவாழியை அனுப்பி தேவேந்திரனைத் தடுக்கலாமே; நப்பின்னையின் விவாஹத்திற்கு இடையூறாக விருந்த ரிஷபங்களையும் திருவாழியால் கொல்லலாமே. எதற்காக மலையைத் தூக்கினாய், எதற்காக நேரே சென்று ரிஷபங்களோடு சண்டை செய்தாய்? தன் உடம்பைக் கஷ்டப்படுத்திக் கொண்டு ஏன் இங்ஙனம் வேலை செய்கிறாய். சக்தியில்லாதவனன்றோ அங்ஙனம் உடம்பைக் கஷ்டப்படுத்திக் கொள்ளவேணுமென்று பெருமானைக் கேட்கிறார்.

இந்தக் கேள்வியால், எம்பெருமான் ஆச்ரிதர்களுக்காகக் காரியம் செய்கிற பொழுது தன்னையும் மறந்து தன் சக்தியையும் மறந்து திவ்யாயுதங்களையும் மறந்து தானே நேரில் செய்யவேண்டுமென்று தோன்றுகிறது. தானே காரியம் செய்தால் த்ருப்தியா

யிருக்கிறது. வேறொருவனை அனுப்பினால் மனம் ஸமாதானத்தை அடைகிறதில்லை. இப்படித் தன்உடம்பைக் கஷ்டப்படுத்திக்கொண்டாவது காரியம் செய்யவேணுமென்னும்படியான கரைபுரண்ட ஸ்நேஹம் அடியார்களிடம் உளது என்று நாம் அறியவேண்டும்.

பிரானுன் பெருமை பிறரார றிவார்
உரா யுலகளந்த நான்று—வராகத்
தெயிற்றளவு போதாவாறென்கொலோ, எந்தை
அடிக்களவு போந்தபடி (84)

பிரான்!	உபகாரகனே!	வராகத்து	வராஹரூபியான உன்னுடைய
உராய்	சிரமமில்லாமலே	எயிறு	கோரப்பல்லின்
உலகு	லோகங்களை	அளவு	ஏகதேசமாகிற வளவிற்கும்
அளந்த நான்று	அளந்த ஸமயத்தில்	போதா	போதாமலிருக்க
எந்தை	என் ஸ்வாமியான உனது	ஆறு	பிரகாரம்
அடிக்கு	திருப்பாதங்களுக்கு	என்கொலோ	எங்ஙனமோ!
அளவு போந்த	அளப்பதற்குச் சரியாயிருந்த	உன்பெருமை	உனதுமேன்மையை
படி	பூமியானது	பிறர் ஆர் அறிவார்	வேறு யார்தான் அறிவார்கள்? (அறிவார் யாருமில்லை).

ஆச்ரிதர்களுக்காகத் தன்னையுமறியாது பாடுபடுகிற ஸர்வேச்வரனுடைய பெருமை ஆராலும் அறியமுடியாது என்கிறார்.

பிரான்:— ஒரு நாள் நீ வாமனனாய் வந்து மண்ணிரந்து மிகப் பெரியவடிவத்துடன் உலகங்களை அளக்கும் பொழுது உன்னுடைய திருவடிக்குள் அடங்கின இப்பூமியானது, மற்றொருகால் நீ வராஹ ரூபத்துடன் பாதாளலோகம் சென்று ஹிரண்யாக்ஷனைக் கொன்று திரும்பி வரும்பொழுது உன்னுடைய கோரப்பற்களின் அளவுடன் கூடக் காணப்படவில்லையே! மிகவும் சிறியதாய் இருந்ததே! ஆதலால் உனது பெருமையை ஆர் அறிவார்? உன்னையும் அறியமுடி

யாதென்றே தோன்றுகிறது; என்று அவ்வீச்வரனிடம் விண்ணப்பம் செய்தார். இப்பாசுரத்தால் வாராஹமூர்த்தியைக் காட்டிலும் திரிவிக்ரமன் சிறிய வடிவுள்ளவன் என்று கண்டு வாராஹ பகவானுடைய பெருமையை உணரத்தகும்.

உராய் = "உலாவிக்கொண்டு" எனப் பொருள். சிறிதும் சிரமமின்றி உலகளந்தான் எனக்கொள்க. அல்லது உராய் = உரோசிக்கொண்டு. திருவடியைப் பூமியில் பொருந்தவைத்துக் கொண்டு அல்லது எல்லாப் பொருள்களையும் மேலே உறையும்படி எல்லாவற்றையும் தீண்டிக்கொண்டு உலகளந்தான்; என்பர்.

படி கண்டறிதியே பாம்பணையினான், புட்
கொடி கொண் டறிதியே கூறாய்—வடிவில்
பொறியைந்து முள்ளடக்கிப் போதொடு நீரேந்தி
நெறி நின்ற நெஞ்சமே நீ. (85)

நெஞ்சமே	எனது மனமே!	பாம்பணையினான்	அரவத்தைப் படுக்கையாகவுடையவனுடைய
பொறி ஐந்தும்	ஐந்துபுலன்களையும்	புள்கொடி	பக்ஷியாகிற த்வஜத்
வடிவில் உள் அடக்கி	(பட்டிமேயாமல்) சரீரத்திற்குள்ளே அடங்கச்செய்து	கண்டு	பார்த்து
போதொடு	புஷ்பங்களோடு	அறிதியே	அநுபவித்திருக்கிறாயோ?
நீர் ஏந்தி	தீர்த்தத்தையும் தரித்துக்கொண்டு	படி	(அல்லது) அவனது திருவுடம்பை ஸேவித்து
நெறி நின்ற	அவனை அடையும் வழியில் நின்றுகொண்டிருக்கிற	அறிதியே	அறிந்திருக்கிறாயோ?
நீ	நீ	கூறாய்	சொல்லு.

படிகண்டறிதியே:— கீழே பெருமானைப் பார்த்து உன் பெருமையை ஆர் அறிவார்; என்று கேட்கவே தனது நெஞ்சம் நான் அறிந்தேன் என்று சொல்லிற்று. உடனே ஆழ்வார் தன் நெஞ்சைக் கேட்கிறார். நெஞ்சமே! நீ பகவானை அறிந்தேனென்று எப்

படிச் சொல்லுகிறாய்? நீ மற்ற இந்திரியங்களை வெளியில் போக வொட்டாமல் அடக்கி புஷ்பங்களையும் தீர்த்தத்தையும் எடுத்துக் கொண்டு அவனைத் தொழும்படியான ஆச்ரயணத்தில் [illegible] கிறாய் என்பது எனக்குத் தெரியும். இதைத் தவிர நீ அவனை [illegible] பொழுது ஸாக்ஷாத்கரித்தாய் சொல்லு. நீ ஸாக்ஷாத்கரித்திருந்த பக்ஷத்தில் அவன் திருவனந்தாழ்வான்மேல் பள்ளிகொண்ட [illegible] சொல்லு பார்ப்போம்; அல்லது அவன் பெரிய திருவடிமேல் [illegible] எழுந்தருளும் பிரகாரத்தைச் சொல்லு பார்ப்போம்; [illegible] அறிந்தேன் என்று சொல்லுகிறாயே! நீ அவனை எத்தப்பிரகாரமா[illegible] பார்த்தாய் என்று கேட்கிறார்.

இத்தால் இவ்வாழ்வாருக்குப் பெரிய திருவடிமேல் எழுந்தருளும் பெருமானை ஸேவிப்பதிலும் திருவனந்தாழ்வான் மேல் [illegible] யருளும் பெருமானை ஸேவிப்பதிலும் மிகுந்த ஆசையென்று [illegible]த்துக் கொள்க.

நீயும் திருமகளும் நின்றாயால், குன்றெடுத்துப்
பாயும் பனி மறைத்த பண்பாளா—வாசல்
கடைகழியா வுள்புகாக் காமர்பூங் கோவல்
இடைகழியே பற்றி யினி. ([illegible])

குன்று	கோவர்த்தன பர்வதத்தை	கழியா	[illegible]
எடுத்து	உயர தூக்கி	உள்புகா	[illegible]
பாயும் பனி	மேலே விழுகிற மழையை	இடைகழியே	[illegible]
மறைத்த	தடுத்த	பற்றி	[illegible]
பண்பாளா!	குணமுடையவனே!	நீயும் திருமகளும்	[illegible]
காமர் பூ கோவல்	ஆசைப்படும்படி அழகுவாய்ந்த திருக்கோவலூரில்	இனி	இப்பொழுது
வாசல் கடை	வீட்டுத் திருவாசலுக்கு வெளியில்	நின்றாய்	நின்றருளினாய்
		ஆல்	ஆச்சரியம்

ஆழ்வார் தனது நெஞ்சைக் குறித்து நீ அவ்வீச்வானை ஸாக்ஷாத் கரித்ததில்லை என்கிறார் கீழ்ப்பாட்டில். அவ்வார்த்தைகளைக் கேட்டுப் பொறுக்கமாட்டாத ஸர்வேச்வரன் முன்போல் ம்ருகண்டு முனிவரின் திருமாளிகையின் இடைகழியில் (ரேழியில்) பிராட்டியுடன் எழுந்தருளி ஸேவை ஸாதித்தார். அப்பொழுது அவனை அநுபவித்த ப்ரகாரம் இப்பாட்டில் பேசப்படுகிறது.

நீயும்:— மலையைத் தூக்கி மாரிகாத்த பரமோபகாரகனே! நானும், பூதத்தாரும், பேயாரும் காடுகளில் தனித்தனியே திரிந்து கொண்டிருக்க, எங்களை இம்முனிவரது இல்லத்தில் ஒன்று சேர்த்து உன் திருமேனியையும் கண்டு ஸேவித்துக் களிக்கும்படி செய்தாயே; இது என்ன நீர்மை! இது என்ன ஆச்சரியம் என்று கொண்டாடுகிறார்.

நீயும் திருமகளும்:— அடியார்களிடம் பேரன்புகொண்ட நீயும் ந கச்சிந் நாபராத்யதி என்று அடியார்களுக்குப் புருஷகாரபூதையான பிராட்டியும் எழுந்தருளினபடியை என் சொல்லவல்லேன் என்வாய்கொண்டு என்கிறார்.

குன்றெடுத்து:— அவ்வாழ்வார்களின் நடுவே பெருமான் நெருக்கி நிற்கிறது, மலையை எடுத்து மழைகாக்கும் காலத்தில் இடையர்களுடைய கூட்டத்தின் நடுவே நின்றது போலிருக்கிறது என்கிறார். இத்தால் தாழ்ந்தவர்களுடன் நெருங்கி வஸிப்பதாகிற ஸௌசீல்யம் என்கிற குணத்தைப் புகழ்ந்தாராயிற்று.

வாசல் கடைகழியா:— ஸ்ரீய: பதியான புருஷோத்தமன் முதலாழ்வார்கள் நின்றுகொண்டிருந்த மிருகண்டு முனிவரது வீட்டின் இடைகழியிலேயே (ரேழியிலேயே) நின்றார். வீட்டிற்குள்ளும் நுழையவில்லை. வீட்டின் வெளிப்புறத்திலும் எழுந்தருளவில்லை என்கிறார். இத்தால் ஆழ்வார்கள் போன்ற அநந்யப்ரயோஜநராயும் அநந்யசரணர்களாயுமிருக்கிற பாகவதர்களிருக்குமிடத்தையே அவன் விரும்பி வருகிறான் என்பது தோன்றும். வீட்டிற்குள்ளே தவத்தால் பரகதியை ஸம்பாதித்துக் கொள்ளலாமென்ற நினைவுகொண்ட முனிவர்கள் வஸிப்பதால் அங்கே போகவில்லை. வீட்டிற்கு வெளியே தன்னையே நினையாத ஸம்ஸாரிகள் நிறைந்தி

ருப்பதால் நெருப்புப்பிடித்து எரிகிறவிடம்போன்ற வெளிப்புறத்திலும் செல்லவில்லை. ரேழியிலேயே நின்றுகொண்டிருந்தார். காமபுருஷார்த்தத்திலீடுபட்டவர்கள் தாங்கள் காதல்கொண்ட பெண்மணிகள் கண்களில் படவே, அவ்விடத்தைவிட்டு அப்பால் செல்லமாட்டாமல் திகைத்துநிற்பதுபோல், எம்பெருமான் தன்னடியார்களாகிய அன்பர்களிருந்த ரேழியைவிட்டு விலகவில்லை என்றபடி. வடமொழியில் தேஹளீ என்று ரேழியைச் சொல்லுவார்கள். ஆதலால் இத்திருக்கோவலூரெம்பெருமானுக்கு தேஹளீசன் என்றே திருநாமம் வாய்ந்தது.

காமர் பூ கோவல்:— முதலாழ்வார்களைக் கிட்டி வந்து ஆட்கொண்ட பெருமான் நித்யவாஸம் செய்வதால், திருக்கோவலூரில் பக்திமான்களனைவரும் ஆசைவைத்திருப்பார்கள். பாகவதர்கள் ஆசைப்படும்படியான திவ்யதேசம் என்றபடி.

ஆல்:— இது என்ன ஆச்சரியம் என்கிறார். இவ்வநுபவத்தை நம் தேசிகனும் தேஹளீச ஸ்தோத்ரத்தில் [சித்ரம் [illegible] மிதானி பதேஷு தத்தே விச்வாந்யமூநி புவநானி விசங்கடேஷு। பக்தைஸ்ஸஹ க்வசிதஸௌ பவநைகதேசே மாதிஸ்ம [illegible] ததிஹாத்புதம் நி:] என்று அநுஸந்தித்திருப்பது கொள்க.

இங்கு இரண்டாமடியில் "பனிமறைத்த" என்ற விடத்தில் பனிமறுத்த என்றும் பாடமுண்டு. [illegible] பாட்டில் தனது நெஞ்சைக் குறித்து நீ அவனைக் கண்டாயோ என்று ஆழ்வார் சொல்லவே, நெஞ்சம், தேவரீர் [illegible] யிலே நிற்கும் கால் பெருமான் நெருக்குற்ற [illegible] தேன் என்று பதில்சொல்ல, அவ்வநுபவம் [illegible] அதை இப்பாசுரத்தில் தெரிவிக்கிறார் என்றும் [illegible] தாரிகை மொழியலாம். முதலில் இவ்வாழ்வார்கள் [illegible] ரத்தில் எம்பெருமான் இடைகழியில் முதலாழ்வார்களை நெருக்கிய பின் இவ்வாழ்வார்களும் அவனை நெஞ்சென்னும் [illegible] கண்டார்களென்று எழுதியதற்கு இப்பாசுரம் பிரமாணமாகும்.

இனியார் புகுவா ரெழுநரக வாசல்
முனியாது மூரித்தாள் கோமின்—கனிசாயக்
கன்றெறிந்த தோளான் கனைகழலே காண்பதற்கு
நன்கறிந்த நாவலஞ்சூழ் நாடு. (87)

கனிசாய	விளாம்பழம் கீழே விழும்படி	நன்கு அறிந்த	நன்றாய் அறிந்துள்ளார்கள்
கன்று	வத்ஸாஸுரனை		ஆதலால்
எறிந்த	வீசியெறிந்த	இனி	இதற்குமேல்
தோளான்	தோள்களையுடைய க்ருஷ்ணனுடைய	எழு நரகவாசல்	ஏழுவிதமான நரகங்களுடைய வாசல்களில்
கனை கழல்	சலங்கையின் த்வனியையுடைய திருவடிகளை	ஆர் புகுவார்	யார் நுழையப்போகிறார்கள்
காண்பதற்கு	ஸேவிப்பதற்கு உபாயத்தை		ஓ யமதர்மராஜனின் கிங்கரர்களே!
		முனியாது	கோபம்கொள்ளாமல்
அம் நாவல் சூழ் நாடு	அழகான ஜம்பூத்வீபம் என்கிற பரந்த நாடு (நாட்டிலுள்ளார்கள்)	மூரி தாள் கோமின்	திறக்கமுடியாதபடி தாழ்ப்பாளைப்போட்டுப் பூட்டிக்கொள்ளுங்கோள்.

இனியார் புகுவார்:— கீழ்ப்பாசுரத்தில் ஆழ்வார், இடைகழியில் பிராட்டியுடன் எழுந்தருளின பெருமானைக் கண்டு மகிழ்ந்ததைப் பேசினார். தான் அப்பெருமானுடன் நெருங்கி நின்றுகொண்டிருப்பதாகவே நினைத்தார். பிறகு இவ்வுலகத்தாரனைவரும் நம்மைப் போலவே பெருமானை அநுபவித்து வாழலாமே, என்று நினைத்தார். அதற்குத் திருக்கோவலூர் போன்ற திவ்ய தேசங்களில் வாஸம் செய்வதே காரணமென்றும் நினைத்தார். இந்த ஜம்பூத்வீபத்திலேயே எம்பெருமான் உகந்து நித்யவாஸம் செய்கிற திவ்யதேசங்கள் பலவும் இருக்கின்றன வாதலால், இந்த ஜம்பூத்வீபத்திலுள்ளாரனைவரும் பெருமானிடம் அடிமைப் பட்டு விட்டார்களென்றே பாவனாப்ரகர்ஷத்தால் கருதினார். உடனே தன்னைப்போல் நாட்டாரனைவரும் உய்ந்துவிட்டதாக நினைத்து யமதர்மராஜனுடைய கிங்கரர்களைக் கூப்பிட்டு நீங்கள் நரகவாசல்களின் கதவுகளை நன்றாக

மூடிவிட்டு ஒருவரும் திறக்கமுடியாதபடி நல்ல பூட்டுகளால் பூட்டி விடுங்கோள்; இனி உங்களுடைய ஆட்சியிலகப்பட்ட நரகங்களி னுழையப்போகிற பாவிகள் ஒருவரும் கிடையாது. எல்லாரும் எம் பெருமானிடம் அடிபணிந்து விண்ணுலகிற்கு அதிகாரிகளானார்கள் நீங்கள் நம் உலகத்திற்குப் பாவிகள் வரப்போகிருர்கள்: வேண்டி யபடி வதைக்கலாமென்று எண்ணியிருக்க வேண்டாம். கதவுகளை மூடுங்கோள்; நான் இப்படிச்சொல்கிறேனே என்று நினைத்து என் னிடம் கோபம் கொள்ளவேண்டாம்; உள்ளதைச் சொல்பவர்களி டம் கோபித்து யாது பயன் என்று மொழிந்தார்.

எழுநரகவாசல்:— ஸம்ஸாரிகளடங்கலும் புகுந்து வஸிக்கும் படியான கிளர்த்தியையுடைய நரகமென்பதாம். அல்லது ஏழு என்பதன் குறுக்கல் விகாரம் எழு என்பது. ஏழு எண்ணிக்கையு ள்ள நரகங்கள் என்றபடி. நரகங்கள் பல்லாயிரம் இருப்பினும் மிக வும் கொடியனவாயும், ப்ரதானங்களாயுமுள்ள ஏழு நரகங்களைச் சொன்னபடி. அவைகளாவன:— ரௌரவம், மஹாரௌரவம், அதி சீதம், நிக்ருந்தனம், அப்ரதிஷ்டம், அஸிபத்ரம், தப்தகும்பம், என் பன. மற்றும் வடமொழி நூல்களில் வேறு பெயர்களுள்ள நரகங் கள் ஏழு என்று சொல்லப்படுகின்றன. தென்மொழி நூல்களி லும் தமத்தம்ப ப்ரபை, இரத்னப்ரபை, சருக்கராப்ரபை, வாலுகா ப்ரபை, பங்கப்ரபை, சாமப்ரபை, தம்பப்ரபை என ஏழுவகையா கும். சில நூல்களில் வேறுவிதமாகவும் வரையப் பட்டிருக்கின் றன. ஆங்காங்கு கண்டு தெளிமின்.

கனிசாயக் கன்றெறிந்த:— விளாம்பழங்களை உதிர்ப்பதற்காக கன்றுக்குட்டியை உயரே எறிந்த கிருஷ்ணனுடைய திருவடிகளை யடைவதற்கு, திருக்கோவலூர் போன்ற திவ்யதேசங்களில் வஸிப் பதுதான் உபாயமென்று, இந்த ஜம்பூத்வீபத்திலுள்ளவர்களெல் லாரும் தெரிந்து கொண்டுவிட்டார்கள் என்றபடி.

மூரித்தாள்—வலிமையுள்ள தாழ்ப்பாள், சேமின் — மூடுங் கோள்.

கனிசாயக் கன்றெறிந்த கதைச்சுருக்கம்

கண்ணனைக் கொல்வதற்கென்று கம்ஸனால் ஏவப்பட்ட அஸுரர்க ளில் ஒருவன், ஒரு விளாமரத்தின் உருவமெடுத்துக்கொண்டு விளாம்

பழங்களைப் பறிப்பதற்குத் தன்கீழ் கண்ணன் வரும்பொழுது மேல் விழுந்து கொல்லலாமென்று நினைத்தான். அதுசமயம் மற்றொரு அஸுரன், ஒருகன்றுக்குட்டியின் வடிவமெடுத்து கண்ணனைஉதைத்துக் கொன்றுவிடலாமென்று எண்ணிவந்தான். அப்பொழுது கண்ணன் அவ்விஷயங்களை அறிந்து, விளாம்பழங்களை உதிர்ப்பதற்கு அந்தக் கன்றுக்குட்டியை விட்டெறிந்தான். உடனே இருவரும் மோதிக்கொண்டு மாண்டு அஸுரவடிவத்துடன் கீழே விழுந்தார்கள்.

கனைகழல்:— வத்ஸாஸுரனை விளாமரத்தின் மீது எறியும்பொழுது கண்ணனுடைய திருவடிகளில் அணிந்துகொண்டிருந்த சலங்கைகள் சப்தித்ததை அனுபவித்தார்.

நாடிலும் நின்னடியே நாடுவன், நாடோறும்
பாடிலும் நின்புகழே பாடுவன்—சூடிலும்
பொன்னாழி யேந்தினான் பொன்னடியே சூடுவேற்கு
என்னாகி லென்னே யெனக்கு. (88)

நாடிலும்	ஆசைப்பட்டுத் தேடினாலும்	பொன் ஆழி ஏந்தினான்	அழகிய சக்ரமேந்திய தேவனுடைய
நின் அடியே	உன் திருவடிகளையே	பொன் அடியே	அழகான திருப்பாதங்களையே
நாடுவன்	ஆசையுடன் தேடுவேன்	சூடுவேற்கு	தலைக்கணியாகக் கொள்கிற
நாள்தோறும்	தினந்தோறும்	எனக்கு	எனக்கு
பாடிலும்	பாடும்போதும்	என் ஆகில் என்	எது எப்படியானால் தான் என்ன? (எனக்கொரு விசாரமில்லை.
நின் புகழே	உன் குணங்களையே		
பாடுவன்	பாடுவேன்		
சூடிலும்	தலையை அலங்கரிக்க வேணுமென்று நினைத்தாலும்		

நாடிலும்:— கீழ்ப்பாட்டில் நாட்டாரனைவரும் நாரணனுக்காட்பட்டதாக பாவநாப்ரகர்ஷத்தால் நினைத்து இனி யார் நரகவாசலில் நுழையப்போகிறார்கள் என்றார். பிறகு ஆழ்வார் கண்களைத் திறந்து பார்க்கவே பிரபஞ்சத்தில் ஒருவராவது பகவத் ப்ரவணராக்

யிருக்கக் காணவில்லை. எல்லாரும் குடும்ப வாழ்க்கையிலேயே ஈடு பட்டு பகவானைச் சிந்தியாத பாவியாயிருந்தார்கள். அதைக்கண்ட ஆழ்வார் இந்த ஸம்ஸாரிகள் எக்கேடு கெட்டுப் போனால் நமக்கென்ன, என்று நினைத்துத் தன்னுடைய தன்மையைப் பேசுகிறார் நான் ஆசைப்பட்டாலும் அவ்வெம்பெருமான் திருவடியைத் தான் ஆசைப்படுவேன். நாள்தோறும் பாடினாலும் அவன் குணங்களையே பாடுவேன். தலைக்கு அலங்கரிக்க வேணுமென்று நினைத்தாலும் அவன் திருவடிகளையே தலையில் சூடுவேன். இப்படி மனம் வாக்கு காயம் என்கிற மூன்று காரணங்களாலும் பகவானையே பாவிக்கிற வெனக்கு எது எப்படிப்போனால்தான் என்ன? எனக்கென்ன கவலை. இந்த ஸம்ஸாரிகள் அவனை நினைத்தாலும் நினைக்கட்டும். இல்லாவிடில் விஷயப்ரவணராயிருக்கட்டும்; என் ஆத்மாவைப் பற்றி எனக்குக் கவலையில்லை. காணத்ரயத்தாலும் அவனுடைய சேஷ வ்ருத்தியைச் செய்கிறேனென்கிறார்.

என்னுகிலேன்:— பரமபதத்தில் முக்தர்களும் நித்யர்களும், மனத்தில் அவனை வைத்து, அவன் குணங்களை வாயால் பாடி [illegible] சரீரத்தால் பணிவிடை செய்துகொண்டு போது போக்குகிறார்களையன்றி வேறில்லை. அந்த நித்ய முக்தர்களுடைய [illegible] நான் இங்கேயே கிடைக்கப் பெற்றேன். ஆனது பற்றி [illegible] என்னை இந்நிலத்திலேயே வைத்தாலும் [illegible] பரமபதத்தில் வைத்தாலும் எனக்கு ஒரு விசாரமில்லை. [illegible] எது எப்படிப் போனால்தான் எனக்கென்ன [illegible] இருக்கிறது. [illegible] இங்கு இங்கே [illegible] நம்மாழ்வார் பாசுரமும் சற்று நோக்கத்தக்கது.

"சூடுவேற்கு" என்பது எனக்கு [illegible]

[illegible] நாமொருவரே எம்பெருமான்
தனக்காவான் தானே மற்றல்லால் — [illegible]
பூமேனி காணப் பொதியவிழும் பூவைப்பூ
வண்ணமேனி காட்டும் வரம். (84)

எனக்கு	பகவத் கடாக்ஷம் பெற்றவெனக்கு	புனம்	தன் நிலத்திலிருக்கிற
ஆவார்	நிகராயிருப்பவர்	காயாம்பூ மேனி	காயாம் பூவின் நிறமும்
ஆர் ஒருவரே	யார் ஒருவர் இருக்கிறார்	காண	பார்க்கப்பார்க்க
எம் பெருமான்	என் ஸ்வாமியான வீச்வரனும்	போதி அவிழும்	கட்டுகழுவி மலரும்
தானே தனக்கு ஆவான் அல்லால்	ஸ்வயமாகவே தனக்கு நிகராவன் அல்லாமல்	பூவைப்பூ	பூவைப்புஷ்பத்தின் நிறமும்
மற்று	எனக்கு ஸமமாக முடியுமோ (ஏனென்றால்)	வரம்	உயர்ந்ததான
		மாமேனி	அவ்வீச்வரனுடைய திருமேனியை
		காட்டும்	எனக்குக்காட்டுகிறது.

கரணத்ரயத்தாலும் எம்பெருமானை யேத்துகிற எனக்கு ஒப்பாக ஒருவரும் உலகில் கிடையாதென்கிறார்.

எனக்கு:— நான் கருவிலே திருவுடையனாய்க் கொண்டு அவனையே நினைந்து நிற்கிறேன். நான் எங்கேயாவது காயாம்பூ, பூவைப்பூ முதலிய புஷ்பங்களைக் கண்டால், அவைகளை நான் வணங்கி வழிபடுகிற தெய்வத்தின் திருவுருவம் என்று கருதி, பெரு மகிழ்ச்சியடைகிறேன். மற்றவர்கள் அவைகளைப் பார்த்தால் ஏதோ காட்டுப் பூக்கள் என்று சொல்லிப் போவார்கள். இம்மாதிரி அவனுடைய திருமேனி, அல்லது திவ்யாவயவங்கள், இவைகளோடு சிறிது ஒப்புள்ள வஸ்துக்களைக் கண்டால், அப்பெருமானுடைய நினைவு எனக்கு வருகிறது. இப்படியிருக்கு மெனக்கு யார் ஒருவர் நிகராவர்; ஒருவருமில்லை என்றார். ஆனால் அப்பெருமான் உமக்கு நிகரானாகமாட்டானோ? என்று வினவினால், அவனுக்கு அவன் நிகராவனே யல்லது, எனக்கு நிகராகச் சொல்லமுடியுமோ என்றார். நான் எப்பொழுதும் அவனை அநுபவிப்பதுபோல் அவ்வீச்வரன் தன்னை எப்பொழுதும் அநுபவிக்கவில்லையாதலால், அவனும் எனக்கு நிகரில்லையென்றபடி. அல்லது அவன் பரமாத்மாவாதலால் அவன் அவனுக்குத்தான் ஒப்பாவன். ஜீவாத்மாக்களுள் எனக்கு ஒப்பாவர் யாருமில்லை யென்பதாம். ஸர்வேச்வரனுடைய அடிமையில் ஆழங்கால் பட்டும், அவனை ஆச்ரயித்த ஆசார்யர்களுடைய அடிமையில் ஆழ்

ந்து கிடக்கும், அதன் மூலமாக அஹங்காரப்படுவது மேன்மையை விளைவிக்குமே யல்லது ஆத்மஹாநியை விளைவிக்காது. ஆகவா இங்கு ஆழ்வார் அஹங்காரப்படுவது ந்யாயமே. ஆனது பற்றியே "எனக்கெவ்வுலகம் நிகரே" எனக்காரும் நிகரில்லையே" என்று ம றவர்களும், "நமக்கார் நிகர் நானிலத்தே" என்று தேசிகனும் அ ளிச் செய்தார்கள்.

வரத்தால் வலி நினைந்து மாதவ நின் பாதம்
சிரத்தால் வணங்கானு மென்றே—உரத்தினால்
ஈரரியாய் நேர்வலியோனாய விரணியனை
ஓரரியாய் நீ யிடந்த தூன். (90

மாதவ	ச்ரிய: பதியே!	வரத்தால்	தேவர்கொடுத்த வரங்களால் உண்டான
ஈர் அரி ஆய்	இருகூறுய்ப்பிளக்கவேண்டிய பகைவனுகி	வலி	பலத்தை
நேர் வலியோன் ஆய	எதிர்த்து நிற்கவல்ல பலம் வாய்ந்த	நினைந்து	பெரிதாக எண்ணி
இரணியனை	இரண்யனுடைய	நின் பாதம்	உன் திருவடியை
ஊன்	உடலை	சிரத்தால்	தலையினால்
ஓர் அரி ஆய்	விலக்ஷண சிங்கவடிவனுகி	வணங்கானும் என்றே-	வணங்க [illegible] [illegible] [illegible] [illegible]
உரத்தினால்	பலத்தினால்		
நீ இடந்தது	நீ கிழித்தது		

வரத்தால்:— ஸர்வஸ்வாமியான ஸர்வேச்வரன் [illegible] தவர்களுக்காகப் பாடுபடுகிறவனென்று தெரியப்படும். [illegible] காக இப்புவியில் அவதாரம் செய்து தன் பக்தர்களை [illegible] நேயன்றி விரோதிகளை அழிப்பதற்கன்று. "[illegible] நட்பிய:" என்று சொல்லுகிறபடி [illegible] தன் பக்தர்களை யாராவது நலிந்தால் அவர்களை [illegible] ன்று வருவன். இவ்வர்த்தத்தை ஆழ்வார் இங்கு [illegible] கேள்வி கேட்டு நமக்குத் தெளிவிக்கிறார். [illegible]! நீ [illegible] பிளவாகப் பிளக்கும் படியாயும், உன்னோடு எதிர்த்து நின்று என்

டை செய்யும்படியும் வலிமை வாய்ந்தவனுமான இரணியனுடைய உடலை கிழித்துப் பொகட்டது; அவன் பலத்தால் தன்னை வலியோனாக நினைத்து உன்னை ஸேவிக்காமலிருந்தான் என்கிற காரணத்தால் தானோ? சொல்லு, என்கிறார். இங்கு கேள்வி கேட்டாரே தவிர அவனுடைய பதில் ஒன்றும் காணப்படவில்லை. இப்படி வினவிய இவ்வாழ்வாருக்குக் கருத்து என்னவென்றால், இரணியன் பல்லாயிரம் வருஷங்கள் பெருமானை நினையாததுமன்றி விரோதியாயும் பாவித்தான். அப்படி யிருந்ததனால் அவனுக்குச் சிறிதும் வருத்தமில்லை. தன் அடியனான ப்ரஹ்லாதனைப் பல படியாகத் துன்பப்படுத்தினதுபற்றிப் பெருமானுக்கு சீற்றம் பிறந்து ஓர் அரியாய் வந்து தோன்றி இரணியனை இரு கூறாய்ப் பிளந்தான். ஆகையால் அவனிடத்தில் ஒருவன் அபசாரப்பட்டால் அதனை அவன் நினையான். பாகவதர்களிடம் அபசாரப் பட்டால் அது அவனுக்கும் அடங்காக் கோபத்தை விளைவித்து அப்பாபிஷ்டனை அழிக்கும் என்றது. இவ்வர்த்தம் கூரத்தாழ்வான் அருளிய "யதபராதஸஹஸ்ர மஜஸ்ரஜம் த்வயி சரண்ய ஹிரண்ய உபாவஹத் | வரத தேந சிரம் த்வமவிக்ரிய: விக்ருதி மர்பக நிர்பஜநா தநா: ||" என்ற வரதராஜஸ்தவ ச்லோகத்திலே தெளியக் காணலாம்.

'வரத்தால் வலி நினைந்து':— தனக்குக் கொடுக்கப்பட்ட வரங்களைநினைத்தானே தவிர வரங்கொடுத்தவர்களுடைய சக்தி அந்த நாராயணனாதீனமா யிருக்கிறதே யென்று நினைக்கவில்லையாம். அப்படி நினைத்தால் அவ்வீசனை த்வேஷம் செய்துகொள்ளப் பிரஸக்தியில்லை யென்றபடி.

ஈர் அரியாய்=உடம்பை இரண்டு பிளவாகக் கிழித்துப்போடும்படிக்குத் தகுந்த குற்றம் செய்த சத்ருவான இரணியன். அல்லது ஈர் அரியாய்=பெரிய சத்ருவென்றும் சொல்லலாம்.

ஓர் அரியாய்—ஒப்பற்ற சிங்கம். அல்லது உலகத்திலுள்ள சிங்கங்களைப்போலாது ஓர்—இச்சையால். முன் ஜென்மத்தில் செய்த கர்மங்களால் பிறவாமல் (தன் ஸங்கல்பத்தால்) அவதரித்த சிங்கம் என்பதாம். அல்லது "ஓர்"—த்யானம். பக்தர்களால் உபாஸிக்கப்படுகிற சிங்கம் என்னவுமாம்.

ஊனக் குரம்பையி னுள்புக் கிருள் நீக்கி
ஞானச் சுடர் கொளீஇ நாடோறும்— ஏனத்
துருவா யுலகிடந்த வூழியான் பாதம்
மருவாதார்க்குண்டாமோ வான். (91)

பதம்	பொருள்	பதம்	பொருள்
ஊனக் குரம்பையின்	மாம்ஸமயமான சரீரமாகிய குடிசையின்	உலகு இடந்த	பூமியைக்கீண்டு [illegible]
உள் புக்கு	உள்ளே பிரவேசித்து	ஊழியான்	பிரளயத்திலும் வர்த்திக்கிற பகவானுடைய
இருள் நீக்கி	சரீரமே ஆத்மாவென்கிற அஜ்ஞானத்தை விலக்கி	பாதம்	திருவடிகளை
ஞானம்	ஞானமாகிற	நாடோறும்	எப்பொழுதும்
சுடர்	தீபத்தை	மருவாதார்க்கு	தொழாதவர்களுக்கு
கொளீஇ	ஏற்றி	வான்	பரமபதம்
ஏனத்து உருவாய்	பன்றியுருவமாகி	உண்டாமோ?	கிடைக்குமோ?

ஊனக்குரம்பையின்:— கீழே அடியார்களுக்கெல்லாம் [illegible] கிறவன் ஈச்வரன் என்றார். அப்படியானால் நாம் [illegible] தொன்றுமில்லையோ என்று சிலர் வினவ, அதற்கு [illegible] விடையளிக்கிறார். நாம் மோக்ஷம் என்கிற [illegible] த்தை யடையவேண்டுமானால் வெறுமனே [illegible] ருந்தால் அது நமக்கு எப்படிக் கிடைக்கும். [illegible] கில்லையாகில் அவன் எப்படிக் கொடுப்பான். [illegible] வேண்டியபொருள்களில் இச்சைகளை [illegible] கிற நினைவும், அடையவேண்டிய பொருள் [illegible] தில் அவன் தான் அடையத்தக்க [illegible] கொண்டால், நமக்கு மோக்ஷம் [illegible] லாவிடில், மோக்ஷத்தையடைவது அரிது [illegible] என்றும் 'திண்ணமழுந்தக் [illegible] புண்ணை மறையவரிந்து' என்றும் [illegible] தம், கீழ் முதலிய நாற்றமுள்ள [illegible] தோன்றும்படி தோலால் மூடி [illegible]

தன்மையை நன்றாய் ஆலோசித்துப் பார்த்து, இந்த சரீரம் அழியக் கூடியது: அநர்த்தங்களை விளைவிக்கக்கூடியது. விட்டொழிக்க வேண்டியது என்று நிச்சயத்தை அடைந்தால் இச் சரீரமே ஆத்மா என்கிற இருள்விலகும். பிறகு உள்ளிருக்கும் ஆத்மாவைப்பற்றிய ஞானம் கொழுந்துவிட்டுக் கிளம்பினால் ஸர்வேச்வரனைச் சரணமடையவேண்டுமென்ற புத்தி உண்டாகும். அதாவது ஆத்மாவின் ஸ்வபாவமான சேஷத்வத்தை உணர்ந்தால் பரமபுருஷனை அடையவேண்டுமென்கிற நினைவு உண்டாகும். ஆனபின்பு இப்பூமியை கோரப்பற்களில் வைத்துத் தூக்கிக்கொண்டுவந்த ஞானப்பிரானென்கிற வராஹமூர்த்தியின் திருவடியை யடையவேண்டும். இப்படி சரீரத்தில் இகழ்ச்சி தோன்றி, ஆத்மாவைப் பற்றிய ஞானம் தலையெடுத்து, வராஹபகவானை சரணமடையாவிடில் பரமபதம் ஒருக்காலும் கிடைக்காது. ஆதலால் அடையவேண்டிய புருஷனிடம் ருசி பிறந்து அவனை ஆச்ரயிக்கவேண்டுமென்றாயிற்று.

கீழ்ப்பாட்டில் நரஸிம்ஹனை நினைத்ததால் அதற்கு முந்திய அவதாரம் நினைவிற்குவர இப்பாட்டில் வராஹ பகவானைப் பேசினார்.

வானாகித் தீயாய் மறிகடலாய் மாருதமாய்
தேனாகிப் பாலாம் திருமாலே — ஆனாய்ச்சி
வெண்ணெய் விழுங்க நிறையுமே, முன்னொருநாள்
மண்ணை யுமிழ்ந்த வயிறு. (92)

வான் ஆகி	ஆகாசமாகியும்	மண்ணை	அமுதுசெய்திருந்த பூமியை
தீ ஆய்	தேஜோரூபனாகியும்	உமிழ்ந்த	வெளிப்படுத்தின
மறி கடல் ஆய்	அலையெறியும் ஸமுத்ரமாயாகியும்	வயிறு	உன் வயிறு
மாருதம் ஆய்	காற்றாய் ஆகியும்	ஆன் ஆய்ச்சி	பசுக்களைமேய்க்கும் குடியில் பிறந்த இடைச்சிகளுடைய
தேன் ஆகி	தேன் போலும்		
பால் ஆம்	பால்போலும் போக்யமான		
திருமாலே	பரமபுருஷனே !	வெண்ணெ	வெண்ணெயை
முன் ஒரு நாள்	முன்னொருகாலத்தில்	விழுங்க	சாப்பிடுவதால்
		நிறையுமே	நிறைந்துவிடுமோ?

வாளுகி :—இப்பாட்டில் பகவான் தன்னை ஆச்ரயித்தவர்களுடைய ஸம்பந்தம்பெற்ற வஸ்துவினாலேயே சரீரதாரணம் செய்கிறானென்கிறார். ஆகாசம் முதலிய பூதங்களுக்கு நிர்வாஹகனாயிருந்துகொண்டு இந்த அண்டத்தில் வாஸம் செய்கிற ஜீவராசிகளுக்கு ரக்ஷகனாயிருப்பவனே! ஸர்வரஸ:, ரஸோ ரவைஸ: என்கிறபடி பருகப் பருகத் தேன்போல் இன்பமாயிருப்பவனே! பால்போல் பரம போக்யமாகப் பிராட்டியுடன் கூடியிருப்பவனே! நீ கிருஷ்ணனாய் அவதரித்து இடைச்சிகள் வைத்திருந்த வெண்ணெயைக் களவுசெய்து புசித்தாயே; அது எதற்காக? உன்னுடைய பசியைப் போக்கவேண்டுமென்கிற எண்ணத்தாலோ? அப்படியாகில் அவ் வெண்ணெயால் உனக்கு எப்படிப் பசி தீரும்? முன்பு பிரளயகாலத்தில் உலகங்களெல்லாவற்றையும் உண்டு பிறகு வெளிநாடு காணவுமிழ்ந்துவிட்ட உன்னுடைய வயிறு இந்த வெண்ணெயால் நிறைந்துவிடுமோ? ஆதலால் நீ எதற்காக இடைச்சியர்களுடைய முடைநாற்றமுள்ள வெண்ணெயை விழுங்கினாய் என்று பகவானையே வினவினார். இப்படி வினவிய ஆழ்வாருடைய கருத்து யாதெனில், ஸ்ரீயப்பதியானவன் உபயவிபூதிநாதனாயிருந்தபோதிலும் தன்னிடம் அன்புகொண்ட அடியார்களுடைய ஸம்பந்தம்பெற்ற பொருள்களைக் கொண்டே ஆத்மதாரணம் செய்கிறான். அவன் வெண்ணெயுண்டது பசி தீர்த்துக்கொள்வதற்காகவல்ல. தன்னிடம் பேரன்புகொண்ட இடைச்சிகளுடைய த்ரவ்யமான வெண்ணெயைச் சாப்பிடாவிட்டால் அவனுடைய தேஹம் தரியாது. அப்படித் தன்னுடைய அடியார்களிடம் அவனுக்கு ஒரு பேரவா குடிகொண்டிருக்கிறது. தன் அடியார்களுடைய த்ரவ்யம் கிடைக்காவிடில் உபயவிபூதியையும் ஒரு துச்சமாக நினைக்கிறான். [illegible] படி அடியார்களிடம் ஒரு [illegible].

வயிறழல வாளுருவி வந்தானை யஞ்ச
எயிறிலக வாய்மடித்த தென்நீ—பொறியுகிரால்
பூவடிவை யீடழித்த பொன்னாழிக் கையா, நின்
சேவடிமே லீடழியச் செற்று. (93)

பூவடிவை	புஷ்பத்தின் ஸௌகுமார்யத்தை	அஞ்ச	அவன் பயப்படும்படி
ஈடு அழித்த	அடியோடு திரஸ்கரித்ததான	நின் சே அடி மேல்	உனது சிவந்த திருவடிகளின்மேல் போட்டுக்கொண்டு
பொன் ஆழி கையா	அழகான சக்ரமேந்திய கையை யுடையவனே	பொறி உகிரால்	பலவர்ணமான நகங்களால்
வயிறு அழல	என்னவிளையுமோ வென்று வயிறு எரியும்படி	ஈடு அழிய	கட்டுக்குலையும்படி
		செற்று	கொன்று
		எயிறு	(பின்னும்) பற்கள்
வாள் உருவி	கத்தியை உருவிக் கொண்டு	இலக	வெளியில் தெரியும்படி
வந்தானை	சண்டைசெய்யவந்த ஹிரண்யனை	நீவாய் மடுத்தது	நீவாயை மடித்துக் கொண்டு வீற்றிருந்தது
		என்	எதற்காக?

கீழ்ப்பாட்டில் அவனுடைய ஆச்ரிதவாத்ஸல்யம் என்கிற குணம் பேசப்பட்டது. அக் குணத்தால் உண்டாகும் பயனைப் பேசுகிருரிப்பாட்டில்.

வயிறழல :—புஷ்பங்களுடைய ஸௌகுமார்யத்தை இல்லையென்று சொல்லலாம்படியான ஸௌகுமார்யத்தோடுகூடிய சக்கரமேந்திய கையையுடையவனே! நீ முன்னொருநாள் பிரஹ்லாதனுக்கென்று அரியாய் வந்தபொழுது, உன்னை எதிர்ப்பதற்கு, பார்ப்பவர்கள் நடுங்கும்படியாக வாளை யுருவிக்கொண்டுவந்த இரணியனை நீ மிகுந்த சினங்கொண்டு உனது மெல்லிய திருக்கைகளால் பிடித்திழுத்து மடியிலே பொகட்டுக்கொண்டு கை நகங்களால் இருபிளவாய்க் கிழித்துக் கொன்ற பின்பும் கோபம் தோன்றும்படியாக பற்கள் வெளியே தெரியும்படி வாயை மடித்துக்கொண்டு வீற்றிருந்தாயே! அது எதற்காக? எதிரியைக் கொல்வதற்கு முன்பு கோபம் இருக்க வேண்டியது நியாயம். கொன்றபின்பு கோபம் எதற்காக? பயங்கரமான கோரப்பற்கள் வெளியே தோன்ற ஒருவரும் நெருங்க முடியாத கோபம் வீச உட்கார்ந்ததன்பயன் யாது; என்று வினவினுர். இந்தக் கேள்வியால் நாம் அறியவேண்டியது யாதெனில், விரோதிகளை நினைத்து அஞ்சுகிற ஒருவன் கோபமுள்ளவனை அடைந்தால்தான் நிர்ப்பயனாயிருக்கலாம். கோபமே இல்லாத ஒரு புரு

ஷன், தன்னை ஒரு மனிதன் சரணமடைந்தால், அவனைக் காப்பது முடியாதகாரியம், சரணாகதனுடைய விரோதிகள் தன்னை நலியவந்தால் அவர்களை வெல்லவேண்டிக் கோபத்தைத் தேடவேண்டும்; கோபத்தாலன்றி சத்ருவை வெல்லமுடியாது. அதற்காகத்தான் கோபம் என்கிற குணம் ரக்ஷகனுக்கு அவசியம் வேண்டியதே. இராவணனால் அடிபட்ட ஹநுமான் மிகவும் நோவுபட்டிருக்க, "ததோ ராமோ மஹாதேஜா ராவணேந க்ருத வ்ரணம் | த்ருஷ்ட்வா ப்லவகசார்தூலம் கோபஸ்யவசமேயிவான் ||" என்று ஸ்ரீராமபிரான் கோபமிட்டவழக்கானார் என்றார். ஆதலால் சரணமடைகிறவன் தன்னுடைய சத்ருக்களை நசிக்கவல்ல கோபமுள்ள சரண்யனிடம் சரணம்புகவேண்டும். ஆனதுபற்றி திருமங்கையாழ்வாரும் "கடிகொள் பூம்பொழில் காமருபொய்கை + கொண்ட சீற்றமொன்றுண்டுளதறிந்து உன் அடியனேனும் வந்தடியிணையடைந்தேன் அணிபொழில் திருவரங்கத்தம்மானே" என்று சத்ருக்களை அழிக்கவல்ல கோபம் ஒன்று உன்னிடமிருக்கிறதென்று தெரிந்துகொண்டு நான் உன் திருவடிகளை அடைந்தேன் என்கிறார்.

ஆதலால் இரணியன் செற்ற பின்பும் பெருமான் கோபத்துடன் இருந்ததற்குக் காரணம் நல்லோர்களை [illegible] அடியார்களுடைய விரோதிகளை அழிக்கவல்லதான கோபத்தைக் [illegible] ஆச்ரயிக்கவேணுமென்று தெரிந்துகொள்வதற்காகவேயன்றி [illegible] ரித விரோதிகளிடம் உண்டான கோபம் அடியார்களுக்குத் [illegible] லென்று கொள்க.

வயிறழல:— இரணியன் யுத்தத்திற்கு வந்தபொழுது [illegible] பொழுது என்ன விளையப்போகிறதோ வென்று [illegible] வர்கள் வயிறெரிகிறார்கள். பரமைகாந்திகள் [illegible] இரணியன் நரஸிம்ஹனோடு போர்புரிய வந்ததைக் கண்டு ஆழ்வார் வயிறெரிகிறார் என்பதும் தோன்றும்.

சேவடிமேல்:— உனது பக்தர்களுக்குப் [illegible] வடிகளில் இரணியனை வைத்துக்கொண்டாயென்றும் [illegible]

செற்றெழுந்து தீ விழித்துச்சென்றவிந்த வேழுலகும்
மற்றிவை யா வென்று வாயங்காந்து—முற்றும்
மறையவற்குக் காட்டிய மாயவனை யல்லால்
இறையேனு மேத்தாதென் நா. (94)

எழுந்து	லோகத்திலுள்ள பொருள்களையெல்லாம் ஸம்ஹரிக்கப் போகிறேனென்று எழுந்துகிளம்பி	சென்ற	என்னுள் சென்றிருக்கின்றன என்று சொல்லி
தீ விழித்து	நெருப்பு விழும்படி பார்த்து	ஆ என்று வாய் அங்காந்து	ஆவென்று வாயை நன்றாய் திறந்து
இந்த எழு உலகும்	இந்த ஸப்தலோகங்களையும்	மறையவற்கு	வைதிகரான மார்க்கண்டேய முனிவருக்கு
செற்று	தொலையும்படி செய்து	முற்றும்	ஸகலலோகங்களையும்
மற்று	பிறகு	காட்டிய	காண்பித்த
இவை	அழிந்துபோனவையெல்லாம்	மாயவனை அல்லால்	மாயாவியைத்தவிர மற்றவனை
		என் நா	எனது நாக்கு
		இறையேனும்	கொஞ்சமேனும்
		ஏத்தாது	துதிசெய்யாது.

விரோதிகளை விலக்குவதற்குப் பரிகாமான கோபமும் அவனிடமிருக்கிறது. ஆதலால் விரோதிகளைக்கண்டு பயப்படுகிறவனைவரும் அவனை ஆச்ரயிக்கலாமென்றார் கீழ்ப்பாட்டில். அவனையல்லாதொருவனை என் நாக்கு எழுந்து பேசாது என்கிறார். இப்பாட்டில்.

செற்றெழுந்து:— ஒருநாள், பிரளயத்தை நேரில் பார்க்கவேண்டுமென்று ஆசைப்பட்ட மார்க்கண்டேய முனிவருக்கு அவர் விரும்பியபடியே பிரளயத்தைக் காண்பிவித்த மாயவனைத் தவிர மற்றொருவனை என் நாக்குத் துதி செய்யாது என்கிறார்.

எம்பெருமான், உலகங்களில் அதர்மம் மிகவும் தலையெடுக்க, அதனால் பிறந்த சினங்கொண்டு எழுந்து தீப்பொறி பறக்கும்படி கண்களால் பார்த்து, எல்லாப்பொருள்களையுமழித்துத்தன் திருவயிற்றிலே அடக்கிவைத்திருக்கும் காலத்திற்குப் பிரளயகாலம் எனப்

...சிரஞ்சீவியான மார்க்கண்டேய முனிவன், பத்திரநதிக்கரையில் ... நாராயணனைத் தரிசித்து "நான் பிரளயத்தைக் ... வேணும்" என்கிற வரத்தை வேண்டினார். அவர் ... ஆகட்டும் என்று அருள்செய்து சென்றார்கள். பி... மகவானுடைய ஸங்கல்பத்தால் பிரளயம் தோன்றிற்று. ...கடல் இப்பரந்த பூமியெங்கும் பெருகி எல்லாவற்றையும் அழித்துப் பெருந்தழுக்கத்துடன் பொங்கிக்கொண்டிருந்தது. மார்க்கண்டேய முனிவன் கடலின் அலைகளால் அடிக்கப்பட்டு மிக வருந்தி ... கரை காணமுடியாது தவிக்கவே, ஒரு ஆலிலையில் படுத்திருக்கும் ஒரு குழந்தையைக் கண்டார். கண்டதும் அக்குழந்தை தன் வாயைத் திறந்தது. முனிவனும் அக்குழந்தையின் வாயில் புகுந்து வயிற்றிலே சென்று பார்க்குங்கால், உலகங்களெல்லாம் அங்கு பரமானந்தமாக நெருக்கமின்றி வசிப்பதைக் கண்டார். உடனே பெருமகிழ்ச்சியடைந்து, அக்குழந்தை தான் ஸ்ரீமந் நாராயணனென்று நிச்சயித்து அவனுடைய பக்தர்களிற் சேர்ந்தார் என்பது.

நாவாயில் உண்டே நமோ நாரணா என்று
ஓவா துரைக்கு முரையுண்டே—மூவாத
மாக்கதிக்கண் செல்லும் வகையுண்டே, என்னொருவர்
தீக்கதிக்கண் செல்லுந் திறம். (95)

	பகவந்நாமங்களைச் சொல்லுவதற்குக் கருவியான நாக்கு	மூவாத	[illegible]
		மாக்கதிக்கண்	[illegible]
வாயில்	எல்லா ஜனங்களுக்கும் வாயிலேயே	செல்லும் வகை	[illegible]
உண்டே	ஏற்படுத்தப்பட்டிருக்கின்றதே	உண்டே	[illegible]
ஓவாது	ஓய்வின்றி	ஒருவர்	[illegible]
உரைக்கும்	இடைவிடாமல் சொல்லக்கூடிய	தீக்கதிக்கண் செல்லும்	[illegible]
நமோ நாரணா என்னும் உரை	திருமந்திரமாகிற சொல்லும்	திறம்	[illegible]
உண்டே	உலகில் இருக்கின்றதே	என்	[illegible]

அவனை அடைவதற்குரிய பரிகாரங்களை தேடிச் செல்ல வேண்டாம். எல்லாரிடத்திலும் ஸுலபமாக அகப்படுமென்கிறாரிப் பாட்டில்.

நாவாயிலுண்டே:— அந்த ஸர்வேச்வரனுடைய நாமங்களைச் சொல்வதற்கென்றே நாக்கு என்கிற இந்த்ரியம் எல்லாருடைய வாயிலும் பகவானால் படைக்கப்பட்டிருக்கிறது. சில மந்த்ரங்கள் நூறு, ஆயிரம், என்று எண்ணிக்கையுள்ள எழுத்துக்களால் அமைக்கப்பட்டு, ஒரு தடவை சொல்லிமுடித்தால் சிரமத்தினால் மூச்சு விட்டு இளைப்பாற வேண்டும்படியாக விருக்கும். அப்படிக்கில்லாமல், சிரமமின்றி ஓயாமல் சொல்லும்படி நமோநாராய என்கிற திருவஷ்டாக்ஷர மந்திரமும் ஸித்தமாகவே இருக்கிறது. நாவால் திருமந்திரத்தைச் சொன்னால் திரும்பிவாராதபடி பரமபதத்தை அடைவிக்கும் அர்ச்சிராதிமார்க்கமும் அமைக்கப்பட்டிருக்க, எதற்காக ஜனங்களெல்லாம் நரகத்திற்குச் செல்லும் மார்க்கங்களில் பிரவேசிக்கிறார்கள்' என்ன காரணமோ தெரியவில்லை யென்கிறார். அவனையேத்துவதற்கென்று நம்மில் படைக்கப்பட்டிருக்கும் நாவைக்கொண்டே நாம் பரகதியடைய வல்லராயிருக்க, வீண்வம்புகளைப் பேசிக்கொண்டு வாழ்நாட்களை பாழாக்குகிறோமே என்று ஆழ்வார் வருந்துகிறார். 'நாராயணேதி சப்தோஸ்தி வாகஸ்தி வசவர்த்தினீ | ததாபி நாகே கோரே பதந்தீத்யேத தத்புதம்' என்கிற பிரமாணமும் காணலாம்.

ஓவாதுரைக்கும் உரை:—மந்திரங்கள் அதிகமான எழுத்துக்கள் உள்ளனவாகவிருந்தால் உச்சரிக்குங்கால் அடிக்கடி மூச்சுவிட்டும், முடிந்தபின்பும் ஒரு நாழி இளைப்பாறவேண்டும்படியிருக்கும். அப்படியின்றி சிறிதும் சிரமப்படாமல் எப்பொழுதும் சொல்லத் தகுந்த திருவஷ்டாக்ஷரம் என்றபடி.

திறம்பாதென் நெஞ்சமே செங்கண்மால் கண்டாய்
அறம்பாவமென்றிரண்டு மாவான்—புறந்தானிம்
மண்தான் மறிகடல்தான் மாருதந்தான், வான்தானே
கண்டாய் கடைகட்பிடி. (96)

என் நெஞ்சமே — என் நெஞ்சே

செம் கண் — சிவந்த கண்களையுடைய

மால் கண்டாய் — ஸர்வேச்வரன் அல்லவா;

அறம் பாவம் என்று — புண்யம் பாபம் என்கிற

இரண்டும் ஆவான் — இரு வினைகளுக்கும் [illegible];

இம் மண்தான் — இப்பூமியும்

மறிகடல்தான் — அலைமோதும் கடலும்

மாருதம்தான் — காற்றும்

[illegible]

இதிலே நாட்டார் அபிப்ராயமாக [illegible] என்று வருந்தினார். [illegible] யல்ல என்று கருதி தம் நெஞ்சுக்கு உபதேசிக்கிறார்.

திரண்டபொருள்:—நான் சொல்லுவதைக் கேள் [illegible] கிற நெஞ்சமே! [illegible] தும் நமக்கும், புண்யம் பாபம் என்கிற [illegible] பூதங்களுக்கும், மறுக், அறங்களும். [illegible], ஆக எல்லாவற்றிற்கும் ஸ்வாமியானவன் [illegible] சிவந்த கண்களையுடைய நாராயணன் தான் [illegible] வழக்காயிருக்கும் என்கிற இவ்வர்த்தத்தை [illegible] ஸம்சயப்படாதே; [illegible] மி என்று தன் நெஞ்சுக்கு உபதேசிக்கிறார்.

அறம்பாவமென்றிரண்டுமாவான்:—[illegible] ருபங்களான வினைகள் [illegible] கின்றனவே என்று நெஞ்சம் வருந்தவே, [illegible] டும் அவனே என்றார். [illegible] கிறாரே பாபமென்றும், [illegible] கொள்ளையாதலால், [illegible] காரிகளும் [illegible] விக்கட்டும் என்கிற [illegible]

கமளவான உலகங்களும் நமக்குத்தடையின்றி ஒழியும் என்று கருத்தாக்கொண்டு அருளிச்செய்கிறார்.

தன்னுடைய நெஞ்சு, இப்பொழுது நாம் பகவத்பரர்களாக வேயிருந்தபோதிலும், இனிமேல் நாம் பாபங்களைச் செய்து கெட்டுப்போனால் என் செய்வது என்று வருந்த "அறம்பாவமென்றிரண்டுமாவான்" என்றார் (ஏஷஏவ ஸாதுகர்ம காரயதியமேப்யோ லோகேப்யோ உந்நிநீஷதி) எவனை உயர்ந்த லோகங்களுக்கு போகவேண்டுமென்று தான் நினைக்கிறானோ அவனை புண்யங்கள் செய்யும்படி செய்கிறான், எவனை கீழே தள்ளவேணுமென்று விரும்புகிறானோ அவனை பாபங்கள் செய்யும்படி செய்கிறான் என்றபடி, அவனே புண்ய பாபங்களைச் செய்யும்படி ஏவுகிறான். நாம் ஸர்வ ஜகத்துக்கும் ஸ்வாமியை எப்பொழுதும் நினைத்திருக்க நம்மை நரகத்தில் தள்ளவேணுமென்று அவன் விரும்புவானோ? ஆதலால் நமக்கு இனிமேல் பாவம் ஸம்பவியாது என்று கொண்டு அருளிச்செய்தார் என்று சிலர் கொள்கை.

புண்யபாபங்கள் அவ்வீச்சாதீனமாதலால், இதுவரையில் செய்தவினைகளுக்கும் இனிமேல் செய்யப்போகும் வினைகளுக்கும் நாம் அஞ்சவேண்டியதில்லை. நாம் அவனையே நினைத்திருப்போம் என்று கொண்டு அறம்பாவமென்றிரண்டும் அவனென்றார் என்றும் சொல்லலாம்.

பிடிசேர் களிறளித்த பேராளா! உன்றன்
அடிசேர்ந்தருள் பெற்றாளன்றே—பொடிசேர்
அனற்கங்கை யேற்றா னவிர்சடைமேல் பாய்ந்த
புனற் கங்கை யென்னும் பேர்ப்பொன். (97)

பிடிசேர்	பெண்யானையுடன் சேர்ந்து வாழ்ந்த	பொடிசேர்	சாம்பலாகும் விபூதியில்சாய்கின்ற
களிறு	கஜேந்திராழ்வானாகிற யானையை	அனற்கு அம் கை ஏற்றான்	நெருப்புக்கு தன் கையை அழகாயேந்தின ருத்ரனுடைய
அளித்த	ரக்ஷித்த		
பேராளா	பெருந்தன்மை	அவிர் சடைமேல்	ஒளிக்கின்ற சடைமேல்

பாய்ந்த	பாய்கிற
புனல்	ஜலத்தையுடைய
கங்கை என்ற ஒண் பெயர்	கங்கை என்னும் பெயர் கொண்ட
பொன்	பெண்
உன்கண் அடி சேர்ந்து	உன்னுடைய திருவடியை அடைந்து
அருள் பெற்றாள் அன்றே;	உலகத்தைப் பரிசுத்தமாக்கும்படி அருளை அடைந்தாள் அல்லவா

கீழ்ப்பாட்டில் "அறம்பாவமென்றிரண்டுமாவான்" என்றதை விவரித்துக்காட்டுகிறாரிப்பாட்டில்.

பிடிசேர்——பாவமும் அறமும் அவனாதீனமாயிருக்கும் என்றார். அதை எளிதில் அறிந்துகொள்வதற்கு இரண்டு உதாஹரணங்களைக் காட்டுகிறார். இந்திரத்யும்நன் என்பானொரு அரசன் [illegible] யோகநிரதனாயிருந்தான். ஒருநாள் அகஸ்த்ய முனிவர் அவனருகே செல்ல, அரசன் யோகாப்யாஸத்திலே ஆழ்ந்திருந்தபடியால் அம்முனிவரை வரவேற்று உபசரிக்கவில்லை. அதனால் முனிவர் கோபங்கொண்டு நீ யானைபோல் மதாந்தனாயிருந்ததனால் யானையாய்ப் பிறப்பாய் என்று [illegible] அரசனும் யானையாய்ப் பிறந்து, காட்டில் பல பெண்யானைகளோடு [illegible] கொண்டிருந்தான். [illegible] மிருக்க ஹூஹூ என்ற கந்தர்வன் ஜலத்தில் [illegible] கொண்டிருந்த தேவலர் என்ற முனிவரைப் பார்த்து [illegible] சென்று, அம்முனிவருடைய காலைப்பிடித்து இழுத்தான். [illegible] னால் சினங்கொண்ட முனிவர் அவனை முதலையாய்ப் [illegible] என்று சபித்தார். அவனும் முதலையாய்ப் பிறந்தான். [illegible] கையில் வாசஞ்செய்துகொண்டிருந்தது. [illegible] பெண்யானைகளோடு திருந்துகொண்டிருந்த [illegible] ஜந்ம வாஸனையால் பகவானைப் பூஜிக்கவென்று [illegible] கையில் பூங்கொய்யும்பொழுது அம் முதலையால் [illegible] துன்பப்பட்டு பரிதவித்தது. அதையறிந்து, ஸ்ரீவைகுண்டத்திலிருந்து விரைந்துவந்து சக்ராயுதத்தால் [illegible] வென்று யானைக்கு அருள் புரிந்தது என்று [illegible] ளிக்கமே. பாவத்தின் பயனை [illegible] தானென்றால் பாபம் அங்கிருந்து [illegible] என்பதுதான் றும். ஆதலால் பாவம் [illegible] மென்பது நன்கு விளங்கும். அங்ஙனம் [illegible]

ருத்ரனுடைய சிரஸ்ஸிலே பாய்ந்த கங்கை, பாவநார்த்தம் ஜடாமத்யே ததார சிரஸாஹர: என்னும்படி அவனையும் சுத்திசெய்யும்படிக்கும், மற்றும் தன்னில் ஸ்நானம் செயபவர்களையும் பரிசுத்தராக்கும்படிக்கும், சுத்திகாத்வமென்கிற ஒரு பெருமைபடைத்தது உன் திருவடியைச்சேர்ந்ததாலல்லவோ என்கிறார். கங்கையில் ஸ்நாநம் செய்துவந்தவர்களை மஹாஸுக்ருதிகள் என்று உலகத்தில் சொல்லுகிறார்கள். எல்லாரையும் ஸுக்ருதிகளாகச்செய்யும் தன்மை அக்கங்காநதிக்கு உன் திருவடி ஸம்பந்தத்தாலல்லவா? உன் திருவடியில் பிறந்ததனாலன்றோ இப்பெருமை கங்கைக்கு; என்றார். ஆதலால் ஸுக்ருதமும் அவனதீனமென்று எளிதில் தெரிந்துகொள்ளலாம்.

இப்பாட்டின் நான்காமடியில் "கங்கையென்னும் பேர்ப்பொன்" என்றும் சிலர் பாடமுரைப்பர்.

பொன் திகழுமேனி புரிசடையம் புண்ணியனும்
நின்றுலகந்தாய நெடுமாலும்—என்றும்
இருவரங்கத்தால் திரிவரேனும், ஒருவன்
ஒருவனங்கத் தென்றுமுளன். (98)

பொன் திகழும்	ஸ்வர்ணம்போல் விளங்குகிற	என்றும்	எப்பொழுதும்
மேனி	சரீரத்தையும்	இருவர் அங்கத்தால் திரிவர் எனும்	இரண்டு பேர்களாய் தனித்தனியான வடிவுடன் திரிந்த போதிலும்
புரிசடை	பின்னப்பட்ட ஜடையையும் உடையவனும்	ஒருவன்	அவர்களுள் ஒருவனான ருத்ரன்
அம் புண்ணியனும்	நல்ல ஸாதனரூப ஸுக்ருதத்தைச் செய்த ருத்ரனும்	ஒருவன் அங்கத்து	மற்றொருவனாகிய திருமாலுடைய திருமேனியில்
நின்று உலகம் தாய	நின்றுகொண்டு பிரபஞ்சங்களை அளந்த	என்றும்	எக்காலத்திலும்
நெடுமாலும்	திருமாலும்	உளன்	வாஸம் செய்பவன்.

பெருமான் திருவடியிலிருந்து பெருகிய கங்கை சிவபெருமானையும் பரிசுத்தனாக்ச் செய்தது என்று கீழ்ப்பாட்டில் சொன்னது பொருந்தாது. அானும் ஒரு தெய்வமென்று உலகில் வழங்கப்படு

கிறது காணப்படவில்லையா என்று சிலர் வினவ, அரனுடைய பெருமையும் அவனுடைய சரீரம் என்கிற வாகாரத்தால்தான் என்று காட்டுகிறார்.

பொன்:—பொன்போல் பிரகாசிக்கிற மஞ்சள் நிறத்தவனும் சடைதரித்தவனுமான ருத்ரனும் திரிவிக்ரமாவதாரம் செய்து உலகங்களை அளந்த நாரணனும் தனித்தனியே வெவ்வேறு ரூபங்களுடன் வெவ்வேறு தெய்வங்களாகக் கொண்டாடப்பட்டாலும், ஒருவன் ஒருவனுடைய திருமேனியில் வாஸம் செய்கிறான். ருத்ரன் நாரணனுடைய திருமேனியைப் பற்றியே நிற்கிறான். ஆனது பற்றியே அவனுக்குப் பெருமை. (பச்யைகாதசதே ருத்ராந் தக்ஷிணம் பார்ச்வமாச்ரிதாந்), வலத்தனன் திரிபுரமெரித்தவன்" என்பவைகளையும் காண்க.

புரிசடையம் பண்ணியனார்:—என்பதால் [illegible] செய்தே ருத்ரன் இப்பெருமை படைத்தான் என்பது அவனுடைய சரீரமே காட்டும் என்கிற பொருள் விளங்கும். மகாபாரதத்தில் ஸர்வமேதே மஹாத்மா ஹுத்வாத்மாநம் தேவதேவோ [illegible] யையும் காணலாம். தபோபலத்தால் பெருமை படைத்தவன் [illegible] பிடித்துக்கொண்டு நிற்பவன் [illegible] தான் பரதேவதையன்று என்றபடி.

உலகம் தாய நெடுமாலும்:—இதனால் [illegible] அரன் தலையோடு வாசிப்பர் எல்லார் தலையிலும் திருவடியை வைத்தவன் என்பது பற்றி நாரணனுடைய பரத்வம் [illegible] தெரிவித்தபடி.

"அங்கத்து என்றுமுளன்" ஒருவனுடைய ([illegible] உடைய) திருமேனியில் வசிப்பவன். அல்லது [illegible] சரீரம் என்றே சொல்லப்படும் தன்மையுடையோனாம்.

உளன் கண்டாய் நன்னெஞ்சே உத்தமனென் றும்
உளன் கண்டாய், உள்ளுவா ருள்ளத்--துளன் கண்டாய்
வெள்ளத்தி னுள்ளானும் வேங்கடத்து மேயானும்
உள்ளத்தி னுள்ளா னென்றோர். (99)

நல் நெஞ்சே	எனக்கு அநுகூலமான நெஞ்சே!	உள்ளத்து	நெஞ்சில்
உத்தமன்	புருஷோத்தமன்	உளன் கண்டாய்	நித்யவாஸம் செய்கிறான் காண்;
உளன் கண்டாய்	நம் ஸத்தைக்காக இருக்கிறான் காண்;	வெள்ளத்தின் உள்ளானும்	பாற்கடலில் பள்ளி கொண்டவனும்
என்றும்	எக்காலத்திலும்	வேங்கடத்து மேயானும்	திருமலையில் வஸிப்பவனும்
உளன் கண்டாய்	நம்மைக் காப்பதற்காக இருக்கிறான் பார்;	உள்ளத்தில் உள்ளான்	நம் நெஞ்சில் வந்திருக்கிறான்
உள்ளுவார்	தன்னை நினைப்பவர்களுடைய	என்று ஓர்	என்று அறிந்து கொள்

கடைசியாக இரண்டு பாசுரங்களால் தமது நெஞ்சுக்கு ஸ்ரிய:பதியின் பரத்வத்தையும் நித்யத்வத்தையும் உபதேசித்துவிட்டுப் பிரபந்தத்தைத் தலைக்கட்டுகிறார்.

உளன் கண்டாய்:—நான் சொல்வதை உண்மை என்று நம்புகிற நல்ல நெஞ்சே! ஸர்வேச்வரன் நாம் ஸத்தை பெறுவதற்காக எப்பொழுதுமுளன். அஸ்தி ப்ரஹ்மேதி சேத் வேத | ஸந்தமேநம் ததோ விது: ப்ரஹ்மத்தை எவன் உளன் என்று அறிகிறானோ அவன் தான் ஸத்தை பெற்றவன் என்றபடி நாம் ஸத்தை பெற வேண்டி அவன் உளனாகையைப் பார்; "ஆள்கின்றானாழியான்" என்றபடி நம்மை ரக்ஷிப்பதற்கென்றே அவன் எப்பொழுதும் ஸத்தைபெற்றிருப்பதையும் பார்; அத்துடன் "அணைப்பார்க் கருத்தனாவான்" என்றபடி அவனை யார் நினைக்கிறார்களோ அவருடைய நெஞ்சிலே வஸிக்கிறான் காண்; அவன் திருப்பாற்கடலிலும் திருவேங்கடத்திலும் வஸிப்பதும் ஒரு பாகவதனுடைய நெஞ்சில் வாஸம் செய்வதற்கென்றே: ஒரு பாகவதனுடைய நெஞ்சு அகப்பட்டால் திருப்பாற்கடலையும் விட்டுவிடுவன் போலும். ஆதலால் பாற்கடலில் பள்ளியார்ந்தவனும் வேங்கடத்தில் நின்றவனுமான ஸர்வேச்வரன் நம்முடைய உள்ளத்தில் வஸிக்கிறானென்று நினை; வேங்கடத்தில் நின்றுகொண்டும் பாற்கடலில் படுத்துமிருக்கிறான். நம்முள்ளத்தில் இருவிதமாகவும் இருப்பவனென்று கொள்; ஆச்ரிதர்களுடைய நெஞ்சில் ஸர்வப்ரகாரத்துடனும் வஸிப்பான் என்பது தோன்றுகிறது.

ஆழ்வார் தமக்கு நெஞ்சு என்கிற ஒரு கருவியிருப்பதுபோல், தம்முடைய நெஞ்சுக்கும் ஒரு நெஞ்சு இருப்பதாக நினைத்து "[illegible] வைத்துள்ளானென்றோர்" என்று உபதேசித்தது ஆதாரமற்ற சொல் என்று சிலர் நினைப்பார்கள். அதற்குப் பரிஹாரம்: தன்னுடன் அகப்பட்ட நெஞ்சை, வேறு ஒரு மனிதனாக ஆரோபம் செய்து அதை விளித்து செவிசாய்க்கச்செய்து உபதேசிப்பதுபோல் இது ஒரு ஆரோபித்துச் சொன்ன வார்த்தையென்று கொள்க.

இப்பாட்டில் ஈச்வரன் நம்முடைய வாக்கைக் காக்கவேண்டியிருக்கி றானென்றும், நம்மை என்றைக்கும் காப்பவனென்றும், தன்னை நினைப்பவர்களுடைய நெஞ்சில் வாசம் செய்கிறவனென்றும், திவ்யதேசங்களில் திவ்யவாஸம் செய்யும் பெருமானும் [illegible] னுள்ளானும் ஒருவனே என்றும், நெஞ்சுக்கு உபதேசிக்கப்படுகிறது.

ஓரடியும் சாடுதைத்த வொண்மலர் சேவடியும்
ஈரடியும் காணலா மென்னெஞ்சே—ஓரடியில்
தாயவனைக் கேசவனைத் தண்டுழாய் மாலைசேர்
மாயவனையே மனத்துவை. (100)

என் நெஞ்சே	என் உள்ளமே!	மனத்துவை	[illegible]
ஓர் அடியில்	ஒரு திருவடியில் [illegible] கைப்பிடிதெல்		[illegible]
தாயவனை	உலகங்களை அளந்தவனும்	ஓர் அடியும்	[illegible]
கேசவனை	கேசியைக் கொன்றவனும்	சாடு உதைத்த	[illegible]
தண்	சீதளமான திருத்	ஒண்	[illegible]
துழாய்	துழாயால் கட்டிய	மலர்	[illegible]
மாலைசேர்	மாலையோடு கூடியவனுமான	சே அடியும்	[illegible]
மாயவனையே	மாயங்கள் செய்யும் நாராயணனையே	காணலாம்	[illegible]

ஓரடியும்:—இப்பாட்டில், முன்னடிகளில் [illegible] ஸாக்ஷாத்கரிப்பதாகிற பரம புருஷார்த்தமும், [illegible] புருஷார்த்தத்தைப் பெறுவதற்குவேண்டிய [illegible] படுகிறது. ஒரு திருவடியால் எல்லாவுலகங்களையும் அளந்தவனை,

கேசி என்னுமசுரனைக்கொன்றவனும், திருத்துழாய் மாலை யணிந்தவனுமான மாயாவியையே மனத்து வைக்கவேண்டும். அவனை மனத்தால் எப்பொழுதும் த்யானிப்பது தான் உபாயம் என்றபடி. தாயவனை என்றதால் உலகத்தாரனைவர் தலையிலும் திருவடியைவைத்துய்யச் செய்ததுமன்றி நமக்கு விரும்பப்பட்ட பொருள்களைக் கொடுப்பவன் என்பது விளங்கும். கேசவனை என்பதால் விரோதிகளைப் போக்குகிறவனென்றுகொண்டு நம் அநிஷ்ட நிவ்ருத்தியைச் செய்கிறவனென்று கொள்க. "தண்டுழாய் மாலைசேர்" என்பதால் குறையில்லாவிடினும் கூட, விடமுடியாத போக்யதை பேசப்படுகிறது. மாயவனை என்பதால் அவதாரங்களில் பல விசித்திரவ்யாபாரங்களைச் செய்து, ஆச்ரிதரக்ஷணம் செய்கிறானென்பது தோன்றுகிறது. ஆகவே இஷ்டப்ராப்தியையும், அநிஷ்ட நிவ்ருத்தியையும் செய்துகொடுத்துப் பரமபோக்யனுமாய் ஆச்ரிதரக்ஷணமே வ்யாபாரமாகவுள்ள பரமபுருஷனை மனத்தில் வைத்தால் (பக்தியோகம் செய்தால்) அவனது இரண்டடிகளையும் காணலாம் என்றதாயிற்று.

உலகெல்லாந் தொழுமவனுக்கு திருவடியும் சகடாசுரனை உதைத்த பதமென்ற திருவடியும் நாம் காணப்பெறலாம் என்றபடி. இங்கு அடியும் என்கிற பதம் இல்லாவிடினும் இரண்டு திருவடிகளையும் என்கிற பொருள் கிடைக்குமாயினும், அத்திருவடிகளுடைய போக்யதையிலே ஈடுபட்டு மீண்டும் அடியும் என்றபதத்தைப் ப்ரயோகித்தார். ஆகவே, இப்பாட்டில் எம்பெருமானுடைய திருவடிகளை ஸாக்ஷாத்கரிப்பதுதான் புருஷார்த்தமென்றும், அவனை மனத்தில் வைப்பது தான் உபாயமென்றும், அவனே நமக்கு சித்த உபாயமாயிருந்து கொண்டு நமக்கு இஷ்டப்ராப்தி அநிஷ்ட நிவ்ருத்திகளைச் செய்து கொடுக்கிறானென்று பின்வார்த்தைகளால் தானும் நெஞ்சுக்குபதேசித்துப் ப்ரபந்தத்தைத் தலைக்கட்டினார்.

சுபமஸ்து.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.
எம்பெருமானார் திருவடிகளே சரணம்.
ஸ்ரீ தேசிகன் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

பிரபந்த ஸாரம்.

அருண் மிகுத்த வொருவடிவாய்க் கச்சி தன்னி
லைப்பசி மாதத்திருவோணத்து நாளிற்
பொருண் மிகுத்த மறைவிளங்கப் புவியோருய்யப்
பொய்கைதனில் வந்துதித்த புனிதனார் தம்
இருளதனிற் றண்கோவலிடை கழியிற்
றிருவருடனிற்க மாலிடை நெருக்கத்
திருவிளக்காமென வையந்தகளி நூறும்
செழும் பொருளை யெனக்கருள்செய் திருந்தாரே.

பதம்	பொருள்
பொருள் மிகுத்த	அர்த்தபுஷ்டியுள்ள
மறை விளங்க	வேதங்கள் (இவ்வுலகில்) பிரகாசிக்கும்படியாகவும்
புவியோர் உய்ய	பூமியிலுள்ளவர்கள் உஜ்ஜீவிக்கும்படியாயாகவும்
கச்சி தன்னில்	காஞ்சீநகரத்தில்
பொய்கை தனில்	தாமரைத் தடாகத்தில்
ஐப்பசி மாத திருவோணத்து நாளில்	ஐப்பசிமாதத்தில் திருவோண நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில்
அருள் மிகுத்த ஒரு வடிவாய்	திருவருள் பூர்ணமான திருவடிவத்துடன்

பதம்	பொருள்
வந்துதித்த	[illegible]
புனிதர்	[illegible]
தீ	[illegible]
முன்னும்	[illegible]
இருள்	[illegible]
அதனில்	[illegible]
தண்	[illegible]
கோவல்	[illegible]
இடைகழி	[illegible]
[illegible]	[illegible]
மால்	[illegible]

இடை நெருக்க	நடுவிலே வந்துங் கழி நெருக்கிட	செழும் பொருளை	உயர்ந்த வேதார்த்தங்களை
திருவிளக்கா மென	உயர்ந்த விளக்குப் போன்ற	எனக்கு	அடியேனுக்கு
வையந்தகளி நூறும்	வையந்தகளி என்று ஆரம்பித்துப் பாடிய நூறு பாசுரங்களா கிற	திருந்த	ஸம்சயமின்றித் தெரியும்படி
		அருள் செய்	அநுக்ரஹம் செய்ய வேணும்.

ஸ்ரீ காஞ்சீ நகரத்தில் ஒரு தாமரைத்தடாகத்தில் ஐப்பசித் திருவோணத்திலவதரித்தருளின பொய்கை முனிவரை ஸ்ரீ தேசிகன் வணங்கி, அவர் அருளிய முதல் திருவந்தாதியையும் அதில் சொல்லப்பட்டிருக்கும் உயர்ந்த பொருள்களையும் தான் ஐயமறத் தெரிந்துகொள்ளுமாறு அருள்புரிய வேண்டுமென்று பிரார்த்திக்கிறார் இப்பாட்டில்.

அருள்மிகுத்த:—தத்வஹித புருஷார்த்தங்களைத் தெளிவாகச் சொல்லுகிற ப்ரபந்தத்தை அருளிச்செய்து உலகை உஜ்ஜீவிக்கச் செய்தபடியால் அருள் என்பதே ஒரு சரீரத்தை எடுத்துக்கொண்டு வந்தாற்போல் இவ்வாழ்வார் தோன்றினார் என்பதாம்.

கச்சி நன்னில்:— காசி முதலாகிய நன்னகரியெல்லாம் கார் மேனியருளாளர் கச்சிக்கொவ்வா என்று புகழ்வாய்ந்த காஞ்சி நகரத்திலே என்றபடி.

ஐப்பசி:— ஐப்பசி மாதத்தில் சிரவண நக்ஷத்திரத்தில்.

பொருள்மிகுத்தமறை—ஸ்ரிய: பதியான நாராயணனே பரதேவதையென்கிறவுயர்ந்தபொருளை உட்கொண்ட வேதங்கள் முதல் திருவந்தாதி என்கிற பிரபந்த ரூபமாகவுலகில் விளங்குகிறது என்பது.

புவியோருய்ய:—இவர் அவதரித்துப் பிரபந்தங்களைப்பாடியதால் உலகிலுள்ளார் உய்ந்துபோனார்கள்.

பொய்கைதனில் + புனிதா:—சொன்னவண்ணம் செய்தபெருமானுடைய திருக்கோயிலுக்கருகேயுள்ள புஷ்கரிணியில் அயோநிஜராய்த் தோன்றியபடியால் புனிதரென்று வழங்கப்படுவர்.

இருளதனில்:— ஒருநாள் இரவில் கல்லமழைபெய்யுங்கால் முதலாழ்வார்கள் மூவரும் கோவலூரில் ஓரிடைகழியில் நிற்கத் திரு

மால் நெருக்கவே அவரை நெஞ்சென்னுமுட்கண்ணால் கண்டனுபவித்து (அப்படி அநுபவித்ததையே பேசுகிற) பாசுரங்களைப்பாடியருளினரென்பது. திருமால் இடைகழியில் நெருக்கியது "நீயும் திருமகளும்" என்கிற இவ்வாழ்வார் பாசுரத்திலேயே காணலாம்.

திருவிளக்காமெனா:—உலகத்தில் ஒரு விளக்கு மறைந்திருக்கும் பொருளைக்காட்டுவதுபோல், ஸர்வேச்வரனாகிற பொருளை இவரருளிய பிரபந்தம் காட்டுகிறது என்றபடி.

எனக்கருள் செய்:—அநந்ய கதிகளையும் ஆழ்வாருடைய சரணங்களே ப்ராப்ய ப்ராபகங்களென்று எண்ணியிருக்கிற அடியேனுக்கு அருள்புரியவேணுமென்றபடி.

ஸ்ரீ தேசிகன் திருவடிகளே சரணம்.

திருக்குடந்தை ஸ்ரீ ஆராவமுதாழ்வார் [illegible]

சிரோமணி

ப. ஸ்ரீநிவாஸராகவாசாரியர்

இயற்றிய

முதல் திருவந்தாதி உரை

முற்றிற்று.




ஸ்ரீ:

பொய்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

முதல் திருவந்தாதியின் செய்யுளகராதி.

சுபமஸ்து.



ஸ்ரீ:

பூதத்தாழ்வார் திருவடிகளே சரணம்.

பூதத்தாழ்வார் அருளிச்செய்த

இரண்டாந் திருவந்தாதி



திருக்குடந்தை ப. ஸ்ரீநிவாஸராகவன். (சிரோமணி)

இயற்றிய "அம்ருதவர்ஷிணீ" என்னும் உரையுடன்,

திருக்குடந்தை ஸ்ரீ பராங்குச பக்தஸபையாரால்


—: 0 :—

ஸ்ரீ ஜனார்த்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட்,

அச்சிடப்பட்டது.

[illegible]

1938.



பொது தனியன்கள்.




रामानुजदयापात्रं ज्ञानवैराग्यभूषणं ।
श्रीमद्वेङ्कटनाथार्यं वन्देवेदान्तदेशिकं ॥ ॥ १ ॥

लक्ष्मीनाथसमारंभां नाथयामुनमध्यमां ।
अस्मदाचार्यपर्यन्तां वन्देगुरुपरंपराम् ॥ ॥ २ ॥

योनित्यमच्युत पदांबुजयुग्मरुक्म
व्यामोहतस्तदितराणि तृणाय मेने ।
अस्मद्गुरोर्भगवतोऽस्यदयैकसिन्धोः
रामानुजस्य चरणौ शरणं प्रपद्ये ॥ ॥ ३ ॥

माता पिता युवतयस्तनया विभूतिः
सर्वं यदेव नियमेनमदन्वयानां ।
आद्यस्यनः कुलपतेर्वकुळाभिरामं
श्रीमत्तदङ्घ्रियुगळं प्रणमामि मूर्ध्ना ॥ ॥ ४ ॥

भूतं सरश्च महदाह्वय भट्टनाथ
श्रीभक्तिसार कुलशेखर योगिवाहान् ।
भक्तांघ्रिरेणु परकाल यतीन्द्र मिश्रान्
श्रीमत्पराङ्कुशमुनिं प्रणतोऽस्मिनित्यम् ॥ ॥ ५ ॥



ஸ்ரீ:

பூதத்தாழ்வார் அருளிய

இரண்டாந் திருவந்தாதி.

இப்பிரபந்தம் பூதத்தாழ்வார் அருளிச்செய்தது. திருக்கோவலூரில் ம்ருகண்டு முனிவரதில்லத்தின் இடைகழியில் பொய்கையார் பேயார் என்கிற இருவருடன் இவ்வாழ்வார் நிற்குங்கால் திருமால் இவர்களை நெருக்கவே பொய்கையார் "வையந்தகளியா" என்று ஒரு விளக்கேற்றி அப்பெருமானைக்கண்டு மகிழ்ந்து அப்பெருமானது ஸ்வரூப ரூபகுண விபூத்யாதிகளை நூறு பாசுரங்களால் பேசியபின் அடுத்தபடியாக இவ்வாழ்வார் அன்பு ஆர்வம் இன்பு முதலியவைகளைக்கொண்டு விலக்ஷணமான விளக்கொன்றையேற்றி அவனை ஸாக்ஷாத்கரித்து நூறுபாசுரங்களாலே அவ்வநுபவத்தைப் பாடிநின்றார். ஆழ்வார்களுள் முதல்வர்களான மூவருள் இரண்டாவதான இவ்வாழ்வார் அருளிச்செய்தபடியாலும் முதலாவதான முதல் திருவந்தாதி அவதரித்தபின்பு இப்பிரபந்தம் அவதரித்தபடியாலும் இதற்கு இரண்டாந் திருவந்தாதியெனப் பெயர். இது நாலாயிர திவ்யப்பிரபந்தத்தில் இயற்பா என்னும் பகுதியில் இரண்டாவது பிரபந்தமாகவமைந்திருக்கும்.

பொய்கையாழ்வார் இவ்வுலகில் காணப்படும் பொருள்களைக் கொண்டே ஈச்வரனை அறியலாமென்றார். கண்களில் தென்படுகிற பதார்த்தங்களைத்தவிர வேறு காரணமாயிருக்கும் பொருளொன்று கிடையாது என்றெண்ணி இவ்வுலகவாழ்க்கையிலே விருப்பமுள்ளவர்களும் வெளியே காணப்படும் பொருள்களான பூமி கடல் கதிரவன் இவைகளைக்கொண்டு ஈச்வரன் உளனென்றறியலாமென்றார். இவ்வாழ்வார் முதல்வருடன் கூடியிருந்து அப்பெருமானையும் அவனுடைய விபூதிகளையும் அநுபவித்தபடியால், முதல் திருவந்தாதியால் ஈச்வரனையும் அவனுடைய விபூதிகளையும் உள்ளபடி யாவரும் அறிந்திருப்பார்களெனக்கருதி வெளியே தென்படும் பதார்த்தங்களைக்

கருவியாகக்கொள்ளாமல் உடம்பினுள்ளே பிறக்கக்கூடிய அன்பு ஆர்வம் இன்பு முதலிய அவஸ்த்தாபேதங்களையுடைய பக்தியை ஸாதனமாக்கி அவனைக்காணலாமென்று கருதினர். ஆகவே பொய்கையார் புறம்பேயுள்ள பொருளைக்கொண்டே பகவனைக்காணலா மென்றார். பூதத்தார் உள்ளேயுள்ள பொருளாலேயே காணலா மென்றார். பிறகுபேயார் அவ்வநுபவத்தை நமக்கு விளக்கிக்காட்டினரென்றும் தோன்றுகிறது. ஆகவே இப்பூதத்தாழ்வார் ஞானச்சுடர் விளக்கேற்றி நாரணனை அநுபவித்து அவ்வநுபவத்தைப் பின்னுள்ளாரும் அறிந்துவாழும்படி இப்பிரபந்தத்தைச் செய்தருளினர்.





ஸ்ரீ:

ஸ்ரீ ஆராவமுதாழ்வான் கோமளவல்லித் தாயார்

திருவடிகளே சரணம்.

பூதத்தாழ்வார் பொன்னடிகளே சரணம்.

இரண்டாந் திருவந்தாதி

தனியன் வ்யாக்யானம்.

திருக்குருகைப்பிரான் பிள்ளான் திருவாய்மலர்ந்தருளிய தனியன்.

என்பிறவிதீர விறைஞ்சினே னின்னமுதா
அன்பே தகளி யளித்தானை— நன்புகழ்சேர்
சீதத்தார் முத்துக்கள் சேருங் கடன்மல்லைப்
பூதத்தார் பொன்னங் கழல்.

இன் அமுது ஆ	தித்திப்புள்ள அம்ருதமாக	கடல் மல்லை	[illegible]
அன்பே தகளி அளித்தானை	'அன்பே தகளியா' என்று ஆரம்பித்து பாடிய பிரபந்தத்தை நமக்குக் கொடுத்தருளும்	பூதத்தார்	[illegible]
		பொன் அம் கழல்	[illegible]
நல் புகழ் சேர்	நல்லதான கீர்த்தியை அடையப் பெற்று	என் பிறவி தீர	[illegible]
சீதத்து ஆர் முத்துக்கள் சேரும்	குளிர்ச்சியால் பூர்ணமான முத்துக்கள் சேருகிற	இறைஞ்சினேன்	[illegible]

என்பிறவிதீர:— இரண்டாந்திருவந்தாதி [illegible] பந்தத்தை நமக்குக் கொடுத்தருளிய [illegible] கொடிய ஸம்ஸாரம் தொலைவதற்காக [illegible] ன்பது இத்தனியனில் பேசப்படுகிறது. நல்ல கீர்த்தியை [illegible] தும் கடலிலிருந்து அலைகளால் கொணர்ந்து [illegible] இயுள்ள முத்துக்கள் சேர்ந்திருக்கிறதுமான [illegible]

(மஹாபலிபுரம்) என்கிற திவ்யதேசத்திலவதரித்தவரும், ஸம்ஸாரமாகிற நெருப்பால் சூழப்பட்ட சேதனர்களை அம்ருதம்போல் உய்விக்குமதான அன்பேதகளியா என்று தொடங்கிய பிரபந்தத்தை நமக்குதவினவருமான பூதத்தாழ்வாரை என் பிறவித்துயர் நீங்கக் கருதி வணங்கினேன் என்கிறார்.

என்பிறவிதீர:— பூதத்தாழ்வாருடைய திருவடிகளைப்பற்றினால் ஸம்ஸாரபந்தம் தொலையுமென்பதாம்.

இன்னமுதா:— ஸம்ஸாராக்நி விதீபன வ்யபகத ப்ராணாத்ம ஸஞ்ஜீவிநீம் என்னும்படி ஸம்ஸாரமாகிற தீயால்சூழப்பட்டு ஸர்வேச்வரனாகிற உயிரை இழந்திருக்கும் சேதனர்களைப் பிழைப்பூட்டும்படியான அம்ருதம் போன்ற அன்பே தகளியா என்றுபக்ரமித்துப் பாடிய திருவந்தாதியை நமக்குக் கொடுத்த பரமோபகாரகர். அமுதன்ன சொன்மாலை யேத்தித்தொழுதேன், என்றும் இருந்தமிழ் நன்மாலை இணையடிக்கே சொன்னேன் என்றும்படியான இவர்தம் பாசுரங்களையும் காண்க. ஆகவே "இன்னமுதா அன்பேதகளி யளித்தானை" என்னுமளவால் இவ்வாழ்வாருடைய அறிவின் மேன்மை பேசப்பட்டது.

நன்புகழ்சேர்:— எண்ணிறந்த புகழினான் என்கிற ஸர்வேச்வரன் நித்யவாஸம் செய்வதாலும், பகவத்குணாநுபவத்தாலேயே ஸத்தைபெற்ற பூதத்தாழ்வாருக்குப் பிறந்தகமாயிருப்பதாலும் நல்ல கீர்த்தியையுடையதாயிற்றுத் திருக்கடல்மல்லை என்னும் க்ஷேத்ரம்.

சீதத்தார் முத்துக்கள்:— "வங்கத்தால் மாமணிவந்துந்து முன்னீர் மல்லை" என்னும்படி கடற்கரையிலுள்ள தேசமாதலால் கடலிலிருந்து வந்துசேரும் குளிர்ந்த முத்துக்கள் குவியல் குவியலாக நிறைந்திருக்கும் நிலம். குளிர்ந்த ஸமுத்திரத்தில் உண்டாவதால் முத்துக்கள் குளிர்ச்சியையே இயல்பாகக் கொண்டிருக்கும்.

அல்லது, வானவரால் வணங்கப்படும் முதல்வனான பரமபத நாதன் கருணையால் நிறைந்தவனாய் எல்லையற்ற தோற்றவந்து சேர்ந்திருக்கும் திவ்யதேசம் என்னவுமாம்.


அல்லது இந்நிலத்திலேயே ஸம்ஸாரத்திலிருந்து விடுபட்டவரென்று சொல்லுவதற்கிடமான பெருமைவாய்ந்த பூதத்தாழ்வாராகிற முத்து சேர்ந்தவிடம் என்னும் கொள்ளலாம்.

கடல்மல்லை பூதத்தார்:— மஹாபலிபுரம் என்று வழங்கப்படுகிற கடல்மல்லை என்னும் திவ்யதேசத்தில் குருக்கத்திப்பந்தரில் ஒரு குருக்கத்திமலரில் ஐப்பசி மாதத்தில் அவிட்ட நக்ஷத்திரத்தில் அவதரித்த பூதத்தாழ்வாருடைய திருவடிகளை "மேவினேனவன் பொன்னடி மெய்ம்மையே" என்னும் கணக்கிலே வணங்கினேன் என்றபடி.

பகவத் குணங்களையே அநுபவித்து உயிர்தரித்திருந்தமையாலும். "ஜ்ஞானீ த்வாத்மைவமேமதம்" என்கிறபடி ஸர்வேச்வரனுக்கு ஆத்மபூதராகச் சொல்லும்படியான ஜ்ஞானியாயிருந்தபடியாலும் இவ்வாழ்வாருக்குப் பூதத்தார் என்று பெயர். இப்பெயர் வடமொழியில் ஸு-ஸத்தாயாம் என்கிற யாதுவாலும் ஆத்மவாசியான ஸுத சப்தத்தாலும் தேர்ந்ததெனக் கொள்க.

தனியன் வ்யாக்யானம் முற்றிற்று.





॥ ஸ்ரீ: ॥

ஸ்ரீமதே ஹயவதந பரப்ரஹ்மணே நம: ॥

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ॥

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: ॥

பூதத்தாழ்வார் அருளிச்செய்த

இரண்டாந்திருவந்தாதி.

(திருக்குடந்தை ஸ்ரீ ஆராவமுதாழ்வான் ஸந்நிதி வீதி ப. ஸ்ரீநிவாஸராகவாசாரியர் இயற்றிய அம்ருதவர்ஷிணீ என்னும் உரையுடன்)

அன்பேதகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தையிடு திரியா—நன்புருகி
ஞானச்சுடர்விளக்கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான். (1)

அன்பே	பக்தியாகிற ஸ்நேஹமே
தகளி ஆ	அகலாகவும்
ஆர்வமே	அந்த பக்தியாலுண்டான அபிநிவேசமே
நெய் ஆக	நெய்யாகவும்
இன்பு உருகு சிந்தை	எம்பெருமானிடமுள்ள ருசியினால் நீராய் உருகுகிற மனமானது
இடு திரி ஆ	அகலில் போடப்படுகிற திரியாகவும் செய்துகொண்டு
ஞான தமிழ் புரிந்த நான்	பகவத்ஞானத்தைத் தரக்கூடிய தமிழ் பாஷாமயமான பிரபந்தத்தைச் செய்த நான்
நன்பு உருகி	ஆத்மாவும் கரையப்பெற்று
நாரணற்கு	ஸ்ரீமந்நாராயணனுக்கு
ஞான சுடர் விளக்கு	ஞானமாகிற ப்ரகாசிக்கிற விளக்கை
ஏற்றினேன்	ஏற்றிவைத்தேன்.

அன்பே தகளியா:— உலகத்தில் மறைந்திருக்கிற [illegible]
ருளை ஒரு அகலில் எண்ணெயை அல்லது நெய்யை வார்த்து [illegible]
திரியைப் பொகட்டுத் தீயேற்றிக் காண்பதுபோல் இவ்வாழ்வார்
ஸர்வேச்வரனென்கிற பொருளை ஒரு விளக்கேற்றிக் கண்டார். [illegible]
மால் உலகிலுள்ள பொருள்களைப் போலாது விலக்ஷணனானபடி
யால் அவனைக் காண்பதற்கு ஓர் விலக்ஷணமான விளக்கை ஏற்று
கிறார். அன்பை அகலாகவும் ஆர்வத்தை நெய்யாகவும் இன்புருகு
சிந்தையைத் திரியாகவும் வைத்து அறிவு என்கிற விளக்கையேற்றி
ஞர். அன்பு, ஆர்வம், இன்பு என்ற பதங்கள் எம்பெருமானிட
முள்ள காதல் என்கிற ஒரு பொருளையே இங்கு சொல்லுவதாயி
க்கத் தனித்தனியான பொருளாகக் கருதி அகலாகவும் நெய்யாக
வும் திரியாகவும் நிரூபித்திருப்பதற்குக் காரணம் யாதெனில், தமக்
க்கு எம்பெருமானிடம் உள்ள காதல் [illegible]
துபோல் நாளுக்கு நாள் வளர்ந்து ஆர்வம் இன்பு என்கிற அவஸ்
தாபேதங்களை யடைந்து அவனையே நோக்கி நிற்கிறது என்பதைக்
காட்டுவதற்கென்றே. எம்பெருமானிடம் [illegible]
கிற பக்தியென்கிற காதலால்தான் அவனைக் [illegible]
தோன்றும். அன்பு என்பதே வளர்ந்து ஆர்வம் [illegible]
யும் அதுவே மீண்டும் வளர்ந்து இன்பு [illegible]
ந்ததாகக் கொள்க. ஆகவே இப்படி [illegible]
ண்டிருக்கிற பக்தியால் பரமாத்ம [illegible]
பரமபுருஷனைக் கண்டேனென்பதுபற்றி [illegible]
காணலாமென்பது தோன்றும். [illegible]
விஷயங்களையும் அநுபவிக்கப்புகாமல் [illegible]
மனத்தைத் [illegible].

நன்புருகி:— நன்பு [illegible]
பெருமானுக்கு [illegible]
[illegible]
[illegible]
[illegible]
இப்படி [illegible]
[illegible] என்பதாம்.

ஞானச்சுடர் விளக்கேற்றினேன்:— *ஞானமாகிற விளக்கு. கண் காது முதலிய இந்திரியங்களால் அறிய முடியாமல் அறிவிற்கே அகப்படும் பொருளாதலால் அறிவாகிற விளக்கால் நாரணனைக் கண்டாரென்க.*

ஞானத்தமிழ் புரிந்த:— *பிரபந்தத்தின் ஆரம்பதசையிலேயே செய்துவிட்டதாகப் பேசினார். "என்றால் தன்னை இன்தமிழ்பாடிய வீசனை" தன்சொல்லால் தான் தன்னைக் கீர்த்தித்த மாயன்" என்பதற்கிணங்க ஸர்வேச்வரனே தன்னைக்கொண்டு கவிபாடுவதாக நினைத்தபடியால் அவனுடைய ஸத்யஸங்கல்பதையை நினைத்து "தமிழ் புரிந்த" என்றுபிரபந்தத்தைச்செய்துமுடித்துவிட்டதாகவேபேசினார்.*

ஞானத்தால் நன்குணர்ந்து நாரணன்றன் நாமங்கள்
தானத்தால் மற்றவன்பேர் சாற்றிறுல்— வானத்
தணியமர ராக்குவிக்கு மஃதன்றே, நங்கள்
பணியமரர் கோமான் பரிசு. (2)

நாரணன் தன்	ஸ்ரீய: பதியான நாராயணனுடைய	நங்கள் பணி அமரர்	நமக்கு உறவினர்களாயும் பகவத்கைங்கர்யத்தை தொழிலாக கொண்டவர்களுமான நித்யஸூரிகளுக்கு
நாமங்கள்	திருநாமங்களையும்	கோமான்	ஸ்வாமியான ஸர்வேச்வரனுடைய
மற்று	மற்றுமுள்ள	பரிசு	ஸ்வபாவமானது (தன்மை)
அவன் பேர்	அவனுடைய குணங்களைச் சொல்லும் திருநாமங்களையும்	வானத்து அணி அமரர்	பரமபதத்துக்கு அலங்காரபூதர்களான நித்யஸூரிகளாக
ஞானத்தால் நன்கு உணர்ந்து	(அன்புடன் கூடிய) அறிவினால் நன்றாய்த் தெரிந்துகொண்டு	ஆக்குவிக்கும் அஃதன்றே	செய்விக்கும் அதுவல்லவா.
தானத்தால்	பக்தி என்கிற ஸ்தானத்தால்		
சாற்றிறுல்	சொல்லிக்கொண்டிருந்தால்		

கீழ்ப்பாட்டில் நல்லறிவைக் கொடுக்கக்கூடிய தமிழ்ப் பிரபந்தத்தை செய்யத் தொடங்கின நான் அன்பு ஆர்வம் முதலியவைகளைக் கொண்டு ஸர்வேச்வரனைக் காண்பிக்கும்படி விளக்கையேற்றினேன்

னென்றார். இப்பாட்டில் அவனைக் கவிபாடுகிறவர்கள் அடையும் புருஷார்த்தத்தைச் சொல்லுகிறார்.

ஞானத்தால்:— ஸ்ரீமந்நாராயணனுடைய திருநாமங்களை நன்றாய்த் தெரிந்துகொண்டு அவைகளின் அர்த்தங்களையும் செவ்வனே உணர்ந்து, அவ்வர்த்தங்களை அநுஸந்திப்பதால் அவனிடம் பிறந்த ப்ரீதியின் எல்லைநிலமான பரமபக்தியாலே அவன் திருநாமங்களை வாயாரவாழ்த்தி நிற்கின்றவர்களை நித்யஸூரிநாதனான பெருமான் தன்னிடம் ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் கைங்கரியம் செய்துகொண்டிருக்கிற நித்யஸூரிகளாகச் செய்துவிடுகிறார். தன்னுடைய நாமங்களை பக்தியால் சொல்லுபவர்களை நித்ய ஸூரிகளாகச் செய்வது தான் பெருமானுடைய தொழில். அது தான் அவனுடைய தன்மை. ஆதலால் நாமும் இப்பிரபந்த [illegible] அவனைப் பேசினால் நம்மையும் அவன் நித்ய ஸூரிகளாகச் [illegible] வன் என்று, வானோர் வாழ்ச்சி பெறுவதே நாம் அடையும் [illegible] யோஜனம் என்றார்.

இப்பாட்டின் முன்னடிகளுக்கு இரண்டுவகையாகப் [illegible] கூறுவதுண்டு. 'நாராயணனுடைய திருநாமங்களை [illegible] உணர்ந்து அத்திருநாமங்களையே பக்தியினால் [illegible] னால், வானத்தணியமரர் ஆக்குவிக்குமென்பது [illegible] மடியில் 'மற்றவன் பேர்' என்ற பதம் இல்லா [illegible] ருள் கிடைக்குமாதலால் 'மற்றவன் பேர்' [illegible] ஆலோசித்து வேறு வகையாகவும் பொருள் கூறுவதுண்டு.

அதாவது எம்பெருமானுக்கு ஆயிரக்கணக்கான [illegible] பினும் அவைகளை இருவகையாகப் பிரிக்கலாம் [illegible] ருங்கள விக்ரஹத்தைப்பற்றிய நாமங்கள் [illegible] களைப் பற்றிச் சொல்லுகிற நாமங்கள் [illegible].

(வநமாலீ, சார்ங்கீ, [illegible] முதலியன [illegible] வரும் திருநாமங்கள்.) [illegible] முதலியன குணவிஷயங்களைச் [illegible] லுள்ள நாமங்கள் என்ற பதத்தி[illegible] பெயர்கள் என்றும், இரண்டா[illegible]

திற்த குணவிபூத்யாதிகளைச் சொல்லுகிற நாமங்கள் என்றும் கொண்டு அவனுடைய விக்ரஹ யோகத்தைச் சொல்லும் பெயர்களை நன்றாய் உணர்ந்து, குணவிபூத்யாதிகளைச் சொல்லுகிற பெயர்களை பக்தியால் பேசினால் வானத்தணியமரர் ஆக்குவிக்கும் என்பது.

அவனுடைய திருநாமங்களை சிலப்பேர் வீரப்பேர் என இரு வகையாகப் பிரிப்பதுமுண்டு. வத்ஸல: அநிருத்நாதா முதலியன சிலப்போர். மதுஸூதந: முராரி: சத்ருக்ந: முதலியன வீரப் பேர். ஆனதுபற்றி இப்பாட்டில் முதலடியில் "நாரணன் தன் நாமங்கள்" என்றும். இரண்டா மடியில் "மற்றவன் பேர்" என்றும் பதங்களை ப்ரயோகித்ததென்பார் சிலர்.

மற்றும் சிலர் அவனுக்கு ப்ரஸித்தமாயிருக்கும் நாராயணன் வாஸுதேவன் விஷ்ணு முதலிய நாமங்களை உணர்ந்து மற்றுமுள்ள குணயோகத்தைச் சொல்லும் நாமங்களையும் வாயால் பேசினால் அவன் தன்னை நித்யஸூரிகளாகச் செய்வன் என்பார்கள்.

வானத்தணியமரர்:— பரமபதத்திற்கு அலங்காரபூதர்களான நித்யஸூரிகள். அப்ராக்ருத திவ்ய தேஜோமயமான திருவுடம்புடைய ஸூரிகள் என்றபடி.

நங்கள் பணியமரர்:— எப்போதும் கைங்கர்யத்தையே தொழிலாகக்கொண்டமையால் பணியமரர் என்று நித்யஸூரிகளுக்குப் பெயர். தம்மை அவர்களோடொக்கப் பகவதநுபவத்தைப் பெறும் பேறுடையோராதலால் தமக்கு உறவினர் என்று கருதி "நங்கள்" என்றார். அல்லது நமக்கு ஸேவ்யபூதர்களான ஸூரிகள் என்றும் சொல்லலாம். "கோமான்" அவர்களுக்கு ஸ்வாமியான பெருமான்.

[illegible]:— அப்பெருமானுடைய [illegible], இங்ஙனம் செய்யும். அவ்வானத்தணியமரர் [illegible]. நித்யஸூரிகளை [illegible] கொடுக்கும் என்பது.

பரிசு நறுமலரால் பாற்கடலான் பாதம்
புரிவார் புகப்பெறுவர் போலாம் — புரிவார்கள்
தொல்லமரர் கேள்வித் துலங்கொளிசேர் தோற்றத்து
நல்லமரர் கோமான் நகர். (3)

பரிசு நறு மலரால்	அழுகுமாருத பரிமளம் மிகுந்த புஷ்பங்களால்
பாற்கடலான் பாதம்	திருப்பாற்கடலில் பள்ளியமர்ந்த பெருமானுடைய திருவடிகளை
புரிவார்	ஆசைப்பட்டுத் தொழுகிறவர்கள்
புரிவார்கள்	பகவானைத் தொழுவதில் விருப்பமுள்ளவர்களான
தொல் அமரர்	பழயர்களான பிரமன் இந்திரன் முதலியதேவர்களுக்கும்
கேள்வி	(காணமுடியாமல்) கேள்வியினால் மாத்திரம் தெரியப்படுகிறதாயும்
துலங்கு ஒளி சேர்தோற்றத்து	நன்றாய் பிரகாசிக்கிற தேஜஸ்ஸோடு கூடின தோற்றத்தையுடையதுமான
நல் அமரர் கோமான் நகர்	நன்மைபொருந்திய தேவர்களான நித்ய ஸூரிகளுடைய ஸ்வாமியான நாராணனுடைய நகரமான ஸ்ரீவைகுண்டத்தை
புகபெறுவர் போலாம்	நுழையப்பெறுவார்கள்

பரிசு:—கீழ்ப்பாட்டில் ஸர்வேச்வரன் தன் திருநாமங்களைச் சொல்லுகிறவர்களை நித்ய ஸூரிகளாகச் செய்கிறான் என்றார். அக் குணத்திலே தாம் ஈடுபட்டதைப் பேசுகிறாரிப்பாட்டில். தன்னடியார்களான தேவர்களுடைய துன்பங்களைத் தொலைப்பதற்கென்று தன் உலகத்தைவிட்டு திருப்பாற்கடலில் வந்து பள்ளியமர்ந்த பெருமானை அப்பொழுது மலர்ந்து பரிமளம் வீசுகிற நல்ல புஷ்பங்களைக் கொண்டுவந்து பக்தியுடன் பூஜிப்பவர்கள் பிரமன், இந்திரன் முதலிய தேவர்களாலும் இதுகாறும் கண்டறியாத தேஜோமயமான பரமபதமென்கிற வானவர் நாட்டை அடைந்து பெருமகிழ்ச்சியுடன் வாழ்கிறார்கள். இது என்ன அவன் செய்யுமுபகாரத்தின் சீர்மை! என்று வியப்பை அடைகிறார்.

பரிசு நறுமலரால் அப் பெருமானுடைய திருவடிகளை அர்ச்சிப்பதற்குத் தகுந்த செவ்வி மாறாத வாஸனையுள்ள புஷ்பங்களால் தொழுமவர்கள்.

பாற்கடலான் ஸம்ஸாரிகளை அக்கரைப்படுத்தவேணுமென்று நினைத்துத் தன் உலகைவிட்டு நம்மிடம்வந்து சேர்ந்துள்ள ஸுலபனான பெருமான்.

பெறுவர்போலாம்:—போல் என்பது வாக்யாலங்காரம். இங்கு அதற்குப் பொருள்கிடையாது. நித்ய ஸூரிநாதனுடைய நகரத்தை நுழையப் பெறுவார்கள் என்றே பொருள்.

புரிவார்கள் + கேள்வி ஸ்நானம், ஜபம், த்யானம் முதலிய ஸாதனமான தர்மங்களைச் செய்துகொண்டு நம்மிலும் முந்தினவர்களென்று ப்ரஸித்தியுள்ள பிரமன் முதலிய தேவர்களும் ஸ்ரீமந் நாராயணனுடைய லோகமான பரமபதத்தை காதுகளால் கேட்டறிந்திருக்கிறார்களேயல்லது கண்டறிந்ததில்லை. தேவர்களுக்கும் எட்டவொண்ணாத நிலம் ஸ்ரீவைகுண்டம். அத் தேவர்களுடைய நினைவிற்கும் அகப்படாதவிடம். ஆனதுபற்றி தேவர்களும் காதால் கேட்டதன்றி கண்ணால் கண்டறியாதவிடம் என்கிறார்.

துலங்கொளிசேர்:— "ப்ரஹ்மணஸ் ஸதநா தூர்த்வம் தத் விஷ்ணோ: பரமம்பதம்" | சுத்தம் ஸநாதனம் ஜ்யோதி:" | "என்றும் அப்ராக்ருதம் ஸூர்யைர்வந்த்யம் அயுதார்க்க ஸமப்ரபம்" என்றும் 'அத்யர்க்காநல தீப்தம் தத்' என்றும் பதினாயிரம் ஸூரியன்கள் உதித்தாலொத்த ஒளி வீசுகிறதென்றும், ஸூர்ய சந்திராக்நிகளுடைய ஒளியையும் ஒழிக்கவல்லவொளியுள்ளதென்றும் சொல்லியிருப்பதால் இங்கு துலங்கொளிசேர் தோற்றத்து என்றார் முதல் தோற்றத்திலேயே கண் கூசும்படியான ஜ்யோதியானவுலகம் என்பதாம்.

நல்லமரர் கோமான் நகர்:—இந்திராதிகளைப்போல் சில ஸமயங்களில் பகவானை மறவாமல் ஸர்வகாலங்களிலும் பகவத் கைங்கர்யமே தொழிலாகவிருப்பதால் நித்யஸூரிகளை நல்ல அமரர்கள் என்றார். அவர்களுக்கும் நாதனை ஸ்ரீய:பதியை நிர்வாஹகனுகக்கொண்ட நகரம் பரமபதம். அவனைப் பூக்களாலேத்துகிறவர்கள் அவ்வுலகத்தைக் கிட்டுவார்கள் என்றபடி.

நகரிழைத்து நித்திலத்து நாண் மலர்கொண்டு, ஆங்கே
திகழுமணிவயிரம் சேர்த்து—நிகரில்லாப்
பைங்கமல மேந்திப் பணிந்தேன், பனிமலராள்
அங்கம் வலங்கொண்டா னடி. (4)

நகர் இழைத்து	(என்னுடைய நெஞ்சை) கோயிலாக வமைத்து	நிகர் இல்லா பைம் கமலம் ஏந்தி	ஒப்பில்லாத பக்தியாகிற அழகான தாமரைப் புஷ்பத்தை எடுத்துக்கொண்டு
ஆங்கே	அந்தக் கோயிலில்		
நித்திலத்து நாள் மலர் கொண்டு	(ஸ்நேஹமாகிற) முத்தைவெளியிலுள்ள இதழ்களாக வைத்து	பனிமலராள் அங்கம்	குளிர்ந்த தாமரைப் பூவிலுதித்த பெரிய பிராட்டியாருடைய திருமேனியை
திகழும் மணி வயிரம் சேர்த்து	ஒளிமிகுந்த மாணிக்க வயிரங்கள் போன்ற 'சேர்க்கை' 'ஆசை'யென்பவைகளை உள்ளிதழாகவும் தாதுக்களாகவும் வைத்து	வலம்கொண்டான்	தனது வலமார்பினில் வைத்துக் கொண்ட பெருமானுடைய
		அடி பணிந்தேன்	திருவடிகளை தொழுதேன்.

நகரிழைத்து:—இவ்வாழ்வார் முதல் பாசுரத்தில் ஒரு லோக விலக்ஷணமான விளக்கேற்றிப் பெருமானைக் கண்டதாகச் சொன்னதுபோல் இப்பாட்டில் ஒரு விலக்ஷணமான புஷ்பத்தால் எம்பெருமான திருவடிகளைப் பணிந்தேன் என்கிறார். அப்புஷ்பமாவது பக்தி யென்கிற தாமரைப் புஷ்பம். ஒரு தாமரைப் புஷ்பத்திற்கு வெளியேயுள்ள இதழ்கள் உள்ளிதழ்கள் தாதுக்கள் முதலியன விருப்பதுபோல் இந்த பக்தியாகிற தாமரைக்கும் ஸ்நேஹம் ஸங்கம் காமம் இவைகளாகிற பக்தியின் அவஸ்த்தா பேதங்களை வெளியிதழாகவும் உள்ளிதழாகவும் தாதுவாகவும் அமைக்கிறார்.

பக்தியாகிற தாமரைப் புஷ்பத்திற்கு வெளியிதழ் ஸ்நேஹம் என்பது. ஸ்நேஹம் என்பதையும் இங்கு நேரே சொல்லாமல் "நித்திலத்து" என்று முத்தாகிற வெளியிதழ் என்றார். ஏனெனில் இங்கு பக்தியாகிற தாமரைப்பூவும் பொன்மயமாக விருக்கவேணுமென்று ஆழ்வாருடைய கருத்தாதலால் பொற்றாமரைப்பூவிற்கு முத்துக்களாலிழைத்த இதழ்களிருந்தால் பொருத்தமுற்றிருக்கும் என்று கருதி "நித்திலத்து" என்றார். அதாவது ஸ்நேஹமென்கிற முத்தை வெளியிதழாகக்கொண்டு என்றபடி.

ஸங்கம் என்கிற பக்தியின் அவஸ்தையை "மணி" என்று மாணிக்கக்கல்லாகவைத்து அதை உள்ளிதழாகக் கொண்டும் காமம்

என்பதை வயிரமாகவைத்து அதை தாதுவாகக் கொண்டும் ரத்னங்களாலிழைத்த ஸுவர்ணமயமான தாமரைப் புஷ்பத்தை எடுத்து தன்னுடைய நெஞ்சு என்கிற ராஜதானியிலமர்ந்திருக்கும் திருவாழ் மார்பனுடைய திருவடியில் ஸமர்ப்பித்தேன் என்கிறார்.

இங்கு பக்தியை ஸுவர்ணமயமான தாமரைப்பூவாகவமைத்தும், ஸ்நேஹம் ஸங்கம் காமம் இவைகளை ரத்னமயமான பூவின் அவயவங்களாக வமைத்தும், இப்படி வமைத்த பூவால் பெருமாளைத் தொழுதேன் என்று சொல்வதற்குக்காரணம் யாதெனில், வெளியே அகப்படும் தாமரை, மல்லிகை, முல்லை முதலிய புஷ்பங்களை எடுத்துப் பூஜிப்பதைக்காட்டிலும் உடம்பினுள்ளே பிறக்கும் பக்தியால் பூஜிப்பது மேலானது என்பதுவே. ஆனதுபற்றியே அஹிம்ஸை, இந்திரிய நிக்ரஹம், ஸர்வபூததயை, பொறுமை, ஞானம், தபஸ், த்யானம், ஸத்யம் என்கிற எட்டு வகையான புஷ்பங்கள் பெருமானுக்கு மிகவும் உகப்பானவை என்று வெளியேயுள்ள புஷ்பங்களைக் காட்டிலும் ஆத்ம குணங்களாகிற புஷ்பங்களை மேலானவைகளாக எடுத்துப்பேசினர் முன்னோர்களும்.

இப்படி யமைத்த பக்தியாகிற பூ நிகரில்லாதது என்கிறார். ஈச்வரனிடமுள்ள காதலுக்கு விலைமதிப்பே இல்லையாதலால் நிகரில்லாத புஷ்பம் என்றார். ஈச்வரனை ஒரு இடத்தில் நிறுத்தினாலன்றோ அவன் திருவடிகளில் புஷ்பத்தைச் சேர்க்கலாம்; அவனை எங்கே நிறுத்துவது என்று கேட்க "நகரிழைத்து" என்றார் "நெஞ்சமே நீணகராக விருந்தவென் தஞ்சனே" "கோயில் கொண்டானதனோடு மென்னெஞ்சகம்" என்பதற்கிணங்க, ஸர்வேச்வரன் அடியார்கள் நெஞ்சில் வஸிக்குமியல்பினனாதலால் தன் நெஞ்சையே அவனது ராஜதானியாகவமைத்தார். "மார்வமென்பதோர் கோயிலமைத்து மாதவனென்னும் தெய்வத்தை நாட்டி, ஆர்வமென்பதோர் பூவிடவல்லார்க்கு" என்ற பெரியாழ்வார் பாசுரத்திலும் இவ்வர்த்தம் தெளியவரும்.

"பனிமலராள் அங்கம் வலங்கொண்டான்" நம்முடைய பாபங்களைக்கண்டு பிறக்கும் பெருமானது சீற்றத்தை மாற்றுகிற புருஷகாரபூதையான பிராட்டியை வலமார்பில் கொண்டவனுடைய திருவடியை வணங்கினேன் என்பது.

கீழ்ப்பாட்டில் "பரிசுநறுமலரால் பாற்கடலான் பாதம் புரிவார் + அமர்கோமான் நகர் புகப்பெறுவர்" என்று அருளிச்செய்து இப் பாட்டில் அப்பெருமானை நெஞ்சென்கிற நகரத்தில் எழுந்தருளப் பண்ணி பக்தியென்கிற நிகரில்லாப் பைங்கமலத்தால் அவன் திரு வடியைப் பணிந்தேனென்று சொல்லவே, தனக்கும் அமரர்கோ மான் நகர் அடைவதெளிதேயாகும் என்று ஆழ்வார் ஸந்தோஷித் தார் என்ற பொருள் த்வனிக்கும்.

அடிமூன்றிலிவ்வுலக மன்றளந்தாய் போலும்
அடிமூன்றிரந் தவனி கொண்டாய்—படிநின்ற
நீரோதமேனி நெடுமாலே! நின்னடியை
யாரோத வல்லா ரறிந்து. (5)

படிநின்ற	இப்பூமியில் வாமன ஞய் வந்துநின்ற	உலகம்	உலகத்தை
		அடி மூன்றில்	மூன்றடியிலேயே
நீர் ஓதம் மேனி	கடல்போன்ற திரு மேனியையுடைய	அளந்தாய் போலும்	அளந்துவிட்டாய் போலும்
நெடுமாலே	ஆச்ரித வாத்ஸல்ய முள்ளபெருமானே	நின் அடியை	அப்படிப் பெருமை வாய்ந்த உன் திரு வடியை
மூன்று அடி	அளப்பதற்கென்று மூன்றடி மண்ணை யாசித்து		
		அறிந்து	நன்றாய் தெரிந்து கொண்டு
அவனி கொண்டாய்	பூமியை ஸ்வாதீன மாக்கிக் கொண்டாய்	ஓத வல்லார் யார்	பேசுவதற்குத் திறமையுள்ளவர் யார் இருக்கிறார்? ஒருவருமில்லை
அன்று	காலத்தில்		

கீழ்ப் பாட்டில் ஒரு விலக்ஷணமான தாமரைமலரைக்கொண் எம்பெருமான் திருவடிகளை வணங்கினேன் என்றார். போல் எம்பெருமானை ஆச்ரயிப்பவர்கள் வேறு யாராவது க் றார்களோ என்று தேடிப்பார்த்தார். ஒருவருமகப்படாததா அவன் ஸௌலப்யகுணத்தை அறிந்து அவனை துதிப்பவர்கள் யா இங்கு இருக்கிறானென்கிறார் இப் பாட்டில்.

அடி மூன்றில்:—நீ மஹாபலிச்சக்ரவர்த்தியிடம் மாணுருவாய் சென்று இந்த பூலோகம் அந்தரிக்ஷம் ஸ்வர்க்கலோகம் என்கி

மூன்று லோகங்களையும் மூன்றடிகளால் அளந்து நாம் இவ்வுலகங்களை ஸ்வாதீனங்களாகச் செய்துகொள்வோமென்று நினைத்து மூவடி மண்ணிரந்தாய்; அந்த மஹாபலியும் என்னால் தரப்பட்டதென்று சொல்லவே நீ இரண்டடிகளாலேயே எல்லாவுலகங்களையும் அளந்துவிட்டு மூன்றாமடியை அம்மாவலியின் முடியில் வைத்தாய். நீ அவனிடம் யாசித்தபோதிருந்த எண்ணத்தின்படி மூன்றடிகளால் அளப்பதற்குள் உன்னுடைய ஸௌலப்யம் என்ற குணம் தலையெடுத்து இரண்டடிகளாலேயே அளக்கும்படிசெய்து மஹாபலிக்கு உன் திருவடியைப் பெறும்படியான பாக்யத்தைக் கொடுத்தது. இப்படி இப்பூமியில் வந்துநின்ற கடல்போன்ற திருமேனியையுடைய உன்னுடைய திருவடியை நன்றாய் உணர்ந்து துதிசெய்ய வல்லார் யார் இருக்கிறார்? ஒருவரும் காணப்படவில்லையே! என்று வருந்துகிறார்.

அடிமூன்றில் + அளந்தாய்போலும்:— நீ மாவலியிடம் மண்ணை யாசித்தபடி மூன்றடிகளாலேயே இவ்வுலகங்களை அளந்துவிட்டாயோ? என்று பரிஹாஸமாகக் கேட்கிறார். இதனால் நாம் அறிய வேண்டியது யாதெனில், அவ்வீச்வரன் மாவலியைப் பாதாளலோகத்தில் தள்ளினாலும் அவன் திருவடியை அம்மாவலி தலையிலே தரிக்கப்பெற்றது அவனுடைய ஸௌலப்யகுணத்தாலென்று நிச்சயித்து அவ்வீச்வரனுடைய ஸௌலப்யகுணத்தையே பேசவேண்டுமென்பது.

படிநின்ற:— பூமியிலே வந்துநின்ற, நெடுமாலுக்கு விசேஷணம். இத்தால் ஸௌலப்யகுணம் தெரிவிக்கப்படுகிறது. கடலுக்கு விசேஷணமாகவும் சொல்லலாம். மாவலியிடம் வாமனனாய் வந்த பகவானை இப்பூமியில் கடல் எழுந்துவந்து நிற்பதுபோல் சொல்லலாமென்று கருத்து.

நின் அடியை என்றவிடத்தில் நின்படியை என்றும் பாடமுண்டு. உன்னுடைய தன்மையை என்று பொருள். எம்பெருமானுக்கு மாவலியை யாசிக்கும்பொழுது இரண்டடிகளால் உலகங்களை யளந்துவிட்டு, பிறகு மூன்றாமடிக்கு இடம்கேட்டு மாவலியின் தலையிலே வைத்து அவனை அழுத்தவேணுமென்று எண்ணமிருந்தாலுமிருக்கலாம். ஆழ்வார் அவ்வீசனுடைய ஸௌலப்யகுணத்தைப்

பிரகாசிப்பிக்கவேண்டி, நீ மூன்று லோகங்களையும் மூன்றடிகளால் அளக்கவேணுமென்று கருதி மூவடி மண்ணிரந்து பிறகு அளக்குங் கால் இரண்டடிகளாலேயே அளந்துவிட்டாயே! என்று இரக்கும் போதிருந்த நினைவு அளக்கும்போதில்லையென்று உத்ப்ரேக்ஷித்துப் பாசுரமிட்டது.

அறிந்தைந்து முள்ளடக்கி யாய் மலர்கொண்டு,
[ஆர்வம்
செறிந்த மனத்தராய்ச் செவ்வே—அறிந்தவன்றன்
பேரோதி யேத்தும் பெருந்தவத்தோர் காண்பரே
காரோத வண்ணன் கழல். (6)

பதம்	பொருள்
அறிந்து	ஈச்வரனிடமுள்ள குணங்களையும் இதர பதார்த்தங்களிலுள்ள தோஷங்களையும் தெரிந்து கொண்டு
ஐந்தும் உள் அடக்கி	ஐந்து இந்திரியங்களையும் வெளியே செல்லாதபடி எம்பெருமானிடம் அடக்கி
ஆய் மலர் கொண்டு	ஆராய்ந்த புஷ்பங்களை எடுத்துக்கொண்டு
ஆர்வம் செறிந்த	அன்பினால் நிறைந்த
மனத்தர் ஆய்	நெஞ்சை உடையவர்களாகி
செவ்வே அறிந்து	(ஜீவனுடைய சேஷத்வத்தை) நன்றாய் உணர்ந்து
அவன் தன்	அப்பெருமானுடைய
பேர்	திருநாமங்களை
ஓதி ஏத்தும்	சொல்லிக்கொண்டு துதிசெய்கிற
பெரும் தவத்தோர்	பெரிய தவம்செய்தவர்கள் (பாக்யசாலிகள்
கார் ஓதம் வண்ணன்	கருத்த கடல்போன்ற நிறமுள்ள ஸ்வாமியினுடைய
கழல்	திருவடிகளை
காண்பர்	பார்ப்பார்கள்.

கீழே அவ்வீச்வரனை அறிந்தேத்தவல்லார் அரிது என்றார். இப்பாட்டில் அவனை ஆச்ரயித்தவர்கள் பாக்யசாலிகள் என்றும் அவர்களே அப்பெருமானது திருவடியைப் பெறுகிறார்களென்றும் பேசுகிறார்.

அறிந்து:—மோக்ஷத்தையடைய விருப்பமுள்ளவர்களுக்கு பரமாத்மநி யோரக்தோ விரக்தோ அபரமாத்மநி என்னும்படி புருஷோ

த்தமனிடம் ஆசையும் மற்ற சப்தாதி விஷயங்களில் ஆசையில்லா மையும் (வெறுப்பும்) அவசியம் இருக்கவேண்டும். பெருமானிட முள்ள குணங்களைத் தெரிந்துகொண்டால்தான் அவனிடம் ஆசை பிறக்கும். சப்தாதி விஷயங்களிலுள்ள தோஷங்களை அறிந்தால் தான் அவைகளில் விரக்தி பிறக்கும். விஷயாந்தரங்களில் விரக்தி உண்டாகி ஸர்வேச்வரனிடம் ஆசையுண்டானால்தான் ஈச்வரனை ஆச்ரயிக்க புத்தி உண்டாகும். ஆனதுபற்றி எம்பெருமானிடமுள்ள குணங்களையும் சப்தாதி விஷயங்களிலுள்ள அல்பத்வம், அஸ்திரத்வம், சீரத்வம், துக்கமூலத்வம், விபரீதாபிமானமூலத்வம், ஸ்வாபாவிகாநந்தவிருத்தத்வம் என்ற ஏழு தோஷங்களையும் நன்றாய் அறிந்துகொண்டு இப்படி அறிந்துகொண்டதின்பயனாக ஐந்து இந்திரியங்களையும் விஷயங்களிலே செல்லாதபடி உள்ளேயடக்கி ஆராய்ந்து பார்த்தெடுத்த செவ்வி மாறாத புஷ்பங்களை எடுத்துக்கொண்டு கபடமில்லாத பக்தியினால் நிறைந்த மனத்துடன் ஞானந்தமயஸ் த்வாத்மா சேஷோஹி பரமாத்மந: என்றபடி எம்பெருமானிடம் அடிமையாயிருப்பதுதான் ஜீவனுடைய ஸ்வரூபம் என்று ஜீவனுடைய சேஷத்வத்தையும் உணர்ந்து அப் பெருமானது திருநாமங்களைச் சொல்லித் துதிக்கும் பெரும் பாக்யசாலிகள் கடல்போல் கண்குளிரச்செய்யும் திருமேனியையுடைய பெருமானுடைய திருவடிகளைக் காணப்பெறுவார்கள். ஆதலால் எம்பெருமானுடைய வைலக்ஷண்யத்தையும் மற்றவைகளின் இகழ்வையும் உணர்ந்து ஐம்புலன்களையுமடக்கி உண்மையான பக்தியால் அவனைப் பாடித்துதித்தால் அப்பெருமானது திருவடியைப் பெறுவதாகிற மோக்ஷானந்தத்தை அடையலாமென்பது உபதேசிக்கப்பட்டதாயிற்று.

கழலெடுத்து வாய்மடித்துக் கண்சுழன்று, மாற்றார்
அழலெடுத்த சிந்தையரா யஞ்ச—தழலெடுத்த
போராழி யேந்தினான் பொன்மலர்ச் சேவடியே
ஓராழி நெஞ்சே யுகந்து. (7)

கழல் எடுத்து { திருவடியை உயரே

வாய் மடித்து (பற்களால்கடித்து) உதட்டை மடித்துக்கொண்டு

கண் சுழன்று	கண்களைச் சுழலும் படி செய்துகொண்டு	போர் ஆழி	யுத்தத்திற்கு ஸாதனமான திருவாழியை
மாற்றார்	சத்ருக்களான நமுசி முதலானவர்கள்	ஏந்தினான்	கையிலே தரித்த பெருமானுடைய
அழல் எடுத்த	பயாக்நியால் சூழப்பட்ட	பொன் மலர் சே அடியே	அழகாயும் புஷ்பம் போல் ம்ருதுவாயுமிருக்கிற சிவந்த திருவடிகளையே
சிந்தையர் ஆய்	நெஞ்சையுடையவர்களாய்க்கொண்டு		
அஞ்ச	பயப்படும்படியாக	ஆழி நெஞ்சே	சம்பீரமானமனமே!
தழல் எடுத்த	நெருப்பைவீசுகிற	உகந்து ஓர்	அன்புடன் நினைப்பாயாக.

கீழ்ப்பாட்டில் அவனை ஆச்ரயிப்பவர்கள் அவன் திருவடிகளைக் காணப்பெறுவார்கள் என்றார். ஆனதுபற்றி அவனையே ஆச்ரயிப்பாய் என்று தம் திருவுள்ளத்திற்கு உபதேசிக்கிறாரிப்பாட்டில். தமது திருவுள்ளமும் அவனை ஆச்ரயிப்பதற்கு இடையூறுகள் பல உண்டாகின்றனவே என்று வினவ, ஆழ்வார், இடையூறுகள் நேர்ந்தால் நமுசி பட்டபாடு படுமென்றும் உரைக்கிறார்.

கழலெடுத்து:— ஸர்வேச்வரன் வாமனனாய்வந்து மூவடி மண்ணிரந்து பிறகு த்ரிவிக்ரமனாய் வளர்ந்து மூவுலகங்களையும் அளக்கப் புகவே மாவலியின் மகனான நமுசியென்பவன் அப் பெருமானைத் தகைந்து நீ இங்ஙனம் அளப்பது சரியன்று. சிறிய திருவடிகளைக் காட்டிப் பெரிய அடிகளால் அளக்கலாமோ? இது என்ன மோசம்? என் தகப்பன் உன்னைக்கண்டு மோசம்போய்விட்டான் என்று பலவாறாகப் பேச, பெருமானும் சரீரம் என்றால் ஒருகால் தென்பட்ட பரிமாணமளவாகவே எப்பொழுதுமிராது. வளரக்கூடிய வியல்புள்ளது. என் உடம்பு வளர்ந்து பெரிதாய்விட்டபடியால் இங்ஙனம் அளக்கும்படி நேர்ந்தது என்று பலவாறாக ஸமாதானமுரைக்கவும் அதைக் கேளாமல் மீண்டும் பெருமானை எதிர்க்க, பெருமானும் மிகுந்த சினங்கொண்டு தனது பற்களால் வாயை மடித்துக்கொண்டு அந்த நமுசியென்பவன் பயம் என்கிற நெருப்பால் சூழப்பட்டு பயப்படும்படி தன் கண்களை சுழற்றிக்கொண்டு தன் திருவடியால் நமுசியை வானில் தூக்கிச் சுழற்றியடித்தான் என்கிற வா

லாற்றை அநுஸந்தித்து அங்ஙனம் விரோதி நிரஸநசீலனை பெருமானுடைய திருவடிகளை அன்புடன் எப்பொழுதும் நினைக்கவேண்டுமென்று தம் நெஞ்சுக்கு உபதேசித்தார்.

தழல் எடுத்த போராழியேந்தினன் :—அனல் வீசுகிற போர் செய்யவல்ல சக்ரத்தாழ்வானைக் கையிலே தரித்தவன் என்றபடி. மஹாபலியை பெருமான், மாவலீ! மூவடி தாவென்று யாசிக்கவே, மஹாபலியும் அப்பெருமானுடைய ரூபத்திலும், தேஜஸ்ஸிலும், பேச்சிலும் மோஹித்துக் கொடுத்தேனென்றுசொல்லி ஜலபாத்ரத்தை எடுத்து தாரைவார்த்துத் தானஞ்செய்யும்பொழுது அவனது குருவான சுக்ராசிரியன் மாவலியைப் பார்த்து இவன் உண்மையில் யாசிக்கவந்தவனல்ல. உன் ஐச்வர்யத்தை யபஹரிக்கவந்தவன். ஆதலால் நீ தானம் செய்யாதே என்று மறுக்கவும், அதைக் கேளாமலே மாவலி தானம் செய்வேனென்றுசொல்ல சுக்ராசிரியன் அப்பாத்ரத்தின் ஜலத்வாரத்திலே தான் புகுந்துகொண்டு ஜலம் விழமுடியாதபடி தடுக்க, வாமனனும் தன் கையிலணிந்த பவித்ரத்தால் அத்துவாரத்தைக் குத்தி ஜலத்தை விழும்படி செய்தபொழுது அப் பவித்ரம் த்வாரத்தில் புகுந்திருந்த சுக்ரனது கண்ணைக் குத்திக் கிளரியது என்பது யாவருமறிந்த வரலாறேயாகும். அப்பொழுது பெருமானுடைய திருக்கையிலே தரித்திருந்த திருவாழிதான் பவித்ரவடிவாய் நின்று ஜலத்வாரத்தில் சென்று சுக்கிரன் கண்ணைக் கிளறியது என்று திருவுள்ளம்பற்றி திரிவிக்ரமாவதாரத்திலும் தழலெடுத்த போராழியேந்தினனென்பது பொருந்தியதே.

கண்கள் கோபத்தால் சுழல்வதுபோல் பயத்தினால் சுழல்வதுமியல்பாதலால் மாற்றார் நமுசி முதலான விரோதிகள் கண் சுழன்று அழலெடுத்த சிந்தை யராயஞ்சும்படி எம்பெருமான் வாய்மடித்தானென்றும் சொல்லலாம்.

உகந்து ஓர் :—மாரீசன் ஸ்ரீராமனை விரோதபாவனையுடன் நிரந்தரம் த்யானம் செய்ததுபோலின்றி அநுகூலபாவனையுடன் (அன்புடன்) த்யானம் செய்வாய் என்றபடி.

இங்கு மூன்றாமடியில் சேவடியை என்றும் பாடமுண்டு.

உகந்துன்னை வாங்கி யொளிநிறங்கொள் கொங்கை
அகங்குளிர வுண்ணென்றா ளாவி—உகந்து
முலையுண்பாய் போலே முனிந்துண்டாய், நீயும்
அலைபண்பா லானமையா லன்று. (8)

உகந்து	பூதனை உன்னிடம் மிகுந்த அன்புள்ள வள்போல் நடித்து	அன்று	அந்த ஸமயத்தில்
உன்னை வாங்கி	உன்னை எடுத்துக் கொண்டு	நீயும்	கிருஷ்ணனுன நீயும்
ஒளி நிறம் கொள் கொங்கை	(பால் விஞ்சியிருப்பதால்) காந்தியையுடைய அழகுபொருந்திய தனதுமுலையை	அலைபண்பால்	அலைவீசுகிற குணத்தால் (மிகுந்த வெளளப்ப குணத்தால்)
அகம் குளிர	உன் மனம் ஸந்தோஷிக்குமளவும்	உகந்து	உண்மையில் ஸந்தோஷத்துடன்
உண் என்றாள்	சாப்பிடு என்றாள்	முலை உண்பாய் போலே	முலையுண்பவன்போலவேபாவனைசெய்து
ஆனமையால்	அங்ஙனம் சொன்னபடியால்	முனிந்து	உள்ளே கோபத்துடன்
		ஆவி	அவளுடைய உயிரை
		உண்டாய்	அமுதுசெய்தாய்.

கீழ்ப்பாட்டில் உகந்துஓர் என்று உபதேசித்தார். உள்ளபடி அன்புடன் அவ்வீச்வரனை ஆச்ரயிக்கவேண்டுமென்றார். அப்படிக்கில்லாமல் கபடமானவன்புடன் வந்தால் பூதனை பட்டபாடு படுவரென்கிறார் இப்பாட்டில்.

உகந்துன்னை.— தேவகியின் ஸ்ஹோதரனான கம்ஸன் தன்னைக் கொல்வதற்கென்று தேவகியின் வயிற்றில் பிறந்த கண்ணன் ஒருத்திமகனாய் ஒளிந்து வளர்கின்றானென்றதையுணர்ந்து அக்கண்ணனென்கிற குழந்தையைக் கொல்வதற்காக அனுப்பியவர்களில் ஒருத்தியாகிய பூதனையென்பாளொரு ராக்ஷஸி ஓர் அழகிய பெண்வடிவத்துடன் திருவாய்ப்பாடிக்கு வந்து உறங்கிக்கொண்டிருந்த கண்ணனென்கிற குழந்தையை வாரியெடுத்துக்கொண்டு மிகுந்த பரிவுள்ளவள்போல் நடித்து யசோதை கண்ணனுக்குப் பால்கொடுப்பதுபோல் உகப்புடன் உன் உள்ளம் குளிருமளவும் முலையுண்பாய் என்று சொல்லி நஞ்சு கலந்த முலையைக் கொடுத்தாள். கண்ணனும்

அதை அறிந்து யசோதையிடம் தான் ஸ்தன்யபானம் செய்யும் பொழுது தனக்குள்ள ஆசையைப்போல் அவளிடமும் ஆசையை நடித்து உண்மையில் ஆவலுள்ளவன்போல் உகப்புத்தோன்ற, உள்ளே கோபங்கொண்டு அவள் முலையை யுண்பதுபோல முலையின் வழியே அவளுயிரையும் உண்டு அவள் பெருங்கூச்சலிட்டு கதறி கட்டுக்குலைந்து மாண்டுவிழும்படிசெய்த கண்ணனது சரித்திரத்திலே கால்தாழ்கிறார். இந்த வரலாற்றில் நாம் அறிந்துகொள்ளவேண்டிய விஷயம் ஒன்றுண்டு. எம்பெருமான் உண்மையில் நட்பு இல்லாவிடினும் மித்ரபாவனையுடன் வருவாரையும் நாம் விடுகிறதில்லை என்று அருளிச்செய்திருக்கச் செய்தேயும் இங்கு மித்ரபாவனை செய்துவந்த பூதனையைக் கொன்றது கூடுமோவென்று சிந்தித்து, பெருமான் உலகங்களுக்கெல்லாம் உயிரளிக்கவேண்டி ஒருத்தியினுயிரை மாய்த்தது என்பதுதான். "ஓருயிரேயோ உலகங்கட்கெல்லாம்" உலகுக்கே யோருயிருமானாய்" என்பதற்கிணங்க உலகங்களுக்கெல்லாம் உயிரெனச் சொல்லப்படுகிற தன்னை பூதனையிடமிருந்து காப்பாற்றிக்கொண்டால் உலகங்களைக் காப்பாற்றியதாகும் என்று கருதி பூதனையை முடித்தான். ஆதலால் ஸர்வேச்வரன் தன் பிரதிஜ்ஞையையும் மாறி உலகங்களைக் காப்பாற்றுமியல்புள்ளவன் என்கிற அவனது மஹாகருணைத்திலே ஈடுபடுகை மனிசர்க்கு கடமையாகும்.

அன்றது கண்டஞ்சாத வாய்ச்சி யுனக்கிரங்கி
நின்று முலைதந்த விந்நீர்மைக்கு—அன்று
வரன் முறையால் நீ யளந்த மாகடல் சூழ் ஞாலம்
பெரு முறையா லெய்துமோ பேர்த்து. (9)

அன்று	(பேய்ச்சி முலைகொடுப்பதற்கென்று வந்த) அந்த ஸமயத்தில்	அஞ்சாத	பயப்படாமலிருந்த
		ஆய்ச்சி	யசோதைப் பிராட்டி
		நின்று	தரித்துநின்று
அது	அப்பூதனை செத்துக் கிடந்ததை	உனக்கு இரங்கி	உன்னிடத்தில் ஆசைகொண்டு
கண்டு	நேரில் பார்த்திருந்தும்	முலைதந்த	ஸ்தன்யத்தைக்கொடுத்த

இ நீர்மைக்கு	இப்பெருங் குணத்திற்கு	மா கடல் சூழ் ஞாலம்	பெரியகடலால் சூழப்பட்ட இப்பூமியானது
வான் முறைபால்	உயர்ந்ததான உறவினால் (இவ் ஸ்வாமி பாவமாகிற ஸம்பந்தத்தால்)	பேர்த்து	ஆராய்ந்து பார்க்குங் காலத்தில்
நீ அளந்த	நீ த்ரிவிக்ரமனாய் அளந்த	பெரு முறையால் எய்துமோ ?	இது பெரிது இது சிறியது என்கிற முறையில் எதிர்க்குமோ ?

எம்பெருமானிடம் பொய்யன்பு பூண்டவர்கள் பூதனையின் நிலைமையைப் பெறுவார்கள் என்றார். இப்பாட்டில், மெய்யான வன்பு பூண்ட யசோதைப் பிராட்டியைப்போல் யாவரும் ஸ்வாமியினிடம் பரிவுகொண்டிருக்கவேண்டுமென்பதை பூதனையின் விருத்தாந்தத்தாலே காட்டுகிறார்.

அன்றது கண்டு:—பூதனையென்பாளொரு பேய்ச்சி கண்ணனுக்கு முலைகொடுத்து கண்ணனும் அம்முலை வழியே அவளுயிரையும் உண்ணவே அவள் மலைபோல் ஒரு ராக்கதிவடிவாய்ச் சாய்ந்து கிடந்தாள். அதைக் கண்டதும் யசோதை இது என்ன ஆபத்து. இது என்ன பயங்கரமான ஸம்பவம் என்று பயப்பட்டு ஓடவேண்டியது உசிதமாயிருக்க அப்பொழுது கண்ணனிடத்தில் மிகவும் இரக்கங்கொண்டு அவனுக்கு முலைகொடுத்தாள் என்பது மிகவும் வியப்பைத்தருகிறது. அப்பொழுது முலைகொடுத்ததன் பயனைப் பூதனை உயிர்துறந்தாளென்பதைத் தெரிந்துகொண்டே தன் உயிரில் ஆசையின்றி கண்ணன் என்ன பயமடைந்தானோ என்றஞ்சி அவனைத் தேற்றுவதற்காக முலைகொடுத்தாளென்றால் அவளுக்குக் கண்ணபிரானிடமிருந்த காதலை என் என்று சொல்வது. தன் உயிரையும் விரும்பாதபடியான ஒரு பெரிய காதலை அவள் செயல் காட்டுகிறதென்று நினைத்து அந்த யசோதையின் அன்பிற்கு அவன் த்ரிவிக்ரமனாகி அளந்த இப்பூமியே விலைமதிப்பில் ஸமமாகாது என்கிறார். அதாவது ஸர்வேச்வரன் தனக்கு இப் பிரபஞ்சமெல்லாம் சேஷபூதம் என்பதை யாவரும் அறியும்படி "காண்மின்களுலகீரென்று கண்முகட்பேநிமிர்ந்த" என்றபடி) அளந்த வியாபாரமும் யசோதை பரிவுக்கு ஒப்பாகாது. அவனால் அளக்கப்பட்டவுலகமும்

அவள் பரிவுக்கு ஒப்பாகாது என்றபடி. ஈச்வரன் ஒரு பிரயோஜனத்தையும் கணிசியாமல் உலகிற்கும் தனக்குமுள்ள ஸ்வஸ்வாமிபாவமாகிற ஸம்பந்தத்தை நினைத்தே தன் திருவடியை எல்லார் தலையிலும் வைத்தாரென்கிற நீர்மை என்கிற குணம் யசோதையின் அன்பு என்பதைக்காட்டிலும் தாழ்ந்ததே. அவனளந்த ஞாலத்தை ஒரு தட்டிலும் யசோதையின் அன்பை ஒரு தட்டிலும் வைத்து நிறுத்தாலும் யசோதையின் அன்பே கனத்துநிற்குமென்றும்சொல்லி அவளது அன்பைக் கொண்டாடுகிறார். இத்தால் யசோதையைப்போல் யாவரும் அப்பெருமானிடம் பரிவுகொள்ளவேணுமென்றதாயிற்று. பொய்கையாழ்வார் அருளிய "என்றொருவர் மெய்யென்பர்" என்கிற பாசுரத்திலும் "பேய்ச்சி பாலுண்ட பெருமானைப் பேர்ந்தெடுத்து" என்கிற பேயாழ்வார் பாசுரத்திலும் இவ்வநுபவத்தைக் காணலாம்.

வரன்முறையால்:—"சிறந்ததோர் முறையால்" அதாவது ஒரு பிரயோஜனத்தைக் கருதாமல் தனக்கு முலகிற்குமுள்ள ஸம்பந்தத்தையே பெரிதாகவெண்ணி அளந்தாயென்றுபொருள்.

பெருமுறையால் எய்துமோ பேர்த்து:— இது உயர்ந்ததா? அது உயர்ந்ததா? என்று பிரித்து ஆலோசிக்கும்வகை. அப்படி ஆலோசித்தால் நீ அளந்த ஞாலம் யசோதையின் குணத்திற்கு எதிர்த்துநிற்காது என்பதாம். "பேர்த்து எய்துமோ." தனியே நின்று எதிர்க்குமோ என்று கொள்ளலாம்.

பேர்த்தனை மாசகடம் பிள்ளையாய், மண்ணிரந்து
காத்தனை பல்லுயிரும் காவலனே—ஏத்திய
நாவுடையேன் பூவுடையேன் நின்னுள்ளி நின்றமை
காவடியேன் பட்டகடை. (10) [யால்

காவலனே	(உலகங்களை) ரக்ஷிப்பவனே!	பேர்த்தனை	உதைத்துத் தள்ளினாய்
பிள்ளையாய்	நீ கண்ணனென்னும குழந்தையாகி	மண் இரந்து	மஹாபலியிடம் பூமியை யாசித்து
மா சகடம்	பெரிய வண்டியை	பல் உயிரும்	ஸகலமான ஆத்மாக்களையும்

காத்தனை	(திருவடியால் தடவி) ரக்ஷித்தாய்	பூ உடையேன்	உன்னைப் பூஜிப்பதற்காகப் புஷ்பங்களையுடையவனுனேன்
			ஆதலால்
நின் உள்ளி நின்றமையால்	இப்படிப்பட்ட உன்னையே ரக்ஷகன் என்று நினைத்திருக்கிறபடியால்	அடியேன் பட்ட	தாஸனென நான் பெற்ற
ஏத்திய நா உடையேன்	எப்பொழுதும் துதிசெய்கிற நாக்கையுடையவனுனேன்	கடை	தாழ்மையிலிருந்து
		கா	என்னை ரக்ஷித்தருளவேணும்

இப்படிக்கீழே யசோதையைப்போல் பெருமானிடம் ப்ரீதியுள்ளவர்களாகவேண்டுமென்று சொன்னபின் இப்பாட்டில் நான் யசோதையைப்போலிருக்கமுடியாதபோதிலும் ஏதோ சிறிது பக்தியுடனிருப்பேன். என்னை நீ திருத்திப் பணிகொள்ளவேணுமென்று பெருமானை வேண்டுகிறார்.

பேர்த்தனை:—யசோதை கிருஷ்ணனென்ற குழந்தையை தன் இல்லத்தில் ஒரு வண்டியின்கீழ் தொட்டிலில் கண்வளரச் செய்துவிட்டு நீராடப்போயிருக்குங்கால் கம்ஸனால் ஏவப்பட்டுவந்த அஸுரனொருவன் அவ்வண்டியில் ஆவேசித்து கண்ணனைக் கொல்ல நினைக்கவே, அதை அறிந்த கண்ணன் பாலுக்கு அழுவதுபோல் காலை உதைத்துக்கொண்டு அழுவதாகப் பாவனைசெய்து காலால் அவ்வண்டியை உதைக்க, வண்டியும் அதில் ஆவேசித்திருந்த அஸுரனும் முறிந்துவிழுந்தன என்கிற வரலாற்றையும், ஒருவருக்கும் தீங்கை விளைவிக்காமல் மண்ணிரந்து உலகத்தார் தலைகளில் தானாகவே திருவடியை வைத்தருளினனென்கிற த்ரிவிக்ரமவிருத்தாந்தத்தையும் நினைத்துருகி, காவலனே! தன் பேருகவுலகத்தைக் காப்பவனே என்று அப் பெருமானைவிளித்து உன்னையே நான் சரணமாகப் பற்றியிருப்பதால் உன் நாமங்களையே நாவினால் சொல்லிக்கொண்டிருக்கிறேன்; ஏதோ சக்த்யநுகுணமாக உன்னை ஆராதிப்பதற்கென்று புஷ்பங்களை வைத்துக்கொண்டிருக்கிறேன். என்னை ரக்ஷித்தருளவேணும்; நான் பற்றியிருந்த சப்தாதி விஷயங்களிலுள்ள ருசியையும் அதடியாகவந்த தேவதாந்தர ஸம்பந்தத்தையும் மற்றுமுள்ள உபாயாந்தரங்களில் அலைவது முதலிய விரோதிகளையும் அறுத்துத்தந்து என்னைக்காப்பாற்றியருளவேணும்; நீயே ரக்ஷக

னென்று நான் நினைத்திருப்பதால் என்னை மற்றவிஷயங்களில் அலை யாதபடி காக்கவேணுமென்று பிரார்த்திக்கிறார்.

கடைநின் றமரர் கழல் தொழுது, நாளும்
இடைநின்ற வின்பத்த ராவர்—புடைநின்ற
நீரோதமேனி நெடுமாலே! நின்னடியை
யாரோத வல்லா ரவர். (11)

(ஸம்ஸாரிகளை வெறுத்து)

கடை நின்று	(இதரதேவதைகளுடைய வீட்டுவாசல்களில் நின்றுகொண்டு	புடை நின்ற	நாலு பக்கங்களிலும் சூழ்ந்துகொண்டிருக்கிற
நாளும்	தினந்தோறும்	நீர் ஓதம்	ஜலத்தையுடைய ஸமுத்திரம்போன்ற
அமரர் கழல் தொழுது	அத்தேவர்களுடைய காலைப் பிடித்துத் தொழுது	மேனி	திருமேனியையுடைய
		நெடுமாலே	ஆச்ரிதவத்ஸலனே!
இடை நின்ற	பரமபதத்திற்கும் இப் பூமிக்கும் நடுவேயுள்ள	நின் அடியை	உன் திருவடிகளை
இன்பத்தர் ஆவர்	ஸ்வர்க்காதி லோகங்களை அனுபவிக்கிறவர்களாகவாவர்கள்	ஓத வல்லார் அவர் ஆர்	பேசித்துதிக்கிறவர்கள் யார் இருக்கிறார்? ஒருவருமில்லை.

தாம் ஸ்ரீமந்நாராயணனுடைய திருநாமங்களைச் சொல்லிக்கொண்டும் புஷ்பங்களை எடுத்துக்கொண்டு திருவாராதனம் செய்தும் பகவதேகபராயிருப்பதைக்கீழே பேசினார். உலகிலுள்ள ஸம்ஸாரிகளும் தன்னைப்போலிராது தேவதாந்தரங்களைப் பஜித்து துன்பக்கடலுள் துவள்கின்றார்களே என்று வருந்துகிறார் இங்கே.

கடை நின்று:—உலகிலுள்ள ஸம்ஸாரிகளனைவரும் ஸ்ரீய:பதியைத் தொழுதேத்தித் துன்பங்களைத்தொலைத்து பரமபதமாகிற தேசத்திலேசென்று மீளாத பேரின்பத்துடன் வாழ்ந்திருக்கவேண்டியதுபோக, சில தாழ்ந்த தேவதைகளைத் தொழுது அந்தவத்து பலம் தேஷாம் தத்பவத் யல்பமேதஸாம் என்றபடி அவர்களால் கொடுக்கப்பட்ட உண்மையில் ஸுகமின்றி ஸுகம்போல் தோன்றுகிற சில

போகங்களை அனுபவித்துத் திரிகிறார்களே; பரமபதத்திற்கும், இந்நிலத்திற்கும் நடுவேயுள்ள ஸ்வர்க்காதி லோகங்களில் ஸுகத்தை யனுபவித்து மீளவும் கீழே இறங்கி மீண்டும் தேவதாந்தர பஜனம் செய்து மறுபடியும் ஸுகத்தையடைந்து இப்படி மத்யலோகங்களிலேயே ஸஞ்சரித்துக்கொண்டிருக்கிறார்களே; இது என்ன அநியாயம்; கடல்போல் சிரமஹரமான திருமேனியையுடையவனை அறிந்துகொண்டு தொழுகிறவர்கள் யாருமில்லையே; என்று வருந்துகிறார்.

கடை நின்று:—வீட்டின் வாசல்களில் நின்றுகொண்டு எனப் பொருள். இதா தேவதைகளின் வீட்டுவாசல்களிலெல்லாம் நின்றுகொண்டு அவர்களை ஆராதித்து என்றபடி.

கடை நின்ற + அமரர், எனப் பதம்பிரித்துத் தாழ்ந்தவர்களான தேவர்களைத் தொழுது என்றும் சொல்லலாம்.

இடை நின்ற இன்பத்தாரவர் என்றது பரமபதாநுபவத்தைக் காட்டிலும் கீழேயுள்ள மத்யமஸுகாநுபவம் என்பதாம். ஸ்வர்க்காதிலோகங்களி னநுபவத்தையும் இன்பம் என்று சொல்வது ஸம்ஸாரிகளுடைய நினைவின்படி; தன் நினைவின்படி அதுவும் துன்பமேயாம். "புடைநின்ற நீரோதமேனி" நாலுபக்கங்களில் சூழ்ந்து வியாபித்த ஜலத்தையுடைய கடல்போன்ற திருமேனியையுடையவன் என்பதால், எல்லோரும் உன் திருமேனியைக் கண்டவுடனேயே கால்தாழவேண்டியிருக்கப் பிறர் வாசலில் புகுந்து நிற்பது யாது காரணம்பற்றியோ தெரியவில்லை; என்கிற ஆழ்வாருடைய இரக்கம் காணப்படுகிறது.

அவரிவ ரென்றில்லை யரவணையான் பாதம்
எவர்வணங்கி யேத்தாதா ரெண்ணில்—பவரும்
செழுங்கதிரோ னொண்மலரோன் கண்ணுதலோனன்
றொழுந் தகையார் நாளும் தொடர்ந்து. (12) [றே

எம்பெருமானைத் தொழுவதில்

அவர் அந்த தேவர்கள் | இவர் { இவ்வுலகிலுள்ள மநுஷ்யர்கள்

என்று இல்லை	என்கிற வ்யத்யாஸம் இல்லை
அரவுஅணையான் பாதம்	அனந்தன்மேல் பள்ளிகொண்டவனுடைய திருவடியை
வணங்கி	ஸேவித்து
ஏத்தாதார் எவர்	துதிசெய்யாதவர் யார் இருக்கிறார்
எண்ணில்	ஆலோசித்துப் பார்த்தால்
பவரும்	எங்கும் பரவின
செழும்	அழகான
கதிரோன்	கிரணங்களையுடைய ஸூர்யனும்
ஒண் மலரோன்	ஒளிநிறைந்த நாவிக் கமலத்திலுதித்த பிரமனும்
கண்ணுதலோன்	நெற்றியில் கண்படைத்த ருத்ரனும்
நாளும்	எப்பொழுதும்
தொடர்ந்து	ஸ்ரீய: பதியிருக்குமிடம் தேடிச்சென்று
தொழும்	ஸேவிக்கும்
தகையார் அன்றே	இயல்பினர்களன்றோ?

கீழ்ப்பாட்டில் ஸம்ஸாரிகளனைவரும் தேவதாந்தரபஜனஞ் செய்து வருந்துகிறார்களே ; என்று ஆழ்வார் துக்கமடைந்தார், உடனே சிலர் ஆழ்வாரை நோக்கி, பிரமன் ருத்ரன் இந்திரன் ஸூரியன் முதலியவர்கள் உயர்ந்தவர்களான தேவர்களன்றோ ? தாழ்ந்தவர்களான நாம் உயர்ந்த தேவர்களைத் தொழுதால் என்ன கேடு விளைந்துவிடும் என்று வினவ, அதற்கு விடையளிக்கிறாரிப்பாட்டில்.

அவரிவர்:— பிரமன் ருத்ரன் முதலிய தேவர்கள் உயர்ந்தவர்களாயினும் மனிதர்கள் தாழ்ந்தவர்களாயினும் ஸர்வேச்வரனை நாராயணனை அடிபணிந்து பிழைக்கவேண்டுமென்பதில் தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் சிறிதும் பேதமில்லை. தாஸ பூதாஸ் ஸ்வதஸ் ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந: என்று நாமும் தேவர்களும் அவ்வீசனடியார்களே. மனிதர் தேவர் என்ற வ்யத்யாஸம் இவ்விஷயத்தில் இல்லை. ஞானம் சக்தி ஐச்வர்யம் முதலியவைகளால் நம்மில் உயர்ந்தவர்களாயிருந்தால் இருக்கட்டும். மற்றொரு பரதேவதையை ஆச்ரயிக்குமிடத்தில் மனிதர் என்றோ தேவரென்றோ பேதமில்லை. உலகில் ஸர்வேச்வரனை வணங்கி ஏத்தாதவர்கள் யார் இருக்கிறார். ஆலோசித்துப்பார்த்தால் எங்கும் பரவிய அழகான கிரணங்களையுடைய ஸூரியனும் அயோநிஜனான பிரமனும் நெற்றியில் கண்படைத்த ருத்ரனும் நாள்தோறும் ஸ்ரீய: பதியானவன் இருக்குமிடத்தைத் தேடிச்சென்று தொழுவதையே தொழிலாகக்

கொண்டிருக்கிறார்கள். ஆதலால் ஸம்ஸாரிகள் நாடிச்செல்லுட தேவர்களும் எவரைத் தேடித் துதிக்கிறார்களோ? அத்தெய்வத்தை யே தொழுது பிறவித்துயரைத்தொலையுங்கோள் என்றார். கீழ்ட பாட்டில் "நின்னடியை யாரோதவல்லாரவர்" என்று எம்பெருமா னைப் பேசித் துதிப்பார் ஒருவருமில்லையே என்று சொல்லி இட பாட்டில் "எவர் வணங்கி ஏத்தாதார்" என்று அவனை வணங்கித் துதிக்காதவர்களே கிடையாது என்று சொல்வது பொருந்துமோ வென்னில், கீழ்ப்பாட்டில் இப்புவியில் ஒருவருமில்லையே என்று வருந்தினார். இப்பாட்டில் "எவர் வணங்கி ஏத்தாதார்" என்று எம்பெருமானை யாவரும் அடிபணியும்படி கடமைப்பட்டவர்கள்; அவனைத் தொழும் கடமையில்லாதவர்கள் யார்தான் இருக்கிறார் கள்; தேவர்களாகிலும் சரி, மனிதர்களாகிலும் சரி, அவனைத்தொழு தே தீரவேண்டும். அவ்வண்ணம் சூரியன் முதலிய தேவர்கள் அவனை வணங்கி வழிபடுகிறார்கள் என்றார். கீழ்ப்பாட்டில் கடமைப் பட்டவர்களாகிய மனிதர்கள் தங்கள் கடமையைச் செய்யவில்லை யே என்று வருந்தினாரெனப் பொருள்கொண்டு தெளிவது திறமை யாகும்.

தொடரெடுத்த மால்யானை சூழ்கயம் புக் கஞ்சி
படரெடுத்த பைங்கமலம் கொண்டு—அன் றிடரடுக்க
ஆழியான் பாதம் பணிந்தன்றே, வானவர் கோன்
பாழிதா னெய்திற்றுப் பண்டு. (31)

தொடர் எடுத்த	கால் சங்கிலியை அறுத்துக்கையிலே யெடுத்துச் செல்ல வல்லதான	கொண்டு	திருமாலைப் பூஜிப் பதற்குகென்று கை யில் கொண்டு
மால் யானை	பெரிய யானை	அன்று	அக்காலத்தில்
சூழ் கயம் புக்கு	மிகவும் விசாலமா ன பொய்கையிலே இறங்கி	இடர் அடுக்க	முதலையால் துன் பம் ஏற்படவே
		அஞ்சி	பயப்பட்டு
படர் எடுத்த பை கமலம்	மலர்ந்தும் உயர்ந்து ம் அழகாயுமிருக்கிற தாமரைப்பூவை	ஆழியான் பாதம்	விரோதிகளை யழிக் கவல்ல திருவாழி யையுடையவனு டைய பாதங்களை

பணிந்து அன்றே	வணங்கியல்லவா	வானவர் கோன் பாழி	நித்யஸூரி நாதனுடைய வீடான வைகுண்டத்தை
தான்	அந்த யானை	பண்டு	முன்னால்
		எய்திற்று	அடைந்தது.

கீழ்ப்பாட்டில் ருத்ரன் ஸூரியன் முதலியவர்களும் ஸ்ரீமந் நாராயணனை நாளும் தொழுதேத்துகிறார்கள் என்று சொல்லவே சிலர் தேவர்களுக்குத்தான் அவனை ஆராதிப்பதற்கு அதிகாரமுண்டு. அறிவினால் குறைவுள்ள நமக்கு அவனை வணங்கி வழிபடுவதற்கு அதிகாரமில்லையே யென்று ஸந்தேஹப்படவே, இப்பாட்டில் யாவருக்கும் அவனைத் தொழுவதில் அதிகாரமுண்டென்று கஜேந்திர வ்ருத்தாந்தத்தால் காட்டுகிறார்.

தொடரேடுத்த:—இந்த்ரத்யும்னன் என்பானொரு அரசன் அகஸ்தியமுனிவருடைய சாபத்தால் யானையாய்ப் பிறந்து, பூர்வஜன்ம வாஸனையின்படி தினந்தோறும் ஆயிரம் தாமரைப் புஷ்பங்களால் ஸர்வேச்வரனைப் பூஜித்துவர, ஒருநாள் ஒரு பொய்கையில் புஷ்பங்களைப் பறிப்பதற்கென்றிறங்கவே, தேவலருடைய சாபத்தால் ஹூஹூ என்கிற கந்தர்வன் முதலையின் வடிவங்கொண்டு அப்பொய்கையில் வஸித்துவந்து, அன்று அந்த யானையின் காலைப்பிடித்திழுக்கவும், அதனால் நோவுபட்டுக் கரையேறமாட்டாத யானையும் பரதேவதையை ஆதிமூலமே! என்றழைக்க, பரம்பொருளான ஸ்ரிய:பதியும் விரைந்துவந்து திருவாழியால் அம்முதலையைத் துணித்து யானையை மீட்டுக் கடைசியாகப் பரமபதத்தையும் அளித்தான் என்கிற வரலாறு யாவருமுணர்ந்ததே. இப்படிப் பொய்கையில் இறங்கிய கஜேந்திரன் நன்றாய் மலர்ந்திருந்த புஷ்பங்களைப் பறித்து நின்று முதலை வாயிலகப்பட்டு நலிவுபடவே, சக்ராயுததாரியான பெருமானைப் பணிந்தல்லவா பரமபதநாதனுடைய பதியை அடைந்தது. ஆதலால் ஒரு விலங்கான யானை அவனை ஆச்ரயித்து முக்தியை யடைந்ததென்றால் மனிதர்களுக்கு அவனை ஆச்ரயிக்க அதிகாரமில்லையா? ஆகவே தேவன் மனிதன் மிருகம் முதலிய பேதமின்றி எல்லாவற்றிற்கும் எம்பெருமானை ஏத்திப் பணிந்து பிழைக்க வதிகாரமுண்டென்பது நன்கு காட்டப்பட்டது.

தொடரேடுத்த மால்யானை:— கால்சங்கிலியை அறுத்துக் கையிலே தூக்கிக்கொண்டு கண்டவிடமெல்லாம் திரிவது யானைகளின் ஸ்வபாவமானபடியால் கஜேந்திரனுக்கு இங்கு இவ்விசேஷண மிடப்பட்டது. இத்தால் இப்படி மதங்கொண்டு முரட்டுத்தனமாய்த் திரியும் மிருகமொன்று பகவானைப் பணிந்து பரமபதமெய்திற்றென்றால் சிறந்த விவேகம் படைத்த மனிதர்கள் அவனைத் தொழுது ஏன் முக்திபெறலாகாது? என்கிற கவலை ஆழ்வாருக்குள தென்பது தெரிவிக்கப்படுகிறது.

பண்டிப் பெரும்பதியை யாக்கி, பழி பாவம்
கொண்டிங்கு வாழ்வாரைக் கூறுதே—எண்டிசையும்
பேர்த்தகர நான்குடையான் பேரோதிப் பேதைகாள்
தீர்த்தகர ராமின் திரிந்து. (14)

பேதைகாள்	புத்தியில்லாதவர்களே!	கூறுதே	பேசாமல்
பண்டியை	வயிற்றை	எண்டிசையும் பேர்த்த	(உலகளந்த காலத்தில்) எட்டுதிக்குகளும் இடியும்படி, எட்டி நீண்ட
பெரு பதி ஆக்கி	கண்டதையெல்லாம் புசித்து பெரிய ஊர்போல் பெரிதாகச்செய்து	கரம் நான்கு உடையான்	நான்கு திருக்கைகளையுடைய திரிவிக்ரமனுடைய
பழி பாவம் கொண்டு	பிறரால் ஏறிடப்படுகிற பாவங்களையும் தான் வேணுமென்றே நினைத்துச்செய்கிற பாவங்களையும் சேர்த்துக்கொண்டு	பேர் ஓதி	திருநாமங்களைச் சொல்லிக்கொண்டு
இங்கு	இப்புவியில்	திரிந்து	அவன் உகந்த நிலங்களிலே ஸஞ்சரித்துக்கொண்டு
வாழ்வாரை	பெருவாழ்வு வாழ்கிறதாக நினைக்கிற பாவிகளை	தீர்த்தகரர் ஆமின்	உலகத்தைச் சுத்தி செய்கிற ஸ்ரீ வைஷ்ணவராக ஆகுங்கோள்;

கஜேந்திராழ்வானுடைய வரலாற்றைக் காட்டி ஸர்வேச்வரன் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்கிற பேதமின்றி யாவராலும் ஆச்ரயிக்கத் தகுந்தவன் என்று சொன்னபின் அவ்வீச்வரனையே பாடித்

தூதியுங்கோள். மற்ற ஸம்ஸாரிகளைக் கவிபாடித் திரியவேண்டா மென்று உபதேசஞ் செய்கிறாரிதில்.

பண்டி:— பகவானை நினையாத பாவிகள் இவ்வுலக வாழ்க்கை யையே பெரிதாக நினைத்துக் கண்ணில் தென்பட்ட பதார்த்தங்களை யெல்லாம் சாப்பிட்டுப் பாழும் வயிற்றைப் பதின்மடங்கு பெரிய தாய்ச்செய்து, தான் தெரியாமலே செய்யும் பாவங்களையும் வேணு மென்றே நினைத்துச் செய்யும் பாவங்களையும் மூட்டை மூட்டை யாகச் சுமந்துகொண்டு இவ்வுலகவாழ்க்கையையே பெருங்கலி யாணமென்று நினைத்துத் திரிகிறார்கள். அப்பேதைகளை ஸ்தோத்ரம் செய்து அவர்கள் கொடுக்கும் காசுகளைக்கொண்டு வயிறுவளர்க்கும் தொழிலை விட்டுவிடுங்கோள். வாமனனாய் வந்து மாவலிபக்கல் மண்ணிரந்து எட்டுத் திசைகளையும் இடிக்கும்படி நீண்டு வளர்ந்த நான்கு கைகளையுடைய த்ரிவிக்ரமனைப் வளர்ந்த பெருமானுடைய திருநாமங்களை பிதற்றிக்கொண்டு திவ்யதேசங் கள் தோறும் சென்று பெருமானை ஸேவித்து உங்களுடைய ஸ்பர் சத்தால் உலகத்தை பரிசுத்தமாகச் செய்யுங்கோள் என்று ஸம்ஸாரி களைப் பார்த்துபதேசித்தார்.

பண்டி—வயிறு. பெரும்பதி—பெரியவூர். பெரும்பதியை என் றவிடத்திலுள்ள இரண்டாம் வேற்றுமை யுருபைத் தனியே பிரித்து பண்டிஎன்பதோடுகூட்டிப்பொருள்கூறினால் வயிற்றைஓர்ஊர்போல் பெரிதாகும்படி செய்து என்ற பொருள் கிடைக்கும். பண்டியை பெரும்பதியாக்கி என்றந்வயம். பழி—பிறரால் நம்மிடம் சொல்லப் படும் குற்றங்கள். நமக்குத் தெரியாமலேயே நாம் செய்த பாவங் கள் என்பது கருத்து. பாவம்—நாம் வேணுமென்றே நினைத்துச் செய்த பாவங்கள். இவ்வுலக வாழ்க்கையையே பெரிதாகவெண் ணியிருப்பவர்கள் கேவலம் வயிற்றை நியமமின்றிக் கண்ட வஸ்துக் களைக்கொண்டு நிரப்பித் தெரிந்தும் தெரியாமலும் பாவங்களையே செய்து திரியும் இயல்புள்ளவர்களாதலால் இங்ஙனம் சொன்னபடி. அந்த அறிவிலிகளைப் போற்றித் திரிகிறவர்கள் அவர்களைக் காட்டி லு மறிவிலிகளாதலால் பேதைகாள் என விளித்தார். "எண்டிசை யும் + நான்குடையோன்" திரிவிக்ரமனாய் வளர்ந்தபோது எம்பெரு

மானது திருக்கைகள் எட்டுத் திசைகளையும் ஸ்பர்சிக்கும்படி விம்ம வளர்ந்தன என்பதாம்.

தீர்த்தகராமின்:— ஸர்வேச்வரனுடைய திருநாமங்களைச் சொல்லிக்கொண்டு திவ்யதேசங்களில் நித்யவாஸம் செய்யும் பெருமானை ஸேவிப்பவர்கள் இவ்வுலகைப் பரிசுத்தமாக்குகிறார்கள் என்றபடி. நாதனை நரசிங்கனை நவின்றேத்துவார்களுழக்கிய பாததூளி படுதலால் இவ்வுலகம் பாக்கியம் செய்ததே என்று பெரியாழ்வாரும் ஆதியந்த மனந்தமற்புதமான வானவர் தம்பிரான், பாதமா மலர் சூடும் பத்தியிலாத பாவிகளுய்ந்திட, தீதில் நன்னெறிகாட்டி யெங்கும் திரிந்து அரங்கனெம் மானுக்கே, காதல்செய் தொண்டர்க்கு என்று குலசேகராழ்வாரும் அருளியபடி திவ்யதேசங்கள் தோறும் சென்று திருமாலை யேத்தித் திரிபவர்கள் பிறரையும் தன்னைப்போல் ஆக்கிவிடுகிறார்கள் என்பது பற்றி தீர்த்தகரர் ஆமின் என்றார்.

பண்டு இப்பெரும்பதியை ஆக்கி என்று பதம் பிரித்தால் அனாதிகாலமாக (முக்திபெற வழிதேடாமல்) இந்த ஸம்ஸாரத்தை யே வளர்த்துக்கொண்டு வருபவர்களென்று பொருள்.

திரிந்தது வெஞ்சமத்துத் தேர்கடவி, அன்று
பிரிந்தது சீதையை மான்பின்போய்—புரிந்ததுவும்
கண்பள்ளி கொள்ள வழங்கியதே, நாகத்தின்
தண்பள்ளி கொள்வான் றனக்கு. (15)

வெம் சமத்து	க்ரூரமான பாரதப் போரில்	சீதையைப் பிரிந்தது	பிராட்டியைப் பிரிந்ததுவும்
தேர்கடவி	(அர்ஜுனனுடைய) ரதத்தை ஓட்டிக் கொண்டு	கண் பள்ளி கொள்ள	(காட்டில்) வெறுந் தரையில் படுத்துக் கொள்ள
திரிந்தது	ஸாரதியாய் அலைந்ததுவும்	புரிந்ததுவும்	விரும்பியதும்
அன்று	இராமாவதார ஸமயத்தில்	நாகத்தின் தண் பள்ளி கொள்வான் தனக்கு	ஆதிசேஷனாகிற சீதளமான படுக்கையில் பள்ளிகொள்ளும் பிரானுக்கு
மான் பின் போய்	மாரீசனாகிற மானை துரத்திச்சென்று	அழகியதே	தகுதியன்றோ ?

கீழில் த்ரிவிக்ரமாவதாரம் நினைக்கப்படவே மற்றவவதாரங்களும் நினைவிற்கு வந்து அவ்வவதார சேஷ்டிதங்களில் கால் தாழ்ந்து அவற்றைப் பேசுகிறாரிதில். அல்லது தான் உபதேசித்ததை செவியில் வாங்காமலேயே தங்கள் கார்யங்களிலேயே கண்ணோக்கங் கொண்ட ஸம்ஸாரிகளைப் பார்த்து வருந்திய வாழ்வார், இவர்களுக்காகப் பரம புருஷன் நாட்டில் பிறந்து படாதனபட்டுப் பெருந்துன்பங்களடைந்திருக்க, இவர்கள் இப்படித் திரிகிறார்களே என்று நினைந்து அவ்வீசன் செய்த அரும்பெருஞ்செயல்களில் ஆழ்ந்து கிடக்கிறார் என்பது இப்பாட்டில் பேசப்படுகிறது.

திரிந்தது:— ஸ்ரீய: பதியான நாராயணன் நாற்றம் குளிர்த்தி மார்த்தவம் இவைகளுக்குப் பிறந்தகமான திருவனந்தாழ்வானாகிற திருப்பள்ளியில் தன் பரத்வத்திற்கேற்பப் பள்ளிகொண்டு பரமானந்த பரிதனாயிருக்கவேண்டியது ப்ராப்தமாயிருக்க, அவ்வனந்தனையும் விட்டு இப்பூமியில் கண்ணனாய்ப் பிறந்து பாரத ஸமரத்தில் அர்ஜுனனுக்கு ஸாரதியாயமர்ந்து வெய்யிலிலும் காய்ந்து மழையிலும் நனைந்து எதிரிகளெய்தவம்புகள் உடம்பில் தைக்க அர்ஜுனன் ஏவின விடங்களிலெல்லாம் ரதத்தை ஓட்டிக்கொண்டு திரிந்தானே;

ஸ்ரீ ராமனாய்ப் பிறந்து பாராளும் படர்ச்செல்வம் பரதநம்பிக்கருளி ஆராவன் பிளையவனோடு அருங்கானமடைந்து, மாயமான் பின்சென்று ஸீதையைப் பிரிந்து வருந்திப் புலம்பித் தவித்து நின்றானே ;

மேலும் ஸ்ரீராமனானபடியில் திருவயோத்தியில் உயர்ந்த மாளிகையில் ஸமஸ்தோபசாரங்களுடன் மெல்லணைமேல் துயின்று அப்போகங்களைத் துறந்து வளநகரம் துறந்து, கானகம் விரும்பி கல்லணைமேல் கண்துயின்றானே; கைகேயியின் பொருட்டு ராஜ்யத்தைப் பரதனுக்குக் கொடுத்ததும், கானகத்தில் வெறுந்தரையில் படுத்துக்கொள்வதில் ஆசையினால் தானோ என்று தோன்றுகிறதே. இப்படி அவன் தன் பரத்வத்தை நினையாமல் தன்னை யழிய மாறி இவ்வுலகம் வந்து இவ்வலைச்சல்களைச் செய்து பட்டபாட்டை இந்த ஸம்ஸாரிகள் அறியவில்லையே; இது என்ன அநியாயம்; அவனது நீர்மையை இப்பாவிகள் அறியவில்லையே; என வருந்துகிறார்.

அழகியதே:— கீழ்ச்சொல்லிய செயல்களெல்லாம் அனந்தன் மேல் கிடக்கும் புண்ணியனுக்குப் பொருத்தமுள்ளவையா? அவனுக்கு இவைகள் அழகைக் கொடுக்கின்றனவா? என்று பொருள். இவைகள் அவனுக்குப் பொருந்தாத செயல்களாயினும் ஆச்ரிதார்த்தமாகச் செய்யப்பட்டனவென்று தேறி அவனது சீல குணத்தை அநுஸந்திப்பது கடமையாகும். அழகியவே என்று பாடமாகில் ஜகத் ரக்ஷண தீக்ஷிதனான அவ்வீசனுக்கு இவைகள் அழகானவைதான் பொருத்தமுள்ளவைதான் என்று பொருள் கொள்க.

தனக்கடிமை பட்டது தானறியானேலும்
மனத்தடைய வைப்பதாம் மாலை—வனத்திடரை
ஏரியாம் வண்ண மியற்றுமிது வல்லால்
மாரியார் பெய்கிற்பார் மற்று. (16)

தனக்கு	ஜீவாத்மாவாகிற தனக்கு	வனம்திடரை	காடெழுந்திருக்கும் மேட்டுபூமியை
அடிமை	தாஸ்யமானது	ஏரி ஆம் வண்ணம்	ஒரு தடாகமாக வாகும்படியாக
பட்டது	பொருந்தியிருக்கிறது என்பதை	இயற்றும் இது அல்லால்	குழியாக வெட்டுகிற இந்தக் காரியத்தைத் தவிற
தான் அறியான் எனும்	தான் அறிந்துகொள்ளமுடியாதவனாயிருந்தபோதிலும்	மற்று	மேலும்
மாலை	ஸர்வேச்வரனை	மாரி	மழையை
மனத்து	மனஸ்ஸிலே	பெய்கிற்பார்	பெய்யும்படி செய்பவர்
அடைய	பொருந்தியிருக்கும்படி		
வைப்பது	வைத்துக்கொள்வது	யார்	எவர் இருக்கிறார்? மழைபெய்வது ஈச்வரனுடைய அருளாலேயாகும்.
ஆம்	உசிதமான காரியமாகும்		

கீழ்ப்பாட்டில் புருஷோத்தமன் நாட்டையாளித்துய்யச் செய்யும்பொருட்டு நாட்டில் பிறந்து அலைந்து திரிந்து பட்டபாட்டையருளிச்செய்தார். இப்படி அவன் நம்மைத் திருத்திப் பணி

கொள்வானுனபின்பு தாம் செய்யவேண்டியதைப் பேசுகிருரிப் பாட்டில்.

தனக்கடிமை:—ஒரு சேதனன இக்கொடிய ஸம்ஸாரத்தை விட்டுக் கரையேறி பரமபதமென்கிற லோகத்தையடையவேணு மென்று நினைத்தானேயாகில் அவன் அசேதனமான கல், மண், ஸ்தம்பம் முதலிய பதார்த்தங்களைப்போல் வெறுமனே திரிந்தானே யாகில் விரும்பிய பரமபுருஷார்த்தம் கிடைக்காது. சேதநனுகை யாலே ஏதோ ஒரு உபாயத்தைச் செய்தே தீரவேண்டும். அப்ப டிச் செய்யப்படுமுபாயமும் நாம் பெறுகிற புருஷார்த்தத்திற்குச் சரியான விலையாகாது. ஒரு அரசனுக்கு எலிமிச்சம்பழத்தைக் காணிக்கையாகக் கொடுத்து ஒரு கிராமத்தைப் பெறுவதுபோல் உபாயமும் வ்யாஜமாத்ரமாகவே நிற்கும். ஈச்வரனும் ஸர்வமுக்தி ப்ரஸங்கம் வைஷம்யம் நைர்க்ருண்யம் முதலிய தோஷங்களுக் கஞ்சி இவ்வியாஜத்தை யபேக்ஷித்தே மோக்ஷத்தைத் தருகிறுனென் ருன். ஸர்வஜ்ஞோபி ஹி விச்வேசோ ஸதா காருணிகோபி ஸந் | ஸம்ஸாரதந்த்ரவாஹித்வாத் ரக்ஷாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே || என்ப தையும் காண்க. அவாப்த ஸமஸ்தகாமனுனவன் இந்த அல்பவ்யா பாரத்திற்காக விலைமதிப்பில்லாததும் புநராவ்ருத்தியில்லாததுமான பேரின்பமான பரமபதத்தைக் கொடுப்பதும் அவனுடைய பரமதயா கார்யமாகவே தேறும். ஆனதுபற்றி இச்சேதனன் செய்யவேண்டி யது என்னவென்ருல் அதை இப்பாட்டின் முன்னடிகளால் பேசு கிருர். ஸ்வத்வ மாத்மநி ஸஞ்ஜாதம் ஸ்வாமித்வம் ப்ரஹ்மணி ஸ்திதம் என்னும்படி ஜீவன் பரமாத்மாவுக்கு அடிமைப்பட்டது என்று ஸ்வரூபஜ்ஞானத்தை பெருதவனுயிருக்கிற மனுஷ்யனும் அந்த ஸர்வேச்வரனை மனத்திலே நினைப்பது அவனுடைய கார்ய மாகும். நமக்கு ஸ்வரூபஞானம் தெளிவாகப் பிறக்கவில்லையே என்று வெறுமனே இராமல் யத்யதாசரதி ச்ரேஷ்டோ தத் ததேவே தரோ ஜன:—என்கிறபடி உயர்ந்தவர்களான பெரியோர்கள் திரு மாலை நெஞ்சில்கொண்டு துதிப்பதால் நாமும் அவனைக்கொள்வோ மென்று மஹரீயர்களுடைய அனுஷ்டானத்தைப் பார்த்து தம் நெஞ்சில் அவனைக் கொள்வது உசிதமாகும் என்று பகவத்விஷயத் தில் ஆசையை வேண்டுவது தான் சேதநனுடைய கார்யமென்ருர்.

ஆனால் ஸ்வரூபஜ்ஞானம் பூர்ணமாய் இல்லாமலே அவனை நெஞ்சில் நினைப்பதால் மாத்திரம் நமது மநோரதம் தலைகூடுமோவென்று சிலர் வினவ, அதற்குப் பின்னடிகளால் பதிலளிக்கிறார். எப்பொழுதும் நாம் செய்யும் உபாயங்களுடைய பூர்த்தியினாலேயே பலம் வந்துவிடுமென்று ப்ரமிக்கவேண்டாம். அது ஒரு வ்யாஜமாத்ரமேயாகும். ஒரு உதாஹரணம் காட்டுவோம். ஒரு காடெழுந்து கிடக்கிற மேட்டுத்திடர் நிலத்தை ஏராளமான பணச்செலவு செய்து பள்ளமாக வெட்டி நான்கு பக்கங்களிலும் உயர்ந்த கற்களால் படிக்கட்டுகளும் கட்டி ஒரு பெரிய ஏரியாகச் செய்கிறான். உடனே அதில் ஜலம் உண்டாவதற்கு மழையையும் அவன் பெய்யும்படி செய்கிறானோ? அது ஸர்வேச்வரனுடைய ஸங்கல்பத்தாலன்றோ ஆகவேண்டும். மழைபெய்தால் மேட்டு நிலத்தில் ஜலம் தங்கமுடியாதே யென்று நினைத்து நாம் பள்ளமாகச் செய்துவைத்தால் மழைபெய்யும் கால் ஜலம் நிறையுமே என்றல்லவோ ஏரியாகச் செய்கிறான். ஆதலால் பலம் கிடைப்பது அவனருளாலேயேயாகும் செடலாதலால் நாம் பரிபூர்ணமாகப் பரிகரங்களைப் பெற்றிருந்தாலும் "உனதருளே பார்ப்பனடியேனே" என்றிருக்கவேண்டியதாயிருப்பதால் பகவத் விஷயத்தில் நாம் ருசிவைத்தால் அத்தைப் பெரிதாக நினைத்து ததாமி புத்தியோகம் தம் யேந மாமுபயாந்தி தே என்கிறபடி அவன் பலபர்யவஸாயியாகச் செய்கிறானென்று சொல்லி, பெருமானிடம் ருசியை வைக்கவேண்டியது சேதனனுடைய கார்யமென்றார்.

ஆழ்வார்கள் உபாயபூர்த்தியைப் பரிபூர்ணமாகப் பெற்றிருந்தாலும் அவ்வுபாயங்களை யெல்லாம் அவன் கொடுக்கும் புருஷார்த்தத்திற்குத் தகுதியான விலையாகாது; இது ஒரு வியாஜமே என்று நினைத்துத்தான் என்நன்றி செய்தேன்நான்என் நெஞ்சில் திகழ்வதுவே என்று நினைக்கும்படியாயிருக்கிறது. கர்மயோகஞானயோகாதிகளால் மனத்தை நிர்மலமாகச்செய்த பெரியோர்களும் வளைத்துவைத்தேனினிப் போகவொட்டேன் என்னும்படி அவ்வீச்வரன் வந்து புகுந்தால் நிலையாக வவனை நிறுத்தவேண்டி கர்மயோகம் ஞானம் முதலியவைகளைச் செய்கிறார்களே யல்லது தங்களுடைய யோகத்தால் ஈச்வரனைக் கொணர்ந்து வைக்கிறார்களில்லை. ஆதலால் ஆபே

க்ஷித புருஷார்த்தம் கிடைப்பது அவனாலேயாகுமாதலால் நாம் ஸ்வரூபஜ்ஞானத்தைப் பெறுவிடினும் அவனை மனத்தில் வைப்பதாகிற ருசியை ஸம்பாதிக்கவேண்டும் என்று உபதேசித்தபடி.

இப்பாட்டிற்கு இன்னும் பலபடியாகப் பொருள் உண்டாயினும் விரிவுக்கஞ்சி இங்கு எழுதப்படவில்லை. பெரியோர்களைக் கேட்டுத்தெளிக.

மற்றாரியலாவார் வானவர்கோன் மாமலரோன்
சுற்றும் வணங்கும் தொழிலானை—ஒற்றைப்
பிறையிருந்த செஞ்சடையான் பின்சென்று, மாலைக்
குறை யிரந்து தான் முடித்தான் கொண்டு. (17)

வானவர் கோன்	தேவராஜனான இந்திரனும்
மாமலரோன்	உயர்ந்த தாமரைமலரில் பிறந்த பிரமனும்
சுற்றும்	நாலுபக்கங்களிலும் சூழ்ந்துகொண்டு
வணங்கும்	ஸேவிப்பதற்கேற்ற
தொழிலானை	திவ்யசேஷ்டிதங்களையுடைய
மாலை	ஸ்ரிய: பதியான தேவனை
ஒற்றை பிறை இருந்த செம் சடையான்	ஒரு கலையையுடைத்தான சந்திரன் வாஸம் செய்கிற சிவந்த ஜடையையுடைய ருத்ரன்
பின்சென்று	அநுஸரித்து
இரந்து	கெஞ்சிக் கேட்டுக்கொண்டு
குறை	தன்னுடைய குறையை
தான்முடித்துக் கொண்டான்	தான் தீர்த்துக்கொண்டான்
	இப்படியான பின்பு
இயல் ஆவார்	நாம் ஆச்ரயிக்கும்படியான யோக்யதையுள்ளவர்கள்
மற்று ஆர்	வேறு யார் இருக்கிறார்கள்?

இப்பாட்டில் திருமாலைத் தவிர்த்து வேறு நம்மையுய்யக் கொள்ளவல்ல தெய்வம் இங்கு யாதொன்றுமில்லை என்பது சொல்லப்படுகிறது.

மற்றாரியலாவார்:—அஷ்டவஸுக்கள். த்வாதசாதித்யர்கள் அச்விநீ தேவதைகள் ஏகாதசருத்ரர்கள் ஆகிய முப்பத்துமுக்கோடி

தேவர்களுக்கும் நாதனுன இந்திரனும் புருஷோத்தமனுடைய நாபி யிலுள்ள கமலத்தில் பிறந்த நான்முகக்கடவுளும் எம்பெருமானுக் கெதிரே செல்லப்பயந்துகொண்டு நான்கு பக்கங்களிலும் நின்று கொண்டு வணங்கித்துதிக்கிறூர்கள். தக்ஷமுனிவருடைய சாபத் தின்பயனுக க்ஷயமடைந்த சந்திரன் தன்னைச் சரணமடையவே அவனை தன்சடையிலே வைத்துக்காக்கும் ஸாகப்ரதானனுன ருத் ரன், இந்திரன் பிரமன் இவர்களைப்போல் அப்பெருமானுடைய சுற் றுப்பக்கத்திலும் நிற்பதற்கும் திறமையில்லாமல் அப்பெருமானது கண்ணில் தென்பட்டால் நமக்கு என்னவிளையுமோ வென்றஞ்சி அவன் பின்னே சென்றுகொண்டு தனது குறைகளை அவன் திருச் செவிகளில் விழும்படி மெள்ளச்சொல்லி யாசித்து தன்னுடைய ப்ர ஹ்மஹத்யாதிதோஷங்களாகிற குறைகளைத் தீர்த்துக்கொண்டான். அறிவிலிகளால் போற்றப்படுகிற சில்லரைத்தெய்வங்களான இந்தி ரன் பிரமன் ருத்ரன் முதலியவர்களும் அப்பெருமானிடம் நேர்கொடு நேர் செல்லவஞ்சிப் பக்கங்களில் நின்று யாசித்து தன் மனோபீஷ்ட ங்களைப் பெறுகிறூர்கள் என்றுல் நாம் வணங்கி வழிபடவேண்டும் தெய்வம் அத்திருமாலல்லது வேறில்லையென்பது நன்கு விளங்கும்.

"செஞ்சடையான் பின்சென்று மாலைக்கொண்டு இரந்துகுறை முடித்தான்" என்று அங்வயம் கொண்டு ருத்ரன்பின்னே சென்று திருமாலை மனத்திலே வைத்துக்கொண்டு யாசித்து தன் குறைகளை முடித்துக்கொண்டான் என்று பொருளுரைப்பதும் தகும்.

கொண்ட துலகம் குறளுருவாய்க் கோளரியாய்
ஒண்டிறலோன் மார்வத் துகிர்வைத்தது—உண்டதுவும்
தான் கடந்த வேழுலகே தாமரைக்கண் மாலொரு நாள்
வான் கடந்தான் செய்த வழக்கு. (18)

குறள் உருஆய் — வாமன வடிவத்துடனுகி
உலகம் கொண்டது — உலகங்களை ஸ்வாதீனங்களாகச் செய்துகொண்டதும்
கோள் அரி ஆய் — மிகுந்தபலமுள்ள நரசிங்கமாகி
ஒண் திறலோன் — விலக்ஷணமான பலத்தையுடைய ஹிரண்யனுடைய
மார்வத்து — மார்பில்
உகிர்வைத்தது — நகங்களைவைத்துக் கிழித்ததுவும்

ஒருநாள்	ஒரு காலவிசேஷத்தில்	வான்கடந்தான்	வானிலும் பெரிய பெருமையுள்ளவனும்
தான் கடந்த எழ் உலகு எ	தான் அளந்த ஸப்த லோகங்களையும்	தாமரைகண்	தாமரைபோன்ற கண்களையுடையவனுமான
உண்டதுவும்	அமுது செய்ததுமான	மால்	எம்பெருமான்
(இப்பெரும் செயல்கள்)		செய்தவழக்கு	செய்த நியாயமான கார்யங்களாம்.

திருமாலைத்தவிர வேறு தெய்வத்தை நாம் ஆச்ரயிக்க விரகில்லை என்று பேசி அவன் செய்த ஜகத்ரக்ஷண ப்ரகாரத்தை அநுஸந்திக்கிறாரிதில்.

கொண்டதுலகம்:—ஆகாசத்தை அளந்தாலும் அளக்கலாம் ஸர்வேச்வரனையோ அல்லது அவனது பெருமையையோ அளவிட முடியாது. அப்படி வானிலும் பெரிய பெருமை வாய்ந்த நித்ய ஸூரிநாதன் ஜனங்கள் குள்ளனென்று பரிஹாஸம் செய்வதற்கிடாக வாமநவடிவங்கொண்டு மாவலியிடமிருந்து உலகங்களைப் பெற்றுக் கொண்டு இந்திரனது துயரத்தைப்போக்கினான். மூவுலகங்களும் இரணியனது கொடும் செயல்களால் வருந்தியபோது வடிவில் ஒரு விதமாகவும் முகத்தில் ஒருவிதமாகவும் கண்டாரஞ்சும்படியான நரங் கலந்த சிங்கமாய்த்தோன்றி இரணியனது மார்வத்தை நகத்தாலே கிழித்துப் பொகட்டு மூவுலகங்களுக்கும் அபயமளித்தான். மற்றொருகால் பிரளயங்கொள்ளாதபடி இப்பிரபஞ்சங்களையெல்லாம் தான் திருவயிற்றிலே வைத்துக்கொண்டு காப்பாற்றினான். இவையனைத்தும் நீதியான கார்யங்களேயாகும். அரசன் பிரஜைகளை ரக்ஷிப்பது நியாயமானதுபோல் ஸர்வ ஜகந்நாதன் ஜகத்ரக்ஷணார்த்தமாகச் செய்த வ்யாபாரங்கள் அவனுடைய ரக்ஷகத்வத்திற்குப் பொருந்தியவே என்கிறார். குள்ளனாய்ப் பிறப்பதும், வடிவில் ஒன்றும் முகத்தில் ஒன்றுமான பிறவியும் திரிவிக்ரமனாய் வளர்ந்தபோது தன் காலில் துகைப்பட்டுக்கிடந்ததை சாப்பிடுவதும் சிஷ்டர் பரிஹஸிக்க இடமாயிருப்பினும் லோகரக்ஷணார்த்தமாகச் செய்தபடியால் நியாயமான செயல்களே யாகுமென்கிறார்.

வான்கடந்தான் செய்தவழக்கு என்பதற்கு எதிர் மறைப் பொருள் கொண்டு இவைகள் நியாயமல்லவென்றும் பொருள் வரையலாம். சிறிய வடிவைக்காட்டி பெரியவடிவால் அளப்பதும் ஒருவரும் பார்த்தறியாத புதியதோர்வடிவாய்ப் பிறப்பதும் தன்கால்பட்ட வஸ்துவைப் புசிப்பதும் நியாயமற்ற செயலாகும் என்பதாம். இப்படிப் பேசுவதும் அவனிடமுள்ள பக்தியின் பெருக்காலே என்று கொள்க.

"வான்கடந்தான்". ஸ்வர்க்கத்தை அளந்தவனென்றுதல் வானினும் பெரிய புகழ்வாய்ந்தவனென்றுதல், "ஒருநாள் வான்கடந்தான்" என்றநவயித்து ஒருநாள் நித்யஸூரிகளுக்கருகே நிற்பவன் என்றுதல் (அவதாரங்கள் செய்து இப்பிரகிருதியில் நிற்கும் காலத்தைவிட பரமபதத்தில் நித்யஸூரிகளிடம் நிற்பது குறைவு என்று கொண்டு அவ்வளவு ஸௌலப்ய குணத்தைப் பெற்றவன்) பொருள் கொள்ளலாம். ஆகவே இப்பாட்டால் அவனே ஸர்வ ஸமாச்ரயணீயனென்று ஸ்தாபிக்கப்பட்டது.

வழக்கன்று கண்டாய் வலிசகடம் செற்றாய்
வழக்கென்று நீ மதிக்க வேண்டா—குழக்கன்று
தீவிளவின் காய்க்கெறிந்த தீமை திருமாலே
பார் விளங்கச் செய்தாய் பழி. (19)

திருமாலே!	ஸ்ரீய: பதியே! நீ	குழ கன்று	அழகான கன்றுக் குட்டியை
வலிசகடம்	வலிமையுள்ள சகடத்தை	தீ விளவின் காய்க்கு எறிந்த	கொடிய விளாங்கனியை உதிர்ப்பதற்கென்று வீசிப்போகட்ட
செற்றாய்	முறித்தாய்		
வழக்கு அன்று கண்டாய்	இது உனக்கு நியாயமான செயலாகாது காண்;	தீமை	தீங்கான செயலை
வழக்கு என்று நீ மதிக்கவேண்டா	இது நியாயமான செயலென்று நீ நினைக்கவேண்டாம்	பார் விளங்க	இப்பூமியில் பிரகாசிக்கும்படியான
		பழிசெய்தாய்	தப்பாகச் செய்தாய்

அவன் செய்த ரக்ஷணவ்யாபாரமெல்லாம் பழியாய் விளைந்ததென்கிறார் இதில்.

வழக்கன்று:—திருமாலே! நீ கண்ணனாய்ப் பிறந்து அஸுராவிஷ்டமான வண்டியின் கீழே தொட்டிலில் உறங்கும்போது, உன்மேல் விழுந்து கொல்லவேணுமென்று அவ்வஸுரன் நினைக்க, நீ அவ்வலிய சகடத்தை உன்னுடைய பஞ்சியன்ன மெல்லடியால் பாய்ந்து உதைத்தாய். இதுவுனக்குத் தகுதியல்ல. அவ்வமயம் உன் திருவடிகளுக்கு என்ன நோவு நேர்ந்ததோ என்று ஆச்ரிதர்கள் அஞ்சுகிறார்கள். என்று பகவானை விளித்துச்சொல்லவே அவனும் அது செய்தாய்விட்டது; அதைப்பற்றிச் சொல்வதேன்? என்று சொல்லவே, அதற்குப் பதிலுரைக்கிறார் இரண்டாமடியில். செய்துவிட்டபோதிலும் நீ அதை நியாயமென்று நினைக்கவேண்டாம் அது பழியேயாகும் என்றார். இங்ஙனம் உன் மேல் விழுந்துன்னைக் கொல்ல நினைத்து விளாங்கனி வடிவமாய் நின்றவனை உன்னை முட்டிக்கொல்ல நினைத்துவந்த வத்ஸாஸுரனுடைய காலைப் பிடித்துத் தூக்கி எறிந்து அடித்து இருவரையும் கொன்றாயே; உன்னுடைய ஸுகுமாரமான திருக்கைகளால் அவ்வஸுரனது கடினமான காலை எப்படிப் பிடித்தாய்; இதுவும் ஆச்ரிதர்கள் அஞ்சவேண்டிய செயலாயிருக்கிறது. இச்செயல்கள் உனது திருமேனிக்குத் தகுதியானவையா? நீ வேணுமென்று நினைத்துச் செய்தபோதிலும் பார்விளங்கத் தீமை செய்தாய், பழிசெய்தாய் என்றே பேசினார்.

திருமாலே என்பதால் நீயும் பிராட்டியுமாக ஸுகித்திருப்பது நியாயமேயன்றி இப்படி ஜகத்ரக்ஷணத்தில் ஈடுபட்டதன் பயனாக உனக்கே அவ்வஸுரர்களால் என்ன விளையுமோ வென்று ஆச்ரிதர்கள் பயப்படும்படியாகவா கார்யம் செய்வது; என்று வருந்தியது ஸூசிதமாகும்.

பழிபாவம் கையகற்றிப் பல்காலும் நின்னை
வழிவாழ்வார் வாழ்வராம் மாதோ—வழுவின்றி
நாரணன்றன் நாமங்கள் நன்குணர்ந்து நன்கேத்தும்
காரணங்கள் தாமுடையார் தாம். (20)

பழி	அபகீர்த்திகளையும்	கை அகற்றி	விலக்கி
பாவம்	பாவங்களையும்	பல்காலும்	ஸர்வகாலங்களிலும்

நின்னை	உன்னையே
வழி வாழ்வார் தாம்	வழிப்பட்டு அனுபவிப்பவர்களும்
நாரணன் தன்	நாராயணனுடைய
நாமங்கள்	பெயர்களை
நன்கு உணர்ந்து	நன்றாய் தெரிந்து கொண்டு
வழுவு இன்றி	ஓய்வின்றி (எப்...
நன்கு ஏத்தும்	நன்றாய் துதிப்ப...
காரணங்கள் உடையார் தாம்	ஸாதனங்களை அடைந்த அதி... களும்
வாழ்வராம்	பேரின்பத்துடன் வாழப்பெறுவார்
	மாதோ அசைச்சொல்

கீழ்ப்பாட்டில் க்ருஷ்ணனுடைய ஸர்வஜகத்ரக்ஷகத்வத்தை பேசினார். இப்பொழுது அவனை ஆச்ரயிப்பவர்கள் தான் ஆத்ம... பத்தை யடைகிறார்கள் என்கிறார்.

பழிபாவம்:— பழி—தானறியாமல் செய்துவைத்துப் பிற... சொல்லப்படுங்கால் தெரியப்படும் பாவம். பாவம் தான் வே... மென்றே தெரிந்து செய்யும் பாவம்.

ஸர்வஜகத் காரணவஸ்துவைத் தியானம் செய்யவே நெரு... விட்ட பஞ்சுபோல் பாவங்கள் நசிக்கின்றனவென்கிற உபநிஷ... தத்தின்படி உபாஸனம் செய்து தான் தெரியாமலும் தெரிந்... செய்துவைத்திருக்கும் பாவங்களையெல்லாம் விலக்கிக்கொண்... ஆப்ரயாணாத் என்ற ப்ரஹ்மஸூத்திரத்தின் படிபல்நாளும் தமேவ... வித்வானம்ருத இஹ பவதி நாந்ய: பந்தா அயநாய வித்யதே என்... வேதத்திலே சொல்லப்பட்ட உபாஸனமாகிற வழியிலே நின்... கொண்டு, ஸாஸாகம் கர்த்து மவ்யயம் என்றபடி ஸாதகதசை... லேயே ஸாகமாயிருக்குமதிகாரிகளான பக்தியோகநிஷ்டர்கள் இ... தியில் பரமபதத்தை யடைந்து வானோர் வாழ்ச்சியைப்பெற்று ம... கிறார்கள் என்று முன்னடிகளில் உபாஸகர்களின் பெருமையை பேசினார்.

வழுவின்றி:— அகிலஹேயப்ரத்யனீகனான நாராயணனுடை... நாமங்களை நாவால் நவின்றேத்தும்படிக்கீடான ஈச்வரனுடை... கடாக்ஷம் பாகவதஸம்பாஷணம் யத்ருச்சாஸுக்ருதம் முதல...

காரணங்களைப் பரிபூர்ணமாகப்பெற்ற வதிகாரிகளும் பரமபதமெய்திப் பெருமகிழ்ச்சியடைகிறார்கள் என்றார்.

இத்தால் சரணாகதிக்குத்தரகாலத்தில் ஒரு பிழையும் புகாதபடிக்கும், பலரூபமாக நத்வயவசனத: க்ஷேமகரணம் என்றபடி அவனுடைய திருநாமங்களடங்கிய த்வயம் முதலிய மந்த்ரங்களை சொல்லும்படிக்கும் ஸாதனமான காரணங்களையுடையவர்களான ப்ரபந்நர்கள் வாழ்வார்கள் என்று ப்ரபந்நாதிகாரிகளின் பெருமை பேசப்பட்டது.

வழுவின்றி:— நாரணனுக்கு விசேஷணம். குற்றமற்றவன் எனப்பொருள். அல்லது காரணங்கள் தாமுடையார் என்பதற்கு விசேஷணம். ஓய்வில்லாமல் எப்பொழுதும் (அல்லது குற்றங்களொன்றும் செய்யாதபடி) பக்வந்நாமங்களைச் சொல்பவர்கள் என்று பெயர்.

காரணங்கள்:— என்றவிடத்தில் தாரணங்கள் என்றும் பாடமுண்டு. ப்ரபத்தியே மோக்ஷஸாதனம் என்கிற தைர்யங்கொண்டவர்கள்; அல்லது ப்ரபத்தியாகிற உஜ்ஜீவந உபாயத்தையுடையவர்களெனப் பொருள்.

தாமுளரே தம்முள்ள முள்ளுளதே, தாமரையின்
பூவுளதே யேத்தும் பொழுதுண்டே—வாமன்
திருமருவு தாள் மருவு சென்னியரே, செவ்வே
அருநரகம் சேர்வ தரிது. (21)

தாம் உளரே	பெருமானைப் பணிவதற்கேற்ற கர்த்தாவான சேதனர்களும் முன்னமேயே இருக்கின்றார்களே;	தாமரையின் பூ உளதே	(அவனைப் பூஜிப்பதற்கேற்ற) தாமரைப் புஷ்பங்கள் (தடாகங்களில்) இருக்கின்றனவே;
தம் உள்ளம் உள் உளதே	பெருமானை நினைப்பதற்குக் கருவியான மனமும் தம்முள்ளேயே இருக்கின்றதே;	ஏத்தும் பொழுது உண்டே	ஸ்தோத்ரம் செய்வதற்கு காலமும் நிறையவிருக்கின்றதே

வாமன்	சீலகுண பூர்ணனு ன வாமனனுடைய		(இப்படியிருக்க)
		செவ்வே	நேராக
திருமருவு தாள்	அழகுபொருந்திய திருவடிகளை	அருநரகம்	க்ரூரமானநர
மருவு	சேருவதற்கிடான	சேர்வது	அடைவது
சென்னியரே	தலையையுடையவர்க ளாயிருக்கிறார்களே;	அரிது	கிடைக்காத ரியப்படத்த

கீழில் அவ்வீச்வரனை ஆச்ரயிப்பவர்களை வாழ்கிறார்க றார். அவனை ஆச்ரயிக்கவேண்டிய ஸாதனங்கள் ஒன்றும் மில்லையே; எப்படி நாம் அவனை அடைவது என்று சிலர் அதற்குப் பதிலளிக்கிறார் இதில்.

தாத்பர்யம்:— அவனை ஆராதிக்கும் கர்த்தாவான இவ இனிமேல் ஸ்ருஷ்டிக்கப்படப்போகிறானோ? ஏற்கனவேயே டிக்கப்பட்டுத் திரிகிறானே; ஆதலால் ஆச்ரயிக்குமவனை ஸித்தமாயிருக்கிறான். அவனை நினைப்பதற்குக் கருவியான உ எனப்படும் மனமும் இனிமேல் உண்டாக்கப்படவேணுமா? லது மனத்தை ஊர் ஊராய்ச்சென்று தேடிப்பிடித்துக் கொ வேண்டுமா? மனம் ஏற்கனவே உண்டாக்கப்பட்டு நம்முடம் ளேயே இருக்கிறது. அவனைப் பூஜிப்பதற்குப் புஷ்பங்களா யாது? குளங்கள்தோறும் தாமரைப் புஷ்பங்கள் ஸுலபமாய் கின்றன. உயரமான மரங்களிலேறிப் பறிக்கவேண்டிய கஷ் கிடையாது. முழங்காலளவு ஜலத்தில் நின்றால் அகப்படும் பு கள் எண்ணற்றன. இவைகளனைத்துமிருந்தும் போதில்லையே னைப்பூஜிப்பதற்கென்று வருந்தவேண்டுமா? நித்யமாகக் கால முடிவின்றி நடக்கும்படியும் அவன் ஸங்கல்பித்திருக்கிறான். வம் அவனது அழகு மிகுந்த திருவடிகளை அணியாகக் கொள் குத் தலையும் முன்னமே அமைக்கப்பட்டிருக்கிறது. அவன் வடிகளை தலையில் வைத்துக்கொண்டால் என்பேரில் இத்திருவடி வைக்காதே யென்று தலைதடுக்கவில்லை. நமக்கு உட்பட்டதா யிருக்கிறது. இப்படி ஒன்றும் குறைவில்லாதபடி ஸாதனங் யடைந்திருக்குங்கால் ஒருவருக்கும் நரகத்தை நேராகச் சென் வது எனக்கு அரிது என்றே தோன்றுகிறது. நரகத்தையடை

நேரானவழிகிடையாது. நரகத்திற்குச் செல்வது அபூர்வமென்கிறார். நன்றாய் ஆலோசித்தால் பூர்வமேவ க்ருதாப்ரஹ்மந் ஹஸ்தபாதாதி ஸம்யுதா | விசித்ராதேஹஸம்பத்தி ரீச்வராய நிவேதிதும் என்ற படி அவனை ஆராதிப்பதற்கென்றே இவ்வுடம்பு படைக்கப்பட்டிருக்கிறது என்று உணரலாம். இங்ஙனமிருக்க மனிதர்கள் எப்படி நரகத்தையடைய முடியும் என்று ஆழ்வார் ஆச்சரியமடைகிறார். பொய்கையாழ்வார் அருளிய நாவாயிலுண்டே என்கிற பாசுரத்திலும் இவ்வர்த்தத்தைக் காணலாம்.

அவனை ஆச்ரயிப்பதற்கான ஸாதனங்களை தேடிப்போய் ஸம்பாதிக்கா தவண்ணம் நம்மிடம் முன்னமேயே ஸர்வேச்வரனால் படைக்கப்பட்டிருப்பதால் அவைகளைக்கொண்டு அவனை வணங்கி வழிபட்டு க்ஷேமத்தை யடையலாமென்று உபதேசித்தபடி. கீழ்ச்சொல்லிய பரிகரங்களைக்கொண்டும் சேதனர்கள் நரகத்தைச் செல்கிறார்களே என்று ஆழ்வாரது வருத்தமும் இங்கு தெரியவருகிறது.

“செவ்வே” என்பதால் ஜனங்கள் வேணுமென்றே கோணலான வழியில் நடந்து கெட்டுப்போகிறார்கள் என்பது தோன்றும்.

அரிய தெளிதாகு மாற்றலால் மாற்றி
பெருக முயல்வாரைப் பெற்றால்—கரியதோர்
வெண் கோட்டு மால்யானை வென்று முடித்தன்றே
தண் கோட்டு மாமலரால் தாழ்ந்து. (22)

ஆற்றலால்	அவனது சக்தியால்	அரியது	கிடைக்காத பொருள்களெல்லாம்
மாற்றி	தன் முயற்சிகளையெல்லாம் விலக்கி	எளிது ஆகும்	லகுவாய்க் கிடைக்கும்
பெருக முயல்வாரை	தம் விஷயத்தில் மிகவும் முயற்சிசெய்யும் ஸர்வேச்வரனென்கிற மஹாபுருஷனை	கரியது	கருநிறமுள்ளதாயும்
பெற்றால்	உபாயமாகக் கிடைக்கப்பெற்றால்	வெண்கோடு	வெளுப்பு நிறமுள்ள தந்தங்களையுடையதும்

ஓர்	லோகவிலக்ஷணமுமான	தாழ்ந்து அன்றே	எம்பெருமா... வடிகளை ... யல்லவா
மால்யானை	பெரிய யானை		
தண்	குளிர்ந்த		ஜயத்தை ய...
கோடு	ஜலக்கரையில்	வென்றி முடித்து	தன் இஷ்... நிறைவேற்றி... ண்டது.
மாமலரால்	உயர்ந்த புஷ்பங்களால்		

கீழே எம்பெருமானை ஆராதிப்பதற்குத் தகுந்த ஸாதன... முன்னமே படைக்கப்பட்டிருக்கின்றன வென்று சொல்லி ... ட்டில் தன்னிடமுள்ள ஸாதனங்களையும்கூட நினைக்காமல் ... யே உபாயமாகக் கருதினால் உய்வதற்கு வழியுண்டென்கிறார்.

அரிய தெளிதாகும்:— உலகத்தில் ஒருவருக்கும் கிடை... பொருள் பகவத் ப்ராப்தியும் அதற்குபாயமான பகவத் பஜ... மாகிய விரண்டுதான். இவ்விரண்டும்தான் நம்மால் ஸம்பாதி... படவேண்டியவைகள். இவைகள்தான் அடைய முடியாத... இவைகளும் எம்பெருமானையே உபாயமாகக் கருதினால் ந... ஸுலபமாய்விடும். நாம், அவ்வீச்வரன் ஸர்வசக்தனென்றும் ...ன் நினைத்தால் நம்மை வானத்தணியமரர் ஆக்குவிக்குமென்... சன்மசன்மாந் தரங்காத்து அடியார்களைக் கொண்டுபோய், தன்... பெறுத்தித் தன்தாளிணைக்கீழ் கொள்ளுமப்பன் என்றபடி நாம் ... ஜீவிக்கவேண்டி அவன் படாதன பாடுபடுகிறானென்றும் நினை... நம்முடைய முயற்சியால் நாம் கரையேறுவோமென்கிற நினை... மாற்றி நம் ப்ரயத்னத்தைவிட்டு அவனை உபாயம் எ... கொண்டால், அவன் அரியபெரும் பொருள்களையெல்லாம் நமக்... கொடுக்கிறான். நமக்கு பகவத் பஜனமும் பகவல்லாபமும் ... கூடுமென்றபடி. இதற்கு ஒரு உதாஹரணம் காட்டுகிறார் பின்... களால்.

உலகிலுள்ள யானைகளைப்போலிராது பகவத் விஷயத்தில் ... யுள்ள கஜேந்திராழ்வான் முதலையின் வாயிலகப்பட்டு, தன்னுடை... பலத்தால் கரையேற முயன்றும் பயன்படாமல் ஆதிமூலமே... என்றவனையழைத்து அவனும் மடுக்கரையிலே எழுந்தருள, நன்... மலர்ந்து அழகான தாமரைப்பூவால் அர்ச்சனைசெய்து அவனை...

திருவடிகளையே உபாயமாகக் கொண்டல்லவா தன் வினையை தீர்த்துக்கொண்டது. கருத்த நிறமும் வெளுத்த பற்களையுமுடைய அவ் யானையும் தன் சக்தியால் அம்முதலையோடு சண்டை செய்யுமளவும் அவ்வீசன் எழுந்தருளவில்லை. இங்ஙனம் துர்யோதனன் சபை நடுவே த்ரௌபதியைப் பரிபவம் செய்யவே, த்ரௌபதி தனக்குப் பலமாக நினைத்தவையெல்லாம் பயன் படாது போகவும் த்வாரகாவாஸியான கண்ணனைச் சரணமாகக் கருதியன்றோ தன்னை ரக்ஷித்துக்கொண்டாள். ஆதலால் நம்முடைய பிரயத்னத்தை விட்டு அவனையே உபாயமாகக்கொண்டால் கூடாத பொருளெல்லாம் கூடுமென்றபடி.

ஆற்றலால் மாற்றி:—ஸர்வேச்வரன் ஸர்வசக்தனாதலால் நம் முயற்சியை மாற்றி என்று பொருள்.

பெருக முயல்வார்:—"கழியாத கருவினையில் படிந்த நம்மைக் காலமிது வென்றொருகால் காவல் செய்து, பழியாத நல்வினையில் படிந்தார் தாளில் பணிவித்துப் பாசங்களடைய நீக்கி,சுழியாத செவ்வழியில் துணைவரோடே தொலையாத பேரின்பத்தை மேலேற்றி, அழியாதவருளாழிப்பெருமாள் செய்யு மந்தமிலா வுதவியெல்லாமளிப்பாரோ." என்ற நம் தேசிகன் அருளிச் செயலின்படி நம் விஷயத்தில் பெரும்பாடுபடுகிற மஹாபுருஷனை ஸ்ரீய: பதியைப் பெற்றால் அரிய தெளிதாகும் என்கிறார்.

தண் கோட்டு:—குளிர்ந்ததான மடுவின்கரையில் எனப் பொருள். மாமலரால் தாழ்ந்து:—உயர்ந்ததோர் தாமரை மலரை துதிக்கையில் கொண்டு வணங்கி என்பது. தண் கோட்டு என்ற விடத்தில் தண் தோட்டு என்றும் பாடமுண்டு. மலருக்கு விசேஷணமாகும் சீதளமான இதழ்களையுடைய தாமரை மலர் எனப் பொருள்.

தாழ்ந்து வரங்கொண்டு தக்க வகைகளால்
வாழ்ந்து கழிவாரை வாழ்விக்கும்—தாழ்ந்த
விளங்கனிக்குக் கன்றெறிந்து வேற்றுருவாய், ஞாலம்
அளந்தடிக்கீழ்க் கொண்ட வவன். (23)

தாழ்ந்த	பழங்களின் கனத்தால் வணங்கியிருந்த	அவன்	அந்த பரமபுரு
விளா	விளாமரத்தின்	தாழ்ந்து	தன்னை வணங்
கனிக்கு	பழத்தை உதிர்ப்பதற்கென்று	வரம் கொண்டு	தன் அருளைப் றுக்கொ
கன்று எறிந்து	வத்ஸாஸுரனை வீசியெறிந்து	தக்க வகைகளால்	தங்களுக்குத்த ப்ரகாரங்க
வேறு உரு ஆய்	வேறான வாமன வடிவத்துடனாகி	வாழ்ந்து	இஷ்டத்தைப் பெ
ஞாலம் அளந்து	பூமியை அளந்து	கழிவாரை	மேன்மேலும் கத்தை அதிகம செய்துகொள்ள விரும்புமதிகா
அடி கீழ்	தன் திருவடியின் கீழ்		
கொண்ட	ஸ்வீகரித்த	வாழ்விக்கும்	உஜ்ஜீவிக்கும்ப செய்வ

தன்னையே சரணமடைபவர்களுக்குப் பிரதிபந்தகங்களை போக்கி இஷ்டங்களையும் கொடுத்தருள்பவன் ஸர்வேச்வரன்; எ றார் இப்பாட்டில்.

தாழ்ந்து:—ஸ்ரீய: பதியான புருஷோத்தமனுடைய அ ஹத்தை யடைந்து சாஸ்திரங்களில் சொல்லியபடி அவனை ஸே பது, அவன் திருநாமங்களைச் சொல்லுவது, புஷ்பங்களால் அ சனை செய்வது, முதலிய ப்ரகாரங்களால் அத்திருமாலையே வண வழிபட்டு, இவ்வண்ணமே போது போக்குகிறவர்களை ஸர்வே வரன் ஸர்வப்ரகாரத்தாலும் ரக்ஷித்து உஜ்ஜீவிக்கும்படி செய்வ அவ்வாச்ரிதனுக்கு விரோதிகள் யாராவதுண்டாகில் அவர்களும் ணனிடம் அகப்பட்ட வத்ஸாஸுரன் கபித்தாஸுரன் முதலிய கள் பட்டபாடு படுவார்கள்.

வேற்றுருவாய் மலர்மகள் கேள்வனை தன் திவ்யமங் விக்ரஹத்தைவிட்டு உலகில் யாசகத்திற்குச் செல்லும் பிர மணனைப்போல் ப்ரஹ்மசாரி வேடம்பூண்டான் என்பது இத்தால் பரமபுருஷன் தன்னையழிய மாறியும் காக்குமியல்பின என்பது சொல்லப்படுகிறது. வேற்றுருவாய் சிறிய வடிவைக்காட

யாசித்துப் பிறகு பெரிய வடிவைக்கொண்டு அளந்தானெனப் பொருள் சொல்லுவதுமுண்டு.

அவன் கண்டாய் நன்னெஞ்சே யாரருளுங் கேடும்
அவன் கண்டாயைம்புலனாய் நின்றான்—அவன் கண்டாய்
காற்றுத் தீ நீர்வான் கருவரை மண் காரோதச்
சீற்றத் தீயாவானுஞ் சென்று. (24)

நல் நெஞ்சே	(எனது) நல்ல மனமே!
ஆர் அருளும்	பரிபூர்ணமான கிருபையினால் அடையத்தகும் புருஷார்த்தமான மோக்ஷமும்
கேடும்	ஸம்ஸாரமும்
அவன் கண்டாய்	அந்த ஸர்வேச்வரனேயாவன்
ஐம்புலன் ஆய் நின்றான்	ஐந்து இந்த்ரியங்களாக நிற்கிறவனும்
அவன் கண்டாய்	அத்திருமாலேயாவன்
காற்று	வாயுவும்
தீ	நெருப்பும்
நீர்	ஜலமும்
வான்	ஆகாசமும்
கருவரை	பெரியமலைகளும்
மண்	பூமியும்
கார் ஓதம் சீற்றத் தீ ஆவானும்	கறுத்த ஸமுத்திரத்தைக் கோபித்துக் கொண்டு விழுங்க வல்ல படபாக்நியும் (ஆக இவையனைத்துக்கும் நிர்வாஹகன்)
அவன் கண்டாய்	அந்த பரமபுருஷனேயாவன்
ஆதலால்	
சென்று	அவனைக்கிட்டி ஆச்ரயிப்பாயாக.

கீழே ஆச்ரிதர்களை ரக்ஷித்தருள்பவன் திருமால் என்றார். இப் பாட்டில் அதை நன்றாய் விவரித்துக் காட்டுகிறார்.

அவன் கண்டாய்:—போக மோக்ஷங்களை அநுபவிப்பதற்குத் திறமையின்றி அசேதனமான கல் மண் முதலிய பொருள்களைப் போல் அறிவழிந்து கிடக்கும் ஜீவன்களுக்கு ஞானத்திற்கு ஸாதனமான இந்திரியங்களோடு கூடிய பஞ்சபூதமயமான சரீரத்தைக் கொடுத்து போகங்களை அநுபவிக்கும்படி உபகரிப்பவனும் அந்த பரமபுருஷனே. இப்பிரபஞ்சத்தை விழுங்கும் திறமையுள்ள ஸமுத்

திரத்தின் ஜலத்தை எப்பொழுதும் குடித்துக்கொண்டிருக்கும் பாக்நி எனப்படும் தீயும் அவ்வெம்பெருமானேயாவன். அத படபாக்நிஸ்வரூபமாயிருந்துகொண்டு ஸமுத்திர ஜலத்தை சா டுக்கொண்டு பூமியை கடல் விழுங்காத வண்ணம் காக்கிறான் பொருள். இப்படிக் காப்பதுமன்றி பரமபுருஷார்த்தமான மே மும் அவன் கையதேயாகும். அவன் காலைக் கட்டிக்கொள லது இந்த ஸம்ஸார பந்தத்தை அறுக்கமுடியாது. அவனது கிருபையாலே அடையப்படும் மோக்ஷத்திற்கும் நிர்வாஹ அவனேயாகும் என்று அவன் செய்யும் உபகாரங்களைப் பே

சென்ற திலங்கைமேல் செவ்வே தன் சீற்றத்தால்
கொன்ற திராவணனைக் கூறுங்கால்— நின்றதுவும்
வேயோங்கு தண்சாரல் வேங்கடமே, விண்ணவர்
வாயோங்கு தொல் புகழான் வந்து. (

விண்ணவர் தம்	நித்யஸூரிகளுடைய	தன் சீற்றத்தால்	தனது கோப
வாய் ஓங்கு	முகங்களில் ஓங்கி நிற்கிற (வாயினால் துதிக்கப்படுகிற)	கொன்றது	கொலைசெய்த
தொல் புகழான்	பழமையான கீர்த்தியையுடைய பெருமான்	இராவணனை	இராவணன் எ ற அரக்க
வந்து	(இந்நிலத்தில்) அவதரித்து	கூறும் கால்	பேசப்புகுந்தா
செவ்வே	நேராக	நின்றதுவும்	நின்றுகொண்ட ப்பது
சென்றது	நடந்தது	வேய் ஓங்கு	மூங்கில்கள் உ து வளர்ந்திருக்
இலங்கை மேல்	இலங்கா நகரத்தைக் குறித்து.	தண் சாரல்	குளிர்ந்ததான கங்களையுடை
		வேங்கடமே	திருவேங்கடமலையா

உலகங்களை உத்பத்தி செய்துவிடுவது மாத்திரமன் தானும் நடுவே வந்து பெரும் காரியம் செய்து ரக்ஷிக்கிறா ன்பது இதில் சொல்லப்படுகிறது.

சென்றது:— எம்பெருமான் தன் ஸங்கல்ப மாத்திரத்தாலேயே விரோதிகளை வெல்லும் திறமை வாய்ந்தவனாயிருக்கப் பூமியின்கண் பல அவதாரங்கள் செய்து துன்பப்படுவதெல்லாம் தன்னையே உபாயமாகக்கொண்ட ஸாதுக்களுக்காகவே. பரமபதத்திலிருந்தே இராவணன் முதலிய அரக்கர்களை முடித்துவிடலாம். தன்னை ஆராதிக்கிற முனிவர்களுக்குத் தன் திருமேனியைக்காட்டி அவர்களுகக்கும்படிக்கன்றோ அவன் அவதாரம் செய்வது; ஆதலால் அவன் தன் உடம்பைக்கொண்டு பாடுபட்டுக் காரியம் செய்தாலன்றித் திருப்தி பெறாமல் பல ரூபங்களை எடுத்துக்கொண்டு பூமியில் வந்து ஸாதுக்களெல்லாரும் கூசி நடுங்கும்படி காரியங்கள் செய்கிறான். இப்படிச் செய்தாலன்றி ரக்ஷண ஸ்வபாவனான புருஷோத்தமன் ஸமாதானம் பெறுவதில்லை என்று அவனைக் கொண்டாடுகிறார்.

எம்பெருமான் இராமனாய்ப்பிறந்து இலங்கையை நோக்கிச் சென்றான். மிகுந்த சினத்தை ஏறிட்டுக்கொண்டு இராவணனைக் கொன்றான். இராவணனைக் கொல்லுதற்காக அவதாரம் செய்ய வேணுமோ? ஸ்ரீ வைகுண்டத்திலிருந்தபடி செய்ய வல்லவனன்றோ? அவதாரம் செய்தாலும் திருவயோத்தியிலிருந்தபடியே அவனை முடிக்கலாகாதோ? ஸர்வேச்வரனாயிருந்துவைத்து சக்ரவர்த்தி குலத்திலும் பிறந்துகால்நடையாகக் கானகத்தில் லங்கையை நோக்கி நடந்து செல்லவேணுமோ? லங்கையை அடைந்தும் ஸங்கல்பத்தாலே அவனை அழிக்கவல்லனாயிருக்கக் கோபத்தை ஏறுக்கொண்டு போர்புரிந்துதான் அவனைக் கொல்லவேணுமோ? ஆதலில் அவன் இங்ஙனம் செய்தருளியது பரம பாகவதர்களான ரிஷிகளுக்குத் தன் திருமேனியைக் காட்டி உய்வித்து அவர்களிடம் உள்ளவன்பினால் தன் திருமேனியின் மேன்மையையும் மறந்து பாடுபட்டான் என்கிற மஹாகுணத்தைக் காட்டுகிறதென்று ஆழ்வார் பரவசமாகிறார்.

இப்படி அவதாரம் செய்ததுமன்றி அக்காலத்தில் ஸேவிக்கப் பெறாத பின்னானார்களான நாமும் வணங்கும்படி திருவேங்கடமலையில் கோயில் கொண்டிருக்கிறான். அர்ச்சகபராதீன அகிலாத்ம

ஸ்திதி: என்றபடி அர்ச்சையாய் நிற்கிற நீர்மையையும் ஆராய
குங்கால் ஜகத்ரக்ஷண ப்ரகாரம் மற்றொருவனிடம் காணமுடி
படியாயிருக்கிறது என்கிறார். விபவ அர்ச்சாதி ரூபமாய் நி
உலகைக் காப்பாற்றுவது இப்பாட்டில் பேசப்பட்டது.

"விண்ணவர்தம் வாயோங்கு தொல்புகழான்" நித்யஸூ
ளால் வாயார வாழ்த்தப்பட்டவன் எனப்பொருள். திருமலை
விண்ணோர் வெற்பு என்று மற்றையவர்களும் போற்றியிருப்
கிணங்க திருமலை யெம்பெருமானை எப்பொழுதும் நித்யஸூ
துதிக்கிறார்கள் எனக்கொள்ளலாம். அல்லது கீழே இராவண
ப்ரஸ்துதமானபடியால் இராவணவதத்திற்குப் பிறகு பிரஹ்
தேவர்கள் இராகவனைத் துதி செய்தார்கள் என்பதைப் பே
என்றும் கொள்ளலாம்.

வந்தித் தவனை வழிநின்ற வைம்பூதம்
ஐந்து மகத்தடக்கி யார்வமாய்— உந்திப்
படியமரர் வேலையான் பண்டமரர்க்கீந்த
படியமரர் வாழும் பதி. (

வழி	நல்லமார்க்கத்திலே	அமரர் வேலையான்	தேவர்களுக்கா பாற்கடலில் ப கொண்ட பெ
நின்ற	இடையூறாக நின்ற		
ஐம்பூதம்	ப்ருதிவீ முதலிய பஞ்சபூதங்களையும்		
ஐந்தும்	ஐந்துபுலன்களையும்	பண்டு	முன்பு
அகத்து	சரீரத்திற்குள்ளேயே	அமரர்க்கு	நித்யஸூரிகளு
அடக்கி	அடக்கிவைத்து	ஈந்த	கொடுத்தது
ஆர்வம் ஆய்	பக்தியுடையவராய்க்கொண்டு	படி	இப்பூமியிலுள்
அவனை	அப்பெருமானை	அமரர்வாழும்	தேவர்களோடொ த்த ஸ்ரீவைஷ்ண ர்கள் வாஸம்
வந்தித்து	ஸேவித்து		
உந்தி	முன்னமேயேவந்து		
படி	ஆச்ரயிக்கும்படி	பதி	திருமலை என் திருப்பதிய

முதலாழ்வார்களுக்கு திவ்யதேசங்கள் பலவற்றுள் திருமலையி லேயே விசேஷமான அபிநிவேசம் மிகுந்து நிற்குமென்று பாசுரங் களாலேயே தெரியவரும். ஆகலின் கீழ்ப்பாட்டில் திருவேங்கடம் நினைக்கப்படவே அத்திருப்பதியை இப்பாட்டிலும் அநுபவிக்கிறார்.

வந்தித்து:— பிரமன் இந்திரன் முதலிய தேவர்கள், பகவானை ஆராதிப்பதற்குத்தடையான சிற்றின்பங்களில் ஆழ்ந்துகிடக்கும் புலன்களைந்தையும், அங்ஙனமே பகவனை அனுபவிப்பதற்கு இடை யுறாகவிருக்கும் பஞ்சபூதங்களையும் அறிவு, விரக்தி அப்யாஸம் முத லியவைகளால் அடக்கி, மிகுந்த பக்தியுடன் நான் முன்னே நான் முன்னே என்று ஓடிவந்து வணங்கி வழிபடுகிறார்கள் திருப்பாற் கடலில் கண்வளர்ந்த பரமபுருஷனை. இப்படி இந்திரிய ஜயம்செய்த தேவர்களால் வணங்கப்பட்ட திருப்பாற்கடல் நாதன் அநாதியான தேவர்களான நித்யஸூரிகளுக்கு, பூமியிலுள்ள தேவர்களெனப் படும் ஸ்ரீவைஷ்ணவர்கள் வணங்கி வாழும் திருமலையை பரிசாகக் கொடுத்தான் என்றநுபவித்தார். பூமியிலுள்ள தேவர்களானஸ்ரீவை ஷ்ணவர்கள் உகந்து வாஸஞ் செய்யும் பதியான திருமலையை ஸர்வே ச்வரன் நித்யஸூரிகளுக்குக் கொடுத்தாரென்பதற்குப் பொருள்யா தெனில், நித்யஸூரிகளும் மண்ணுலகில் வந்து திருவேங்கடத்தெம் பெருமானைக் கண்டுகளித்துக் கைங்கர்யம் செய்கிறார்களெனக் கொள்க.

இப்பூமியிலுள்ளவர்களுக்குப் பரத்வம் பரவிநிற்கும் பரமபத நாதனைக் கேட்டறிவதைத் தவிரப்பார்ப்பது எப்படி அரிதோ; அப் படியே பரமபதத்தில் வாழும் நித்ய ஸூரிகளும் நீர்மை நிறை ந்திருக்கும் பகவத் விக்ரஹத்தைக் கேட்டறிவதைத்தவிர பார்த்தறி யார்களாதலால் நீர்மைக்கு எல்லை நிலமாக திர்யக் ஜாதிகளும் அநு பவிக்கும்படி நிற்கும் திருமலையெம்பெருமானை ஸேவித்து நிற்கிறார் களென்பது இரண்டபொருள்.

பதியமைந்து நாடிப் பருத்தெழுந்த சிந்தை
மதி புரிஞ்சி வான்முகடு நோக்கி — கதிமிகுத்தங்
கோல் தேடியோடும் கொழுந்ததே போன்றதே
மால் தேடி யோடும் மனம். (27)

பதி	திருமலையில்	நோக்கி	பார்த்து
அமைந்து	பொருந்தியிருந்து	மால் தேடி ஓடும்	பரமபதநாத தேடிச்செல்
நாடி	பரமபுருஷனை ஆசைப்பட்டு		
பருந்து	அவ்வீச்வரனைவ்யாபித்து	மனம்	மனமானது
எழுந்த	கிளம்பியிருக்கிற	கதி மிகுத்து	மிகுந்த நடை கூடியதாய்க்
சிந்தை	மனோபீஷ்டத்தை யுடையதாயும்	அம் கோல்	அழகுள்ள கே
மதி உரிஞ்சி	சந்திரனை ஸ்பர்சித்து	தேடி ஓடும்	தேடிப்போகி
வான் முகடு	ஆகாசத்தின் உச்சியை (அண்டபித்தியை	கொழுந்துஅது போன்றதே	கொடிபோல

கீழ்ப்பாட்டில் திருமலை யெம்பெருமானைப் பேசினவ உடனே அப்பெருமானுடன் கலந்து பரிமாறவேணுமென்று ந் தார். அர்ச்சாவதாரமாகையாலே அது கிடைக்கப் பெறுமல் வெம்பெருமானுக்கும் மூலகந்தமான பரமபதநாதனுடனேயே ஸர்வப்ரகாரத்தாலும் கலந்து பரிமாறவேணுமென்று அவர் ப பாரித்தது. அப்பொழுது தன்மனம் இருந்தவிதத்தை இப் டில் சொல்லுகிறார்.

பதியமைந்து:— என் மனமானது திருமலையில் பொ யிருந்து அவ்வெம்பெருமானை அநுபவித்தபின் அவனிடம் த நினைத்தபடியெல்லாம் பரிமாற்றங்களையடைய வேண்டி அது கி க்கப்பெறுமல் அதற்குமேல் ஆசை அதிகமாகி ஆகாசத்தை நே ச்சென்று சந்திரமண்டலத்தைத் தழுவிப்போய் அண்டபித்தி யும் கடந்து சென்று பரமபதத்தில் வாழும் பரந்தாமனை நாடி றுன் பரிமாறப் பாரிக்கிறது. இப்படி என்மனம் மேல்மேலும் ர்ந்து பரந்துசெல்கிற சிந்தையுடன் பரவிச் செல்கிறது. பூமி முளைத்த கொடியானது தனது கொள் கொம்பைப் பிடித் கொண்டு தனது மார்க்கத்தையே நோக்கி மேலே செல்வதுபே என் மனமும் மேல்நோக்கிச் செல்கிறது என்கிறார். தன் ம

மேலே செல்வதற்கு, ஒருகொடியை உதாஹரணமாகச் சொன்னார். இதனால் எல்லாரும் பரமபுருஷனை மேல்மேலும் அநுபவிக்க ஆசைப்படவேண்டுமென்பது உபதேசிக்கப்பட்டது.

மனத்துள்ளான் வேங்கடத்தான் மாகடலான், மற்றும்
நினைப்பரிய நீளரங்கத்துள்ளான் — எனைப்பலரும்
தேவாதி தேவனெனப் படுவான், முன்னொருநாள்
மாவாய்ப் பிளந்த மகன். (28)

எனை பலரும்	எவ்வகைப் பெருமையுள்ள பெரியோர் பலராலும்	மற்றும்	அதற்குமேலே
தேவாதி தேவன்	தேவர்களுக்கும் முழுமுதல் கடவுள்	நினைப்பு அரிய	நினைவிற்கு மகப்படாதபெருமையுள்ள
எனப் படுவான்	என்று சொல்லப் படுகிறவனையும்	நீள் அரங் கத்துஉள் ளான்	விசாலமான ஸ்ரீரங் கத்தில் வாஸம் செய் பவனும்
மாகடலான்	க்ஷீர ஸமுத்ரத்தில் பள்ளிகொண்டவனையும்	வேங்கடத் தான்	திருவேங்கடத்தில் நித்யவாஸம் செய்பவனுமான ஸர்வேச்வரன்
முன் ஒரு நாள்	முன்பு துவாபர யுகத்தில்	மனத்து உள்ளான்	என்னுடைய நெஞ்சில் வாஸம் செய்கிறான்.
மாவாய் பிளந்தமகன்	குதிரைவடிவமாய் வந்த கேசியின் வாயைப் பிளந்த மைந்தனையும்		

கீழே பரமபதநாதனை அநுபவிக்கத் தன்மனம் பாரிக்கிறதென்றார். இவர் அப்படி ஆசைப்படவே அவ்வெம்பெருமானும் ஆழ்வாருடைய மனத்திலே வந்து புகுந்தார். அப்படித் தன் பக்கலில் ஆசைகொண்ட பெருமானைப் புகழ்ந்துபேசுகிறாரிதில்.

மனத்துள்ளான்:— தேவர்களுக்கெல்லாம் முழுமுதல் தேவனெனப்படும் பரமபதநாதன் தேவர்களுடைய குறைகளைக் கேட்டுத்தீர்க்கவேண்டி அவர்களுக்கே திருப்பாற்கடலில் சாய்ந்தருளினான். அவனே பின்பொருகால் கிருஷ்ணனாய்ப் பிறந்து கேசிமுதலிய வஸுரர்களைக் கொன்று ஜகத்ரக்ஷணம் செய்தான். அவ்வீச்

வான் அவ்வவதாரத்தாலும் திருப்தி பெறுமல் பின்னுனர் ஃ கும்படியாக திருவரங்கத்திலே நித்யவாஸம் செய்கிறுன். அ வரங்கத்தின் பெருமையை ஆராயப்புக்கால் தேவர்கள் முதலாக வருக்கும் அறிவிற்கெட்டாதபடியிருக்கும். அப்படிப் பெ வாய்ந்த திருவரங்கத்தில் வஸிக்கிறுன். மற்றும் திருவேங்க ன்னும் திருமலையிலும் வாஸம் செய்கிறுன். இப்படிப் பரமபே மான நிலங்களில் இருந்துவைத்தும் நான் அவனை அனுப ஆசைப்படவே என் மனத்திலே இப்பொழுது வந்து வஸிக்கி இது என்ன ஆச்சரியம்! அவனை நான் ஆசைப்படவே அ என்னைவேண்டி வருகிறுன் என்று அவனது ஆச்ரிதவ்யாமோ தைப் புகழ்ந்து பேசினர். ஔதந்வதே மஹதி ஸத்மநி மானே ச்லாக்யேச திவ்ய ஸதநே தமஸ: பரஸ்மின் | அந்த: பரமிதம் ஸூக்ஷ்மம் ஸூக்ஷ்மம் ஜாதம் கரீச கத மாதர பதம் தே என்ற தேசிகன் திவ்யஸூக்தியும் இங்கு அனுஸ கத்தகும்.

மகனுகக் கொண்டெடுத்தாள் மாண்பாய கொங்கை
அகனுர வுண்பனென் றுண்டு — மகனைத்தாய்
தேறுத வண்ணம் திருத்தினுய், தென்னிலங்கை
நீறுக வெய் தழித்தாய் நீ.

நீ	ஸர்வேச்வரனுகிய நீ	மாண்பு ஆய	அழகான
தென் இலங்கை	அழகான லங்கா நகரத்தை	கொங்கை	முலையை
நீறு ஆக	சாம்பலாகும்படி	அகன் ஆர	வயிறு நிறையுட வன
எய்து அழித்தாய்	அம்புகளாலடித்து நாசம் செய்தாய்	உண்பன் என்று	சாப்பிடுவேனெ செ
மகன் ஆக கொண்டு	உன்னை பிள்ளையென்று ஸ்நேகம் வைத்து	உண்டு	சாப்பிட்டு
எடுத்தாள்	எடுத்துக்கொண்ட பூதனையினுடைய	மகனை	புத்ரனுனவன்ை
		தாய்	தாயாகிய யசோதைப் பிர
		தேறுத வண்ணம்	நம்பமுடியாதட
		திருத்தினுய்	சிக்ஷித்தாய்.

மாவாய் பிளந்தமகன்:— என்று கீழ்ப்பாட்டில் கிருஷ்ணாவதாரத்தை நினைக்கவே அவ்வவதாரத்தைவிட மனமில்லாமல் இப்பாட்டிலும் மீண்டும் அதைப் பேசுகிறார்.

மகனாக:— இராவணனது நகரமான லங்கையை பாணங்களால் அடித்துச் சாம்பலாகச் செய்த பெருமானே! நீ கண்ணனுகிற குழந்தையாயிருக்கும்பொழுது பூதனை யென்பாளொருபேய் தாய் குழந்தையை எடுப்பதுபோல் மிக்கபரிவுடன் உன்னை எடுத்துக்கொண்டு பாலுக்கு பதிலாக விஷத்தைக் கலந்துவைத்தழகாயிருந்த முலையைக் கொடுக்கவே நீயும் ஆவலுடன் என் வயிறுநிறையும் வரையில் சாப்பிடுவேனென்று சொல்லி முலைவழியே அவளுயிரையுண்டாய். அது முதல் யசோதைப்பிராட்டிக்கு உன்னிடம் நம்பிக்கையில்லை. அதுவரையில் உன்னைக் குழந்தையாகவே நினைத்தாள். பேய்ச்சி முலையுண்டபின்னை இப்பிள்ளையைப் பேசுவதஞ்சுவனே என்றபடி அவளும் நாம் முலை கொடுத்தால் நம்மையும் என் செய்வனோ என்றஞ்சினாள். இராமாவதாரத்திலோ இப்படி குழந்தைப் பருவத்திலேயே காரியம் செய்ததில்லை. வயதான பின்பல்லவோ ஆயுதங்களை யெடுத்து யுத்தம்செய்து விரோதிகளை வென்றாய். கிருஷ்ணாவதாரத்தில் குழந்தையாயிருக்கும்பொழுது அரும் பெரும் செயல்களைச் செய்து ஆச்ரிதர்கள் அஞ்சும்படிசெய்கிறாயே; இது என்ன லீலை என்று கண்ணனது சரித்திரத்தில் கால்தாழ்ந்தார்.

நீயன்றுலகளந்தாய் நீண்ட திருமாலே
நீ யன்றுலகிடந்தாய் என்பரால் — நீயன்று
காரோத முன்கடைந்து பின்னடைத்தாய் மாகடலை
பேரோத மேனிப் பிரான். (30)

பேர் ஓதம் மேனி	பெரிய கடல்போன்ற திருமேனியையுடையவனும்	நீண்ட திருமாலே	த்ரிவிக்ரமாவதாரம் செய்தச்ரிய; பதியே!
பிரான்	பரமோபகாரகனுமாயிருக்கிற	நீ	தேவரீர்
		அன்று	அக்காலத்தில்

உலகு அளந்தாய்	உலகங்களை அளந்தீர்
அன்று	ஹிரண்யாக்ஷன் பூமியை ஒளித்துவைத்தகாலத்தில்
நீ	தேவரீர்
உலகு இடந்தாய்	பூமியை உயரே தூக்கிவந்தீர்
அன்று	தேவர்கள் துர்வாஸமுனிவரது சாபத்தால் ஐச்வர்யத்தை யிழந்தகாலத்தில்
நீ	தேவரீர்
கார் ஓதம்	கறுத்த கடலை
முன் கடைந்து	முன்னின்று
பின்	இராமாவதார
மா கடலை	பெரிய ஸமுத்
அடைத்தாய்	அணைகட்டி
என்பர்	என்று பெரி கள் சொல்லு
ஆல்	ஆச்சரியம்.

திருமாலது திவ்ய சேஷ்டிதங்கள் சிலவற்றைப்பேசி மகி யடைகிறாரிதில்.

நீயன்று:—கடல்போன்ற நிறத்துடன்கூடின திருமேனி யுடைய பரமோபகாரகனான பெருமானே! நீ, மூவுலகங்களை மஹாபலிச்சக்ரவர்த்தி தன்னது என்று அபிமானித்தகால த்ரிவிக்ரமனாகி உலகங்களை திருவடியால் அளந்துகொண்டாய்; ஒருகால் ஹிரண்யாக்ஷனால் அபஹரிக்கப்பட்ட பூமியை வராஹமாகி மீட்டுவந்தாய்; மற்றொருகால் தேவர்களுக்காகத் ப்பாற்கடலை மந்தரமலையால் கடைந்தாய்; பின்பொருநாள் இ னாகவந்து கடலை அணைகட்டி அடைத்தாய்; என்று அறிவில் மி முனிவர்கள் சொல்லுகிறார்கள். எனக்கு அவைகளை நினைக்குந்தோ பெருமகிழ்ச்சி பிறக்கிறது என்று தான் உகந்ததைப்பேசினார்.

பேரோதமேனி என்ற விசேஷணத்தால் எம்பெருமா கடலைக் கடையும் பொழுது ஒரு கடலை மற்றொருகடல் கரைய நின்றுகொண்டு கடைந்ததுபோலிருந்தது; என்கிற பொ தோன்றும்.

காரோதம் கடைந்த கதைச்சுருக்கம்.

முன்னொருநாள் ஒரு வித்யாதரப்பெண் விஷ்ணுலோ சென்று லக்ஷ்மீதேவியை வீணையென்னும் வாத்யத்து

கானத்தால் புகழ்ந்துபாடி, அத்தேவியால் அளிக்கப்பட்ட புஷ்ப மாலையை எடுத்துக்கொண்டு பிரஹ்மலோகம் வழியாகத் திரும்பி வருகிற வளவிலே துர்வாஸ முனிவரைப் பார்த்து அவரை வணங்கி அந்த மாலையை அவருக்குக் கொடுத்தாள். அம்முனிவரும் அம்மாலை திருமகளால் தரிக்கப்பட்டது என்பதை உணர்ந்து பெருமகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டு தேவலோகம் வந்துசேருங்கால் அங்கு தேவேந்திரன் ஐராவதம் என்கிற யானைமீதேறிக் கொண்டு ஊர்வலம் வந்துகொண்டிருக்க அவனிடமுள்ள வன்பினால் அம்மாலையை அவனுக்குக் கொடுத்தார். இந்திரனும் அதனைத் தன் மாவெட்டியால் வாங்கி ஐராவதத்தின் கழுத்திலே போட அவ்யானையும் அதைத் துதிக்கையால் பிடித்திழுத்துக் கீழே போட்டுக் காலால் துகைத்தெறிந்தது. அதைக்கண்ட துர்வாஸ முனி மிகுந்த கோபங்கொண்டு உன்னுடைய ஐச்வர்யங்களெல்லாம் ஸமுத்திரத்தில் மறையக்கடவன வென்று இந்திரனை நோக்கிச் சாபமளித்தார். உடனே இந்திரன் ஐச்வர்யங்களை இழந்தான். இதனை யறிந்து அஸுரர்கள் அவனது லோகத்தை ஆக்ரமித்து இந்திரனையும் போரில் வென்று தாங்களே ஆட்சிபுரிந்துவந்தார்கள்.

உடனே இந்திரன் மற்ற தேவர்களையும் கூட்டிக்கொண்டு திருமாலைச் சரணமடைந்தான். பகவானும், அஸுரர்களும் நீங்களும் சேர்ந்து மந்தரத்தை மத்தாக நாட்டி வாஸுகியென்னும் கயிறால் இக்கடலைக் கடையுங்கோள்; மீண்டும் ஐச்வர்யத்தைப் பெறலாமென்று நியமித்தார். கடலில் மந்தரமலையை நாட்டி வாசுகியை வன்கயிறாகச் சுற்றி அஸுரர்கள் தலைப்பக்கத்திலும் தேவர்கள் வால்புறத்திலுமாகக் கடையவாரம்பித்த வளவில் மந்தரமலை கடலில் அழுந்திப்போயிற்று. உடனே பகவான் ஆமை வடிவமெடுத்து முதுகில் அம்மலையை ஏந்திக்கொண்டு நின்று மீண்டும் கடையும்படி ஏவினார். அவர்களும் கடையவாரம்பித்து அதற்கு வேண்டிய பலமில்லாதவர்களாய்ச் சோர்ந்துபோனார்கள். உடனே திருமகள் நாதன் தான் ஒரு திருமேனியை எடுத்துக்கொண்டு தலைப்புறத்திலும் மற்றொரு திருமேனியை எடுத்துக்கொண்டு வால்புறத்திலும் நின்றுகொண்டு வாசுகியென்னும் கயிற்றைப்பிடித்

திழுத்து கடைந்தான். பிறகு கடலிலிருந்து கிளம்பிய பெ
களாலும் அம்ருதத்தாலும் அமரர்களை உய்வித்தான் என்பது

கடலையடைத்த கதைச்சுருக்கம்.

ஸ்ரீராமன் ஸீதையைப்பிரிந்து ஸுக்ரீவனுடைய உதவி
ஸீதையிருக்குமிடத்தை அறிந்து கடல்கரையிலிருக்குமளவில்
ஷணாழ்வான் சரணமடையவும் அவனுக்கபயமளித்து, ஸமுத்
தைத் தாண்டி இலங்கையைச்சேருவதற்கு உபாயத்தைக் சிந்
மளவில் ஸ்ரீவிபீஷணன் சொன்னவுபாயத்தையே கொண்டு ஸ்ரீ
னும் கடற்கரையில் தர்ப்பசயனத்தில் மூன்றுநாள் ஆஹாரமி
ப்ராயோபவேசமாய்க் கிடக்க, அதற்கு பிரஸந்நனாகாத ஸமுத்திர
மீது கோபங்கொண்ட பெருமாளும் கடலை வற்றச்செய்
கென்று ஆக்னேயாஸ்த்திரத்தை எடுத்தவளவில் ஸமுத்ர ராஜ
ஓடிவந்து தன்மேல் அணைகட்ட ஸம்மதித்து நளன் கையால்
தில் கற்களைவைத்தால் அவை மிதக்குமென்ற நளனது தகப்ப
வரத்தைத் தெரிவித்து நளனை அணைகட்டும்படி சொல்லி
மறைந்தான். உடனே ஸ்ரீராகவனும் குரங்குகளால் கொண்டு
பட்ட மலைகளாலும் கற்களாலும் நளனைக்கொண்டு கடலில்
கட்டி அடைத்து அதன்வழியே யிலங்கை சென்று இராவண
வென்று ஸீதையைப்பெற்றான் என்பது.

பிரானென்று நாளும் பெரும்புலரி என்றும்
குரா நற் செழும் போது கொண்டு — வராகத்
தணியுருவன் பாதம் பணியுமவர் கண்டீர்
மணியுருவங் காண்பார் மகிழ்ந்து. (

பிரான் என்றும்	பரமோபகாரகனை ஸ்வாமியே என்றும்	குராநல் செழும் போது கொண்டு	குரா என்கிற ... டு மரத்தினுடை... நல்லதான பெரி... தொரு புஷ்பத்... எடுத்துக் கொ...
நாளும்	வீணேப்போகிற காலத்திலும்		
பெரும் புலரி என்றும்	அழகான நல்லபோது விடிவு உண்டாயிற்றே என்றும் ஆதரவுடன்	வராகத்து அணி உருவன்	பன்றியோ ... அழகான திருமே... யையுடைய ... மானுடை...

பாதம் பணியம் அவர் கண்டீர்	திருவடிகளை வணங்குகிறவர்களன்றோ	மகிழ்ந்து	பெருத்த ஸந்தோஷத்துடன்
மணி உருவம்	நீலரத்னம் போன்ற அவனுடைய திருமேனியை	காண்பார்	கண்களால் காணப் பெறுவார்கள்.

பகவானைப் பலவகைப்பட்ட புஷ்பங்களைத் தூவிப் பணிந்து தொழுபவர்கள் தான், அவனது திவ்யமங்கள விக்ரஹத்தைக் காணப்பெற்று மீளாத பேரின்பத்தையடைவார்களென்கிறார்.

பிரானென்று:—ஸர்வேச்வரன் பரமோபகாரகன். நம் விஷயத்தில் எவ்வளவோ பாடுபட்டு நம்மைத் திருத்தியருளினான். எதிர் சூழல் புக்கு எனைத்தோர் பிறப்புமெனக்கே வந்தருள் செய்தான். என்னைத்தீமனம் கெடுத்தான். மருவித்தொழும் மனத்தைத் தந்தான். என்று பலவாறாகவவன் செய்த உபகாரங்களை நினைத்து உனக்கோர் கைம்மாறு நானொன்றிலேன் என்று அநுஸந்தித்தும், "எத்தனை பகலும் பழுது போயொழிந்தன நாள்கள்" என்றபடி வீணாகப் போக்கின பல்காலங்கள் போலின்றி இன்றையதினம் நல்லபோதாய் விடிந்ததே. "பகல் கண்டேன்" என்று சொல்லும் படியான தசைவந்ததேயென்று, பகவானையாராதிக்கும்படி நேர்ந்த காலத்தையும் கொண்டாடிக்கொண்டும், நல்லதோர் குரா என்னும் மரத்தின் உயர்ந்த புஷ்பத்தை எடுத்து வாரஹ நயினாருடைய திருவடிகளில் ஸமர்ப்பித்து ஸேவிப்பவர்கள், பரமபதத்தில் வாழும் பெருமானுடைய அப்ராக்ருத திருமேனியைக்கண்டு ஸேவித்து அந்த மில்பேரின்பத்தில் அமர்வார்கள். அவர்களைத்தவிர மற்றையோர்களுக்கு அம்மோக்ஷானந்தம் கிடைப்பதரிது என்றார்.

குரா நற் செழும் போது:—குரா என்று ஒரு காட்டுமரத்திற் கிற்குப்பெயர். பகவான் ஸுலபமாய் ஆராதிக்கத் தகுந்தவனாகையால் ஏதாகிலும் ஒரு காட்டுமரத்தின் புஷ்பத்தால் அர்ச்சித்தாலும் அவன் ப்ரீதனாகிறான் என்பதுபற்றிக் குராவென்றது.

அல்லது குரா என்று வாஸனைக்குப்பெயர் நல் குரா—நல்ல வாஸனையுள்ள புஷ்பங்களால் என்றும் பொருள் கூறலாம்.

மகிழ்ந்தது சிந்தை திருமாலே! மற்றும்
மகிழ்ந்ததுன் பாதமே போற்றி—மகிழ்ந்த
தழலாழி சங்க மவை பாடியாடும்
தொழிலாகம் சூழ்ந்து துணிந்து.

திருமாலே	லக்ஷ்மீபதியே!	சங்கம்	ஸ்ரீபாஞ்சஜன
	என்மனம்	அவை	அவ்விரண்டு
துணிந்து	உன்னுடைய த்யானத்தில் ஈடுபட்டு	பாடி	கானம் செய்து
மகிழ்ந்தது	ஸந்தோஷத்தையடைந்தது	மகிழ்ந்தது	ஸந்தோஷத்தை அடை
மற்றும்	மற்றொரு வாகிந்திரியமும்	ஆகம்	சரீரம்
உன்	உன்னுடைய	ஆடும் தொழில்	நர்த்தனம் செ வ்யாபார
பாதமே	திருவடிகளையே	சூழ்ந்து	இறங்கி
போற்றி	ஸ்தோத்ரம்செய்து	மகிழ்ந்தது	மகிழ்ச்சியை
அழல்	நெருப்பைவீசுகிற		
ஆழி			

ஆழ்வார் தாம் கரணத்ரயத்தாலும் பெருமானிடம் பொரு பணி செய்தமையைப் பேசுகிறார்.

மகிழ்ந்தது:— திருமாலே:— மன ஏவ மநுஷ்யாணாம் கார பந்த மோக்ஷயோ: என்று ஸம்ஸாரமோக்ஷங்களுக்குக் காரண மனம் பகவானுடைய த்யானம்தான் மோக்ஷஸாதனமென்று ந்து மற்றவைகளை உதறித்தள்ளிவிட்டு, உன்னுடைய த்யான லேயே நிலையாய் நின்று அதனாலேயே ஸந்தோஷத்தையடைகி அதை அனுஸரித்த வாகிந்திரியமும் உனது திருவடிகளையே செய்து, நீ தரித்திருக்கும் தேஜோநிதியான திருவாழியை பாஞ்ச ஜன்யத்தையும் பாடித்துதித்து அதனாலேயே பெருமகி சியை அடைந்திருக்கிறது. சரீரமும் அம்மகிழ்ச்சியுடன் 'அண னவாடு மெனங்கம்' என்னும்படி ஸம்பிரமநர்த்தனம் செய்கி

இப்படி மனோவாக்காயங்கள் மூன்றும் எம்பெருமானுடைய குணாநுபவத்தாலேயே நித்யத்ருப்தங்களானபடியால் நானும் மணியுருவம் காண்பது திண்ணம் என்று அநுஸந்தித்தார்.

துணிந்தது சிந்தை துழாயலங்கல், அங்க
மணிந்தவன் பேருள்ளத்துப் பல்கால்—பணிந்ததுவும்
வேய்பிறங்கு சாரல் விறல் வேங்கடவனையே
வாய்திறங்கள் சொல்லும் வகை. (33)

சிந்தை	மனமானது	வேய் பிறங்கு சாரல்	மூங்கில்கள் நிறைந்த அடிவாரங்களையுடைய
துழாய் அலங்கல்	திருத்துழாய் மாலையை	விறல்	பெருமையுள்ள
அணிந்தவன்	திருமேனியில் தரித்துக்கொண்டவனுடைய	வேங்கடவனையே	திருவேங்கடத்தைக் கோயிலாகக்கொண்ட பெருமானையே.
பேர்	திருநாமங்களை	வாய்	வாயும்
உள்ளத்து	த்யானிப்பதற்கு	திறங்கள்	அவ்விஷயத்து ஸ்வரூப ஸ்வபாவங்களை
துணிந்தது	நிச்சயம் செய்துகொண்டது	சொல்லும் வகை	சொல்லுகிற விஷயத்தில்
அங்கம்	இவ்வுடலும்	துணிந்தது	தீர்மானம் செய்தது
பல்கால்	எப்பொழுதும்		
பணிந்ததுவும்	வணங்கினதுவும்		

மனம் வாய் சரீரம் மூன்றும் பகவத் விஷயத்தில் ஆழ்ந்து மகிழ்ந்தனவென்று கீழ்ப்பாசுரத்தில் பேசினார். மகிழ்ந்தது மாத்திரமல்ல. வேறொரு பொருளைச் சிறிதும் சிந்தியாது அப்பெருமானிடமே அவகாஹித்ததெனப் பேசுகிறார் இதில்.

துணிந்தது:—என் மனமானது திருத்துழாய் மாலையைத்தரித்திருக்கும் திருமேனியையுடைய பெருமானை எப்பொழுதும் த்யானம் செய்வது என்கிற கார்யத்தில் த்ருடமான நிச்சயத்தைக் கொண்டது. எனது உடம்பு மூங்கில்கள் நிறைந்துள்ள தாழ்வரையுடன்கூடின வேங்கடவெற்பினில்வாழும் பெருமானையே வணங்கி

வழிபடுகின்றது. எனதுவாயும் அவனுடைய மேன்மை, கல்ய குணங்கள், ஸ்வபாவம் இவைகளைப் பேசுவதையே தொழில் கொண்டிருக்கிறது. ஆகவே காணங்கள் மூன்றும் எம்பெரும திறத்திலீடுபட்டு மகிழ்ச்சியடைந்ததுமன்றி மற்றொரு விஷ திலே செல்லாமல் எம்பெருமானிடமே அற்றுத்தீர்ந்தனவெ சொல்லித் தன்னை க்ருதார்த்தாக நினைத்துக்கொண்டார்.

வகையா லவனி யிரந்தளந்தாய் பாதம்
புகையால் நறு மலரால் முன்னே—மிகவாய்ந்த
அன்பாக்கி யேத்தி யடிமைப் பட்டே னுனக்கு
என்பாக்கியத்தா லினி. (

வகையால்	அழகு பேச்சு முத லிய ப்ரகாரங்களால்	மிக வாய்ந்த	அதிகமாகவளை
முன்னே	முன்னொருகால்	அன்பு ஆக்கி	ப்ரீதியுள்ளவனு கொ
அவனி	பூமியை	ஏத்தி	துதிசெய்து
இரந்து	யாசித்து	இனி	இன்றுமுதல்
அளந்தாய்	உலகங்களை அளந் துகொண்டாய்	என் பாக்கியத் தால்	என் பக்கல் நீ (த கடாக்ஷமாகி ண்யத்
பாதம்	உனது திருவடிகளை	உனக்கு	தேவரீருக்கு
புகையால்	தூபத்தினாலும்	அடிமைப்பட் டேன்	தாஸனாக ஆனே
நறு மலரால்	வாஸனையுள்ள புஷ் பங்களாலும்		

கீழே பேசியபடி தனது காணங்கள் பகவானிடம் செ பணி செய்வதற்கும் காரணம் அவன் செய்தருளிய கடாக்ஷ னென்கிறார் இதில்.

வகையால்:—வடிவழகு பேச்சு செயல் முதலியவகைகள மாவலியின் மனத்தைக் கவர்ந்து மூவடி மண்ணிரந்து அள கொண்டாய். உனது திருவடிகளைப் புஷ்பங்களைக் கொண்டும் து தீபங்களைக்கொண்டும் பரபக்தி பரஞான பரமபக்தி என்கிற நி ளிலே நின்றுகொண்டு ஆராதித்து உனக்கே அடிமையானே இன்று முதல் மேலுள்ள காலமெல்லாம் இங்ஙனம் உனக்கடி

யாகவே இருப்பதில் ஈடுபட்டேன். இதுவும் எனது பாக்ய விசேஷத்தாலேயே கிடைத்தது. நான் பெற்ற பேறுதான் புருஷார்த்தம். என்று தான் தன்னைப் புகழ்ந்துகொண்டார்.

வகையால்:—மாவலியையும் தேவர்களைத் துன்புறுத்தினன் என்ற காரணத்தால் கொன்றொழிக்கவேண்டியிருக்க, அவனிடம் குடிகொண்டிருந்த ஔதார்யம் என்ற மஹாகுணத்தினுல் இரங்கி, அவன் நினைத்தபடியே மூவுலகங்களும் அவனுடையதாகவே நாமும் நினைத்து யாசித்து மாவலியையும் அடக்கி தேவர்களுக்குத் தலைவனான இந்திரனுக்கும் அவனுடைய வுலகத்தைச் சேர்ப்பித்து நம் கார்யத்தையும் செய்துகொள்வோமென்று நினைத்த சூழ்ச்சியால் என்றும் பொருள் சொல்லலாம். த்ரிவிக்ரமனுகி எல்லார் தலையிலும் தன் திருவடியை வைத்துய்யச் செய்ததுபோல் தன்பேரிலும் அவன் செய்த விசேஷ கடாக்ஷம் தான் தாம்பெற்ற புருஷார்த்தத்திற்குக் காரணமென்பது முதலடியால் தோன்றும்.

என் பாக்கியத்தால்:—இங்கு என் பாக்கியமென்பது எம்பெருமான் தன் பிறத்தில் பிறக்கும் கருவாயில் செய்த ப்ரதம கடாக்ஷம் முதலான வுபகாரங்களேயாகும். பாக்ருதமென்பது பெருமானுடைய அநுக்ரஹஸங்கல்பத்தைத் தவிற வேறொன்றில்லையாதலால் இங்கும் பாக்யம் என்றால் எம்பெருமான் தன் திறத்தில் செய்த கடாக்ஷம் முதலிய மோக்ஷபர்யவஸாந புருஷார்த்தங்களுக்குக்காரணமான உபகாரங்கள் எனப் பொருள்படும். ஆகவே தன்னிடமுள்ள ஆநுகூல்ய ஹேதுக்களையெல்லாம் வ்யாஜமாத்ரமாகவே கருதி அவனருளையே ப்ரதானஹேதுவாகக்கொண்டு, தான் பெற்ற ஆநுகூல்யஹேதுக்களையும் புருஷார்த்தத்தையும் எம்பெருமானது கடாக்ஷத்தாலேயே கிடைத்ததெனப்பேசினுரென்பது இரண்டபொருள்.

இனிதென்பர் காம மதனினு மாற்ற
வினிதென்பர் தண்ணீரு மெந்தாய்—இனிதென்று
காமனீர் வேளாது நின்பெருமை வேட்பரேல்
சேமநீராகும் சிறிது. (35)

எந்தாய்	எனது ஸ்வாமியே	இனிது என்று	போக்யமெ
காமம்	சப்தம் ரூபம் முதலிய விஷயங்களை	வேளாது	ஆசைப்படா
இனிது என்பர்	போக்யங்களென்று சொல்லுகிறார்கள்	நின் பெருமை	உன்னுடை ன
அதனிலும்	அதைக்காட்டிலும்	சிறிது	கொஞ்சம்
தண்ணீர்	ஜலம்	வேட்பார் எல்	ஆசைப்படுவ
ஆற்ற	மிகவும்		
இனிது என்பர்	போக்யமென்பார்கள் (சிலர்)	சேமம் நீராகும்	(அது) நமக் மத்தைக்கெ ம் தன்மையு
காமம்	அவ்விஷயங்களையும்		
நீர்	ஜலத்தையும்		

"மிகவாய்ந்த வன்பாக்கியேத்தி யடிமைப்பட்டேனு என் பாக்கியத்தாலினி" என்று தாம் பெற்ற பாக்யத்தா பெருமானுக்கு அடிமைப்பட்டதாகப் பேசினார். பகவத் வி தில் அவகாஹியாமல் சப்தாதி விஷயங்களையே இனிதென் ஸாரிகள் நினைக்கிறார்களே; என்று வருந்துகிறாரிதில்.

இனிதென்பர்:—உலகில் சிலர் நல்ல கானத்தைக் கேட் அழகுள்ள வஸ்துவைப் பார்ப்பது, உயர்ந்த பெண்களைத் தொ முதலியவைகளையே இனிதென்றிருந்து அவைகளிலேயே மூ கிடந்துழல்கிறார்கள். மற்றும் சிலர் சப்தாதி விஷயங்களை தாகக்கருதாவிடினும் தண்ணீரையே இனிதென்கிறார்கள். த ரென்பது சோற்றுக்கு உபலக்ஷணம். அறுசுவை வாய்ந்த சில உண்டு தண்ணீரைக்குடித்துக்கொண்டு வயிறுவாடாமல் தள்ளுவதுதான் மேலான புருஷார்த்தமென்றிருக்கிறார்கள்.

தாஹமடைந்தவன் அக்நிஜ்வாலையை அருந்தி தாஹ யடக்க நினைப்பதுபோலவும், வெயிலில் அடிபட்டவன் பெரிய பின் படத்தினுடைய நிழலில் ஒதுங்கி களைப்பாற நினைப்பது வும், கீழ்ச்சொன்ன சப்தாதி விஷயங்கள் ஆத்மநாசத்தை விக்குமென்றுணர்ந்து அவைகளில் கண்வைக்காமல் "உண் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன்"

றும், வாஸுதேவஸ் ஸர்வமிதி ஸ மஹாத்மா என்றும் சொல்லுகிறபடி பகவத் குணங்களையே தாரகபோஷக போக்யங்களாகக் கொள்ள நினைத்தால் அது க்ஷேமத்தை விளைவிக்கும்.

மற்றவைகளை விரும்புவது ஆத்மநாசத்திற்குக் காரணமாகும். பகவத் விஷயத்தை ஆசைப்படுவதென்பது நமக்கு க்ஷேமத்தைக் கொடுக்கும் தன்மையுள்ளது. அதை விட்டு ஸம்ஸாரிகள் விஷயாந்தரங்களை விரும்புவது யாது காரணம் பற்றியோ; என்று வருத்தமுற்றுப்பேசினர்.

"சிறிது" என்பதால் எம்பெருமானிடம் வாஸ்தவமான ப்ரியம் இல்லாமல் பொய்யாகப் ப்ரீதிபாவனை செய்தாலும் மித்ர பாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதம் சந என்றபடி அவன் நம்மைக் கைவிடாது காத்தருள்வன் என்பது விளங்கும்

சிறியார் பெருமை சிறிதின்க ணெய்தும்
அறியாருந் தாமறியா ராவர்—அறியாமை
மண்கொண்டுமண் ணுண்டுமண் ணுமிழ்ந்தமாயனென்
றெண் கொண்டென் னெஞ்சே யிரு. (36)

சிறியார்	க்ஷுத்ரர்களால் (நினைக்கப்படுகிற)	அறியாமை	ஒருவருக்கும் தெரியாதபடி
பெருமை	மேன்மையானது	மண்கொண்டு	பூமியை யாசித்துப் பெற்றுக் கொண்டு
சிறிதின் கண்	கீழ்மையில்		
எய்தும்	சேர்த்துவிடும்	மண் உண்டு	ஒருகால் பிரபஞ்சத்தை அமுதுசெய்து
அறியாரும்	இது செய்யத்தகுந்தது; இது செய்யத்தகாதது என்பதை அறியாதவர்களும்	மண் உமிழ்ந்த	ஒருகால் பிரபஞ்சத்தை வெளியே உமிழ்ந்த
தாம்	தாங்கள்	மாயன் என்று	ஆச்சரியகரமான செயலுடையவனென்று
அறியார் ஆவர்	புத்தியில்லாதவர்களே யாவர்		
என் நெஞ்சே	எனது மனமே	எண் கொண்டு இரு	நினைத்துக்கொண்டிருப்பாயாக.

ஸம்ஸாரிகளுடைய செயல்களை நினைந்து வருந்திய வாழ்
தமது நெஞ்சை நோக்கி, அவர்கள் எக்கேடுகெட்டால் நமக்கெ
நீ திருமாலையே சிந்தித்திருவென்று உபதேசிக்கிறார்.

சிறியார்:—சிறிதும் பெருமையில்லாத தாழ்ந்தவர்கள் தா
மிகவும் பெரியோர்களாகத் தாங்களே நினைத்துக்கொண்
அவர்களால் நினைக்கப்படும் பெருமை அவர்களைத் தாழ்ந்தவர்
களே செய்துவிடும். கொஞ்சமாவது பெருமையிருந்து தங்
மேன்மையுள்ளவர்களாக நினைத்து கர்வப்பட்டாலும் ஒருவ
ஒப்புக்கொள்ளலாம். சிறிதும் குணமின்றி வீணாகவஹங்காரப
வார்கள் சீக்கிரத்தில் தங்களைத் தாழ்ந்தவர்களென்றே ஸ்தாபித்
கொள்வார்கள். இம்மாதிரி சிறிதும் அறிவில்லாத மூடர்கள்
களை ரொம்பவும் அறிவாளர்களாக நினைத்துக்கொண்டாலும் அ
களும் க்ருத்யாக்ருத்ய விவேகமில்லாத மூடர்களாகவே யிருப்
களேயல்லது ஆரோபிக்கப்பட்ட ஞானத்தால் உண்மையில்
வான்களாகக் கருதப்படமாட்டார்கள். இப்படித் தங்களை நி
கிற சிறியாரும் அறியாருமே இவ்வுலகில் பெரும்பான்மையே
கள். ஆதலால் நெஞ்சமே! நீ அவர்களைப்போல் அஹங்காரப்ப
மல், ஒருவரும் திருமகள் கேள்வன் என்று அறியாதபடி வாமனரு
வந்து மண்ணளந்தவனும், பின்பொருகால் பிரளயாபத்தில் இவ்
கங்களையெல்லாம் தம் திருவயிற்றிலேவைத்துய்யக் கொண்டவனு
பிறகு அவ்வுலகங்களையே வெளிநாடுகாணவுமிழ்ந்தவனுமான பெ
மானையே நினைத்துக்கொண்டிரு; அதுதான் நமக்கு க்ஷேமத்தை
கொடுக்கும் என்று உபதேசம் செய்தார்.

பிரமன் முதலிய மற்ற தேவர்களான சிறியாரை நாம் பெ
தெய்வங்களாகக் கருதினால் அது நம்முடைய தாழ்மையைக்
காட்டி நம்மைச் சிறியாராகச் செய்துவிடும் என்றும் முதலடிக்கு
பொருள் கூறுவதுண்டு.

இருந்தண் கமலத்திருமலரி னுள்ளே,
திருந்து திசைமுகனைத் தந்தாய்—பொருந்திய நின்
பாதங்க ளேத்திப் பணியாவேல், பல்பிறப்பும்
ஏதங்களெல்லா மெமக்கு. (37

இரும்	விசாலமாயும்	பொருந்திய	ஒன்றோடொன்று சேர்ந்திருக்கிற
தண்	குளிர்ந்துமிருக்கிற	நின் பாதங்கள்	உனது திருவடிகளை
கமலத்து	தாமரையின்	ஏத்தி	துதி செய்து
இரு	மலர்ந்ததான	பணியாவேல்	வணங்காவிடில்
மலரின்	புஷ்பத்தின்	எமக்கு	எங்களுக்கு
உள்ளே	நடுவில்	பல் பிறப்பும்	பலவகைப்பட்ட
திருந்த	ஸாமர்த்தியமுள்ள	எல்லாம்	பிறவிகளெல்லாம்
திசை முகனை	பிரமதேவனை	ஏதங்கள்	துக்கங்களாகவே முடியும்.
தந்தாய்	ஸ்ருஷ்டிசெய்தவனே		

இருந்தண்:—ஸர்வேச்வரனைப் பணியாவிடில் பிறவிகள்தோறும் துயரங்களே விளையுமென்கிறாரிதில். வாஸம் செய்வதற்குப் பாங்காகவிசாலமாயும் சீதளமாயுமிருக்கிற தாமரைப்பூவில் பிரமனைப் படைத்தவனே! நீ பலமுறைப் பிரஜைகளைப் படைப்பது இப்பிறவியிலில்லாவிடினும் ஏதாவதொரு பிறவியில் நம்மையறிந்து பணிந்து பிரஜைகள் முக்தியை அடையலாம் என்று நினைத்தல்லவா? அப்படி உன் நினைவின்படி உன்னைப்பணியாது புறம்பே செல்கிறவர்கள் தங்கள் பிறவி முழுவதிலும் துக்கங்களையே அனுபவிப்பார்கள். உன்னை வணங்காதவர்களுக்கு முக்தி பெற வழியில்லையாதலால் பிறவிகள் உண்டாவது நிச்சயம். அப்பிறவிகளனைத்தும் துக்கமயமாகவேயிருக்கும். உன்னையே துணையாகக்கொண்டவெங்களுக்கு உன்னை ஸேவிக்காமலிருந்தால் உலகிலுள்ளவர்களெல்லாராலும் அனுபவிக்கப்படும் துக்கங்களெல்லாம் உண்டாகும். ஆதலால் உன்னை வணங்கி வழிபடுவதே யாத்ரையாயிருக்கும்படி எனக்கருள்புரிவாய் என்கிறார்.

திருந்த திசைமுகனை — ஸ்ருஷ்டி செய்வதில் திறமையுள்ளவன். பெருமான் தனக்கு ஒரு முறை ஸ்ருஷ்டியின் ப்ரகாரங்களை உபதேசம் செய்துவிட்டால் அதை மறந்து மறுபடியும் பெருமானிடம் சென்று கேட்டுத் தெளிந்துகொள்வது என்கிற தன்மையில்லாதவன். முதலில் உபதேசித்ததை மறவாது ஸர்வகாலத்திலும் அத்தொழிலை நடத்துகிறவன் என்றபடி.

எமக்கென் றிருநிதிய மேமாந்திராதே
தமக்கென்றும் சார்வ மறிந்து—நமக்கென்றும்
மாதவனே யென்னும் மனம் படைத்து,மற்றவன்
ஓதுவதே நாவினு லோத்து. (

இருநிதியம்	தனக்கும் பிறருக்கும் உரிமையுள்ள பொருளை	மாதவனே	ச்ரிய: பதிதான் அடையவேண்ட
எமக்கு என்று	நமக்கே வேணுமென்று கருதி	என்னும்	என்கிற
ஏமாந்து இராதே	மோஹமடைந்திருக்காதே	மனம்	மனத்தை
தமக்கு	தங்களுக்கு	படைத்து	அடைந்து
என்றும்	எக்காலத்திலும்	மற்று	அதற்குமேல்
சார்வம்	காப்பாற்றுகிறது.	அவன்	அந்த லக்ஷ்மீட னுடை
அறிந்து	இன்னதென்று தெரிந்துகொண்டு	பேர்	திருநாமங்களை
நமக்கு	தங்களுக்கு	நாவினல்	நாக்கினல்
என்றும்	எப்பொழுதும்	ஓதுவதே	சொல்லுவதுதா
		ஓத்து	அத்யயனம் செ வேண்டிய வே

செல்வத்தையே பெரிதாக நினைத்திருக்கும் பாமரர்க குறித்திப்பாசுரமருளிச்செய்கிருர்.

எமக்கு:—நமக்கு எக்காலத்திலும் செல்வம்தான் காப்ப றும் பொருள். எந்த விபத்துகளிலிருந்தும் நம்மை விடுவிக் பொருள் செல்வம் ஒன்றுதான் என்று நினைத்து செல்வத்தைக் விடாது சேமித்துவைக்குமியல்புள்ளவர்களே! நீங்கள் நினைப் சரியன்று. செல்வம் என்பது ஒருவனுக்கே உரித்தானதல் இன்று நம்மிடமிருக்கும்பொழுதே அதைப் பலர் பலவழியா கைக்கொள்ள நினைப்பார்கள். நாளைக்கு மற்றொருவனிடம் சென் விடும். ஆகவே இன்று நமக்கும் நாளை மற்றொருவனுக்கும் உ தான பொருளை இன்றைக்கு நம்மிடமிருப்பதுபற்றி நம்முடை தானென்று நினைத்து ஏமாந்து போகாதீர்கள் நமக்கு எக்கால லும் காப்பாற்றுகிறவன் யார் என்று சிந்தித்துப்பாருங்கோ

அப்படிப்பார்த்தால் மாதவன் ஒருவன்தான் எக்காலத்திலும் நம்மைக் காப்பவனென்றறியலாம். அதன்பின் அவனது திருநாமங்களையே சொல்லித்திரியுங்கோள். வேதங்களை அத்யயனம் செய்வதுபோல் அவன் நாமங்களை நாவினால் சொல்லுவதுதான் நமக்குக் கடமை. அவன் பேர்களைப் பேசுவதுதான் வேதமென்பது; என்று உபதேசம் செய்தருளினார்.

ஓத்தின் பொருள் முடிவு மித்தனையே, உத்தமன் பேர்
ஏத்தும் திறமறிமினேழைகாள்—ஓத்ததனை
வல்லீரேல் நன்றதனை மாட்டீரேல், மாதவன்பேர்
சொல்லுவதே ஓத்தின் சுருக்கு. (39)

ஏழைகாள்	திருமால் என்கிற செல்வத்தை இழந்தவர்களே!	சொல்லுவதே	பேசுவது தான்
ஓத	அத்யயனம் செய்ய	ஓத்தின் சுருக்கு	வேதங்களுடைய ஸாரம்
வல்லீர் எல்	சக்தியுள்ளவர்களாயிருந்தீர்களேயானால்	ஓத்தின் பொருள் முடிவும் இத்தனையே	வேதத்தில் தீர்மா இவ்வளவு தான்
நன்று	அது மிகவும் நல்லது	உத்தமன்	புருஷோத்தமனுடைய
அதனை மாட்டீர் எல்	அது செய்வதற்கு சக்தியில்லாதவர்களானால்	பேர்	திருநாமங்களால்
மாதவன் பேர்	திருமாலின் திருநாமங்களை	ஏத்தும் திறம்	ஸ்தோத்ரம் செய்யும் வகையை
		அறியின்	அறிந்து கொள்ளுங்கள்.

செல்வத்தையே பெரிதாக நினைத்திருக்குமவர்களைக்குறித்து; மாதவன்தான் நமக்கு எக்காலத்திலும் ரக்ஷகன்; அவனுடைய திருநாமங்களை உச்சரிப்பதுதான் நாம் ஓதவேண்டிய வேதங்களாகும்; என்று உபதேசித்தார். வேதத்தில் அக்நி இந்திரன் வருணன் முதலிய தேவர்களையும் பேசியிருக்கச்செய்தே மாதவன் பேர் ஓதுவதே ஓத்தாகுமோ? என்று சிலர் வினவ அதற்கு விடையளிக்கிறார் மேல்.

ஓத்தின்:— வேதங்களை அத்யயனம்செய்து செவ்வ
சொல்லுவதற்குத் திறமைபெற்றிருந்தால் மிகவும் நன்று. உ
களில் இந்திரன் முதலிய தேவர்களையும் சொல்லியிருப்பினும், உ
கள் நமக்கு ஆச்ரயணீயர்களல்ல. இந்திரன் முதலிய சப்தங்க
அந்தந்த தேவர்களுக்கு அந்தர்யாமியான ஸ்ரீமந் நாராயணனை
சொல்லுகின்றன. இந்திரன் முதலியதேவர்கள் ஸ்ரீய:பதி
விபூதியாகவே வேதத்தில் கருதப்படுகிறார்கள். ஆனதுபற்றி
"ப்ராஹ்மணர்களால் வேதத்தில் எவ்வளவு அக்ஷரங்கள் ஓது
கின்றனவோ அவ்வளவு விஷ்ணுவின் திருநாமங்கள் ஓதப்பட்
வாம்." என்றும் ப்ரமாணங்கள் சொல்லுகின்றன. ஆத
வேதங்களை குருமுகமாக அத்யயனம்செய்து அந்த வேதங்க
களாலேயே எம்பெருமானைத் துதி செய்யுங்கோள். வேதத
அத்யயனஞ்செய்யச் சக்தியற்றவர்களாயிருந்தால் கேசவன் ந
யணன் கோவிந்தன் என்கிற பெருமானுடைய நாமங்களை
சொல்லித் திரியுங்கோள். வேதங்களை ஓதுவதால் யாதுப
கினையுமோ அப்பயன் நாமங்களைச் சொல்லுவதாலும் கிடை
மேலும் இக் கலியுகத்தில் பகவந்நாம ஸங்கீர்த்தனமே மற்ற யுக
ளில் செய்யப்படும் உபாஸனம் முதலியவைகளால் கிடைக்கப்ப
புருஷார்த்தத்தைக் கொடுக்குமென்று பெரியோர்களால் சொல்ல
பட்டுமுளது. நமக்கு வேதமோதுவதற்குத் திறமையில்லை
யென்று நீங்கள் வருந்தவேண்டாம். வேதைச்ச ஸர்வைரஹமே
வேத்ய: என்று வேதங்களால் அறியப்படும் பரம புருஷனாக
மாதவன் கோவிந்தன் முதலிய நாமங்களாலும் சொல்லப்படுகிறா
ஆகையால் வேதங்களால் பெருமானைத் துதிசெய்யுங்கோள்.
லது அவனுக்கு வாசகமான கேசவன் முதலிய பெயர்களைச் செ
லியாவது, துதிசெய்யுங்கோள். எப்படியாது புருஷோத்தமனுடை
பேர்களைச் சொல்லும் வகையை அறிந்துகொள்ளுங்கோள். =
தான் நாம் உய்வதற்கு உபாயமென்றருளிச் செய்தார்.

ஏழைகாள்:— ந்திரியினை பவளத்தூணை, தனம் மதீயம்
பாத பங்கஜம் என்றும் தனமாகச் சொல்லப்பட்ட பெரும
இழந்ததுபற்றி ஏழைகாள் என்று ஸம்ஸாரிகளை விளித்தார்.

சுருக்காக வாங்கிச் சலாவி நின்று, ஐயார்
நெருக்கா முன் நீர்நினைமின் கண்டீர்—திருப்பொலிந்த
ஆகத்தான் பாத மறிந்து மறியாத
போகத்தா லில்லை பொருள். (40)

ஐயார்	கபமானது (கோழை)	பாதம்	திருவடிகளை
சலாவி நின்று	உடம்பு முழுவதும் வியாபித்து	நினைமின் கண்டீர்	நினையுங்கோள்.
சுருக்காக வாங்கி	கழுத்தில் சுருக்கிட்டதுபோல் இழுத்துக் கொண்டு	அறிந்தும்	அவனை நினைப்பது தான் உஜ்ஜீவனோபாயம் என்று தெரிந்து கொண்டும்
நெருக்கா முன்	தொண்டையை அடைப்பதற்கு முன்னமேயே	அறியாத	விடப்போகாத
நீர்	நீங்கள்	போகத்தால்	விஷய அநுபவத்தால்
திருபொலிந்த ஆகத்தான்	லக்ஷ்மீதேவி பிரகாசித்துக் கொண்டிருக்கிற திருவடம்பையுடைய விஷ்ணுவினுடைய	பொருள் இல்லை	பிரயோஜனமில்லை.

சிற்றின்பங்களையே ஆழ்ந்து நின்று அனுபவிக்கும் அதிகாரிகளைக் குறித்து உபதேசிக்கிறார் இதில்.

சுருக்காக:— விஷயங்களையே அநுபவித்துக்கொண்டு பரம புருஷார்த்தத்தை மறந்திருக்கும் பாவிகாள்! உமக்கொன்று சொல்லுகிறேன் கேண்மின்; நீங்கள் திருவாழ்மார்பனுடைய திருவடிகளையே நினைத்திருக்கோள். எங்களுக்கு இப்பொழுது என்ன அவசரம். கடைசியான காலத்தில் பார்த்துக்கொள்கிறோம் என்று பதில் சொல்லவேண்டாம். மனிதனுடைய ஆயுளை நிச்சயம் செய்ய முடியாது. இப்பொழுதே கூட மரணம் உண்டாகலாம். கபமானது சடக்கென உடம்பு முழுவதும் வியாபித்து கழுத்தில் சுருக்குப் போட்டதுபோல் தொண்டையை அடைத்து ஒரு விஷயத்தையும் நினைக்கவும் பேசவும் முடியாமல் செய்யுமன்றோ. அப்பொழுது

நீங்கள் எப்படிப் பெருமானைப் பேசுவீர்கள். அக்கபம் தொண்டையை அடைக்குங்காலம் எப்பொழுது நேருமென்று நீங்கள் அறிவீர்களா? இப்பொழுதே நோலாம். ஆதலால் தொண்டை அடைப்பதற்கு முன்னே இன்று முதல் திருமாலை த்யானம் செய்யுங்கோள். திருமாலின் திருவடிகள் தான் நமக்கு ப்ராப்யங்களென்று தெரிந்துகொண்டும் சிற்றின்பங்கள் விடப்போவதில்லையென்று சொல்வது தகாது. புலன்படிந்துண்ணும் போகம் பெருக்கி என்றபடி சிற்றின்பங்களில் இந்த்ரியங்கள் ஆழ்ந்து கிடக்குமே யல்லது விடப்போகாதவைதான். சிற்றின்பங்களை விட்டு சிறிதும் பிரியாதவைகள் தான். ஸத்ருசம், சேஷ்டதே ஸ்வஸ்ய ப்ரக்ருதேர் ஞானவாநபி | ப்ரக்ருதிம் யாந்தி பூதாநி நிக்ரஹ: கரிஷ்யதி | அறிவுள்ளவன்கூட தன் ப்ரக்ருதிக்குத் தக்கபடி நடக்கிறான். ப்ராணிகள் ப்ரக்ருதியின்படி நடக்கின்றன. சாஸ்த்ர ஞானத்தால் செய்யப்படும் அடக்குதல் பயன்படாது'' என்ற கீதாசார்யன் வார்த்தையும் உண்மையே. ஆயினும் நம்மால் விடப்போகாத சிற்றின்பத்தால் யாதொரு பயனுமில்லாததால் ஆத்மாவின் மோக்ஷ ஸுகத்தை வேண்டி அவைகளை விடவேண்டியதாதலால் அவைகளை த்யாகம்செய்ய முயற்சிக்கவேண்டும். அதுவும் அவன் கருளாலேயே ஆவதாகும். ஆதலால் கபம் வ்யாபிப்பதற்கு முன் திருமாலை நினைப்போமாக; என்று உபதேசித்தாராயிற்று.

அறிந்து மறியாத போகத்தால்:— சிற்றின்பங்கள் பொல்லாதவை என்று அறிந்தும் விடமுடியாதவைகள். எம்பெருமானே நமக்கு ப்ராப்யம் என்று அறிந்தும் விடமுடியாத போகம் என்பதாகவுமாம், ஐ—கபம், ஆர்—விருத்தி, இழிவு—சிறப்பு.

பொருளா லமருலகம் புக்கியலாகாது
அருளா லறமருளு மன்றே—அருளாலே
மாமறை யோர்க்கீந்த மணிவண்ணன் பாதமே
நீ மறவேல் நெஞ்சே நினை. (

பொருளால்	புருஷார்த்தம் என்கிற புத்தியால்	அருளாலே	கிருபையினால்
அமருலகம்	தேவலோகத்தில்	ஈந்த	(மோக்ஷத்தை) கொடுத்த
புக்கு இயல்ஆகாது	பிரவேசிக்க முயல்வது தகாது	மணிவண்ணன்	நீல ரத்னம் போல் நிறமுள்ள பெருமானுடைய
அறம்	தர்மஸாத்யமான தேவலோகத்தை	பாதம் ஏ	திருவடிகளையே
அருளால்	தயையினால்	நெஞ்சே	ஏ மனமே!
அருளும் அன்றே	(ஸர்வேச்வரன்) கொடுக்கிறானன்றோ	நீ	நீ
மா மறையோர்க்கு	உயர்ந்தவர்களான வைதிகர்களுக்கு	நினை	நினைத்துக்கொண்டிரு
		மறவேல்	ஒருபொழுதும் மறவாதே

கீழ்ப்பாட்டில் காம புருஷார்த்தத்தில் மண்டி உழல்கின்றவர்களுக்கு உபதேசம் செய்தார்.

இப்பாட்டில் தேவலோகம் சென்று வாசித்திருக்க வேணுமென்று நினைத்து அதற்காகப் பணம் ஸம்பாதித்துக்கொண்டு போது போக்குமவர்களைக் குறித்துப் பேசவேண்டித் தன் நெஞ்சுக்கு உபதேசிக்கிறதுபோல் பேசுகிறார்.

பொருளல்:— தேவலோகமும் ஒரு புருஷார்த்தம் என்று நினைத்து அதை அடைய விரும்புவது தகாது. ஆத்மாவுக்கு அது மிகவும் சேராதது. பரமாத்மாவின் உலகத்திற்கும் இதற்கும் நெடுவாசி உண்டு. ஸ்வர்க்கமும் பரமபதத்திலிருந்து பார்த்தால் நரகமாகவே தோன்றும். "ஏதே வை நிரயாஸ்தாத ஸ்தாநஸ்ய பரமாத்மந:" என்பதையும் காண்க. "ஸத்பஸ்த்யஜந்தி வரதத்வயி பத்தபாவா: பைதாமஹாதிஷு பதேஷ்வபி பாவபந்தம் | தல்லோகைஸ்வதேந்த்ர ஸாகலைஞ்சரேத்ஸாகாய காராக்ருஹே கநகச்ருங்கலயாபி பந்த:" என்று தேசிகன் வார்த்தை; "ஹே வரதராஜனே உன்னிடம் அன்பு பூண்டவர்கள் பிரமன் முதலியவர்களின் உலகங்களிலும் ஆசையை வைக்கமாட்டார்கள். ஏனெனில் உலகில் ஸுகமாக இப்படி அலைந்துகொண்டிருக்கவேணுமென்று விரும்புகிற யாருக்குத்தான் சிறையில் பவுன் சங்கிலியால் கட்டப்பட்டிருப்பது ருசிக்கும்.

ஆதலால் ஸ்வர்க்கத்தை விரும்பி அதன்பொருட்டு யாகங்களை செய்து ஸ்வர்க்கத்தில் நுழைவது பரமாத்மாநுபவத்திற்கு இட்டு பிறந்த ஜீவனுக்குத் தகாதது.

ஸ்வர்க்கலோகத்தில் உங்களுக்கு விருப்பமிருந்தாலும் அதற்குப் பணத்தைத்தேடி யாகம் முதலியவைகளைச் செய்யவேண்டிதவச்யமில்லையே; ஸ்வர்க்கத்தையும் பெருமான் தனது கிருபையிலேயே நமக்குக் கொடுப்பன். நாம் ஸர்வேச்வரனையே வணங்கி வழிபட்டால் நமக்கு ஸ்வர்க்கத்திலுள்ள விருப்பத்தை அவன் அறிந்து நமக்கு ஸ்வர்க்கத்தையும் கொடுத்துப் பிறகு முறையே மோக்ஷத்தையும் தந்தருள்வன். ஆதலால் முன்பு உயர்ந்த முனிவர்களுக்கு மோக்ஷத்தைக் கொடுத்த நீலநிறத்தனனான திருநாரணனுடைய திருவடிகளையே மறவாது நினைத்திருக்கவேணுமென்றுபதேசிக்கிறார். இப்பாட்டில் ஆழ்வார் தமதுநெஞ்சையே விளித்து உரைத்த போதிலும் ஸ்வர்க்கத்தை விரும்புகிறவர்களைக்குறித்தே பேசினரென்றுணர்க்கொள்க. அவர்களைக் கண்களை விழித்துப்பார்க்கவும் மனங்கொள்ளாமல் தம் நெஞ்சுக்குச் சொன்னதுபோல் பேசினார் என்றறிக.

பொருளால்:— என்பதற்கு புருஷார்த்தமென்கிற புத்தியை பொருளைவிட்டு தனம் என்கிற பொருளும் சொல்லலாம். தேவலோகத்திற்குச் செல்லவேண்டி பணத்தை எதற்காகத் தேடிச்செல்கிறீர்கள். பணமுமின்றி யாகம் முதலிய சரீர ச்ரமசாதனமான வேள்வியுமின்றியே பெருமானது கிருபையினாலேயே அடையலாகும், என்ற பொருள் கூறுவதுண்டு.

ஆழ்வார்கள் எம்பெருமானை ஆச்ரயித்து ஸ்வர்க்கத்தைத் தேடுவதையும் கனவிலும் நினைப்பவர்களல்லாதலால் இங்கு அமருகம் என்பதற்கு ஸ்ரீவைகுண்டம் என்ற அர்த்தம் சொல்லி பொருளால் என்பதற்குப் பணம் என்ற பொருள்கொண்டு பணத்தால் மோக்ஷத்தையடைய முடியாது. ஈச்வரனது கிருபையாலே கூடுவது என்றும் உபதேசித்ததாகவும் அறிக.

அமருலகம்—அமாருலகம் என்பதின் விகாரம்; அறம்—தர்மம்- தர்மத்தால் அடையப்படும் உலகம் என்பது இலக்கணையால் கொண்டபொருள்.

மாமறையோர்க்கு—தண்டகாரண்யவாஸிகளான ரிஷிகளுக்கும் சுகர் வாமதேவர் முதலியவர்களுக்கும், (மோக்ஷத்தைத் தந்தவன்) (மாமறையோற்கு) என்று பாடமாகில் மார்க்கண்டேயனுக்கு முக்தியளித்தவன் எனக்கொள்க. இதனால் முக்தியைத் தருபவன் என்று நம்பிக்கை உண்டாவதற்காக மாமறையோர்க்கீந்த என்ற விசேஷணம். முன்பு பலருக்கு முக்தியளித்தவனொருவன் நமக்கும் கொடுத்தருள்வன் என்று நம்பலாம். ஸகல புருஷார்த்தங்களையும் திருமால் ஒருவனே கொடுக்கவல்லான் என்பதும் தோன்றும்.

நினைப்பன் திருமாலை நீண்டதோள் காண
நினைப்பார் பிறப்பொன்றும் நேரார்—மனைப்பால்
பிறந்தார் பிறந்தெய்தும் பேரின்பமெல்லாம்
துறந்தார் தொழுதாரத்தோள். (12)

நீண்டதோள்	அப்பெருமானது நீண்ட திருத்தோள்களை	அத்தோள் தொழுதார்	அப்பெருமானுடைய திருத்தோள்களை ஆச்ரயித்தவர்கள்
காண	காண்பதற்கென்று		
திருமாலை	லக்ஷ்மீபதியை	மனைப்பால்	ஒரிடத்தில்
நினைப்பன்	சிந்தித்துக்கொண்டிருக்கிறேன்	பிறந்தார்	பிறவியை அடைந்தவர்கள்
நினைப்பார்	அவனை த்யானிப்பவர்கள்	பிறந்து எய்தும்	அங்கே ஜனித்து அனுபவிக்கிற
பிறப்பு ஒன்றும்	ஒருவிதமான ஜன்மத்தையும்	பேரின்பம் எல்லாம்	பெரிய ஸுகங்களெல்லா வற்றையும்
நேரார்	அடையமாட்டார்கள்.	துறந்தார்	விட்டுவிட்டவர்களாக ஆவார்கள்.

ஸம்ஸாரபோகங்களைத் துறந்தவர்களே பிறவித்துயரைத்தொலைத்துப் பேரின்பமடைவார்களென்கிறார் இதில்.

நினைப்பன்:— திருமகள் நாதனையே நினைத்துக்கொண்டி
கிறேன். அதுவும் ஒரு பிரயோஜநத்தைக் கருதியல்ல. பிராட
யோடணைந்துப் பரமபோக்யமான திருத்தோள்களைக் காணவே,
மென்றே. வேறு ஒரு பொருளை ஆசைப்பட்டவனல்லேன்.
னது திருத்தோள்களைக் காண்பதேதான் பிரயோஜனம். இப்
எம்பெருமானை நினைப்பவர்கள் மறுபடியும் யாதொரு பிறவியை
அடையமாட்டார்கள். ஸம்ஸாரத்திற்கு ஆளாகார்கள். மே
அப்பெருமானது திருத்தோள்களை ஸேவித்தவர்கள் இப்புவி
ஒருயர்ந்தவிடத்தில் பிறந்து அநுபவிக்கப்படும் உயர்ந்த ஸு
களையெல்லாம் கண்கொடுத்துப் பாராதபடி துறந்தவராவார்க
பெருமானது தோள்களை ஸேவித்துவிட்டால் பிறகு ஸம்ஸாரி
அடைகிற எவ்வகைப்பட்ட பேரின்பமனைத்தையும் துறக்க
நேரும். ஆதலால் யானும் திருத்தோள்களைக் காண்பதற்கென்
திருமாலை நினைக்கிறேன் என்றாராயிற்று. எம்பெருமானது தோ
களை ஸேவித்தால்தான் சிற்றின்பத்தைத் துறப்பார்கள். சிற்ற
பத்தைத் துறந்தால்தான் அவன் தோள்களைக் காணலாம் என்
இருவகையாகவும் பின்னடிகளுக்குப் பொருள் கூறலாம். சிற்ற
பத்தை பேரின்பமென வரைந்தது பரிஹாஸத்திற்காக. ஸம்ஸா
ளின் நினைவினாலேயாகவுமாம்.

தோளிரண் டெட்டேழும் மூன்றும் முடியனைத்தும்
தாளிரண்டும் வீழச் சரந்துரந்தான்— தாளிரண்டும்
ஆர் தொழுவார் பாதமவை தொழுவதன்றே, என்
சீர் கெழுதோள் செய்யும் சிறப்பு. (4

இரண்டு எட்டு ஏழும் மூன்றும் — இரண்டு எட்டு ஏழுமூன்று இவைகளை கூட்டினால் ஏற்படும் எண்ணான இருபது எண்ணிக்கையுள்ள
தோள் — கைகளையும்
முடி அனைத்தும் — எல்லாத் தலைகளையும்

தாள் இரண்டும் — இரண்டு கால்க
வீழ — கீழே விழும்படி
சரம் துரந்தான் — பாணங்களைவிட்ட ஸ்ரீராம பிரா
தாள் இரண்டும் — இரண்டு திருவ
ஆர்

தொழுவார்	ஸேவிக்கிறார்களோ	என்	என்னுடைய
பாதம் அவை	{ அவர்களுடைய திருவடிகளை	சீர் கெழு	அழகு நிறைந்த
		தோள்	கைகள்
தொழுவது அன்றே	{ வணங்குவ தல்லவா	செய்யும்	எனக்குச் செய்கிற
		சிறப்பு	மஹோபகாரம்.

கீழே எம்பெருமானது தோள்களை ஸேவிப்பதற்கென்று அவனைச் சிந்தித்திருப்பேனென்றார். இப்பொழுது கீழே சொன்னபடி எனக்கொரு நிர்ப்பந்தமில்லை. அவன் திருவடிகளை யார் தொழுகிறார்களோ; அவர்களை ஸேவிப்பதுதான் எனக்குப் பரமபுருஷார்த்தம் என்கிறாரிதில்.

தோளிரண்டு:— இரண்டு எட்டு ஏழு மூன்று இவைகளைக் கூட்டினால் வருந்தொகை இருபது. இருபது கைகளும் தலைகள் பத்தும், இரண்டு கால்களும் கீழே விழும்படி சரம் தொடுத்து ராவணனைக்கொன்ற ஸ்ரீராமபிரானுடைய இரண்டு திருவடிகளையும் யார் தொழுகிறார்களோ அவர்களுடைய திருவடிகளைத் தொழுவதுதான் எனக்கு வேண்டுவது. எனது கைகள் அப்பரனடியார்களின் அடிகளைக் கூப்பி வணங்கினால் அதுவே எனக்குக் கைகள் செய்த பரமோபகாரமென்று நினைப்பேன். உலகில் மற்றவர்கள் தங்களுக்கு த்ரவ்யம் ஸம்பாதித்தல் பிறரை ஹிம்ஸித்தல் முதலிய காரியங்களையே கைகள் செய்யுமுபகாரங்களாகக் கருதுவார்கள். நான் அப்படியல்ல. ஸ்ரீராமபக்தர்களைத் தொழுவதுதான் எனக்குக் கைகள் செய்யுமுபகாரம். பாகவதர்களைத் தொழுவதுதான் கைபடைத்ததற்குப் பயன் என்றபடி.

தோளிரண்டு:— தன்னைச் சரணமடைந்தவர்களுக்கு விரோதி என்பதால், தான் ஸ்ருஷ்டித்தான் என்பதையும் பாராமல் ராவணனைக் கொலைசெய்தானென்பது. இருபது கைகள் என்று சுருங்கச்சொல்வது கிடக்க இரண்டு எட்டு என்று கூட்டியுரைத்தல் கோரமான வதையான சித்ரவதை செய்தானென்பதைக் காட்டுவதற்கென்றறிக. அல்லது வலிமையுள்ள விரோதிபகப்பட்டு விட்டானென்று உடனே ஒரு சரத்தால் அவனை மாய்விக்காமல் முதலில்

இரண்டு கைகள் பிறகு எட்டுக்கைகள் என்று வெட்டித்தள்ள போதுபோக்கிக் கொன்றான் என்றுகொண்டு ஆயாஸமின்றி ருக்களை வதைப்பவன் என்று காட்டுவதற்காகவுமாம்.

ஆர் தொழுவார் பாதமவை:— ஜாதி குலாசாரங்களால் எ கைப்பட்டவராயினும் ஸ்ரீராமனுடைய திருவடிகளைத் தொழுப யிருந்தால் அவர்களே நமக்கு ஸ்வாமி என்பதும் தோன்றும்.

சிறந்தார்க் கெழுதுணையாம் செங்கண்மால் நாமம்
மறந்தாரை மானிடமா வையேன்—அறந்தாங்கும்
மாதவனே என்னும் மனம்படைத்து, மற்றவன் பே
ஓதுவதே நாவினா லுள்ளு. (4

சிறந்தார்க்கு	உயர்ந்தவர்களான ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு	அறம் தாங்கும்	தர்மங்களை வ தக்கொண்டிரு
எழு துணையாம்	மேலான ஸஹாயமாயிருக்கிற	மாதவனே	திருமாலே (பர
		என்னும்	என்கிற
செம் கண் மால்	சிவந்த கண்களையுடைய ஆச்ரித வ்யாமோஹமுள்ள பெருமானுடைய	மனம்	மனத்தை
		படைத்து	அடைந்து
		மற்று	மேலும்
நாமம்	திருநாமங்களை	அவன் பேர்	அவனது பெயர்க
மறந்தாரை	நினையாதவர்களை	நாவினால்	நாக்கினால்
மானிடமா	மனிதர்களாக	ஓதுவது	சொல்லுவதற்கு
வையேன்	நினைக்கமாட்டேன்	உள்ளு	நினைப்பாயாக.

கீழில் பரனடியார்களைப் பணிந்து நிற்பேனென்றார். பரம ஷனை மறந்திருப்பவர்களை வெறுக்கிறாரிதில்.

சிறந்தார்க்கு:— சிறந்தவர்களான ஸ்ரீவைஷ்ணவர்களுக் உற்ற துணையாயிருப்பன பெருமானுடைய திருநாமங்கள். ஸர்(ச்வரனுடைய திருநாமங்களைச் சொல்லுகிறவர்களை அவ்வீச்வர ப்ராக்ருத போகங்களில் ருசியைத் தடுத்துச் சாமதசையில் த நினைவையும் கொடுத்து அர்ச்சிராதி மார்க்கத்தில் தானே துணை

கவுமிருந்து தன்னுலகைச் சேர்ப்பிக்கிறானென்பது பற்றி ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஏற்றதுணையாவன பகவந்நாமங்கள். வாத்ஸல்யத்தால் சிவந்த திருக்கண்களையுடைய பெருமானுடைய திருநாமங்களை எவர் மறந்திருக்கிறார்களோ; அவர்களை மனிதர்களாகவே நான் கருதமாட்டேனென்கிறார். திருமங்கையாழ்வாரும் ஆன்விடையேழன்றடர்த்தார்க்காளானாரல்லாதார் மானிடவரல்லரென் றென்மனத்தே வைத்தேனே என்று ஏழு ரிஷபங்களை வென்ற கண்ணனுக் கடிமையல்லாதவர்களை மனிதர்களல்லரென்று என் மனத்தில் வைத்தேனென்றார். குந்துமணியை மாணிக்கமென்று எண்ணியிருப்பதுபோல் சிலர் மனிதரென்று ப்ரமித்திருக்கலாம் ரத்ன பரீக்ஷை தெரிந்தவன் உள்ளபடியே யறியுமாப்போலே நாங்கள் அவ் வீசனது திருநாமங்களை மறந்திருப்பவர்களை மனிதர்களல்லரென்றே நினைக்கிறோமென்றார்.

நாம் செய்யவேண்டுவதை உணர்த்துகிறார் பின்னடிகளில். ஒவ்வொருயுகங்களிலும் அவதாரம் செய்து தர்மத்தை நன்றாய் ஸ்தாபித்துக்கொண்டிருக்கிற மாதவன் தான் பரன் என்கிற நிச்சயம் கொண்டு அவனுடைய பெயர்களைச் சொல்லுவதுதான் நமது கடமை. ஆதலால் அவனது பேர்களை சொல்லுவதுதான் நமக்கு உய்வதோருபாயம் என்று நினைப்பாய்; என்று தமது நெஞ்சுக்குத் தெரிவிப்பதுபோல் நமக்குத் தெளிவித்தார்.

உளரென் றிருமாவா ருண்டில்லை யென்று
தளர்தல தனருகும் சாரார்— அளவரிய
வேதத்தான் வேங்கடத்தான் விண்ணோர் முடிதோயும்
பாதத்தான் பாதம் பயின்று. (45)

அளவு அரிய	அளவிடமுடியாத	விண்ணோர்	நித்ய ஸூரிகளுடைய
வேதத்தான்	வேதங்களால் பிரதி பாதிக்கப் பட்ட வனும்	முடிதோயும்	கிரீடங்கள் உறைத்திருக்கும்
வேங்கடத் தான்	திருவேங்கடத்தில் கோயில் கொண்டவனும்	பாதத்தான்	திருவடிகளையுடைய விஷ்ணுவினுடைய
		பாதம்	திருப்பாதங்களை

பயின்று	ஆச்ரயித்து	இல்லை	இப்பொழுது லேயெ
உளதென்று	நமக்கு பணமிருக்கிறதென்று	என்று	
இருமாவார்	கர்வமடைய மாட்டார்கள்	தளர்தல்	துக்கப்படுகிறது
		அதன் அருகும்	என்கிற தன்மை ஸமீபத்தில்
உண்டு	ஏற்கனவே பணம் இருந்தது	சாரார்	நெருங்கமாட்ட

பங்கயக் கண்ணனைப் பயிலுமவர்கள் பணத்தின் லாபால களில் கண்வைக்கமாட்டார்களென்கிறார்.

உளதென்று:—அநந்தா வை வேதா: என்று அளவிடமுடி தவைகளான வேதங்களிலே பரனென்று ஓதப்பட்டவனும் ட ஜேர்கள் காணும்படி திருவேங்கடத்தில் வந்து கோயில் கொ வனும், நித்யஸூரிகள் தங்கள் முடியிலே தரித்த கிரீடங்கள் ஓ பிறளும்படி வணங்கும் பாதங்களையுடையவனுமான ஸ்வாமி திருவடிகளை அடைந்து அத்திருவடிகளையே தாரக போஷகபே யங்களாகக் கொண்டவர்கள் தங்களுக்குச் செல்வமிருக்கிறதெ கர்வமடையமாட்டார்கள். இருந்த பணம் நஷ்டமானாலும் வரு மாட்டார்கள். அவர்கள் ஈச்வரன் ஒருவனே அழிவில்லாதவ அவன் ஒருவனே நம்மை எக்காலத்திலும் காப்பாற்றும் த என்று எண்ணுகிறவர்களாதலால் அழியும் தன்மையுள்ள பண "நின்னையே தான் வேண்டி நீள் செல்வம் வேண்டாதான் தன் யே தான் வேண்டும் செல்வம்" என்கிறபடி தங்களைத் தா வந்து கிட்டினாலும் அதனால் கர்வமடையமாட்டார்கள். தர் னன்றோ புதிதாகப் பணம் கிடைத்தால் மாதா பிதாக்களையும் வையும் அவமதித்துப் பலபடியாகப் பாய்ந்து குதிப்பான்.

நித்ய தரித்ரனாயிருப்பவனுக்குப் பணமில்லையென்கிற வரு மதிகமாய் உண்டாகாது. ஒருகால் மிகுந்த பணத்துடனிரு பிறகு அதை யிழந்தவன் படும் துயரம் அளவற்றது. அங்ஙன மாதவன் பாதம் பயின்றவர் இழந்த பணத்திற்கும் சோகியார்க சிலர் செல்வத்தைப் பறிகொடுத்தால் முதலில் வருந்திப் பிறகு தே தலடைவார்கள். அப்படிக்குமின்றி தளர்ச்சியின் அருகேயே செ

லார்கள். ந ப்ரஹ்ருஷ்யேத் ப்ரியம் ப்ராப்ய நோத்விஜேத் ப்ராப்ய சாப்ரியம் | ஸ்திரபுத்தி ரஸம்மூடோ ப்ரஹ்மவித் ப்ரஹ்மணி ஸ்தித: || ஸமலோஷ்டாச்மகாஞ்சன: || விரும்பிய பொருளைப் பெறுங்கால் ஸந்தோஷமடையான். விருப்பமற்றதைப் பெறுங்கால் துயரப்படான். ஸ்திரபுத்தியுள்ள மயக்கமற்ற பிரமஞானி பிரமத்தில் நிலையாய் நிற்கிறான். (ஓட்டையும் கல்லையும் பொன்னை யும் ஒன்றாகவே காண்கிறான்). என்ற கீதாசார்யன் வார்த்தை யின்படியிலே நிற்கிறான். ஆகவே பரமனடிபணிந்த பகவர்கள் இன் பந்தரு பெருவீடு வந்தெய்திலென்? எண்ணிறந்த துன்பந்தரு நிர யம் பல சூழிலென்? என்று நினைத்து பகவதநுபவத்திலே இழிந்து உகந்து நிற்பார்களென்றபடி.

பயின்ற தரங்கம் திருக்கோட்டி பன்னாள்
பயின்றதுவும் வேங்கடமே பன்னாள்—பயின்ற
தணிதிகழும் சோலை யணி நீர்மலையே
மணிதிகழும் வண்தடக் கை மால். (46)

மணி திகழும்	நீலரத்னம் போன்ற திருமேனியையும்	பயின்றதுவும்	உகந்து வஸித்த துவும்
வண் தடக்கை	தானத்தினால் நீண்ட கைகளையுமுடைய	வேங்கடமே	திருமலையே
		பன்னாள்	வெகுகாலம்
மால்	ஸர்வேச்வரன்	பயின்றது	மகிழ்ந்துறைந்த விடம்
பயின்றது	விரும்பிவஸித்தது	அணிதிகழும்	அழகு விளங்கும்
அரங்கம்	ஸ்ரீ ரங்கமும்	சோலை	சோலைகளையுடைய
திருக்கோட்டி	திருக்கோட்டியூரும்.	அணி	அலங்காரமான
பன்னாள்	பலகாலம்	நீர்மலை ஏ	திரு நீர்மலை என் கிற திருப்பதியே.

இப்படித் தன்னடியார்களைத் தன் குணங்களில் உகக்கும்படி செய்தும் மற்ற சில்லறைப் பொருள்களில் கண்ணோட்டமுண்டா காதவண்ணம் செய்கிறவனுமான ஸர்வேச்வரனை நினைந்துருகி, அவன் அனைத்துலகுமுய்யும் வண்ணம் அனுகிவஸிக்கும் திருப்பதி களைப் பேசிக் கிருதகிருத்யராகிறாரிப்பாட்டில்.

பயின்றது:— நித்ய ஸூரிகளால் நிறைந்த கலங்காப் பெ நகரிருக்கச் செய்தேயும் சிறிதும் வெறுப்பின்றி உகப்புடன் திரு ரங்கம், திருக்கோட்டியூர், திருவேங்கடம், இப்புவிக்கு ஆபரண போன்ற சோலைகள் நிறைந்த திருநீர்மலை முதலிய பல திவ்யதேச களில் பல நாட்களாய் வாஸம் செய்கிறான் காண். அவ்வர்ச்சா மாதிகளிலும் அவனது திருமேனி மரகதமணிபோல் விளங்குகிறத் திருக்கைகளும் கொடுத்துக் கொடுத்து நீண்டுகிடக்கின்றன. அர் கைகளிலே குணபூர்த்தியைப் பாரீர்; என்று பலபடியாலும் அவ ருளி உகக்கும் திருப்பதிகளைப் பேசித் தன்யாராகத் தம்மை நினை கிறார்.

அணிதிகழும் சோலை. திருமாலிருஞ்சோலை என்று பிரித்து. சொல்லலாகவுமாம்.

மாலை யரியுருவன் பாதமல ரணிந்து
காலை தொழுதெழுமின் கைகோலி—ஞாலம்
அளந் திடந் துண்டுமிழ்ந்த வண்ணலை மற்றல்லால்
உளங் கிடந்த வாற்று லுணர்ந்து (47

ஞாலம்	பூமியை	ஆற்றால்	பூஜிக்கவேண்டும் ப்ரகாரத்தால்
அளந்து	திருவடியால் அளந்தும்	உணர்ந்து	நன்றாய் தெரிந்து கொண்டு
இடந்து	பாதாளலோகத்திலிருந்து உயரே தூக்கியும்	அரி உருவ	நரசிங்கமாய்த் தோன்றினவப்பெருமானது
உண்டு	சாப்பிட்டும்		
உமிழ்ந்த	வெளிப்படுத்தினவனுமான	பாதமலர்	திருவடித் தாமரைகளில்
அண்ணலை	ஸ்வாமியை	மாலை	புஷ்பமாலையை
அல்லால்	நான் சொன்னதைத் தவிர்த்து	அணிந்து	ஸமர்ப்பித்து
		காலை	விடியற்காலையில்
மற்று	வேறான		
உளம் கிடந்த	உங்கள் மனத்திலிருக்கிற	கைகோலி	கைகளைக் கூப்பிக் கொண்டு
		தொழுது	வணங்கி
		எழுமின்	உஜ்ஜீவியுங்கோள்,

ஸர்வேச்வரன் வாத்ஸல்யத்தால் பல திவ்ய தேசங்களில் உகந்து வாஸம் செய்கிறுனென்றபின் எல்லோரும் அவனை ஆச்ரயிங்கோளென்கிறுர்.

மாலை:— எம்பெருமான் நாமெல்லாரும் நன்மையையடையும் பொருட்டுப் பரமஸ்லபனுய் பற்பல திவ்யதேசங்களில் எழுந்தருளியிருக்கிறுன். அவனிடம் சென்று, ஹிரண்யாக்ஷனுல் அபஹரிக்கப்பட்ட பூமியைத்தூக்கி எடுத்துவந்தவனே! மஹாபலியிடம் மாணியாய்ச் சென்றிரந்து பூமியை அளந்தவனே! ப்ரளயத்திலிருந்தும் இப்பிரபஞ்சத்தை மீட்டு தன் வயிற்றில் வைத்துக் காத்தவனே! பிறகு வெளிநாடு காண வுமிழ்ந்தவனே; என்று பலவாருக வவன் செய்த வுபகாரங்களையெல்லாம் பேசித் துதியுங்கோள். இப்படி அவன் செய்த பொதுவான வுபகாரங்களைத் தவிர தனித்தனியே உங்களுக்கு அவன் செய்தருளிய உபகாரங்கள் பல விருக்கும். உங்களுக்குச் சொந்தமான பல குடும்ப ஸம்ருத்திகளும் ஸர்வேச்வரனுல் கொடுக்கப்பட்டனவாதலால் அவைகளையும் சொல்லித்துதியுங்கோள். இப்படி நான் உபதேசித்ததைத்தவிர்த்து உங்கள் மனத்திலிருக்கும் சில வுபகாரங்களையும் குணங்களையும் சொல்லித்துதித்து அவன் திருவடிகளில் புஷ்பமாலைகளை ஸமர்ப்பித்து கைகளைக் கூப்பிக்கொண்டு ஸேவித்து ஆத்மலாபத்தை யடையுங்கோள்; என்று ஸம்ஸாரிகளனைவர்க்குமுபதேசித்தார்.

அரியுருவன்:— திவ்ய தேசங்களில் பெரும்பாலும் ஸ்ரீ ராம க்ருஷ்ணந்ருஸிஹ்ம வாராஹாதிகளான விபவாவதாரத் திருமேனியுடனேயே பெருமான் ஸாந்நித்யம் செய்வதால், அவற்றுள் ஒரு திருமேனியைக் காட்டுகிறுர் அரியுருவன் என்று. ந்ருஸிஹ்மன் என்பது ஆங்காங்கு காணப்படும் திவ்யமூர்த்திகளனைத்துக்குமுபலக்ஷணம்.

காலை:—ஸத்வோத்தரமான காலமானதால் விடியற்காலையில் ஸேவியுங்கோள் என்றபடி.

உணர்ந்தாய் மறைநான்கு மோதினாய் நீதி
மணந்தாய் மலர்மகள் தோள்மாலே—மணந்தாய்போ
வேயிருஞ்சாரல் வியலிருஞாலம் சூழ்
மாயிருஞ் சோலை மலை. (48

மாலே	ஸர்வேச்வரனே! நீ	வியல் இரு	ஆச்சரியகரமயும் சாலமாயுமிருக்கிற
மறைநான்கும்	நான்கு வேதங்களையும்	ஞாலம் சூழ்	பூமியிலுள்ளவர்களால் சூழப்பட்டதும்
உணர்ந்தாய்	அறிந்தாய்	மா—இரும் சோலை	உயர்ந்தும் பரவியுமிருக்கிற சோலைகளால் சூழப்பட்டதுமாக
நீதி	ஸ்மிருதிகளையும்	மலை	திருவேங்கட மலையிலே
ஓதினாய்	ப்ருவ்ருத்திப்பித்தாய்	போய்	சென்று
மலர் மகள் தோள்	லக்ஷ்மீ தேவியினுடைய திருத்தோள்களை	மணந்தாய்	சேர்ந்தாய்.
மணந்தாய்	ஆலிங்கனம் செய்துகொண்டாய்		
வேய் இரும் சாரல்	மூங்கில்களால் நிறைந்த பார்ச்வங்களையுடையதாயும்		

எம்பெருமானைத் துதிசெய்யும் பிரகாரத்தை நமக்குக் கற்பி கிறார்போலுகிப்பாட்டால்.

உணர்ந்தாய்:— கல்பங்கள்தோறும் வேதங்களை மறவா படி ஞாபகத்தில் வைத்துக்கொண்டு பிரமனுக்கு உபதேசம் செய் வனே! நான்கு புருஷார்த்தங்களுக்கும் ஸாதனமான வேதங்களை கொடுத்தருளினவனே! மன்வாதி ஸ்ம்ருதிகளையும் ப்ரவ்ருத்திப் பி தருளினவனே! பிரஜைகளெல்லாம் உன்னை ஆச்ரயிப்பதற்குறு பான புருஷகாரபூதையான பிராட்டியை மணந்தவனே! பெரிய பிராட்டியாருடைய திருத்தோள்களை ஸ்ம்ச்லேஷிப்பதால் ஆச்ரித களுடைய அபராதங்களை மறந்திருப்பவனே! இத்தனை யுபகாரங்கள் செய்ததுமன்றி இம்மண்ணோர்கள் கண்களால் கண்டனுபவிக்கலா படி மூங்கில்கள் நிறைந்துள்ள வடிவாரங்களையுடையதும் ஆச்சரியப் படிப்படி பூமியிலுள்ளவர்களால் பிரதக்ஷிணம் செய்யப்பட்டு வணங்

கப்படுகிறதுமான திருமலையைச் சேர்ந்துவந்து வாஸம் செய்கிற வனே! என்று அவன் செய்த உபகாரங்களை விண்ணப்பம்செய்து தொழுதெழுமின் என்று உபதேசம் செய்தனர்.

உணர்ந்தாய்:— வேதங்கள் ஈச்வரனைப்போல் நித்யமானவை. மற்றவஸ்துக்களைப்போல் அழியக்கூடியவையல்ல. முந்தின கல் பத்தின்படி•முன் ஆறு பூர்வியுடனேயே அறிந்துவைத்து மறுகல் பத்தின் ஆதியில் அப்படியே பிரமனுக்குபதேசிக்கிறுனென்பதன்றி அவன் வேதங்களை ஸ்ருஷ்டிக்கிறுனல்லனென்பது பற்றி உணர்ந் தாய் என்றது.

மாயிரும் சோலை மலை:— மிகவும் உயர்ந்த விருக்ஷங்களையு டையதும் மிகவும் விசாலமாயுள்ள சோலைகளுடன் கூடினதுமான திருவேங்கடமலை என்றபடி. அல்லது உயர்ந்த பரம்பின சோலைகளு டன் கூடின திருமாலிருஞ்சோலை மலையைச் சொல்லிற்றுகவுமம்.

வியலிருஞாலம்சூழ்:— நாள்தோறும் தென்றுடும் வடநாடும் திரண்டுபோய்த் திருமலையை வலம்வந்து தொழுவதைக் கண்டால் பெருவியப்பைத் தருகிறது என்றதாம்.

மலையேழும் மாநிலங்களேழு மதிர
குலை சூழ் குரை கடல்களேழும்—முலைசூழ்ந்த
நஞ்சுரத்துப் பெண்ணை நவின்றுண்ட நாவனென்று
அஞ்சாதென் னெஞ்சே யழை. (49)

என்நெஞ்சே	எனது மனமே!		
மலை ஏழும்	ஏழு பர்வதங்களும்	நஞ்சு	
மாநிலங்கள் ஏழும்	பூமியிலடங்கிய ஸப்தத்வீபங்களும்	உரத்து	மிகுந்த பலமுள்ள
		பெண்ணை	பூதனையை
குலைசூழ்	சுற்றிலும்கரையால் சூழப்பட்டதாயும்		மழலையாகப் பேசிக் கொண்டு
குரை	சப்தம் செய்து கொண்டுமிருக்கிற	உண்ட	முடித்த
		நாவன் என்று	நாக்கையுடையவனென்று
கடல்கள் ஏழும்	ஏழு ஸமுத்திரங்களுட		பயப்படாமல்
அதிர	நடுங்கி ஆடும்படி		கூப்பிடுவாயாக.
முலை	கொங்கைகளில்		

இப்படித்திருமலையெம்பெருமானை யாச்ரயித்தபின் அவன் திருநாமங்களைச் சொல்லியழைக்க வேணுமென்கிறார்.

மலையேழும்:— நெஞ்சே! அவன் இங்ஙனம் நாட்டிற்குச் செய்த வுபகாரங்களை யனுஸந்தித்த பின்பும் நாம் வெறுமனே வீற்றிருப்பது தகுமோ; அவன் பேர்களை ஏழுலகும் கேட்கும் படி சொல்லி அவனை அழைக்கவேண்டாமோ! பூதனையின் நஞ்சு தீண்டிய முலையை உண்டு அவளுயிரை மாய்த்த கண்ணனே என்று ஏழுகுலபர்வதங்களும் ஏழுத்வீபங்களும் ஏழு கடல்களும் அதிரும்படி உயர்ந்த குரலில் சொல்லி அவனைக் கூப்பிடுவாயாக. நட மிடம் பிரதிபந்தக வர்க்கங்கள் பல கிடக்கின்றனவே; என்ன செய்வது: என்று நீ பயப்படவேண்டாம். அவைகள் பூதனையைப் போல் மாய்ந்துவிடும். அந்த தேவாதிதேவனை நம்முதத்தைவாயால் எங்ஙனம் சொல்வது என்று நீ அஞ்சவேண்டாம், அவன் தனது திருநாமங்களைச் சொல்லுவதற்கென்றேதான் வாகிந்திரியத்தைப் படைத்திருக்கிறான். நாடுநகரமும் நன்கறிய நமோ நாராயணாயை வென்று பாடுமனமுடைப் பத்தருள்ளீர் வந்து பல்லாண்டு கூறுமினே. என்றது போல் உலகங்களெல்லாம் அதிரும்படியாக உச்சஸ்வரத்துடன் கூவியழையுங்கோளென்கிறார்.

நவின்றுண்ட நாவன்:— குழந்தைகள் முலையுண்ணும் பொழுது ஸந்தோஷத்தால் மதலைச் சொற்களைச் சொல்வதுபோல் கண்ணனும் மதலைச்சொற்களைச் சொல்லிக்கொண்டே பூதனையின் முலையுண்டானென்க.

மலையேழும்:— இமயம், மந்தரம், கைலை, வடவிந்தம், நிடதம் ஹேமகூடம், நீலகிரி என்பவை.

மாநிலங்களேழும்:— நாவலந்தீவம், அரலித் தீவம், குசையின் தீவம், க்ரவுஞ்சத் தீவம், சால்மலித் தீவம், தெங்கின் தீவம் புஷ்கரத் தீவம்.

கடல்களேழும்:— உப்பு, கரும்பு, மது, நெய், பால், சுத்தஜலம் என்று கடல்களேழுவகைடாகும்.

அழைப்பன் திருமாலை யாங்கவர்கள் சொன்ன
பிழைப்பில் பெரும்பெயரே பேசி—இழைப்பரிய
வாயவனே யாதவனே யென்றவனை யார்முகப்பும்
மாயவனே யென்று மதித்து (50)

இழைப்பு அரிய ஆயவனே	நினைக்கமுடியாதபடி பெண்களைப் படுத்தும் இடையனே
யாதவனே என்றும்	யதுகுலத்தில் பிறந்தவனே யென்றும்
மாயவனே என்றும்	ஆச்சரியமான லீலைகளைச் செய்பவனே யென்றும்
மதித்து	அவனை நினைத்துக் கொண்டாடி
ஆங்கு	அந்த திருவாய்ப்பாடியில்
அவர்கள்	அந்த கோபஸ்த்ரீகள்
சொன்ன	சொல்லிய
பிழைப்பு இல்	கேட்டு ஜீவிக்கமுடியாத (மனத்தை உருக்குகிற)
பெரும் பெயரே	பெருமையுள்ள திருநாமங்களையே
பேசி	சொல்லி
திருமாலை அவனை	ச்ரிய: பதியான அந்த தேவனை
யார் முகப்பும்	எல்லார் முன்னிலையிலும்
அழைப்பன்	கூப்பிடுவேன்.

கீழ்ப்பாசுரத்தின்படியே தான் வெட்கத்தை விட்டு எல்லார் முன்னிலையிலும் அவன் பெயரைச் சொல்லி யழைக்கிறேனென்கிறார்.

அழைப்பன் :— பரமபத நாதனா யிருந்து வைத்துத் திருவாய்ப்பாடியில் வந்து இடைப்பெண்களை நினைக்கவரிதானபடி துன்பப்படுத்தினவன்; அதுவுமன்றிக்கே ஆச்சரியகரமான பற்பல விளையாடல்களைச் செய்தவன்; என்று பலபடிகளாலும் அவனே பரனென்று ஆங்கே இடைப்பெண்கள் சொல்லியழைத்த பெயர்களையே நானும் சொல்லியழைக்கிறேன். என் முன்னிலையில் யார் இருந்தாலும் நான் லஜ்ஜைப்படமாட்டேன். அத்தா அரியே என்றுன்னை யழைக்கப் பித்தாவென்று பேசுவாரே என்கிற கவலையுமெனக்கில்லை ஆதலால் யாவர் முன்னிலையிலும் அஞ்சாது அவனை யழைப்பேன்.

ஆங்கவர்கள்:— கீழ்ப்பாட்டில் பூதனையின் வரலாறு ப்ரஸ்து மானதால் இங்கு ஆங்கு என்பதற்கு திருவாய்ப்பாடி என் பொருள்கொண்டு இடைப்பெண்கள் என்று வரையலாயிற்று பிழைப்பில் பெரும்பெயரே பேசி, த்ருடியுகாயதே த்வாமபச்ய தாம், ஊழியில் பெரிதால் நாழிகையென்னும் என்றும் சொ லும்படி ஒரு நொடிப்பொழுது பிரிந்தாலும் அலற்றப் பண்ணு பியல்பினனுடைய திருநாமங்கள். அல்லது ஸௌசீல்ய ஸௌல யாதி குணங்களைச் சொல்லுகிறபடியால் வல்வினையேனை யீர்கின் குணங்கள் என்றபடி காதில் கேட்டவாறே மனத்தை உருக செய்யும் திருநாமங்கள் என்னவுமாம்.

பெரும் பெயர்களாவன:— கோவிந்தன், கோபாலன், வெண் ணையைத் திருடினவன், குடமாடி, தாமோதரன், மத்தாலடிபட் டன் என்பன போன்றனவாம். பரத்தமனுடைய நீர்மையை காட்டுகிறபடியால் அவைகள் பெரும் பெயராயின.

மதிக்கண்டாய் நெஞ்சே மணிவண்ணன் பாதம்
மதிக்கண்டாய் மற்றவன் பேர்தன்னை —மதிக்கண்டாய்
பேராழிநின்று பெயர்ந்து கடல் கடைந்த
நீராழி வண்ணன் நிறம். (51)

நெஞ்சே	மனமே!
மணி வண்ணன் பாதம்	மரகத மணிபோன்ற நிறங்கொண்ட பெருமான் திருவடிகளை
மதிக்கண்டாய்	நினைக்கக்கடவாய்.
மற்று	மேலும்
அவன் பேர் தன்னை	அவனது திருநாமங்களை
மதிக்கண்டாய்	நினைக்கக்கடவாய்
பேர் ஆழி நின்று	பெரியஸமுத்திரத்திலிருந்து
பெயர்ந்து	எழுந்திருந்து
கடல் கடைந்த	கடலை மதனம் செய்
நீர் ஆழி வண்ணன்	ஜலம் நிறைந்துள்ள கடல் போன்ற திரு மேனி [illegible] வனது
நிறம்	திருமேனியின்நிறத்தை
மதிக்கண்டாய்	சிந்திக்கக் கடவாய்.

இடைச்சிமார்கள் சொல்லியழைத்த திருநாமங்களாலேயே நானும் அவ்விசனை யார்முகப்பும் கூவியழைப்பேனென்ருர். இதில் இங்ஙனமே தனக்கு யாத்திரை நடக்கவேணுமென்று விரும்பி தன் நெஞ்சுக்குத் தெரிவிக்கிருர்.

மதிக்கண்டாய்:— உலகில் மனிதர்கள் முதலில் யாதொன்றை மனத்திஞல் நினைக்கிருர்களோ அதைத்தான் வாயால் பேசுகிருர்கள். அதைத்தான் நடத்தையிலும் அனுஸரிக்கிருர்கள். ஆகலால் முதலில் நெஞ்சைத்தான் திருத்தவேண்டும். ஆனது பற்றி நெஞ்சைக்குறித்துப் பேசுகிருராயிற்று.

நெஞ்சே! நீ மரகத மணிபோல் தாபங்களைப்போக்கும் கண்ணுக்கினிய கருமுகில் வண்ணனுடைய திருவடிகளையே எப்பொழுதும் நினைத்துக்கொண்டிரு; மேலும் அவனுடைய நாமங்களாயிரத்தையும் நாவால் நவின்றேத்தும்படி அவைகளையே சிந்தித்துக் கொண்டிரு; பாற்கடலில் பள்ளிகொண்டிருந்து தேவர்களுக்காக எழுந்திருந்து அக்கடலையே தானே நின்று கடைந்து, அக்கடல் போன்ற நிறமுள்ள பெருமான் திருவடிகளைத் தலைக்கணியாகக் கொள்வதற்காக அத்திருமேனி நிறத்தையே அனுஸந்தித்திரு என்று உணர்த்தினார்.

தனது ஸுகத்தையும் பேணுது பிரயோஜனாந்தரபரர்களான தேவர்களுக்கும் திருமேனி நோவ வேலைசெய்து காரியங்களைத் தலைக்கட்டிவைக்கிருனென்றும், த்யானம் செய்வதற்கு ஸுலபமான அழகான வுடம்புள்ளவன் என்பதும் பின்னடிகளுக்குத் திரண்டபொருள்.

பெயர்ந்து:— திருப்பாற் கடல் நாதனுடைய திருமேனியழகை கிடந்ததோர் கிடக்கை கண்டும் எங்ஙனம் மறந்து வாழ்கேன் என்றபடி யநுபவிக்கப்பெருது எழுந்திருந்து வந்து எங்களுக்குக் காரியம் செய்துகொடுக்கவேணுமென்று வேண்டவும் உடனே எழுந்திருந்து காரியம் செய்தானென்ற மஹாகுணம் வெளிப்படுத்தியதாகும்.

நிறங்கரியன் செய்ய நெடுமலராள் மார்வன்
அறம்பெரியனு ரதறிவார்—மறம் புரிந்த
வாளரக்கன் போல்வானை வானவர் கோன் தானத்து
நீளிருக்கைக் குய்த்தான் நெறி. (52)

நிறம் கரியன்	கருத்த நிறமுள்ளவனும்	வாள் அரக்கன் போல்வானை	வாள் என்கிற ஆயுதத்தையுடைய ராவணனைப்போன்ற மஹாபலியை
செய்யநெடு மலராள் மார்வன்	சிவந்தும் பெரியதாயுமிருக்கிற தாமரையில் வாஸம் செய்கிற லக்ஷ்மியை மார்விலே தரித்தவனும்	வானவர்கோன் தானத்து	இந்திரனுடைய ஸ்தானத்தில்
அறம் பெரியன்	தர்மத்தால் சிறந்தவனும்	நீள் இருக்கைக்கு	வெகுகாலம் வஸிப்பதற்காக
மறம்புரிந்த	கொடிய கார்யங்களைச் செய்துகொண்டிருக்கிற	உய்த்தான்	[illegible]ல் வைத்[illegible]
		அது நெறி	அந்த தயையின் மார்க்கத்தை
		ஆர் அறிவார்	யார் தெரிந்துகொள்ள வல்லர்

தம் நெஞ்சுக்கு உபதேசித்தபின் அருளின் பெருமையைப் பேசுகிறாரிதில்.

நிறம்:— ஆச்ரிதர்களுடைய தாபங்களைப் போக்குமதான கருத்தநிறமுள்ள திருமேனியை யுடையவனும், ஆச்ரிதர்கள் அஞ்சாமல் அணுகும் வண்ணம் பெரியபிராட்டியாரைத் திருமார்விலே தரித்திருப்பவனும், அந்தப் பெரிய பிராட்டியாரின் போக மயக்குகளால் ஆந்ருசம்ஸ்யம் என்கிற மஹாகுணத்தைக் கைக்கொண்டவனுமான ஸர்வேச்வரனுடைய ஔதார்யத்தை யார் அறிவார். அவனது அருள்புரியும் ப்ரகாரத்தை ஒருவராலும் அறியமுடியாது என்றபடி. இந்த மஹாகுணத்தை நாமறிந்து அவனை அடையும்படிக்கு ஒரு உதாஹரணம் காட்டுகிறார் பின்னடிகளால். தனது வலிமையால் இந்திரனையும் வென்று மூன்றுலோகங்களை

யும் ஆக்ரமித்துக்கொண்டு அரசு புரியும் மஹாபலியை க்ரூரமான செயல்களையே செய்துவந்த ராவணனைப் போல் வதைக்கவேண்டியிருக்க, அப்படிச்செய்யாமல் அவனிடம் மூவடி மண்ணிரந்து உலகங்களையளந்து அம்மஹாபலிக்குத் தன் திருவடியையும் கொடுத்து, இப்பொழுது நடக்கும் வைவஸ்வதமன்வந்தரத்திற்குப் பிறகு ஸாவர்ணிமன்வந்தரத்தில் இந்திர பதத்தையும் கொடுப்பதாகப் பிரதிஜ்ஞை செய்து அதற்காகப் பாதாளலோகத்தில் அவனை ஸகல பந்துக்களுடனும் ஒருவிதமான கஷ்டமுமின்றி ஸுகமாக அமர்த்தியிருக்கிறான். இப்படி ரிபூணுமபிவத்ஸல என்றபடி சத்ருக்களிடமும் வாத்ஸல்யத்துடன் அருள்புரியும் தன்மை மற்றொருவரிடம் காணமுடியுமோ? ஆதலால் அவனது குணத்தையறிந்து யாவரும் ஆச்ரயிக்கவேணுமென்பது அறிவிக்கப்படுகிறது.

ஏஷமேப்ராபித: ஸ்தானம் துஷ்ப்ராபமமரைரபி। ஸாவர்ணேரந்தரஸ்யாயம் பவிதேந்த்ரோ மதாச்ரய:॥ தாவத்ஸுதல மத்யாஸ்தாம் விச்வகர்ம விநிர்மிதம்। தநாதயோ வ்யாதயச்ச க்லமஸ்தந்த்ரா: பராபவ:। நோபஸர்கா நிவஸதாம் ஸம்பவந்தி மமேக்ஷயா॥ இந்த்ரஸேன மஹாராஜ யாஹிபோ பத்ரமஸ்துதே। ஸுதலம் ஸ்வர்க்கிபி: ப்ரார்த்யம் ஜ்ஞாதிபி: பரிவாரித:॥ இம்மாவலி தேவர்களாலும் அடையமுடியாத பரமபதத்தை (இறுதியில்) அடையப் போகிறான். (அதற்குள் வரப்போகும்) ஸாவர்ணி மந்வந்திரத்தில் இவன் இந்திரனுயிருக்கப்போகிறான், அதுவரையிலும் விச்வகர்மாவால் உண்டுபண்ணப்பட்ட ஸுதலலோகத்தில் வாஸம்செய்யட்டும்.

என்னுடைய கடாக்ஷத்தால் அங்கே வஸிப்பவர்களுக்கு தநமில்லாமையும் வியாதிகளும் உடம்புக்கு ஓய்வும் சத்ருக்களின் ஆக்ரமிப்பும் சத்ருக்களால் அவமதிப்பும் நாசமும் இவைமுதலான துக்கங்களெல்லாம் உண்டாகாது. ஓ இந்திரஸேனனென்னும் மாவலியே! விண்ணவர்களாலும் வேண்டப்படும் ஸுதல லோகத்திற்கு உனது பந்துக்களுடன் செல்வாயாக; உனக்கு மங்களமுண்டாகக்கடவது என்று அவன் அநுக்ரஹம் செய்ததை இங்கு நினைக்கவேண்டும்.

மிகவும் கொடியவர்களாயிருப்பவரிடமும் கரைந்த மனமுடை வனுயிருக்கும் தன்மையென்ற ஆந்ருசம்ஸ்ய குணம் இப்பாட்டில் பேசப்பட்டதாகும்.

நெறியார் குழல்கற்றை முன்னின்று பின்தாழ்ந்து
அறியா திளங்கிரியென் றெண்ணி—பிரியாது
பூங்கொடிகள் வைகும் பொருபுனல் குன்றென்னும்
வேங்கடமே யாம் விரும்பும் வெற்பு. (5

நெறியார்	திருமலை யேறும் மார்க்கத்தி விருப்பவர்களுடைய
முன்னின்று	முன் பக்கத்திலிருந்து
பின் தாழ்ந்து	பின்னே தாழ்த்து தொங்குகிற
குழல்கற்றை	தலைமயிர் முடியை
அறியாது	இன்னதென்று தெரிந்துகொள்ளாமல்
இளம் கிரிஎன்று எண்ணி	சிறியமலை என்று நினைத்து
பிரியாது	அவவிடத்தை விடாம
பூங்கொடிகள்	புஷ்பக் கொடிக
வைகும்	வாஸம் செய்யும்
பொருபுனல் குன்று என்னும்	அலையெறிகிற ஜலத்தையுடைய மலையென்று பிரவஹிக்கமா
வேங்கடமே	திருவேங்கட மலைதா
யாம் விரும்பும்	நாம் ஆசைப்படுகி
வெற்பு	மலையாகும்.

ஸ்ரீய: பதியினுடைய அருள்புரியும் தன்மையை அறிந்தேனு யின பின்பு நான் ஆசைப்படும் பொருள் திருமலை ஒன்றுதானென் கிறாரிதில்.

நெறியார்:— எம்பெருமான் திறத்தில் சிறந்த பக்தி பூண்ட வர்கள் அன்னுறையுமிடமான திருமலையில் ஏதாகிலுமொரு வறிவில் லாப் பொருளாகவிருப்பதும் நமக்குப் போக்யமெனக் கருதித் திருமலைக்கெழுந்தருளி மலையினுச்சிக்கிச் செல்லும் மார்க்கங்களிலே நின்று பெருமானைத் தியானம் செய்கிறார்கள். முன்பொருகால் வால்மீகி என்னும் முனிவர் தன்னுடம்பையும் மறந்து தவம்செய் யுங்கால் அவர் உடம்பு முழுவதும் புற்றுமண் மூடிக்கொண்டதென் றும், அங்ஙனம் த்யானம் செய்யப்படும் விஷயத்திலுண்டான

ஈடுபாட்டால் அவருக்கு வால்மீகி என்னும் பெயர் விளங்கிற்றென்னும் நாம் கேட்டிருப்பதுபோல் திருமலையின் வழியில் நின்று அவ்வெம்பெருமானைத் தியானம் செய்துகொண்டிருக்குமவர்கள் சிறிதும் மூச்சுவிடாமலும் சரீரத்தையசைக்காமலும் அசேதனம்போல் நின்று உடம்பையும் மறந்து அப்பரம்பொருளை அனுபவிக்கிறார்கள். அப்போது அங்கேயருகில் வளர்ந்திருக்கும் புஷ்பக்கொடிகள் அவர்களை அசையாமலிருக்கிறகாரணம் பற்றி பக்தர்களென்றறியாமல், அவர்கள் தலையில் மூன்னேவளர்ந்து பின்னே தொங்குகிற குழல்களையும் பார்த்தறியாமல் இதுவும் அசையாமல் நிற்பதொரு சிறுமலை என்றெண்ணி அவர்கள் மீதுபடர்ந்து வளர்ந்து கிடக்கின்றன. இப்படி தன்னுடம்பில் புஷ்பக்கொடிகள் படர்ந்து வளர்வதையும் அறியாமல் பகவத்விஷயத்தில் ஈடுபட்ட பாகவதோத்தமர்கள் பலர் வாஸம் செய்யும் திருவேங்கடமலைதான் அநந்யப்ரயோஜனர்களான நம்போன்றவர்கள் விரும்பும் மலை. அத்திருமலையொன்றே நம்வினைகளைப் போக்கும். அம்மலையில் வாஸம் செய்யும் பெருமானைக் கூட நான் விரும்பவில்லை. அத்திருமலையாழ்வாரையே நான் விரும்புகிறேன் என்றார்.

பொருபுனல் குன்று:— "அருவிசோரும் வேங்கடம்" என்றபடி பலவருவிகள் நிறைந்திருப்பதால் குளிர்ந்தும் தாபஹரமுமாயிருக்கிற திருமலை என்றபடி. புஷ்பக்கொடிகள் வளர்வதற்குத்தக்க ஜலஸம்ருத்தியுள்ள திருமலை என்பது.

வெற்பென்றிருஞ்சோலை வேங்கடமென் றிவ்விரண்டும்
நிற்பென்று நிமதிக்கும் நீர்மைபோல்— நிற்பென்
றுளங்கோயி லுள்ளம் வைத்துள்ளினேன், வெள்ளத்
திளங்கோயில் கைவிடேலென்று. (54)

வெற்பு என்ற	தெற்குத் திருமலை என்கிற	என்றிவ் விரண்டும்	ஆகிய இத்திருப்பதிகளிரண்டும்
இரும் சோலை	திருமாலிருஞ் சோலையென்ன		
வேங்கடம்	வடக்குத்திருமலையான திருவேங்கடமென்ன	நிற்பு என்று	நாம் வாஸம் செய்யுமிடமென்று

நீ மதிக்கும் நீர்மைபோல்	நீ திருவுள்ளமுகந்து கொண்டாடும்தன்மையை உடைத்தாயிருப்பதுபோல்	உள்ளம் வைத்து	மனத்தில் நினைத்து
		வெள்ளத்து இளம் கோயில்	திருப்பாற்கடலென்னும் பாலாலயத்தை
உளம் கோயில்	எனது நெஞ்சமாகிய கோயிலும்	கைவிடேல்	கைவிடக் கூடாதென்று
நிற்பு என்று	நீ அன்புடன்வசிக்குமிடமென்று	என்று உள்ளினேன்	பிரார்த்திக்கிறேன்.

ஆழ்வார் வேங்கடமே யாம் விரும்பும் வெற்பு: என்று திருமலையை விரும்பவே அத்திருமலை யெம்பெருமானும் அத்திருமலையை விட்டுவிட்டு ஆழ்வாருடைய நெஞ்சிலே வஸிக்கவேணுமென்று ஆசைப்படவே அதையறிந்த ஆழ்வார் அப்பெருமானிடம் விண்ணப்பம் செய்கிறார்.

வெற்பு:— ஸ்ரிய: பதியான நாராயணனுடைய அவதாரங்களான விபவ அர்ச்சாதி மூர்த்திகளெல்லாவற்றிற்கும் வெள்ளத்துவில் துயிலமர்ந்த வித்து எனப்படும் திருப்பாற்கடல் நாதனே மூலகந்தமெனப் பெரியோர்கள் கொள்கை. அப்பெருமான் திருப்பாற்கடல், திருவேங்கடம் திருமாலிருஞ்சோலை முதலிய திருப்பதிகளில் வாஸம் செய்வதின் கருத்து, தாம் பெருங்கோயிலாகக்கருதும் தன்னடியார்களின் நெஞ்சில் புகுந்து வாஸம் செய்யவேண்டுமென்பதுதான். தன்னையே விரும்பியிருக்கும் மெய்யடியார்கள் எப்பொழுது அகப்படுகிறார்களோ அப்போது இவர்களது நெஞ்சிலே புகவேண்டுமென்று நினைத்துத் திருவரங்கம் முதலான திருப்பதிகளில் வாஸம் செய்கிறான். அப்படிப்பட்டமெய்யடியார்கள் கண்ணில் தென்பட்டதும் தான் உகந்திருக்கும் பதியைவிட்டு அவர்கள் ஹ்ருதயத்திலே தாவிப்புகுந்து வஸிக்கு மியல்வினன் அப்பெருமான். ஆகலால் இப்பூதத்தாழ்வாரும் எம்பெருமான் திருப்பதிகளை விட்டுத் தம்நெஞ்சில் வஸிக்கவாசைப்படவே நீ என்னெஞ்சை விரும்பிப்போந்தாலும் அத்திருப்பதிகளைக் கைவிடாதே; அவைகளில் இவ்வளவு நாள் உகந்து வாஸம் செய்ததாலன்றோ இன்று என் நெஞ்சில் வருவதற்குப் பிரஸக்தி ஏற்பட்டது. அத்தகைய

க்ருதஜ்ஞதை அடியேன் பால் இருந்தாலன்றோ நான் பிழைப்பேன். ஆகையால் அடியேனுடைய நெஞ்சிலே கோயில் கொண்டது போல் அத்திருப்பதிகளிலும் நீ அன்புடன் அமர்ந்திருக்க வேணுமென்று பிரார்த்தித்தார். இங்கு ஒரு சமத்காரமான வர்ணனையொன்று கவனிக்கத்தகுந்தது. அதாவது இக்காலத்திலும் கோயில்களில் அர்ச்சாமூர்த்திகளுக்கு ஜீர்ணோத்தாரம் செய்வதற்குப் பிரஸக்தியே ற்பட்டால் பாலாலயப் பிரதிஷ்டைசெய்வது (ஒருசிறிய மூர்த்தியை நிர்மாணம் செய்து அதைப்பிரதிஷ்டை செய்வது)வழக்கம். பழைய பிம்பம் ஜீர்ணோத்தாரம் செய்யப்படும் வரையில் அப்பெருமான் பாலாலயத்தில் எழுந்தருளியிருப்பன். பிறகு பிரதிஷ்டாகாலத்தில் ஜீர்ணோத்தாரம் செய்யப்பட்ட பழைய பிம்பத்தில் (ஆவாஹனத்தால்) பாலாலயத்தை விட்டு எழுந்தருளி ஸாந்நித்யம் செய்தருளுகிறானென்பதும் நாம் கண்டிருக்கும் விஷயமேயாம். ஆகவே எம்பெருமான் பாலாலயத்தில் எழுந்தருளியிருப்பது பெருங்கோயிலில் வஸிப்பதற்காகவேதான். பெருங்கோயில் கிடைத்தபின்பு பாலாலயத்தில் வாஸம் செய்யப் பிரஸக்தியில்லை அதுபோல் ஆழ்வார்களின் ஹிருதயங்களாகிற பெருங்கோயில்களில் வாஸம் செய்வதற்கென்று திருப்பாற்கடல் திருவேங்கடம் முதலிய திருப்பதிகளில் எம்பெருமான் உகந்தருளினனென்பது பற்றி அத்திருப்பதிகளை பாலாலயமெனக்கொண்டு, என் நெஞ்சென்னும் பெருங்கோயில் உனக்குக்கிடைத்து விட்டபடியால் நீ பாலாலயத்தை விட்டுவிடுவது போல் அத்திருப்பதிகளையும் விடப்பிரஸக்தியுண்டாதலால் நீ அவைகளைக்கைவிடாதே என்று பிரார்த்தித்தபடி.

வடமொழி. பாலாலயம்-தென்மொழி-இளங்கோயில்.

கோயில் கொண்டானதனோடு மென்னெஞ்சகம் என்றும் பனிக்கடலில் பள்ளிகோளைப் பழகவிட்டு ஓடிவந்து என் மனக்கடலில் வாழவல்ல மாயமணாளனென்றும் வந்தநாள் வந்தென்னெஞ்சிடங்கொண்டான், வந்தாயென் மனத்தே வந்து நீ புகுந்த பின்னை எந்தாய் போயறியாய் என்றும் அனுஸந்தித்தமைக்கிணங்க மற்றவாழ்வார்களது நெஞ்சிலமர்ந்தது போல் இப்பூதத்தாருடைய ஹ்ருதயத்திலும் அப்பெருமான் ஆதரவுடன் அமர்ந்தானென்பது

இப்பாட்டின் கருத்து. ஸர்வேச்வரன் திருப்பாற்கடல் திருவே ங்கடம் திருமாலிருஞ்சோலை முதலிய திவ்யதேசங்களில் மகிழ்ச் யுடன் கோயில் கொண்டதுபோல் ஆழ்வார் நெஞ்சிலும் பெ மகிழ்ச்சியுடன் கோயில் கொண்டானென்பது திரண்ட பொருள்.

என்று மறந்தறியே னேழ்பிறப்பு மெப்பொழுதும்
நின்று நினைப்பொழியா நீர்மையால்— வென்றி
அடலாழி கொண்ட வறிவனே, இன்பக்
கடலாழி நீயருளிக் காண். (55

வென்றி	ஜயத்தைத்தருவதாய்	நின்றுநினைப்பு ஒழியா நீர் மையால்	உன்பால் ஸ்திரமா நிற்கிற நினைவு மாற மலிருந்ததினால்
அடல்	கூர் நிறைந்த		
ஆழி	திருச்சக்கரத்தை		
கொண்ட	கையிலே தரித்த	என்றும் மறந் தறியேன்	ஒரு பொழுதும் உ னை மறந்திருந்தே அல்லேன்
அறிவனே	ஸர்வஜ்ஞனை ன் வாமியே		
நீ	இங்ஙனம் பெருமை வாய்ந்த நீ	இன்பம்கடல் ஆழி	அளவில்லாத ஆன தக் கடலையும்
ஏழ் பிறப்பும்	எல்லாப் பிறவிகளி லும்	அருளிக்காண்	(அடியேனுக்கு) அருள் செய்யவே ணும்.
எப்பொழுதும்	எல்லாக்காலத்திலும்		

உன்னை நினைப்பதேவரிதான விப்பிரகிருதியில் உன் நினைவுடன் வாழும்படி செய்ததுபோல் உன்னுடைய ப்ராப்தியளவும் உபகாரம் செய்தருளவேணும் என்று பெருமானை ப்ரார்த்திக்கிறாரிப்பாட்டில்.

என்றும்:— நெருப்புச் சட்டியில் தாமரைமுளைப்பது போல் இப்புவியில் ஈச்வரனைப்பற்றிய நினைவு பிறப்பது மிகவும் அரிது. அவ்வளவு கொடுமையான இந்நிலத்தில் உன்னருளால் உனது நினைவு கிடைக்கப்பெற்றேன். அதிலும் நான் பிறந்தபிறவிகளெல்லா வற்றிலும் உன்நினைவு பெற்றேன். அங்கும் ஜாகரணம் ஸ்வப்நம் ஸுஷுப்தி முதலிய வெல்லா வவஸ்தைகளிலும் உன்னைமறவா தபடி உனது நினைவுடனே யிருக்கிறேன். இப்படி உன்னை நினைத் திருக்கு மியல்பினைக வென்னைச் செய்து முடித்தாய், இதற்கு மே

லுமுள்ள ஹிதங்களையும் நீ செய்தருளவேண்டும். ஆனந்தஸாகரமென்கிற உனது ப்ராப்தியாகிற முக்தியையும் எனக்குத் தந்தருளவேணும். ஏஷ ஹ்யேவானந்தயாதி என்று ஸ்ரீமந்நாராயணனே பரமபதத்தைக் கொடுத்துத் தன்னோடொக்கவருள் செய்வனென்றசாஸ்திரப்படி எனக்குப் பரமபதமாகிற லோகத்தில் இன்பக்கடலையும் அளிக்கவேணுமென்றார்.

நின்று நினைப்பொழியா நீர்மையால்:—உனது கிருபையினால் உன்னுடைய நினைவு மாறாதபடி நான் இருக்கப் பெற்றதன்மையால் என்றுபொருள். எல்லாப் பிறவிகளிலும் எல்லாவவஸ்தைகளிலும் நான் க்ஷேமத்தையடையவேணுமென்று நீ என்னைமறவாமல் நினைத்திருக்கிறபடியால் என்று சிலர் பொருள்வரைவர்.

வென்றி அடலாழி கொண்டவறிவனே:— ஜயசீலமான திருவாழியேந்தின ஸர்வஜ்ஞனே! இத்தால் எம்பெருமான் ஸர்வசக்தனென்றும் ஸர்வஜ்ஞனென்றும் சொல்லப்பட்டதாகும். ஆதலால் எனக்கு மோக்ஷத்தைக் கொடுப்பது உனக்கு எளிதான செயலேயல்லது இயலாதசெயலல்ல என்றும் தெரிவித்தாராயிற்று.

இன்பக்கடலாழி:— இன்பக்கடல் என்பதே போதுமாயிருக்க, கடலாழி என்று சேர்த்துப்பேசியது மோக்ஷானந்தத்தின் அளவற்றமை தோற்றுவதற்காக.

காணக் கழி காதல் கைமிக்குக் காட்டினால்
நாணப் படுமென்றால் நாணுமே—பேணிக்
கருமாலைப் பொன்மேனி காட்டாமுன் காட்டும்
திருமாலை நங்கள் திரு. (56)

திருமாலை	லக்ஷ்மீபதியை	காதல்	ஆசையானது
காண	ஸேவிக்கவேணும் என்கிற	கை மிக்கு காட்டினால்	நாளுக்குநாள் மேன் மேலும் அதிகமானால்
கழி	மிகுந்த		

நாணப்படும் என்றால்	நாம் அடக்கத்துட னிருக்க வேணுமெ ன்று நினைத்தமாத் திரத்தால்	பொன்மேனி காட்டாமுன்	அவனுடைய அழ திருவுடம்பு (மே காட்டிக்கொடுப் தற்கு முன்
நாணுமே	அடங்கியிருக்க முடியுமோ?	எங்கள் திரு	நாம் உபாயமாக் கொண்ட பெ பிராட்டிய
கருமாலை	கருப்புநிறமுள்ள ஸர்வேச்வரனை	மேனி காட்டும்	ஆசைப்பட்டு காட்டிக்கொடுப்ப

கீழ்ப்பாட்டில் ஆழ்வார் எனக்கு மோக்ஷானந்தத்தைக்கொடு கவேணுமென்று ப்ரார்த்தித்தார். அதைக்கேட்டிருந்த சிலர் ஆழ் வாரைக்குறித்து நீர் ஸர்வசக்தனை பெருமானுக்குச் சேஷபூதரா ருக்க அவனை இங்ஙனம் நிர்ப்பந்தித்துக் கேட்பது சரியோ? அவ தானேக் கொடுக்கும் போது கொடுக்கிறான் என்று அடங்கியிருக் வேண்டாமோ என்று வினவினர். அதற்கு ஆழ்வார் பதிலளிக் றரிப்பாட்டால்.

காணக்கழிகாதல்:— நான் எனக்கு வசமாயிருந்தாலன்றோ நான் அடங்கியிருப்பேன். அவ்வீச்வரனைக்காணவேணு மென் எல்லைகடந்தகாதல் என்னையும் மறக்கும்படி விஞ்சியிருக்கிறது அப்பெருமானைக் கண்டாலல்லது கழியாத காதல் கனத்திருக்கு கால் நான் அடங்கியிருக்கவேணுமென்று நினைத்தமாத்திரத்தால் அடங்கி யிருக்கமுடியுமோ?

எம்பெருமான் திறத்தில் ஆசையில்லாதவர்களன்றோ நாணி யிருப்பார்கள். ஆசை கிளர்ந்திருக்கிற நான் எப்படி அவனைநிர்ப் பந்திக்காமலிருக்க முடியும் என்றார். உடனே அவ்விடையைக் கேட்டவர்களும், நீர் நிர்ப்பந்தித்தாலும் அவன் தானே உமக் குத் தன் திருமேனியைக் காட்டும்பொழுது தானே நீர் காண வேண்டும்; நீர் நிர்பந்திப்பதற்குப் பயன் என்னவென்றும் கேட் டார்கள். அதற்குப் பதிலளிக்கிறார் பின்னடிகளால். அந்த நீல மேக ச்யாமளனான திருமாலை அவன் திருமேனி காட்டிக்கொடுக்க

வேண்டாம். அதற்கு முன்னே எனது தாயாகவும் எனக்குப் புருஷகாரமாயும் உபாயமாயும் உபேயமாயும் நிற்கிற பெரியபிராட்டியார் அப்பெருமானை எனக்குக் காட்டிக்கொடுப்பள். அவள் என்னிடம் மிகுந்த வாத்ஸல்யமுள்ளவள். என்னுடைய பிழைகளை மறந்து அவ்விசேஷனையும் என்னுடைய குற்றங்களை மறக்கும்படி செய்கிறவியல்பினள். அப்பிராட்டியே எனது காதலைக் கண்ணுற்று என்னைக் குளிரநோக்கி எனக்குத் தன் திருமாலையும் காட்டிக்கொடுப்பள். ஆதலால் பெருமான் சற்றுத் தாமதித்தாலும் பிராட்டியே எனது விருப்பத்தைத் தலைக்கட்டி வைப்பள் என்று பிராட்டியின் மஹாகுணத்தைத் தெரிவித்தார்.

காணக் கழி காதல்:— காணவேணுமென்ற அதிகமான காதல். ஸ்ரீய:பதியைக் கண்டே கழியக் கடவதான காதல்; (பார்த்தாலல்லது தீராக்காதல்) எனவுஞ் சொல்லலாம்.

திருமங்கை நின்றருளுந் தெய்வம் நா வாழ்த்தும்
கருமங் கடைப் பிடிமின் கண்டீர்—உரிமையால்
ஏத்தினேம் பாத மிருந்தடக்கை யெந்தை பேர்
நாற்றிசையுங் கேட்டீரே நாம். (57)

திருமங்கை	லக்ஷ்மீதேவியானவள்	இருந்தடக்கை எந்தை	மிகவும் நீண்ட திருக்கைகளையுடைய நம் ஸ்வாமியினுடைய
நின்று அருளும் தெய்வம்	நின்று வாழ்ப்பெற்ற தெய்வமான பெருமானை	பாதம்	திருவடிகளை
		பேர்	பெயர்களைக் கொண்டு
நா வாழ்த்தும் கருமம்	நாவினால் துதிசெய்வதாகிற காரியத்தை	உரிமையால்	நமக்குள்ள ப்ராப்தியால்
கடைப்பிடிமின் கண்டீர்	உறுதியாகப் பிடித்துக்கொள்ளுங்கோள்;	ஏத்தினேம்.	புகழுமவர்களானோம்.
நாம்	நாமும்	நால் திசையும்	நான்கு திசைகளிலுமுள்ளவர்களே;
		கேட்டீரே	இதனைக் கேட்டீர்களா?

கீழ்ப் பாட்டில் அருளிச்செய்தபடி பெரியபிராட்டியாருடைய மஹா குணத்தை அனுஸந்தித்தபின்பும் வெறுமனே போதுபோக்கலாமோ? அவனது திருநாமங்களையே பேசுங்கள்; என்று பரோபதேசம் செய்கிறாரிதில்.

திரு மங்கை:— திருவில்லாத் தேவரைத் தேறேல்மின் தேவு என்றபடி லக்ஷ்மீதேவியின் ஸம்பந்தமில்லாத தேவதைத்தொழுவது ஸ்வரூபத்துக்குச் சேராதபடியால் திருமங்கை அகலகில்லேனென்று உறையும் திருமேனியையுடைய தெய்வத்தை நாவினால் ஸ்தோத்ரம் செய்வதென்கிற காரியத்தை எல்லோரும் கைக்கொள்ளுங்கோள். அதுதான் நமக்கு உஜ்ஜீவன ஹேதுவாதலால் அதையே விடாதே பிடியுங்கோளென்றார்.

தான் சாஸ்த்ரார்த்தங்களை நன்குணர்ந்து மற்றவர்களையும் சாஸ்திரப்படி நடக்கச் செய்து தானும் சாஸ்திரப்படி நடப்பவன் தான் ஆசாரியனெனச் சொல்லப்படுவனாதலால் தான் பிறருக்கு உபதேசம் செய்வதுபோல் தானும் நடந்துகொள்கிறேனென்பதை பின்னடிகளால் காட்டுகிறார்.

நான்கு புருஷார்த்தங்களையும் கொடுத்துக் கொடுத்து நீண்டிருக்கும் திருக்கைகளையுடைய நம்முடைய ஸ்வாமியின் திருவடிகளை அவன் திருநாமங்களைச் சொல்லித் துதிக்கிறோம். அவன் ஸ்வாமி நாம் தாஸர்கள் என்கிற ஸம்பந்தத்தை உணர்ந்து நமக்கு உள்ள முறையால் அவன் பேர்களைப் பேசுகிறோம். நான்கு திசைகளிலும் உள்ளவர்களெல்லாரும் இதனைக் கேட்டீர்களா? நீங்கள் அனைவரும் இங்ஙனமே அவன் திருநாமங்களையேத்தித் திரியுங்கோள். நாற்றிசையிலுள்ளோர் அனைவர்க்கும் நாரணனே ஸ்வாமியாவன் என்று உபதேசித்தனர்.

நாம் பெற்ற நன்மையும் நாமங்கை நன்னெஞ்சத்து
ஓம்பி யிருந்தெம்மை யோதுவித்து—வேம்பின்
பொருள் நீர்மை யாயினும் பொன்னாழி பாடென்று
அருள் நீர்மை தந்த வருள். (58)

வேம்பு பொருளின் நீர்மை ஆயினும்	ஸர்வேச்வரனைப் பாடுவது வேம்பு என்கிறபொருளின் தன்மைபோல் கைப்பதாயிருந்தாலும்	நம்பி இருந்து	அன்புடனிருந்து
		நம்மை	நம்மை
		துதிவித்து	பகவத் குணத்தைப் பாடச்செய்து
பொன் ஆழி	அழகானசக்ரத்தைத் தரித்த பெருமானை	நாம் பெற்ற நன்மையும்	அதனால் நாமடைந்த ஸ்லாக்யதையும்
பாடு என்று	கானம் செய்யக் கடவாய் என்று	அருள் நீர்மை	பரமக்ருபாளுவான பரம புருஷன்
நாமங்கை	ஸரஸ்வதீ தேவியானவள்	தந்த அருள்	அருள் செய்ததையினால் கிடைத்ததேயாம்.
நல் நெஞ்சத்து	நம்முடைய நல்ல நெஞ்சிலே		

கீழ்ப்பாட்டில் "ஏத்தினேன் பாதம் இருந்தடக்கை எந்தை பேர்" என்று பேசினார். இப்பேறு உமக்கு எங்ஙனம் கிடைத்தது என்று சிலர்வினவ, அவர்களுக்கு "அதற்கும் அவனதின்னருளே காரணம்" என்று பதிலளிக்கிறார்.

நாம்:— அறிவில் சிறந்த பாகவதோத்தமர்கள் "இன்பப்பாவினை பச்சைத் தேனை பைம்பொன்னை அமரர் சென்னிப்பூவினை" என்றும் "கனியை கரும்பினின் சாற்றை கட்டியை தேனை அமுதை" என்றும் சொல்லுகிறபடி புருஷோத்தமனைப் பரமபோக்யமாகக் கொண்டநுபவித்தாலும் அறிவிலியான எனக்கு வேம்புபோல் கைப்பதாயிருக்குமியல்பினனவன் அப்பெருமான். அப்படியிருந்த போதிலும் ஸ்ப்ருஹணீயமான திருவாழியைக் கையிலேந்தின வென்னை நீ பாடக் கடவை; என்று பரமக்ருபையுடன் ஸங்கல்பித்த படியால், அதற்கிணங்க ஸரஸ்வதி தேவி என்னுள்ளத்திலே உகப்புடன் வந்தமர்ந்து என்னை இங்ஙனம் பாசுரங்களால் பாடும்படி செய்கிறாள். ஆதலால் இப்படிப் பாசுரங்களால் அவனைத் துதி செய்வதென்கிற நாம் பெற்ற நன்மையும் அவனது திருவருளால் கிடைத்ததேயாகும் என்றார்.

நாமங்கை — நாவில் அமரும்பெண். ஸரஸ்வதி.

அருள் புரிந்த சிந்தை யடியார் மேல் வைத்து
பொருள் தெரிந்து காண்குற்ற வப்போது-இருளிரிந்
நோக்கினேன் நோக்கி நினைந்தேன தொண்கமலம்
ஓக்கினே னென்னையுமங் கோர்ந்து. (5[illegible]

அருள் புரிந்த சிந்தை	கிருபையோடு கூடின திருவுள்ளத்தை	நோக்கி	அப்படிப்பார்த்த பி[illegible]
அடியார் மேல் வைத்து	தாஸபூதர்களான எங்கள்மேல் வைத்து	ஒண் கமலம் அது	அழகிய தாமரை[illegible] னச் சொல்லப்படு[illegible] அவன் திருவடிக[illegible]
பொருள் தெரிந்து	பொருளில்லாத எங்களை ஒரு பொருளாகக் கருதி	நினைந்தேன்	ப்ராப்யமாகக் கரு[illegible] னே[illegible]
காண்குற்ற அப்போது	அவன் கடாக்ஷம்செய்தருளின காலத்திலே	ஓர்ந்து	அவ்வடிகளைத்[illegible] மற்றோர் புகலி[illegible] யெனத்தீர்ந்து
இருள் இரிந்து	அஜ்ஞானம் விலகப்பெற்று	என்னையும்	ஜீவனையும்
		அங்கு	அத்திருவடிகளில்
நோக்கினேன்	ஆத்மஸ்வரூபத்தை ஆராய்ந்துபார்த்தேன்	ஓக்கினேன்	ஸமர்ப்பித்தேன்.

அருள் புரிந்த:— பகவத் கடாக்ஷத்தால் அஜ்ஞானம் நீங்[illegible] ஆத்மஜ்ஞானம் பிறந்து அவன் திருவடிகளில் ஆத்மஸமர்ப்[illegible] பணம் செய்தேனென்கிறார். ஸர்வேச்வரன் அடியார்களான வெங்கள் மேல் இவர்கள் ஸாத்விகர்களாய்க்கொண்டு மோக்ஷ மென்கிற புருஷார்த்தத்தையே சிந்திக்கிறவர்களாகக் கடவர்கள் என்று கிருபையுடன் கூடின திருவுள்ளத்தை வைத்துப் பொருளல்லாத வெங்களைப் பொருட்படுத்தி தம் கண்மலரை நம்மேல் ஒருங்கே பிறழவைத்தார். அங்ஙனம் கடாக்ஷித்த தின் பயனாக வென்னுத்மாவைப்பற்றிய அஜ்ஞானமென்னும் இருள் எல்லாம் விலகிவிட்டன. உடனே ஆத்மாவைப் பற்றி ஆலோசித்துப் பார்க்கதில் நாயம் தேவோ நமர்த்யோவா ந திர்யக் ஸ்தாவ ரோபிவா | ஞானாநந்த மயஸ் த்வாத்மா சேஷோஹி பரமாத்மந: || என்று பரமாத்மாவுக்கு எக்காலத்திலும் இவ்வாத்மா அடிமை

யேயன்றி வேறில்லை என்று உணர்ந்தேன். அத்துடன் இவ்வாத்மா இதுவரையில் ஸ்வாபாவிகமான ஆனந்தத்திற்கு விருத்தமான ஆபாஸமான ஸுகங்களில் மண்டியிருப்பதும் அஜ்ஞானத்தாலே வந்ததெனத்தீர்ந்து அவ்வீச்வரனுடைய திருவடிகள்தான் நமக்குப் ப்ராப்யங்கள் என்றும் தெரிந்துகொண்டேன். உடனே இவ்வளவு காலமாய் இவ்வாத்ம வஸ்துவை நம்மதென்று நினைத்து வருந்தி ஜித கௌஸ்துப சௌர்யஸ்ய ஸம்ராஜஸ் ஸர்வபாப்மநாம் | சிஷ்டம் ஹ்யாத்மாபஹாரஸ்ய நிஷ்க்ருதிஸ் ஸ்வபார்ப்பணம் | பெருமான் திருமார்பிலே தரித்திருக்கும் கௌஸ்துப மணியைத் திருடுவதென்கிற பாபத்தையும்வென்று எல்லாவிதமான பாபங்களுக்கும் அரசனாய் விளங்கும் ஆத்மாபஹாரம் என்கிறகொடிய பாபத்திற்கு அவனிடம் இவ்வாத்ம வஸ்துவை ஸமர்ப்பணம் செய்வதுதான் ப்ராயச்சித்தமெனத் தெளிந்து என்னையும் அவனது திருவடிகளில் ஸமர்ப்பித்தேன். இப்படி ஆத்ம ஸமர்ப்பணமளவான நாம் பெற்ற நன்மைகளெல்லாம் அவ்வீசனது கடாக்ஷத்தாலே கிடைத்தனவென்று பேசி அவனது வாத்ஸல்ய குணத்தைக் கொண்டாடினார்.

பொருள் தெரிந்து:—எனக்கு அர்த்தபஞ்சக ஞானம் பிறக்கும்படி காண்துற்றவப்போது என்று பொருள் மொழிவாருமுண்டு "இருள் இரிந்து" என்றவிடத்தில் இருள் திரிந்து என்றும் பாடம் உண்டு.

ஒண் கமலம்:— "தாவிவையங்கொண்ட தடந்தாமரைகட்கே" என்பதுபோல் முற்றுவமை. கமலம்போன்ற திருவடிகள் எனப் பொருள்.

ஒருருவ னல்லை யொளியுருவம் நின்னுருவம்
ஈருருவ னென்ப ரிருநிலத்தோர்—ஒருருவம்
ஆதியாம் வண்ண மறிந்தாரவர் கண்டீர்
நீதியால் மண்காப்பார் நின்று. (60)

ஓர் உருவன் அல்லை — புருஷோத்தமனே! நீ பரத்வமே வடிவாகவிருக்கிறவனில்லை

நின் உருவம் — உன்னுடைய வடிவம்

ஒளி உருவம் — பக்தர்களுக்குப் பராதீனமாய்க்கொண்டு பிரகாசித்து நிற்கும் ஸ்வரூபம்.

(இப்படியிருக்குமுன்னை)

இருநிலத்தோர் — இப்பரந்த பூமியிலுள்ளவர்கள்

ஈர் உருவன் என்பர் — பரத்வமென்னும் பெரிய வடிவை டையவனுக்ச் சொ கிறார்கள்

ஓர் உருவம் — பக்த பராதீனமா வடிவமே

ஆதி ஆம் வண்ணம் — யாவரும் பிழைப்ப தற்கு ஹேதுவாயிரு க்கு மென்பதை

அறிந்தார் அவர் கண்டீர் — தெரிந்துகொண்டவர்களன்றோ

நீதியால் — ந்யாயப்படி

நின்று — ஸ்திரமாய் நின்று கொண்டு

மண் காப்பார் — உலகத்தைக் காக்க வல்லவர்களாவார்.

கீழ்ப்பாட்டில் திருமால் என்னையும் ஒரு பொருட்படுத்தி கடாக்ஷித்தருளினான் என்று பேசினார். ஆதலால் ஈச்வரன் பரம ஸுலபனென்றே யாவரும் நினைக்கவேண்டுமென்கிறார் இதில்.

ஓருருவன் அல்லை:— ஸர்வேச்வரனை விளித்துப் பேசுகிறார். திருமாலே! நீ நித்யோ நித்யாநாம் என்கிற வேதத்தின்படி பல்லாயிரக் கணக்கான ஆத்மாக்களுக்கு விரும்பப்பட்ட பொருள்களைக் கொடுத்துக்கொண்டு பரத்வமே வடிவாகத் தோற்றும் விலக்ஷணமான ஒரு வடிவத்தை மாத்திரமுடையவனன்று. இருள் சூழ்ந்த இடத்தில் பிரகாசிக்கும் தீபம்போல் இப்ப்ரக்ருதியில்வந்து தோன்றி விளங்கும் ஆச்ரித பாதந்த்ரமான வடிவத்தை உடையவனென்றே நான் தீர்மானிக்கிறேன். ஆனால் உலகத்தாரனைவரும் உனது கடாக்ஷம் பெறாத காரணத்தால் அறிவிலிகளாய்க்கொண்டு உன்னை பரத்வமே வடிவாகக் கொண்டவன், ஸ்வதந்த்ரன், விலக்ஷணன் என்று சொல்லுகிறார்கள். எனது கொள்கையோவென்றால் பரத்வமே வடிவான உன் ஸ்வரூபம் ஆச்ரிதர்கள் உஜ்ஜீவிப்பதற்கு ஏற்கில்லாதபடி இருப்பதால் இவ்விருள் தருமா ஞாலத்துள் வந்து ஆச்ரித பாதந்த்ரமாய் பரமஸுலபமான வடிவத்தனாய் நிற்பவன் என்றே

பேசுவதுதான் நியாயமென்று புலப்படுகிறது. இந்த ஆச்ரித பாரதந்த்ர்யமான திருமேனிதான் அடியார்கள் உஜ்ஜீவிப்பதற்கு ஆதிகாரணமென்று அறிந்தவர்கள் தான் இவ்வுலகத்தில் ஈச்வரனே ஒருவன் சேஷி, மற்றவர்கள் சேஷபூதர்கள் என்கிற முறைப்படி நடந்துகொண்டு தீர்த்தகரராகத் திரிந்து உலகத்தாருக்கு ஈச்வர தத்வத்தை உணர்த்தி உலகைக் காப்பாற்றுவார்கள் என்று; விபவ அர்ச்சாதிரூபங்களே நமக்கு உஜ்ஜீவன ஹேதுவாயிருப்பதால் பரத்வம் கொண்ட திருமேனி இல்லையென்றே பேசினார் போலும்.

இப்பாட்டிற்கு வேறுவகையாகவும் பொருள் விரிப்பதுண்டு. உனக்கு ஒரு திருமேனிதான் என்று சொல்ல முடியாது. மத்ஸ்ய கூர்மாதிகளாக நீ நினைத்த உருவத்துடனெல்லாம் நிற்கிறாய்; ஆனால் நீ எந்த வடிவத்தை எடுத்துக்கொண்டாலும் அவைகளெல்லாம் அழுக்குடம்புகளல்ல. அப்ராக்ருதங்களான திருமேனிகள் தான். ஆதலால் உலகத்தார் உன்னை பரத்வமும் ஸௌலப்யமும் ததும்பும்படியான இருவகையான வடிவம் கொண்டவனாகவே சொல்லுகிறார்கள். அவற்றுள் ஸௌலப்யம் நிறைந்த ஆச்ரித பாரதந்த்ர்யமான திருமேனிதான் உஜ்ஜீவன ஹேது என்று தெளியவேண்டும். அப்படித் தெளிந்தவர்கள்தான் உலகத்திற்கு நல்லறிவைப் புகட்டிக் காப்பாற்றுகிறார்கள் என்பதாம்.

நின்றதோர் பாதம் நிலம்புதைப்ப, நீண்டதோள்
சென் றளந்த தென்பர் திசையெல்லாம்—அன்று
கருமாணியா யிரந்த கள்வனே, உன்னைப்
பிரமாணித்தார் பெற்ற பேறு (61)

அன்று	முன்னொருநாள்
கருமாணி ஆய்	கரியகோலக் குறளுருவாய்
இரந்த கள்வனே	மாவலியிடம் மூவடி மண்ணை யாசித்த க்ருத்ரிமஸ்வபாவனே!
நின்றது ஓர் பாதம்	பூமியை அளக்கவேணுமென்ற ஒரு திருவடி
நிலம் புதைப்ப	பூமியை ஆக்ரமித்துக் கொள்ள
	(அதன்பிறகு)

நீண்டதோள்	நீண்டு வளர்ந்த திருத்தோள்	(இப்படிச் செய்த செயலானது) உன்னை பிரமாணிக்கார் பெற்ற பேறு {உன்னை நம்பினவர்களனைவரும் பெற்ற புருஷார்த்தமாகு
திசை எல்லாம் சென்று	எல்லாத் திக்குகளிலும் சென்று	
அளந்தது என்பர்	உயரேயுள்ள லோகங்களை அளந்தது என்று சொல்லுகிறார்கள்	

நின்றது:— எம்பெருமானுடைய ஆச்ரித பாரதந்த்ரிய குணத்தைப் பேசுகிறார். இந்திரனுடைய லோகங்களை ஆக்ரமித்துக் கொண்டு உனது விபூதியைத் தன்னுடையதாக நினைத்திருந்த மாவலியிடம் கரியகோலக் குறளுருவாய்ச் சென்று மண்ணிரந்தாய். அப்போது பூமியை அளப்பதாக நின்றுகொண்டிருந்த உனது திருவடி மிகப்பெரிதாய் வளர்ந்து இப்பூமியை ஆக்ரமித்துக்கொண்டது. மாவலி உதகதானம் செய்தவுடன் உன் திருக்கைகள் கிடைக்காதது கிடைத்ததுபோல் நினைத்துப் பெருமகிழ்ச்சியுடன் வளர்ந்து திசையெல்லாம் தாவியளந்தன. இப்படித் தன்னை யழியமாறிச் செய்த உனதுசெயலை சிலர் இந்திரனுக்காகச் செய்த காரியமென்று சொல்லுகிறார்கள். இந்திரன் ஒருவனுக்கு மாத்திரம் செய்யப்பட்டதல்ல. உன்னை ஆச்ரயித்து உன்னையே நம்பி இருப்பவர்களனைவருக்குமாகச் செய்த செயல்தான். மாவலியிடம் உன் ஸ்வரூபத்தையும் அழித்துக் கொண்டு நீ செய்த காரியத்தைப் பார்த்து உன்னையே நம்பியிருக்கும் உன்னடியார்கள் எல்லோரும் இந்திரன் காரியத்தைத் தலைக்கட்டி வைத்ததுபோல் நம்முடைய விருப்பத்தையும் தன் ஸ்வரூபத்தையும் குலைத்துக் கொண்டாவது தலைக்கட்டிவைப்பன் என்று தெளிந்து கவலையற்று மார்பில் கை வைத்து உறங்குகிறார்கள்; என்று எம்பெருமானை விளித்துப் பேசினார். இதனால் ஈச்வரன் ஆச்ரித பாரதந்த்ரனாயிருந்துகொண்டு எவ்வளவு தாழ்ந்த தொழிலையும் செய்து ஆச்ரிதர்களைக் காத்தருள்வன் என்கிற மஹா குணம் அறியவேண்டியதாகும்.

பேறொன்று முன்னறியேன் பெற்றறியேன் பேதை
மாறென்று சொல்லி வணங்கினேன்—ஏறின் [மையால்
பெருத்தெருத்தங் கோடொசியப் பெண்ணசையின்
எருத்திறுத்த நல்லாயரேறு. (62) [பின் போய்

பெண் நசையின் பின் போய்	நப்பின்னைப் பிராட்டியிடம் உண்டான காதலுக்கட்பட்டு	மாறு என்று சொல்லி	நம்வினைகளுக்கு விரோதியென்று நினைத்து
ஏறின்	விருஷபங்களுடைய	வணங்கினேன்	தண்டனிட்டேன்.
பெருத்த எருத்தம்	பெரிய முசுப்புகளும்	முன்	இதற்கு முன்
கோடு	கொம்புகளும்	பேறு ஒன்றும் அறியேன்	இப்படி ஒருபுருஷார்த்தத்தையும் அறிந்தேனல்லேன்
ஓசிய	ஓடியும்படியாக	பேதைமையால்	அப்படித் தெரிந்துகொள்ளாததினால்
எருத்து இறுத்த	அவ்விருஷபங்களின்கழுத்தைமுறித்த	பெற்று அறியேன்	அதை யடையாதிழந்திருந்தேன்.
நல் ஆயர் ஏறு	விருஷபம்போன்ற நல்லவனான கிருஷ்ணன்		

பேறொன்று:— இவ்வளவு காலமாய் ஆச்ரித பரதந்த்ரனை ஸ்வாமியை இழந்திருந்தேனே; என்று வருந்துகிறார். நப்பின்னை பிராட்டியை மணந்துகொள்வதற்கு விரோதிகளாயிருந்த எழு வ்ருஷபங்களுடைய கொண்டைகளையும் கொம்புகளையும் முறித்து அவைகளை நாசம் செய்ததுபோல் அவன் என்னைப் பெறுவதற்கு விரோதியாயிருக்கும் என் பாவங்களையெல்லாம் அழிப்பான் என்று இப்போது தான் தோன்றி அவனை வணங்கினேன். இவ்வளவு காலமாய் நம் வினைகளைப் போக்கி நம்மைக் காக்கும் பெருமானை வணங்குவது என்று ஒரு புருஷார்த்தம் இருப்பதாகவே எனக்குத் தெரியாது. தெரியாததுமட்டுமல்ல. அதை நான் கிடைக்கப்பெறவுமில்லை. அதற்குக் காரணம் என்னுடைய அறிவின்மைதான். எனது அஜ்ஞானத்தால் தான் நான் இதுவரையில் இப்பேற்றை இழந்திருந்தேன். இன்று அப்பெருமான் நம் வினைகளுக்கெல்லாம் விரோதி என்று தீர்ந்து அவனை வணங்கினேன் என்றபடி.

"பெண் நசையின் பின் போய்" நப்பின்னைப் பிராட்டியிடமும் காதலின் பின்னே சென்று. காதலுக்கு அகப்பட்டு என்றபடி

நல் ஆயர் ஏறு - நம்மிடம் வாத்ஸல்யமுள்ளவன்.

விரோதிகளைப் போக்கவல்ல ஸாமர்த்யமுள்ளவன். என்ப

ஏறேழும் வென்றடர்த்த வெந்தை, எரியுருவத்
தேறேறி பட்டவிடு சாபம்—பாறேறி
யுண்டதலை வாய் நிறையக் கோட்டங்கை யொண்
கண்ட பொருள் சொல்லில் கதை. (63) [குரு

ஏறு எழும்	வ்ருஷபங்களேழை யும்	பாறு ஏறி உண்ட	கழுகுகள் ஏறி உ கார்ந்துகொண்டு சாப்பிடுவதற்குரி
வென்று	ஜயித்து	தலை வாய் நிறைய	மண்டையோட்டு வாய் நிரம்பும்படி
அடர்த்த	முடித்த	கோடு	குவிந்த
எந்தை	என் ஸ்வாமியான கண்ணன்	அம் கை	அழகானகையால் (கீறிக்கொடுத்த)
எரி உருவத்து ஏறு ஏறிபட்ட	தீ போன்ற நிறங் கொண்டவனும் வ்ருஷபத்தை வா ஹனமாகக் கொண் டவனுமான ருத்ரா ன் அடைந்த	ஒண் குருதி	அழகான ரத்த
விடு சாபம்	எல்லாராலும்கைவி டப்பட்டசாபத்தை (நீக்குவதற்காக)	கண்ட பொருள்	அக்கபாலம் உடை தகன்று நீங்கக்க ட
		சொல்லில்	சொல்லப்புகுந்தா
		கதை	ஒரு பெரிய கதை யாக முடியு

கண்ணபிரான் நம் வினைகளைப்போக்கிக் காத்தருள்வன் என் பதற்கு ஒரு த்ருஷ்டாந்தம் காட்டுகிறார்.

ஏறேழும்:— முன்னொருகால் பரமசிவன் பிரமனுடைய தலை ஒன்றைக் கிள்ளி எடுத்துவிடவே பிரமனுடைய சாபத்தால் அ தலை அவனது கையைவிடாமல் பிடித்துக்கொள்ள, தேவர்களிடமு டமும் போய் இது எங்ஙனம் கையைவிட்டு விலகுமென்று கேட் வே, அவர்கள் இந்தக் கபாலத்தில் பிக்ஷை எடுத்துக்கொண்(

வாரும்; என்றைக்கு இக் கபாலம் நிறையுமோ அன்றைக்கு உமது சாபம் தீர்ந்து கபாலம் உடைந்து விலகும்; என்று சொல்லவும் அந்த ருத்ரன் அங்ஙனமே செய்துகொண்டு வருங்கால் ஒருநாள் ஸ்ரீமந்நாராயணனிடம் போய் பிக்ஷை கேட்க, அவர் தனது கை நகத்தால் தன் மார்வைக்கீறி ரக்தத்தை அக்கபாலத்தில் நிறப்பவே அதுவும் நிறைந்து உடைந்துபோயிற்று. ருத்ரனும் சாபத்திலிருந்தும் விடுபட்டான் என்கிற வரலாறு இங்கு நினைக்கப்படவேண்டும்.

ஏழு வ்ருஷபங்களைக்கொன்ற பரமபுருஷன் சிவந்த நிறமுள்ள ருத்ரனுடைய சாபத்தையும் விலக்கினானென்றால் நம் வினைகள் நாம் அவனை ஆச்ரயித்தால் நாசமடையும் என்பதில் ஐயமில்லை என்றபடி.

ஏறு ஏழும் வென்று:— ருத்ரன் ஒரு தலையைக் கிள்ளி சாபத்தை ஏற்றுக்கொண்டான். ஏழு தலைகளைக்கொன்றும் ஒரு குறைவையும் அடையாதவன் இவன்; என்கிற ஒரு சமத்காரம் இங்கு தோன்றுகிறது.

எரியுருவத்து:— தீ போன்ற நிறங்கொண்டவன். ஏறு ஏறி - வ்ருஷபவாஹனன்.

விடு சாபம்:— எவரை வேண்டிக்கொண்டாலும் இந்த சாபத்தை என்னால் நீக்க முடியாது என்று சொல்லுவதுபற்றி எல்லாராலும் தீர்க்க முடியாதென்று கைவிடப்பட்ட சாபம் என்றதாம். அல்லது (பிரமன்) விடுத்த - கொடுத்த சாபம் என்பதாகவுமாம்.

பாறு ஏறி;— மாம்ஸமும் ரக்தமும் கசிந்து நிற்கும் மண்டையோட்டைக் கழுகும் பருந்தும் உண்பது இயல்பாதலால், இங்கு ருத்ரன் பருந்தும் கழுகும் பறிக்குமென்னும் மண்டையோட்டில் பிக்ஷை வாங்கியுண்டானென்க. பாறு - பிணந்தின்னும் பறவை.

கதையும் பெரும் பொருளும் கண்ணா, நின்பேரே
இதய மிருந்தவையே யேத்தில்—கதையின்
திரு மொழியாய் நின்ற திருமாலே! உன்னைப்
பரு மொழியால் காணப் பணி. (64)

கண்ணா	கிருஷ்ணனே	நின்பேரே	(அவைகளெல்லாம் உனது பெயர்களே யாகும்
கதையும்	இதிஹாஸ புராணங்களும்	கதையின்	இதிஹாஸ புராணங்களின்
பெரு பொருளும்	அவைகளின் உயர்ந்த அர்த்தங்களும்	திருமொழி ஆய் நின்ற	அக்ஷரங்களின் வடிவமாக நின்ற
இதயம்	அவற்றின் உள் தாத்பர்யமும்	திருமாலே!	ஸ்ரீய: பதியே
இருந்தவையே	உள்ளபடியே	உன்னை	உன்னை
ஏத்தில்	தெரிந்து துதிசெய்தால்	பருமொழியால்	நிறைந்த சப்தங்களாலே (துதிசெய்து)
		காண	ஸேவிக்கும்படி
		பணி	அருள்செய்வாய்.

இவ்வுலகத்தில் இதிஹாஸ புராணங்களைக்கொண்டு உன்னைத் துதி செய்வதுபோல் நித்ய விபூதியிலும் உன்னைப் பணிந்தேத்தும்படி அருள்புரிய வேணுமென்று பிரார்த்திக்கிறார்.

கதையும்:— கிருஷ்ணனே! இதிஹாஸ புராணங்களெல்லாம் உன்னையே துதி செய்கின்றன. ஸ்ரீமத்ராமாயணம் ஸ்ரீ பாரதம் முதலிய இதிஹாஸங்களையும் ஸ்ரீ விஷ்ணுபுராணம் முதலிய புராணங்களையும் உட்கருத்தின்றி வாசித்தாலும், அவைகளின் உட்கருத்தை ஆராய்ந்து பார்த்தாலும், தாத்பர்யார்த்தங்களை ஆலோசித்துப் பார்த்தாலும் அவைகளெல்லாம் உனது திருநாமங்களாகவே பர்யவஸிக்கின்றன. உனது திருநாமங்கள் உன்னையே பிரதிபாதிப்பது போல் அவைகளும் உன்னையே தான் பரம்பொருளாகச் சொல்லுகின்றன. இதிஹாஸ புராணங்களென்றும் கிரந்தங்களின் வடிவாக நிற்பவனும் நீயேயாகலால் அவைகளும் உன்னையே பேசுகின்றனவென்பதில் ஐயமில்லை. ஆகலால் நானும் இவ்வுலகில் இதிஹாஸ புராணங்களால் உன்னை உள்ளபடியறிந்து சொல்மாலை ஏத்தி தொழுது நிற்கிறேன். ஆனால் இவ்வளவாலே யே நான் திருப்தியடையவில்லை. நித்ய விபூதியில் ஸூரிகளனைவரும் உன்னை ஸேவித்துக்கொண்டு ஆநந்த பரிதர்களாய் அவ்வாநந்தம் உள்ளடங்காமல் உயர்ந்த சொற்களால் உன்னைத் துதிப்

பதுபோல் நானும் உன்னை அங்கு துதி செய்யும்படி அருள்புரிய வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்.

முதலடியில் கதையின் என்ற பாடமும் மூன்றாமடியில் கதையும் என்ற பாடமும் வழங்குவதன்றி. கதையும் என்பதற்கு பிரதிபாதிக்கப்படும் என்று பொருள்.

திருமொழியாய் நின்ற:— இதிஹாஸ புராணங்களின் அக்ஷரங்களாக நிற்பவனும் திருமால் என்றபடி.

பருமொழி:— பருத்தமொழி உள்ளே ஆனந்தம் அடங்காமல் வாய்விட்டுப் பேசும் ஹாவு ஹாவு, அஹமந்நம் அஹமந்நம் முதலிய சப்தங்கள்.

கதையும்:— கதை என்பது இங்கு பகவத் கதைகளைக் குறிப்பதாகக் கொள்க.

பணிந்தேன் திருமேனி பைங்கமலம் கையால்
அணிந்தேனுன் சேவடிமேல் அன்பாய்—துணிந்தேன்
புரிந்தேத்தி யுன்னைப் புகலிடம் பார்த்து, ஆங்கே
இருந்தேத்தி வாழுமிது. (65)

ஸ்ரீய: பதியே!

திருமேனி	உன் திருவுடம்பை
பணிந்தேன்	வணங்கினேன்
உன் சே அடி மேல்	உன் சிவந்த திருவடிகளின் மேல்
பை கமலம்	அழகான தாமரை மலர்களை
அன்பு ஆய்	பக்தியுடையவனாய்க் கொண்டு
கையால்	என்கையால்
அணிந்தேன்	சாத்தினேன்.
உன்னை	உன்னை
புரிந்து	ஆசைப்பட்டு
ஏத்தி	ஸ்தோத்ரம் செய்து
புகல் இடம் பார்த்து	(அவதாரங்கள் முடிந்தபிறகு) நீ பிரவேசிக்கும் உத்தமமான பரமபதத்தைப் பார்த்து
ஆங்கே	அவ்விடத்திலே
இருந்து	ஸ்திரமாய் நின்று
ஏத்தி	துதித்து
வாழும் இது	வாழ்வதாகிற இப்புருஷார்த்தமே நமக்கு உரியதென்று
துணிந்தேன்	நிர்ணயம்செய்தேன்.

டணிந்தேன்:— இதுவரையில் தான்பெற்ற புருஷார்த்தத்தையும் இனித் தான் பெறவேண்டியதாய் நிச்சயித்திருக்கும் புருஷார்த்தத்தையும் அப்பெருமானிடம் விண்ணப்பம் செய்துகொள்ளுகிறார். திருமாலே! உன் திருவுடம்பைக் கண்டுகொண்டேன் உனக்குச் சேஷபூத னாகையினாலுன்னை வணங்கியும் நின்றேன் மேலும் உன்னைப் பிரிந்தால் உயிர் விடும்படியான ப்ரேமத்துடனு நின்றுகொண்டு அழகான தாமரைப் புஷ்பங்களை எடுத்து உன் திருவடிகளிலே ஸமர்ப்பித்தேன். இதுவே யாத்திரையாக என் வாழ்நாட்களெல்லாம் கழிந்தன. ஆயினும் யான் வேண்டுவதொன்றுண்டு. இவ்வுலகம் இருள் தருமா ஞாலமாதலால் விண்ணுளார் பெருமாற்கடிமை செய்வாரையும் புறம்போகிற்கும்படி செய்விக்கும் திறமைவாய்ந்தது) ஆதலால் பாம்போடொரு கூரையிலேபயிலேருப்போல் அஞ்சுகின்றேன். உனக்குப் புகலிடமான பரமபதத்திலிருந்து உனக்கடிமை செய்யும் வாழ்வுதான் நாம் அடையவேண்டிய பேறு என்று துணிந்தேன். உனது போக விபூதியில் நித்யமுக்தர்களோடு கூடவிருந்துகொண்டு அந்தமில் பேரின்பத்தில் ஆழ்ந்து உனக்குப் பணிவிடைசெய்வதுதான் யானுன்னை வேண்டி விரும்பிய விஷயம். எனக்கு நீ இதை அருள்புரிய வேண்டும் என்று பிரார்த்திக்கார்.

புகலிடம்:— எம்பெருமான் பற்பல அவதாரங்களைச் செய்தும் கடைசியில் புகுவது பரமபதத்திலாதலால் புகலிடம் என்பது பரமபதத்தைச் சொல்லுகிறது. அவதாரங்களுக்குப் பிறகு பெருமான் புகுமிடம் என்று பொருள் கொள்க. "புகலிடம்', கடைசியாக யாவரும் செல்லவேண்டிய இடமானது பற்றிப் புகலிடமென்னவுமாம்.

இது கண்டாய் நன்னெஞ்சே யிப்பிறவி யாவது
இது கண்டா யெல்லாம் நாமுற்றது—இது கண்டாய்
நாரணன் பேரோதி நரகத்தருகணையா
காரணமும் வல்லையேல் காண். (56)

நன்னெஞ்சே	என் நல்ல மனமே!
இப்பிறவி ஆவது	இந்த ஸம்ஸாரத்தின் கொடுமையான தன்மை
இது கண்டாய்	இப்படிப்பட்டது காண்.
நாம் உற்றது எல்லாம்	நாம் (இவ்வளவு காலம்) அநுபவித்ததெல்லாம்
இதுகண்டாய்	(துக்கங்களான) இப்படிப்பட்டவை காண்.
நாரணன்	நாராயணனுடைய
பேர் ஓதி	பெயர்களைச் சொல்லிக்கொண்டு
நரகத்து அருகு	நரகத்தின் ஸமீபத்திலும்
அணுகா	சேராமலிருப்பதற்கு
காரணமும்	ஹேதுவும்
இதுகண்டாய்	இந்த ஸம்ஸாரத்தின் தோஷங்கள் தான்.
வல்லையேல்	நீ அறிந்துகொள்ள சக்தியுள்ளவனாகில்
காண்	அறிந்துகொள்.

நாம் பகவானை அடைவதற்கும் பிரதிபந்தகங்களை விலக்கிக் கொள்வதற்கும் இந்த ஸம்ஸாரத்திலுள்ள தோஷங்களைத் தெரிந்து கொள்வது தான் பிரதான ஹேதுவாகும் என்று சொல்லி தம் நெஞ்சுக்கு ஸம்ஸாரத்தின் கொடுமையை அறிவிக்கிறார்.

இது கண்டாய்:— எனது நல்ல மனமே! இந்த ஸம்ஸாரத்தின் தன்மையை நீ கண்டிருக்கிறாயே; பிறப்பதும் இறப்பதுமான ஸம்ஸாரத்தின் நிலைமையை ஒருவர் உணர்த்த வேண்டுமோ? அது கிடக்கட்டும். பிறந்தது முதல் இதுவரையில் நாம் அனுபவித்தப் பதையெல்லாம் நினைத்துப் பார். கொஞ்சமேனும் சுகத்தைக் கண்டிருக்கிறாயோ? தாபத்ரயத்தால் பலவகைப்பட்ட துயரங்களைத் தானே அடைந்திருக்கிறோம். இதற்குக் காரணமும் இந்த ஸம்ஸாரம்தான். இதையும் இன்னொருவர் சொல்லிக்கொடுக்கவேண்டியதில்லை. நீயே நேரில் பார்த்திருக்கிறாய். ஆதலால் நரகப்ராயமான இந்நிலத்தில் மறுபடியும் வந்து சேராதபடி நாராயணனுடைய திருநாமங்களை ஓதுவதற்கும் இந்த ஸம்ஸாரத்திலுள்ள தோஷங்களை நினைப்பதுதான் முக்கியமான காரணம். “வாங்குநீர் மலருலகில் நிற்பனவும் திரிபனவும், ஆங்குயிர்கள் பிறப்பிறப்புப் பிணி மூப்பால் தகர்ப்புண்ணும் சங்கிதன்மேல் வெந்நரகம் இவையென்ன உலகியற்கை” என்றபடி இப்பிரகிருதியின் தோஷங்களை அனுஸந்தித்தால் நாம் உடனே இதை விலக்கக் கருதி பகவந்நாமங்களை

அநுஸந்தித்து வல்லதொரு உபாயத்தை அநுஷ்டித்து அப்பரமபு
ஷனைப் பெறலாம்.

வல்லையேல் காண்,— இந்த ஸம்ஸாரத்தின் தோஷங்களை
நாம் நேரில் கண்டிருப்பதால் வேறொருவர் சொல்லிக்கொடுக்
வேண்டியதில்லை. ஆனால் நாம் இந்த தோஷங்களைப் பார்ப்பதுதா
மிகவும் அரிதான காரியமாகும். நம் கண்களை நாம் செய்த பாப
கள் தோஷதர்சனம் செய்ய முடியாதபடி மறைக்கின்றன. அதனு
தான் ப்ரத்யக்ஷமாயிருக்கும் இப்ரக்ருதிதோஷங்களை ஒருவரு
காண்கிறதில்லை. ஆதலால் நீ பகவந்நாமங்களை உச்சரித்துக்கொண்
அப்பாபங்களுக்கு அகப்படாது இந்த ஸம்ஸாரத்தின் கொடுமை
களைக் கண்டுகொள். உடனே ப்ராப்யருசி உண்டாகி மேலுள்
உபாய பூர்த்தியும் பிறந்து பகவத் ப்ராப்தி கைகூடுமென்றபடி.

கண்டேன் திருமேனி யான் கனவில், ஆங்கவன் கை
கண்டேன் கனலுஞ் சுடராழி—கண்டேன்
உறுநோய் வினையிரண்டு மோட்டுவித்து, பின்னும்
மறுநோய் செறுவான் வலி. (67

யான்	நான்	நோய்	பெரிய துக்கங்களு க்கு ஹேதுக்களா
திருமேனி	(அவ்விசனது) திரு வுடம்பை	வினை இரண்டும்	புண்யபாபங்களிர ண்டையு
கனவில்	ஸ்வப்னம்போன்ற அநுபவத்தில்	ஓட்டுவித்து	துறத்திவிட்டு
கண்டேன்	காணப்பெற்றேன்	பின்னும்	மேலும்
ஆங்கு	அவ்வமயம்	மறு	மறுபடியும் திரும் க்கடவதா
அவன் கை	அவனுடைய திரு ஹஸ்தத்தில்	நோய்	வாஸநாருசிகளாகி வியாதிகளையு
கனலும்	அனலையுமிழ்கிற	செறுவான்	தொலைப்பவனுன ஸ்வாமியினுடைய
சுடர்	தேஜோமயமான	வலி	மிடுக்கையும்
ஆழி	திருச்சக்ரத்தை	கண்டேன்	ஸாக்ஷாத்கரித்தேன்
கண்டேன்	ஸேவித்தேன்.		
உறு	ஆத்மாவில் சேர்ந்து கிடக்கும்		

இவ்வாழ்வார் தம் நெஞ்சுக்கு இந்நிலத்தின் தோஷங்களை அறிந்துகொள் என்று உபதேசித்ததைக் கண்டுகொண்டிருந்த ஸர்வேச்வரன் பரத்வாதி குணங்களும் ஆச்ரயணீயத்வமான ஸௌலப்ய ஸௌசீல்யாதி குணங்களும் நிறைந்துள்ள தம் அவதாரங்களான அர்ச்சாமூர்த்திகள் மலிந்திருக்கும் இந்நிலத்தையும் இவர் நிந்திப்பது நம்முடைய அநுபவத்தைப் பெறாத காரணத்தாலே தான்; என்று கருதி இவருக்குத்தன் திவ்யமங்கள விக்ரஹஸேவையைக்கொடுத்தார். உடனே அவ்வெம்பெருமானை ஸாக்ஷாத்கரித்து அதனாலுண்டான ஆனந்தம் உள்ளடங்காமல் இப்பாசுரத்தை அருளிச்செய்கிறார்.

கண்டேன்:— ப்ரத்யக்ஷ ஸமாநாகாரமான மாநஸாநுபவத்தில் ஸ்ரீமந்நாராயணனுடைய திருமேனியைக் காணப்பெற்றேன். அவ்வநுபவத்திலேயே எரியுமிழ்ந்து நிற்கும் தேஜோமயமான திருவாழியைக் கையிலே தரிப்பதையும் ஸேவித்துக் கொண்டேன். (திருவாழி முதலான பஞ்சாயுதங்களையும் அணிந்துகொண்ட பரம போக்யனான பெருமானையும் ஸேவிக்கப் பெற்றேன். என்றபடி) பகவத்ப்ராப்திக்கு ப்ரதிபந்தகங்களான புண்யபாபங்களிரண்டும் என்னைவிட்டு விலகிப்போயின. எம்பெருமானை நேரில் கண்ட பின்பும் புண்யபாபங்கள் என் அருகேயும் அணுகமுடியுமோ? இப்படி வினைகளிரண்டும் நிச்சேஷமாக நம்மைவிட்டுக் கழிந்தாலும் வேரைவிட்டு மரத்தை மாத்திரம் வெட்டித் தள்ளினால் அந்த மரம் மறுபடியும் தளிர்கொண்டு முளைப்பதுபோல், அநாதிகாலமாக நாம் பண்ணிப்போந்த விபரீதாநுபவத்தாலே ஏற்பட்ட வாஸனையும் விஷயருசியும் நம்மை விடாது மறைந்திருந்து ஒரு காலத்தில் நம்மை நலிந்து மீண்டும் இந்த ஸம்ஸாரத்தைக் கொடுக்கும்படியான புண்யபாபங்களைச் செய்யும்படி செய்விக்கும். அத்தகைய வாஸநாருசிகளையும் வேரோடு களைவதாக வந்த எம்பெருமானுடைய திருக்கையும் ஸேவிக்கப் பெற்றேனென்று அவனைக் காணப்பெற்றுப் பிறந்த நிரவதிக ப்ரீதியாலே பேசுகிறார்.

எம்பெருமான் தன் முன்னே நின்று தன் திருமேனியைக் காண்பித்தவளவில் வாஸநாருசிகளோடு தம் வினைகளைத்தும் மாய்ந்தன என்று பேசுகிறாரென்பது திரண்ட பொருள்.

வலி மிக்க வாளெயிற்று வாளவுணர் மாள
வலி மிக்க வாள்வரை மத்தாக—வலி மிக்க
வாளரவு சுற்றி மறுகக்கடல் கடைந்தான்
கோணாகங் கொம்பொசித்தகோ. (68)

கோணாகம்	மிகுந்த பலமுள்ள குவலயாபீடமென்ற யானையின்		மாண்டுபோவதற்காக
கொம்பு	தந்தங்களை	வலிமிக்க	மிகுந்த சக்தியையுடையதும்
ஒசித்த	முறித்தவனான	வாள்	ஒளிவீசுகிறதுமான
கோ	ஸ்வாமியான கிருஷ்ணன்	வரை	மந்தரமலையை மத்தாக(ச்செய்து)
வலிமிக்க	அதிக பலமுடையவர்களாய	வலிமிக்க	மிகப்பலமுள்ள
வாள் எயிறு	வாள் (ரம்பம்)போன்ற பற்களையுடையவர்களும்	வாளரவம்	ப்ரகாசத்தையுடைய வாஸுகி என்னும் ஸர்ப்பத்தை கயிறாகச் சுற்றி
வாள் அவுணர்	வாளாயுதத்தையுடையவர்களுமான அஸுரர்கள்	மறுக	குழும்பும்படி
		கடல் கடைந்தான்	ஸமுத்ரத்தைக்கடைந்தான் காண்.

வாஸனையோடு புண்யபாபங்களைப் போக்கி மோக்ஷத்தைத் தரும் பெருமானையே சிலர் சில்லறைப் பிரயோஜனங்களுக்காகப் பற்றுகிறார்களே! என வருந்துகிறார்.

வலிமிக்க:— துர்வாஸ முனிவரது சாபத்தால் செல்வத்தை இழந்த தேவேந்திரன் தேவர்களுடன் சென்று திருமாலைச் சரணம் புகவே, அவருடைய நியமனத்தால் மந்தரமலையை மத்தாகச் செய்து வாஸுகியைக் கடைகயிறாகக்கொண்டு திருப்பாற்கடலை அசுரர்கள் ஒரு புறமும் தேவர்கள் ஒரு புறமுமாய் நின்று கடைய வும், அம்மலை கடலினுள் அழுந்தவே ஸர்வேச்வரன் ஆமை வடிவமாகி அம்மலையைத் தாங்கி நின்று மீண்டும் இரண்டு உருவங்களை எடுத்துக்கொண்டு தேவகோஷ்டியிலும் அஸுரகோஷ்டியிலும் நின்று கடல் கடைந்தான். பிறகு அப்பெருமானே அக்கடலினின்றும்

தந்வந்தரி என்கிற ரூபத்துடன் அம்ருதகலச ஹஸ்தராய்த் தோன்றவும் அஸுரர்கள் அப்பெருமானிடமிருந்து அம்ருத பூர்ணமான கலசத்தைப் பலாத்காரமாகப் பிடுங்கிக் கொள்ளவே அவ்வெம்பெருமானும் உலகங்களையெல்லாம் மோஹிக்கச் செய்யுமொரு பெண் வடிவத்தை எடுத்துக்கொண்டு அஸுரர்களை மயக்கி ஏமாற்றி தேவர்களுக்கே அம்ருதத்தைக் கொடுத்தருளினன் என்கிற வரலாற்றை இப்பாட்டில் ஸங்க்ரஹித்தார்.

இங்ஙனம் கடல் கடைந்து அமுதங்கொண்டு அமரர்களைக் காத்தருளினவன் தான் க்ருஷ்ணனாய்த்தோன்றித் தன்னைக் கொல்வதற்கென்று கம்சனுடைய அரண்மனை வாசலில் நின்ற குவலயாபீடம் என்கிற யானையைக் கொன்றொழித்தான் என்றபடி.

மறுகக்கடல் கடைந்தான்:— கடலின் கீழ் மண் கொண்டு மேலே எறியும்படி கடைந்தானென்பது.

கோவாகி மாநிலங்காத்து நங்கண் முகப்பே
மாவேகிச் செல்கின்ற மன்னவரும்—பூமேவும்
செங்கமல நாபியான் சேவடிக்கே யேழ்பிறப்பும்
தண்கமல மேய்ந்தார் தமர். (69)

கோ ஆகி	ஸார்வ பௌமனுை அரசனாகி	செம் கமலப் பூ மேவும்	சிவந்த தாமரைப் புஷ்பம் பொருந்தியிருக்கிற
மாநிலம் காத்து	இப் பெரிய பூமண்டலம் முழுவதையும் காப்பாற்றிக்கொண்டு	நாபியான்	திருநாபியையுடைய பெருமானுடைய
நம் கண் முகப்பே	நமது கண்களுக்கெதிரே	சே அடிக்கே	செவ்விய திருவடிகளிலே
மா ஏகி	குதிரையின்மேல் ஏறிக்கொண்டு	ஏழ் பிறப்பும்	பல பிறவிகளிலும்
செல்கின்ற	போய்க்கொண்டிருக்கிற	தண் கமலம்	குளிர்ந்த தாமரை மலர்களை
மன்னவரும்	ராஜாக்களும்	ஏய்ந்தார்	ஸமர்ப்பித்தவர்களான
		தமர்	பக்தர்களேயாவர்.

கீழ்ப்பாட்டில் தேவர்களது செல்வமும் திருமாலின் திருவருளால் வந்ததெனக் கூறினார். இப்பாட்டில் இப்புவியில் அரசர்களாய்க் காணப்படுகிறவர்களுடைய செல்வமும் அவனதின்னருளால் அடையப்பட்டதெனப் பேசுகிறார்.

கோவாகி:— பற்பல சிற்றரசர்களைக் காற்கடைகொண்டு சக்ரவர்த்தி எனப் பெயர்கொண்ட அரசர்கள் குதிரையின் மேல் ஏறிக்கொண்டு செல்வச் செருக்குடன் ஊர்வலம் வருவதை நாம் கண்டிருக்கிறோம். அவர்களெல்லாரும் பத்மநாபனுடைய பதங்களில் பல பிறவிகளில் புஷ்பங்களால் பூஜை செய்தே அப்பதவியைப் பெற்றிருக்கிறார்கள். அநேக ஜன்மங்களில் திருமாலைத் தொழுது தான் இப்பொழுது ராஜாதி ராஜர்களாய் விளங்குகிறார்கள் என்கிற படி.

“தண்கமலம் ஏய்ந்தார் தமர்” குளிர்ந்த தாமரை மலர்களை ஸமர்ப்பித்தவர்களான தொண்டர்களெனப்பொருள். குளிர்ந்த தாமரை மலர்களை ஸமர்ப்பித்தவர்களுடைய தொண்டர்களெனப்பொருள் கூறி பரனடியார்களுக்குப் பல் பிறவிகளில் ஆட்செய்ததன் பயனாக இப்பொழுது அரசர்களாய் ஆட்சிபுரிகிறார்கள் என்றும் தாத்பர்யம் கொள்க.

தமருள்ளம் தஞ்சை தலையரங்கம் தண்கால்
தமருள்ளுந் தண்பொருப்பு வேலை—தமருள்ளும்
மாமல்லை கோவல் மதிள் குடந்தை யென்பரே
ஏவல்ல வெந்தைக் கிடம். (70)

தமர் உள்ளம்	பக்தர்களுடைய நெஞ்சம்	தமர் உள்ளும்	பக்தர்கள் உபாஸிக்கிற
தஞ்சை	தஞ்சைமாமணிக் கோயில்	தண்பொருப்பு	குளிர்ந்தமலையான திருவேங்கடம்
தலை அரங்கம்	(திருப்பதிகளுள்) சிறந்த திருவரங்கம்	வேலை	திருப்பாற்கடல்
தண்கால்	திருத்தண்கால்	தமர் உள்ளும்	பக்தர்கள் நினைத்திருக்கும்

மா மல்லை	திருக்கடன்மல்லை	வல்ல எந்தைக்கு	விரோதிகளை முடிக்க வல்லவனான என் ஸ்வாமிக்கு
கோவல்	திருக்கோவலூர்	இடம் என்பர்	வாஸம் செய்யுமிடமென்பார்கள்.
மதிள் குடந்தை	மதிள்களால் சூழப்பட்ட திருக்குடந்தை இவைகளனைத்தும்		

நாம் ஆராதனம் செய்து பிழைக்கவேண்டி அவன் ஸாந்நித்யம் பண்ணுமிடங்களைப் பேசுகிறார்.

தமருள்ளம்:— விரோதி நிரஸந சீலனான பெருமான் முற்பட உகந்துறையுமிடம் பாகவதர்களுடைய ஹ்ருதயம். ஹ்ருதயத்திலே அமர்ந்து காமக்ரோதாதி விரோதிகளை ஹிம்ஸித்துக்கொண்டு ஆத்ம குணங்களை அபிவிருத்தி செய்கிறான் என்றறிக.

இங்ஙனம் தஞ்சை மாமணிக் கோயில் திருப்பதிகளுள் சிறந்த திருவரங்கம் திருத்தண்கால் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸர்வஸ்வமான திருவேங்கடம் திருப்பாற்கடல் அடியார்கள் அன்புடன் ஆச்ரயிக்கும் திருக்கடல் மல்லை திருக்கோவலூர் மதிள்களுடன் கூடின திருக்குடந்தை என்கிற திருப்பதிகளில் மிக்க ஆதரம் செய்து தனக்கு நல்லடியார்களை உகப்பிக்கிறார் என்று பொருள்.

இங்கு அநுஸந்திக்கப்பட்ட திருப்பதிகள் மற்றுமுள்ள திருப்பதிகளுக்கும் உபலக்ஷணங்கள். இங்கு பல திருப்பதிகளைப் பேசியிருந்தபோதிலும் இவருக்குத் திருக்குடந்தையில்தான் அபிநிவேசம் விஞ்சியிருக்குமென்பதை திருக்குடந்தையென்னும் திருப்பதிக்கும் விசேஷமான மதிள் என்கிற பதம் காட்டுகிறது. மதிள் குடந்தை:— சுற்றிலும் ரக்ஷணார்த்தமாக மதிள்களமைக்கப் பெற்ற திருக்குடந்தை எனப்பொருள். இத்தால் திருக்குடந்தை எம்பெருமானிடம் இவருக்குள்ள பரிவு காட்டப்படுகிறது. உள்ளே உறையும் பெருமானுடைய பெருமைகளெல்லாம் திருமதிள்களிலே தோற்றுகிறது என்பதாம்.

ஆச்ரிதர்கள், நம் பெருமானுக்கு விரோதிகளால் என்ன கேடு விளையுமோவென்று அஞ்சாதபடி மதிள்கள் கட்டப்பட்டு எதிரிகள்

உள்ளே பிரவேசிக்க முடியாத திருக்குடந்தை என்பது. ஒருவன் ஒரு பொருளைப் பிரிந்தகாலத்திலும் சேர்ந்தகாலத்திலும் அப்பொருளில் பரிவு காட்டுவதுதான் அவனது அபிநிவேசத்தின் காரியம். ஆதலால் மதில்களால் சூழப்பட்ட திருக்குடந்தை; என்பதால் தான் சரணமடைந்த பெருமானுடைய திருமேனியிலே பரிவு காட்டப்பட்டதாகிறது. அந்த ஸர்வேச்வரனை அவனடியார்கள் ஆஸுர ப்ரக்ருதிகளுக்குப்பயப்பட்டு நடுங்காதபடி தன்விருப்பப்படியெல்லாம் அநுபவிக்கிறார்கள் என்பது தோன்றும். அப்பெருமானும் திருக்குடந்தையில் ஸ்வச்சந்தமாய் ஸஞ்சாரம் செய்து தன்னடியார்களை உகப்பிக்கிறானென்பதுவும் விளங்குகிறது. இங்ஙனம் நம்மாழ்வாரும் ஸ்ரீ ஆராவமுதாழ்வானை அநுபவித்து அவனது ஸௌந்தர்யம் போக்யதை முதலிய கல்யாண குணங்களில் ஈடுபட்டு அப்பெருமானிடமுள்ள ஆதராதிசயத்தால் அவனுக்கு விரோதிகளால் ஏதாகிலும் தீங்கு வருமோ என்று கலங்கி பிறகு அவனது திவ்ய நகரத்தின் திருமதிள்களை ஸேவித்து, "விரோதிகள் புகவொண்ணாத தேசத்திலன்றோ அவன் வாஸம் செய்கிறா" னென்று தேறி அப்பெருமானிடமுள்ள தனது பரிவை கன்னார் மதிள் சூழ் குடந்தைக் கிடந்தாய் என்று பாசுரத்தில் வெளிப்படுத்தினார், ஆனதுபற்றி இவ்வாழ்வாருக்குத் திருக்குடந்தை யெம்பெருமானிடம் பரிவு விஞ்சியிருக்குமென்பது மதிள் குடந்தை என்றதால் தெரிய வருகிறது.

இங்கு மூன்றாமடியில் தமருள்ளும் என்ற பதத்தை மதிள் குடந்தை என்பதோடு அந்வயித்து பக்தர்கள் த்யானிக்கும் திருக்குடந்தை என்று பொருள் வரைவதும் பொருந்தும். பல சாஸ்த்ரங்களைக் கற்றுணர்ந்து பரதேவதா நிர்ணயம்செய்த திருமழிசைப்பிரான் ஆராவமுதாழ்வானிடம் அடங்காக் காதல்கொண்டு அப்பெருமானையே த்யானித்துக்கொண்டு திருக்குடந்தையிலேயே 5000-ஸம்வத்ஸரம் யோகம் செய்துகொண்டிருந்தார் என்கிற வரலாற்றை இவ்வாழ்வார் தமருள்ளும் என்ற பதங்களால் ஸூசிப்பிக்கிறார்போலும். ஆதலால் 'தமருள்ளும் குடந்தை' என்ற யோஜனை மிகப் பொருந்தியதே.

தமர் என்கிற பொதுவான பதத்திற்கு திருமழிசைப் பிரானென்று விசேஷித்துப் பொருள் விளக்குக.

இடங்கை வலம்புரி நின்றார்ப்ப, எரி கான்
றடங்கா ரொடுங்கு வித்த தாழி—விடங்காலும்
தீவா யரவணைமேல் தோன்றல் திசையளப்பான்
பூவா ரடி நிமிர்த்த போது. (71)

விடம் காலும்	விஷத்தை யுமிழ்கிறவனும்
தீ வாய்	பய ஜனகமான வாயையுடையவனுமான
அரவு அணைமேல்	திருவனந்தனென்கிற படுக்கையின் மேல் (சயனித்திருக்கும்
தோன்றல்	ஸர்வஸ்வாமியானவன்
திசை அளப்பான்	திசைகளுடன் கூடின பூமியை அளப்பதற்கென்று

பூ ஆர் அடி	புஷ்பம்போல் ஸுகுமாரமான திருவடியை
நிமிர்த்த போது	உயரே தூக்கின போது
இடங்கை	இடது கையில்
வலம்புரி	ஸ்ரீ பாஞ்சஜன்யாழ்வான்
நின்று	இருந்து
ஆர்ப்ப	சப்திக்க
ஆழி	திருச்சக்கரம்
எரி	நெருப்பை
கான்று	உமிழ்ந்துகொண்டு
அடங்கார்	சத்ருக்களை
ஒடுங்குவித்தது	நாசஞ்செய்தது.

எம்பெருமான் த்ரிவிக்ரமத்தில் திவ்யாயுதங்கள் பரிவுகாட்டும் ப்ரகாரத்தைப் பேசுகிறாரிதில். பகைவர்கள் பக்கத்திலணுகாதபடி விஷத்தை யுமிழ்ந்துகொண்டுப் பயங்கரமான வடிவையுடைய திருவனந்தாழ்வானென்னும் திருப்பள்ளி மெத்தையில் அமர்ந்திருக்கவேண்டிய ஸர்வேச்வரன் மாணிக்குறளுருவாய் மாவலியிடம் வந்து மூவடிமண்ணிரக்கவும் அவனும் கொடுத்தேனென்று சொல்ல பெருமானும் உலகங்களெல்லாவற்றையுமளப்பதற்கென்று யத்னம் செய்யவே, அந்த மாவலியின் மகனான நமுசியென்பானொருவன் அதற்குத் தடைசெய்யவும் உடனே எம்பெருமான் அவனையும் வென்று தன் ஸங்கல்பப்படியே உலகங்களனைத்தையுமளந்தான்.

அதுசமயம் அந்த நமுசி முதலியவர்களால் தன் ஸ்வாமிக்கு என்ன கேடு விளையுமோ வென்றஞ்சின திருச்சக்கரத்தாழ்வான் அவர்கள் நடுங்கி ஓடும்படி அனலையுமிழ்ந்தான். இடது கையிலமர்ந்திருந்த ஸ்ரீபாஞ்சஜன்யாழ்வான் அப்பகைவர்கள் நடுங்கும்படி பெருமுழக்கம் செய்தான். அறிவில் சிறந்த நித்யஸூரிகளுக்கும் இப்படி ஒரு பரபரப்பு உண்டாகிறதென்றால் அவர்களது பரிவை நாம் இவ்வளவென்று அளவிட்டுச் சொல்லமுடியாதபடியாகும்.

விடங்காலும்:— திருவனந்தாழ்வான் நித்யஸூரிகளின் ஸாமகான கோஷத்தைக்கேட்டு அதுவும் பகைவர்களின் ஆரவாரமென்று கருதி விஷத்தையும் தீயையும் உமிழ்ந்தானென்றும் சொல்லலாம்போலும். இப்படி அஸ்தான பயசங்கைக்குக் காரணமும் அவர்களின் பரிவுதான்.

பூவாரடி:— புஷ்பம் போன்ற ஸுகுமாரமான திருவடியால் காடுமேடுகளையும் கடந்தளக்க நேர்ந்ததே; என்று ஆழ்வார் கலங்கமுற்றாரென்கிறது காணத்தக்கதாகும்.

போதறிந்து வானரங்கள் பூஞ்சுனைபுக்கு--ஆங்கலர்ந்த
போதரிந்து கொண்டேத்தும் போது, உள்ளம்-போது
மணிவேங்கடவன் மலரடிக்கே செல்ல
அணி வேங்கடவன் பேராய்ந்து. (72)

வானரங்கள்	குரங்குகள்
போது	விடியற்காலத்தை
அறிந்து	தெரிந்துகொண்டு
பூ சுனை புக்கு	பூக்கள்நிறைந்தஜலாசயங்கினில் மூழ்கி
ஆங்கு	அவ்விடத்தில்
அலர்ந்த	மலர்ந்திருக்கும்
போது	மலர்களை
அரிந்துகொண்டு	பறித்துக்கொண்டு
ஏத்தும்	துதிபண்ணுகின்றன;
உள்ளம்	நெஞ்சமே!
போது	அங்ஙனம் துதி செய்யப்போ;
அணிவேங்கடவன்	அழகியதிருமலையையுடையபெருமானுடைய
பேர் ஆய்ந்து	நாமங்களை நவின்றுகொண்டு
வேங்கடவன் மலர் அடிக்கே செல்ல	வேங்கடநாதனுடைய திருவடித் தாமரையைக் கிட்டுவதற்கு
போதும்	புஷ்பங்களை
அணி	ஸமர்ப்பிப்பாய்.

திருமலையில் திர்யக்ஜாதிகளும் திருமாலை வணங்கி வழிபடுகின்றன; என்று வியப்படைகிறாரிதில்.

போதறிந்து:— ப்ராஹ்மணர்கள் விடியற்காலையிலே எழுந்து ஸ்நானம் செய்வதுபோலத் திருமலையில் குரங்குகளெல்லாம் உஷ:காலத்தைத் தெரிந்துகொண்டு உடனே எழுந்திருந்து புஷ்பங்கள் நிறைந்துள்ள சுனைகளில் சென்று ஸ்நாநம் செய்து அங்குள்ள புஷ்பங்களைப் பறித்துக்கொண்டுவந்து அத்திருமலையெம்பெருமானுடைய திருவடிகளிலே ஸமர்ப்பித்துத் தங்கள் ஜாதிப்பேச்சுகளால் ஸ்தோத்ரம் செய்கின்றன. ஆதலால் நீயும் இப்பொழுதே அவனைத்துதி செய்யப்புறப்படு; அவனது திருநாமங்களைச் சொல்லிக்கொண்டு அவன் திருவடிகளில் புஷ்பங்களைக்கொண்டு ஸமர்ப்பிப்பாயாக.

உள்ளம் போது:— மனத்தில் ப்ரவ்ருத்தியுண்டான பிறகுதான் வாக்கால் துதியும் உடலால் பணியும் செய்யமுடியுமாதலால் முற்பட உள்ளத்தை ஏவினார். உள்ளத்தைக் குறித்து “பணிவேங்கடவன் மலரடிக்கே செல்ல போதும் அணி” என்று நியமித்தது அஹிம்ஸை இந்திரியநிக்ரஹம் தயை பொறுமை ஞானம் தவம் த்யானம் ஸத்யம் என்கிறஎட்டு வகையான புஷ்பங்களாலே அர்ச்சிக்கவேணுமெனக் கருத்திற்கிணங்கியாகவுமாம்.

ஆய்ந்துரைப்ப னாயிரம்பே ராதிநடு வந்திவாய்
வாய்ந்த மலர் தூவி வைகலும்—ஏய்ந்த
பிறைக்கோட்டுச் செங்கண் கரிவிடுத்த பெம்மான்
இறைக்காட் படத்துணிந்த யான். (73)

பிறை ஏய்ந்த கோடு	சந்த்ர கலையை யொத்த கொம்புகளையுடையதும்	விடுத்த	முதலை வாயினின்றும் விடுவிக்க
செம் கண்	சிவந்த கண்களையுடையதுமான	பெம்மான்	ஸர்வேச்வரனை
கரி	யானையை	இறைக்கு	(ன்) ஸ்வாமிக்கு
		ஆட்பட துணிந்த	அடிமை செய்கையில் அத்யவஸாயம் கொண்ட
		யான்	அடியேன்

ஆதி நடு அந்தி வாய் வைகலும்	முதல் மத்யம்-கடைசியாகிய காலத்ரயத்திலும்	தூவி	ஸமர்ப்பித்து
		ஆயிரம் பேர்	ஆயிரம் திருநாமங்களையும்
வாய்ந்த மலர்	கிடைத்த புஷ்பங்களை	ஆய்ந்து	ஆராய்ந்து
		உரைப்பன்	சொல்லாநிற்பன்.

கீழே திர்யக் ஜாதிகளும் திருமாலை வணங்கித் துதிக்கின்றன; என்று பேசினார். இதில் தனது பொழுதுபோக்கும் விதத்தைச் சொல்லுகிறார்.

ஆய்ந்து:— பகவதாராதனார்த்தமாகப் புஷ்பங்களைப் பறிக்க வேண்டிப் பொய்கையிலிறங்கிய கஜேந்திரனை முதலை பிடித்திழுக்கவும் அதற்கஞ்சின கஜேந்திரனும் ஆதிமூலமே! என்று பரம புருஷனை யழைக்கவும், அப்பெருமானும் அரைகுலையத் தலைகுலைய ஓடிவந்து அம் மடுக்கரையிலே நின்று அம்முதலையைத் துணித்து கஜேந்திரனைக் காத்தருளினனென்கிற வரலாற்றை அறிந்துகொண்ட பின்பும் நாம் நாட்களை வீணாகக்கழிப்பது சரியோ? ஆதலால் காலை நடுப்பகல் மாலை என்கிற மூன்று நேரங்களிலும் கையிலகப்பட்ட புஷ்பங்களை எடுத்து அவன் திருவடிகளிலே ஸமர்ப்பித்து, அவனது திருநாமங்களையும் வாய்விட்டுச் சொல்லிக்கொண்டே யிருப்பேன். இதுவே நமக்கு யாத்திரை காணுமென்றார்.

ஆய்ந்து உரைப்பன்:— அவன் திருநாமங்களின் அர்த்தங்களை ஆராய்ந்துபார்த்துக்கொண்டு அதனால் உண்டாகிற ஸந்தோஷத்துடனேயே அப்பெயர்களையும் சொல்லிக்கொண்டிருப்பேனென்றபடி.

ஆதி நடு அந்திவாய்:— மூன்று காலங்களைச் சொன்னபோதிலும் எல்லாக் காலத்திலும் என்றே பொருள்கொள்ளவேணும். அவை உபலக்ஷணங்களே யன்றி வேறில்லை.

வாய்ந்த மலர்தூவி:— "கள்ளார் துழாயும்" "புரிவதும் புகை பூவே" என்றுமுள்ள மற்றவர்கள் பாசுரப்படி எம்பெருமானை கையிலகப்பட்ட புஷ்பங்களெல்லாவற்றாலும் பூஜிக்கலாமென்றபடி அவனுக்காகாத புஷ்பங்களே கிடையாவென்பதாம்.

ஏய்ந்தபிறைக்கோட்டு:— யானையின் பற்களுக்கு சந்திரகலையை உவமையாகக் கூறுவது கவிகளின் மரபு.

செங்கண்:— முதலையிடம் கொண்ட கோபத்தால் யானையின் கண்கள் சிவந்திருந்தனவென்றபடி. இங்கு மூன்றுமடிக்கு குவலயாபீடமென்ற யானையைக்கொன்ற கண்ணனெனப் பொருள் கூறுவதுமுண்டு. செங்கண்:— என்பதும் கிருஷ்ணனிடமுள்ள கோபத்தால் சிவந்த கண்களையுடைய யானையென்பது பற்றிப் பொருந்தும். விடுத்த என்பதற்கு வதைத்த என்ற பொருளும் சொல்லலாம்.

கீழ்ப்பாட்டில், குரங்குகள் திருமலைநாதனை ஸேவித்து நிற்கின்றன; என்று பேசியபடியால் திர்யக்ஜாதியின் பக்தி நினைவிற்கு வரவே கஜேந்திர வ்ருத்தாந்தம் நினைவிற்கு வரப் பிரஸக்தியுண்டாதலால் கஜேந்திரனை முதலை வாயினின்று விடுவித்தவனென்றே பொருள் வரைவது சிறந்ததாகும்.

யானே தவஞ்செய்தே னேழ்பிறப்பு மெப்பொழுதும்
யானே தவமுடையே னெம்பெருமான்—யானே
இருந்தமிழ் நன்மாலை யிணையடிக்கே சொன்னேன்
பெருந்தமிழ னல்லேன் பெரிது. (74)

எம்பெருமான்	எமக்கு ஸ்வாமியே
ஏழ் பிறப்பும்	எல்லா ஜன்மங்களிலும்
எப்பொழுதும்	எல்லாக் காலத்திலும்
தவம் செய்தேன்	தவம் பண்ணினவன்
யானே	நானே.
தவம் உடையேன்	தவத்தின் பலனை அடைந்தவனும்
யானே	நானே.
இரு தமிழ் நல் மாலை	உயர்ந்த தமிழாலாகிய நல்ல (சொல்) மாலையை
இணை அடிக்கே	உன்னுடைய திருவடிகளிரண்டிலும்
சொன்னேன்	சொல்லப்பெற்றவனாய்
பெருந்தமிழன்	பெரிய தமிழ்ப்பண்டிதனாய்
பெரிது நல்லேன்	ரொம்பவும் நல்லவனாயிருப்பவனும்
யானே	நானே.

ஆழ்வார் தாம் மற்ற ஸம்ஸாரிகளைப்போலிராது பகவத் விஷயத்தில் மண்டியிருப்பதை நினைத்து "எனக்கெவ்வுலகம் நிகரே' எனக்கார்நிகர் நானிலத்தே" என்னும் கணக்கிலே தன்னைப் புகழ்ந்து கொள்கிறார். இதுவும் ஸாத்விக அஹங்காரமாதலால் ஹேயமன்று.

யானே:— நான் ஸர்வகாலத்திலும் எம்பெருமானையே நினைத்துக்கொண்டு இனிய தமிழ்ப் பாசுரங்களால் அவனது திருவடிகளை ஸ்தோத்ரம் செய்துகொண்டு பெரிய தமிழ்க்கவியாயும் பாபங்களைச் செய்யாது நல்லவனாயும் இருந்துவருகிறேன். இப்படி பகவானைப் பாடுவதாகிற நல்ல கைங்கரியத்தை நான் கைக்கொண்டிருப்பதால் முன்னம் பல்பிறவிகளிலும் தவம் செய்தவனாயிருக்கிறேன். அத்தவத்தின் பயனையும் நானே பெற்றேன். இப்பேறு மற்றொருவர்க்குக் கிடைத்ததோ? என்று பகவதநுபவமாகிற பெரிய புருஷார்த்தத்தைத் தான் அடைந்ததனால் தன்னையே க்ருதக்ருத்யராகப் பேசினார்.

உலகில் பலர் பலவிதமாகச் சரீரத்தை வருத்தி ஊணுறக்கமின்றித் தவம் செய்துவந்தபோதிலும் அவர்களை பொருட்படுத்தாமல் தன்னையே பெரும்பாக்யசாலியாகப் பேசிக்கொண்டதற்கடி; தான் அப்பெருமானைப் பாடப்பெற்ற கைங்கர்யமே எல்லாவிதமான புருஷார்த்தங்களுக்கும் மேலானதென்பதைக் கருதியே. நம்மாழ்வாரும் "குறிக்கொள் ஞானங்களாலெனையூழி செய்தவமும் கிறிக்கொண்டிப் பிறப்பே சில நாளெய்தினன்யான்" என்று மற்றையோர்கள் யுகக்கணக்காகச் செய்தடையவேண்டும் பயனை நான் சில நாளிலெய்தினேனென்கிறார்.

பெருகு மதவேழம் மாப்பிடிக்கு முன்னின்று
இருகணிள மூங்கில் வாங்கி—அருகிருந்த
தேன் கலந்து நீட்டுந் திருவேங்கடங் கண்டீர்
வான் கலந்த வண்ணன் வரை. (75)

பெருகும்	பெருகிவழிகிற	அருகுஇருந்த	ஸமீபத்திலிருந்த
மதம்	மதஜலத்தையுடைய	தேன் கலந்து	தேனில் தோய்த்து
வேழம்	யானையானது	நீட்டும்	தன் பேடைக்குக் கொடுப்பதாக நீட்டும்
மா பிடிக்கு	தனது சிறந்த பெண் யானைக்கு	திருவேங்கடம் கண்டீர்	திருமலையல்லவோ;
முன் நின்று	முன்னே நின்று கொண்டு	வான் கலந்த வண்ணன்	மேகத்திற்கு ஸமமான நிறத்தையுடைய பெருமான் (வாஸம் செய்யும்)
இரு கண்	இரண்டு கணுக்களையுடைய	வரை	மலை
இளமூங்கில்	இளைய மூங்கில் குருத்தை		
வாங்கி	(மெள்ள) பிடுங்கி எடுத்து		

ஆழ்வார் தம்மை "பெருந்தமிழன்" என்று சொல்லிக்கொள்ளவும் அதைக் கேட்டிருந்த பெருமாள் உம்மை பெருந்தமிழன் என்று ஸ்தாபித்துக்கொள்வதற்கீடான ஒரு பாசுரம் பாடும் என்று நியமிக்க, அதற்காகப் பாடிய கவிபோலுள்ளது இப்பாட்டு. இப்பாட்டிலுள்ள வர்ணனையால் கீழேசொன்ன ஸந்தர்பம் ஊஹிக்கப் படுகிறது.

பெருகுமதவேழம்:—திருவேங்கடமலையில் மதம் பிடித்த யானை மும்மதப்புனல் சோரும்படி அங்குமிங்கும் திரிந்துகொண்டிருக்கிறது. திரியுங்கால் வழியிலே தன் பேடையைப் பார்த்தது. பார்த்ததும் அதற்கு இனிய வுணவைக் கொடுக்கவேணுமென்ற மனங்கொண்டது. உடனே ஸமீபத்திலிருந்த ஒரு மூங்கில் குருத்தை துதிக்கையால் பிடுங்கி, தேன்வழிந்துகொண்டிருந்ததொரு கூட்டில் அதைத் தோய்த்தெடுத்து தன் பேடையின் வாயில் பிழிகின்றதாம். இப்படி இயற்கை யழகுவாய்ந்த திருவேங்கடம் மேகம்போன்ற வர்ணத்தையும் ஔதார்யத்தையுமுடைய நம் பெருமான் உறையுமிடமென்றபடி.

உலகிலுள்ள கவிகள் வர்ணிப்பதுபோல் இங்குத் திருமலையை வர்ணித்திருப்பதைக்கொண்டு எம்பெருமான் முன்பு தன் கவிதை

யைக் காண்பிக்கப்பாடிய பாடலிதுவென்று சொல்லப்பட்
இத்தால் யானைபோன்ற ஸர்வேச்வரன் தனது பத்னியான
டியை உகப்பித்துக்கொண்டு திருமலையில் நித்யவாஸம் செ
னென்பதும் தோன்றும்.

வரைச் சந்தனக்குழம்பும் வான் கலனும் பாட்டும்
விரைப்பொலிந்த வெண் மல்லிகையும்—நிரைத்து
ஆதிக்கண் நின்ற வறிவ னடியிணையே [கொ
ஓதிப்பணிவ துறும். (

வரை சந்தன குழம்பும்	(மலய) மலையிலுண்டான சந்தனக் குழம்பும்	நிரைத்துக் கொண்டு	ஸம்பாதித்துக் ண்டு
வான்கலனும்	விலையுயர்ந்த ஆபரணங்களையும்	ஆதிக்கண் நின்ற அறிவன்	ஸ்ருஷ்டிக்கு பே நின்ற (ஜ ரண பூதனான) வஜ்ஞனுடைய
பட்டும்	நல்ல பட்டாடைகளையும்		
விரைபொலிந்த	வாஸனை மிகுந்திருக்கிற	அடி இணையே	இரண்டு திரு ளையே
வெண் மல்லிகையும்	வெளுப்பான மல்லிகை புஷ்பங்களையும்	ஓதி	துதிசெய்து
		பணிவது	ஸேவிப்பது
		உறும்	ஸ்வரூபத்திற்கு ததாகும்.

கீழ்ப்பாட்டில் சொன்னபடி நமக்கு மிகவும் ஸந்நிஹிதனாயி
கும் திருவேங்கடநாதனைத் ஆச்ரித்து வணங்குவதுதான் நாம்
யவேண்டியசெயலென்கிறாரிதில்.

வரை.— சந்தன விருக்ஷங்கள் மலயபர்வதத்திலே து
பெரும்பாலாக உண்டாவதால் சந்தனத்தை மலயஜம் என்
வழங்குவதுண்டு. அதைக்கொண்டு வரைச் சந்தனக்குழம்பு எ
கிறார். எம்பெருமானையும் அரசனையும் ஆசார்யனையும் அணுகும்
து வெறுங்கையனாகச் செல்லக்கூடாது. ஏதாகிலும் உபஹாரத்
எடுத்துக்கொண்டு செல்லவேணுமென்பது சாஸ்த்ரம். அதை
கருதி நல்ல சந்தனத்தையும் எம்பெருமான் திருமேனிக்குத் தகு

லயுயர்ந்த ஆபரணங்களையும் நல்ல பீதாம்பரத்தையும் நல்ல பரிமளம் வீசுகிற புஷ்பங்களையும், இவைகளில் ஏதாவதொன்றையாவது, கையிலெடுத்துக்கொண்டுபோய் பெருமான் திருவடிகளில் ஸமர்ப்பித்துப் பலவகையாலும் துதிசெய்து வணங்கிநிற்பது தான் நமஸ்வரூபாநுரூபமான கார்யம் என்றபடி.

ஆதிகண்ணின்ற:— புஷ்பங்களும் பூஜையும் முதன்மையுடையவனுக்குத்தான் தகுமாதலால் ஸ்ருஷ்டிக்கு முன்பே இருப்பவன் என்று சொல்லி ஜகத்காரணமானதுபற்றி பூஜையும் அவன் விஷயத்தில் ப்ராப்தமாயிற்றென்றபடி.

உறுங்கண்டாய் நன்னெஞ்சே யுத்தமன் நற்பாதம்
உறுங்கண்டா யொண்கமலந்தன்னால்—உறுங்கண்டாய்
ஏத்திப் பணிந்தவன்பே ரீரைஞ்ஞூ றெப்பொழுதும்
சாத்தி யுரைத்தல் தவம் (77)

நல் நெஞ்சே	(எனக்கு) நல்ல மனமே	சாத்தி	அந்தத் தாமரைப் புஷ்பங்களை ஸமர்ப்பித்து
உத்தமன்	புருஷோத்தமனுடைய	ஏத்தி	துதிசெய்து
நல் பாதம்	நன்மையுடைய திருவடிகள்	பணிந்து	தண்டனிட்டு
உறும் கண்டாய்	நாம் ஆச்ரயிக்கத் தகுதியானவைகாண்.	அவன் பேர் ஈர் ஐஞ்ஞூறு	அவனுடைய நாமங்களாயிரத்தையும்
ஒண் கமலம் தன்னால்	அழகான தாமரைப்பூவால்	எப்பொழுதும்	எல்லாக் காலத்திலும்
(அத்திருவடிகளை பூஜிப்பது)		உரைத்தல்	சொல்லுகிறதாகிற
		தவம்	தபஸ்ஸானது
உறும் கண்டாய்	நமக்கு பொருந்தியது காண்.	உறும்கண்டாய்	உரியதுகாண்.

உறுங்கண்டாய்:— எனக்கு அநுகூலமாயிருந்துகொண்டு நான் சொன்னபடி செய்கிற மனமே! உனக்கு ஒன்று சொல்லுகிறேன் கேள். தரம் பாராமல் எல்லார்க்குமொக்க வருள்புரிவதென்கிற மஹாகுணம் வாய்ந்த புருஷோத்தமனுடைய திருவடிகள்தான் நாம்

அடைய வேண்டியவை; என்பதை நிச்சயமாகக்கொள். மேலும் அத்திருவடிகளைக் கையிலகப்பட்ட நல்ல புஷ்பங்களால் அர்ச்சிப்பது தான் நாம் உடம்பால் செய்யவேண்டிய வேலையென்றும் நிச்சயித்துக்கொள். தவிரவும் நாமவனை அடைவதற்கு ஊன்வாடவுண்ணாது உயிர் காவலிட்டு உடலிற்பிரியாப்புலனைந்தும் நொந்து வாட வாடத் தவம் புரியவேணுமென்றே நினைக்காதே; அவனுக்கு அழகிய புஷ்பங்களைச் சாத்தி ஸ்தோத்ரம் செய்து பக்தி ப்ரகர்ஷத்தால் தண்டனிட்டு அவனது ஆயிரம் திருநாமங்களையும் சொல்லிக்கொண்டிருப்பதுதான் நாம் செய்யவேண்டிய தவம்; என்றும் உறுதியை அடைவாய்; என்று தம் நெஞ்சுக்கு உபதேசித்தாராயிற்று.

தவஞ்செய்து நான்முகனே பெற்றான், தரணி
நிவர்ந்தளப்ப நீட்டிய பொற்பாதம்—சிவந்த தன்
கையனைத்து மாரக் கழுவினான், கங்கைநீர்
பெய்தனைத்துப் பேர்மொழிந்து பின். (78)

நான்முகனே	பிரமனொருவனே
தவம்செய்து	தவத்தைச் செய்து
பெற்றான்	அதன் பலத்தை அடைந்தான்.
(ஏனெனில்)	
தரணி	பூமியை
அளப்ப	அளப்பதற்காக
நிவர்ந்து	நிமிர்ந்துநின்று
நீட்டிய	நீளும்படிசெய்த
பொன் பாதம்	அழகான திருவடியை
கங்கை நீர் பெய்து	கங்கையாகப் பெருகப்போகும் கமண்டல ஜலத்தை வார்த்து
அனைத்து பேர் மொழிந்து	அவனது திருநாமங்களெல்லாவற்றையும் சொல்லி
பின்	பிறகு
தன் சிவந்த கை அனைத்தும் ஆர	தன்னுடைய சிவப்பு நிறமுள்ள கைகளெல்லாம் தன்யங்களாகும்படி
கழுவினான்	விளக்கினான் (அபிஷேகம் செய்தான்).

அவனுடைய பேர் ஈரைஞ்ஞூறுஉரைத்தலே தவமாகுமென்றார் கீழில். அப்படித் தவம் செய்து பயனைப்பெற்றவன் நான்முகன் ஒருவனே என்கிறார் இதில்.

தவம் செய்து:— ஸ்ரீய: பதியான புருஷோத்தமன் தேவேந்திரனுக்காகக் கார்யம் செய்யவேண்டி வாமநனாய் வந்து மாவலியிடம் மூவடி மண்ணிரந்து அங்ஙனம் பெற்றுக்கொண்டு உடனே அளக்கவேண்டி ஒரு திருவடியைப் பூமியிலே வைத்து மற்றொரு திருவடியை உடனே நீட்டுங்கால் அத்திருவடி காடுமேடுகளையெல்லாம் கடந்து ஸ்வர்கலோகத்தையும் தாழ்த்தி ஸத்யலோகத்தின் வழியாகச் செல்லவே பிரமன் வந்து வணங்கி அவன் திருநாமங்களாகிற மந்த்ரங்களை உச்சரித்துக்கொண்டு தன் கமண்டல தீர்த்தத்தால் அத்திருவடிக்குத் திருமஞ்சனம் செய்துவைத்தான். என்னே! அவன் பெற்ற பாக்யம். அவனது தவப்பயன் என்னே! என்று நான்முகனைக் கொண்டாடினபடியாம்.

கங்கைநீர் பெய்து:— பிரமன் பெருமான் திருவடியைக் கழுவியபின் கீழேவிழுந்த தீர்த்தம் கங்கையென்று பிரஸித்தமாயிருக்க, இங்கு பிரமன் கங்காதீர்த்தத்தால் கழுவினானென்பது எங்ஙனம் பொருந்துமென்றால், பிரமன் பெய்து திருவடி விளக்கின தீர்த்தமே அடுத்தக்ஷணத்தில் கங்கையாகப் போகிறது என்ற கருத்தைக் கொண்டு கங்கைநீர் பெய்து என்று சொன்னது. "கங்கை நீர்" கங்கையாகப் பரிணமிக்கப் போகும் கமண்டல தீர்த்தம் என்றே பொருள்.

பின்னின்று தாயிரப்பக்கேளான், பெரும்பணைத்தோள்
முன்னின்று தானிரப்பாள் மொய்மலராள்--சொல்நின்ற
தோள்நலத்தான் நேரில்லாத் தோன்றல், அவனளந்த
நீணிலந்தா னத்தனைக்கும் நேர். (79)

தாய்	தாயான கௌஸல்யா தேவி	கேளான்	அதனைக்கேளாதவனையும்
பின் நின்று	பின்னால் நின்று கொண்டு	பெரு பணை தோள்	நீண்டும் பருத்துமிருக்கிற மூங்கில் போன்ற தோள்களையுடைய
இரப்ப	என்னை விட்டுவிட்டுப் போகலாகாது என்று கெஞ்சிக் கேட்டபோதிலும்		

மொய் மலராள் தான்	மலர்ந்த தாமரைப்பூவில் பிறந்த லக்ஷ்மீ தேவியின் அவதாரமான ஸீதையானவள்
முன்னின்று	முன்னே நின்றுகொண்டு
இரப்பாள்	காட்டிற்குப் போகலாகாது என்று ப்ரார்த்தித்தவளாவிலும்
(அதையும் கேளாமல்)	
சொல்நின்ற	தந்தையின் சொல்லிலே நின்ற
தோள்நலத்தான்	தோள்வலிமையுடையவனும்
நேர் இல்லா தோன்றல்	தனக்கு நிகரில்லா ஸ்வாமியான ஸ்ரீ ராமனுடைய
அத்தனைக்கும்	காட்டுக்குச்சென்ற அச்செயலுக்கு
ஜவன் அளந்த நீள் நிலம் தான் நேர்	அவன் இப்பெரிய வுலகத்தை அளந்ததென்கிற செயல் தான் ஒப்பாகும்,

அப்பெருமானுடைய கல்யாண குணங்களுக்கு அவன் குணங்களே ஒப்பாகுமேயன்றி வேறொருவமையிட்டுச் சொல்லவியலாது என்கிறாரிதில்.

பின்னின்று :—ஸ்ரீமந் நாராயணன் ஸ்ரீ ராமனாய் வந்து தோன்றித் தந்தையின் நியமனத்தைக்கொண்டு காடேறப்போக நிச்சயிக்குமளவில் தாயாகிய கௌஸல்யைவந்து கிட்டி நான் ஏகபுத்ரை. உன்னைவிட்டு பிரிய ஸம்மதியேன். காடுகளும் அநேக தோஷங்களுடையவை; நீ போகலாகாது; என்று மறுக்கவும் தனது தேவியாரான ஸீதையும் அக்ரதஸ்தே கமிஷ்யாமி என்று முன்னின்று, உன் ஸுகுமாரமான திருமேனியை வநத்தில் எப்படி வருந்தப் பார்த்திருப்பேன்; ஆதலால் நீ போகலாகாது; என்று தடுக்கவும் தான் அவைகளை மதியாது தமப்பன் வார்த்தையிலேயே ஸ்திரமாய் நின்று மஹரிஷிகளையும் தேவர்களையும் காக்கவேண்டுமென்பதைக் கருத்திலே கொண்டு காட்டிலே நடந்துசென்ற செயலுக்கு ஒப்பாக வெதைச் சொல்லலாமென்றால், யோக்யன் அயோக்யன் என்ற முறையைப் பாராமல் எல்லார் தலையிலும் திருவடியை வைத்துலகளந்த செயலே ஒப்பாகும். உன் பெருங்குணத்திற்கு உன் மற்றொரு பெருங்குணமே ஒப்பாகுமன்றி வேறொரு பொருள் கிடையாதென்று சொல்லித்தாயிற்று.

நீணிலந்தான்நேர்:—இராமபிரானுடைய குணம் இப்பூமிபோல் பெரியது என்று சொல்லலாமேயன்றி சொல்லிக் கலக்கட்டப்போவதில்லை யென்றபடி.

சொல் நின்ற:— "தகப்பன் வார்த்தையில் நின்றவனை" என்பதையன்றி, ஸ்ரீமத் ராமாயணத்தில் ப்ரதிபாதிக்கப்பட்டவன் என்றும் பொருள் விரிப்பதுமுண்டு.

தோள் நலத்தான்:— தோள்பலத்தையுடையவனென்றபடி. "தோள் நலந்தான்" என்கிற பாடமும் சிலரால் வழங்கப்படும். தோளையுடையவனுடைய நலந்தானத்தனைக்கும் என்று கூட்டிப் பொருள் வரைக.

நேர்ந்தேனடிமை நினைந்தேனொண் கமலம்
ஆர்ந்தேனுன் சேவடிமே லன்பாய்—ஆர்ந்த
அடிக்கோலம் கண்டவர்க் கென்கொலோ, முன்னைப்
படிக்கோலம் கண்டபகல். (80)

அடிமை	உனக்கு பணிவிடை செய்வதில்	ஆர்ந்தேன்	த்ருப்தனுனேன்
நேர்ந்தேன்	ஈடுபட்டேன்	ஆர்ந்த	பூர்ணமான
ஒண் கமலம் அது	அழகான தாமரை போன்ற அந்தத் திருவடிகளை	அடிகோலம்	திருவடிகளின் அழகை
நினைந்தேன்	சிந்தித்தேன்	கண்டவர்க்கு	ஸேவித்தவர்களுக்கு
உன் சே அடி மேல்	உனது சிவந்த திருவடிகளின்மேல்	முன்னை	முன்பு
அன்பாய்	பக்தியுடையவனாய்க் கொண்டு	படி கோலம் கண்டபகல்	திருவுடம்பை ஸேவித்தகாலமானது
		என் கொல்	எப்படியாவதோ?

(அவன் திருமேனி ஸேவையிலும் திருவடி ஸேவை சிறந்ததென்றபடி)

நேர்ந்தேன்:— பெருங்குணத்தனான சக்ரவர்த்தித்திருமகனுடைய திருவடிகளிலே என் அன்பை வைத்தேனென்கிறாரிதில். ஸ்ரீ ராமபிரானுக்குப் பணிவிடை செய்வதே நமக்கு ப்ராப்தம் என்று துணிந்தேன். அவனுடைய தாமரையன்ன பொன்னடிகளையே

நினைத்துக்கொண்டிருக்கிறேன். அவனது திருவடிகளில் எனது அளவுகடந்த அன்பைவைத்து அதனால் என்னைப் பரிபூர்ணனாக நினைத்திருக்கிறேனென்றார்.

உலகில் குழந்தைகளுக்குத் தங்கள் தாயின் கொங்கைகளிலேயே நோக்கிருக்குமாப்போலே சேஷபூதனிழியுந்துறையான திருவடிகளிலேயே ஆழ்வாருக்குள்ள அபிநிவேசத்தைக்கண்ட சிலர் பெருமானுடைய திருமேனி முழுவதும் நமக்குத்தேச்யமாயிருக்கச் செய்தே நீர் திருவடியைமட்டும் துதிப்பது சரியோ? வென்று வினவ அதற்கு விடையளிக்கிறார் பின்னடிகளில்.

அவனது திருவடி ஸேவையைப்பெற்றவர்களுக்குத் திருமேனி ஸேவையைப் பெற்ற காலம் என்னுவதோ? என்றார். அடியார்களுக்குத் திருவடிகளே உத்தேச்யமாதலால் அவனது திருமேனியை ஸேவித்தவர்களைக் காட்டிலும் திருவடியை ஸேவித்தவர்களே சிறந்தவர்கள் என்பது இவரது கொள்கை. தவிரவும் ஸௌந்தர்யம் முதலிய குணங்களாலேற்படுகிற போக்யதையாலும் குறைவற்றிருப்பதால் திருவடிகளை ஸேவித்த காலத்தில் திருமேனியை ஸேவித்தகாலம் தாழ்ந்ததென்றே தோன்றுகிறது என்றார். இத்தால் கைங்கர்யைகரதியான சேஷபூதனுக்குத் திருவடிகளிலேயே அன்பும் ஆபிமுக்யமும் அமையவேண்டியது அவச்யமென்பது தெரிவிக்கப்பட்டது.

பகல்கண்டேன் நாரணனைக் கண்டேன், கனவில்
மிகக்கண்டேன் மீண்டவனை மெய்யே—மிகக்கண்டேன்
ஊன்திகழு நேமி யொளிதிகழும் சேவடியான்
வான்திகழும் சோதி வடிவு. (81)

பகல்	பகற்காலத்தை	கனவில்	(ஸ்வப்நத்திலும்) மானஸ ஸாக்ஷாத்காரத்திலும்
கண்டேன்	ஸாக்ஷாத்கரித்தேன்		
நாரணனை	ஸ்ரீமந்நாராயணனை		
கண்டேன்	ஸாக்ஷாத்கரித்தேன்	மிக	தெளிவாக

அவனை	அப்பெருமானை	ஒளிதிகழும் சே	தேஜஸ்விளங்குகிற சிவந்த திருவடிகளை
மீண்டு	விஷயங்களிலிருந்து திரும்பி	அடியான்	யும் உடையவனை
மெய்யே கண்டேன்	ப்ரத்யக்ஷ துல்யமாம்படி ஸேவித்தேன்	வான்திகழும் சோதி வடிவு	பரமபதத்தில் விளங்குகிற தேஜோமயமான அப்பெருமான் திருமேனியையும்
ஊன் திகழும் நேமி	திருமேனியில் ப்ரகாசிக்கிற திருவாழியையும்	மிக கண்டேன்	விசேஷமாக ஸேவித்தேன்.

இப்பாட்டில் தான் எம்பெருமானை ஸாக்ஷாத்கரித்ததைப் பேசுகிறார்.

பகல் :—உலகில் ஒவ்வொரு நாளும் பற்பல ஜாதிகளில் பலர் பிறந்துகொண்டிருந்தாலும் ஞானிகள் அவர்களைப் பிறந்தவர்களாகக் கருதமாட்டார்கள். திருமந்திரத்தினர்த்த ஞானம் எவர்களுக்கு என்றைக்கு உண்டாயிற்றோ ; அவர்களைத்தான் அன்று பிறந்தவர்களாகச் சொல்லுவார்கள். அங்ஙனமே அந்த ஞானத்தை அவர்கள் மறந்தார்களாகில் அப்பொழுது அவர்களை உயிரோடிருப்பினும் இறந்தவர்களாகவே கருதுவார்கள் உடல் பிறந்தநாளைக் கருதாது ஈச்வரஞானம் பிறந்தநாளைத்தான் பிறந்தநாளாகக் கருதுவது பெரியோர்களின் இயல்பு. அதுபோல் இப்பிரகிருதியில் இரவும் பகலும் மாறிமாறி நடந்துக்கொண்டிருந்தாலும் அவைகளையெல்லாம் இராக்காலமாகவே ஞானிகள் கருதுவார்கள். என்று எந்ததினத்தில் ஸ்ரீய: பதியான நாராயணனைக் காண்கிறார்களோ ; அந்த தினத்தைத்தான் பகல் என்பார்கள். அந்தக் கணக்கில் இவ்வாழ்வார் தான் திருமாலை ஸேவித்தநுபவித்ததுபற்றி பகல்வேளையைப் பார்த்தேன் என்றார். இவ்வளவு காலம் அவனைக் காணுதபடியால் காலமெல்லாம் காளராத்ரியாய்க் கழிந்தது. இப்பொழுது அஸ்தமியாத ஸூரியனை நாராயணனைக்கண்டபடியால் பகற்கண்டேனென்றபடி. இவ்வர்த்தம் ஸம்ஸாரிகளுக்குப் புரியாதாதலால் விளங்கச் சொல்லுகிறார் நாரணனைக் கண்டேனென்று. நாராயணனைக் கண்களால் கண்டுகொண்டேன். ஆதலால் பகல் கண்டேனென்று சொன்னபடி.

ஆழ்வார் நாரணனைக் கண்டேன் கண்டேன் என்று சொல்லுவ
தெல்லாம் ஸ்வப்நம்போன்ற மாநஸாநுபத்திலே கண்டதைத்தாமே
சொல்லுவது ; என்று சிலர் நினைக்க, அப்படியல்ல வென்கிறு
மேலடிகளால். நான் பார்த்தது ஸ்வப்நத்தில் போலன்று. நித்ய
ஸூரிகள் பரமபதத்தில் எப்படிக் காண்கிறார்களோ ; அப்படியே
விஷயாதிகளில் ஆசையைவிட்டு நேரில் கண்களால் கண்டநுப
வித்தேன். திருவாழி துடக்கமான பஞ்சாயுதங்களையும் அவனது
திருமேனியில் ஸேவித்துக்கொண்டேன். ஒளிவீசுகிற அவனது
திருவடிகளையும் ஸாக்ஷாத்கரித்தேன். நித்யஸூரிகள் ஸாக்ஷாத்
காரம்போன்ற ஸாக்ஷாத்காரத்தையே நானும் பெற்றேனென்றபடி

வான்திகழும் சோதி வடிவு :—மேகம்போல் விளங்கும் திரு
வுடம்பையும் ஸேவித்தேனென்றும் பொருள் விரிப்பதுமுண்டு.

வடிக்கோல வாள்நெடுங்கண் மாமலராள், செவ்வி
படிக்கோலம் கண்டகலாள் பன்னாள்—அடிக்கோலி
ஞாலத்தாள் பின்னும் நலம்புரிந்த தென்கொலோ
கோலத்தா லில்லைகுறை. (82)

வடிகோலம்	கோதில்லாமல் சுத்தமான அழகை யுடையவளாயும்	பின்னும்	அதை நேரில் பார்த் திருந்தும்
வாள்நெடும் கண்	ஒளிவீசுகிற நீண்ட திருக்கண்களை யுடையவளாயும்	ஞாலத்தாள்	பூமிப் பிராட்டியான வள்
மாமலராள்	உயர்ந்த தாமரை மல ரில் அவதரித்தவளு மான பெரிய பிராட்டியார்	அடிகோலி	பலவிதமாய் பாரித் துக்கொண்டு
செவ்வி படி கோலம்கண்டு	சிறப்பான அப்பெரு மானது திருமேனி அழகைக்கண்டு	நலம்புரிந்தது என்கொலோ	அவனையே ஆசைப் பட்டுக்கொண்டிருப் பது என்னே ?
		(அதற்குக் காரணம்)	
பல் நாள் அகலாள்	எக்காலத்திலும் அவனைப்பிரியாது கூடியிருப்பள்	கோலத்தால் குறையில்லை	(எவ்வளவுபேர் அநு பவித்தாலும்) அழகி னால் குறைவின்றி இருப்பதுதான்

கீழ்ப்பாட்டில் நாராயணனைக் கண்டேனென்றார். அப்பெருமான் பிராட்டிமார்களுடன் கூடினபடியே எனக்குக் காட்சிகொடுத்த தென்கிறாரிதில்.

வடிக்கோல:— பெரியபிராட்டியார் பூமிப்பிராட்டியார் இவர்களுடன்கூடின பெருமானை ஸேவிக்கப் பெற்றேனென்பதை ஒரு சமத்காரமாகப் பேசுகிறார். நான் ஸாக்ஷாத்கரித்தபெருமானைப் பெரியபிராட்டியார் அகலமாட்டேனென்று சொல்லிக்கொண்டு பிரியாமலிருக்கிறாள். அப்பிராட்டியோ சிறிதும் குறைசொல்வதற்கிடமின்றி வடிக்கட்டின அழகுவாய்ந்தவள். ஒளிவீசுகிற காதளவும் நீண்ட திருக்கண்களை யுடையவள். ஸௌகுமார்யத்தின் ஏற்றம் தோற்றும்படி சிறந்த தாமரைமலரில் பிறந்தவள். இவ்வளவு பெருமைவாய்ந்த பெரியபிராட்டியார் எம்பெருமானது லோக விலக்ஷணமான கண்டமாத்திரத்தாலே மேல்விழுப்பண்ணுகிற சிறந்த திருமேனியைப்பார்த்துப் பக்கநோக்கின்றி அவனையே கண்களால் பருகிக்கொண்டு அகலகில்லேன் அகலகில்லேன் என்று புலம்பிக்கொண்டு பலகாலும் அவனைவிட்டுப் பிரியாமலிருக்கிறாள். இதனைத் தெரிந்துவைத்தும் பூமிப்பிராட்டி பலபடியாக அவனை அநுபவிக்க வேணுமென்று பாரித்துக்கொண்டு அவனையே ஆசைப்பட்டுக்கொண்டிருப்பது எதற்காக ; வென்று கேட்கிறார். அழகில் சிறந்தவொருத்தி அநவரதமிருக்க அவனையே மற்றொருத்தி ஆசைப்படுவதுண்டோ? என்று வினவியபடி.

பிறகு அக்கேள்விக்குத் தானே ஸமாதானமுரைக்கிறார் நான்காமடியால்.

உலகில் ஒருவனை ஒருவள் ஆசைப்பட்டிருந்தால் மற்றொருவள் அவனையே வேண்டாமலிருப்பதற்குக் காரணமுண்டு. விஷயம் அபூர்ணமானகையாலே. அவன் குறைவுள்ளவனானகையால் அவனது போக்யதை ஒருத்திக்கே போதாமையாலே மற்றொருத்தி அபேக்ஷிக்கப் பிரஸக்தியில்லை. அங்ஙனம் ஒரு சிறு குட்டையில் ஒருவன் மூழ்க விறங்கினால் மற்றொருவன் அதில் இறங்குவதில்லை. ஒருவன் மூழ்கினதாலேயே அக்குட்டை கலங்கிச் சேறாகிவிடுமாத

லால் மற்ருெருவன் அதை கண்ணெடுத்துப் பார்ப்பதுமில்லை அதுவே ஒரு பெரிய பிரவாஹமாயிருந்தால் பலர் இறங்கி மூழ் தாபத்தைத் தணித்துக்கொள்வதுண்டு. ஆதலால் விஷயத்தி பூர்ணதைதான் பலர் வேண்டுவதற்குக் காரணம். அதுபோ எம்பெருமான் பரிபூர்ணனுகையால் எவ்வளவுபேர் எவ்வளவுகால அநுபவித்தாலும அவனது திருமேனியில் அழகுக்கும் போக்ய தைக்கும் குறைவுவராது.

அவன் கோலத்தால் குறைவில்லாத பூர்ணனுகையால் பெரிய பிராட்டியார் அவனதாகத்திருப்பதுமறிந்தும் பூமிப்பிராட்டியா அவனிடம் ஆசைவிடாது பலபடியாக அனுபவிக்கவேணுமென்று பாரித்து நிற்கிருள் என்றபடி. இத்தால் தான் பிராட்டிமார்களுடன் கூடின பரிபூர்ண ஸௌந்தர்யவானுன பெருமானை ஸேவித்தேன் என்பதைக் காட்டினுராயிற்று.

வடிக்கோல :— கூர்மையுள்ளதும் அழகு பொருந்தியது மான திருக்கண் என்று கொண்டு கண்ணுக்கே விசேஷணமாகச் சொல்லலாம்.

அடிக்கோலி: விருந்துண்ணப்போகிறவன் இங்ஙனம் பக்ஷ்யங் களை உண்ணவேணும். இங்ஙனம் சித்ரான்னங்களை உண்ணவேணும் என்று பலபடியாகத் திட்டம்போட்டுக்கொண்டு போமாப்போலே, பலபடி அவனை அநுபவிக்கவேணுமென்று பாரித்துக்கொண்டு; எனப்பொருள்.

குறையாக வெஞ்சொற்கள் கூறினேன் கூறி
மறையாங் கென வுரைத்த மாலை—இறையேனும்
ஈயுங் கொலென்றே யிருந்தேனெனைப்பகலும்
மாயன் கண்சென்ற வரம். (83)

மறை	வேதங்கள்	மாலை	ஸர்வேச்வரனை
ஆங்கு என உரைத்த	அது அதுவென்று பரோக்ஷமாகச் சொன்ன	குறை ஆக	குறையாகும்படியாக
		வெம் சொற்கள்	கொடிய சொற்களாலே

கூறினேன்	சொன்னேன்	வரம்	வரங்களை
கூறி	அப்படிச்சொல்லி	இறையேனும்	கொஞ்சமாவது
மாயன் கண்	ஆச்சரிய சேஷ்டிதனை அவனிடத்திலிருந்து	ஈயும் கொல்	கொடுப்பனோ என்று
சென்ற	வரக்கடவதான	எனைபகலும் இருந்தேன்	ஸர்வகாலத்திலும் கா...

பிராட்டிமார்களுடன் கூடியிருக்கிற பெருமானை ஸேவித்துவிட்டு, இச்சேர்த்தி யழகுக்குப் பொருத்தமாகக் கவிபாடத் தெரியவில்லையே நமக்கு. ஏதோ கடும் சொற்களால் அவனுக்குக் குறைவுண்டாகும்படி செய்கிறேமே; என்று தன்னை நொந்துகொள்கிறுரிதில்.

குறையாக.— வேதங்கள் எம்பெருமானுடைய குணங்களையெல்லாம் பூர்ணமாக வர்ணித்துச்சொல்லவேணுமென்று ஆரம்பித்துக் கடைசியில் யதோ வாசோ நிவர்த்தந்தே, அப்ராப்ய மநஸா ஸஹ என்று வாக்குக்கும் மனத்திற்கும் எட்டாத நிலத்திலிருப்பவன்; அவனையும் அவனது குணங்களையும் இதம் ஈத்ருசம் என்று சொல்லமுடியாது. மனத்திற்கும் எட்டாமல் அங்கே இருப்பவன்; என்று பரோக்ஷமாகப் பேசப்படும் பெருமானை என்னுடைய க்ரூரமான சொல்லால் போற்றினேன். ஆவியை அரங்கமாலைஅழுக்குடம் பேச்சில் வாயால் தூய்மையில் தொண்டனேன் நான் சொல்லினேன் தோல்லைநாமம் என்றபடி என்னுடைய எச்சில் வாயால் சொற்களியற்றிக் கவிபாடி அவனையும் அபரிசுத்தனுக்கினேன். இப்படி அவனையும் குறைவுள்ளவனுரப்படி செய்ததுமன்றி நான் அவனிடம் பிரயோஜநாபேக்ஷை பிறந்தவனுயிருந்தேனே; இது என்ன வெட்கக்கேடு; என்கிறுர் பின்னடிகளில்.

எனது வாக்குத் தூய்மையிலாமையினுலும் அவன் பெருமைக்குத் தகுந்த கவிபாடமுடியாமையினுலும் ஏதோ சில சொற்களால் நான் அவனைத் துதித்தது அம்ருதத்தில் விஷத்தை ஏற்றட்டது போலாகும். நான் நினைத்திருப்பதோ வேறு. ஏதோ அவனுக்கு அரும்பெரும் உபகாரங்கள் செய்துவிட்டதுபோல் கருதி அவன் இதற்குப் பதிலாக அவனது கிருபையால் நமக்கு ஏதாகிலும்

அருள் புரிவானோ ? என்று கையை விரித்துக்கொண்டிரு கிறேன். அவனைக் கெடுத்ததுமன்றி பிரத்யுபகாராபேக்ஷையுட இருக்கிறேனே; என்று தன்னை வெறுத்துக்கொண்டபடி.

எம்பெருமானுடைய அநுக்ரஹம் நம்முடைய கவிக் குத்தக்க பாரிதோஷிகத்தைக் கொடுக்குமென்று காத்திருந்தே னென்பது பின்னடிகளுக்குத் திரண்டபொருள்.

வரங் கருதித்தன்னை வணங்காத வன்மை
உரங் கருதிமூர்க்கத் தவனை—நரங்கலந்த
சிங்கமாய்க் கீண்ட திருவனடியிணையே
அங்கண்மா ஞாலத்தமுது. (84

வரம் கருதி	(ப்ரஹ்மாதிகள் கொடுத்த) வரங்களை நினைத்துக்கொண்டு	நரம்கலந்த சிங்கமாய்	நருஸிம்ஹ வடிவத் தனாகி
தன்னை வணங்காத	தன்னை (ஒருவர்க் கும்) வணங்காதவ னையும்	கீண்ட	பிளந்து பொகட்ட
வன்மை	வரபலத்தையும்	திருவன்	அழகியானுடைய
உரம்	உடம்பின் பலத்தையும்	அடி இணையே	சேர்ந்திருக்கிற திருவடிகளே
கருதி	நினைத்துக்கொண்டு	அம் கண் மா ஞாலத்து	அழகிய இடத்தை யுடைய இப்பெரிய பூமியில்
மூர்க்கத் தவனை	மூர்க்கனாயிருக்கிற ஹிரண்யகசிபுவை	அமுது	அம்ருதமாகும்.

நீர் கவிபாடுவதால் அவனுக்குக்குறை ஏற்படுமென்றால் இனிக் கவிபாடுவதை நிறுத்திவிடுமே! என்று சிலர் கேட்க, அவனது போக்யதை என்னைத் தூண்டுகிறது. நானென்செய்வேன். விட்ட போகாத போக்யதையுள்ளவன் அவ்வீசன் என்கிறார் இப்பாட்டில்

வரங்கருதி :—ஹிரண்யகசிபு தான் பிரமனிடம் பெற்றவரங் களையும் தனது புஜபலத்தையும் மனத்தின் தார்ட்யத்தையும் நினைத் துக்கொண்டு, நம்மை யார் என்செய்யலாவது. நமக்கு மேலார் ! நாம் எதற்கு ஒருவனை வணங்கவேணும்? என்று அஹங்கா

மடைந்து ஈச்வரனையும் வணங்காத மன்னனாய் நின்றான். அந்த மூர்க்கனையும் திருமால் நரசிங்கமாய்த் தோன்றிப் பிளந்தெறிந்து வீரலக்ஷ்மியுடன் விளங்கினான். அவனது திருவடிகளே இப் பெரிய பூமியில் நமக்கு அம்ருதம்போல் போக்யமானது. அம்ருதத்தைக் கண்டால் யாருக்கும் உண்ணவேணும் என்று அவா பிறப்பது ஸஹஜம். அதுபோல் எனக்கும் அவனைப்பாடிக் களிக்க வேணுமென்ற பேரவா பிறக்கிறது. அதற்கு அவனது போக்யதைதான் காரணமென்றார்.

நரங்கலந்த சிங்கமாய்:— முன்புள்ளதாலொன்றாலும் சாகேன் என்று வரமிருந்தபடியால் முன்பில்லாத புதிதான நரசிங்கமாய்த் தோன்றினான் என்பது.

திருவன்:— அழகியான் தானே அரியுருவன் தானே என்றும் நாரஸிம்ம வபு: ஸ்ரீமாந் என்றும் சொல்லுகிறபடி ந்ருஸிம்ஹனையே ஞானிகள் அழகனாகப் பேசுவார்கள்.

அமுதென்றும் தேனென்று மாழியானென்றும்
அமுதன்று கொண்டுகந்தானென்றும்— அமுதன்ன
சொன் மாலை யேத்தித் தொழுதேன், சொலப்பட்ட
நன் மாலை யேத்தி நவின்று. (85)

அமுது என்றும்	அம்ருதமென்றும்	சொலப்பட்ட	சொல்லப்பட்டிருக்கிற
தேன் என்றும்	தேனென்றும்	நல் மாலை	நல்லவனான திருமாலை
ஆழியான் என்றும்	திருவாழியைக் கையிலேந்தினவன் என்றும்	ஏத்தி ஏத்தி நவின்று	எப்பொழுதும் துதி செய்துகொண்டு வாயாரச் சொல்லி
அன்று	தேவர்கள் வேண்டிக் கொண்ட அக்காலத்தில்	அமுது அன்ன	அம்ருதத்திற்கொப்பான
அமுது கொண்டு	அம்ருதத்தைக் கொடுத்து	சொல் மாலை	தமிழ்ச் சொல் மாலையால்
உகந்தான் என்றும்	ஸந்தோஷித்தவனென்றும்	தொழுதேன்	வணங்கி நின்றேன்.

பரம போக்யனை பரமபுருஷனைப் பாடுவதால் என
பாட்டுகளும் அம்ருதம்போல் போக்யமாய்விட்டனவென்கிரு

அமுது:— எம்பெருமானை வேதங்களும் மற்றும் அறிவி
சிறந்த ஞானிகளும், அம்ருதமென்றும் தேன் என்றும், சக்
பாணி என்றும், தன்னை வேண்டாத அமரர்களுக்கு அம்ருத
தைக் கொடுத்துத் தான் த்ருப்தி அடைந்தானென்றும் பலவ
ருகப் புகழ்கின்றார்கள். இப்படி ஸர்வேந்திரியங்களுக்கும் போ
யமாம்படி அம்ருதமான, ஸர்வேச்வரனை எனது கடுஞ் சொ
களாலே ஸ்தோத்ரம் செய்து நின்றேன். அதனால் என
சொற்களும் அம்ருதமாய்விட்டன. அம்ருதத்தைப் புகழ்ந்
தால் சொற்களும் அம்ருதமாயின என்றபடி.

அமுது என்றும்:— எம்பெருமானுக்கு ஆழியான் என்ற
போல் அமுது, தேன், என்பதும் திருநாமங்கள். ஆழ்வார்க
தேனே பாலே என்றும் பச்சைத் தேனை என்றும் பெருமானை
கூடுப்பிடுவார்கள். அவனுடைய போக்யதையை நினைத்கா
போக்ய வஸ்துக்களாலேயே அவனைக் கூப்பிடச் சொல்லும்.

உகந்தான்:— அடியார்களுக்குக் காரியம் செய்துவை
பதே தன் உகப்புக்காரணம். ஆதலால் தேவர்களுக்கு அம்
தத்தைக் கொடுத்து த்ருப்தனானன்.

அமுதன்ன சொன்மாலை:— கீழே தனது சொற்களை வெ
சொற்கள் என்று தாழ்ந்தவைகளாகக் கருதினாலும் ஸர்வேச்
ரன் விஷயமானதுபற்றி அமுதமாகவே நினைத்தார் இப்பொழுது
விஷய வைலக்ஷண்யத்தாலன்றோ சொற்களுக்கு வைலக்ஷ
ண்யம்; என்றபடி,

நவின்றுரைத்த நாவலர்கள் நாண்மலர்கொண்டு [ஆங்கே
பயின்றதனால் பெற்ற பயனென்கொல்—பயின்றார்தம்
மெய்த் தவத்தால் காண்பரிய மேக மணிவண்ணனை [யான்
எத்தவத்தால் காண்பன் கொ லின்று. (86)

நவின்று உரைத்த	அவன் பெயர்களை எப்பொழுதும் சொன்ன
நாவலர்கள்	கவிகள்
நாள் மலர் கொண்டு	அப்பொழுதலர்ந்த புஷ்பங்களைக் கொண்டு
ஆங்கே	அப்பெருமானிடம்
பயின்றதனால்	ஆச்ரயித்ததனால்
பெற்ற	அடையப் பெற்ற
பயன்	புருஷார்த்தம்
என் கொல்	ஏதோ?
பயின்றார்தம்	அப்படி ஆச்ரயித்தவர்களுடைய

மெய் தவத்தால்	உடம்பு நோவச் செய்கிற தவத்தால்
காண்பு அரிய	காணமுடியாத
மேகம் மணி வண்ணனை	மேகம்போலும் மரதக மணிபோலுமுள்ள நிறமுடைய பெருமானை
யான்	நான்
இன்று	இப்பொழுது
எத் தவத்தால்	எந்த தபஸ்ஸினால்
காண்பன் கொல்	அனுபவிக்கப் பெற்றேன்.

நம்மை ரக்ஷித்துக்கொள்ள வேண்டிய விஷயத்தில் நாம் கவலைப்படாமல் நமது ரக்ஷாபரத்தை ஸர்வேச்வரனிடத்தில் ஸமர்ப்பிக்கவேண்டும். அப்படிக்கின்றி அஹங்காரத்துடன் செய்கிற ஸாதனங்களெல்லாம் உடம்புக்குச் சிரமத்தைக் கொடுப்பனவேயல்லது பயனுள்ளவையல்லவென்கிறார் இதில்.

நவின்று:— எந்த ப்ரகாரம் ஸ்தோத்ரம் செய்யவேணும் என்று நினைக்கிறார்களோ; அந்தப்ரகாரம் ஸ்தோத்ரம் செய்வதற்கு ஈடான நாவின் வீறுபடைத்த கவிகள் அப்பெருமானது பெயர்களைச் சொல்லிக்கொண்டு அப்பொழுது மலர்ந்த புஷ்பங்களைக் கொண்டு அவனை ஆச்ரயிக்கிறார்களே; அதனால் அவர்கள் யாது பயன்பெற்றார்கள்? தன் பிரயத்னத்தால் காணவேணுமென்பார்களுக்கு அவன் அகப்படாதவனாதலால் வீண் ச்ரமத்தைத் தவிர வேறு பயனில்லை. உடம்பு நோவச் செய்கிற தவத்தாலும் காணமுடியாத மேகமணிவண்ணனை நான் கண்டு அநுபவிக்கிறேனே; இது நான் செய்த எந்தத் தவத்தின் பயன்? நான் ஒரு தவமும் செய்தேனல்லேன். ஆதலால் நம்முடைய ரக்ஷாபரம் அவனையது என்றிருப்பார்க்கு அவன் பரம ஸுலபன் என்று சொல்லிற்றாய்த்து.

இன்று வறிகின்றேனல்லேன், இருநிலத்தைச்
சென்றாங்களந்த திருவடியை—அன்று
கருக்கோட்டியுள் கிடந்து கை தொழுதேன் கண்டேன்
திருக்கோட்டி யெந்தை திறம். (87)

அன்று	(ஒரு உபாயத்தையு மறியாத) அக்காலத்தில்
கரு கோட்டியுள் கிடந்து	கர்ப்ப ஸ்தானத்தில் இருந்து
திருக்கோட்டி எந்தை திறம்	திருக்கோட்டியூரில் எழுந்தருளியிருக்கும் பெருமானுடைய ஸ்வரூபகுணாதிகளை
கண்டேன்	ஸேவிக்கப் பெற்றேன்.
கைதொழுதேன்	அஞ்ஜலி செய்தும் நின்றேன்.
இருநிலத்தை	விசாலமான பூமியை
ஆங்குசென்று	ஆங்காங்கு தானே போய்
அளந்த	அளந்துகொண்ட
திருவடியை	(அவனது)பாதத்தை
இன்று ஆ அறிகின்றேன் அல்லேன்	இன்றைக்குத் தான் தெரிந்துகொண்டேனென்பதில்லை.

(கர்பவாஸம் தொடங்கியே அறிந்து கொண்டிருக்கிறேன்.)

இன்று:— ஸர்வேச்வரனுடைய கடாக்ஷத்தால் தமக்கு உண்டான பெருமையைப் பேசுகிறார். நான் எம்பெருமானைக் கண்டநுபவிக்கிறது இன்றைக்குத்தான் நேர்ந்ததா? இல்லை. நான் கர்ப்பவாஸம் செய்தகாலம் தொடங்கியே இப்பேறு படைத்தேன். அவனது கடாக்ஷத்தைப் பெற்றபடியால் கர்பத்தில் இருக்கும்பொழுதே திருக்கோட்டியூர் எம்பெருமானுடைய ஸ்வரூபரூப குண விபூத்யாதிகளை ஸாக்ஷாத்கரித்து உகந்தருளின அவனது திருவடிகளையே கைகூப்பி வணங்கியும்நின்றேன், ஆகவே கர்ப்பவாஸ காலம் தொடங்கியே அவனை அநுபவித்துக்கொண்டு அவ்வநுபவத்தால் உண்டான ஸந்தோஷம் உள்ளடங்காமல் பாசுரங்களாலும் அவனை ஏத்திப் பிறர்க்கும் உபதேசிக்கலானேன். ஆதலால் இன்றைக்குத்தான் நான் அவனைக் கண்டேன் என்பதில்லை என்றார். ஆகவே அவ்வீச்வரனே ரக்ஷகனென்று தீர்ந்து நாம் கைவாங்கியிருந்தால் கர்ப்பவாஸம் முதல் சிறிதுநேரமும் அவனை விடாது அநுபவிக்கப் பெறலாம் என்பது அறியத்தக்கது.

இவர் குருக்கத்திப்பந்தரில் அவதரித்து அயோநிஜராய் இருக்க கருக்கோட்டியுள் கிடந்து என்றருளிச் செய்தது; குருக்கத்திப்பந்தரையே கர்ப்பஸ்தானமாகக்கொண்டன்றி வேறில்லை.

திறம்பிற் றினியறிந்தேன் தென்னரங்கத் தெந்தை
திறம்பா வழிசென்றார்க் கல்லால்—திறம்பாச்
செடி நரகை நீக்கித்தான் செல்வதன் முன், வானோர்
கடி நகர வாசற் கதவு. (88)

தென் அரங்கத்து எந்தை	அழகான ஸ்ரீரங்கத்தில் பள்ளிகொண்ட என் ஸ்வாமியினுடைய	தான் செல்வதன் முன்	தாங்கள் ஈச்வரனைக் குறித்துச் செல்வதற்கு முன்
திறம்பா வழி	பிசகாத "மாமேகம் சரணம் வ்ரஜ" என்று சொன்ன மார்க்கத்திலே	வானோர்	நித்ய ஸூரிகளுக்கு வாஸஸ்தானமான
		கடி	மதிள்களையுடைய
சென்றார்க்கு அல்லால்	நடந்தவர்களுக்கல்லது (மற்றவர்களுக்கு)	நகர	ஸ்ரீ வைகுண்ட நகரத்தினுடைய
		வாசல் கதவு	வாசல் கதவானது
		திறம்பிற்று	மூடிக்கொள்ளும்.
திறம்பா செடி நரகை நீக்கி	அறுக்க முடியாத புதர்மூடின காடுபோன்ற ஸம்ஸாரத்தை நீக்கி	இனி அறிந்தேன்	(இதை) இப்பொழுது தெரிந்து கொண்டேன்.

அழகான ஸ்ரீரங்கத்திலே நித்யவாஸம் செய்கிற ஸர்வ ஸ்வாமியானவன் உலகத்தாரனைவரும் உய்யவேண்டி மாமேகம் சரணம் வ்ரஜ என்று ஒரு வழி காட்டியிருக்கிறான். அவ்வழியிலே சென்றவர்களுக்குத்தான் வைகுந்தமாநகரம் புகுவது ஸுலபமாகும். அதாவது நமது ஸகல பாபங்களையும் விலக்கி அவனை அடைவிக்கும்படிக்கிடான சரணாகதி என்கிற உபாயத்தை அநுஷ்டித்தால் நாம் எளிதில் மோக்ஷத்தைப் பெறலாம். அப்படி அவன் உபதேசித்த சரணாகதிமார்க்கத்தை நாம் தழுவாதிருந்தால் அறுத்துப்போட முடியாத பெரும் புதர்போன்ற நமது ஸம்ஸார பந்தங்களையெல்லாம் நாம் அறுத்துக்கொண்டு செல்வதற்கு

முன்னமே நித்யஸூரிகளுக்குச் சொந்தமான, அரணையுடை வைகுந்த நகரத்தின் வாசற் கதவு மூடிக்கொண்டதாகுட பகவான் உபதேசித்த வழியில் செல்லாதவர்களுக்கு வைகுந் வாசற்கதவு திறக்காமல் மூடிக்கொள்ளுமென்றபடி.

திறம்பா வழி நமது பாபங்கள் ஒரு முழுக்கு இரண்(முழுக்கால் போக்கக் கூடியவைகளல்ல. எவ்வித பிராயசித்தா களாலும் எத்தனையுகம் அநுபவித்தாலும் விலக்கக்கூடியவை அல்ல. ஆதலால் அவன் உபதேசித்த மார்க்கம் தான் அப்பாபங் களைத் தொலைக்கவல்லது. ஆனதுபற்றி தப்பில்லாத (பிசகாத வழி என்றார்.

கதவிக் கதஞ்சிறந்த கஞ்சனை முன் காய்ந்து
அதவிப் போர்யானை யொசித்து—பதவியாய்ப்
பாணியால் நீரேற்றுப் பண்டொருகால் மாவலியை
மாணியாய்க் கொண்டிலையே மண். (89)

முன்	முன்னொருகால்	பண்டு ஒருகால்	மற்றும் முன்னொரு நாள்
கதம் சிறந்த	கோபம் மிகுந்த வனை	பதவியாய்	நீர்மையுள்ள வனுய்க்கொண்டு
கஞ்சனை	கம்ஸனை	மாணியாய்	ப்ரஹ்மசாரியாகி
கதவி	கோபித்துக் கொண்டு	பாணியால்	கையால்
காய்ந்து	கொன்றும்	நீர் ஏற்று	தான ஜலத்தைப் பெற்று
போர் யானை	போர் செய்ய வந்த குவலயாபீடம் என்ற யானையை	மாவலியை	மாவலியிடமிருந்து
ஒசித்து	கொம்பை ஒடித்து	மண் கொண் டிலையே	பூமியைப் பெற்றுக் கொண்டாயல்லவா?
அதவி	முடித்தும்		

எம்பெருமான் ஆச்ரிதர்களுக்காகச் செய்த சில காரியங் களைச் சொல்லி ஸந்தோஷமடைகிறார் இதில்.

கதவி:— ஸாதுக்களை ஹிம்ஸிப்பதையே தொழிலாகக் கொண்டு உன்பால் மிருந்த கோபங்கொண்ட கம்ஸனைக்காய்ந்து முடித்தாய். உலகங்களுக்கு உயிரான உன்னை முடிக்கக் கருதின குவலயாபீடமென்ற யானையை அதன் கொம்பை முறித்து முடித்தாய்; இந்திரனுடைய காரியம் தலைக்கட்ட வேண்டி வஸிஷ்ட சண்டாள விபாகமின்றி எல்லார் தலையிலும் திருவடியை வைக்கும்படி நீர்மையுடன் மாணியாய் வந்து மண்ணை இரந்தாய். இப்படி நீ ஆச்ரிதர்களுக்காகச் செய்த காரியங்கள் எண்ணற்றவை என்றார்.

இங்கு இரண்டாமடியில் உதவிப் போர் யானை என்றும் பாடமுண்டு. கம்ஸனுக்கு உதவியாயிருந்த யானை எனப் பொருள்.

பாணியால் நீரேற்று:— "மண் கையாலிரந்தான்" என்பது போல் கொடுப்பதையே தொழிலாகக்கொண்ட கையால் அவன் யாசிப்பது தகுமோ ? வென்ற நெஞ்சாறல் காட்டப்பட்டது.

மண்ணுலக மாளேனே வானவர்க்கும் வானவனாய்
விண்ணுலகம் தன்னகத்து மேவேனே—நண்ணித்
திருமாலைச் செங்கணெடியானை எங்கள்
பெருமானைக் கைத்தொழுத பின். (90)

திருமாலை	ச்ரிய: பதியாயும்	மண் உலகம்	இப் பூவுலகத்தை
செம்கண்	சிவந்த கண்களை யுடையவனும்	ஆளேனே	ஆளமாட்டேனோ ?
நெடியானை	ஆச்ரிதவ்யாமோஹ முள்ளவனும்	வானவர்க்கும் வானவனாய்	நித்யஸூரிகளுக்கும் நிர்வாஹகனை ஸ்வாமியாய்
எங்கள் பெருமானை	எங்களுக்கு ஸ்வாமியுமான பெருமானை	விண் உலகம் தன் அகத்து	பரமபதமென்கிற லோகத்தில்
நண்ணி	ஆச்ரயித்து	மேவேனே	பொருந்தியிருக்க மாட்டேனோ
கைதொழுத பின்	கையால் அஞ்சலி செய்த பின்பு		

நாம் செய்த செயல்களைச் சொல்வது கிடக்கட்டும் நீர் இ
போது வேண்டுவதென்ன ? என்று பெருமான் வினவ ஆழ்வா
உன்னை அடைந்தபின் உபயவிபூதியிலும் எனக்கு ஒரு குறை
யில்லை என்கிறார்.

மண்ணுலகம் :— எனக்குப் புருஷகாரமும் "என்னடிய
ரது செய்யார்" "நகச்சிந்நாபராத்யதி" என்று சொல்லிக்கெ
ண்டும் இருக்கிற பிராட்டியும் உன்னருகே நிற்கிறாள். நீயு
வாத்ஸல்யம்தோற்றும் சிவந்த கண்ணையுயிருக்கிறாய். ஸ்வபாவ
தாலே நீ ஆச்ரித வ்யாமோஹமுள்ளவன். இப்படியுள்ளவனை
நான் வணங்கி யாச்ரயித்த பின் எனக்குக்கூடாததொன்றுமில்லை
இப்பூவுலகையும் வெண்குடைக்கீழ் அரசனாய் நின்றுஆள்வேன்
பரமபதத்திலும் சென்று ஸேனைபதியாழ்வானைப் போல் ஆட்சிபு
வேன். ஆதலால் எனக்கோர் குறையுமில்லை. ஆனதால் நீ
எனக்குச் செய்யவேண்டுவது ஒன்றுமில்லை என்று விண்ணப்ப
செய்தார்.

பின்னால் அரு நரகம் சேராமல் பேதுறுவீர்
முன்னால் வணங்க முயல்மினோ—பன்னூல்
அளந்தானைக் கார்க்கடல் சூழ் ஞாலத்தை, எல்லாம்
அளந்தா னவன் சேவடி. (91)

பின்னால்	உடம்பு விழுந்த பின்பு	கார்கடல் சூழ்	கருநிறமுள்ள ஸமுத்ரத்தால் சூழப்பட்ட
அரு நரகம்	மிகவும் க்ரூரமான நரகங்களில்	ஞாலத்தை எல்லாம்	பூமியை முழுவதும்
சேராமல்	சேராதபடிக்கு	அளந்தான் அவன்	ஆக்ரமித்தவனுமான அப்பெருமானுடைய
பேதுறுவீர்	மனக் கலக்கத்துட னிருக்கிறவர்களே !	சே அடி	சிவந்த திருவடியை
முன்னால்	இப்பொழுதே	வணங்க	தொழுவதற்கு
பல் நூல்	பலவிதமான சாஸ்த்ரங்களால்	முயல்மினோ	ப்ரயத்யனம் செய்யுங்கோள்.
அளந்தானை	(ஆராய்ந்து) நிச்சயிக்கப்பட்டவனும்		

பின்னால்:— இதுமுதல் நான்கு பாட்டுகளால் பரோபதேசஞ் செய்கிறார். ஓ ஸம்ஸாரிகளே! எதற்காகப் பாபங்களைச் செய்கிறீர்கள்? நீங்கள் இறந்த பின்பு உங்கள் பாபங்களுக்காகக் கோரமான நரகத்தில் நுழைந்து வருத்தப்படப் போகிறீர்கள். இறந்தபின் நரகத்தை அடைந்து கஷ்டப்படக்கூடாது என்ற எண்ணம் உங்களுக்கு உண்டானால் நான் சொல்வதைக் கேளுங்கள்; ஆலோட்ய ஸர்வசாஸ்த்ராணி விசார்யச புந: புந: | இதமேகம் ஸுநிஷ்பந்நம் த்யேயோ நாராயணோ ஹரி: என்றபடி எல்லா சாஸ்த்ரங்களாலும் இவன்தான் பரன் என்று தீர்மானிக்கப்பட்டவனும் கடல் சூழ்ந்த பூமியை ஒருகால் அளந்தவனுமான நாராயணனுடைய திருவடியை ஸேவிப்பதற்கு முயற்சி செய்யுங்கோள். பின்னால் வருத்தப்பட்டுப் பயனில்லை. (இறப்பதற்கு முன்னே) இப்பொழுதே திருமால் திருவடியை வணங்க முயற்சி செய்யுங்கோள்; வணங்க முயற்சித்தமாத்திரத்தாலேயே வரும் நரகம் தவிரு மென்றபடி.

அடியால் முன் கஞ்சனைச் செற்று அமரரேத்தும்
படியான் கொடிமேல் புள்கொண்டான்—நெடியான்றன்
நாமமே யேத்துமின்களேத்தினால், தாம்வேண்டும்
காமமே காட்டும் கடிது. (92)

முன்	முற்காலத்தில்
அடியால்	திருவடியால்
கஞ்சனை செற்று	கம்ஸனை உதைத்துக் கொன்று
அமரர் ஏத்தும் படியான்	தேவர்களால் ஸ்துதிக்கப்பட்ட ஸ்வபாவத்தையுடையவனும்
கொடிமேல் புள்கொண்டான்	த்வஜத்தின்மேல் கருடனை வைத்துக் கொண்டவனும்
நெடியான் தன்	ஸர்வாதிகனுமான பெருமானுடைய
நாமமே	பெயர்களையே
ஏத்துமின்கள்	சொல்லித்துதியுங்கோள்;
ஏத்தினால்	சொல்லித்துதித்தால்
தாம் வேண்டும்	தாங்கள் ஆசைப்படுகிற
காமமே	புருஷார்த்தத்தையே
கடிது காட்டும்	அப்பெயர்களே சீக்கிரத்தில் கொடுக்கும்.

கீழ்ப்பாட்டில் அநிஷ்ட நிவ்ருத்தியைப் பேசினர். இ பாட்டில் அவன் திருநாமங்களைச் சொன்னால் இஷ்டப்ராப் உண்டாகுமென்கிறார்.

அடியால்:– தனக்கு விரோதியான கம்ஸனைக் காலால் உதைத்துக் கீழே தள்ளிக் கொன்றவனும், அச்செய்கையினால் பெ மகிழ்ச்சியடைந்தவரானவர்களால் பலவாறாகத் துதிக்கப்பட்ட னும், வேதமயனான கருடனை தனது விஜயத்வஜத்தில் கொண்ட வனும், இப்படிப் பல படிகளால் ஸர்வேச்வரனாய் விளங்குகி பெருமானுடைய பெயர்களையே சொல்லிக்கொண்டு திரியு கோள். அவனது பெயர்களைச் சொல்லிக் கொண்டிருந்தால் நீ கள் விரும்பிய பொருள்களையெல்லாம் அப்பெயர்களே கூட்டி தரும். "குலம்தரும்" என்கிற திருமங்கையாழ்வார் பாசுரத்தில் படி அவன் திருநாமங்களே ஸகல புருஷார்த்தங்களையும் கொடு கும்; என்பதாம்.

கடிது கொடுநரகம் பிற்காலும் செய்கை
கொடிதென்றதுகூடா முன்னம்—வடிசங்கம்
கொண்டானைக் கூந்தல்வாய்க் கீண்டானைக் கொங்கை
சுண்டானை யேத்துமினோ வுற்று. (93) [நஞ்

கொடு நரகம்	கொடுமையான நர கமானது	வடிசங்கம் கொண்டானை	கூர்மையான சப்த தையுடைய பாஞ்ச ஜன்யத்தை தரித்த வனும்
கடிது	மிகவும் பயங்கரமானது.		
பிற்காலும்	அதற்குமேலும்	கூந்தல்வாய் கீண்டானை	கேசியின் வாயைப் பிளந்தவனும்
செய்கை	யமபடர்களுடைய செயல்கள்		
கொடிது	மிகவும் வருத்தத்தை விளைவிக்கக் கூடியன.	கொங்கை நஞ்சு உண்டானை	பூதனையின் முலையிலுள்ள விஷத்தைப் பருகினவனுமான கிருஷ்ணனை
என்று	என்று நினைத்து	உற்று	பொருந்தி
அது கூடா முன்னம்	அந்நரகம் நமக்கு ஸம்பவிப்பதற்கு முன்னமே	ஏத்துமினோ	ஸ்தோத்ரம் செய்யுங்கோள்.

விவேகமில்லாத ஸம்ஸாரிகளே! நரகம் என்கிற சப்தத்தைக் கேட்டாலே உலகம் பயந்து நடுங்கும்படியாயிருக்கிறது. பின்னும் அங்கே யமபடர்கள் செய்யும் துன்பச்செயல்களை நினைத்துப் பார்த்தால் உடல் நடுங்கும். ரக்தம் பெருகு யாறுகளில் போடுவது; வாள்போலிருந்துள்ள கோரை வநத்திலே தள்ளுவது; எரியெழுகின்ற செம்பினாலியன்ற பாவையைத் தழுவச் செய்வது; முதலிய கொடிய செயல்களை நினைத்தால் உள்ளம் பதறும். ஆதலால் அவ்வளவு பயங்கரமான நரகம் உங்களுக்கு வருவதற்கு முன்பே கூர்மையான ஸ்ரீபாஞ்சஜந்யத்தை படையாகக்கொண்டவனும் கம்ஸனால் ஏவப்பட்டுக் குதிரை வடிவுடன் வந்த கேசியென்றும் அஸுரனைக் கொன்றவனும் பூதனையின் விடம் தீண்டின முலையையுண்டவனுமான கிருஷ்ணனை ஸ்தோத்ரம் செய்யுங்கோள்; ரமா தயித ரங்கபூரமண க்ருஷ்ண விஷ்ணோ ஹரே தரிவிக்ரம ஜநார்த்தன த்ரியுக நாத நாராயண | இதீவ சுப தாநி ய: படதி நாமதேயாநி தே ந தஸ்ய யமவச்யதா நரகபாதபீதி: குத: என்றபடி அவனது நாமங்களைச்சொல்லி அவனைப் பொருந்தி ஏத்தினால் நரகபயமும் யமபடர்களின் செயல்களும் நம்மிடம் நெருங்காவென்பதாம்.

கூந்தல்வாய் கீண்டானை:— கூந்தல் என்னும் பதம் தலைமயிரைச்சொல்லும். அதை வடமொழியில் கேச மென்பார்கள். ஆகவே கூந்தல் என்பதற்கு கேசமென்பது வடமொழிப்பெயர். கேசமென்பது கேசியை ஞாபகப்படுத்தும். அதுபற்றி கேசியின் வாயைப்பிளந்து கொன்றவன் எனப்பொருள் வரையப்பட்டது. இப்படிக் கூந்தல் என்னும் பதத்திற்கு கேசி என்கிற அஸுரன் எனப்பொருள் கூறியது லக்ஷிதலக்ஷணையென்கிற வழியால் என்று வடமொழிப் புலவர்கள் வரைவார்கள்.

உற்று வணங்கித் தொழுமின், உலகேழும்
முற்றும் விழுங்கும் முகில் வண்ணன்—பற்றிப்
பொருந்தாதான் மார்பிடந்து பூம்பாடகத்துள்
இருந்தானை ஏத்துமென் நெஞ்சு. (94)

உலகு ஏழும்	உலகங்களனைத்தையும்
முற்றும் விழுங்கும்	பூர்ணமாகச் சாப்பிட்டவனும்
முகில் வண்ணன்	மேகம்போன்ற வர்ணமுள்ளவனும்
பொருந்தாதான்	விரோதியான ஹிரண்யகசிபுவினுடைய
மார்பு	மார்பை
பற்றி	பிடித்து
இடந்து	பிளந்தவனும்
பூ பாடகத்துள் இருந்தானை	அழகான திருப்பாடகமென்கிற திருப்பதியில் கோயில் கொண்டவனுமான ஸ்வாமியை
என் நெஞ்சு	என் மனம்
ஏத்தும்	துதிசெய்யும்.
	நீங்களும்
உற்று வணங்கி தொழுமின்	பொருந்தி வணக்கத்துடன்பணிமின்கள்

உலகத்தவர்களே! முன்பொருகால் உலகங்களனைத்தையும் ப்ரளயங்கொள்ளப் போகுமளவில் அவையனைத்தையும் தனது வயிற்றில் வைத்துக் காத்தவனும், மற்றொருகால் ஹிரண்யனது மார்பைக் கிழித்துப்பொகட்டவனும் திருப்பாடகம் என்கிற திருப்பதியில் கோயில்கொண்டவனுமான பெருமானை என்னெஞ்சு ஸ்தோத்ரம் செய்து கொண்டிருக்கிறது. அதுபோல நீங்களும் அவனையே துதிசெய்யுங்கோள் என்றுபதேசித்தபடி.

பாடகம்:— பாடு + அகம். பெருமை தோன்றுமிடம் என்பது பொருள். எம்பெருமான் தனது பெருமைகளெல்லாம் யாவர்க்கும் தோன்றும்படி பெரிய திருமேனியுடன் வீற்றிருப்பதால் இத்திருப்பதிக்குப் பாடகமெனப்பொருள். அத்திருப்பதியில் பெரிய திருமேனியுடன் வீற்றிருக்கிற பெருமானுடைய ஸேவை பெருவியப்பைத்தரும். இந்த திவ்யதேசம் பெரிய காஞ்சிபுரத்தில் உளது. அப்பெருமானுக்கு பாண்டவதூதன் எனப்பெயர். கண்ணன் பாண்டவர்களுக்காகத் துரியோதனனிடம் தூது போனபோது பூமியில் ஒரு கள்ள அறைசெய்து அதிலே சில மல்லர்களை ஆயுதங்களுடன் நிறுத்தி மேலே மூங்கில் சிம்புகளால் அதை மூடி மேலே கம்பளத்தை விரித்து அதன் மேல் ஒரு ஆஸனத்தில் கண்ணனை துர்யோதனன் அமரச்செய்ய கண்ணனும் உட்காரவே, கீழே மூங்கில்கள் முறிந்து பள்ளத்தில்

கண்ணன் வீழ, அங்குள்ள மல்லர்கள் சண்டைசெய்யக் கண்ணன் விச்வரூபமெடுத்து அவர்களைக் கொன்றார்' என்கிற வரலாற்றுக் கிணங்க பெரிய ரூபத்துடன் எழுந்தருளியிருக்கிறார் என்று கற்றோர்கள் கருத்துடனுரைப்பார்கள்.

என் நெஞ்சமேயா னென் சென்னியான், தானவனை
வன் நெஞ்சம் கீண்டமணிவண்ணன்—முன்னம்சே
யூழியா னூழி பெயர்த்தான், உலகேத்தும்
ஆழியா னத்தி யூரான். (95)

தானவனை	ஹிரண்யாஸுரனுடைய	உலகு ஏத்தும் ஆழியான்	உலகத்தவர்கள் துதிசெய்யும்படியாகப் பாற்கடலில் பள்ளி கொண்டவனும்
வல் நெஞ்சம் கீண்ட	கடினமான மார்பை பிளந்தவனும்	அத்திஊரான்	அத்தியூரில் எழுந்தருளியிருப்பவனுமான பெருமான்
மணி வண்ணன்	நீல மணிபோன்ற நிறத்தையுடையவனும்	என் நெஞ்சம் மேயான்	என்னெஞ்சிலே வாஸம் செய்கிறான்
முன்னம்	முன்காலம் முதல்	என் சென்னியான்	எனது தலையிலே வந்துள்ளான்.
சேய் ஊழி யான்	நீண்டகாலமாய் இருப்பவனும்		
ஊழி பெயர்த்தான்	காலம்முதலிய பொருள்களெல்லாவற்றையும் படைத்தவனும்		

முன்பொருகால் ஹிரண்யகசிபுவின் வலிய மார்பைக்கீண்டு பொகட்டவனும் நீலரத்நம்போன்ற திருமேனி நிறத்தையுடைய வனும், முன்பே பிடித்து அநாதிகாலமாக விருப்பவனும், காலம் முதலிய தத்வங்களை உண்டுபண்ணினவனும் உலகத்தாரால் புகழப்படும் ஸுதர்சனாழ்வானைக் கையிலேந்தினவனும் ஸ்ரீஹஸ்திகிரி என்னும் க்ஷேத்திரத்திலிருப்பவனுமான ஸர்வேச்வரன் எனது நெஞ்சிலும் தலையிலும் வாஸம்செய்கிறான். இது என்ன நீர்மை! என்று ஸந்தோஷிக்கிறார்.

நம்மாழ்வார் திருவாய்மொழியில் முதற்பத்து ஒன்பதாவது தசகத்தில் கண், மார்பு, தோள், நெஞ்சு, நெற்றி, தலை முதலிய

தன்னுடைய ஒவ்வொரு அவயவத்திலும் திருமால் வந்துறைவதாகச் சொன்னதுபோல் இப்பாசுரமும் அமைந்திருக்கிறது.

ஸ்ரீ காஞ்சியில் ஹஸ்திகிரியின் கீழே ஸ்ரீந்ருஸிம்ஹ வடிவத்துடன் தோன்றும் பெருமானை இப்பாசுரம் மங்களாசாஸநம் செய்கிறதென்பது பெரியோர்களின் கொள்கை. தானவனை வன்னெஞ்சம் கீண்டமணிவண்ணன் என்றது இக்கொள்கைக்குப் பொருந்தியது.

ஸ்ரீ ஹஸ்திகிரியின்மேலே விளங்கும் பேரருளாளனை மங்களாசாஸனம் செய்கிறதிப் பாசுரம் என்பர் மற்றும் சில பெரியோர்கள். அத்தியூரான் என்று பொதுவிலே சொன்னது இதற்குப் பொருத்தமுளதே.

அம்மலையிலுறையும் பெருமானைப் பண்டொருகால் திக்கஜங்கள் வந்து ஆராதித்தபடியால் அம்மலைக்கு அத்திகிரியெனப் பெயர். ஹஸ்தி என்கிற வடசொல்லின் திரிபு அத்தியென்பது.

அத்தியூரான் புள்ளையூர்வான் அணிமணியின்
துத்திசேர் நாகத்தின்மேல் துயில்வான்—முத்தீ
மறையாவான் மாகடல் நஞ்சுண்டான் றனக்கும்
இறையாவா னெங்கள் பிரான். (96)

புள்ளை	கருடனென்கிற பக்ஷியை
ஊர்வான்	ஏறி நடத்துகிறவனும்
அணிமணி	அலங்காரமாயிருக்கிற மாணிக்கமும்
இன் துத்தி	அழகான புள்ளிகளும்
சேர்	சேர்ந்திருக்கிற
நாகத்தின் மேல்	திருவனந்தாழ்வான் மேல்
துயில்வான்	படுத்துறங்குபவனும்
முத்தீ ஆவான்	மூன்று அக்நிகளாய் நிற்பவனும்.
மறை ஆவான்	வேதங்களாக நிற்பவனும்
மாகடல் நஞ்சு உண்டான் தனக்கும்	பெரிய கடலிலிருந்துண்டான விஷத்தைப் புசித்த ருத்ரனுக்கும்
இறை ஆவான்	ஸ்வாமியானவனுமான
எங்கள் பிரான்	எமக்கு ஸ்வாமியானவன்
அத்தி ஊரான்	ஹஸ்திகிரியில் நித்யவாஸம் செய்கிறான்.

பெரிய திருவடி எனப்படும் கருடனை வாஹநமாக வுடைய வனும், திருப்பாற்கடலில் அழகிய மாணிக்க மணிகளும் பொறி களும் சேர்ந்த படங்களையுடைய அனந்தன்மேல் பள்ளிகொண்ட வனும், மூன்று அக்நிகளாக நிற்பவனும், வேதங்களால் பிரதி பாதிக்கப்படுபவனும், கடலிலிருந்துண்டான காலகூட விஷத்தை யுண்டவனென்று கொண்டாடும் ருத்ரனுக்கும் ஸ்வாமியுமான எங்கள் பெருமான் ஸ்ரீ ஹஸ்திகிரியிலே நித்யவாஸம் செய்கிறான்.

நாகத்தின்மேல் துயில்வான்: பேரருளாளனே! "தேவரீர் தினந்தோறும் விடியற்காலையில் அனந்தனென்னும் பள்ளியிலி ருந்து எழுந்தவுடன் எனது மனத்தில் வந்து கோயில் கொள்ள வேண்டு"மெனப் பொருள்கொண்ட பணிபதி சயநீயா துத்திதஸ்த் வம் ப்ரபாதே வரத ஸதத மந்தர் மாநஸம் ஸந்நிதேயா: என்கிற ஸ்ரீ தேசிகன் ஸூக்தியும் இப்பாசுரத்தைக் கருத்துள் கொண்டே அருளிச் செய்யப்பட்டது.

இங்கு மூன்றாமடியில் முத்தி மறையாவான் எனப் பாடமு முண்டு. மோக்ஷத்தை போதிக்கிற வேதங்களால் சொல்லப் பட்டவனெனப் பொருள் இப்பாசுரமும் பேரருளாளன் மங்களா சாஸந பரமானது.

எங்கள் பெருமானிமையோர் தலை மகன் நீ
செங்கணெடுமால் திருமார்பா—பொங்கு
படமூக்கினாயிரவாய் பாம்பணைமேல் சேர்ந்தாய்
குடமூக்கில் கோயிலாக்கொண்டு (97)

திருமார்பா!	பிராட்டியை மார்பில் கொண்டவனே	குடமூக்கு இல்	திருக்குடந்தை யென்கிற க்ஷேத்ரத்தை
செம்கண்	சிவந்த கண்களை யுடையவனும்	கோயில் ஆ கொண்டு	வாஸஸ்தானமாகக் கொண்டு
நெடுமால்	ஸர்வேச்வரனும்	பொங்கு	பரந்திருக்கிற
இமையோர் தலைமகன் நீ	நித்யஸூரிகளுக்கு நாதனுமிருக்கிற நீ	மூக்கு	நாஸிகையையுடை யவனும்
எங்கள் பெருமான்	எங்கள் மூவருக்கும் ரக்ஷகனான ஸ்வாமியாகி	ஆயிரம் வாய்	ஆயிரம் வாயை யுடையவனுமான

பாம்பு அணை { அனந்தனென்கிற
மேல் { படுக்கையின் மேல் சேர்ந்தாய் { பள்ளிகொண்
டருளினாய்

இஃது திருக்குடந்தை யென்கிற கும்பகோணத்தில் அடியார்களை விஷயீகரிப்பதற்கென்று சாய்ந்துகிடக்கும் ஸ்ரீ ஆராவமுதாழ்வானை மங்களாசாஸனம் செய்யும் பாசுரம்.

எங்கள்:—“ திருமார்பா! எங்களுக்கு ஸ்வாமியாயும் நித்ய ஸூரிகளுக்குத் தலைவனாயும் சிவந்த கண்களையுடையவனுமான நீ யாவரும் வந்து அடி வணங்கி வாழும்படி திருக்குடந்தையில் விசாலமான படங்களையுடைய திருவனந்தாழ்வான் மேல் சாய்ந்தருளினாய்;

எங்கள் பெருமான்:— என்போன்ற அடியவர்களுக்கு ஸ்வாமியானவன் என்றபடி. முதலாழ்வார்கள் மூவரும் பகவத்ஞானம் பிறந்தபின்பு ஒருவரையொருவர் விட்டு பிரியாதிருந்தார்கள் என்பது அனைத்துலகமுமறிந்தவிஷயமே. ஆகவே இங்கு பூதத்தாழ்வார் எங்கள் பெருமான் என்று பிரயோகிப்பதால் மற்றைய விருவர்களையும் கூட்டி எங்கள் மூவருக்கும் ஸ்வாமி என்று அருளிச்செய்தார். ஆதலால் இவ்வெம்பெருமானைப் பொய்கையாழ்வார் மங்களாசாஸனம் செய்யவில்லையே; என்று சங்கிக்க வொண்ணாது. நடுவிலுள்ள இவ்வாழ்வார் மற்றவர்களைக்கூட்டி எங்கள் என்றபடியால் பல திவ்யதேசத் தெம்பெருமான்களை வணங்கினபோதிலும் திருக்குடந்தைப் பெருமானை தங்களுடைய பக்திக்கு ஆஸாதாரணமான விஷய பூதன் என்பது நன்கு விளங்கும். இத்தால் விண்ணோர்கள் நாதனாயிருந்து வைத்தும் நாம் வணங்கும்ஸ்வாமியானது பற்றிப் பரம ஸௌலப்யன் என்பதும் விளக்கப்பட்டது.

இமையோர் தலைமகன்:— நித்ய ஸூரிகளுக்கு நிர்வாஹகனானவன். இத்தால் பரத்வம் சொல்லப்பட்டது. பரம ஸௌலப்யனாயிருந்து வைத்தும் பரத்வம் மறையாது விளங்குகிறது என்பதாம்.

செங்கண், நெடுமால் திருமார்பா:— உபநிஷத்துகள் தாமரைக் கண்ணன், என்கிற சின்னத்தாலும் பெரிய பிராட்டியாரின் கணவன் என்கிற சின்னத்தாலுமே பரதேவதை இன்னாரென்று தீர்மானித்தபடி முதலடியில் சொன்ன பரத்வத்தை காரணங்களால் விவரித்துச் சொல்லுகிறார் இரண்டாமடியால். ஆகவே தாமரையன்ன சிவந்தகண்ணும் மார்பிலே திருவும் தோன்றுவதால் வேதாந்தங்களில் நிர்ணயிக்கப்பட்ட பரம புருஷன் திருக்குடந்தைப் பெருமானே என்றபடி. திருமார்பா என்பதால் புருஷகாரயோகமும் சொல்லப்பட்டதாகவுமாம். பொங்கு + சேர்ந்தாய்:- ஸர்வேச்வரன் தமது உடலில் கண்வளரப் பெற்றான் என்கிற மகிழ்ச்சியாலே விரிந்து பரம்பியிருக்கும் படங்களையும் நாஸிகைகளையுமுடைய ஆயிரம் வாய்களையுடைய நாகத்தின்மீது சாய்ந்தருளினாய். இத்தால் கிடந்ததோர் கிடக்கைகண்டும் எங்ஙனம் மறந்து வாழ்கேனென்ற போக்யதை பேசப்பட்டது.

குடமூக்கில்:— கும்பகோணம் என்ற வடசொல்லுக்கு நேரான தென்சொல் குடமூக்கு என்பது. "சீரார் செந்நெல் கவரி வீசும் செழுநீர் திருக்குடந்தை" யென்றபடி அசேதனங்களும் ஆச்ரயிப்பதற்குப் பாங்கான ச்ரமஹரமான திருக்குடந்தையைக் கோயிலாக் கொண்டாய்; என்பது.

ஆகவே பரம ஸுலபனும் ஸர்வஸ்மாத்பரனும் வாத்ஸல்யம் தோற்ற சிவந்த கண்களையுடையவனும் நாம் நெருங்கி யநுபவிப்பதற்கீடாகப் புருஷகாரபூதையான பிராட்டியுடன் கூடியிருப்பவனும் பரம போக்யனுமான திருக்குடந்தையில் பள்ளிகொண்ட பெருமானே எங்கள் மூவருக்கும் அஸாதாரணமான ஸ்வாமியாவன் என்பது இப்பாட்டின் திரண்டபொருள்.

கொண்டு வளர்க்கக் குழவியாய்த் தான் வளர்ந்தது
உண்ட துலகேழு முள்ளொடுங்கக்—கொண்டு
குடமாடிக் கோவலனாய் மேவி என்னெஞ்சம்
இடமாகக் கொண்ட விறை. (98)

கோவலனாய்	இடையனான கிருஷ்ணனாய் வந்து
குடம் கொண்டு	குடத்தை யெடுத்துக் கொண்டு
ஆடி	நர்த்தனம் செய்து
என் நெஞ்சம் மேவி	என் நெஞ்சத்தை ஆசைப்பட்டு
இடமாக கொண்ட	அதையே வாஸஸ்தானமாக ஸ்வீகரித்த
இறை	ஸ்வாமியானவன்
கொண்டு	(சிலர்) எடுத்துக் கொண்டு
வளர்க்க	வளர்க்கும்படியான
குழவியாய்	குழந்தையாய்
தான் வளர்ந்தது	தானே வளர்ந்து வந்தான்.
	(ஒரு காலத்தில்)
உலகு ஏழும்	ஸப்த லோகங்களையும்
உள்	வயிற்றினுள்ளே
ஒடுங்க	அடங்கும்படியாக
உண்டது	அமுது செய்தான்.

தம்மை விஷயீகரித்த ஆராவமுதாழ்வானுடைய சில திவ்ய சேஷ்டிதங்களை அநுபவிக்கிறார்.

கோண்டு:— ஒருகால் இடையனாய் வந்து தோன்றி அந்த ஜாதிக் கேற்கும்படி குடக்கூத்தாடி என்னெஞ்சிலும் நித்யவாஸம் செய்கிற ஆராவமுதாழ்வான் ஒருகாலத்தில் ஒருத்தி எடுத்து வளர்க்கும்படியான சிறு குழந்தையாய் வளர்ந்தான். அப்பொழுது அவன் உலகங்களை யெழையும் அமுது செய்திருந்தான். தனக்கு ஸ்வாதீனமில்லாமல் மற்றொருவர் எடுத்துத் தூக்கி வளர்க்கவேண்டிய குழந்தையாயிருக்கச்செய்தே உலகனைத்தையும் உதரத்தில் வைத்துக் காத்தான். இது என்ன அகடிதகடனா சக்தி; என்று அவனுடைய ஜகத்ரக்ஷகத்வத்தைக் கொண்டாடினார்.

கீழ்ப்பாட்டில் திருக்குடந்தை யெம்பெருமானை அநுஸந்தித்திருப்பதாலும், நம்மாழ்வார், பெரியாழ்வார், ஸ்ரீ ஆண்டாள் இவர்களுடைய "குடந்தையன் கோவலன்" "குடத்தை யெடுத்தேறவிட்டுக் கூத்தாட வல்ல வெங்கோவே" "கோலால் நிரை மேய்த்த ஆயனாய்க் குடந்தைக் கிடந்தகுடமாடி" என்கிற பாசுரங்களின்படி "குடமாடி கோவலனாய் மேவி" என்கிற பதங்களின் சேர்த்தியாலும் இப்பாசுரமும் ஸ்ரீ ஆராவமுதாழ்வான் மங்களாசாஸந பரமே எனக் கொள்ளலாம்.

குடக்கூத்தாவது தலையில் அடுக்கடுக்காகக் குடங்களையும் இரு கைகளில் அடுக்கடுக்காக் குடங்களையும் வைத்துக்கொண்டு குடம் கீழேவிழாமல் குடத்தை மாறிமாறி எறிந்து கொண் டேந்தி விளையாடுமொரு நடனம்.

இறை யெம்பெருமா னருளென்று, இமையோர்
முறைநின்று மொய்ம்மலர்கள் தூவ—அறைகழல
சேவடியான் செங்க ணெடியான், குறளுருவாய்
மாவடிவின் மண்கொண்டான் மால். (99)

இமையோர் — தேவர்கள்
எம்பெருமான் — எனக்கு ஸ்வாமி (எங்களுக்கு)
இறை — கொஞ்சம்
அருள் என்று — கிருபை செய்யவே ணுமென்று சொல்லி
முறை நின்று — தங்களுடைய ஸ்தி மைக்குத் தகுந்த படி நின்று
மொய் மலர்கள் — உயர்ந்த புஷ்பங் களை
தூவ — ஸமர்ப்பிக்கும்படி யாக
அறைகழல சேவடியான் — சப்திக்கிற கழல்களையுடைய செவ்விய திருவடிகளையுடையவனும்
செங்கண் நெடியான் — சிவந்த கண்களை யுடையவனும் ஸர்வாதிகனுமான
மால் — மால்
குறள் உருவாய் — வாமனனாய்த் தோன்றி
மா வடிவின் — பெரிய வடிவால்
மண் கொண்டான் — பூமியைப் பெற்றுக் கொண்டான்

த்ரிவிக்ரமனுடைய திருவடிகளே நமக்குப் ப்ராப்யங்களென் கிறாரிதில்.

இறை;— சிவந்த தாமரைபோன்ற கண்களையுடையவனும் ஒலிக்கிற வீரக்கழல்களை அடிகளில் அணிந்து கொண்டவனுமான ஸர்வேச்வரனான திருமால், தேவர்களெல்லாரும் வந்து கூடி முறையே நின்றுகொண்டு எங்கள் பெருமானே! எங்களுக்குச் சிறிது அருள்புரியவேணும்; எனப் ப்ரார்த்தித்துப் புஷ்பங்களைத் தூவ, வாமனனாய்த் தோன்றி பெரிய வடிவாலே மண்ணளந்தான். மண்ணளக்கும் பொழுது தேவர்கள் வணங்கி நின்றார்களென்றபடி.

இத்தால் கதாபுந:— என்ற ஆளவந்தார் ஸ்ரீஸூக்தியின்படி த்ரிவிக்ரமனுடைய திருவடிகளை என்றைக்கோ தலைக்கணிவது; என்று வேண்டிக்கொண்டிருந்தாரென்பது தோன்றும்.

மாலே நெடியோனே கண்ணனே, விண்ணவர்க்கு
மேலா வியன்துழாய்க் கண்ணியனே —மேலால்
விளவின்காய் கன்றினால் வீழ்த்தவனே, என்றன்
அளவன்றால் யானுடைய வன்பு. (100)

பதம்	பொருள்	பதம்	பொருள்
மாலே	திருமாலே !	கன்றினால்	கன்றுக்குட்டியைக் கொண்டு
நெடியோனே	ஸர்வேச்வரனே !	வீழ்த்தவனே	உதிர்த்தவனே !
கண்ணனே	கிருஷ்ணனே !	யான் உடைய	நான் உன்பால் கொண்டிருக்கிற
விண்ணவர்க்கு மேலா	நித்யஸூரிகளுக்கு நாதனே !	அன்பு	அன்பானது
வியன்துழாய் கண்ணியனே	அற்புதமான திருத்துழாய் மாலையை அணிந்தவனே !	என் தன் அளவு அன்று	என்னுள் அடங்கியிருப்பதல்ல.
மேலால்	மற்றொருநாள்		
விளவின் காய்	விளாமரத்தின் காயை		

மாலே:— அடியவர்களிடத்தில் அன்புள்ளவனே ! எல்லாரிலும் உயர்ந்தவனே ! பரம ஸௌலப்யனான கண்ணனே ! நித்ய ஸூரிகளுக்குத் தலைவனே ! திருத்துழாய் மாலையைச் சாத்திக் கொள்பவனே ! ஒருகால் விளாங்கனிகளை ஒரு கன்றையெறிந்து உதிர்த்தவனே ; என்று மதுரமொழிகளால் அழைத்து அழைத்து உன்னிடம் எனக்குள்ள அன்பு என்னளவில் அடங்கியிருப்பதல்ல. என்னையும் மீறி அளவு கடந்திருக்கிறது ; என்று விண்ணப்பம் செய்தார்.

எனது பசியையாவது அடக்கு ; அல்லது பசிக்குத்தகுந்த சோறுவது கொடு ; என்று கேட்பாரைப்போல் இவ்வாழ்வார் "என்றனளவன்றால் யானுடைய வன்பு" என்று விண்ணப்பம் செய்ததற்கு எனது காதலையாவது அடக்கு ; அல்லது நான்

காதலுக்குத்தக்கபடி உனது ஸாக்ஷாத்காரத்தையாவது கொடு; என்று ப்ரார்த்தித்தார்போல் தோன்றுகிறது. நிற்க கண்ணனென்னும் கருந்தெய்வமே காதலுக்குரியது என்பதையும் காட்டிப் பிரபந்தத்தைத் தலைக்கட்டினார்.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.
எம்பெருமானார் திருவடிகளே சரணம்.
தேசிகன் திருவடிகளே சரணம்.

திருக்குடந்தை ஸ்ரீ ஆராவமுதாழ்வான் ஸந்நிதி வீதி
ந்யாய சிரோமணி
ப. ஸ்ரீநிவாஸராகவாசாரியர் ஸ்வாமி
இயற்றிய
இரண்டாந் திருவந்தாதி உரை
முற்றிற்று.

ஸ்ரீ:

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன்

அருளிச்செய்த

பிரபந்த ஸாரம்.

கடன் மல்லைக் காவலனே பூதவேந்தே
காசினிமே லைப்பசியி லவிட்டநாள் வந்
திடர்கடியுந் தண்கோவ லிடைகழிச்சென்
றிணையில்லா மூவருமா யிசைந்தே நிற்க
நடுவி லும்மி லொருவருமன் றறியாவண்ணம்
நல்லிருளில் மால்நெருக்க நந்தா ஞானச்
சுடர் விளக்கேற்றிய வன்பே தகளியான
தொடைநூறு மெனக் கருள்செய் துலங்க நீயே.

கடல் மல்லை காவலனே	திருக்கடன் மல்லை என்கிற திருப்பதிக்கு நிர்வாஹகரான
பூத வேந்தே	பூதத்தாழ்வாராகிய ஸ்வாமியே !
நீ	தேவரீர்
காசினிமேல்	பூமியில்
ஐப்பசியில்	ஐப்பசி மாதத்தில்
அவிட்டநாள் வந்து	அவிட்டநக்ஷத்திரத்தில் அவதரித்து
இடர் கடியும்	துயரங்களைப் போக்குகிற
தண்	குளிர்ந்ததான (ச்ரமஹரமான)
கோவல்	திருக்கோவலூரில்
இடைகழி சென்று	இடைகழியிலே (ரேழியிலே) போய்

இணை இல்லா மூவருமாய்	ஒப்பில்லாதவர்களான (பொய்கையார், பேயார், தேவரீர்) ஆகிய மூவரும்
இசைந்து நிற்கவே	சேர்ந்து நிற்கிற அளவில்
அன்று	அப்பொழுது
நல் இருளில்	நெருக்கமான இருள் சூழ்ந்த அவ்விரவில்
உம்மில் ஒருவரும் அறியா வண்ணம்	உங்கள் மூவரில் ஒருவரும் தெரிந்துகொள்ள முடியாதபடி
நடுவில்	உங்கள் நடுவில்
மால் நெருக்க	திருமால் (வந்து) தேவரீர்களை நெருக்க
நந்தா	அணையாததான

ஞான சுடர் விளக்கு ஏற்றிய — ஞானமாகிற தேஜோ ரூபமான திரு விளக்கை ஏற்றிய
அன்பே தகளியான — அன்பே தகளியென்று ஆரம்பித்தருளின
தொடை நூறும் — இலக்கணங்களோடு கூடின தமிழ்ப் பிரபந்தமாகிற நூறு பாசுரங்களையும்
துலங்க — விளங்கும்படியாக
எனக்கு அருள் செய் — அடியேனுக்குக் கிருபைசெய்யவேணும்.

பூதத்தாழ்வார் அவதரித்த திவ்ய தேசம் மாதம் திருநக்ஷத்திரம் முதலியவற்றை அநுஸந்தித்து அவர் அருளிய இரண்டாந் திருவந்தாதியென்னும் பிரபந்தத்தைத் தனக்கருள்புரியவேணுமென்று அவரையே வேண்டுகிறார்.

கடன்மல்லை:— மஹாபலிபுரம் என்கிற திருக்கடல்மல்லையிலே ஒரு குருக்கத்திமலரில் ஐப்பசி மாதத்தில் அவிட்ட நக்ஷத்திரத்திலே அயோநிஜராய் அவதரித்தருளிய பூதமுனிவரே! தேவரீர் திருக்கோவலூரிலே சென்று மிருகண்டு முனிவராதிரத்தில் இடைகழியில் பொய்கையார் பேயாருடன் இருள்சூழ்ந்த இரவில் சேர்ந்து நிற்குங்கால் ஸர்வேச்வரனும் தேவரீர்களைக் கொண்டு பிரபந்தங்களை வெளியிட்டு உலகத்தை உய்விக்க நினைத்து உங்களுக்கும் தெரியாதபடி உங்கள் நடுவிலே வந்து உங்களை நெருக்குங்கால், அன்பைத் தகளியாகவும் ஆர்வத்தை நெய்யாகவும் இன்புருகு சிந்தையைத் திரியாகவும் அமைத்து ஒரு விலக்ஷணமான ஞானச் சுடர்விளக்கை ஏற்றினேன் என்று கருத்துக் கொண்ட "அன்பே தகளியா" என்ற பாசுரம் முதலாக தேவர் அருளிய நூறு பாசுரங்களையும், கற்கவேணுமென்று ஆசை பூண்ட அடியேனுக் கருள்புரியவேணுமென்று பிரார்த்திக்கிறார்.

ஞானச்சுடர்விளக்கேற்றிய:— "இறைவனைக் காணும்படித் திருள்கெட ஞானமென்னும் நிறைவிளக்கேற்றிய பூதத் திருவடி தாள்கள்" என்றபடி ஹ்ருதயத்திலுள்ள இருளெல்லாம் விலக்கும்படியான ஞானதீபத்தை ஏற்றினரென்றபடி.

ஸ்ரீ தேசிகன் திருவடிகளே சரணம்.

சுபமஸ்து.

ஸ்ரீ ஜனார்த்தன அச்சுக்கூடம், (லிமிடெட்,)
டவுன் ஹைஸ்கூல் ரோடு,
கும்பகோணம்.



ஸ்ரீ:

பூதத்தாழ்வார் திருவடிகளே சரணம்.

இரண்டாந் திருவந்தாதியின் செய்யுளகராதி.

சுபமஸ்து.

